ஸ்ரீ

# விவேகாநந்த விஜயம்.

## மஹேச குமார சர்மா

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை

விலை ரூபா 2

[All Rights Reserved]

உ

சிறந்த தேசாபிமானியாயும், பாஷாபிமானியாயும்

மதாபிமானியாயும், வேதாந்தியாயும்

விளங்கி விதேக முத்தியடைந்த

மஹான்

ஸ்ரீ சை. ரத்நசெட்டியாரின்

திருவுள்ளத்துக்கு

இந்நூல்

பக்திபூர்வமாக

ஸமர்ப்பிக்கப்பெற்றது.

ஓம்

*"உத்திஷ்டத! ஜாக்ரத! ப்ராப்ய*
*வராந் நிபோதத!"*

"எழுமின் விழிமின்! கருதிய கருமம்
கைகூடும்வரை உழைமின்! அறிமின்!"

**"Arise! Awake! Stop not till you reach the Goal."**

# முகவுரை

1904-ம் வருஷத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய சரித்திரத்தையும் உபதேசங்களையும் கதாமிருதத்தின் ஒரு பகுதியையும் தொகுத்து ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயமெனப் பெயரிட்டு வெளியிட்டேன். இப்பொழுது அவரது சிஷ்யருட் சிறந்தவராகிய ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் சரித்திரத்தையும் பிரசங்கங்களையும் இந்த நூலின் வாயிலாக வெளியிடுகின்றேன். இதில் கூறப்படும் ஸ்வாமிகளின் சரித்திரமானது, டக்காவில் பிரசுரமான ஸ்வாமி விவேகாநந்தரின் சரித்திரமும் உபதேசமும் என்ற சிறு நூலையும், ஸ்ரீராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகளிடம் நேராய்க் கேட்ட விஷயங்களையும், ப்ரஹ்மவாதி' என்ற ஆங்கில வேதாந்த பத்திரிகையிலும், "ஆஸேது ஹிமாசலம் வரையில் ஸ்வாமிகள் செய்த பிரசங்கத்திரட்டு" என்று பொருள்படும் "From Colombo to Almora" என்ற புஸ்தகத்திலும் கிடைத்த அநேக தகவல்களையும் ஆதாரமாகக் கொண்டெழுதப்பட்டது. ஸ்வாமிகள் செய்த பிரசங்கங்களையெல்லாம் மொழி பெயர்க்கிறதானால் இதைப்போன்ற இரண்டு புத்தகங்களாகும். முக்கியமான பிரசங்கங்கள் மாத்திரம் இதில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அன்றியும், ஸ்வாமிகள் சென்னைவாசிகளின் வந்தன பத்திரிகைக்குப் பிரதியுத்தரமாக அனுப்பிய நிருபமும், கேஷத்திரி மகாராஜாவுக்கு எழுதிய நிருபமும், மாக்ஸ்

முல்லர் பண்டிதரைப்பற்றிப் புகழ்ந்தெழுதிய கடிதமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஹிந்து மதத்தைப்பற்றிய ஸ்வாமிகளின் கொள்கைகளெல்லாம் அவரியற்றிய 'ஸர்வார்ஹமத லக்ஷ்யம்' என்ற உபந்யாஸத்திலே தெளிவாயும்-சுருக்கமாயும்-கம்பீரமாயும்-ஸாங்கோபாங்கமாயும் விளக்கப்பட்டிருப்பதால், அதையும் இதில் மொழிபெயர்த்துச் சேர்த்திருக்கின்றேன். கடைசியாக ஹிந்துக்களுக்குத் தேசபக்தியையும் தன்னய மறுப்பையும் உணர்த்தி உள்ளக் கிளர்ச்சி யுண்டாகுமாறு ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட 'சரமோபதேசத்தையும்' இதன் இறுதியில் சேர்த்திருக்கிறேன்.

க்ஷேத்திரி மகாராஜாவுக்கு ஸ்வாமிகள் எழுதிய கடிதத்தை எனது மேன்மை தங்கிய அருமை நண்பராகிய ப்ரஹ்மஸ்ரீ H. வெங்கோபராயரவர்கள் ஏற்கனவே மொழிபெயர்த்து "ஆரியஜனப்பிரியன்" பத்திரிகையில் பிரசுரித்திருந்தமையால், அதை இந் நூலில் சேர்த்துக்கொள்ளும்படி கருணைகூர்ந்து அநுமதி யளித்ததற்காக அவர் பக்கல் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேன்.

இந்நூல் எனது லௌகிகத் தொழிலின் இடையே கிடைத்த அவகாச நேரங்களில் அவசரமாய் எழுதப்பட்டமையால் இதில் காணப்படும் குற்றங்களை மன்னிக்கும்படி நண்பர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

மஹேச குமார சர்மா.

# சூசீபத்திரம்


முகவுரை

I

விவேகாநந்த ஸ்வாமிகள்: அவரது இளமைப்பருவம்—கல்விப் பயிற்சி — மனக்குழப்பமும் சந்தேகமும் — குருவைக் கண்டடைதல்—குருமூர்த்தியின் அவதார காலத்தில் நாட்டின் நிலைமை — ஸர்வமத ஸமரஸமே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசம்—விவேகாநந்த ஸ்வாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அநுக்ரஹம் பெறுதல்—அவர் ஸந்யாஸியாதல் —ஸ்வாமிகளின் புண்ய க்ஷேத்ர யாத்திரை. (பக்கம் 1—18)

II

ஸ்வாமிகள் சென்னைக்கு வருகை—சென்னை வாசிகள் அவரைச் சிகாகோவில் கூடிய ஸர்வமத ஸபைக்கு ஹிந்துமதப் பிரதிநிதியாக அனுப்புதல்—அவருக்கு அங்கே நேர்ந்த கஷ்டங்கள்—ஸர்வமத ஸபையைப்பற்றி ஸ்வாமிகள் செய்த வர்ணனை—சிகாகோ ப்ரசங்கம்—பத்திரிகைகளின் அபிப்பிராயம்—அவர் பகிரங்கமாயும் வேதாந்த வகுப்புகளிலேயும் புரிந்த பிரசங்கங்கள்—ந்யூ யார்க் நகரத்தில் வேதாந்த ஸபை ஸ்தாபனம். (18—99)

III

ஸ்வாமிகள் புகழைக் கேட்ட ஹிந்துக்கள் இந்தியாவிலே ஆங்காங்கு சபை கூடி அவருக்கு வந்தன பத்திரங்கள் அனுப்புதல்—ஸ்வாமிகளின் பெருமையைப்பற்றி பாரோஸ், மேரிஸ்

நெல் என்னும் அமெரிக்க பண்டிதர்கள் வரைந்து விடுத்த நிருபங்கள்—ஸ்வாமிகள் சென்னைவாஸிகளின் வந்தன பத்திரத்துக்கு அளித்த உத்தரம்—ஸ்வாமிகள் கேத்ரி மகாராஜாவுக்கு எழுதிய நிருபம். (99—171)

IV

ஸ்வாமிகள் இங்கிலாந்துக்குப் போதல்—ஸ்டர்டி துரையின் பக்தி—இந்தியாவினின்று சாரதாநந்த ஸ்வாமிகளை வரவழைத்தல்—மறுபடியும் அமெரிக்காவுக்குப் போதல்—அங்கிருந்து மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்புதல்—பண்டித மோக்ஷமூல பட்டாசாரியரைக் காணுதல்—வேதாந்த போதனைக்காக ஸபைகளை ஸ்தாபித்தல்—பத்திரிகைகளின் அபிப்பிராயம்—ஸ்வாமிகள் ஸ்விட்ஜர்லாண்டு தேசத்திலுள்ள ஜூரிக் பட்டணத்தில் நடந்த தர்ம மகா சபைக்கு விஜயம் செய்தல்—ஜர்மனியிலுள்ள கீல் நகரத்தில் தாய்ஸென் பண்டிதரைத் தரிசித்தல்—இங்கிலாந்துக்குத் திரும்பிவருதல்—இங்கிலாந்தை விட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டுவரும் சமயத்தில் ஆங்கிலேய சிஷ்யர் வாசித்த வந்தனோபசாரப் பத்திரிகையை அங்கீகரித்தல். (171—193)

V

ஸ்வாமிகள் பரதகண்டத்துக்குத் திரும்பி வருதல்—கொழும்பிலே வந்திறங்குதல்—லங்கைவாசிகளின் வந்தனோபசாரம்—கீழ் நாட்டில் ஸ்வாமிகளின் பிரதம உபந்யாசம்—நகர பிரதக்ஷிணம்—கண்டி—யாழ்ப்பாணம்—யாழ்ப்பாணத்தில் வேதாந்த பிரசங்கம். (193—264)

VI

இராமநாதபுரத்துக்குப் பிரயாணம்—ஸேதுபதியுடன் ஸல்லாபம்—வந்தனோபசாரத்திற்குப் பிரதிவசனம்—ராமேசுவர யாத்

திரை—ஆலயத்திற் பிரசங்கம்—ஸ்தம்ப ஸ்தாபனம்—ராமநாதபுர விஜயம்—வந்தனோபசாரம்—அதற்கு ஸ்வாமிகளின் பிரதிவசனம்—பரமகுடி— மானமதுரை—மதுரை—திரிசிரபுரம்—கும்பகோணம் — மாயவரம்—சென்னைக்குப் பிரயாணம். (264—313)

VII

சென்னைக்கு விஜயம்—உபசாரணைகள்—பிரசங்கங்கள். (313—319)

VIII

சென்னையில் முதற்பிரசங்கம், 'என் யுத்த ஸங்காஹம்.' (320—361)

IX

'பாரதகண்டத்து மஹான்கள்.' (361—409)

X

'இந்திய வாழ்க்கையில் வேதாந்த வொழுக்கம்.' (409—427)

XI

சென்னையில் கடைசிப் பிரசங்கம், "இந்தியாவின் எதிர்காலம்." (428—459)

XII

கல்கத்தாவுக்குப் பிரயாணம். (459—461)

XIII

ஸ்வாமிகள் மறுபடியும் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் செல்லுதல்—'ஸான்' பிரான்சிஸ்கோ'வில் வேதாந்தசங்க ஸ்தாபனம்—பாரிஸ் நகரத்தில் நடந்த பெருஞ் சபைக்குப் போதல். (461)

XIV

ஸ்வாமிகள் இந்தியாவுக்குத் திரும்புதல்—டாக்காவுக்கு விஜயம் செய்தல்—சந்திரநாத் காமாக்யம் என்னும் க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை—ஷில்லாங்குக்குச் செல்லுதல்—கல்கத்தாவுக்குத் திரும்புதல்—மஹா ஸமாதி. (462—464)

XV

ஸ்வாமிகளின் உபதேசம்—மதம் பாமர ஜனங்களுக்குள் பரவவேண்டும் — நாம் வெளிநாடுகளுக்குச் சென்று விர்த்தியடையவேண்டும்—பிரிந்து நிற்றல் க்ஷீணகதிக்குக் காரணம் —நாம் மேற்றிசையிலிருந்து தொழில்முயற்சி முதலிய நாகரிகத்தைக் கற்று அவர்களுக்கு நம் மதத்தைப் போதிக்கவேண்டும் — ஹிந்து ஜாதியாரின் பிராணாதாரம் மதமே. (464—477)

XVI

இந்தியாவினிடத்து ஸ்வாமிகளின் அன்பு—இந்தியாவின் மகிமா வர்ணனை—ஸ்வாமிகளின் சர்வலோக காருண்யம். (477—481)

XVII

ஸ்வாமிகளின் போதனைகள்—பகவானை யடைதலே வாழ்க்கையின் பயன்—அத்வைத மதத்தை ஸர்வஜன ஸாமான்ய மாக்குதல்—உண்மைச் சீர்திருத்த முறையானது உள்ளதை விர்த்தி செய்வதேயன்றி அழிப்பதன்று—இந்து மதத்தின் நித்திய தத்துவங்கள் மானிடவர்க்கத்தின் சகலவித குறைவுகளையும் தீர்க்கவல்லன—அது மற்றெல்லா மதங்களிடத்தும் காட்டும் சமரஸத்தன்மை — ஸர்வார்ஹமத லக்ஷ்யம். (481—535)

XVIII

ஸ்வாமிகள் மேற்றிசையில் செய்த வேலை—அவரது குருமூர்த்திகளின் வாக்கு நிறைவேறியது (535—538)

XIX

ஸ்வாமிகளின் சரமோபதேசம். (539—540)

ஸ்ரீ

# விவேகாநந்த விஜயம்

## I

விவேகாநந்த ஸ்வாமிகள்: அவரது இளமைப் பருவம்—கல்விப் பயிற்சி—மனக்குழப்பமும் சந்தேகமும்—குருவைக்கண்டடைதல்—அவரது குருமூர்த்தி அவதரித்த காலத்தில் நாட்டின் நிலைமை—ஸர்வமத ஸமரஸமே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசம — விவேகாநந்த ஸ்வாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அநுக்ரஹம் பெறுதல்—அவர் ஸந்யாஸியாதல்—ஸ்வாமிகளின் புண்யக்ஷேத்ர யாத்திரை.

"ப்ரகாஸத்தை யொருமுறை கண்ட விளக்குப்பூச்சி மீண்டும் அந்தகாரத்தை வந்தடைவதில்லை. எறும்பு சர்க்கரைக் குவியலிலேயே மாய்ந்துபோகின்றதேயன்றி அதினின்றும் திரும்புவதில்லை. அவ்வாறே, ஸாதுவான பக்தனும் துறவுபூண்டு தான் வழிபடும் கடவுளுக்குத் தன் ஆவியைச் சந்தோஷமாய் அர்ப்பிக்கின்றான்."—ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசரத்னமாலை 428-ம் வாக்கியம்.

ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் கல்கத்தாவிலே 1863-ம் வருஷத்திலே ஓர் உயர்ந்த * காயஸ்த குலத்திற்

* காயஸ்தன் என்றால் கணக்கன் என்று பொருள். இந்த ஜாதி வங்காளத்தில் மிகவும் செல்வாக்குள்ளது. நமது தமிழ் நாட்டில் பிராமணர்கள் எப்படி அதிகமாய்க் கல்விகற்றுப் பெரிய உத்தியோகங்களில்-விளங்குகின்றார்களோ, அப்படியே காயஸ்தர்களும் வங்காளத்தில் எல்லாவிதத் துறைகளிலும் மேன்மை பெற்றிருக்கிறார்கள்.

பிறந்தார். அவருக்குப் பூர்வாசிரமத்தில் நரேந்திரநாத தத்த என்று பெயர். அவர், அனைவருடைய உள்ளத்தையுங் கவரத்தக்க வடிவழகும் வீர லக்ஷணமும் பொருந்தியிருந்தமையால், தாய் தந்தையர்கள் அவரை 'வீரேசுவரன்' என்ற செல்லப் பெயரிட்டு அழைத்துவந்தனர். அவரது முன்னோர்கள் வக்கீல் விருத்தியினால் ஜீவனம் செய்துவந்தார்கள். ஸ்வாமிகளின் தந்தையாகிய விசுவநாத தத்த என்பவர் 1860-ம் வருஷம் முதல் சுமார் 9-10 வருஷங்கள் மத்திய மாகாணங்களிலுள்ள சீப் கோர்ட்டில் வக்கீல் தொழில் செய்திருந்த பின்னர் கல்கத்தாவுக்குச் சென்று அங்குள்ள ஹைகோர்ட்டில் அட்டர்ணியா யிருந்தார். கல்கத்தா வக்கீல்களுக்குள் மிக்க சயர்த்தர் என்று பெயர் பெற்ற தேசாபிமானியாகிய பாபு உமாசரண வந்தியோபாத்தியாயர் (W. C. பனர்ஜீ) சுவாமிகளின் குடும்பத்தை நன்கு யறிந்து அவர்களுடன் மிகவும் சிநேக பந்தம் பாராட்டிவந்தார். சுவாமிகள் தமது சுய சரித்திரத்தைப்பற்றி யாருக்கும் ஒன்றும் விரிவாய்ச் சொன்ன வழக்க மில்லையாகையால் அவரைப்பற்றிப் பிறர் மூலமாய் நமக்குத் தெரிந்திருப்பதையே இங்குக் கூறுவோம்.

இளமை முதற்கொண்டு அவருக்கு ஸத்ஸங்கத்திலும் ஸங்பார்க்கத்திலுமே அதிக ஆவல் உண்டாயிருந்தது. அவர் குழந்தையா யிருக்குங் காலத்திலேயே ஏகாந்தமாய்ச் சென்று தியாநத்தில் அமர்ந்திருப்பதும், தம் விளையாட்டுத் தோழர்களையும் அவ்வாறு செய்யும்படி தூண்டி-

வதும் வழக்கம். ஸ்ரீ ராமனிடத்திலும் ஸீதாபிராட்டியி னிடத்திலும் அவருக்கு அளவு கடந்த அன்பு. அவர்க ளது மாசற்ற பரிசுத்த வாழ்க்கையின் அழகிய சரிதை அவருக்குப் பெரும் அருள் விளக்கமா யிருந்தது.

இவ்வாறு சில ஆண்டுகள் செல்ல, நரேந்த்ரர் குழந் தைப் பருவங் கடந்து வாலிபப் பருவம் அடைந்தார். அவர், பாடசாலைகளிலே பயின்று, பின்னர் கல்கத்தா ஸர்வகலாசாலையிலே 'கலா குமாரன்' (Bachelor of Arts) அதாவது, B. A: என்னும் பட்டம் பெற்றார்.

அவர் காலேஜில் படித்துக்கொண் டிருக்கும் பொழுது அவரைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லவேண் டிய சங்கதிகள் நமக்கு ஒன்றும் தெரியாமற்போனபோதி லும், அவருடன் கூடப் படித்தவர்களால் அவர் அதிக மாய்ப் புகழ்ப்பெற்று வந்தாரென்று மாத்திரம் தெரியவரு கிறது. அவர் படித்து வரும்போது தற்சமயம் கல்வியை உபேட்சித்து வந்தாலும் வருஷாந்தத்தில் பரீக்ஷையில் மேன்மையாய்த் தேறியது எவருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. அவர், ஸங்கீத ஸாஹித்தியங்களிலும், நர்த் தனம், சித்திரலேகநம் * முதலிய கலைகளிலும் பிர வீணரா யிருந்தார். அவர், கம்பீரமான தோற்றமும், கண்டோ ருள்ளங்களைக் கவரும் வசீகரமான வடிவழகும் வாய்ந்து ஜீவகாருண்யமே உருவெடுத்ததுபோல் விளங் கினர்.

---

* சித்திரம் எழுதுதல்.

அவர் நெஞ்சிளக்க முள்ளவ ரென்பது படித்துங் காலத்திலேயே விளங்கிற்று. ஒரு சமயம் அவர் படித்துக் கொண்டிருக்கும் வகுப்பிற்கு உபாத்தியாயரான ஓர் ஐரோப்பிய பண்டிதர் மாணுக்கர்களுக்கு விவிலிய நூலை (பைபிலை)க் கற்பித்துக்கொண் டிருக்கையில், சில பிள்ளை கள் அந் நூலில் பலமான ஆக்ஷேபங்கள் செய்து, அவற்றினுக்கு உபாத்தியாயர் தகுந்த சமாதானம் சொல் லாமல் விழிப்பதைக் கண்டு கைகொட்டி நகைக்கத் தொடங்கினுர்கள். அப்பொழுது அவ் ஐரோப்பிய பண்டி தர் இருந்த பரிதாபமான நிலையைக் கண்டு சஹியாமல், நரேந்திரர் கம்பீரமாய் எழுந்து நின்று, தம் ஸஹபாடி களை நயவசனங்களால் அடக்கி, உபாத்தியாயரின் கக்ஷி யைத் தாமே எடுத்துக்கொண்டு பிள்ளைகள் வாய் மூடும் படி தக்க சமாதான முரைத்து, உபாத்தியாயருக்கு நேரவிருந்த அவமானத்தை அகற்றிக் களிப்பை யுண்டாக் கினாராம்.

அவர் 1884-ம் வருஷத்தில் பி. ஏ. பரிக்ஷையில் தேறி, பிறகு வம்சபாரம்பரியமாய் வரும் வக்கீல் விருத் தியை யவலம்பித்து, அதனுல் ஜீவனம் செய்யும் தசைக்கு வந்தார். அக்காலத்தில் அவர் உந்நத தசைக்கு வரத்தக்க யாதொரு குறிகளும் அவரிடத்துக் காணப்படவில்லை. ஆயினும், அதுமுதல் அவர் மதவிசாரணையில் புத்தியைச் செலுத்தத் தொடங்கி, அவர் முதலில் ஹிந்து மதாசாரங்க ளில் வெறுப்படைந்து, அக்காலத்தில் பிரபலமாயிருந்த ப்ராஹ்ம ஸமாஜத்திற் சேர்ந்தார். அவர், சங்கீதத்தில்

மிகத் தேர்ச்சி பெற்றிருந்தபடியால் ஸமாஜ ஆராதனையில் அவரே 'ஹார்மோனியம்' முதலிய வாத்தியங்கள் வாசிப்பார். சில சமயம் ஹரிசங்கீர்த்தன கோஷ்டியிலும், சில சமயம் கிறிஸ்துவ ரக்ஷணியசேனைப் பஜனைகளிலும் பக்தி மேலீட்டினால் கலந்து தெருவுகளிலே ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் செல்வார்.

அவர் எப்பொழுது இங்கிலீஷ் கற்று அதிலுள்ள விஞ்ஞான (Science) நூல்களையும் உலகாயத நூல்களையும் படித்தாரோ, அப்பொழுதே ஸர்வமத ஸித்தாந்தங்களையும் ஸந்தேஹித்து, அவற்றைத் துச்சமாய்க் கருதும் வழக்கம் அவர் மநத்திற் புகுந்தது. அவர் தம்மைச் சுற்றி எங்குப் பார்த்தாலும் மதவிஸ்வாஸமுள்ளவர்களெனச் சொல்லிக்கொள்பவர்களிடத்திற்கூட வீண் படாடோபமே தலைகொண்டிருக்கக் கண்டார். ஆனபோதிலும், மத வுண்மையை யறியவேண்டுமென்ற ஆவல் அவர் மநத்தில் ஆழமாய்க் குடிகொண்டிருந்தமையால், 'அது எங்கே கிடைக்குமோ?' என்று தமக்குள்ளேயே தர்க்கித்து, 'அதைக் கண்டறியவுங் கூடுமோ?' என்ற ஸந்தேஹமுங் கொண்டார். அதுமுதல் அவர்: கிறிஸ்தவர், முஹம்மதியர் உள்ளிட்ட ஸகல மதாசாரியர்களிடத்தும் சென்று அவர்கள் சொல்வதைக் கேட்கலானார். "நீங்கள் உபதேசிப்பவை உண்மையென உங்களுக்கு எப்படித் தெரியும்? அவற்றை நீங்கள் அநுபவசித்தமாய் உணர்ந்திருக்கின்றீர்களா?" என்னும் கேள்வியையே அவர்களெல்லோரையும் அவர்

கேட்டுவந்தார். அவ் வினவுக்கு அவர்கள் அனைவரும் அளித்த ஒரே விடை யென்னவெனில், "இல்லை; நாங்கள் உபதேசிப்பவை யெல்லாம் நூல்களில் இருக்கின்றன. வேத சாஸ்திரங்கள் அவ்வாறு உபதேசிக்கின்றன" என்பதேயாம். அவர், தூரதேசங்களுக்குப் போய்த் திரிந்தும் ஆவல் நிறைந்த அவரது ஹிருதயத்துக்கு ஆறுதல் உண்டாகவில்லை. 'எப்படியாயினும் உண்மையைக் கண்டறியத்தான் வேண்டு' மென்ற உறுதி அவர் மநத்திற் குடிகொள்ளவே, உண்மையை அநுபவ ஸித்தமாய் உணர்ந்து உபதேசிக்கும் நல்லாசிரியனைத் தேடுவதிலேயே அவர் காலத்தைக் கழிப்பாராயினர். 'இனியேது? அத் தகைய ஆசார்யன் கிடைப்பது துர்லபம்' என்று அவர் நிராசை கொள்ளப்போகுந் தறுவாயில், தம்மை அணுகியவர்களுக்கு ஆடம்பரமின்றி மெய்யுபதேசஞ் செய்பவரும், குழந்தையைப்போல் ஸாதுவுமான ஒரு ஞானியை யடையும் பாக்கியம் பெற்றார். அப்பொழுதும் அவர் அம் மஹாநுபாவரை நோக்கி, "ஐயா! நீர் கடவுளைக் கண்டறிந்திருக்கிறீரா?" என்று தாம் எப்பொழுதும் கேட்பதுபோல் கேட்டதற்கு, அப் பெரியவர், தெளிவாயும் உறுதியாயும், ஆஹா! நான் கண்டறிந்திருக்கிறேன்" என்று விடையளித்ததைச் செவியுற்றதும் அவருக்குண்டான ஆநந்தத்திற்கும் ஆச்சரியத்திற்கும் அளவில்லை. "அவைகளை நீர் எனக்குக் காட்டுவீரா?" என்று நரேந்திரர், கேட்க, அப் பெரியவர் கொஞ்சமேனும் யோசிக்காமல், "ஆஹா! காட்ட முடியும்" என்று கூறினர்.

இப் பெரியவர் யாரெனில், வங்காள நாட்டிலே தக்ஷி ணேஸ்வரத்திலுள்ள காளிதேவியாலயத்தில் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் என்கிற திரு நாமமுள்ள மஹா பிரஸித்தரான யதீஸ்வரர். அதுமுதல் நரேந்திரர் இம் மஹா புருஷனது திருவடிகளை யடைந்து வேதாந்த சிரவணம் செய்துவந்தார். அவர் அவரைப் பல வகைக் கேள்வி கேட்டும் தர்க்கித்தும், கடைசியாக அவ ரது உபதேசப்படி அநுஷ்டானமும் அவரிடம் பொருந்தி யிருக்கின்றதாவெனப் பார்க்கும்பொருட்டு அவரது அந்த ரங்கமான செயல்களையெல்லாம் வெகு உன்னிப்பாய்ப் பல வருஷ காலம் கவனித்தும் வந்து, ‘இனி இவரை நம்ப லாம், மோசமில்லை’ என்கிற மனோ நிச்சய முண்டான பிறகுதான் அவருக்கு சிஷ்யரானார். பரமஹம்ஸ தேவ ரிடத்தில் அவர் தினந்தோறும் ப்ரத்யக்ஷமாய்க் கண்டு வந்த ஒப்பற்ற சிறந்த ஒழுக்கத்தின் பிரபாவத்தால் அவ ரது ஸந்தேஹ ஜாலங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் ஒழிந்துவிட்டன.

மேற்றிசை உலகாயத மதமென்னும் பேரலையானது தன் கொடிய வெள்ளப் பெருக்கால் நாட்டை யெல்லாம் நாசப்படுத்தின காலத்திலே, நம் இளைஞர்கள் மேற்றிசை (ஐரோப்பியக்) கொள்கைகளெனும் கள்ளருந்தி, அதனால் மட்டுக்கு மிஞ்சி லாகிரி கொண்டு, ஆரிய ஸநாதந தர்மத் தில் எவ்வித உண்மையும் கண்டுகொள்ள முடியாமல் இரு ந்த காலத்திலே, நம் இளைஞர் தம் முன்னோர்களது மதத் தில் நம்பிக்கை யற்று, அந்ய தேசத்தாரது கொள்கைகளை

யும் நடையுடை பாவனைகளையும் கடன்கொண்டு அவற்றைத் தம்மவையாக்கிக்கொண்டிருக்கும் காலத்திலே, நமது பரமஹம்ஸ மூர்த்திகள் அவதரித்து, ஒவ்வொரு மதத்திலும் மதவுண்மை பூர்ணமாக அடங்கியிருக்கிறதேயன்றி கூறு கூறாக இல்லை யென்றும், 'வெறும் இலைகளை எண்ணுவதில் * புத்தியைச் செலுத்தாமல் தத்துவானுபவத்தை யடையவேண்டு மென்கிற மெய்யாவல் உள்ளவனுக்கே அதன் உண்மை விளங்குமென்றும், அவர் தமது பரிசுத்தமான வாழ்க்கையால் உலகத்துக்கு விளக்கியருளினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர் அவதரித்த காலத்தில் இருந்த இந் நாட்டின் நிலைமையை ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகள் "பரதகண்டத்து முனிவர்கள்" என்கிற விஷயமாய்ச் சென்னையிற் செய்த பிரஸங்கத்தில் பின் வருமாறு விளக்கியிருக்கிறார்.

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அபாரமான ஞான சக்தியும்-ஸ்ரீ கிருஷ்ண சைதந்யதேவரது கருணை நிறைந்த விசாலமான ஹிருதயமும் ஒரே திருமேனியில் பொருந்தி விளங்கப் பெற்றவரும், எல்லா ஸம்பிரதாயங்களிலும் பிராணி சமுதாயங்களிலும் சாக்ஷிபூதமாய் விளங்கும் ஒரே ப்ரஹ்ம ஸ்வரூபத்தைக் கண்டு மகிழக்கூடியவரும், இந்தியாவிலானாலும் சரி, இந்தியாவுக்குப் புறம்பேயானாலும்

---

* 'வெறும் இலைகளை எண்ணுவது' என்பதின் பொருளை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயத்தின் 2-ம் பாகமாகிய உபதேச ரத்நமாலை 268-ம் பக்கத்திலுள்ள 519-ம் வாக்கியத்தில் காண்க.

சரி, எல்லா விடங்களிலும் உள்ள ஏழைகள், அபலர்கள், ஜாதிக்குப் புறம்பானவர்கள், துரவஸ்தைக் குட்பட்டவர்கள் முதலான உலகத்திலுள்ள பிரதி பிராணிகளின் பொருட்டும் உள்ளங் கரைந்துருகி அநுதாபப்படக்கூடியவரும், இந்தியாவிலும் அதற்குப் புறம்பேயும் பரஸ்பரம் வைரமுற்று வாதுபுரியும் பல்வேறு சமயங்களையும் ஸமரஸப்படுத்தி, பக்தியும் ஞானமும் ஒருங்கே யமைந்த ஆச்சரியகரமான ஸமரஸ ஸித்தாந்த நிலையை ஸ்தாபிக்கக்கூடிய மகா மேன்மை தங்கிய கம்பீரமான திவ்யோபதேசம் புரியும் ஒப்பற்ற ஞான மூர்த்தியுமாகிய மஹா புருஷன் ஒருவன் அவதரிப்பதற்குக் காலம் பக்குவமா யிருந்தது. அப்பொழுதுதான் அத்தகைய மஹாநுபாவர் பிறந்தார். அவரது திருவடிகளிலே அநேக வருஷகாலம் தொண்டு பூண்டொழுகும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. காலம் பரிபக்குவமா யிருந்தது. அத்தகைய பெரியவர் அவதரிப்பதும் ஆவசியகமாயிருந்தது. அவர் அவதரித்தார். அதில் ஒரு விசேஷ மென்னவெனில், ஐரோப்பியக் கொள்கைகளையும் ஆசாரங்களையும இந்தியாவிலுள்ள மற்ற விடங்களைவிட அதிகமாய்ப் பாராட்டி, ஐரோப்பிய நாகரிக மயமாய் விளங்கும் கல்கத்தா நகரத்துக் கருகிலேயே அப்பெரியவரது சரித்திர மெல்லாம் நிகழ்ந்தது. அவர் அங்கே பிறந்து யாதொரு நூலையும் ஓதாதுணர்ந்தார். அவ்வளவு மஹா ஞானியாயிருந்தும் தம் பெயரை யெழுதவும் அவருக்குத் தெரியாது. அவ்வா றிருந்தும் பிரதி மனிதனும், — நமது சர்வகலாசாலைகளில் மஹா மேதாவிகளென்று

பிரசித்தி பெற்ற பட்டதாரிகள் அனைவரும்,—அவரது அபாரமான ஞானத்தைக் கண்டு அதிசயித்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ மூர்த்தியின் வாயிலாக வெளியான அநுக்ரஹ ரூபமான தர்மோபதேசமானது நம் பரதகண்டத்திலே அவாந்தரமாய்த் தோன்றிய ப்ராஹ்ம ஸமாஜம், கிறிஸ்துமதம், இஸ்லாம் என்பவற்றைப் போன்ற நவீன சம்பிரதாயமன்று. அவரிடத்தினின்றும் பிரவஹித்தது பிராசீனமாகிய வேதாந்த ஸித்தாந்த ஞானமென்னும் நிர்மல நதியேயன்றி வேறில்லை. ஆனால், இப் பிரவாஹமானது முன்னிலும் அதிகமான வியாபகத்துடன் கூடியிருந்தது. முன்னே சிலருக்குமாத்திரம்தான் அதன் பயன் கிடைக்கக்கூடியதாயிருந்தால், இப்பொழுது, அனைவரும் எவ்வித தாரதம்யமுமின்றி இந் நதியில் ஆழ்ந்து தாபத்திரயங்கள் தீர ஸ்நாநஞ்செய்யலாம். ஸர்வ ஸமய ஸமரஸ தத்துவத்தையும் ப்ரஹ்மாநந்தாநுபவ தத்துவத்தையுமே அவர் ஸ்தல ஜனங்களின் மனத்திலும் அழுந்திப் பதியவேண்டிய விசேஷ தத்துவமெனக் கருதியிருந்ததாகத் தோன்றுகிறது. கல்கத்தாவில் சிறந்த வேதாந்தாசாரியாராய் விளங்கிய ஸந்யாஸியாகிய இப் பிராஹ்மணோத்தமரின் அருட்பிரஸாதத்தைப் பெற்றவருள் விவேகாநந்த ஸ்வாமிகள் ஒருவரே இம் மஹாத்மாவின் திவ்ய சரித்ரோபதேசங்களின் மெய்க்கருத்தை உள்ளபடி யுணரவல்ல உத்தம சக்தி பொருந்தியிருந்தவரெனத் தோற்றுகிறது. அவரே அந்தப் பிரபுவின் அத்தியந்தப் பிரிய சிஷ்யராயுமிருந்தவர்.

நரேந்திரநாதர் கீர்வாண பாஷையிலும் அங்கிலேய பாஷையிலும் மஹா பண்டிதர். கீர்வாணத்திலுள்ள வேதாகம சாஸ்திரங்களையும், அங்கிலேய பாஷையிலுள்ள பதார்த்த விஞ்ஞானம், தர்க்கம், மாநஸதத்துவம், உலக தத்துவம் முதலிய அரிய சாஸதிரங்களின் சூக்ஷ்ம தத்துவங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஆய்ந்துணர்ந்தவர். அன்றியும், சாதாரண ஹிந்துமதத்தையும் அதன் ஆசாரங்களையும் மஹாத்மாக்களையும் அக்காலத்தில் ஏளனம் செய்துவந்தவர். அப்படிப்பட்டவர், 'ஓரெழுத்தும் தெரியாத பைத்தியக்காரன்' என்று ஜனங்கள் கருதும்படியிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மஹிமையை எவ்வாறு உணர்ந்து அவரைக் குருவாகக் கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றார்? என்ற ஆசங்கை நிகழலாம். உண்மையிலேயே இச் சம்பவம அதிக அற்புதமானதுதான். அவ்வற்புதத்தின் வரலாற்றை நரேந்திரரின் ஸகாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகள் சொல்லியவண்ணம் எழுதுகின்றோம். நரேந்திரரது அம்மான் ராமசந்திரதத்தர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், பதார்த்த விஞ்ஞானம், ரஸாயனம் முதலிய நூல்களில் மிக்க வல்லவர். தெய்வபக்தியுள்ளவர். அவர் அடிக்கடி ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சென்று அவரது உபதேசங்களைக் கேட்டு வருவது வழக்கம். நரேந்திரர் அடிக்கடி தன் அம்மானுடன் மத விஷயமாய்த் தர்க்கம் செய்வதுண்டு. ஒருநாள் ராமசந்திரர் நரேந்திரரைப் பார்த்து, "தக்ஷிணேசுவராலயத்தில் ஒரு பெரியவர் இருக்கிறார். அவரிடத்திற்கு ஆங்கிலம் படித்த பலரும் வரு

கிறார்கள். நீ அங்கு வரும் பக்ஷத்தில் உன் ஆக்ஷேபங்களுக்கெல்லாம் அவர் தக்க சமாதானம் சொல்லுவார்; உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன் வா'' என்று சொல்ல, நரேந்திரர், ''அந்தப் பைத்தியக்காரனிடத்தில் என்னவேலை? அவன் மூடபக்த சிகாமணியாக வல்லவோ இருப்பான்? அவன் என் ஆக்ஷேபங்களைக் கேட்டு அதற்குச் சமாதானம் சொல்ல முடியாமல் என்னை 'அதிகப்பிரசங்கி' என்று சொல்லி அடிக்கவும் வரலாம்; அப்படிப்பட்ட மூடன் ஸஹவாஸம் எனக்கு வேண்டாம்'' என்றாராம். அதற்கு ராமசந்திர தத்தர், ''அப்படி அபிப்பிராயப்படவேண்டாம். பெரிய மனிதர்களெல்லாம் அங்கே வருகிறார்கள். அவரும் சாந்த சுபாவமுள்ளவரே யன்றி மூடரல்லர். மற்ற விஷயங்களிலெல்லாம் இவ்வளவு தைரியமாய்ப் பேசுகிற நீ அவர் எங்கே அடித்துவிடுவாரோ என்று பயந்து வாதத்துக்குப் பின் வாங்குவது அழகாமோ? அப்பொழுது நீ பயங்காளி என்றல்லவோ ஏற்படும்?'' என்று சொல்ல, நரேந்திரர் அதிக ரோஷமுள்ளவரானபடியால், 'அந்தப் பெரியவர் மூடராயிருந்தாலும் இருக்கட்டும்; அவரிடத்துக்குப் போவதே சரி' என்று நிச்சயித்துக்கொண்டு தன் அம்மானுடன் போக உடன்பட்டார். ஏனென்றால், இந்தப் பைராகிகளும் கோசாயிகளும் சாதாரணமாய்த் துஷ்டர்களென்று அவர் அப்பொழுது நினைத்திருந்தார். ஆகையால், 'அங்கே போனபோதிலும் நாம் அதிகமாய்க் கிட்ட நெருங்கவேண்டாம்; கொஞ்சம் தூரமாகவே இருந்து காரியத்தைப்பார்த்து வருவோம்'

என்ற எண்ணத்துடன் போனார். அப்பொழுது அநேக கனவான்கள் அங்கே வந்திருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு கட்டிலின்மீது சாந்தஸ்வரூபியாய் வீற்றிருந்தார். ராமசந்திர தத்தர் நரேந்திரரை அவர் முன் அழைத்துச் சென்று, நரேந்திரரது கல்வித் திறத்தையும், புத்திக் கூர்மையையும், நற்குணங்களையும்பற்றி வியந்து கூறி, அவர் சிலகாலமாக மதவிஷயங்களில் சந்தேஹங் கொண்டிருப்பதால் அவ் விஷயமாக இவ் விடத்தில் பேசவேண்டுமென்று வந்திருப்பதாக விஞ்ஞாபனம் செய்தார். அதைப் பரமஹம்ஸர் கேட்டு, நரேந்திரரைப் பிரிய வசநங்களால் உபசரித்து, அவருக்குள்ள சந்தேஹங்களைச் சொல்லும்பக்ஷத்தில் தன்னால் இயன்ற சமாதானங்களைச் சந்தோஷமாய்ச் சொல்ல ஸித்தமாயிருப்பதாகத் தெரிவித்தார். பிறகு சிலநேரம்வரையில் அவர்களுக்குள் அநேக விஷயங்களைப்பற்றி ஸம்பாஷணை நடந்தது. அதனால் நரேந்திரர் நல்ல புத்திசாலி யென்றும், உண்மையை யறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல் அவரிடத்தில் பூர்ணமாய்க் குடிகொண்டிருப்பதால் அவரைச் சரியான வழியில் யோக சக்தியால் திருப்பும்பக்ஷத்தில் உலகத்துக்கு மஹோபகாரம் செய்வாரென்றும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கும்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் தான் முன் நினைத்தவாறு பைத்தியக்காரன் அல்லவென்றும், முரட்டுத் தன மில்லாமல் நியாயமாகவே அநேக விஷயங்களுக்குச் சமாதானஞ் சொல்லக்கூடியவ ரென்றும், அதோடு அந்தர்முக திருஷ்டியும் உள்ளவரென்

றும் நரேந்திரநாத தத்தருக்கும் பரஸ்பரம் புலப்பட்டன. ஆயினும், நரேந்திரர் இந்தப் பரமஹம்ஸரிடம் இன்னம் என்ன என்ன இருக்கிறது பார்ப்போம்; சீக்கிரத்தில் இவருக்கு உட்படக் கூடாது என்ற எண்ணத்துடன் அடுத்த நாள் வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றார். அடுத்த நாள் வந்ததும் பரமஹம்ஸர் நரேந்திரரை முன்னினும் அதிகமாய்ச் சமீபத்தில் வரச்செய்து அதிக பிரியத்தோடு அநேக அத்தியாத்ம விஷயங்களைப் பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். அன்றும் அதிக விசேஷ மொன்றும் நிகழவில்லை. நரேந்திரர் வீட்டுக்குச் சென்றார். வழக்கம்போல் மறுநாளும் மாலையில் அவர் பரமஹம்ஸரிடம் வந்தார். இன்றைய தினம் பரமஹம்ஸர் அவரை அநுக்கிரஹிக்க வேண்டுமென்ற விருப்பததுடன் கட்டிலின்மேல் தன் பக்கத்தில் வந்து உட்காரும்படி சொன்னார். நரேந்திரருக்கு ஏற்கனவே மனத்தில் சிறிது அச்சமிருந்ததென்று முன்னமே சொல்லி யிருக்கிறோமே. இப்பொழுது பக்கத்திலேயே வந்து உட்காரும்படி பரமஹம்ஸர் சொன்னபடியால், 'ஒருவேளை என்ன செய்வாரோ' என்ற பயம் ஒருபக்கம் இருந்தாலும், 'அப்படி ஏதாவதுசெய்தால் நமக்குத் தோள்வலியில்லையா? நாமும் ஒருகை பார்ப்போம்' என்று தீர்மானித்துக்கொண்டு பரமஹம்ஸரின் பக்கத்திலே போய் உட்கார்ந்தார்; உட்கார்ந்ததுதான் தாமஸம்; அவர் இன்னதுதான் செய்யப் போகிறார்; அதை இன்னவித மாய்த்தான் தடுக்கவேண்டுமென்று யோசித்து வித்தப்படு

வதற்குக்கூட அவகாசம் கொடாமல், பரமஹம்ஸர் உடனே மின்னல் பாய்வதுபோல் நரேந்திரரை இறுகக் கட்டித் தழுவி அவரது மார்பகத்தில் தம் திருக்கரத்தை வைத்தார். அந்த ஸ்பர்சம்தான் நரேந்திரருக்குத் தெரியும். பின்னர் ஒரு முகூர்த்தகாலம் வரையில் இவ்வுலக வுணர்ச்சியே அவருக்கில்லாமலிருந்ததாம். அவர் கண்களுக்கு எல்லாம் அகண்ட ஸ்வரூபமாய்த் தோன்றியதாம். இது தான் ஸமாதி நிலை. இந்த யோகாநுபவத்தைப் பரமஹம்ஸர் தம் மஹிமையால் கேவலம் ஸ்பரிச மாத்திரத்தினாலேயே நரேந்திரருக்கு அநுக்கிரஹித்தார். அதுவே நரேந்திரர் விவேகாநந்தராவதற்குச் சுபமுகூர்த்தமாய்விட்டது. தாரக தத்துவம் அவருக்கு உபதேசமாய் விட்டது. வைராக்கிய பீஜம் அவரது ஹிருதய க்ஷேத்திரத்தில் ஊன்றிவிட்டது. அப்பொழுது அவரைச் சுட்டிக் காட்டி, "இவன் இவ்வுலகத்தை ஓர் ஆட்டம் ஆட்டி வைக்கப் போகிறான்" என்று பரமஹம்ஸர் அங்கிருந்தவர்களுக்குச் சொன்னாராம். அவருடைய வாக்கு நிறைவேறின விஷயம் இப்பொழுது உலகப் பிரஸித்தம்.

ஸர்வேஸ்வரனது நியமனத்தின்படி பரமஹம்ஸர் மஹா ஸமாதியில் அமரும்படி நேர்ந்தகாலையிலே, அநேகரும் தம்மிடம் பக்தி சிரத்தையாய் சிரவணம் செய்து வந்த சிஷ்யர்களின் சிறு சமூஹத்தை அவர் கிருபைக் கண்ணால் நோக்கி, "இனி நீங்கள் ஒழுக்கந் தவறாமல் நடந்து, பரிசுத்தமான வேதாந்த ஸித்தாந்த உண்மைக

ளைச் சக்தி வஞ்சனையின்றி எல்லோருக்கும் உபதேசிப்பீர்களாக" என்று ஆஞ்ஞாபித்தருளி ஸமாதியில் அமர்ந்தார்.

நரேந்திரநாதர் ஸ்ரீ ராமசந்திர தத்தரால் பரமஹம்ஸர்பால் ஒப்புவிக்கப்பட்ட ஒரு வருஷத்திற்குள் ஸந்யாசம் பெற்றுக்கொண்டார். அப்பொழுது அவருடன் பரமஹம்ஸரது சிஷ்யவர்க்கத்திற் சேர்ந்து அவரது அநுக்கிரஹம் பெற்ற (இங்கிலீஷில் உயர்தரப் பரிக்ஷைகள் கொடுத்த) வங்காளிகள் இருபதின்மர் இருந்தனர். 1886-ம் வருஷம் பரமஹம்ஸர் மஹா ஸமாதி யடைந்த பின்னர், விவேகாநந்தர் மற்ற சிஷ்யர்களை ஒருங்கு சேர்த்து ஸந்யாஸம் பூணும்படி செய்து அவர்களுக்குத் தலைவரானார். பிறகு அவர்கள் உலகத்திலுள்ள ஸர்வமத நூல்களையும் படித்தார்கள். இப்படிச் சிலகாலம் செல்ல, "எல்லாரும் இவ்வாறு ஒன்று சேர்ந்திருப்பதில் பயனில்லை" என்றும், "தனித்தனியே பிரிந்து யாத்திரை செய்து, சகலவித கஷ்டங்களையும் அநுபவித்து, அதன் மூலமாய் இந்திரிய நிக்கிரஹம் செய்யவேண்டும்" என்றும் தீர்மானித்து, முதலில் நாலு நாலு பேர்களாகப் பிரிந்து சென்றனர். பிறகு மும்மூன்று பேர்களாயும், ஈரிரண்டு பேர்களாயும் பிரிந்து சென்றார்கள். அவ்வாறு சென்ற காலத்தில் விவேகாநந்தருக்கு ஸகாவாயிருந்தவர் சென்னையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகள். அவர் இப்படி ஸஞ்சரிக்கும் ஸமயங்களிலே சிலநாள் அந்த ஆஹாரமின்றிப் பட்டினியாய் இருக்க வேண்டி வரும்.

அவ்வித உபவாஸத்திற்குப் பிறகு ஏதாவது பிக்ஷை கிடைக்குமாயின், அந்தச் சமயத்திலும் பசித்தவர் யாராவது வருவரேல், அவர்களுக்கு முதலில் அந்த மளித்து மிகுதி யிருந்தால் தாம் புசிப்பார். இல்லாவிடில் உபவாஸமாகவே இருப்பார். இவ்வாறு சிலநாள் சாதனம் செய்த பின், "இனி நாம் இரண்டு பேராகக் கூடச் சேர்ந்து செல்லக் கூடாது; தனிமையாகவே செல்லவேண்டும்" என்று நிச்சயித்து, ஒவ்வொருவரும் ஏகாங்கியாய்ச் சென்றார்கள். இவ்வாறு சிஷ்யர்க ளெல்லாம் நான்கு திக்குகளிலும் சிதறுண்டு போக, விவேகாநந்தர், ஹிமாசலத்துக்குச் சென்று அங்கே ஸஞ்சரிக்கு நாளில், தமது ஸஹபாடிகளை அங்கங்கே கலந்துகொண்டு, இனி "நமது ஜன்ம பூமிக்கு ஏதேனும் நமது சக்திக்கு வஞ்சனை யின்றி உபகரிக்க வேண்டும்" என்று அவர்களுக்குப் போதித்து, அவர்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, கல்கத்தா நகரம் சேர்ந்து அங்கே ஒருமடம் ஏற்படுத்தி, ஏனைய சிஷ்யர்களுக்கெல்லாம் தலைவரா யிருந்துவந்தார். இவ்வாறு சிறிது காலம் சென்ற பின்னர், விவேகாநந்தர் மறுபடியும் பூ ஸஞ்சாரத்திற்காகப் புறப்பட்டார்.

ஜனங்கள் தமது அத்தியந்தமான பிரீதிக்கும் வாற்சல்யத்துக்கும் இடமென்று கருதும் அனைத்தையும் விவேகாநந்தர் இவ்வாறு பாலியத்திலேயே துறந்து, ஸந்யாஸியின் சாதாரணமான காஷாயவஸ்திரத்தை யணிந்து, கையில் பிக்ஷாபாத்திர மேந்தி, தேசாடநஞ் செய்யத்

தொடங்கிப் பாதகண்ட மெல்லாம் யாத்திரை செய்து, ஸித்தபுருஷர்களைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்துடன் ஹிமாசலத்துக் கப்பாலுள்ள பிரதேசங்களுக்குஞ் சென்றார். அங்கங்கே ஏகாந்தமான பிரதேசங்களிலே சில காலம் தங்கியிருந்து, யோகாப்பியாஸமும் ஈசுவரத் தியானமும் செய்வார். இந்த ஸஞ்சாரத்தில் அவர் பட்ட கஷ்டங்கள் இவ்வள வவ்வள வல்ல. அதன் மூலமாய் எவ்வித கஷ்டங்களையும் பொறுக்குமாறு தேஹத்தை ஸாதனப் படுத்தக் கற்றுக்கொண்டதாக அவரே ஒரு சமயம் சொல்லியிருக்கிறார். அந்த சஞ்சாரத்தில் அவர் காசைக் கையால் தொடாம லிருப்பதையும், ஒருவரையும் ஆஹாரம் கேட்காமலிருப்பதையும் விரதமாகக் கொண்டிருந்தார். அக் காலத்தில் அவரிருந்த நிலையைப்பற்றி அவரே பின் ஒரு சமயத்தில் கூறியிருப்பதை இங்கே எடுத்துரைக்கின்றோம் "பதினுறு வருஷகாலம் பசிப்பிணி யின்னதென்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவண்ணமா யிருந்தேன். நாளைக்கு எங்கே உண்பேன் எங்கே உறங்குவேன் என்றும் தெரியாது. குடென்பது லவலேசமு மின்றி அத்தியந்தம் சீதளமாயுள்ள பிரதேசங்களிலே கௌபீநமாத்திரதாரியாய் ஜீவித்திருக்கத் துணிந்தேன்."

## II

ஸ்வாமிகள் சென்னைக்கு வருகை—சென்னைவாசிகள் அவரைச் சிகாகோவில் கூடிய ஸர்வமத ஸபையில் ஹிந்துமதத்தைப் பிரசங்கிக்குமாறு அனுப்புதல்—அவருக்கு அங்கே நேர்ந்த கஷ்டங்கள்—ஸர்வமத ஸபையைப்பற்றி ஸ்வாமிகள் செய்த வர்ணனை

*—அவர் செய்த ஹிந்துமத ப்ரஸங்கம்—பத்திரிகைகளின் அபிப்பிராயம்—அவர் பஹிரங்கமாயும் வேதாந்த வகுப்புகளிலேயும் புரிந்த பிரசங்கங்கள்—ந்யூயார்க் நகரத்திலே வேதாந்த சபை ஸ்தாபனம்.*

ஸ்வாமிகள் இவ்வாறு தேசமெங்கும் ஸஞ்சரித்துக் கொண்டு 1892-ம் வருஷத்தில் திருவாங்கூர் ராஜ்யத்துக்கு வந்திருந்தபொழுது, அங்கே அப்பொழுது தம் சொந்த காரியமாய்ச் சென்றிருந்த சென்னை அக்கவுண்டாண்ட் ஜனரல் ஆபீஸ் உத்தியோகஸ்தராகிய பாபு மந்மதநாத பட்டாசாரியார் அவரைக் கண்டு பேசித், தம்முடன் சென்னப்பட்டணத்துக்கு அழைத்துவந்தார். வந்து சிலநாள் இங்கே தங்கியிருந்தபொழுது, இங்கிலீஷ் பேசும் ஸந்யாஸி ஒருவர் வந்திருக்கிறாரென்கிற சமாசாரம் பரவவே, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் முதலிய இடங்களிலுள்ள இங்கிலீஷ் வல்ல பிரமுகர்கள் அவரிடம் சென்று அநேக வித சிக்கான கேள்விகளெல்லாம் கேட்கத் தொடங்கி, அவற்றிற்கெல்லாம் அவர் சிறிதேனும் சளைக்காமல் திருப்திகரமான சமாதானம் உரைத்தமையால், சுவாமிகளின் அபாரமான சக்தி சாமர்த்தியங்களைக் கண்டு வியந்து, அவரிடம் மிகுந்த கௌரவம் பாராட்டினார்கள். இங்கிலீஷிலுள்ள பதார்த்த விஞ்ஞான நூல்களைப் படித்துவிட்டு, ஆரிய சாஸ்திரங்களை அவமதித்துப் பேசி இறுமாந்திருந்த நாஸ்திகர்கள் சிலர், இவரிடத்தில் வாதம் புரிந்து தோல்வியுற்றுக் கடைசியில் ஆஸ்திகர்களாயினர். அவர், பசி தாகங்களையும் பாராட்டாமல், அல்லும் பகலும் ஓயா

மல், தம்மிடம் வருகின்றவர்களின் சமய சந்தேகங்களை நீக்கி, வேதாந்தத்தின் உயர்வை எடுத்துக் காட்டிய பொழுது அவருக்கு இங்கே அநேகர் சிஷ்யரானார்கள். இந்து மதத்தை மூடபக்திக் களஞ்சியமென்று நினைத்திருந்தவர்கள் அதைவிட உயர்ந்த மதமில்லையென்னும் உண்மையைக் கண்டு தெளிந்தனர்.

அப்பொழுது அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத்திலே மஹா கொலம்பியன் ப்ரதர்சநி (The Great Columbian Exposition) என்கிற பெரியதோர் உலகச் சந்தை கூட்டவேண்டுமென்றும், அதில் பிரபஞ்சத்தில் ஜனங்கள் அதுவரையில் வெவ்வேறு துறைகளில் பிரவிர்த்தித்து அடைந்திருக்கும் அபிவிருத்தியைக் காட்டும் பொருட்டு, சிற்பம் சித்திரம் முதலிய கலைகளிலும், மற்றுமுள்ள பலவகைக் கைத்தொழில்களிலும் சிறந்த வேலைப்பாடுள்ள பொருள்களை அவ்வந் நாட்டிலிருந்து வரவழைத்து அக் காட்சியில் வைக்கவேண்டுமென்றும், அக் காட்சியின் ஒரு பிரிவாக ஸர்வமத மஹாசபை ஒன்றும் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஸங்கல்பிக்கப்பட்டது. உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும் கிறிஸ்துமதமே சிறந்ததென்று ஸ்தாபிக்கவேண்டுமென்பதே அம் மஹா ஸபையேற்படுத்தினவர்களின் முக்கிய கருத்து. அந்த உத்தேசத்துடன் உலகத்திலுள்ள ஸர்வ மதத்தினரும் தத்தம் பிரதிநிதிகளை அச் சபைக்கு அனுப்புமாறு எல்லாத் தேசங்களுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஐரோ

ய்பாவிலும் அமெரிக்காவிலும் ஆசியா கண்டத்திலுள்ள பௌத்த மஹம்மதிய தேசங்களிலும் உள்ள பல்வேறு மதஸ்தர்களும் அவ் வழைப்புக் கடிதத்தை யேற்று, தம்முள் சிறந்த பண்டிதர்களை அச் சபைக்குப் பிரதிநிதிகளாக அனுப்பினார்கள். இந்தியாவிலோ அதைப் பற்றிய முயற்சி யாதொன்றும் அதுவரையில் செய்யப்படவில்லை. அம் மஹா சபைக்கு அனுப்பத் தக்கவர்கள் ஸம்ஸ்கிருதத்திலுள்ள மத நூல்களை நன்குணர்ந்து, ஆங்கில பாஷையையும் நன்றாய்க் கற்று அதில் பிரசங்கம் புரியும் சக்தியுள்ளவர்களா யிருக்கவேண்டும். அன்றியும், தற்கால விஞ்ஞான சாஸ்திரங்களையும் ஐயந்திரிபற வோதி யுணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில், அமெரிக்கர்களின் முன் நம் மதத்தைப் பிரசங்கிப்பது அஸாத்தியம். இத்தனை லக்ஷணங்களும் பொருந்திய வொருவர் அகப்படுவது அரிதாயிருந்தது. ஸம்ஸ்கிருதத்தில் ஸகல சாஸ்திரங்களையும் ஓதி யுணர்ந்த மஹா மஹோ உபாத்தியாயர்கள் நம்முள் இருப்பினும், அவர்களுக்கு ஆங்கிலத்தில் ஓரெழுத்தும் தெரியாமையால் இவ் விஷயத்தில் அவர்கள் பயன்படமாட்டார். ஆங்கிலத்தில் எம். ஏ. பரீக்ஷைகொடுத்தவர்கள் இருப்பினும், அவர்களுக்கு வடமொழியில் பூர்ண பாண்டித்தியம் இல்லாமையால் அவர்களாலும் பிரயோஜன மில்லை. ஒருவேளை இவ்வளவும் ஒருவரிடம் பொருந்தி யிருப்பினும் கடலைக் கடந்து செல்லக்கூடாதென்கிற ஜாதி யிலக்குக் குறுக்கே நிற்பதாகும். ஆகவே, ஸர்வமத மஹா ஸபைக்கு ஹிந்துமதப் பிரதிநிதி யொரு

வரை யனுப்புவது அநேகமாய் அசாத்திய மென்றே புலப் பட்டது. ஆனால், எல்லாம் வல்ல இறைவன் நம்மை இச் சமயத்தில் கைவிடுவாரா? பரத கண்டத்தின் பெருமை யெல்லாம் அதன் சமய பக்தியினாலும், ஞானச் செல்வத்தி னாலு மன்றோ விளங்குகின்றது. ஸர்வமத மஹா சபையின் ஆதிக் கருத்தை மாற்றி அத்தகைய பெரிய சபைக்கு நியாயமாய் இருக்கவேண்டிய சமரஸக் கொள்கையை நிர்ணயிக்கும் ஆற்றல் எல்லா மதங்கட்கும் பிறப்பிட மாகிய பரதகண்டத்திற்கன்றி வேறெந்நாட்டிற்குளது?

உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களுக்குள்ளும் புண் ணிய பூமியென்று புகழ்ந்தேத்தப்படும் இப் பரதகண்டமா னது செழித்த ராஜ்யங்களாலும், விசாலமான நகரங்களா லும், பர்வத ராஜனாகிய ஹிமவானாலும், கடவுள் நதியாகிய கங்கையாலும், மற்றுமுள்ள நதீ நத ஸரோவரங்களாலும் பெருமை யுடையதன்று. மற்றெதனாலெனின், கூறுவோம்.

"எவருடைய ஸங்கல்ப மாத்திரத்தால் இவ் வையகம் தோன்றியதோ, அத்தகைய ஜகத்பதியாகிய ஸர்வேசுவர னே இந்த ஜகத்துக்குப் பிரதமாசாரியன். அவரது திரு வருள் பெற்று மகிழ்ந்த மஹர்ஷிகள் முதன்முதல் பரத கண்டத்தில் வேதஸ்வர விதிகளுக்கிணங்க இவ்வாறு பாட லுற்றனர்:—"தனக்குவமை யில்லாது விளங்கும் தனிப் பெரும் பொருளே அழிவற்ற பரம்பொருளாம். அது நிரா லம்பமாயும், அகில புவனங்களுக்கும் ஒப்புயர்வற்ற ஆலம் பன (ஆதார) மாயும் திகழ்கின்றது." ப்ரணவத்தினின்

றுண்டாகிச் சதுர்வேத வடிவந் தாங்கிய 'ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம' என்கிற அத் திவ்யத் திருவாக்கே பாரதகண்டத்தின் சிறந்த செல்வமென்று பெரியோர்களால் புகழ்ந்து போற்றப்படுகின்றது. அதன் வாயிலாகவே தர்மத்துக்கும் நீதிக்கும் வேண்டிய ஸர்வவிதமான ஆதாரங்களும் ஏற்பட்டன அவ்வாதாரங்களின் வன்மையைப் பேற்றே நல்லோர்களின் ஆசார அநுஷ்டானங்கள் நிலைபெற்றிருக்கின்றன. இவ்வாறு வேத மார்க்கத்தால் வைபவமுற்ற பாரதகண்டமானது நல்லொழுக்கமும் ஞானவிஞ்ஞானச் செல்வமும் நிறையப் பெற்று சிறந்த தேசமெனத் திகழ்ந்தது. வெண்ணெயினல் பாலின் பெருமையும்-வைரநிறைவால் மரங்களின் பெருமையும்-தாதுவர்க்கப் பெருக்கத்தால் மலையின் பெருமையும் எவ்வாறு நிச்சயிக்கப்படுமோ அவ்வாறே, இந் நாட்டின் பெருமையும் பெரியோர்கள் கடைப்பிடித் தொழுகும் வேதத்தினின்று உண்டான ஆசார அநுஷ்டானங்களின் சிறப்பினலேயே அறிஞர்களால் துணியப்படும்.

"பரமபதியின் ஸந்நிதானத்தில் அனைவரும் ஸமானரென்பதும், இம்மை மறுமைப் பயன்கள் அவரவர்களின் வினைகளுக்குத் தக்கவாறு அடையப்படுவன வென்பதும், துரபிமான மில்லாத புத்தியுடன் ஸகல அபிப்பிராயங்களையும் நன்குய்ப் பரிசீலனை பண்ணவேண்டு மென்பதும், வேவ்வேறன மதபேதங்களையும் நிஷ்பக்ஷபாத புத்தியுடன் நோக்கவேண்டு மென்பதும், மூடபக்தி யுள்ளவர்

கள் செய்யும் அஞ்ஞானச் சடங்குகளையும் அவை நற்கதி யடைய வேண்டுமென்ற கருத்துடன் செய்யப்படுகின்ற காரணத்தினால் பொறுத்துக்கொள்ள வேண்டு மென்பதும் மாம்ஸக் கண்ணைவிட மனக் கண்ணே சிறந்த தென்பதும், எவ்வித தத்துவக் கொள்கை யுடைய பெரியோரும் பெருமைக் குரியவர் என்பதும், மஹா பிரகிருதியின் தத்துவங்களை யுணர்ந்த ப்ரஹ்ம வாதிகளால் பாதகண்டத்திலே ஸ்தாபிக்கப்பட்டனபோல் இவ் வையகத்தில் வேறெங்குமில்லை.

"ஆனதுபற்றியே, மஹா கூடார்த்தங்களை விளக்கும் சிறப்பு வாய்ந்த பாதகண்டமானது புவனத்துக்குப் புத்திந்திரியமாய் விளங்குவதென்று புலவர்களால் புகழப் பெறுகின்றது. இந் நாட்டின் ஞானத்தின் சிந்திப்போன துளிகளினாலேயே பிற நாட்டார் அறிவுடையோ ராயினர். அதன் தர்மமோ மிகச் சிறந்தது. அதனால் எல்லா மானிட வர்க்கத்துக்கும் விதிக்கப்பட்ட நீதிநெறியும் மாட்சிமை பெற்றதாம்."*

இத் தகைய சிறப்புடன் விளங்கும் பாதகண்டத்தின் வேதமார்க்கப் பெருமையினை ஸர்வமத மஹாசபையின் முன் எடுத்துரைக்க ஸாமர்த்யர்களால் ஆகுமோ? என்

* 'பாதகண்டப் பெருமை'யை உணர்த்தும் ஷெ வாக்கியங்கள் மஹாகவி ஸ்ரீ ராமஸ்வாமி ராஜா இயற்றிய ராஜாங்கல மஹோத்யாநம் எனும் வடமொழி இதிஹாஸத்தினின்றும் எடுக்கப்பட்டவை.

றிவ்வாறு யோசித்து வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தவர்களின் கலியைத் தீர்க்க அவர்கள் செய்த பூர்வ புண்ய பரிபாகமே உருவெடுத்து வந்ததோவென விளங்கிய விவேகாநந்த ஸ்வாமிகளைத் தெய்வமே அவர்கள் முன் கொண்டு வந்து விட்டதுபோலும். ஸர்வமத மஹாஸபைக்குப் போகத் தக்க ஹிந்துமத பிரதிநிதிக் கிருக்கவேண்டிய யோக்கியதைகளெல்லாம் அவரிடத்து அமைந்திருந்தன. அவர் ஆங்கில நூலிலும் ஆரிய நூலிலும் கரை கண்டவர். அன்றியும், ஒரு மஹா யோகியின் பிரிய சிஷ்ய னானமையால் சிவானுபூதிச் செல்வம் பெற்றவர். துறவியானமையால் சமுத்திர யாத்திரை செய்யக்கூடா தென்னும் ஜாதியாசார விலக்குக்கும் மேற்பட்டவர்.

சென்னையில் அவருடன் பழகும் பாக்கியம் பெற்ற கல்வி கேள்விகளில் தேர்ந்தவர் அனைவரும், அவரது விரிந்த அறிவையும் ஆழ்ந்த சாஸ்த்ர விசாரணையையும் கண்டு வியந்து, ஸர்வமத மஹா ஸபைக்கு ஹிந்துமதப் பிரதிநிதியாய்ச் செல்லத் தக்கவர் இவரே யெனத் தேர்ந்து, மைசூர் மஹாராஜா, இராமநாதபுரம் ராஜா, நீதிபதிபர் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரவர்கள் முதலியவர்கள் செய்த தனசகாயத்தைக் கொண்டு ஸ்வாமிகளை அமெரிகாவுக்குப் பிரயாணப் படுத்தி யனுப்பினார்கள்.

ஸ்வாமிகளும் கப்பலேறி ஜப்பான் தேச வழியாய்க் கடல்களையும் மஹா ஸமுத்திரங்களையுங் கடந்து, 1893ஹு மே.மீ த்தில் சிகாகோவில் போயிறங்கினர். அவர் இந்தியா

வை விட்டு வெளி நாட்டுக்குக் கிளம்பினது அதுவே முதன்முதலானமையால், கடல் யாத்திரை அவருக்கு மஹா குதூஹலத்தை யுண்டாக்கியது. அவர் சிகாகோ நகரம் போய்ச் சேருவதற்கு முன்னமே கடல் யாத்திரையில் தாம் கண்ட அதிசயங்களையும், அதனால் தமக்குண்டான அபிப்பிராயங்களையும் அழகாய் வர்ணித்து, ஒரு நீண்ட கடிதம் சென்னையிலுள்ள நண்பர்களுக்கு எழுதினார். அதில் இந்தியர்கள் கிணற்றுத் தவளைகளைப்போல் தங்கள் வீடுகளிலேயே உட்கார்ந்துகொண்டு வெளிநாடுகளுக்குச் செல்லாம லிருப்பதால், அவர்கள், உலகம் அடைந்து வரும் உயர்ந்த அபிவிர்த்தியைக் கண்டு தாமும் முன்னுக்கு வர முடியாமல் தினே தினே க்ஷீணித்துக் கொண்டு வருகிறார்க ளென்றும், தமது பெரியோர் ஏற்படுத்திய உத்தம மதத்தின் உண்மை மகிமையை மறந்து உள்மதக் குட்டிக் கலஹங்களைச் செய்துகொண்டு வாணாளை வீணாக்குகின்றார்க ளென்றும், நம்மவர் முன்னுக்கு வர வேண்டுமானால் உயர்ந்த வர்ணத்தோரும் பணக்காரர்களும் தங்கள் க்ஷேமமே முக்கிய மென்று கருதும் சுயாபிமானத்தை விட்டு ஏழைகளையும், அகதிகளையும், தீனர்களையும் கைதூக்கி விடவேண்டுவது கடமை யென்றும் கூறி, ஜப்பான் தேசத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது, ஜப்பானியர் தங்கள் ஊர்களையும் வீடுகளையும் சரீரங்களையும் வெகு சுத்தமாய் வைத்துக்கொண் டிருக்கிறார்க ளென்றும் அவர்கள் தமக்கு வேண்டுவனவற்றைப் பிற நாடுகளினின்று கொள்ளாமல், தீக்குச்சி செய்தல்முதல் கப்பல்

செய்தல் ஈருகவுள்ள அனைத்தையும் தாமே செய்து கொள்ளுகிருர்களென்றும், அவர்களது பௌத்த கோயில்களின் சுவர்களில் சில ஸம்ஸ்கிருத மந்திரங்கள் பழைய வங்காள எழுத்தில் வரையப்பட்டிருக்கின்றனவென்றும், அந்நாட்டின் மதமாகிய பௌத்தமதத்துக்குத் தாயகம் பரதகண்டமாதலால் அவர்கள் நம் தேசத்தைப் புண்ய பூமியெனக் கொண்டாடுகின்றனரென்றும், நம் நாட்டில் ஒவ்வொரு வாலிபனும் ஜப்பான் தேசத்தை ஒருமுறையாவது பார்த்துவிட்டு வந்து அம்மாதிரித் தன் தேசத்தையும் முன்னுக்குக் கொண்டுவர முயலவேண்டுமென்றும், கேவலம் 15 ரூபாய் சம்பாதிக்கும் குமாஸ்தாவாகவோ அல்லது வக்கீலாகவோ வரும்பொருட்டே தம் சக்தியெல்லாவற்றையும் செலவழிப்பது மிக்க பரிதாபகரமென்றும், நம்முள் சிலராவது தேச நன்மைக்காகத் தம் நன்மையைப் பாராட்டாது, பொதுநலங் கருதிப் பிறநாடுகளுக்குச் சென்று, அங்குள்ளார்க்கு நம் மதத்தின் பெருமையையெடுத்துக் காட்டி, அதன் மூலமாய் நம் நாட்டின் கீர்த்தி ஸ்தம்பத்தை உலகமெங்கும் நாட்டி, அயல் நாட்டாரின் உலக நாகரிகத்தில் சிறந்ததாய்த் தோன்றுமவைகளை நம் தேசத்தில் நிலைபெறச் செய்ய முயன்றாலொழிய நாம் க்ஷேமப்படுவதற்கு வேறு வழி இல்லையென்றும், மன முருகும்படி எழுதினார்.

அவர் சிகாகோ நகரம்போய்ச் சேர்ந்தபொழுது ஸர்வ மத மஹா ஸபை கூடுவதற்கு இன்னும் சில மாசம் செல்லு

மென்று தெரியவந்தது. அவ்வளவு காலம் நீடித்துத் தங்கி இருப்பதற்கு அவர் கையில் கொண்டுபோயிருந்த பொருள் போதுமானதன்று. முகமறியாத் தூர தேசத்திலே அவர் யாரைப்போய்க் கேட்பார் பாவம்! என் செய்வார்? வேறு யாராவது அத்தகைய நிலையில் இருந்தால் ஏக்கம் கொண்டு பரிதவித்துப் போயிருப்பார்கள். ஆனால் நமது ஸ்வாமிகளோ அதைப்பற்றிச் சிறிதேனும் கவலை கொள்ளவில்லை. ''நான் ஸர்வேஸ்வரனது காரியத்தை முடிப்பதன் பொருட்டு இங்கே வந்திருப்பது உண்மையானால், அவரே என்னைப் பாதுகாத்தருளுவார்'' என்று தமக்குள் சொல்லிக் கொண்டு தைரியமா யிருந்தார். அவர் ஈசுவரனிடத்தில் வைத்த நம்பிக்கை ஸபலமாயிற்று. அவர் பேரையுங்கூடக் கேட்டிராதவர்களெல்லாம் அவரது சக்தி சாமர்த்தியங்களால் அவருக்கு வசமாகி, அவரது சிநேகத்தைச் சம்பாதிக்க முன் வந்து, அவரைத் தங்கள் குடும்பத்தில் வரும்படி எதிர்கொண் டழைத்துச் சென்று புத்திரனைப்போல் பிரீதியுடன் நடத்திவந்தார்கள்.

விவேகாநந்த ஸ்வாமிகள் அழைபராது சென்றவரானமையால், ஸர்வமத ஸபையிலே பேசக்கூடாதென்று ஆக்ஷேபித்து அவரை நீக்கிவிடுவது அதி சுலப மாயினும், அச் சபையின் அக்கிராஸநாதிபதியாகிய டாக்டர் பாரோஸ் துரையவர்கள் விசேஷ கருணையைக் காட்டி, அத்தகைய ஆக்ஷேபங்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு, அவரைக் கோஷ்டியின் முன் வரவழைத்துப் பேசும்படி அநுமதியளித்தார்.

விவேகாநந்த ஸ்வாமிகள் ஸர்வமத மஹா ஸபையில் விஜயஞ் செய்து விளங்கிய காட்சியை அவரே சென்னையி லுள்ள ஒரு நண்பருக்குப் பின் வருமாறு வர்ணித்து எழுதி யுள்ளார்.

'ஸர்வமதஸபை தொடக்கமான நாளின் காலையில் நாங்கள் அனைவரும் கலாபவநம் (Art Palace) என்னும் கட்டிடத்திலே கூடினோம். அதில் ஒரு பிரமாண்டமான 'ஹாலு'ம், மற்றும் சில 'ஹால்'களும் ஸர்வமத ஸபை கூடும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்தன. தேசதேசாந் தரங்களிலிருந்து ஜனங்கள் அங்கே வந்து கூடியிருந்தார் கள். இந்தியாவிலிருந்து ப்ராஹ்ம ஸமாஜீயரான மஜூம் தாரும், பம்பாய்வாசியாகிய நாகர்காரும், ஜைநமதப் பிரதி நிதியான வீர சந்திரகாந்தியும், திவ்ய ஜ்ஞாந சங்கத்தின் சார்பில் Mrs. அன்னிபெஸன்ட் அம்மையுடன் மிஸ்டர் சக்ரவர்த்தியும் வந்திருந்தார்கள். இவர்களில் மஜூம்தாரும் நானும் ஏற்கனவே பழைய நண்பர்கள். சக்ரவர்த்திக்கு என் பெயர் மாத்திரம் தெரியும். அப்பொழுது பிரசங்கம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட நாங்கள் யாவரும் அற்புத மாய்த் திருக்கோலம் வந்து உபந்யாஸ மேடையின்மேல் வரிசை வரிசையாய் ஆசனங்களிலே அமர்ந்தோம். ஆஹா! அவ் வற்புதக் காட்சியின் அழகை யான் எவ்வாறு வர் ணிப்பேன்? கீழே ஒரு ஹால் என்ன; அதன் மேலே, அந் நாட்டின் கல்வி கேள்விகளிலும் நாகரிக நலத்திலும் சிறப்பு வாய்ந்த மணிகளெனத் தகும் ஆறாயிரம் ஏழாயிரம்

ஸ்திரீபுமான்கள் நிறைந்த பிரமாண்டமான சந்திரசாலை (Gallery) என்ன; பிரசங்க மேடையிலே பூமண்டலத்தில் அகில தேசங்களிலிருந்தும் வந்திருக்கும் பண்டித சிரோமணிக ளென்ன; என் ஜந்மத்தில் அதற்குமுன் ஒருகாலும் பகிரங்கமாய்ப் பேச வறியாத நானும் இவ்வளவு சிறப்பு வாய்ந்த கம்பீரமான வித்வத்கோஷ்டியின் முன்னின்று பிரசங்கிக்கக் கருதியிருக்கும் விந்தையென்ன!! இவற்றை யெல்லாம் உங்கள் மாநஸ சக்தியால் கற்பித்துப் பார்த்தால் அச் சபையின் சிறப்பு ஒருவாறு உங்கள் மனக்கண்ணுக்கு விளங்கும். அச் சபை வெகு வைபவத்தோடும் மங்கள கீத வாத்திய கோஷத்துடனும் பீடிகாரூபமான பிரசங்கங்களுடனும் ஆரம்பமாயிற்று. பிரதிநிதிக ளனைவரும் ஒவ்வொருவராய்ச் சபையாருக்குப் பரிசயம் செய்விக்கப் பெற்று, கோஷ்டியின் முன் வந்து நின்று பிரசங்கித்தார்கள்.''

இந்த சமயத்தில் ஸர்வமத பிரதிநிதிகளுக்கும் ஸபையார் செய்த நல்வரவு மரியாதையை ஸ்வாமிகள் ஸ்வீகரித்துச் செய்த பிரசங்கமானது அச் சபையின் ஆவேதனப் பத்திரத்தில் (Report) பின் வருமாறு விசேஷித்து வர்ணிக்கப்பட்டிருக்கிறது:

கார்டிநல் கிப்பன்ஸ் என்னும் கிறிஸ்துமத பரமாசாரியரது இருபாரிசத்திலும், கீழ்நாட்டு மதப்பிரதிநிதிகள் தத்தமக்குரிய ஆசநங்களால் அமர்ந்திருந்தனர். அவர்கள் அணிந்த நாநா வர்ணமுள்ள அழகிய ஆடைகள் ஒன்றை

யொன்று பழிப்பனபோல் தளதளவென்று பிரகாசித்து நேத்ரோற்சவ மளித்தன. அங்குக் கூடியிருந்த ப்ராஹ்ம ஸமாஜிகள், பௌத்தர், முஹம்மதியர் முதலானவர்களுக்குள்ளே பரதகண்டத்திலிருந்து போயிருந்த மஹா வாசாலகராகிய விவேகாநந்த ஸ்வாமி என்கிற ஸந்ந்யாஸி, தீர்க்கமான செங்காவி யாடை யணிந்த திருமேனியுடன் கம்பீரமாய் விளங்கினார். அவரது உத்தமாங்கத்தை யலங்கரித்த மஞ்சள் நிறமான பெரிய பாகையால் அவரது முகமண்டலம் முன்னினும் அதிகமான காந்தியுடன் பிரகாசித்தது. மற்ற பிரதிநிதிகளின் பிரசங்கங்கள் முற்றுப்பெற்றவுடன், விவேகாநந்த ஸ்வாமிகளை ஸபையின் முன் வந்து பிரஸங்கிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அதை விவேகாநந்த ஸ்வாமிகள் ஏற்று, கோஷ்டியைப் பார்த்து, "அமெரிகா வாசிகளாகிய ஸஹோதரி ஸஹோதரர்காள்!" என்றழைத்தபொழுது உண்டான சந்தோஷ சூசகமான கரதாளத்தின் ஆரவாரம் வெகு நிமிஷம்வரையில் ஓயாம லிருந்தது. அப்பொழுது அவர் பின் வருமாறு பேசலுற்றார்:

## ஸபை வணக்கம்.

"நீங்கள் எங்களுக்கு மனமுவந்தளித்த உபசாரத்தால் நாங்கள் கிருதார்த்தராயினோமெனச் சொல்லும் பாக்கியம் எனக்கு வாய்த்ததைப்பற்றிச் சொல்ல முடியாத சந்தோஷத்தால் என் உள்ளம் பூரிக்கின்றது. உலகத்திலுள்ள சந்நியாசி சங்கங்களுக்கெல்லாம் மிகப் புராதனமாயுள்ள சந்நியாஸி சங்கத்தின் பெயரால் உங்களுக்கு வந்த

னம் அளிக்கின்றேன்; எல்லா மதங்களுக்கும் தாயாய் விளங்கும் மதத்தின் பெயரால் உங்களுக்கு வந்தனம் அளிக்கின்றேன்; ஸகல ஜாதி மதங்களையும் சேர்ந்த லக்ஷோபலக்ஷம் இந்து மஹா ஜனங்களின் பெயராலும் உங்களுக்கு வந்தன மளிக்கின்றேன்.

வெகு தூர தேசங்களிலிருந்து இங்கு வந்து கூடியிருக்கும் ஜாதியார்கள், இங்கு வெளியாகும் ஸமரஸ பாவனையைத் தம் தம் நாடுகளுக்குக் கொண்டுபோகும் பாத்தியதையை அடைய நியாய மிருக்கிறதென்று இம் மேடையின்மேலேறிப் பிரசங்கித்த சில கனவான்களுக்கும் வந்தனம் பாராட்டுகின்றேன். எந்த மதமானது ஸர்வ ஸமய ஸமரஸத்தையும் ஸர்வஸம்மத ஸித்தாந்தத்தையும் உலகத்துக்கு உபதேசித்ததோ அந்த மதத்தை நான் சேர்ந்தவன் என்று பெருமை பாராட்டுகின்றேன். நாங்கள் அந்யமதாநுஸாரிகளைப் பகைக்காது ஸமரஸ திருஷ்டியுடன் நோக்குவது மாத்திரமன்றி, எல்லா மதங்களும் உண்மையானவை யென்றும் நம்புகின்றோம். எந்த மதத்தின் பரிசுத்த பாஷையாகிய ஸம்ஸ்கிருதத்திலே, (ஸமரஸபாவனைக்கு எதிர்மறையான) Exclusion என்கிற சொல்லை மொழிபெயர்ப்பது அஸாத்தியமோ (அதாவது, எந்த மதத்தின் ஸம்ஸ்கிருத மென்னும் பரிசுத்த பாஷையானது யாதொரு மதத்தையும் இழிவெனக் கருதி நிராகரிப்பதில்லையோ), அப்படிப்பட்ட மதத்தைச் சேர்ந்தவன் யான் என்று பெருமையுடன் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

வையகத்திலுள்ள ஸகல மதங்களிலும் ஜாதிகளிலும் பயத்தையும் உபத்திரவத்தையும் அனுபவித்துத், தப்பியோடி அடைக்கலம் புக வந்தவர்களுக்கெல்லாம் அபய மளித்துப் பாதுகாத்த ஜாதியாளரைச் சேர்ந்தவன் யானென்பதைப் பற்றிப் பெருமை பாராட்டுகிறேன். ரோமகர்களின் கொடுமையால் யூதஜாதியாரின் திருக்கோயில் அழிந்து பட்ட காலையில், உத்தமகுலத்தைச் சேர்ந்த சில யூத குடும்பங்கள் தென்னிந்தியாவிலே அடைக்கலம் புகுந்த பொழுது நாங்கள் அவர்களை மனதாரக் கட்டியணைத்துக் காப்பாற்றினோம். ஜாதஷ்டி முனிவரின் (Zoroaster) அடியார்களாகிய பெருமை தங்கிய பார்ஸீக ஜாதியாளரில் மிகுந்து நின்றோர்களுக்குத் தங்க இடங்கொடுத்து அவர்களை இன்றுவரையிலும் வளர்த்துவரும் மதம் எதுவோ அதைச் சேர்ந்தவன் யான். அன்பர்களே! கோடாநுகோடி ஜனங்கள் எந்த ஸ்தோத்ரத்தைத் தினந்தோறும் படனம் பண்ணுகின்றார்களோ, எதை என் பாலியம் முதல் நானும் ஓதிக்கொண்டு வருகின்றேனோ, அந்த சுலோகத்தில் இரண்டு அடிகளை உங்களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள்!

ருசீநாம் வைசித்ர்யாத் ருஜுகுடில நாநா பதஜுஷாம்
நூணாம் ஏகோ கம்யஸ் த்வமஸி பயஸாம் அர்ணவ இவ.

"ஹே ப்ரபோ! வெவ்வேறிடங்களிலே உற்பத்தியாகும் வெவ்வேறு நதிகளுக்கெல்லாம் ஸமுத்திரமே ஸங்கமஸ்தானமா யிருப்பதுபோல், அபிருசி பேதத்தால் ஜனங்கள் கைப்பற்றும் மார்க்கங்கள், நேராயும் கோணலாயும்

வெவ்வேறு விதமாகக் காணப்படினும், அவைகளுக்கெல்லாம் நீ யொருவனே ப்ராப்தி ஸ்தானமாய் விளங்குகின்றாய்."

ஸ்ரீ கிருஷ்ணன் கீதையிலே திருவாய்மலர்ந்தருளிய

"யே யதா மாம் ப்ரபத்யந்தே
தாம்ஸ் ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மாநு வர்த்தந்தே
மநுஷ்யா: பார்த ஸர்வச:"

"பார்த்தா! யார் எப்படி என்னைப் பஜிக்கின்றார்களோ, அவர்களை அப்படியே நான் அடைகின்றேன். மநுஷ்யர்கள் எல்லாரும் என் மார்க்கத்தையே அநுசரிப்பார்கள்" என்னும் அற்புதமான ஸித்தாந்தத்தையே எல்லா விதத்தாலும் சிறந்து விளங்கும் இச்சபையும் வலியுறுத்தி உலகோர்முன் உத்கோஷிக்கின்றது. மதக் கக்ஷிபேதங்களும் மூடமதப் பிடிவாதமும், அவற்றின் பயங்கர சந்ததியாகிய கொடிய மத வீராவேசமும் இவ் வழகிய பூமியை வெகு காலம் ஆக்கிரமித்துப் பீடித்தன. அவை தம் கொடுமையால் இக்குவலயத்தைச் சீர் குலைத்து, அதை ஜனங்களின் ரத்தச் சேற்றில் பலகாலும் தோய்த்து நாகரிகத்தை நாசம்பண்ணி, எத்தனையோ நாட்டார்களை ஏக்கத்தில் அமிழ்த்துவிட்டன. இந்தப் பயங்கரமான பூதம் மாத்திரம் இல்லாதிருந்தால் நாம் இப்பொழு திருப்பதைவிட எவ்வளவோ மேலான நிலையில் இருந்திருப்போம். ஆனால் அதன் இறுதிக்காலம் கிட்டிவிட்டது. இனி நான் மநப்

பூர்வமாய் ஆசைப்படுவது என்னவெனின்: இம் மஹா சபையின் கௌரவ சூசகமாய் அன்று நான்கு திக்குகளிலும் முழங்கிய மணி யோசையே எல்லாவித மத பேத வீராவேசங்களேயும், கத்தி முனையாலும் குதர்க்கத்தினாலும் செய்யும் சகல வித கொடுமைகளேயும், ஒரே நிலைமை நோக்கிச் செல்லும் மனிதர்களுக்குள் பரஸ்பரம் உண்டாகும் பலவித கொரோமான த்வேஷங்களேயும் அழிக்கும் ப்ரளயகால முழக்கமாய் முடிவதாக!

## ஸர்வ ஸஹோதரத்துவம்

[செப்டம்பர்மீ 15உ சுக்ரவாரம் பிற்பகலில் ஸர்வமத மஹாஸபையின் ஐந்தாநாள் கூட்டம் கூடியபொழுது அந்த அந்த மதாநுசாரிகள் தத்தம் மதங்களின் உயர்வை ஸ்தாபிக்கும்பொருட்டுப் பிரசங்கம் செய்தார்கள். கடைசியில் ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் பின் வரும் கதையைச் சொல்லி எல்லாரையும் களிப்பித்தார்.]

நான் உங்களுக்கு ஒரு சிறிய கதை சொல்லப்போகிறேன். இதற்குமுன் பிரசங்கித்து முடித்த வாசாலகர், "நாம் ஒருவரை ஒருவர் இகழ்வதை ஒழிப்போமாக" என்று கூறியதை நீங்கள் யாவரும் கேட்டீர்கள். நமக்குள் இவ்வளவு மத பேதம் உண்டாயிருப்பதைப்பற்றி அவர் பெரிதும் விசன முற்றார்.

ஆனல், நான் சொல்லப்போகும் கதை இம்மத பேதத்தின் காரணத்தை விளக்குமென்று நினைக்கிறேன்.

ஒரு தவளை ஒரு கிணற்றில் வசித்துக்கொண்டிருந்தது. அது வெகு காலமாய் அங்கே வசித்துவந்தது. அது அங்கேயே பிறந்து, அங்கேயே வளர்ந்துவந்த போதிலும் அதன் உருவம் மாத்திரம் வெகு சிறியதாகவே இருந்தது. அந்தச் சமயத்தில் தற்காலத்திய நவீன பரிணாமவாதிகள் * ஒருவரும் இல்லாமையால், இருள் நிறைந்த அந்தக் கிணற்றில் வெகு காலமாய் வசித்துவரும் தவளைக்குக் கண் பார்வை இருந்ததா போய்விட்டதா என்று சொல்வதற்கு ஒருவருமில்லை. ஆனால், நம் கதையின்பொருட்டு அதற்குக் கண் பார்வை இருந்ததென்றே வைத்துக்கொள்வோம். அது தினந்தோறும் எவ்வளவு உற்சாகத்துடன் அக்கிணற்றிலிருந்த எல்லாப் புழுக்களையும் தின்று ஜலத்தை சுத்தி பண்ணி வந்ததோ, அந்த உற்சாகத்தைத் தற்காலத்திய கீடதத்துவ பண்டிதர்களும் † கொண்டாடாமற் போகார். அது இவ்வாறு செய்துகொண்டு வருகையில் அதன் சரீரம் கொஞ்சம் பருத்துப்போய்விட்டது. இப்படியிருக்கும் பொழுது ஒருநாள், கடலில் வசித்த வேறொரு தவளை வந்து அந்தக் கிணற்றில் விழுந்தது.

"நீ எங்கிருந்து வந்தாய்?" என்று கிணற்றுத் தவளை கேட்க, "கடலிலிருந்து வந்தேன்" என்று மற்றது விளம்பிற்று.

கடலா! அது எவ்வளவு பெரியதா யிருக்கும்? அது எங்கள் கிணற்றைப்போல் அவ்வளவு பெரியதா யிருக்கு

---

* Evolutionists. † Bacteriologists.

மா?" என்று கேட்டுவிட்டுக் கிணற்றுத் தவளை கிணற்றின் ஒரு பக்கத்தி லிருந்து இன்னொரு பக்கத்துக்குத் துள்ளிக் குதித்தது.

அதற்குக் கடற் றவளையானது, "அப்பா தம்பி! உன் சிறிய கிணற்றைக் கடலுடன் எப்படி ஒப்பிடலாம்?" என்று வினவ, கிணற்றுத் தவளை இன்னொரு துள் துள்ளி, "உங்கள் கடல் அவ்வளவு பெரியதா?" என்று கேட்டது.

அதற்கு மற்றது, "அடே! நீ என்ன முட்டாள்போல் கடலைக் கிணற்றுக்கு ஒப்பிட்டு உளறுகிறாயே!" என்றது. அதைக் கேட்ட கிணற்றுத் தவளை, "அப்படியானால் சரி சரி; எங்கள் கிணற்றைவிடப் பெரியதா யிருப்பதும் வேறொன் றுண்டா? இதைவிட ஒன்றுமே பெரியதா யிருக்க முடியாது; இந்தப் பையல் ஒரு பெரும் பொய்யன் இவனை அடித்துத் துரத்து" என்றது. சகோதரர்களே! இதுதான் இத்தனை காலமாய் இருந்த கஷ்டம்.

நான் ஹிந்துவானமையால், என் சொந்தமான சிறு கிணற்றில் உட்கார்ந்துகொண்டு அச்சிறிய கிணறே எல்லா உலகமும் என்று நான் நினைத்துக்கொள்ளுகிறேன்; கிறிஸ்தவன் தன் கிணற்றில் உட்கார்ந்துகொண்டு உலகமெல்லாம் அந்தச் சிறு கிணற்றிலேயே இருப்பதாகக் கருதுகின்றான். முகம்மதியனும் தன் சிறு கிணற்றில் உட்கார்ந்து அதுவே எல்லா உலகமும் என்று கருதுகின்றான். ஆகவே, ஓ அமெரிக்கா வாசிகளே! நம்முடைய இச்சிறிய உலகத்தின் இடையூறுகளைத் தகர்த்துத் தள்ளும்பொரு

ட்டு நீங்கள் செய்யும் மேலான முயற்சிக்காக உங்களை வாழ்த்துகின்றேன். உங்கள் உத்தேசம் ஈடேறுமாறு எம் பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

---

## 1893௵ செப்டம்பர்மீ 17உ கூடிய ஒன்பதாநாள் சபையில் ஸ்வாமிகள் செய்த ஹிந்துமத ப்ரசங்கம்.

சரித்திரங்களிற் சொல்லப்பட்ட காலத்துக்கு முன்பு முதல் தொன்றுதொட்டு வந்துள்ள மூன்று மதங்கள் இப்பொழுது உலகத்தில் நிலைபெற்றிருக்கின்றன. அவை 'ஹிந்து மதம்', பார்ஸிகளின் மதமாகிய 'ஜாதஷ்ட மதம்', 'யூத மதம்' என்பவையாம். இம் மூன்று மதங்களுக்கும் பிரமாதமான ஆபத்துக்கள் எத்தனையோ ஸம்பவித்தும், அத்தனை ஆபத்துக்களுக்கும் சலியாமல் ஈடு கொடுத்துத் தப்பி வந்திருப்பதே இம் மதங்களுக்கள் இயற்கையாய் அமைந்துள்ள வலிமையைத் தெரிவிக்கின்றது. ஆனால், யூத மதம், கிறிஸ்து மதத்தைத் தன்னுள் அடக்கிக்கொள்ளத் தவறிப் போனதன்றி, அனைத்தையும் ஜெயித்துவரும் மதமாகிய தன் மகளால் தன் பிறப்பிடத்தினின்றும் துரத்திவிடப்பட்டது. ஒரு நூறாயிரம் பார்ஸிகள் தாம் தம்முடைய மேலான மதமாகிய ஜாதஷ்ட மதத்தின் மாட்சிமைக்குச் சாட்சி கூற இப்பொழுது மிகுந்திருக்கிறார்கள். பரத கண்டத்திலோ பற்பல மத பேதங்கள்

ஒன்றின் பின் ஒன்றாய் உண்டாகி வேதமதத்தை அடியோடு அசைத்துப்பார்த்தும், அதி பயங்கரமான பூகம்பத்தில் கடல்நீர் சற்றுப் பின்வாங்கிப் பிறகு முன்னிலும் ஆயிர மடங்கு அதிகமான வேகத்துடன் எதையும் கவர்ந்துகொள்ளும் பெரும் பிரவாஹமாகத் திரும்புவதுபோல, வேதாந்த மதமும் முதலில் சிறிது பின் வாங்கினபோதிலும், பிறகு மேன்மேல் எழுந்துவரும் மத பேதங்களின் ஆதிவாரம் சற்று ஓய்ந்தவுடன், தாய் மதமாகிய தன் பேருடலில் அவற்றையெல்லாம் ஐக்கியஞ் செய்துகொண்டது.

(ஐரோப்பிய) விஞ்ஞாந சாஸ்திரத்தால் இக் காலத்தில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருப்பவை யெல்லாம் எந்த ஞாந விசாரத்தின் பிரதி த்வனியாகவே காணப்படுகின்றனவோ, அப்பேர்ப்பட்ட வேதாந்த தத்துவ ஞானியின் மேலான ஞான விசாரத்திற்கும்—பௌத்தர்களுடைய அஜ்ஞேய வாதத்திற்கும், ஜைநர்களுடைய நாஸ்திகவாதம் முதல் கீழான விக்கிரகபூஜைவரையிலுமுள்ள யாவற்றிற்கும், பலவகைப்பட்ட புராண கதைகளுக்கும் ஹிந்து மதம் இடங் கொடுக்கின்றது.

அப்படியாயின், ஒன்றுடனொன்று ஒவ்வாமல் விரிவர்கப்பிரிந்து கிடக்கும் இம் மதபேதங்கள் எந்தப் பொதுவான இடத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றன? பார்வைக்குப் பரஸ்பரம் விரோதமாகத் தென்படும் இவற்றிற் கெல்லாம் மூலாதார ஸ்தானம் எது? என்று வினா நிகழ்கின்றது. இவ் வினாவிற்கு ஸமாதானம் கூற முயல்வேன்.

## வேதத்தைப்பற்றியது

ஹிந்துக்கள், வேதத்தால் அருளப்பட்ட மதத்தைக் கைக்கொண்டவர்கள்; வேதம் ஆதியந்தமில்லாதது என்பது அவர்களுடைய கொள்கை. ஒரு நூல் ஆதி யந்தமில்லாம லிருக்கக்கூடு மென்பது இச் சபையோருக்குப் பரிஹாஸகரமாகப்படலாம். ஆனால், வேதமென்பது யாதொரு நூலையும் குறியாது; பல பேர்கள் பற்பல காலங்களில் கண்டு பிடித்த ஆத்மஞான விதிகள் நிறைந்த பொக்கிஷம் என்பதே அதன் கருத்து. பொருள்களின் ஆகர்ஷண சக்திக்குரிய நித்திய ஸம்பந்த விதியானது மனிதரால் கண்டுபிடிக்கப்படுமுன் இருந்ததோடுகூட, அவரால் இனி மறந்து விடப்படினும் எப்படி இருந்துகொண்டேயிருக்குமோ, அப்படியே ஆத்மஞானத்துக்குரிய விதிகளும் இருப்பவையாம். ஜீவாத்மாக்களுள் ஒன்றற்கும் மற்றொன்றற்கும், அந்த ஜீவாத்மாக்களுக்கும் அவற்றின் பிதாவான பரமாத்மாவிற்கும் உள்ள நீதி தர்ம ஞான ஸம்பந்தங்களும் நாம் கண்டு பிடித்ததற்கு முன்னும் இருந்தன; இனி நாம் மறந்துவிட்டாலும் அவை இருப்பனவே.

இவ் விதிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கு ரிஷிகள் என்று பெயர். அவர்களை நாங்கள் பரிபூர்ண ஞானஸித்தியடைந்த பெரியோரென்று மதிக்கின்றோம். அப் பெரியோருள் மிகச் சிறந்தவரிற் சிலர் பெண்பாலா ரென்று இச் சபைக்குச் சந்தோஷமாய்த் தெரிவிக்கின்றேன்.

முன் சொல்லிய விதிகளுக்கு, அவை நித்தியமான ஸம்பந்தத்தைக் காட்டும் விதிகள் என்ற காரணத்தினால் அந்தம் இல்லாதிருக்கலா மாயினும், அவற்றிற்கு ஆதி ஆவசியகமாக இருந்திருத்தல் வேண்டுமென்று சிலர் சொல்லக்கூடும். ஸ்ருஷ்டி ஆதி யந்த மற்றதென்று எங்களுக்கு வேதம் உபதேசிக்கின்றது. (ஐரோப்பிய) விஞ்ஞான ஸாஸ்த்ரமோ, பிரபஞ்சத்திலுள்ள சக்தித் திரளானது ஏற்றக் குறைவின்றி எக்காலத்தும் ஒரே அளவாக வுள்ளதென்று நிரூபித்திருக்கின்றது. ஆகையால், ஒன்று மில்லாத காலம் ஒன்று இருந்திருக்கு மாயின், அப்பொழுது இவ் வேறுபாடுற்றுத் தோன்றும் சக்தியெல்லாம் எங்கிருந்தன? சிலர், அவ்யக்த பரப்ரஹ்ம வடிவமாக இருந்தன என்பார்கள். அப்படியாயின், பரப்ரஹ்மத்திற்குச் சிலகாலம் அவ்யக்தமாக இருத்தலும், சில காலம் வியக்தமாக வேறுபட்டுத் தோன்றலும் இயல்பென் றேற்படும். ஏற்பட்டால், மாறுந் தன்மை ப்ரஹ்மத்தினது லக்ஷணமென்று ஏற்படும். ஆயின், மாறுந் தன்மை யுடையவையெல்லாம் சேர்க்கைப் பொருளாம். சேர்க்கைப் பொருள் ஒவ்வொன்றுமோ அழிவென்று சொல்லப்படும் வேறுபாட்டை அடைய வேண்டும். அப்பொழுது பரப்ரஹ்மத்துக்கும் அழிவு உண்டென்று ஏற்படும் ஆதலால், சிருஷ்டியில்லாத காலமே இல்லை.

இதைத் திருஷ்டாந்த மூலமாக விளக்க அநுமதியளிப்பார்களாயின், சிருஷ்டி, சிருஷ்டிகர்த்தா என்னும்

இவ்விரண்டையும் முதலும் முடிவும் இல்லாத இரண்டு சமதூர (Parallel) ரேகைகளுக்கு ஒப்பிடலாம். சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுள் நித்தியமாயுள்ள மஹா சக்தி ஸ்வரூபியாயும், ஸர்வ நியந்தாவாயும் விளங்குகின்றார். அவர் தமது சக்தியால் பிரளய ஸாகரத்தினின்றும் பல கோடி பிரஹ்மாண்டங்களைத் தோற்றுவித்துச், சில காலம் பரிபாலித்து, மறுபடியும் அழித்துவிடுகிறார். இவ்வாறே நித்தியகாலமும் நடந்துகொண் டிருக்கிறது. இதைத்தான் பிரதி ஹிந்துச் சிறுவனும் தினந்தோறும் தன் குருவினிடம் சேர்ந்து ஓதுகின்றான். எப்படியெனில்,

"ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதா பூர்வம் அகல்பயத்" "சூரியனையும் சந்திரனையும், கடவுள் முன்போலவே அமைத்தார்." (ஐரோப்பிய) விஞ்ஞான சாஸ்திரமும் இக்கொள்கையைத்தான் கூறுகின்றது.

## நித்தியப் பொருளின் இலக்கணம்

நான் இங்கே நிற்கிறேன்! என் கண்களை மூடிக்கொண்டு என் இருப்பை, 'நான்' 'நான்' என்று நினைக்க முயலுவேனாயின், என் முன் நிற்கும் பாவனை என்ன? சரீரத்தின் பாவனையே. அப்படியாயின், நான் கேவலம் அசேதநமான ஜடப்பொருள்களின் சேர்க்கையே யன்றி மற்றெதுவும் இல்லையோ? வேதம் என்னை ஜடப்பொருள்களின் சேர்க்கை யன்று என்கிறது. நான் சரீரத்தில் வஸிக்கும் ஆத்மா. நான் சரீர மல்லேன்; சரீரம் அழிவுடையது;

நான் அழிவில்லாதவன்; இப்பொழுது இச் சரீரத்தில் இருக்கிறேன்; இது விழுந்த பின்பும் இருந்துகொண்டே யிருப்பேன்; இதற்கு முன்னமும் இருந்தேன். இவ் வாத்மா சுத்த சூனியத்தி லிருந்து புதிதாய் உண்டாக்கப் பட்டதன்று. உண்டாக்குதல் என்பது சேர்க்கை என்றாகும்; அதனால், பின்னர் ஒரு சமயத்தில் பிரியும், அல்லது அழியும் என்றும் பொருள்படும். ஆத்மா உண்டாக்கப் பட்டதாயின் அது அழிவுடையதேயாம். ஆகலின், ஆத்மா உண்டாக்கப்பட்டதன்று. சிலர், அழகுள்ள மேனியோடும் உற்சாகமுள்ள மனவலியோடுங்கூட யாதொரு குறையுமின்றிச் சுகமே யநுபவிக்கும் பாக்கியவான்களாகப் பிறக்கின்றார்கள்; சிலர்க்குக் கையில்லை, காலில்லை; சிலர், ஞான சூந்யர்களாய்த் துக்கமயமான கஷ்ட ஜீவனம் செய்து உழலுகிறார்கள். அவர்கள் யாவரும் படைக்கப்பட்டவராயின் நியாய மூர்த்தியாயும் கருணாநிதியாயும் விளங்கும் கடவுள் ஒருவனைப் பாக்கியவானாகவும், மற்றொருவனை நிர்ப்பாக்கியனாகவும் படைக்கக் காரணம் என்ன? அவர் அவ்வாறு பக்ஷபாத முள்ளவராக இருப்பதேன்? இந்தப் பிறவியில் துக்கமநுபவிப்போர் இனி வரும் பிறவியில் குறைவற்றிருப்பாரென்பதும், இதற்கு எவ்விதத்திலும் தக்க ஸமாதானம் ஆகாது. நியாய மூர்த்தியாயும், கருணாநிதியாயும் விளங்கும் கடவுளின் ஆளுகையில் ஏன் இந்தப் பிறவியிலாவது ஒருவன் நிர்ப்பாக்கியனா யிருக்கவேண்டும்?

இது நிற்க, இப்படிப்பட்ட அபிப்பிராயம், ஸர்வ சக்தியுள்ள ஒரு புருஷனுடைய கொடுங்கோன்மையைக்

காட்டுகிறதேயன்றி யாதொரு காரணமுங் கூறுவதாய் ஆகாது; ஆகையால், அது சாஸ்திர சம்மத மானதன்று. ஆகவே, ஒருவனைப் பாக்கியவானாகவோ நிர்ப்பாக்கியவானாகவோ செய்வதற்கு அவனுடைய பிறப்புக்குமுற்பட்டே தக்க காரணங்கள் இருந்திருக்கவேண்டும். அக் காரணங்கள் அவன் முன் செய்த கருமங்களேயாம். 'மனிதருடைய பலவகையான மனச் சார்வுக்கும் உடற்கூறுக்கும், மாதாபிதாக்களிடத்திலிருந்து பரம்பரையாகப் பெறப்பட்ட வாஸனையையே காரணமாகச் சொல்லக்கூடாதா?' என்றால், இவ்விடத்தில் இருவகையான நிலையுள்ளன: ஒன்று, சேதனப் பொருளின் நிலை; மற்றொன்று, ஜடப்பொருளின் நிலை.

## சேதனப் பொருளின் பரம்பரா வாசனை

நம்மிடத்தில் உள்ளவற்றிற்கெல்லாம் ஜடப்பொருளையும் அதன் விகாரங்களையுங் கொண்டே தக்க ஸமாதானம் சொல்லக் கூடுமானால், ஆத்மா என்று ஒன்றிருப்பதாகக் கொள்வதற்கு அவசியமேயில்லை. ஆனால், சேதனம் ஜடப்பொருளினின்று தோன்றியிருக்கிறதென்று நிரூபிக்கவே முடியாது. ஆகையால், ஒரு தனி ஜடப் பொருளினின்றும் ஸகல சிருஷ்டியும் பரிணாமரூபமாய்த் தோன்றியிருக்கிறதென்றே பௌதிகாத்வைதத்தை ஒப்புக்கொள்வது நியாயமானால், ஒரே மூல சைதந்யத்தின்கண் பிரபஞ்சமெல்லாம் அத்தியாஸமாய்த் தோன்றுகிறதென்னும் அத்வைத ஸித்தாந்தமும், அவசியமான முடிபாகவும் யுகதிக்கொத்த மதமாகவும் ஏற்படுகின்றதல்லவா? ஆனால், இப்போது இவ்

விஷயத்தைப்பற்றி ஆராயவேண்டியது அநாவசியம். சரீரம் சிலவித பரம்பரா வாஸனையோடு கூடியது என்பதை நாம் மறுக்கவும் முடியாது. சரீர வாஸனை என்றால் ஒரு வகைச் சரீர அமைப்பு என்பதே பொருள். அவ்வமைப்பு, ஒரு வகை ஆத்மாவுக்கு மாத்திரம் அதனியல்பிற் குரிய ஒரு வழியில் தொழில் புரிவதற்கு இயைந்ததாம். ஆத்மாவின் பிரத்யேக வாஸனைக்கு அதன் முந்திய வினைகளே காரணமாகின்றன. ஒருவகை வாஸனையையுடைய ஆத்மா அவ் வாஸனையை வெளியிற் காட்டுவதற்குத் தக்க கருவியாக அமைந்துள்ள சரீரத்தில், * 'யோக்யம் யோக்யேந யுஜ்யதே' என்ற இன முறையால், தன் பிறப்பை எடுக்கின்றது. இது சாஸ்த்ரத்துக்கு முற்றும் ஒத்ததே. ஏனெனில், சாஸ்த்ரம், எதற்கும் பழக்கமே காரணமென்கிறது. பழக்கமோ ஒரு முறை செய்ததை அடிக்கடி செய்வதால் உண்டாகின்றது. ஆதலால், புதிதாகப் பிறந்த குழந்தையின் இயற்கையான பழக்கமும் அது அடிக்கடி செய்துள்ள கருமத்தின் பலனேயாம். அந்தப் பழக்கம் இந்தப் பிறவியில் உண்டானதன்றாகையால், முன் பிறவிகளிலிருந்தே வந்திருக்கவேண்டும்.

இதுவரையில் நான் சொல்லியவற்றை யெல்லாம் ஒப்புக்கொண்டபோதிலும், சிலர் வேறோர் ஆக்ஷேபம் செய்கின்றார்கள். அஃதென்னவெனில், 'முன் பிறவியைப் பற்றி

* 'இனம் இனத்துடன் சேரும்; அதாவது, ஒருவகை இயல்புள்ள பொருள் அவ் வியல்புள்ள பொருளுடனேயே சேரும்.'

நமக்கு யாதொரு ஞாபகமு மில்லாமலிருப்பதற்குக் காரண மென்ன? என்பதாம். இதற்கு எளிதில் ஸமாதானம் சொல்லலாம். நான் இப்பொழுது இங்கிலீஷ் பேசிக்கொண் டிருக்கிறேன்; அஃது என்னுடைய தாய்மொழி யன்று. வாஸ்தவத்தில், என் தாய் மொழியின் ஒரு பதங்கூட இப்பொழுது எனது ஞாபகத்தில் இல்லை. ஆனால், அப் பதங்களை நான் நினைக்கத் தொடங்கினால், அவை என் ஞாபகத்திற்குப் பாய்ந்து வருகின்றன. இதனால், ஞாபகம் என்பது மனமென்னும் கடலின் மேற்புறமென்றும், அக் கடலின் ஆழ்ந்த அடித்தலத்தில் நம்முடைய அநுபவங்க ளாகிய அறிவெல்லாம் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன வென்றும் தெரியவருகின்றது. முயன்று பாடுபட்டால் அடியி லுள்ளவையும் மேல் வரும்; முற் பிறவியின் அநு பவங்களும் இப்பொழுது ஞாபகத்துக்கு வரும்.

### நடந்துபோனதை நினைவுக்குக் கொண்டுவரல்

இது நேரில் ரூபிக்கக்கூடிய சாக்ஷி. பிரத்தியக்ஷ அநு பவமே எந்த விஷயத்திற்கும் சிறந்த பிரமாண மாகும். ஆதலால், இதோ எங்களுடைய ருஷிகள் உலக மறி யக் கூறும் வீரவார்த்தைக் கேளுங்கள்! "ஞாபகமாகிய கடலை அடியோடு கிளறுவதற்கு வேண்டிய ரஹஸ்யங்களைக் கண்டு பிடித்திருக்கிறோம்; இந்த ரஹஸ்யங்களை அநுஸரி த்து நடப்பீராயின், உங்களுக்கு முற் பிறப்பின் முழு நினை வும் உண்டாகும்" என்பதாம்.

ஆகவே, ஹிந்து மதஸ்தன் தன்னை ஆத்மா என்றே நம்புகின்றான். "ஆத்மரூபியாகிய அவனை ஆயுதம் பிளக்காது; காற்று உலர்த்தாது."

நைநம் சி²ந்த³ந்தி ஸ²ஸ்த்ராணி நைநம் த³ஹதி பாவக:
நசைநம் க்லேத³யந்த்யாபோ நஸோ²ஷயதி மாருத:

ஸ்ரீ கீதா-2-23.

ஹிந்துமதக் கொள்கைப்படி, ஒவ்வொரு ஆத்மாவும் ஒரு வட்டம்; அவ்வட்டத்தின் சுற்றுக்கோடு இன்னவிடத்தில் உள்ளதென்று சொல்லமுடியாது; அதன் நடுமையமோ, ஆத்மா தங்கியிருப்பதாகச் சொல்லப்படும் சரீரமாம். இந் நடு மையம் ஒரு தேஹத்தினின்றும் மற்றொரு தேஹத்துக்கு மாறுவதே மரண மெனப்படும். ஆத்மா ஜடப்பொருளின் நிலைமைகளுக்குக் கட்டுப்பட்டதன்று. அஃது இயற்கையாக, பாசபந்த மற்ற பரிசுத்த சுதந்திர நிர்மல பரிபூர்ண வஸ்து. எப்படியாகவோ அது ஜடப்பொருளோடு சேர்த்துக் கட்டுண்டுவிட்டது; தன்னையும் ஜடப்பொருளென்றே எண்ணுகிறது.

சுதந்திர பரிபூரண பரிசுத்த வஸ்து இப்படி ஜடப்பொருளுக்கு அடிமையாகக் காரணமென்ன? பரிபூர்ணமான ஆத்மா தன்னை அபரிபூர்ண மானதென்று நம்பும்படி எங்ஙனம் மயங்கக்கூடும்? ஹிந்துக்கள் இக் கேள்விக்கு விடை சொல்லாமல் தந்திரமாகத் தப்பித்துக்கொண்டு, இப்படிப்பட்ட கேள்வி கேட்பதற்கே இடமில்லை யென்

கிறார்கள் என்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறோம். தத்வ விசாரஞ் செய்வோரிற் சிலர், இவ் வுலகில் பாதிபூர்ணமடைந்துள்ள சற்புருஷர்கள் இருக்கின்றார்க ளென்று சொல்வதால் இக் கேள்விக்குத் தக்க ஸமாதானம் ஏற்படுமெனக் கருதி, மேற்சொன்ன பாதி பூர்ணமடைந்த சற்புருஷர்கள் என்பதுபோன்ற கடின பரிபாஷைப் பதங்களால் பூர்ணாபூர்ண வஸ்துக்களுக்கு மத்தியிலுள்ள இடத்தை நிரப்பப் பார்க்கிறார்கள். வெறும் பரிபாஷைப் பதங்கள் விஷயத்தை விளக்கமாட்டா. முன் கேட்ட கேள்விக்கு இதனால் ஸமாதானமொன்றும் ஏற்படவில்லை. சுத்த பரிபூர்ண வஸ்து பாதி பூர்ண வஸ்துவாக எப்படியாகும்? பரிசுத்தமான அகண்டவஸ்து தன் இயற்கையில் அணுவளவேனும் எவ்வாறு மாறுதல் அடையக்கூடும்? ஹிந்து மதஸ்தனே யதார்த்தவாதி. அவன் குதர்க்கமான வாதத்தில் சரணமடைய வேண்டுபவனல்லன்; எவ் விஷயத்தையும் ஆண்மையோடு எதிர் நின்று ஆராயும் தைரியமுடையவன். முன் கேள்விக்கு அவன் சொல்லும் ஸமாதானம் என்னவெனில், "நான் அறியேன்" என்பதே. பரிபூர்ண வஸ்துவாகிய ஆத்மா, தன்னை அபரிபூர்ண வஸ்துவென்றும், ஜட வஸ்துவினுடன் சேர்ந்து அதனால் நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள பொருளென்றும் நினைக்கும்படி எவ்வாறு நேர்ந்ததோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாவிடினும் உள்ளது உள்ளதுதானே. ஒவ்வொருவரும் தத்தம் ஞாபகத்தில் தாம் சரீரமென்றே எண்ணுகிறார்கள். 'நான் அல்லது என் ஆத்மா இச் சரீ

ரத்துள் ஏன் வந்தடைந்தது?' என்பதற்குக் காரணங் கூற நாங்கள் முயலவில்லை. அது கடவுளின் ஸங்கல்பமென்று சொல்வதும் தக்க ஸமாதான மாக மாட்டாது. "எங்களுக்குத் தெரியாது" என்று சொல்வதைப் பார்க்கிலும் மேலான ஸமாதானம் ஒன்றும் ஏற்படவில்லை.

## ஆத்மா நித்யம்

ஆகவே, ஆத்மா நித்யமானது, மரண மற்றது, பூர்ணமானது, எல்லை யற்றது. எங்கும் காண முடியாத சுற்றுக் கோடுள்ள வட்டத்தின் நடுமையமானது ஒரு சரீரத்தினின்றும் மற்றொரு சரீரத்துக்கு மாறுதலே மரண மெனப் படும். நமது நிகழ்கால நிலை நாம் முன் செய்த வினைகளாலும், நம் எதிர்கால நிலை இப்பொழுது நாம் செய்யும் வினைகளாலும், நிர்ணயிக்கப்படும். ஆகவே, ஆத்மா ஒரு ஜந்மம் முதல் மறு ஜந்மம் வரையிலும், ஒரு தடவை மரித்தது முதல் மறு தடவை மரிக்கும்வரையிலும், மேன்மேலுயர்ந்தோ, பின்னோக்கி க்ஷீணித்தோ செல்லுகின்றது. சண்டமாருதத்தில் அகப்பட்ட ஒரு சிறு படவு முன் நிமிஷத்தில் பொங்கி யெழும் கடலலைமேல் தூக்கி உயர்த்தப் பட்டுப் பின் நிமிஷத்தில் வாயகன்ற மடுவில் ஆழ்ந்தழுக் கப்படுவதுபோல், ஆத்மாவும் புண்ய பாவங்களென்னும் இருவினைகளின் வசமாகி அங்கு மிங்கும் உருண்டுழன்று, எதற்கும் இணங்காமல் எப்பொழுதும் சீறிப் பாய்ந்து செல்லும் காரணகாரிய வெள்ளத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கும் திக்கற்ற வலி யிழந்த உருக் குலைந்த மரக்கல

மென விளங்குகின்றது; தன் வழியில் அகப்படும் எதை யும் நசுக்கிக்கொண்டு, பர்த்தாவைப் பறிகொடுத்த பார்வை யின் புலம்பலுக்கும், தந்தைதா யற்ற மக்களின் அழுகைக் கும் இரங்கி நில்லாமல் உருண் டோடிக்கொண்டே யிருக் கும் காரண சக்கரத்தின் கீழ் அகப்பட்டுக்கொண்ட புழு வென்றும் அவ் வர்த்மாவைச் சொல்லலாம்.

இந்தக் கோரமான நிலைமையைக் கண்டு நெஞ்சங் கல ங்கித் தத்தளிக்கின்றது. ஆகிலும் என்னசெய்யலாம். உலக இயற்கையின் ஏற்பாடு அவ்வா றிருக்கின்றது. இதற்கு ஆறுத லில்லையோ? இதனின்றும் தப்ப வழி யில்லையோ? என்று ஏக்கங்கொண்ட மனம் உருகிக் கதறும் சத்தம் கருணா நிதியின் ஸிம்ஹாஸநமெட்ட, அங்கிருந்துண்டான ஏக்கம் போக்கித் தேற்ற மளிக்கும் மிருது மதுர திவ்ய அபய வாக்கால் வேத ருஷி ஒருவருக்குத் திருவருளின் ஞானோதய முண்டாயிற்று. அந்த ருஷி எழுந்து இவ் வுலகத்தோர் யாவரு முணருமாறு கம்பீர நாதத்துடன் முழக்கிய சந்தோஷ சமாசாரம் யாதெனின்:—

ஶ்ருண்வந்து விஶ்வே அம்ருதஸ்ய புத்ரா
ஆ யே தாமாநி திவ்யாநி தஸ்து:
வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்
தமேவ விதித்வாதிம்ருத்யு மேதி
நாந்ய: பந்தா வித்யதேऽயநாய.

"ஹே அமிருத ஸ்வரூபத்தின் அருமைக் குழந்தைகளே! கேளுங்கள்! திவ்யமான ஸ்தானங்களில் விளங்குவோர்களே! கேளுங்கள்! பரகதியடையும் வழியைக் கண்டறிந்து கொண்டேன்; இருளுக்கப்பால் சூர்யனைப்போல் ஸ்வயம் பிரகாசமாய் விளங்கும் மாயாதீதப் பழம் பொருளாம் மஹா புருஷனைக் கண்டேன்; அவனை அறிவதால் மாத்திரமே நீர் மரணத்தினின்றும் மீட்சியடையலாம்; பரகதி யடைவதற்குப் பிறிதொரு வழியுமில்லை" என்பது.

"அமிருத ஸ்வரூபத்தின் அருமைக் குழந்தைகளே!" ஆ! என்ன திவ்வியமான மிருது மதுர அபய நாமம்! சகோதரர்களே! அமிருத ஸ்வரூபத்தின் நித்தியானந்தத்திற் குரியவரே என்ற அவ்வினிய பெயரால் உங்களை அழைக்கும்படி எனக்கு அநுமதி கொடுப்பீராக! ஹிந்து மதஸ்த னொருவனும் உங்களைப் பாவிகளென்று அழைக்க உடன்படான்.

அஹம் தேவோ நசாந்யோஸ்மி
ப்ரஹ்மைவாஹம் ந சோகபாக்
ஸச்சிதாநந்தரூபோஹம்
நித்ய முக்த ஸ்வபாவவாந்.

## கடவுளின் குழந்தைகள்

நீங்கள் கடவுளின் குழந்தைகள்; நித்தியானந்தத்திற் பாகமுடைய பரிசுத்த பரிபூர்ண வஸ்துக்கள். இப்பூவுலகில் வாழும் தெய்வங்களாகிய நீங்களோ பாவிகள்? அப்

படி ஒருவனைச் சொல்வதே பாவமாம்; மானுட சுபாவத்துக்குப் பெரும பழியுமாம். ஓ! சிங்கங்களே! நீங்கள் ஆடுகளென்ற மயக்கத்தை யுதறிவிட்டுத் தெளிந்து எழுவீர்! நீங்கள் நித்யாத்மாக்கள்; திருவருள் பெற்ற நிதநியாமாத ஸ்வதந்திர வஸ்துக்கள்; ஜடப்பொருளல்ல; சரீரமல்ல; ஜடப்பொருள் உமது அடிமை; நீர் அதன் அடிமையல்ல.

ஆகவே வேதமானது, உலக இயற்கையின் கருணையற்ற காரண காரிய ஸம்பந்த விதிகள் பயங்கரமாக ஒருங்கு சேர்ந்துள்ளனவென்று மாத்திரம் சொல்வதன்று; அக் காரண காரியங்களால் ஏற்படும் நிர்ப்பந்த நிலைமைக்கு முடிவே யில்லை யென்றும் சொல்வதன்று; உலகவியற்கையின் விதிகளுக்கெல்லாம் தலையாக, ஒவ்வொரு அணுவினுக்கும் சக்திக்கும் உள்ளும் புறத்தும் எங்கும் வியாபித்துள்ள ஒருவன் உளனென்றும்,

ஸயாதஸ்யாக்நிஸ் தபதி ஸயாத் தபதி ஸூர்ய:
ஸயாதிந்த்ரஸ்ச வாயுஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம:.

"அவனுடைய ஆணையினாலேயே காற்று வீசுகின்றது; நெருப்பு எரிகின்றது; மேகம் மழையைப் பொழிகின்றது; யமன் உலகத்து ஸஞ்சரிக்கின்றான்" என்றும் முறையிடுவதாம். அப்படிப்பட்ட ஒருவனுடைய ஸ்வரூபம் என்ன?

அவன் எங்கு முள்ளவன்; உருவ யற்ற பரிசுத்தமான தனிப் பொருள்; ஸர்வ சக்தி யுள்ளவன்; பரம கருணாநிதி

"எம் தந்தையும் நீயே; எம் தாயும் நீயே; எம் அன்புடைய நண்பனும் நீயே; எல்லா வல்லமைக்கும் மூலமும் நீயே; ஸர்வ ஜகத்தின் சுமையையும் தாங்குபவன் நீயே; இச் சீவதசையின் சிறு சுமையைத் தாங்க எமக்கு உதவி புரிவாய்."

பிதா த்வம் மாதா த்வம் ஹிததநயஸ் த்வம் ப்ரியஸுஹ்ருத்
த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிர்வாஸி ஜகதாம்
த்வதீயஸ் த்வத்ப்ருத்யஸ் தவபரிஜநஸ் த்வத்கதிரஹம்
ப்ரபந்நஸ் சைவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி ஸா:.

என்று வேதருஷிகள் கானஞ் செய்திருக்கிறார்கள். அவனை நாம் வழிபடுதல் எவ்விதத்தால்? பக்தியாலேயே. இம்மை மறுமைக்குரிய பொருள்கள் யாவற்றிலும் அரிய பொருளாக அவனை நினைந்து அன்பு பாராட்டி வழிபடல் வேண்டும்.

வேதம் இந்தப் பக்தி மார்க்கத்தைப் போதிக்கின்றது. ஹிந்துக்கள் இப் புவியில் கடவுளின் அவதார புருஷனாக வெண்ணும் ஸ்ரீ கிருஷ்ணன் இப்பக்திமார்க்கத்தைப் பூர்ணமாக விவகரித்துப் போதித்திருக்கும் விதத்தைக் காண்போம்.

## ஸ்ரீ கிருஷ்ணனுடைய உபதேசம்

ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்திருப்பது யாதெனின்,— இவ்வுலகில் மனிதன் தாமரை யிலைபோல் இருக்கவேண்

டும். அது நீரில் வளர்ந்தும் அதில் ஈரம் பற்றுகிறதில்லை. அப்படியே மனிதனும் கடவுளிடத்து மனமும் கர்மத்தினிடத்துக் கையுமாக இவ்வுலகில் வாழவேண்டும்" என்பதாம்.

இஹலோக சுகத்தையேனும் பரலோக சுகத்தையேனும் கருதிக் கடவுளிடத்து அன்பு செலுத்துவது நலமேயாம். வேறு பயன் வேண்டாமல் அவரிடத்துக் கைங்கர்ய ரூபமாக அன்பு செலுத்துவதோ அதினும் மிகச் சிறந்தது.

ந தநம் ந ஜநம் ந ஸுந்தரீம்
கவிதாம் வா ஜகதீச காமயே
மம ஜந்மநி ஜந்மநீச்வரே
பவதாத் பக்திரஹைதுகீ த்வயி.

"ஸ்வாமி! பாக்கியம் வேண்டேன்; மனைவி மக்களும் வேண்டேன்; கல்வியும் வேண்டேன். உன் இஷ்டமானால் நூறு நரகிலாகினும் புகுவேன். பலாபேட்சையில்லாத அன்பு உன்னிடத்து எனக்கு எப்பொழுதும் இருக்க மாத்திரம் அருள் புரிவாய். அன்பின் பொருட்டே அன்பு பாராட்ட அநுக்கிரஹிப்பாய்" என்பது ஒரு பிரார்த்தனை. ஸ்ரீ கிருஷ்ணனுடைய சிஷ்யருள் அக்காலத்தில் பாரத கண்ட சக்ரவர்த்தியாக விருந்த ஒருவர், தம் பகைவரால் இராச்சியத்தினின்றும் துரத்தப்பட்டு இமயமலைச் சாரலிலுள்ள காட்டிற் போய்த் தம் மனைவியுடன் வசித்து வந்தார். அங்கே ஒரு நாள் அரசி அவரை நோக்கி, "மனித

ரெல்லோரினும் மிக்க புண்ய சீலராகிய நீர் இவ்வளவு துன்பம் அநுபவிக்கக் காரண மென்ன?" என்று கேட்க, அதற்கு ராஜாவாகிய யுதிஷ்டிரர்,

நாஹம் கர்மஃபலாந்வேஷீ ராஜபுத்ரி சராம்யுத
ததாமி தேயமித்யேவ யஜே யஷ்டவ்யமித்யுத.
தர்ம ஏவ மந: க்ருஷ்ணே ஸ்வபாவாச்சைவமே த்ருதம்
தர்மவாணிஜ்யகோ ஹீநோ ஜகந்யோ தர்மவாதிநாம்.

மஹாபாரதம் வநபர்வம் ௩க-ம் அத்தியாயம்.

"என்னரசியே! இம் மலைத் தொடர்ச்சியைப் பார்! அஃது எவ்வளவு கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கிறது அதனிடத்து நான் அன்புள்ளவன். அஃது எனக்கு ஒன்றையும் கொடுக்கவில்லை யாயினும், காம்பீர்யமும் சௌந்தர்யமும் உள்ளவிடத்து அன்பு பாராட்டுவது என் இயல்பாதலின் நான் அதனிடத்து அன்புடையேன்; அவ்வாறே பகவானிடத்தும் அன்புடையேன்; பகவானே நமது அன்பிற்கு உரிய பொருள். அவனிடத்து அன்பு பாராட்டுவது எனது இயல்பாதலின் நான் அவனிடத்து அன்புடையேன். நான் எதையும் உத்தேசித்துப் பிரார்த்தியேன்; நான் ஒன்றும் வேண்டேன். அவன் தன் இஷ்டப்படி என்னை எவ்விடத்தில் வேண்டுமாயினும் வைக்கட்டும். நான் அவனிடத்து அன்பிற்காகவே அன்பு பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன். வர்த்தகம் பண்ணுவதுபோல் இலாபத்தைக் கருதி அன்பு செலுத்த என்னால் இயலாது" என்றார்.

## ஆத்மா தெய்வத்தன்மையது

ஆத்மா தெய்வத் தன்மையை யுடையதென்றும், ஆனால் இங்கே அது ஜடப் பொருளின் பந்தத்தில் அகப்பட்டு உழலுகின்றது என்றும், இப் பந்தம் ஒழியுங் காலமோ அது பரிபூர்த்தி யடையும் கால மென்றும் வேதம் உபதேசிக்கின்றது. இப் பரிபூர்த்திக்கே முக்தி, நிவிர்த்தி, அபூர்ணமாகிய பந்தத்தின் நிவிர்த்தி, ஜநந மரணங்களினின்றும் நிவிர்த்தி என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இப் பந்தம் கடவுளின் திருவருளினாலேயே நிவர்த்தி யாகவேண்டு மென்றும், இவ் வருள் பரிசுத்தாத்மாக்களின் விஷயத்திலேயே பிரவர்த்திக்கு மென்றும், வேதம் சொல்லுகின்றது. ஆகவே, பரிசுத்த முடைமை கடவுளின் திருவருளைப் பெறுவதற்குக் காரண மாகிறது. ஆ! அத் திருவருள் என்ன விதமாகப் பிரவிர்த்திக்கின்றது. சித்தசுத்தி யுடையவர்களுக்குக் கடவுள் தாமே பிரத்தியக்ஷமாகிறார்; மாசற்ற பரிசுத்த மன முடையவன் கடவுளை நேரே இச் சீவதசையிலேயே காண்கின்றான். அப்பொழுதுதான்,

> பித்யதே ஹ்ருதயக்ரந்திஸ்
> சித்யந்தே ஸர்வஸம்ஶயா:
> க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி
> தஸ்மிந் த்ருஷ்டே பராவரே.

"அவனுடைய மனக்கோணை லெல்லாம் நிமிர்ந்து நேராகின்றன; ஸந்தேஹ மெல்லாம் நிவர்த்தி யாகின்றன.

அதுமுதல் அவன் பிரபஞ்சத்தின் பயங்கரமாகிய காரண காரியரூபமான கர்மபாசத்தாற் கட்டுண்டு உழலுவதில்லை.'' இதுதான் ஹிந்து மதத்தின் பிராணுதாரமான பிரதான ஸாராம்ஸம். ஹிந்து மதஸ்தன் வெறும் சொற்களாலும், சாஸ்திர வாதங்களாலும் திருப்தி யடைய விரும்புகின்றவனல்லன்; இந்திரியங்களுக்குப் புலப்படும் ஸாதாரணப் பொருள்களுக் கப்பால் யாதேனும் ஒன்று இருக்குமாயின் அதை அவன் நேரில் அனுபவிக்க வேண்டுபவன்; ஜடப் பொருளைவிட வேறுன ஆத்மா ஒன்று தன்னிடத்தில் உள்ளதாயின், பரம கருணு மூர்த்தியான எங்கும் நிறைந்த பரமாத்மா ஒருவன் உளனுயின், அவனிடத்து நேரிற் செல்ல மன முடையவன். அவன் அப் பரமபுருஷனை நேரிற் காண மன்ருடுவான். அவ்விதக் காட்சிதான் அவனுடைய ஸந்தேஹங்களை யெல்லாம் போக்க வல்லது. ஆகலின், ஆத்மாவையும் கடவுளையும் பற்றி ருஷிகள் கூறும் சிறந்த பிரமாணம என்னவெனில், ''நாங்கள் ஆத்மாவை நேரிற் கண்டிருக்கிறோம்; கடவுளை நேரிற் கண்டிருக்கிறோம்'' (வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்) என்பதேயாம்.

இதுதான் பரிபூர்ண நிலையின் தன்மை. யாதொருவிதமான கொள்கையையாவது கோட்பாட்டையாவது நம்பிக் கொண்டிருப்பதற்கு மாத்திரம் கஷ்டப்படுவதும் எத்தனிப்பதும் ஹிந்துமதத்தின் இயல்பன்று. வெறும் நம்பிக்கையைக்கொண்டு திருப்தியடையாமல் பிரத்தியக்ஷ அநு

பவத்தை நாடுதலும், உள்ள நிலையில் இருந்துகொண்டு அதனின்றும் சோபானக்கிரமமாய்ப் பரிபக்குவமடைந்து பரமாத்மஸ்வரூபமாய் விளங்குதலுமே அதன் லக்ஷணமாம்.

## ஹிந்துக்களின் மதம்

ஆகவே ஹிந்துக்களுடைய மதக்கோட்பாட்டில் உள்ள ஸர்வ ப்ரயத்நமும் தாம் பரிபூர்ண மாவதற்கும், தெய்வத்தன்மை யுள்ளவ ராவதற்கும், கடவுளை அடைவதற்கும, கடவுளைக் காண்பதற்கும் செய்யப்படும் இடைவிடாப் பிரயத்நமேயாம். இவ்வாறு கடவுளை அடைவதும், கடவுளைக்காண்பதும் பரிபூர்த்தியடைந்து, பரமபதத்தில் வீற்றிருக்கும் அக் கடவுளாகிய பிதாவைப் போன்ற பூர்ணப் பொருளாவதுந்தான் ஹிந்துக்களின் மதக் கொள்கையாம்.

பரிபூர்ணத் தன்மை யடைந்த பின் மனிதன் நிலைமை எவ்வாறாகும்? அளவில்லா ஆநந்த வாழ்க்கையில் இருப்பதே அவன் நிலையாம். அவன் எப்பொருளில் மாத்திரம் சுகத்தை நாட வேண்டுமோ அப்படிப்பட்ட தனிப் பொருளாகிய கடவுளை அடைந்து, அகண்ட பரிபூர்ணாநந்தத்தை அநுபவிக்கிறான்; கடவுளோடு நித்தியாநந்த ஸாகரத்தில் ஆழ்கின்றான்.

இதுவரையில் சொன்னவை யாவும் எல்லா ஹிந்துக்களும் ஸர்வ ஸம்ப்ரதிபந்தமாய் ஒப்புக்கொண்டவை.

இந்தியாவிலுள்ள எல்லா மதப் பிரிவுகளுக்கும் இது பொதுவாய் அமைந்த மதக் கொள்கையாம். இதன்மேல் உண்டாகும் ஆசங்கை என்னவெனில்,—பரிபூர்ணத்வம் அகண்டமானது; அதாவது தனி நிலையானது; ஆகவே, அவ்விதத் தனி நிலை இரண்டு மூன்றாக இருத்தல் கூடுமா? அது குணாதீதமாயும் அவ்யக்தமாயும் விளங்குவதல்லவோ? என்பதாம். ஆதலால், ஆத்மா அகண்ட பரிபூர்ண ஸ்வரூபமாய் ஆகுங்கால், அது ப்ரஹ்மத்தில் இரண்டறக் கலந்து ப்ரஹ்மமே யாகவேண்டும். ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி." அத்தகைய ஆத்மாதான் அகண்ட ஸச்சிதாநந்த ஸ்வரூபியாகிய பகவானைத் தன் இருப்புக்கும் இயல்புக்கும் உண்மையான பரிபூர்த்தி யென்று அநுபவத்தறியும். இதைச் சிலர், ஜீவாத்மா தன் ப்ரத்யேகத் தன்மையை இழந்து மரங் கற்களைப் போலாகும் ஆத்மநாசம் என்று இகழ்ச்சியாய்க் கூறியிருப்பதை நாம் புஸ்தகங்களில் பல முறையும் படித்திருக்கிறோம். இதனால் அவர்களது அறியாமை விளங்குகின்றதேயன்றி வேறில்லை. எப்பொழுதும் காயம்பட் டறியாதவன் போர்க்களத்து விழுப்புண் வடுவைக் கண்டு பரிஹஸிப்பது ஸஹஜந்தானே?

அந்நிலை அப்படிப்பட்டதொன்றும் அன்றென உங்களுக்கு நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். இந்தச் சிறு சரீரத்துக் குரிய அறிவை அநுபவிப்பது ஆநந்தமாயின், இரண்டு மூன்று நான்கு ஐந்து சரீரங்களுக்குரிய அறிவை

அநுபவிப்பது அதைவிட எவ்வளவோ மடங்கு அதிக மான ஆநந்தமா யிருக்கவேண்டு மல்லவா? இந்த ஆநந் தாநுபவம் ஸர்வ வியாபகமான அறிவின் அநுபவ மாகும் பொழுது ஸர்வோத்தமமான நிரதிசய ஆநந்தமன்றோ பிராப்தியாக வேண்டும்?

## அகண்ட ஸ்வரூபம்

ஆகவே, அத்தகைய அந்தமில்லா ஸர்வ வியாபக ஸ்வ ரூபத்தை அடைய வேண்டுமாயின், இவ் விழிவுற்ற அற்ப மான பிரத்யேக ஸ்வரூபம் தொலையவேண்டும். நான் பிராணமய மாகும்பொழுதுதான் மரணம் என்னை விட் டகலும். நான் ஆநந்தமய மாகும்பொழுதுதான் துக்கம் நிவர்த்தியாகும். நான் ஞாநமயமாகும் பொழுதுதான் எல்லாவித அஞ்ஞானப் பிழைகளும் நீங்கும். இதுதான் சாஸ்த்ரரீதியாய் ஏற்படும் அவசியமான முடிபாம். தனித் தனி சரீரவடிவமாய்த் தோன்றும் ஜட பதார்த்தங்களின் உருவவேற்றுமைகள் நிலையில்லாப் பொய்த் தோற்றமென் றும், வாஸ்தவத்தில் எனது இச்சரீரம் அகண்டமான ஜட சமுத்திரத்தில் இடைவிடாமல் மாறிக்கொண் டிருக்கும் அலையைப்போன்ற ஒரு சிற்றுருவமென்றும் தற்காலத் திய பிரகிருதி விஜ்ஞான சாஸ்திரம் நிரூபித்திருக்கின்றது. எவ்வாறு ஜடப் பிரபஞ்சத்தில் தனித்தனியே காணப்படும் ஜட தேஹங்கள் உண்மையாகாமற் பொய்யாய் முடிந்து, அகண்டமான ஜட ஸமுத்திரத்தில் ஐக்கியமாவதால் ஜட ஸம்பந்தமான அத்வைதம் ஸித்தித்ததோ, அவ்வாறே,

நமது மற்றொரு அம்சமாகிய அத்தியாத்ம விஷயத்திலும் அத்வைதமே அவசியமும் யுக்திக்குப் பொருந்தியதுமான உண்மை முடிபாக ஸித்திக்கின்றது.

சாஸ்திரமாவது தான் பிரதிபாதிக்கும் எல்லா விஷயங்களுக்கும் மூலமாய் அமையத்தக்க ஐக்கியத்தைக் காண்பதுவேயன்றி வேறன்று. ஆகவே, எந்தச் சாஸ்த்ரமும் அத்தகைய பூரண ஐக்கியத்தை எட்டிவிட்டால், அதற்கப்புறம் அது செல்லாமல் நின்றுவிட வேண்டும். ஏனெனில், அப்பொழுதுதான் அதன் முக்கியக் கருத்து நிறைவேறியதாகின்றது. எப்படியெனில், ரஸாயந சாஸ்த்ரமானது ஒரே மூலபதார்த்தத்தினின்று எல்லாப் பதார்த்தங்களையும் உண்டாக்கலாம் என்று கண்டு பிடித்துவிட்டால் அதற்குமேல் அது செல்லுதல் கூடாது. ஜடசக்தி சாஸ்த்ரமும் (Physics) சகல சக்திகளும் ஒரு மூல சக்தியின் விகாரங்களே யென்று கண்டுபிடித்தவுடன் முற்றுப் பெற வேண்டியதே.

அதுபோலவே மதசாஸ்த்ரமும், அழியுந்தன்மையுள்ள உலகத்தில் அழிவில்லா நித்திய வஸ்துவாய் உள்ளவர் எவரோ, எப்பொழுதும் மாறிக்கொண்டே யிருக்கும உலகத்திற்கு நிரந்தர ஆதாரமா யுள்ளவர் எவரோ, ஸகல ஆத்மாக்களும் எந்த ஒரே பரமாத்மாவின் பிரதிபிம்பங்களோ, அத்தகைய பரம புருஷனைக் கண்டறிந்தவுடன் பூர்த்தி யடைந்துவிட்டது. இவ்விதமாகப் பலபொருட் கொள்கையாகிய அநேகத்துவ வாதத்தினின்றும், இரு

பொருட் கொள்கையாகிய துவைத வாதத்தினின்றும் முடிவான ஒருபொருட் கொள்கையென்னும் அத்வைதம் ஸித்தியாயிற்று. அதற்கு மேல் போக 'எம்மதத்துக்கும் ஸாத்தியமில்லை. இதுதான்' எல்லா சாஸ்த்ரங்களும் அடைய உத்தேசிக்கும் ஸித்தாந்தமுமாம்.

ஸர்வமும் ஏக வஸ்துவின் தோற்றமே யன்றிப் புதிதாய் உண்டாக்கப்பட்டவை யல்ல.

எல்லா சாஸ்த்ரமும் கடைசியில் இந்த ஸித்தாந்தத்துக்குத்தான் வந்து தீரவேண்டும். நம் முன் காணப்படும் பொருளனைத்தும் ஒரே மூல வஸ்துவின் பேதமான தோற்றமே யன்றிப் புதிதாய் உண்டாக்கப்பட்டவையல்லவென்பதே இக்காலத்திய (ஐரோப்பிய) சாஸ்த்ரத்தின் தேர்ந்த ஸித்தாந்தம். ஆகவே, ஹிந்துக்கள் தாம் அநேக காலமாகத் தம் ஹிருதயத்தில் பெருமை பாராட்டிப் பாதுகாத்துவந்த தத்துவமே இக்காலத்திய சாஸ்த்ரத்தின் சிறந்த சித்தாந்தங்களின் துணையால் பிரபல பிரமாணத்தோடும் முன்னினும் அதிகமான வாக்கு வல்லமையோடும் உபதேசிக்கப் படப்போகிற தென்பதைப்பற்றிப் பெரிதும் சந்தோஷிக்கிறார்கள்.

இனி வேதாந்த ஞானத்தின் உந்நத சிகரங்களினின்றும் இறங்கிப் பாமர ஜனங்களின் மதத்தைப் பரியாலோசிப்போம். பரதகண்டத்தில் அநேகேசுவர ஆராதனை என்பதே கிடையாதென்று தொடக்கத்திலேயே நான் உங்களுக்குச் சொல்லிவிடலாம். பிரதி தேவாலயத்திலும் அர்ச்

சகர்களும் ஸ்வாமி தரிசனம் செய்ய வருவோர்களும் கடவுளுக்குரிய ஸர்வ வ்யாபகத்வம் முதலிய ஸகல லக்ஷணங்களையும் அங்குள்ள தேவ விக்கிரகங்களின் விஷயத்தில் ஆரோபித்துத் தியானம் செய்வது ஸமீபத்தில் நின்று கவனிக்கும் எவருக்கும் இனிது விளங்கும். இஃது அநேகேசுவர ஆராதனை யாகுமோ? 'ரோஜா' புஷ்பத்துக்கு வேறு எந்தப் பெயர் கொடுத்தாலும் அதன் சுகந்தத்துக்குச் சிறிதும் குறைவு உண்டாகாதல்லவா? வெறும் பெயர் சூட்டுதல் விஷய விளக்க மாகுமோ? [அதாவது, இத் தேசத்தில் பற்பல திவ்ய மூர்த்திகளின் மூலமாய் நடந்தேறும் ஈசுவர ஆராதனையை, அதன் உண்மை யறியாது, 'அநேகேசுவர ஆராதனை' என்று சொல்லிவிட்டதனாலேயே, அதை அவ்வாறென்று ஸ்தாபிப்பதற்குத் தக்க காரணம் கூறியதாகாது என்பதாம்.]

நான் சிறுவனா யிருக்கையில் பாதகண்டத்தில் ஒரு கிறிஸ்தவன் ஒரு ஜனக் கூட்டத்தின் முன் பிரஸங்கம் செய்துகொண் டிருந்தது இப்போது என் நினைவுக்கு வருகிறது. அவன் ஜனங்களை நோக்கி வேடிக்கையான பல விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்டுக்கொண்டேவந்து, மத்தியில் "என் கைத்தடியால் உங்கள் விக்கிரகத்தை அடித்தால் அது என்ன செய்யும்?" என்று கேட்டான். அதற்கு அவர்களுள் ஒருவன் உடனே "உங்கள் தேவனை நான் வைதால், அவர் என்ன செய்வார்?" என்று அவன் மனதில் தைக்கும்படி சுருக்கெனத் திருப்பிக் கேட்க,

கிறிஸ்தவப் பிரசங்கி, "நீ இறந்த பிறகு தண்டனை யடைவாய்" என்றான். அதைக் கேட்டதும் முன் சொன்ன பட்டிக்காட்டான், "அப்படியே எங்கள் விக்கிரஹமும் நீ இறந்த பின் உன்னைத் தண்டிக்கும்" என்றான்.

விருக்ஷத்தின் குணாகுணங்களை அதன் பழத்தின் மூலமாய் அறியலாம். விக்கிரஹத் தொழும்பர்களென்று சொல்லப்படுவோருள், நல்லொழுக்கத்திலும் - ஆத்ம ஞானத்திலும் - தெய்வ பக்தியிலும் ஒப்புயர்வற்ற பெரியோர்களை நான் பார்த்திருக்கும்பொழுது, "பாவத்தினின்றும் பரிசுத்தம் பிறக்குமா?" என்கிற கேள்வி சகஜமாம் என் மனத்தில் ஜனிக்காமற் போகுமா?

## மூடமதப் பிடிவாதத்தின் கண்டனம்

மூடபக்தி யென்பது மனிதருக்குப் பெருஞ் சத்துருவாம்; ஒரே மதத்தில் யுக்திக்கொவ்வாத மூடப்பிடிவாதமோ அதைக்காட்டிலும் கொடியதாம். கிறிஸ்தவன் ஏன் 'சர்ச்'சுக்குப் போகவேண்டும்? 'சிலுவை' யை ஏன் பரிசுத்தமெனப் பாவிக்கவேண்டும்? பிரார்த்தனை புரியும் போது ஏன் முகத்தை ஆகாசத்தை நோக்கித் திருப்பிக் கொள்ளவேண்டும்? ரோமன் காதலிக் மதத்தாரின் ஆலயத்தில் அத்தனைப் பிரதிமைகள் இருப்பானேன்? 'ப்ரொடெஸ்டாண்ட்' கிறிஸ்தவர்கள் பிரார்த்தனை செய்யும்போது அவர்கள் மனத்தில் அத்தனை மூர்த்தி பாவனைகள் ஏன் இருக்கவேண்டும்? ஸோதரர்களே! நாம் மூச்சு விடாமல் உயிருட னிருக்க எவ்விதம் முடியாதோ. அவ்விதமாகவே

நாம் சிந்திக்கும் காலத்திலும் ஜடவஸ்துவின் ரூப பாவனை யின்றி எதைப்பற்றியும் சிந்திக்க முடியாது. நினைப்பை எழுப்புகிற பாவநாசம் யோக நியமம் எனும் சேர்க்கை முறையால் ஜடவஸ்துவின் ரூப விசேஷம் மனோபாவத் தின் நினைவையும் உண்டாக்குகின்றன. 'ஸர்வ வ்யாபகத் வம்' என்பது அநேகமாய் உலகத்திலுள்ள அனைவருக்கும் பொருளற்ற வெறுஞ் சொல்லாகவே இருக்கிறது கடவு ளுக்கு மேற்பரப்பு என்பது உண்டோ? இல்லையெனில், ஸர்வ வ்யாபகத்வம் என்கிற பதத்தை நாம் சொல்லும் போது விஸ்தாரமாயுள்ள இப் பூமியைப்பற்றிய நினைவைத் தவிர வேறொன்றும் நம் மனத்தில் உண்டாவதில்லை.

நமது சரீரமும் மனமும் அமைந்திருக்கும் இயற்கை முறையை யொட்டி, எவ்வகையாலோ, அகண்டத் தன்மை யின் பாவனை நம் மனத்தில் உண்டாகும் பொருட்டு, நீல வர்ணமான ஆகாசத்தையேனும், அகன்ற சமுத்திரத்தை யேனும் நினைத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது. பரிசுத் தம் என்பதைப்பற்றித் தமக்குள்ள பாவனையைச் சிலர் பிரார்த்தநா மந்திரம், மசூதி, சிலுவை என்பவற்றோடு சேர்த்து நினைப்பது சகஜமா யிருக்கிறது. அவ்வாறே ஹிந்துக்களும் தமக்குள்ள பரிசுத்தம், நிர்மலத்வம், ஸத்யம், ஸர்வவ்யாபகத்வம் முதலிய கருத்துக்களைப் பற்பல விக்கிரஹங்களாலும் ரூபவிசேஷங்களாலும் பாவனை செய்து கொள்ளுகின்றார்கள். ஆனால், அவர்களுக்கும் மற்றவர்களுக்கு முள்ள பேதம் என்னவெனில்:—மற்ற

மதஸ்தர்கள் தமக்கு அபிமதமான கோவில்முதலிய விஷயங்களிலேயே தம் வாழ்நாளை யெல்லாம் விநியோகின்றார்களே யொழிய அதற்கு மேல் ஒருபோது அபிவிர்த்தி அடைகின்றார்க ளில்லை. ஏனென்றால், அவர்களுக்கு மதமென்பது சில கொள்கைகளை உண்மையென்று நம்புவதும் பரோபகாரம் செய்வதுமே யன்றி வேறில்லை. ஆனால், ஹிந்துமதம் அவ்வளவும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தையே நாடி நிற்கின்றது. மனிதன், ப்ரஹ்மாநந்தத்தைப் பிரத்தியக்ஷமாய் அநுபவித்தால்தான் ப்ரஹ்ம ஸ்வரூபமாய் விளங்குவான். ஆகவே, தேவதா விக்கிரஹங்களும், ஆலயங்களும், வேத சாஸ்த்ரங்களும் மனிதர்களின் ஆரம்ப ஞானதசையில் ஊன்றுகோலாயிருந்து உதவும் சாதனங்கள் மாத்திரமேயாம். ஆனால், ஹிந்து மதஸ்தன் நாடும் உத்தமநிலை அவை யல்ல. ஹிந்துமதக் கொள்கையின்படி ஒவ்வொருவனும் கிரமக்கிரமமாய் மேல் நோக்கி உயர் நிலையை நாடிச் செல்லவேண்டியவனேயாம்.

## எவ்விடத்தும் தங்கி நில்லாமை

அவன் எவ்விடத்தும் ஸ்திரமாய்த் தங்கி நிற்பது கூடாது. "பஹிரங்க பூஜையும், விக்ரஹ பூஜையும் உத்தம நிலையை அடைய முயலும் தாழ்ந்த படி" என்றும், "அந்தரங்க பூஜை அதற்கடுத்த படி" என்றும், "ஈசுவர ஸாக்ஷாத்காரம் ஸர்வோத்தமமான படி" என்றும் வேதம் முறை யிடுகின்றது.

உத்தமோ ப்ரஹ்ம ஸத்பாவோ
த்யாந பாவஸ்து மத்யம:
ஸ்துதிர் ஜபோ(அ)தமோ பாவோ
பஹி: பூஜா(அ)தமா(அ)தமா.

மஹா நிர்வாணதந்த்ரம், நான்காம் உல்லாசம்.

இன்னொரு விசேஷம் பாருங்கள். திரிகரண சுத்தியாய்த் தேவதா விக்ரஹத்தின் முன் ஸாஷ்டாங்கமாய்ப் பணியும் பக்தனை "அவனை ஸூர்யன் விளக்கமாட்டான்; சந்திரனும் விளக்கான்; நக்ஷத்திரங்களும் விளக்கா; அவனை மின்னல் விளக்காது; அக்நியும் விளக்காது; அவனாலேயே அவை யாவும் பிரகாசிக்கின்றன."

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோ(அ)யமக்நி:
தமேவ பாந்தம் அநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி.

கடோபநிஷத்.

என்று ஸ்தோத்ரம் செய்வதை நாம் காணும்பொழுது அவன் அவ் விக்ரஹத்தைப் பழிக்கின்றானென்றாவது, அப் பூஜையைப் பாப கர்மமென்று சொல்லுகிறானென்றாவது நினைத்தல் பொருந்துமோ? தன் உலக வாழ்க்கையின் ஒரு பருவத்துக்கு அவசியமாய் வேண்டிய ஒரு படி யென்றே அதை அவன் கருதுகின்றான். ஒருவன்

முதலில் குழந்தையா யிருந்தன்றோ- பின்னர்ப் படிப்படியாய் வளர்ந்து பெரியவ னாகின்றான். அப்படியிருக்கக் குழந்தைப் பருவத்தையாவது, பாலியப் பருவத்தையாவது பாவமெனறு ஒரு கிழவன் சொல்லுவது நியாயமாகுமா? இவ்வளவுக்கும் விக்ரஹ பூஜை செய்தே தீரவேண்டுமென்று ஹிந்து மதம் வற்புறுத்துவதில்லை.

ஒருவன் விக்ரஹாராதனையின் துணையைக் கொண்டு வெகு சுலபமாகத் தன் தெய்வத் தன்மையை அநுபவிக்கக் கூடுமாயின், அதைப் பாவமெனக் கூறுவது நியாயமா? அல்லது அந்தப் படியை அவன் கடந்து சென்றவனானாலும் அதைப் பிசகெனச் சொல்லுதல் அமையுமோ? இந்து மதத்தின் பிரகாரம் பிரதி மனிதனும் பலவகைப் படிகளையும் கடந்து பரகதி யடைகிறான் என்பதின் கருத்து,— அவன் பிழையுள்ள வழியைத் தள்ளி உண்மையான வழியைக் கைக்கொள்ளுகின்றான் என்பதன்று; மற்று உண்மையினின்றே உண்மையைச் சென்றடைகின்றான். அதாவது கீழ்த்தரமான உண்மையினின்றும் மேலான உண்மையைச் சென்றடைகிறான் என்பதேயாம். எல்லாவற்றிலுந் தாழ்ந்த ஜட பதார்த்த பூஜைமுதல் உயர்ந்த வேதாந்த பிரதிபாத்தியமான அகண்ட தத்வோபாஸனை வரையிலுள்ள ஸகல மதங்களும், அநாதியாயும் அநந்தமாயுமுள்ள நித்தியவஸ்துவைப் பற்றுவதற்கும், அதன் சாக்ஷாத்காரத்தை அநுபவிப்பதற்கும் பிரதி ஜீவாத்மாவும் தன் ஜன்மம், ஸஹவாஸம் முதலியவற்றிற்குத் தக்கபடி

செய்யும் பலவகை முயற்சிகளே என்று ஹிந்துக்கள் கருதுகின்றனர். ஆகவே, இம் மதங்களில் ஒவ்வொன்றும் ஜீவாத்மாவின் ஞானாபிவிர்த்தியில் ஒரு படியென்றே ஏற்படுகின்றது, பிரதி ஜீவாத்மாவும், ஜோதி ஸ்வரூபமாய் விளங்கும் சூரியனை நோக்கி ஆகாய மார்க்கத்தில் பறந்து கிரமக்கிரமமாய் அதிக வலிமை பெற்று அச் சூரியனை யடைய உயரப் பறக்கும் இளங் கருடனெனச் சொல்லலாம்.

## மதக் கொள்கைகளும் அடையாளங்களும்

நாநா விதங்களாக வேறுபட்டுத் தோன்றும் வஸ்துக்களின் ஆதாரமாய் அமைந்து விளங்கும் ஐக்கிய வுண்மையே உலக விபற்கையின் ரீதியாகும். இதை ஹிந்துக்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். இதர மதங்கள் சிற்சில சிறப்பு விதிகளை யேற்படுத்தி அவற்றையே யாவரும் கைக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. அவை ஒரே விதமான சொக்காயைக் காட்டிக், கோபாலன் - கோவிந்தன் - கேசவன் ஆகிய எல்லாருக்கும் அவை பொருந்த வேண்டுமென்று சொல்லுகின்றன. கோவிந்தனுக்கும் கேசவனுக்கும் அவை பிடிக்காவிட்டால் அவர்கள் உடையின்றிப் பிறந்த வடிவமாய் இருக்கவேண்டியவர்களே. அகண்ட வஸ்துவைப் பிரத்யக்ஷமாய் அநுபவிப்பதற்காவது, நினைப்பதற்காவது, சொல்வதற்காவது, நம் மனத்திற்கு விஷயமாகக் கூடிய கண்டப்பொருளின் உதவியின்றி முடியாதென்பதை ஹிந்துக்கள் அறிந்திருக்கிறார்

கள். விக்ரஹங்களும், சிலுவையும், சந்திரகலை (இளம் பிறை)யும் அத்யாத்ம பாவனைகளை நமக்கு நன்கு விளங்குமாறு மாட்டிவைக்கப் பயன்படும் *சாதன ரூபமான முளைகளாம். இவ்வகையான சாதனங்கள் எல்லோருக்கும் அவசிய மில்லாதிருப்பினும், உலகத்தில் பெரும்பாலாருக்கு வேண்டியிருப்பதால், தங்களுக்கு அநாவசியமென்ற காரணத்தினால், அவற்றை அவசியமெனக் கொள்பவர்கள் தப்பான வழியை அநுஸரிக்கிறவர்களென்று சொல்ல எவருக்கும் நியாயமில்லை.

நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய சங்கதி ஒன்றுண்டு. இந்தியாவில் உள்ள விக்ரஹாராதநமானது எவ்வித கோரமான செயலுமன்று. அது வேசிகளை உற்பத்தியாக்கும் வழிபாடுமன்று. அபரிபக்குவ தசையிலுள்ளவர்கள் மேலான ஆத்மஞாந தத்வங்களைப் பற்றுவதற்குச் செய்யும் பிரயத்னமென்றே அதனைக் கருதவேண்டும். ஹிந்துக்களிடத்திலும் தப்பிதங்கள் இருந்தபோதிலும், அவர்கள் எப்போதும் தம் தேகங்களைத் தண்டித்து வருத்திக்கொள்வார்களேயன்றி, அயலார்களின் கழுத்தை யறுக்க ஒருபொழுதும் இசையார். ஹிந்துக்களில் மதாவேசங் கொண்டவர்கள் தாமே அக்கிப்ரவேசம் செய்து தம்மை மாய்த்துக்கொள்வார்களே யன்றித் தம் மதத்திற் பிரவேசியாதவர்களை எரிக்க அனலை மூட்டுபவர்களல்லர். அக்கியில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் இப் பலவினைச் செயலும் மதத்தின் குற்றமன்று. முற்காலத்தில்

கிறிஸ்து சமயத்தார் சூந்யக்காரர்களை அக்நி குண்டத்தில் தள்ளி எரித்தமை கிறிஸ்து மதத்தின் தோஷமென்று எவரேனும் கூறுவரோ?

ஆகவே, உலகத்திலுள்ள ஸகல மதங்களும், நாநாவித ருசியுள்ள ஸ்திரீ புருஷர்களென்ற இருபாலாரும் தத்தம் பரிபாக பேதத்துக்கும் கர்ம விசேஷத்துக்கும் தக்கபடி பிரயாணப்பட்டு ஒரே முடிவை உத்தேசித்து மேலுக்கு மேல் வருவதற்குச் செய்யும் உபாயங்களென்பதே ஹிந்துக்களின் அபிப்பிராயம். ஒவ்வொரு மதமும் அவித்யாபந்தத்துக்கு உட்பட்டிருக்கும் இம் மானிட சரீரத்தினின்றும் ஈசுவரன் பிரகாசிக்கும் உண்மையையே உணர்த்துவதாம். அவ் வீசுவரன்தான் அனைவருக்கும் ஞாநமளித்துத் தமது திருவருளால் ஸகல மதங்களையும் பிரகாசமுறச் செய்கின்றார். அவ்வாறாயின், 'மதங்களுக்குள் இத்தனை பரஸ்பர பேதம் இருப்பானேன்?' என்றால், அவை வெளிப் பார்வைக்கு மாத்திரந்தான் பேதங்களென்று ஹிந்துக்கள் சொல்லுகிறார்கள். ஒரே உண்மை வெவ்வேறு இயல்புள்ள மனிதர்களின் வெவ்வேறு பக்குவ நிலைக்கு ஏற்றவாறு அமைந்து விளங்குதலால் இந்தப் பேதங்கள் வருகின்றன.

## எல்லா மதங்களிலும் கடவுள் விளங்குதல்.

ஒரே பிரகாசந்தான் பலவித வர்ணங்களின் வழியாய்ப் பல வகையாய்க் காணப்படுகின்றது. பலவகை மானிட ஸ்வபாவத்துக்கும் அமையவேண்டி யிருத்தலால், இச்

சொற்ப பேதங்களும் அவசியமாகவே வேண்டியிருக்கின்றன. ஆனால், இவ்வெல்லாவற்றிலுள்ளும் விளங்குவது ஒரே உண்மைதான். ஸர்வேசுவரன் ஸ்ரீ கிருஷ்ண பகவானாகத் திருவவதாரம் செய்திருந்தபோது, "முத்துமாலையில் சரடுபோல் நான் பிரதி மதத்திலும் இருக்கின்றேன். மானிட கோடிகளை உயர் நிலைக்குத் தூக்கித் தூய்மையடைவிக்கத் தக்க விசேஷ பரிசுத்தத் தன்மையும் விசேஷ சக்தியும் எங்கெங்கே காணப்படுகின்றனவோ, அவ்விடங்களிலெல்லாம் நான் இருப்பதாய் அறிந்துகொள்."

மயி ஸர்வம் இதம் ப்ரோதம்
ஸூத்ரே மணிகணா இவ.
யத்யத் விபூதிமத் ஸத்வம்
ஸ்ரீமதூர்ஜித மேவ வா
தத்ததேவாவ கச்சத்வம்
மம தேஜோம்ஸ ஸம்பவம். (கீதா-௧0-௪௧)

என்று இந்துக்களுக்குத் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். அப்படிப்பட்ட போதனையின் பயன் என்ன? 'இந்துக்களுக்கு மாத்திரம்தான் மோக்ஷமுண்டு, மற்றவருக்குக் கிடையாது' என்று ஸம்ஸ்கிருத ஞான சாஸ்திரங்களில் எங்காவது இருப்பதாகக் காட்ட யாவரேனும் முன் வருவரோ? ஸ்ரீ வியாஸபகவான் தாம் இயற்றிய வேதாந்த சூத்திரத்திலே, 'அந்தரா சாபி து தத்த்ருஷ்டே:' அதாவது, 'நமது ஜாதி மதங்களுக்குப் புறம்பாயுள்ளவர்களுக்

குள்ளுங்கூடப் பரிபக்வமடைந்த பரிசுத்தாத்மாக்களைக் காண்கிறோம்' என்று அருளியிருக்கிறார். 'அப்படியாயின், தங்கருத்தை யெல்லாம் கடவுளிடத்தே செலுத்தும் இந்துக்கள், ஈசுவர விஷயத்தில் சந்தேகங் கொண்டுள்ள அஜ்ஞேய (Agnostic) வாதமாகிய பௌத்த மதத்தையும், நிரீஸ்வர வாதமாகிய ஜைன மதத்தையும் எவ்வாறு நம்புகிறார்கள்?' என்று நீங்கள் வினவலாம்.

'மானிட ஸ்வரூபத்தி னின்றும் தெய்வத் தன்மை வெளிப்பட்டு விளங்கும் விசேஷமே ஸர்வ மதங்களும் நாடும் முக்கிய தத்துவ மாகையால் அவ் விஷயத்திலேயே ஜைனர்களும் பௌத்தர்களும் தம் சக்தியை யெல்லாம் விநியோகிக்கின்றார்கள். அவர்கள், ஜகத் பிதாவாகிய கடவுளைக் காணவில்லை யாயினும், அவரது புத்திர ஸ்வரூபமான புத்ததேவர்; தீர்த்தங்கரர் என்னும் புண்ணிய புருஷர்களைக் கண்டிருக்கிறார்கள். ஆகவே, இவ்வாறு புத்திரனைக் கண்டவர் பிதாவையும் கண்டவரே யாவர்.*

---

* ஸ்வாமிகள் கிறிஸ்தவர் நிறைந்த கோஷ்டியை நோக்கிப் பிரசங்கித்தபடியால், அவர்களது அவதார புருஷனாகிய கிறிஸ்து நாதர் பிரயோகித்தவாக்கியக் கிரமத்தையே அவரும் உபயோகிக்கிறார். கிறிஸ்து நாதர் கடவுளின் குமாரன் என்பது கிறிஸ்தவ ஸித்தாந்தம். அவர், 'I and my Father are one' 'நானும் என் பிதாவும் ஏகஸ்வரூபம்' என்றும், 'He that hath seen the Son hath seen the Father' 'புத்ரனாகிய என்னைக் கண்டவர் பிதாவாகிய கடவுளையும் கண்டவரே' என்றும் உபதேசித்திருக்கிறார். அதை இங்கே அமைத்துப் பார்க்கின் புத்திர ஸ்தானத்திலுள்ள

ஸோதரர்களே! இதுதான் இந்து மதத்தின் சாரசங்கிரஹம். இந்துக்கள் தமது எல்லா உத்தேசியங்களையும் நிறைவேற்றுவதில் தவறிப்போயிருக்கலாம். ஆனால், எப்பொழுதாவது ஒரு காலத்தில் ஸர்வஜன ஸம்மதமான மதமொன்று உண்டாகப்போவதாயின், அஃது ஒரு குறித்த காலத்துக்கேனும் தேசத்துக்கேனும் சிறப்பு வகையாய் ஸம்பந்தமுடையதாய் இருத்தல் கூடாது. அஃது அடையமுயலும் கடவுளைப்போல் தானும் எல்லை யற்றதாகவே இருக்கவேண்டும். அதன் ஞான சூரியன், கிருஷ்ணபக்தர் மேலும், கிறிஸ்துபக்தர் மேலும், புண்யவான்களின் மேலும், பாபிகளின்மேலும் ஸமமாய்ப் பிரகாசிக்கவேண்டும். மற்றும் அது கேவலம் ப்ராஹ்மணர்களுக்கேனும், கேவலம் பௌத்தர்களுக்கேனும், கேவலம் கிறிஸ்தவர்களுக்கேனும், கேவலம் முஹம்மதியர்களுக்கேனும் தனியே யுரிய மதமாய் இராமல், அவ்வெல்லாருடைய மதங்களின் ஸாராம்சத் தொகுதியையும் தன்னகத்தே அமையப்பெற்றிருப்பதுடன், இனியும் பல வகையிலும் அபிவிர்த்தி யடைந்து சீர்ப்படுவதற்கு இடங் கொடுக்கத்தக்க விரிவுடனும் கூடி யிருக்கவேண்டும். அது தன் பொதுத் தன்மையின் விசேஷத்தால் எப்புறத்தும் தன் கரங்களைப் பரப்பி, உலகத்திலுள்ள யாவரையும் பக்ஷமாய்த் தழுவிக்

---

புத்ததேவரையும் தீர்த்தங்கரர்களையும் வழிபடும் பௌத்த ஜைனர்களும் ஜகத்பிதாவாகிய ஸர்வேசுவரனை வழிபடுகின்றவர்களே என்று கிறிஸ்துநாதரின் வசனங்களாலேயே ஏற்படுகிறதென்பது ஸ்வாமிகளின் கருத்து.

கொள்ளல்வேண்டும். விலங்குகளுக்கும் தமக்கும் அதிக பேதமின்றித் திரிந்துழலும் கீழோர்முதல், தமது அறிவாலும் அன்பாலும் ஸமஸ்த ஜனங்களையும்விட உத்தம சீலர்களாய் விளங்கித், தம்மைக் கண்ணுறும் உலகத்தோர், "இவர்கள் கேவல மனிதர்களல்லர், தேவாம்சமாகவே இருக்கவேண்டும்" என்று அவ்வளவு தூரம் சங்கிக்கும்படியான நிலையிலுள்ள புண்ணிய புருஷர்வரையிலும் உள்ள ஸகல ஜனங்களுக்கும் அது இடம் அளிக்கவேண்டும்.

### ஸர்வ ஸம்மத சமயம்

அப்போதுதான் அது அந்ய மதஸ்தர்களைப் பிடிப்பதற்கும், அவர்கள் விஷயத்தில் பொருமை கொள்ளுவதற்கும் இடங்கொடாத மதமாயிருக்கும். எப்பாலாரிடத்தும் தேவாம்சம் உள்ளதென்றும் உணரும். அதற்குள்ள எல்லா சக்தியும், மனிதர்களுக்குத் தமது உண்மையான தேவாம்சத்தை நேரில் அநுபவிப்பதற்கு வேண்டிய மஹோபகாரம் புரியப் பிரயோஜனமாகும்.

அப்படிப்பட்ட மதத்தை அளிப்பீர்களாயின், அனைவரும் அதை யனுஸரிப்பார்கள். பூர்வம் அசோக சக்ரவர்த்தி கூட்டிய ஸபையில் பௌத்தர்கள் மாத்திரமே நிறைந்திருந்தார்கள். அதற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் அக்பர் சக்ரவர்த்தி கூட்டிய மத ஸபையில் பற்பல மதத்தவரும் சேர்ந்திருந்தும், அதினால் பெரும் பயன் யாதொன்றும் விளையவில்லை. 'சமயங்கள்தோறும் ஸர்வேசுவரன் விள

ங்குகிறார்' எனும் உண்மையை உலகத்தோருக்கெல்லாம் உத்கோஷித்துத் தெரிவிக்கும் அதிகாரம் அமெரிக்காவுக்கென்றே அமைந்தது போலும்.

## வாழ்த்து

இந்துக்கள் ப்ரஹ்மமென்றும், பார்ஸிகள் அஹுரமஜ்தாவென்றும், பௌத்தர்கள் புத்தனென்றும், யூதர்கள் யெஹோவாவெனறும், கிறிஸ்தவர்கள் பரமண்டலத்தினுள்ள பிதாவென்றும் எவரைப் போற்றுகின்றனரோ, அந்தப் பரமபுருஷன் உங்கள் மேலான எண்ணத்தை நிறைவேற்றுமாறு உங்களுக்குச் சக்தியளிப்பாராக. ஸமரஸ பாவனையெனும் நக்ஷத்ரம் முதலில் கீழ்த்திசையில் உதயமாகி, மேற்றிசையை நோக்கி நேராய்ப் புறப்பட்டுச் சில சமயம் மங்கலாயும், சில சமயம் ஒளிவீசியும் பிரகாசித்துக்கொண்டு உலகமெல்லாம் பிரதக்ஷணம்பண்ணி, மறுபடியும் கீழ்த் திசையில் அடிவானத்திலே முன்னினும் ஆயிரமடங்கு அதிகமான காந்தியுடன் ஜாஜ்வல்யமாய் உதயமாயிருக்கின்றது.

சுதந்திரத்துக்கு நிலயமாகிய * கொலம்பியாவே! நீ நீடூழி வாழ்க! நீ ஒருபோதும் அயலாரைக்கொன்று அவர்களது ரத்தத்தில் உன் கையைத் தோய்த்துக் களங்கப்படுத்திக் கொள்ளவில்லை. நீ ஒருபோதும் அயலாரது சொத்தை அபஹரித்து அதனால் ஐசுவரியவதியாகச்

---

* கொலம்பஸால் கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தால் அமெரிக்காவுக்குக் 'கொலம்பியா' என்றொரு பெயருண்டு.

சுலப வழியைத் தேடவில்லை. ஆகலால், நீயே நாகரிக ஜனங்களின் முன் சாந்தி எனும் துவஜத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு செல்வதற்கு அதிகாரம் பெற்றாய்.

---

## செப்டம்பர்மீ 20உ பத்தாநாள் சபையிற் செய்த ப்ரஸங்கம்.

### "ஏழை அஞ்ஞானிகள்"

"பிற மதஸ்தர்கள் கிறிஸ்து மதத்தை நியாயவாயிலாகச் சீர்தூக்கிப் பரிசோதனை செய்பவருக்கால், கிறிஸ்தவராயுள்ளோர் அதற்கு இடங் கொடுக்க எப்போதும் சித்தமாயிருக்கவேண்டும். ஆகவே, உங்கள் மத விஷயமாய்ச் சிறிது குற்றங் கூறுவேனாயின், அதற்காக நீங்கள் மனத்தாங்கல் உறுவீர்களென்று நான் நினைக்கவில்லை. ஏ கிறிஸ்தவர்களே! நீங்கள் அஞ்ஞானிகளென்று அழைக்கும் எங்கள் மதத்தவரின் ஆத்மாக்களை ரக்ஷிக்கும்பொருட்டுப் பாதிரிகளைப் பிரியத்துடன் அனுப்புகிறீர்களே! பசியால் வருந்தும் அவர்களது தேகங்களை ரக்ஷிக்க நீங்கள் யாதொரு முயற்சியும் செய்யா திருப்பதேன்? இந்தியாவில் பயங்கரமான பஞ்ச காலங்களிலே பல்லாயிரம் ஜனங்கள் வயிற்றுக்குச் சோறின்றி மாண்டுபோனார்களே? அவர்களைக் காப்பாற்றக் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் யாது செய்தீர்கள்? ஒன்றுமில்லையே. இந்தியாவில் எங்கு பார்த்தாலும் நீங்கள் கிறிஸ்தவக் கோவில்களைக் கட்டுகிறீர்கள்; ஆனால், கீழ் நாட்டாரை வருத்தும் கஷ்டம் மதக்குறை

வன்று; அவர்களுக்கு மதம் எதேஷ்டமா யிருக்கிறது. கஞ்சி யில்லாமையே அவர்களுக்குப் பெருங்கஷ்டமா யிருக்கிறது. இந்தியாவிலே கீழுஞ் சுட, மேலுஞ் சுட, நெஞ்சுலர்ந்து, நாவறண்டு, வயிறு ஒட்டிப்போய்க் 'கஞ்சி யோ, கஞ்சியோ' என்று பல்லாயிரம் பேர் கதறுகிறார்க ளே! அவர்கள் கஞ்சி கேட்டால் நாம் கல்லைக் கொடுக்க லாமா? வயிற்றுக்குக் கஞ்சி யில்லாமல் வருந்துவோருக்கு மதப் பிரசங்கம செய்வது அவர்களை அவமானப் படுத்திய தாகு மன்றோ? இந்தியாவிலே பணத்துக்காக ஞானோப தேசஞ் செய்பவனை ஜாதிப்பிரஷ்டனாக்கி, அவன்மேல் எல் லோரும் காறித் துப்புவார்கள். எங்கள் தேசத்து ஏழை ஜனங்களுக்கு ஒத்தாசை புரிய வழி தேடும்பொருட்டு நான் இங்கே வந்தேன். வந்ததில் கிறிஸ்தவ ராஜ்யத்திலே கிறிஸ்தவர்களிடத்திலிருந்து "அஞ்ஞானி"களுக்கு உதவி கிடைப்பது எவ்வளவு கஷ்டமென்பதை நன்றாய் அறிந்து கொண்டேன்."

(12-ம் நாள், செப்டம்பர்மூ 22௳)

ஸர்வமத ஸபையின் சாஸ்திர ஆராய்ச்சிப் பிரிவிலே, விவேகாநந்த ஸ்வாமிகள் "வைதிக ஹிந்து மத"த்தைப் பற்றிப் பிரசங்கித்தார். 3-ம் நம்பர் ஹாலிலே எள் விழற் கிடமின்றி ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். கத்தோலிக் குருமார், ப்ரோடெஸ்டன்ட் குருமார்கள், 'தியசாபிகல்' சங் கத்தார், யுக்திவாதிகள் முதலிய பற்பல மதச்சார்பினரான ஸ்திரீகளும் புருஷர்களும் அதிகமான உற்சாகத்துடன்

அவரது பிரசங்கத்தைக் கேட்டு, அவரை மத விஷயமான பல கேள்விகள் கேட்டார்கள். அவற்றிற்கெல்லாம் அவர் சாவதானமாயும், சமத்காரமாயும், தெளிவாயும் விடையளித்து அவர்களது ஆவலைத் தீர்த்தார். அன்று அவர்கள் உள்ளத்தில் அவர் கொளுத்திய ஹிந்துமதச் சுடர் அதிக காந்தியுடன் பிரகாசிக்கத் தொடங்கவே, அவர்கள் அனைவரும் அவரிடம் வந்து “இந்து மதத்தைப்பற்றி வேறோரிடத்தில் விசதமாய்ப் பிரசங்கிக்கவேண்டும்” என்று கேட்டுக்கொள்ள, அவரும் அவர்களது வேண்டுகோளுக் கிசைந்தார்.

(16-ம் நாள், செப்டம்பர்மூ 26உ)

## பௌத்தமதத்துக்கும் இந்துமதத்துக்கும் உள்ள ஸம்பந்தம்

“அக்ராஸநாதிபதியவர்களே! என் ஸஹோதரர்களே? என்னையன்புடன் உபசரித்து போஷித்துவரும் பிரபுக்களே! ‘நான் பௌத்தன் அல்லேன்’ என்று நீங்கள் அனைவரும் கேள்வியுற்றிருக்கிறீர்கள். ஆயினும், நான் ஒருவாறு பௌத்தனே. சீனமும் ஜப்பானும் லங்கையும் அந்த லோக குருவாகிய புத்தரது உபதேசங்களை பொட்டி யொழுகினால், இந்தியாவானது அவரை ஈசுவராவதாரமென மதித்துப் பூஜிக்கின்றது. நான் பௌத்தமதத்தைப் பரிசோதனை செய்யப்போகிறேன் என்று சற்றுமுன் நீங்கள் கேள்வியுற்றீர்க ளல்லவா? அதைக்கொண்டு நான் அதில் குற்றஞ் சொல்லப்போகின்றேன் என்று நீங்கள் சந்தேகிக்கவேண்டாம். எவரை ஈசுவராவதாரமென்று கருதி நான் அது

தினமும் பூஜிக்கின்றேனே, அப்படிப்பட்டவரிடத்தில் குற்றங் கல்பிக்கும் அபசாரம் எனக்கு வேண்டாம். ஆனால், புத்த பகவானைப்பற்றி யெங்கள் அபிப்பிராய மென்னவென்றால், 'அவருடைய கருத்தை அவரது, சிஷ்யர்கள் சரியாய்த் தெரிந்துகொள்ளவில்லை' என்பதே. வைதிக மதத்துக்கும் பௌத்த மதத்துக்கும் இக்காலத்திலுள்ள சம்பந்தமானது, பௌத்த மதத்துக்கும் கிறிஸ்து மதத்துக்கும் உள்ள சம்பந்தத்தை யேறக்குறைய ஒத்திருக்கின்றது. ஏசுகிறிஸ்து யூத ஜாதியைச் சேர்ந்தவர். சாக்கியமுனி ஹிந்து ஜாதியைச் சேர்ந்தவர். ஆனால், அவர்களுக்குள் பரஸ்பரம் இருந்த பேதம் என்னவெனில்,—யூதர்கள் கிறிஸ்துவை ஒப்புக்கொள்ளாமல் தள்ளிச் சிலுவையில் அறைந்தார்கள். இந்துக்களோ சாக்கியமுனியை ஈசுவர பீடத்தில் எழுந்தருளச்செய்து ஆராதித்து வருகின்றார்கள். ஆனால், தற்காலத்திய பௌத்தமதத்திற்கும், புத்த பகவான் உபதேசித்ததாக இந்துக்களாகிய நாங்கள் கருதும் உபதேசங்களுக்கும் உள்ள உண்மையான வித்தியாசத்தைப் பற்றி ஹிந்துக்கள் சொல்ல விரும்புவது யாதெனில்,—சாக்யமுனிவர் யாதொன்றையும் புதிதாய் உபதேசிக்க வரவில்லை. கிறிஸ்து பிரானைப்போலவே அவரும் உள்ளதைப் பரிபூர்த்திசெய்ப வந்தாரேயன்றி நாசம்செய்ய வரவில்லை. யூதர்கள் தங்கள் பழைய ஏற்பாடென்னும் மத நூலைப் போலவே புதிய ஏற்பாடென்று வழங்கும் கிறிஸ்து மத நூலையும் பெருமைப்படுத்த வேண்டுமென்றும், கிறிஸ்தவர்கள் தங்கள் புதிய ஏற்பாட்டைப்போலவே பழைய

ஏற்பாட்டையும் பெருமைப்படுத்த வேண்டுமென்றும் கிறிஸ்துநாதர் உபதேசித்தார். பழைய ஏற்பாட்டின் பரிபூர்த்தியே புதிய ஏற்பாடென்பதை யூதர்கள் எவ்வாறு அறியவில்லையோ அவ்வாறே பௌத்தர்களும் ஹிந்துமத ஸித்தாந்தங்களின் பரிபூர்த்தியை அறிந்துகொள்ளவில்லை. ஆதலால், சாக்ய முநிவர் பரிபூர்த்தி செய்ய வந்தாரேயன்றி அழிக்க வரவில்லையென்று நான் மீண்டும் மொழிகின்றேன். அவரே ஹிந்து மதத்தின் சிறந்த சித்தாந்தங்களைப் பரிபூரணமாய்த் தமது வாழ்க்கையில் விளக்கிக் காட்டியவர்.

"ஹிந்துக்களுடைய மதமானது கர்மமார்க்கம், ஞானமார்க்கம் என இரு பிரிவுகள் உடையது. ஞானமார்க்கத்தை முக்கியமாய் அநுஸரிப்பவர்கள் ஸந்ந்யாஸிகளாவார்.

"அந்த ஞான மார்க்கத்திலே ஜாதிபேதம் கிடையாது. இந்தியாவிலே உயர்குலத்தோனும் துறவியாகலாம், இழிகுலத்தோனும் துறவியாகலாம். ஸந்ந்யாஸத்தில் இரண்டு ஜாதியும் ஒன்றாய்விடுகின்றன. வேதாந்தத்திலே ஜாதிபேதம் இல்லை. ஜாதியென்பது ஜனஸமூஹக் கட்டுப்பாடு. சாக்ய முநிவரும் ஸந்ந்யாஸியாகி, வேதத்தில் மறைந்திருந்த உண்மையை உலகத்திலுள்ளவர் அனைவர்க்கும், யாதொரு பேதமும் இல்லாமல், தெரியப்படுத்தி அதன் வழியாய் அவர்களிடத்தில் தமக்குண்டாயிருந்த அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தினார். அதுவே அவருடைய சிறப்பைக் காட்டுகின்றது. பிரஸங்கிகளைக் கொண்டு யாவர்

க்கும் மதபேதம் செய்விக்கும் வழியை முதல் முதல் வழக்கத்துக்குக் கொண்டுவந்தவர் அவரே. அவ்வளவு மாத்திரமா? பிற மதத்தினரைத் தம் மதத்தைத் தழுவச் செய்வதற்கும் அவர்தாம் முதலில் வழி காட்டியாய் நின்றவர்.

"ஏழைகள் விஷயத்திலும், ஞானமில்லாதவர் விஷயத்திலும் அவருக்கிருந்த ஆச்சரியகரமான அநுதாபமே அவரது மஹிமைக்கு முக்கிய காரணமாம். அவரது சிஷ்யருள் ப்ராஹ்மணரும் சிலர் இருந்தனர். புத்தபகவான் போதிக்கத் தொடங்கிய காலத்திலே, இந்தியாவில் ஸம்ஸ்கிருத பாஷைக்கு வழக்காறு அற்றுப் போய்விட்டது. பண்டிதர்களின் புஸ்தகங்களில் மாத்திரமே அது ஏட்டு வழக்கம் பெற்றிருந்தது. புத்தரது ப்ராஹ்மண சிஷ்யர்கள் சிலர் அவரது உபதேசங்களை ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்க விரும்பினார்கள். அதை யறிந்தவுடனே அவர் அவர்களை நோக்கி "நான் ஏழைகளுக்காகவே அவதரித்தவன்; பாமரர்களான சாதாரண ஜனங்களுக்கென்றே வந்திருக்கிறேன். ஆதலால், ஜனங்கள் வழங்கும் பாஷையில் பேசுவதே எனக்கிஷ்டம்" என்றார். ஆகவே, அவரது உபதேசங்களின் பெரும்பான்மையும் அக் காலத்தில் இந்தியாவில் வழங்கிய * பாலி பாஷையிலேயே இன்றைக்கும் இருக்கின்றது.

* பாலி பாஷையானது வடமொழியினின்று பிறந்த பிராகிருத பாஷைகளுள் ஒன்றாகும்; வடமொழி நாடகங்களிலே பிரயோகிக்கப்பட்டிருக்கும் மாகதீ என்னும் பிராகிருதமொழிக்கும் பாலிக்கும் அதிக பேதமில்லை. வடமொழியில் தர்மம், புத்ரன், ஸூத்ரம் என்ற பதங்கள் பாலியில் முறையே தம்மம், புத்தன் ஸூத்தம் எனத் திரியும்.

"சாஸ்திர விசாரமும், வேதாந்தமும் எவ்வளவு சிறந்தவையா யிருப்பினும், மரணம் என்கிறதொன்று இவ்வுலகத்தி லுள்ளவரையிலும், துர்ப்பலம் என்பதொன்று ஹ்ருதயத்தில் இருக்கும் வரையிலும், அந்தத் துர்ப்பலத் தன்மையினாலேயே மனிதன் உள்ளங்கரைந்து கடவுளை நோக்கி ஓலமிடுகின்ற வரையிலும், கடவுள் நம்பிக்கை யென்பதும் இருந்தே தீரும்.

"ஒருவிதமாய்ப் பார்க்குமிடத்துப் புத்ததேவரது சிஷ்யர்கள் தத்துவஞான விஷயமாய் வேதமென்கிற அசைக்க முடியாத கற்பாறையின்மேல் எவ்வளவு மோதிக்கொண்டு பார்த்தும், அதனைத் தகர்க்க முடியவில்லை மற்றொரு விதமாய்ப்பார்க்கு மிடத்து, ஒவ்வொருவரும் தத்தம் அருமைக் கண்மணியெனக் கருதிப் பாராட்டும் பரமபுருஷனை பௌத்தர்கள் பிரஜைகளிடத்தினின்றும் அபஹரித்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்யத் தலைப்பட்டவுடனே பௌத்த மதம் இந்தியாவில் அழிந்துபோய்விட்டது. ஆகையால், அதன் பிறப்பிடமாகிய இந்தியாவில் தம்மைப் பௌத்தர்களென்று சொல்லிக்கொள்வோர் ஸ்திரீகளிலாவது புருஷர்களிலாவது இன்றைக்கும் ஒருவரும் கிடையார்.

"இன்னொருவிதமாய் நோக்குங்கால், பிராஹ்மணமதமும் சிற்சில அம்சங்களில் நஷ்ட மடைந்தது, சீர்திருத்தம் செய்ய வேண்டு மென்று பௌத்தமதத்திற்கிருந்த அவ்வித வைராக்கியமும், ஸர்வ பிராணிகளின் விஷயத்திலும் பிரவர்த்தித்த அந்த ஆச்சரியகரமான காருண்யமும் தர்ம

குணமும் பிராஹ்மண மதத்துக்கு ஒருவாறு நஷ்டத்தை யுண்டாக்கியதெனச் சொல்லலாம். பௌத்தமதம் இப்படிப்பட்ட தனது சிறந்த செய்கைகளால் ஹிந்து தேசத்தாரை எவ்வளவு மேன்மையான நிலைக்குக் கொடுவந்து விட்டதென்றால், அக்காலத்திய இந்தியாவின் சரித்திரத்தை யெழுதிய ஒரு கிரீக்கு வித்துவான்,—ஹிந்துவாயுள்ள எவனும் பொய் சொன்னதில்லை என்றும், இந்து ஸ்திரீயா யுள்ளவள் எவளும் கற்புநிலை தவறினதில்லை யென்றும். எழுதி யிருப்பதினின்று அறியலாகும்.

[பிறகு சபையில் உட்கார்ந்திருந்த பௌத்தர்களை நோக்கி]

"பௌத்த நண்பர்களே! உங்களை விட்டுப்பிரிந்து நாங்கள் இருக்க முடியாது; எங்களை விட்டுப்பிரிந்து நீங்களும் இருக்க முடியாது; நாமிருவரும் பிரிந்துபோய் விட்டமையால், பிராஹ்மணர்களின் உயர்ந்த புத்தியும் தத்துவ ஆராய்ச்சியுமின்றி நீங்கள் மேன்மையடைய முடியாதென் பதையும், ஜீவகாருண்யம் நிறைந்த உங்களுடைய ஹ்ருதயமின்றி நாங்கள் நிலைக்க முடியாதென்பதையும் இப்பொழுது நாம் தெரிந்துகொண்டோம். பௌத்தர்களும் ப்ராஹ்மணர்களும் இவ்வாறு ஒருவரைவிட்டொருவர் பிரிந்து விட்டமையே இந்தியாவின் க்ஷீணகதிக்குக் காரணம். இந்தியாதேசத்தில் 30 கோடி ஏழைகள் நிறைந்திருப்பதற்கு அதுதான் காரணம். சென்ற ஆயிரம் வருஷங்களாக வெளிநாட்டினின்று படையெடுத்து வருவோருக்கு இந்தியா

அடிமையாயிருந்துவருவதற்குக் காரணம் அதுதான். ஆகவே, பிராஹ்மணனுடைய அற்புதமான புத்தியையும், லோக குருவாகிய புத்ததேவருடைய இரக்கமுள்ள ஹ்ருதயத்தையும் - உதாரமான ஆத்மாவையும் - அற்புதமான ஜீவகாருண்யத்தையும் ஒன்று சேர்த்துக் கூடி வாழ்வோமாக."

## முடிவுரை

"உலகமத மஹாசபை சிறப்பாய் நிறைவேறிவிட்டது. அன்புள்ள எமதப்பனும் இக் காரியத்தை நடத்த மேற்கொண் டுழைத்தவர்களுக்குத் துணைநின்று, அவர்கள் தன்னயமின்றிப் பட்ட சிரமத்துக்குத் தக்க காரிய ஸித்தியும் உண்டாகுமாறு கடாக்ஷித்திருக்கிறார்.

"தம்முடைய மேலான அன்பினாலும் உண்மையி லுள்ள பிரியத்தினாலும் இப்படிப்பட்ட அரிய பெருங்கருமத்தைச் செய்து முடிக்கவேண்டுமென்று முதலிற் கனவு கண்டு, பின்னர் அதனைக் காரியத்திலும் நிறைவேற்றின உதாரகுண சீலர்களுக்கு அநேக வந்தனம். இந்த மேடையிலே இடைவிடாது பொழிந்து கரைபுரண்ட ஸர்வ வாதி ஸம்மதமான ஸமரஸத்துடன் கூடிய நல்லெண்ணங்களின் பொருட்டும் அநேக வந்தனம். கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கும் இச் சபையோர்கள், என் விஷயத்திற் காட்டிய கருணைக்காகவும், எல்லா மதங்களுக்கும் பரஸ்பர மிருக்கும் வைஷம்யத்தைச் சாந்தப்படுத்துவதற்குப் பயன்படும் ஒவ்வொரு கருத்தையும் காரியஸித்திக்குக் கொண்டுவந்த

பெருமைக்காகவும் அநேக வந்தனம். இப்படிப்பட்ட ஸம்பூர்ண ஸ்வரோதயத்தாற் சிறந்த இன்னிசையில் இடையிடையே சில விஷம ஸ்வரங்களும் செவியிற் பட்டன. பேசியோரின் கருத்தை க்ஷணகாலத்தில் இழுத்த அவ் விஷம ஸ்வரங்களும், முன் ஏற்கனவே இருந்த இன்னிசையானந்தக் களிப்பை இன்னும் இனிமையாகச் செய்தமையால், அவற்றின் பொருட்டும் விசேஷமாய் வந்தனம் பண்ணுகின்றேன்.

"மத ஐக்கியத்துக்கு வேண்டிய பொதுவான அம்சங்களைப்பற்றி அதிகமாகப் பிரஸ்தாபம் நடந்தது. இதைப் பற்றி என் சொந்த அபிப்பிராயத்தை இப்பொழுது நான் சொல்லப்போவதில்லை. ஆனால், இந்த மத ஐக்கியமென்பது, இம் மதங்களில் எல்லாம் ஒருமதம் மாத்திரம் வெற்றிபெற்று மற்ற மதங்கள் அழிவதால் கைகூடுமென்று எவரேனும் ஆசை கொள்வரேல், அவரைப் பார்த்து நான் "தம்பீ! உன் ஆசை ஈடேறுவது அசாத்தியம்" என்பேன். கிறிஸ்தவர்கள் இந்துக்களாகவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேனோ? எம்பெருமான் அதைத் தடுப்பாராக. அல்லது இந்துக்களும் பௌத்தர்களும் கிறிஸ்தவர்களாகவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேனோ? எம்பெருமான் அதைத் தடுப்பாராக

"பூமியிலே விதையைப் போட்டுவிட்டோம். பிறகு அதைச் சுற்றிலும் மண்ணமைத்து, நீர் பாய்ச்சிக் காற்றடிக்கும்படி செய்கின்றோம். அந்த விதையானது மண்

ணாகவேனும், காற்றாகவேனும், நீராகவேனும் மாறிவிடு கின்றதா? இல்லை. அது செடியாகி, ஸ்தாவர விர்த்தியின் விதிகளின்படி வளர்ந்து, காற்றையும் - மண்ணையும் - நீரையும் தனக்குள் சேர்த்துக்கொண்டு, அவற்றைத் தன க்கு வேண்டிய ஸ்தாவர சத்தாக மாற்றி விருக்ஷமாய் ஓங்கி வளர்கின்றது.

"மத விஷயமும் அவ்வாறுதான். கிறிஸ்தவன் இந்து வாகவேனும், பௌத்தனாகவேனும் மாறவேண்டியதில்லை. அப்படியே இந்துக்களாவது பௌத்தர்களாவது கிறிஸ் தவராகவேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு மதமும், பிற மதங்களின் சத்தை சுவீகரித்துத் தன் இயற்கைக்கு அநுகுணமான விதிகளை அநுசரித்து விர்த்தியடைதல் வேண்டும்.

"உலகமத மஹாஸபையானது உலகத்துக்கு எதை யேனும் காட்டி இருக்கும்பக்ஷத்தில் அஃது இதுதான்: பரிசுத்தம், சித்தசுத்தி, அருள் என்னும் குணங்கள் உல கத்திலுள்ள எந்த மதத்துக்கும் ஏகதேசத்திற் சொந்த மான செல்வமல்ல வென்பதையும், ஒவ்வொரு மதத்தி லும் ஸத்குண ஸம்பந்நர்களான ஸ்திரீ புருஷர்கள் தோன்றியிருக்கிறார்க ளென்பதையும், இச் சபை மெய்ப் பித்திருக்கிறது. இத்தகைய சிறந்த பிரத்யக்ஷ பிரமா ணம் இருக்கும்பொழுதுகூட, யாவரேனும் தம்முடைய மதமே தனியாய் வெற்றிபெற்று விளங்குமென்றும், ஏனைய மதங்களெல்லாம் அழிந்துபோய்விடுமென்றும் கனவு

கண்டுகொண்டிருப்பாராயின், நான் அவரைப்பற்றி என் நெஞ்சாரப் பரிதாபப்பட்டு, இனி யார் எவ்வளவு தடுத்த போதிலும், ஒவ்வொரு மதத்தின் கொடியிலும், "சகாயமேயன்றிச் சண்டையில்லை" என்றும், "ஸர்வமும் அங்கீகாரமே யன்றி நாசமில்லை" என்றும், "சுபமும் சாந்தியுமே யன்றிக் கலஹ மில்லை" என்றும் சீக்கிரமே எழுதப் படும் என்று அவருக்கு எடுத்துக் காட்டுவேன்."

ஸர்வமத மஹா ஸபையில் நடந்தேறியவற்றை யெல்லாம் சிறிதும் விடாமல் தினந்தோறும் பிரசுரித்துவந்த சிகாகோ நகர பத்திரிகைகள் யாவும் நம் ஸ்வாமிகளின் உபந்யாஸமே ஸர்வோத்தமமா யிருந்ததெனப் புகழ்ந்து பேசின. அதுமுதல் ஸ்வாமிகளின் புகழ் எங்கும் பரவிப் பிரசித்தமாய்விட்டது. அவர், இந்து மதத்தைப் பற்றி உபந்யாஸம் புரிந்த தினத்திலே அச் சபாமண்டபத்தில் எள் விழுவதற்கும் இடமின்றி ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். 'பெண்டுகள், பெண்டுகள், எங்கு பார்த்தாலும் பெண்டுகளே; எல்லா விடங்களிலும், எல்லா மூலைகளிலும் பெண்டுகளே நிறைந்து, ஸ்வாமிகள் கடைசியாய்ப் பேசப்போவதைக் கேட்கவேண்டுமென்றே ஆவலால், இடையே நடந்த மற்றவர்களது பிரசங்கங்களையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டு காத்திருந்தார்கள் என்று பத்திரிகை கூறியது.

ஸ்வாமிகள் ஸநாதந தர்மமாகிய இந்துமதத்தைப் பிரவசனம் செய்கையில் பின் வருமாறு உரைக்கலானார்:—

நான் உலகத்துக்கு ஸர்வஸமய ஸமரஸத்தையும் ஸர்வ ஸம்மத ஸித்தாந்தத்தையும் கற்பித்த மதத்தைச் சேர்ந்தவனென்பதைப்பற்றிப் பெருமை பாராட்டுகிறேன். நாங்கள் ஸர்வ ஸமயங்களையும் ஸமரஸ பாவனையுடன் நோக்குவதுடன், எல்லா மதங்களும் உண்மையானவை யென்றும் நம்புகின்றோம. (ஸமரஸ பாவனைக்கு எதிர்மறையான) 'Exclusion' என்கிற சொல்லை எந்தப் பாஷையில் மொழி பெயர்க்க முடியாதோ, அத்தகைய ஸம்ஸ்கிருத பாஷையைப் பரிசுத்த பாஷையாகப் பெற்ற மதத்தை நான் சேர்ந்தவன் என்று உங்களுக்குப் பெருமையுடன் தெரிவிக்கின்றேன்.''

அவர் விளக்கிய மற்றொரு ஸித்தாந்தம் ப்ரஹ்மாநுபூதியாம். அதைப்பற்றி அவர் பிரசங்கித்தது வருமாறு:—
''இந்துவானவன் வெறும் சொற்களையும் கோட்பாடுகளையும் வைத்துக்கொண்டு உஜ்ஜீவிக்கப் பார்க்கின்றவன் அல்லன். அவன் கடவுளை நேராய்க் காணவேண்டும். அவ்விதக் காட்சிதான் அவனது ஸந்தேஹங்களை யெல்லாம் போக்கவல்லது, ஆகவே, ஆத்மாவையும் கடவுளையும்பற்றி இந்து ரிஷிகள் கூறும் சிறந்த சாக்ஷி என்னவெனில், 'நாங்கள் ஆத்மாவைக் கண்டோம், கடவுளைக் கண்டோம்' (வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்) என்பதே.

''அவர்கள் மதத்திலுள்ள ஸர்வ பிரயத்நமும் தாம் பரிபூரண மாவதற்கும், தெய்வத் தன்மையாகிக் கடவுளை யடைந்து கடவுளைக் காண்பதற்கும் செய்யப்படும் நித்யய்

பிரயத்நமேயாம். கடவுளை இவ்வாறு அடைவதும் காண்பதும் அபவர்க்க (மோக்ஷ) பதியாகிய எமதப்பனைப்போல் பரிபூரண மாதலுமே இந்துக்களின் மத வியல்பாம்.''

மதத்தின் மூலமாய்ப் பரிபூர்த்தி அடையும் உபாயத்தைச் சம்பந்தித்த நித்திய முறைகளையே வேதங்கள் வெளியிடுகின்றன வென்றும், ஸர்வ தேசங்களிலும் ஸர்வ திசைகளிலும் ஸர்வ காலங்களிலும் உள்ள ஸர்வ ஜனங்களுக்கும் துக்க நிவிர்த்தியும் ஆத்ம சுகப் பிராப்தியும் அவ் வேதங்களிலே அருளப்பட்டிருக்கின்றன வென்றும், ஹிந்துக்கள் பொம்மைகளை வணங்குபவர் அல்ல ரென்றும், அவர்கள் அநுஷ்டிக்கும் பூஜாக் கிரமத்தைப் பொம்மை வணக்கமெனல் சரியன்றெனவும், தக்க நியாயங்களோடு அப் பெரும் அமெரிகா நாட்டாருக்கு ஸ்வாமிகள் விளக்கிக் காட்டினார்.

அவ் விஷயமாய் அவர் சொல்லியது வருமாறு:—''ஹிந்துக்கள் வேதத்தால் அருளப்பட்ட மதத்தைக் கைக்கொண்டவர்கள். வேதம் ஆதியந்த மிலாத தென்பது அவர்களுடைய கொள்கை. ஒரு நூல் ஆதியந்த மில்லாமலிருக்கக்கூடு மென்பது இச் சபையோருக்குப் பரிஹாஸகாமாகப் படலாம்; ஆனால், வேதமென்பது யாதொரு நூலையும் குறியாது; பலபேர்கள் பற்பல காலங்களில் கண்டு கொண்ட ஆத்மஞான விதிகள் நிறைந்த பொக்கிஷம் என்பதே அவன் கருத்து. பொருள்களின் ஆகர்ஷண சக்திக்குரிய நிந்திய ஸம்பந்த விதையானது மனிதரால்

கண்டு பிடிக்கப்படுமுன் இருந்ததோடுகூட, அவரால் இனி மறந்துவிடப்படினும் எப்படி இருந்துகொண்டேயிருக்குமோ, அப்படியே ஆத்மஞானத்துக்குரிய விதிகளும் இருப்பவையாம். ஜீவாத்மாக்களுள் ஒன்றற்கும் மற்றொன்றற்கும், அந்த ஜீவாத்மாக்களுக்கும் அவற்றின் பிதாவான பரமாத்மாவிற்கும் உள்ள நீதி தர்ம ஞான ஸம்பந்தங்களும் நாம் கண்டு பிடித்ததற்கு முன்னும் இருந்தன; இனி நாம் மறந்துவிட்டாலும் இருப்பனவாம்.

"இவ் விதிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கு ரிஷிகள் என்று பெயர். அவர்களை நாங்கள் பரிபூரண ஞானஸித்தியடைந்த பெரியோரென்று மதிக்கின்றோம்" என்றும்,

"பாதகண்டத்தில் அநேகேசுவர ஆராதனை என்பதே கிடையாதென்று தொடக்கத்திலேயே நான் உங்களுக்குச் சொல்லிவிடலாம். பிரதி தேவாலயத்திலும் அர்ச்சகர்களும் ஸ்வாமி தரிசனம் செய்ய வருவோர்களும் கடவுளுக்குரிய ஸர்வ வ்யாபகத்வம் முதலிய ஸகச லக்ஷணங்களையும் அங்குள்ள தேவ விக்கிரஹங்களின் விஷயத்தில் ஆரோபித்துத் தியானம் செய்வது ஸமீபத்தில் நின்று கவனிக்கும் எவருக்கும் இனிது விளங்கும்" என்றும், மனிதர்களின் மனது ஓரளவுக்குட்பட்ட கண்டப் பொருளானதால் உருவமற்ற நிர்க்குணப் பொருளைப் பாவிப்பது அதனால் முடியாதென்றும், ஞானத்தால் அடையப்படுவதாகிய துக்கநிவிர்த்தியும் ஆநந்த ப்ராப்தியும் கைகூடும் வரையில் அதற்குச் சாதனமான பிரதீகோ

பாஸ்தி எனப்படும் ஸகுணோபாஸனையே சிறந்தவழி யென்றும் சொல்லி அதைப் பின் வருமாறு விளக்கினர்.

"கிறிஸ்தவன் ஏன் 'சர்ச்'சுக்குப் போகவேண்டும்? 'சிலுவை'யை ஏன் பரிசுத்தமெனப் பாவிக்கவேண்டும்? பிரார்த்தனை புரியும்போது ஏன் முகத்தை ஆகாசத்தை நோக்கித் திருப்பிக்கொள்ளவேண்டும்? ரோமன் காதலிக் மதத்தாரின் ஆலயத்தில் அத்தனைப் பிரதிமைகள் இருப்பானேன்? 'ப்ரோடெஸ்டாண்ட்' கிறிஸ்தவர்கள் பிரார்த்தனை செய்யும்போது அவர்கள் மனத்தில் அத்தனை மூர்த்தி பாவனைகள் ஏன் இருக்கவேண்டும்? ஸோதரர்களே! நாம் மூச்சுவிடாமல் உயிருட னிருக்க எவ்விதம் முடியாதோ, அவ்விதமாகவே நாம் சிந்திக்கும் காலத்திலும் ஜடவஸ்துவின் ரூபபாவனை யின்றி எதைப்பற்றியும் சிந்திக்க முடியாது. நினைப்பை எழுப்புகிற "பாவநஸம்யோக நியமம்" எனும் சேர்க்கை முறையால் ஜடவஸ்துவின் ரூபவிசேஷம் மனோபாவத்தின் நினைவையும், மனோபாவம் ஜடவஸ்துவின் ரூப விசேஷத்தினது நினைவையும் உண்டாக்குகின்றன. 'ஸர்வ வ்யாபகத்வம்' என்பது அநேகமாய் உலகத்திலுள்ள அனைவருக்கும் பொருளற்ற வெறுஞ் சொல்லாகவே இருக்கிறது. கடவுளுக்கு மேற்பரப்பு என்பது உண்டோ? இல்லையெனில், ஸர்வ வ்யாபகத்வம் என்கிற பதத்தை நாம் சொல்லும்போது விஸ்தாரமாயுள்ள இப் பூமியைப்பற்றிய நினைவைத் தவிர வேறொன்றும் நம் மனத்தில் உண்டாவதில்லை யல்லவா?" என்றும்.

"விருக்ஷத்தின் குணதோஷங்களை அதன் பழத்தின் தன்மையால் அறியலாம். விக்ரஹத் தொழும்பரென்று இகழப்படுவோருள் நல்லொழுக்கத்திலும் ஆத்மஞானத்திலும் தெய்வ பக்தியிலும் சிறந்த பெரியோர்களை நான் பார்த்திருக்கையில், விக்ரஹாராதனம் பாவச்செயலாயின், 'பாவத்தினின்றும் பரிசுத்தம் பிறக்குமா?' என்று யோசிக்கவேண்டி யிருக்கின்றது" என்றும் பிரசங்கித்தார்.

சிகாகோ நகரத்து ஸர்வமத மஹா சபையின்முன் நமது சுவாமிகள் செய்த இந்துமத பிரஸங்கம் ஸர்வோத்கிருஷ்டமாய் முடிந்த சங்கதி யாவரும் நன்கறிந்த விஷயமே. அது ஸகல மதங்களின் எதிரிலே வேதாந்த ஸித்தாந்தத்தின் வெற்றியைப் பகிரங்கமாய் முழக்கியது. அவர் பிரசங்கித்த ஸித்தாந்தங்களின் கம்பீரமான ஸமரஸத்தன்மையும், புருஷர்களும் கண்டு மோகிக்கத்தக்க அவரது ரூப ஸௌந்தரியத்தின் அற்புதமான வசீகர சக்தியும் ஒன்று சேரவே, அவர்மேல் பிரீதி கொள்ளாமலும், அவரது பிரசங்கங்களின் உண்மையைக் கண்டு ஆநந்திக்காமலும் இருக்க அவரது விரோதிகளால்கூட முடியவில்லை. நியூ யார்க் தூதன் (New York Herald) என்கிற பத்திரிகை அச்சமயத்தில் இவ்வாறு கூறிற்று: "ஸர்வமத மஹா ஸபையில்வந்து பேசியவர்களுள் விவேகாநந்தரே மிகச் சிறந்தவர் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவர் பேசியதைக் கேட்டபிறகு, இப்படிப்பட்ட கல்வித் தேர்ச்சியுள்ள இந்து தேசவாஸிகளிடம் பாதிரிகளை

யனுப்புவது எவ்வளவு மூடத்தனம் என்று தோன்று கிறது!"

விவேகாநந்த ஸ்வாமிகள் செய்த பிரஸங்கமானது அமெரிக்கா கண்டத்து வாஸிகளின் மனத்தில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்துள தென்பதை இதைப் படிக்கும் நண்பர்களுக்கு விளக்கும்பொருட்டு அந்நாட்டின் பத்திரிகைகளினின்றும் வேறு சில அபிப்பிராயங்களையும் இங்கே எடுத்துரைக்கின்றோம்:—"மதசபைக்கு வந்த விசேஷமான புருஷர்களுக்குள்ளே இந்து சாஸ்திர பாரங்கதரும் மஹா வித்வானுமாகிய 'ப்ரொபஸர்' விவேகாநந்த ஸ்வாமிகள் ஒருவர். அவர் செய்த பிரஸங்கம் அந்த ஸபையைத் தன் வசமாக்கிப் பிடித்துக்கொண்ட தென்னலாம். ஒவ்வொரு கிறிஸ்தவ 'சர்ச்'சிலிருந்தும் 'பிஷப்பு'களும் உபதேசியார்களும் அங்கு வந்திருந்தார்கள் அவர்கள் யாவரும் இந்தப் பிரசங்கமாகிய வஜ்ராயுதத்தின்முன் நிற்கமாட்டாது விழுந்துவிட்டார்கள். அவரது தங்கநிறமான முகமண்டலத்தில் பிரகாசிக்கும் சூரிய புத்தியும், வாக்கு வல்லமையும், மேன்மை தங்கிய தம் புராதன மதத்தின் சிறப்புகளை யெடுத்து வர்ணிக்கையில் அவர் பேசிய அற்புதமான இங்கிலிஷும் ஒன்றுகூடி அச் சபையோரின் மனத்தில் இந்துமதத்தின் ஞாபகம் என்றென்றைக்கும் அழியாமல் ஆழமாய்ப் பதியுமாறு நாட்டின."

போஸ்டன் ஈவினிங் ட்ராங்ஸ்க்ரிப்ட் என்னும் பத்திரிகை 1894ஹு ஏப்ரல்மீ 5உயில் கூறியது வருமாறு:—"அவர்

உண்மையாகவே ஒரு மஹா புருஷன்; அவர் கப்பீரமாயும், ஆடம்பர மின்றியும், நிஷ்கபடமாயும் இருப்பதன்றி, நம் நாட்டுப் பண்டிதர்களுடன் ஒப்பிட்டுக் கூற முடியாதபடி அவ்வளவு அபாரமான கல்வித் தேர்ச்சி யுள்ளவராயும் விளங்குகின்றார்.

ஹார்வார்ட் (Harward) நகரத்துப் பண்டித ரொருவர் ஸர்வமத ஸபையின் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில், 'அவரது பாண்டித்தியம் நம் அனைவருடைய திரண்ட கல்வித் தேர்ச்சியையும் மிஞ்சி நிற்கின்றது' என்று கூறியுள்ளார்.

ந்யூ யார்க் க்ரிடிக் (The New York Critic) என்னும் பத்திரிகை பின்வருமாறு கூறியது:—"ஸர்வமத ஸபையிலே மிக்க மனோஹரமாய் விளங்கிய மூர்த்தி விவேகாநந்த ஸ்வாமியே. அச் சபையின் தாற்பரியத்தை இந்த இந்து ஸந்ந்யாஸி எடுத்து விளக்கியதுபோல் அவ்வளவு தெளிவாய் வேறெவரும் விளக்கிக் காட்டவில்லை. அவரைத் தேவாம்சத்தாற் பிறந்த விசேஷ வாசாலகர் என்று சொல்லவேண்டும்."

கல்கத்தாவிலுள்ள மஹா போதி சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீயத் தர்மபாலர் என்கிற பௌத்தர் 1894ஞ ஏப்ரல்மீ 12உயில் இந்தியன் மிர்றர் பத்திரிகைக்குப் பின் வருமாறு எழுதினார்:—

"சிகாகோ பட்டணவீதிகளிலே விவேகாநந்த ஸ்வாமிகளின் பூர்ணரூப படங்கள் மாட்டப்பட்டுத் தொங்குகின்

றன. அப் படங்களின் கீழ் "விவேகாநந்த பதி" என்று வரையப்பட் டிருக்கிறது. அவற்றை ஆயிரக்கணக்கான எல்லா வகுப்பு ஜனங்களும மிகுந்த பயபக்தியுடன் வணங்கிச் செல்கின்றார்கள்."

ஸர்வமத மஹா ஸபையின் காரியங்கள் முற்றுப்பெற்றபின், முன் சென்னையில் நடந்த விதமே அமெரிக்காவிலும் நடந்தது. பற்பல விடங்களிலிருந்தும் அங்கு வந்திருந்த பற்பல மதப்பிரதிநிதிகளும், சபை முடிந்தவுடன் தத்தம் இடங்களுக்குப் போய்விட, சுவாமிகளையோ அவரது சக்தியைக் கண்டு வியந்த பலரும் சூழ்ந்து உபசரித்து இன்னும் அநேக பிரசங்கம் செய்யும்படி வேண்ட, அவர்களுடன் அவர் பற்பல விடங்களிலும் போய்ப் பிரசங்கம் செய்யும்பொருட்டுப் பிரயாணமானார், வரவர, அவரைக் கண்டு வியந்தவர்கள் எல்லோரும் அவரது சிஷ்யர்களாயினர். ஆங்காங்குள்ள பண்டித சங்கங்கள் தத்தம் சபைகளிலே வந்து பிரசங்கம் புரியுமாறு அவரை வரவழைத்துபசரிப்பதில் போட்டிப்போட்டு நின்றன. நம் மதத்தை அமெரிகாவில் பிரசங்கிக்கும் விஷயத்திலே அவர் இரண்டு வருஷகாலம் இடைவிடாமல் பிரயாசைப்பட்டார். தினந்தோறும் இரண்டு வேளைகளிலும் பிரசங்கித்தல், கடிதமூலமாய் விஷய விசாரணை செய்யும் பலருக்கும் உத்தரம் எழுதுதல், தம்மைக் காண வருபவருடன் சம்பாஷித்தல், தனியே வந்து கேட்பவருக்கு வேதாந்தபாடஞ் சொல்லுதல், சிஷ்யர்களின் உபயோகத்திற்காக வேதாந்த விஷயமான நூல்களை எழுதிப் பிரசுரித்தலாகிய காரியங்க-

ருக்கே உதய முதல் இரவில் வெகுநேரம் வரையில் அவருக்கு வேலை பூர்த்தியா யிருந்தது. ஆன்மநேசாதிக ளிடத்தே அவருக்கிருந்த அபாரகருணையால் போஷிக்கப் பெற்ற அவரது ஸ்திரமான சங்கல்பம் மாத்திரம அவர் மேற்கொண்ட கடினமான வேலையை உற்சாகமாய் நடத்து வதற்கு வேண்டிய வல்லமையை அவருக்கு அளித்திராவி டின், இரும்பை யொத்த அவரது தேகங்கூட வெகு காலத்துக்கு முன்னுகவே, தளர்ந்து விழுந்துபோ யிருக்க வேண்டும். அவர் இவ்வாறு உழைக்கத் தொடங்கி ஒரு வருஷம் முடிவதற்குள்ளாகவே, அவருக்கு இருவர் பஹி ரங்கமாய்ச் சிஷ்யராணுர்கள். அவர்கள் மேரி லூய்ஸி என்ற மஹா பண்டிதையாகிய ப்ரெஞ்சு ஜாதிஸ்திரீயும், லியோன் ஸாண்ட்ஸ்பேர்க் (Leon Sandsberg) என்ற ருஷிய யூதனுமாம். இவர்களுள், லூய்ஷி என்பவள் ந்யூயார்க்கு நகரத்திலே நிலையாய் வாசஞ் செய்யவந்து அப்பொழுது 25 வருஷங்களுக்கு மேல் ஆயிற்று. அவள், பத்திரிகைக ளில் உபயோகமான விஷயங்கள் எழுதியும் பஹிரங்கத் தில் பிரசங்கம் செய்தும் பிரசித்திபெற்றவள். லியோன் ஸாண்ட்ஸ்பர்க் என்பவன் ஒரு பேர்போன சமாசார பத்தி ரிகை ஆபீசில் பத்திரிகைக்கு விஷயம் எழுதும் வேலை பார்த்துப் பிரசித்தி பெற்றவன். இவ்விருவரும் சுவாமிக ளின் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டு முறையே அபயா நந்த ஸ்வாமி, கிருபாநந்த ஸ்வாமி யென்றே நாமம் சூட்டப் பெற்றூர்கள்.

இந்தியாவி லுள்ளவர்க ளெல்லோரும் அஞ்ஞானிக ளென்று அமெரிக்கர்களுக்குச் சொல்லி அவர்களிடத்தி லிருந்து பணம் பெற்று இந்தியர்களைக் கிறிஸ்தவர்களாக் கும்பொருட்டு வரும் பாதிரிகளின் ஜனம தேசத்தின்ள கிறிஸ்து குருமார்கூடத் தங்கள் பிரசங்க மேடையின்மீது வந்து உபந்யாஸம் செய்யும்படி சுவாமிகளைக் கேட்டுக் கொண்டார்கள். அன்றியும், அமெரிக்காவின் பிரதான பட்டணங்களில் எல்லாம் சுவாமிகளை வரவழைத்து அநேக பிரபுக்களும் பெருமாட்டிகளும் வகுப்பாய் அமை ந்து நம் மதத்தின் உண்மைகளைப் பிரசங்க ரூபமாய்க் கேட்கலானார்கள் அச் சமயங்களில் சிற்சில பாதிரிகள் துரபிமானத்தால் கேட்ட கேள்விகளை யெல்லாம் உடனுக் குடனே சுவாமிகள் நமது ஸநாதந தர்மமெனும் ஞாந வாளாயுதத்தால் கண்டித்துத் துர்மத வாதிகளை வென்று, சிரத்தையுள்ள பலருக்கும் உண்மையை உபதேசித்த காலையில், ஆயிரக் கணக்கானவர்கள் அவருக்கு சிஷ்ய ரானார்கள், ஸ்வாமிகள் ஒரு சபையை விட்டுச் செல்லும் போதும், வேறு சபைக்கு வரும்போதும் ஜனங்கள் ஆநந் தத்தாற் கரகோஷம் செய்வார்கள். சுவாமிகளுடைய உபந் யாஸங்களைக் கேட்க ஆவலாய்ப் போகும் ஸ்திரீ புருஷர்க ளுட் பலரும் தம் தொப்பிகளை யிழந்தும் உடுப்புகள் அழுக்காகிக் கிழியப்பெற்றும், அதை யெல்லாம் பாராட் டாமல் சுவாமிகளை ஒரு முறையேனும் கண்டு அவரது வசநாமிருதத்தைப் பானம் பண்ணினால் தம் பிறவி புனித மாகும் என்றெண்ணி ஆநந்த மடைந்தார்கள்ளாம்.

சுவாமிகள் இவ்வாறு அமெரிக்காவில் பற்பல விடங்களிலும் வேதாந்த ப்ரஸங்கம் செய்ததன்றியும், ந்யூயார்க் நகரததிலே உண்மையை யறிய ஆவல் கொண்ட ஜிஜ்ஞாஸுக்களான ஸ்திரீ புருஷர்களுக்கு ஜ்ஞாந, பக்தி, கர்ம, ராஜ யோகங்களைப் போதிப்பதற்காக வேதாந்த வகுப்புகள் ஏற்படுத்தி அங்கும் உபந்யாஸங்கள் செய்தார். இவ்வளவு சிரத்தையுடன் அவர் உழைத்து உபந்யாசஞ் செய்ததின் பயனாக, கிறிஸ்துவின் மெய்யடியார்களின் உள்ளங்களிலே அவரது உபதேசம் வேரூன்றலும், அது காரணமாக அமெரிகாகண்ட வாஸிகளுக்கு வேதாந்த ஸித்தாந்தத்தைப் போதிப்பதற்காக ந்யூ யார்க் நகரத்திலே ஒரு வேதாந்த ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

---

## III

*ஸ்வாமிகள் புகழைக் கேட்ட ஹிந்துக்கள் இந்தியாவிலே ஆங்காங்கு சபை கூடி அவருக்கு வந்தன பத்திரங்கள் அனுப்புதல்—சுவாமிகளின் பெருமையைப்பற்றி* **பாரோஸ் மேரி ஸ்நேல்** *என்னும் அமெரிக்க பண்டிதர்கள் வரைந்து விடுத்த நிருபங்கள்—சுவாமிகள் சென்னை வாஸிகளின் வந்தன பத்திரத்துக்கு அளித்த உத்தரம்—ஸ்வாமிகள் கேத்ரி மஹாராஜாவுக்கு எழுதிய நிருபம்.*

அமெரிக்காவிற் கூடிய ஸர்வமத மஹா ஸபையில் சுவாமிகளுக்கு ஸித்தித்த வெற்றியைக் கேட்டுக் களித்த ஹிந்துக்கள், இந்தியாவிலுள்ள பிரதான நகரங்களிலே சபைகள் கூட்டி, அவர் முடித்த பெருங் காரியத்தைப் பற்றி நம்மவர்களுக்குப் பிரசங்கஞ் செய்து அதன் காரண

மாக சுவாமிகளைப்பற்றி மெய்யன்புடன் புகழ்ந்து பேசிச் செய்த தீர்மானங்களை அவருக்கும் ஸர்வமத ஸபையின் அக்கிராஸநாதிபதியாகிய பாரோஸ் துரைக்கும் நிருபமூல மாய்த் தெரிவித்தனர்,

அவ்வாறு விவேகாநந்த சுவாமிகளையும் அமெரிகா கண்டத்தாரையும் கௌரவப்படுத்தும் பொருட்டு கல் கத்தாவிலே 1894ஸ் செப்டம்பர்மீ 5உயில் கூடிய மஹா ஸபையின் அக்கிராசநாதிபதிக்குச் 'சிகாகோ' ஸர்வ மத ஸபையின் அதிபதியினின்று பின்வரும் நிருபம் வந்தது;—

2957, இந்தியானு அவெந்யு,
சிகாகோ, 1894ஸ் அக்டோபர்மீ 12உ

ராஜாபியாரி மோஹந முகர்ஜி, ஸி.எஸ்.ஐ., அவர் கட்கு, என் அன்பார்ந்த ஐயா,

கல்கத்தா நகர மண்டபத்தில் கூடிய மஹாசபையிற் செய்யப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய, செப்டம்பர்மீ 10உ யுள்ள தங்கள் கருணை நிரம்பிய கடிதம் இப் பொழுது தான் வரப் பெற்றேன். தங்கள் நிருபத்தாலும் தீர்மானங்களாலும் வெளியாகும் கருணையானது என்னை மிகவும் கௌரவிக்கின்றது. தங்கள் நண்பராகிய விவேகா நந்த சுவாமிகள் ஸர்வமத ஸபையிலே அதிக அன்பாய் உபசரிக்கப் பெற்றார். அவர் அனைவர் உள்ளத்தையும் கவ ரத்தக்க வாக் சாதுரியமும் வடிவழகும் வாய்ந்தவர். மத ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற ஆவலையும் அக்

கறையையும் எல்லாருடைய உள்ளங்களிலும் எழுப்பி யிருக்கிறார். இந்நாட்டுக்கு இவர் வந்ததின் பயனாக எங்கள் முக்கியமான சர்வ கலாசாலைகளிலே மத விசாரம் செய்வதற்கான உபந்யாஸக ஸ்தாநங்களும் உபாத்தியாயஸ்தானங்களும் ஏற்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். இந்தியாவின் விஷயத்தில் அமெரிகா நாட்டு ஜனங்களின் உள்ளத்தில் ஆழ்ந்த நன்றி யறிதலோடு கூடிய அன்பு குடிகொண்டிருக்கிறது. உங்களது ப்ராசீனமாகிய பரிசுத்த சாஸ்திரங்களினின்று நாங்கள் பெறவேண்டிய அம்சம் அதிகமா யிருக்கின்றன வென்றும், கிறிஸ்துநாதரின் சுவிசேஷத்திலிருந்து உற்பத்தியான நாகரிகத்திலும் நாங்கள் அதிகமாய்க் கொடுக்கவேண்டியிருக்கிற தென்றும் பக்தி பூர்வகமாய் நம்புகின்றோம். உங்களது மஹா சபையில் செய்யப்பட்ட தீர்மானங்களை ஸங்கல்பித்தவர்களுக்கும் ஆமோதித்தவர்களுக்கும் போஷித்தவர்களுக்கும் என்னுடைய வந்தனங்களைச் சொல்லும்படி கேட்டுக்கொள்வதுடன், வெகு சமீப காலத்திலேயே உங்கள் அற்புதமான நாட்டை வந்து பார்க்க ஆசைகொண்டிருக்கும்.

தங்கள் நன்றியறிதலுள்ள விதேயன்,
(ஒப்பம்) ஜான் ஹென்றி பாரோஸ்.

சிகாகோ நகரத்திற் கூடிய ஸர்வமத மஹா ஸபையில் என்ன ஸித்தாந்தம் செய்யப்படுமோ வென்பதை அறியப் பலர் ஆவலாய் இருந்தனர். பல நாடுகளினின்றும் அம்

மஹா ஸபைக்குச் சென்று தத்தம் மதச் சிறப்பெடுத்துப் பிரசங்கித்தவர்களின் சமயக் கொள்கைகளை யெல்லாம் கேட்டுச் சீர்தூக்கியவரும், ஸர்வமத மஹா ஸபையின் விஞ்ஞானசாகைக்கு (Scientific Section) அக்கிராஸநாதிபதியுமான மிஸ்டர் மெர்வின் மேரி ஸ்நெல் துரையவர்கள் அல்லஹாபாத்தில் பிரசுரமாகும் பயனிர் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் அம் மஹா சபையின் முடிவான கருத்து இன்னதென்பதைத் தெளிவாய் விளக்கியிருக்கின்றமையால், அக் கடிதத்தை அப்படியே மொழி பெயர்த்து அடியில் வரைகின்றோம்:—

"சென்ற செப்டம்பர் மாசத்திலே சிகாகோ பட்டணத்திற் கூடிய ஸர்வமத ஸபையானது அநேக காரணங்களால் ஒரு பெரிய காரிய நிகழ்ச்சியின் அறிகுறியென விளங்குகின்றது. அதனால் விளைந்த முக்கியமான பிரயோஜனங்களில் ஒன்று என்னவெனில், அது கிறிஸ்தவ பிரபஞ்சத்திற்கு ஒரு அரிய பெரிய விஷயத்தைத் தெரிவித்தது. அஃதென்னவெனில், கிறிஸ்து மதத்தைவிட அதிக கௌரவத்திற் குரிய வேறு மதங்கள் இருக்கின்றனவென்றும், அவை ஆழ்ந்த தத்துவ ஆராய்ச்சியிலும், ஆத்யாத்மிக மேன்மையிலும், சுதந்தர சிந்தனா சக்தியிலும், ஸத்தியமான ஸர்வஜநாநுதாபச் சிறப்பிலும் கிறிஸ்து மதத்துக்கு மேல் நிற்பதுடன், அறநெறி யழகிலும் ஆக்மலாபத்தை அடைவிக்கும் திறத்திலும் அதற் கணுவளவேனும் தாழாதவை யென்றும் எடுத்துக் காட்டியது.

கிறிஸ்து மதத்திற்கு அந்நியமான அஷ்ட மஹா மதங்களைப்பற்றிப் பிரஸங்கங்கள் நடந்தன. அவையாவன: இந்து மதம், ஜைநமதம், புத்தமதம், யூதமதம், (சீனதேசத்து) கான்பியூஷியமதம், ஜபான்தேசத்து ஷிந்தோமதம், முகம்மதியமதம், பார்ஸிகளின் மதமாகிய மஜ்தேயமதம்.

"ஸர்வமத ஸபையிலுள்ளோர் உள்ளங்களிலும் அமெரிக்கா நாட்டாரின் உள்ளங்களிலும் இந்து மதத்தைப் போல் மறறெறம்மதமும் அவ்வளவு ஆழமாய் ஊன்றிப் பதியவில்லை."

"இந்து மதத்தைப் பற்றிப் பிரசங்கித்தவர்களில் விவேகாநந்த சுவாமிகளே முக்கியமானவர். அவர்தாம் ஸர்வமத ஸபையில் அனைவராலும் கொண்டாடப் பெற்றவர் என்பதிலும், அதிக செல்வாக்கு உள்ளவர் என்பதிலும் கிஞ்சித்தும் ஸம்சயமில்லை. அவர் ஸர்வமத ஸபையின் மண்டபத்திலும், என்னுடைய அக்கிராஸநாதிபத்தியத்தின் கீழ் நடந்த விஞ்ஞாந சாகையின் சபைகளிலும் அடிக்கடி பேசினார். அவ்வெல்லாச் சமயங்களிலும் கிறிஸ்தவர்களும மற்றவர்களும் அவரையே மற்றெல்லாரையும்விட அதிக உற்சாகத்துடன் உபசரித்துக் கொண்டாடினார்கள். அவர் சென்ற விடங்களிலெல்லாம் அவரை ஜனங்கள் சூழ்ந்துகொண்டு, அவர் வாயினின்றும பிறக்கும் ஒவ்வொரு சொல்லையும் கேட்க ஆவல்கொண் டிருந்தார்கள், ஸர்வமத ஸபை முடிந்த பின்பு அவர் ஐக்கிய மாகாணங்களின் முக்கிய பட்டணங்களிலே பெரிய சபைக

ளின் முன் பிரஸங்கங்கள் புரிந்துகொண்டு, சென்ற விடங்களிலெல்லாம் சிறப்பாய் எதிர்கொண்டு உபசரிக்கப்பெற்று வருகிறார். அவரைக் கிறிஸ்தவ ஆலயங்களிலுள்ள பிரசங்க பீடத்தின்மே லிருந்து உபந்யஸிக்கும்படி பலமுறையும் பிரார்த்தித்து அழைக்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட ஸந்தர்ப்பங்களில் எல்லாம், அவரை யொருமுறை பேசக் கேட்டிருப்பவர்களும் அவரை நேரே தெரிந்த நண்பர்களும் எப்போதும் அவரை யதிகமாய்க் கொண்டாடிப் புகழ்ந்துவருகிறார்கள். மிக்க அழுத்தமுள்ள கிறிஸ்தவர்கள்கூட "உள்ளபடியே இவர் மனிதருக்குள்ளே ஒரு ராஜகுமாரர்" என்கிறார்கள்.

"அமெரிக்கா நாடானது ஆத்யாத்மிக பசிப்பிணியால் வருந்துகின்றது; அது செல்வத்தில் மேம்பாடு அடைந் திருப்பினும், அந்நாட்டின் உயர் வகுப்பினர் அஞ்ஞாநத்தில் மூழ்கிப் பிறர் க்ஷேமத்தைக் கருதாது தந் நலத்தையே பாராட்டியிருப்பினும், அந்நாட்டின் தாழ்ந்த வகுப்பினர் மிருகத் தன்மையரா யிருப்பினும், உத்தம புருஷார்த்தங்களை யடைய அவாகொண்டவர் பலர் அந் நாட்டின் பல இடங்களிலும் சிதறுண் டிருக்கின்றார்கள். ஆத்யாத்ம விஷயங்களிலே ஐரோப்பாகண்டம் இந்தியாவுக்கு எப்போதுமே கடன்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ தேசங்களிலேயுள்ள உத்தம ஸித்தாந்தங்களிலே ஹிந்து மதத்தின் மூலமாய் வாராதவை வெகு சொற்பமென்றே சொல்லலாம்.

"ஆகவே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிக கல்வித் தேர்ச்சி பெற்ற ஆடவரும் பெண்டிரும் ஞானப்ரகாசத்துக்கு முக்கிய மூலகாரணமாகிய இந்து மதத்தையே அநுகூலமான சமயம் வாய்க்கும்பொழுதெல்லாம் சாதாரணமாய் நாடுகின்றார்கள். முக்கியமாய் ஐக்கிய மாகாணங்களில் அநேக செல்வாக்குள்ள மஹா ஸபைகள் வெளிப்படையாய் இந்துமதச் சார்பாய்க் கிளம்பியிருக்கின்றன. விஞ்ஞான நூலார் அனைவரும் அத்வைத தாற்பரியமுள்ளவர்களாயிருப்பது மாத்திரமன்றி, கிறிஸ்தவ விஞ்ஞான நூலோர் எனப்படுவோர்கூட வேதாந்த தர்சனத்தையே ஆதாரமாகக் கொண்டவர்களென்பதில் சிறிதேனும் ஸம்சயமில்லை.

"இந்நாட்டில் இதுவரையில் ஹிந்துமதச் சார்பாயிருந்த அம்சங்களெல்லாம் விவேகாநந்த ஸ்வாமிகளின் முயற்சியால் அதிக பலமடைந்து வருகின்றன. இக்காலத்தில் ஆங்கில நூலாசிரியர்கள் தம் மனம் போனபடியெல்லாம் ஹிந்து மதத்தைப்பற்றிச் சொல்லியிருப்பது சர்வ சாதாரணமாய் அனைவருக்குந் தெரிந்திருப்பினும், இவரைப்போல் சுத்தமான ஹிந்துமதத்தைப் பிரமாணபூர்வமாய் எடுத்து அமெரிக்கர்களுக்கும் பிரஸங்கித்தவர்கள் எவரும் இலர். ஆகவே ஸ்வாமிகள் இந்நாட்டைவிட்டுத் தம் ஜந்மதேசம் போனபின் அமெரிக்கர் இவரது பிரிவை சஹிக்கமுடியாமல் வருந்துவாரென்பது திண்ணம். அன்றியும், இவர் இனி எப்பொழுது திரும்பிவந்து நம் கண்

களின் கலியைத் தீர்ப்பார் என்றும், இவரது மதுரமான பிரசங்காமிருதத்தைப் பருகும் பாக்கியம் கிடைப்பது இனி எக்காலமென்றும், ஸ்ரீ சங்கராசார்ய ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த இவரைப்போன்ற மற்ற மஹான்களும் இந் நாட்டுக்கு விஜயஞ் செய்து எம்மை அநுக்ரஹிக்கும் நாள் என்நாளென்றும் பேராவலுடன் காதலித்து எதிர்பார்த்திருப்பாரென்பதிலும் ஐயமில்லை.

"புரோடெஸ்டாண்டு கிறிஸ்துமதத்தில் அழுத்தமான பற்றுள்ள வெகுசிலர் மாத்திரமே ஸ்வாமிகளுக்குண்டான வெற்றியைக் கண்டு சஹியாது அவரைக் கண்டிக்கவேண்டுமென்கிற கருத்துடன் அவருடன் வாதந்தொடர எழுந்தனர். ஆனால், அவர்களது பொறாமையும் பகைமையுங்கூட பாரதவர்ஷத்திலிருந்து வந்த காஷாய வஸ்திரதாரியாகிய நமது யதீந்திரரிடம என்றும் மாறாது நிலைகொண்டு விளங்கிய சாந்தசீலம், சித்தசுத்தி, கல்விச் சிறப்பு, பெருந்தகைமை, மனோஹரமான மதுரவசனம் முதலிய நற்குணங்களால் வெல்லப்பெற்று வலிகுன்றி நசித்துவிட்டன.

"இப்பேர்ப்பட்ட மாட்சிமை தங்கிய மஹானை அனுப்பியதற்காக இந்தியாவை அமெரிக்கா வந்தித்து விநய பூர்வகமாய்ச் செய்துகொள்ளும் விஞ்ஞாபனம் என்னவெனில்: கபடமற்ற மனோபாவமும் ஸர்வ ஸஹோதரத் தன்மையும் உண்டாவதற்கு ஆதாரமான ஞானத்தை அறிந்துகொள்ளாதிருக்கும் அமெரிக்கருக்குத் தமதொழுக்கத்

திறற் காட்டி உபதேசிப்பதற்கும், அவ் வுபதேசத்தால், 'அங்கிங்கெனுதபடி யெங்கும் ப்ரகாசமாய்' ஒளிரும் ஸர்வாதீதமான ஏகதத்வமாகிய பரப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ஞானத்தை உண்டாக்குவதற்கும், இவரைப்போல் இன்னும் பலரை அனுப்புமாறு பலகாலும் பிரார்த்திக்கின்றோம்: என்பதாம்.''

ஸ்வாமிகளைக் கௌரவிக்கும்பொருட்டு கல்கத்தாவில் நடந்ததுபோலவே சென்னையிலும் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் ஒரு பெரிய சபை கூடியது. அதன்கண் கவுரவ நீதியதிபர் ஸ்ரீ சுப்ரமண்ய அய்யரவர்கள் அக்கிராசனத்தில் வீற்றிருந்து ஸ்வாமிகளைப் புகழ்ந்து சிறந்ததொரு பிரசங்கஞ் செய்ய, அங்கு வந்திருந்த மா-ா-ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர், எம். ஓ பார்த்தசாரதி அய்யங்கார், டி. பி. மதநாத பட்டாசாரியர் முதலிய கனவான்களும் ஸ்வாமிகளின் பெருமையைப்பற்றி வியந்து கூறினர். பிறகு அச்சபையில் நடந்த தீர்மானங்களை ஸ்வாமிகளுக்கு அனுப்பினர்கள். அதற்கு ஸ்வாமிகள் கருணைகூர்ந்து விடுத்த உத்தரம் வருமாறு:—

## சென்னை வாசிகளின் வந்தனோபசார பத்திரத்துக்கு ஸ்வாமிகள் விடுத்த உத்தரம்.

சென்னையிலுள்ள ஸ்நேஹிதர்களே! ஸ்வதேசிகளே! ஸ்வமதஸ்தர்களே!

நமது மதத்துக்காக என்னுற் செய்யப்பட்ட அற்ப கைங்கர்யமானது நீங்கள் அங்கீகரிக்கத் தக்கதா யிருந்த

ளைப்பற்றி நான் மிகவும் களிப்புறுகின்றேன். அங்ஙனம் நான் களிப்புறுவது, தூரமான புறக்தேசத்திலுள்ள என்னைப்பற்றியும் நான் செய்த காரியங்களைப் பற்றியும் நீங்கள் புகழ்ந்திருக்கிறீர்களென்ற காரணம் பற்றியன்று; பின் என்னவெனில், இதர தேசத்தவர் இந்தியாவின்மீது பன்முறை படையெடுத்துச் சுழற்காற்றைப்போல் அதைச் சூறையாடினபோதிலும், அநேக நூற்றாண்டுகளாய் நாம் செய்த பராமுகமும் இதர தேசத்தவர் செய்த அவமானமும் பிராசீன ஆர்யாவர்த்தத்தின் பிரதாபங்களை மங்கலடையச் செய்தபோதிலும், அதைத் தாங்கியிருந்த அநேக உந்நத ஸ்தம்பங்களும் - ரமணீயமான மண்டபங்களும் - வேலைப் பாட்டிலிணையற்ற மாடமாளிகைகளும் - கூடகோபுரங்களும் அநேக ஆண்டுகளாய் நாட்டையழித்த பெருவெள்ளப் பெருக்கில் அடித்துக்கொண்டு போனபோதிலும், அதனுடைய மத்தியப் பிரதேசமானது சிறிதும் பழுதற்றதாயும், ஈப்வர மகிமையையும், ஜீவகாருண்யத்தையும் பிரதிபாதிக்கும் ஸித்தாந்தமாகிய அத்புதமான ஞாபக ஸ்தம்பம் கட்டப்பெற்ற ஆத்யாத்மிக அஸ்திவாரமானது என்றும் போல் வலிமையுள்ளதாயும் அசைவின்றியும் இருக்கின்றதென்பதைக் காட்டுவதற்கு, நீங்கள் அனுப்பிய வந்தனோபசார பத்திரிகை ஓர் அடையாளமாயிருக்கிறதென்னும் காரணம்பற்றியேயாம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது திவ்ய ஆஞ்ஞையை இந்தியாவிற்கும் மற்றும் இம் முழுஉலகத்திற்கும் பகிரங்கப் படுத்தும் பாக்கியம் அவருடைய ஸேவகர்கள் எல்லாரி

னும் வெகு தாழ்ந்தவனான எனக்குக் கிட்டியபடியால், நீங்கள் என்னைச் சிலாகிக்கிறது அவரையே அதிகமாய்ச் சிலாகிக்கிறதாயாகும்.

வெகு சீக்கிரத்தில் இந்தியாவின்மீது தன் பூழு வல்லமையோடும் வெகு மும்முரமாய் மோதி, அதனிடத்தில் பலவீனமாயும் குறைவுள்ளதாயும் இருக்கும் யாவற்றையும் தனது பெரும் பிரவாகத்தில் அடித்துக்கொண்டு, இந்துக்கள் அநேக ஆண்டுகளாய் யாதொரு குறையுங் கூறாது பொறுமையாய் அனுபவித்துவரும் இன்னல்களுக்காக ஓர் கைம்மாறு செய்யககருதி, அவர்கள் பூர்வகாலத்திற்கூட அடைந்திராததும், அவர்களுக்கு நியாயமாய் உரியதுமான உந்நத பதவியில் அவர்களை ஈசுர நியமனத்தின்படி உயர்த்தி வைக்கப்போகிற ஓர் பெருத்த ஆத்யாத்மிக அலையின் மெல்லிய ஒலிகளை அவரிடத்திலும் அவரது திவ்ய ஆஞ்ஞையிலும் கேட்டது உங்கள் மனத்தில் என்றும் குடிகொண்டிருக்கும் பரிசுத்த நினைவன்றோ?

இந்தியாவில் இப்பொழுது பிரவிர்த்தித்திருக்கும் ஸர்வமதக் கொள்கைகளுக்கும் தக்ஷிண தேசமே முக்கிய காரணமாயிருத்தல்பற்றி, வடஇந்தியா ஜனங்களெல்லோரும் உங்களுக்கு மிகுந்த நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவ்வக்காலத்தில் அவதரித்து ஸித்தாந்த ஸ்தாபனஞ் செய்த பெரும் பாஷ்யகாரரும் ஸத்ஸம்பிரதாய பிரவர்த்தக ஆசாரியர்களுமான ஸ்ரீ சங்கர ராமாநுஜ மத்துவர்கள் அவதரித்த ஸ்தானம் தக்ஷிணதேச

மன்றோ! உலகத்திலுள்ள ஒவ்வோர் அத்வைத வாதியும் ஸ்ரீ சங்கர பகவத் பாதருடைய சீர்பாதங்களைத் தன் சிர மேற் கொள்ளுகிறானென்றால் அவரது மகிமையைக் கூறி முடியுமோ? யாவராலும் வெகு இழிவா யெண்ணப்படும் பஞ்சமரையும் தமது பரிசத்தினாலேயே ஆழ்வார்களாக்கும் வல்லமை வாய்ந்த ஸ்ரீமத் ராமாநுஜரின் மகத்துவத்தைக் கூற யார்தான் சக்தர்கள்? இந்தியா முழுவதும் கீர்த்தி பெற்ற உத்தர தேசத்துப் பக்த சிரேஷ்டராகிய ஸ்ரீ கிருஷ்ண சைதந்யரின் சிஷ்யர்களும் ஸ்ரீமத்துவரை ஆசாரியராகக் கொண்டார்களென்றால் அவரது மகிமை என்னென்றுரைவனாற் சொல்லற்பாலதோ? இன்றைக்கும் காசியில் மகிமை யடைபவரில் முதன்மையோர் தக்ஷிண தேசத்தவர்களே, உங்கள் தேசத்துத் துறவிகள் தாம் இமயமலையின் அதியுன்னத சிகரங்களிலுள்ள பரிசுத்த ஸ்தானங்களை ஆளும் தகைமை வாய்ந்திருப்பவர்கள். ஆகையால், இத்தகைய ஆசார்யர்களின் அநுக்ரஹம் பெற்ற நீங்கள், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திவ்ய ஆஞ்ஞையை அநுஸரிப்பதிலும் கொண்டாடுவதிலும் முதன்மையா யிருப்பது ஓராச்சரிய மன்று.

தக்ஷிண தேசமானது வேதாந்தியபாநத்திற்கு முக்கிய ஸ்தானமா யிருந்துவருகிறது. இன்னும் அநேகருக்கு இவ் வேதங்களின் ஞானமே கிடையாதென்று மீண்டும்மீண்டும் அநேகர் மொழிந்தபோதிலும், இந்து மதத்தின் எல்லா உட் பிரிவுகளுக்கும் பிரமாணமா யிருப்பவை சுருதிகளே என்று உறுதியாய் மொழிவேன்.

வேதத்தினுடைய ஸம்ஹிதையும், ப்ராஹ்மணங்களும் மனித தத்துவநூலோர்க்கும் பாஷாதத்துவ நூலோர்க்கும் எவ்வளவு முக்கியமா யிருந்த போதிலும், "அக்நிமீடே" "இஷேத்வோர்ஜே த்வா" "ஸந்நோ தேவீரபிஷ்டயே" என்னும் மந்திரங்களும் மற்றுமுள்ள வேத பாகங்களும், யாகங்களும், பலிகளும் பயக்கும் பலன் எவ்வளவு கமநீயமா யிருந்தபோதிலும், அவைகளெல்லாம் போகத்திற்காகக் கொள்ளப்பட்டனவேயன்றி, அவைமோக்ஷம் பயக்குமென்று ஒருவரும் எப்பொழுதும் வாதிடவில்லை. உண்மையாய் ஞானகாண்டமும், ஆரணியங்களும், மோக்ஷமார்க்கத்தைப் பிரதிபாதிக்கும் சுருதிகளுந்தான் இந்தியாவில் என்றும் பிரமாணமாகக் கொள்ளப் படுவன.

ஸநாதந தர்மமாகிய இந்துமதத்தின் உட்பிரிவுகளைக் கண்டு கலங்கி வழி தடுமாறியும், தான் பிரதிபாதிக்கிற "அணோரணீயாந், மஹதோமஹீயாந்" * ஆன கடவுளின் பிரதிபிம்பத்தையே தனது ஸர்வஸாதாரண இயல்பாகக் கொண்ட உத்தமமான ஒரே மதத்தின் பொருளைக் கிரகிக்கச் சக்தியற்றும், கொழுத்த நாஸ்திகத்தைத் தவிர வேறெதனையும் கனவிலும் கண்டறியாத ஜாதியாரிடமிருந்து இரவலாகக் கொண்ட பரிபாயமத வுண்மையின் சகாயத்தால் இருட்டில் வழி தெரியாமலும் அலைகிற தற்காலத்து இந்து வாலிபன், தனது முன்னோர்களுடைய மதத்தை அறிந்துகொள்வதற்கு வீணாக மன்றாடி, பின்னர்

---

* (இவர்) அணுவினும் சிறியன், மஹத்தினும் பெரியன்.

அந்த நாட்டத்தை அடியோடு விட்டுவிட்டுத், தீராத நாஸ்தி காதமனாக ஆய்விடுகிறான்; அல்லது, தன் இயல்பான தர்ம்ம சுபாவத்தின் தூண்டுதல்களினால் நாஸ்திகத்தில் வெகுநாள் தழைத்திருக்கச் சக்தியற்றுக், கீழ்த்திசைச்சுவை அமைந்த மேற்றிசை நாஸ்திகத்தின் பலவகைப்பட்ட கஷாயங்களைச் சிறிதும் யோசனையின்றிப் பானஞ்செய்து பின்வரும் சுருதியின் தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றுகின்றான்.

"பரியந்தி மூ஢ா அந்தேனைவ நீயமாநா யதாந்தா:"

"குருடன் பின் செல்லும் குருடர்போல் மூடர் போகின்றனர்."

பிராண ப்ரதமான ஸத்குருவின் ஸ்பர்ச மகிமையால் உயிர்ப்பிக்கப்பட்ட ஆத்ம வியல்பினையுடையோர் மாத்திரமே தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

"துர்லபம் த்ரயமேவைதத் தேவாநுக்ரஹ ஹேதுகம்
மநுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ஸ்ரய:"

"மானிடப் பிறவியும், அதிலும் வீடுபெற வேண்டுமென்னும் விருப்பமும், அதிலும் மஹா புருஷனுடைய கூட்டுறவும் ஆகிய இம்மூன்றும் ஈசனருளின்றி எளிதிற் கிட்டா." என்று பகவான் பாஷ்யகாரர் மொழிந்தது பொருந்தியே யிருக்கின்றது.

பரமாணுக்கள், த்வ்யணுக்கள் (ஈராணுத்தொகுதி), த்ர்யணுக்கள் (மூவணுத்தொகுதி) முதலியவற்றைப்பற்

றிய அற்புதமான ஸித்தாந்தங்களை ஸ்தாபித்த வைசேஷி கர்களது நுண்மையான பொருளாராய்ச்சியென்ன; ஜாதி, திரவியம், குணம், ஸம்வாயம் முதலிய பதார்த்தங்களைப் பற்றி நையாயிகர்கள் செய்துள்ள விசாரங்களில் விளங்கும் இன்னும் விசேஷமான பொருளாராய்ச்சி யென்ன; அதினின்றும், பரமாணு தத்வக்கோட்பாட்டை வெளியிட்ட ஸாங்கியர்களது பிரசாந்தமான (அமைதியான) விசாராநுக்ரமம் வரையில் ஓங்கி, அதன்பிறகு, இவ்வெல்லா விசாரங்களினுடைய தேர்ந்த முடிபும் பழுத்த பழமுமாய் விளங்கும் வியாஸ ஸூத்திரங்களில் முடிபெய்தியுள்ள ஆத்மதத்துவ ரஹஸ்யங்களின் பலவகைப்பட்ட ஸமஷ்டிவியஷ்டி ரூபமான ஸித்தாந்தங்களென்ன,— இவ்வெல்லாவித மதபேதங்களுக்கும் ஆதாரமாயும் பிரமாணமாயும் இருப்பவை சுருதிகளே. பௌத்தர் ஜைநர் முதலிய புறச்சமயத்தாரது தத்துவ நூல்களிற்கூட சுருதியின் ஸஹாயம் தள்ளப்படவில்லை.

பிராஹ்மணர்களால் பின்னர்ச் சேர்க்கப்பட்டன வென்று அவர்கள் சொல்லுகிற "ஹிம்ஸக சுருதிகள்" என்பவை தவிர, வேதத்தின் மற்றைய பாகங்க ளெல்லாம் பௌத்த மதப்பிரிவினர் சிலராலும், ஜைந மதப்பிரிவினர் பலராலும் ஒருவாறு பிரமாணமாக ஒப்புக்கொள்ளப் பட்டே யிருக்கின்றன.

ஸமீபகாலத்தில் இத்தகைய கொள்கையானது காலஞ் சென்ற தயாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளாலுங் கொள்ளப்பட்டிருந்தது.

'பிராசீனமான இந்துக்களுடையவும், தற்கால இந்துக்களுடையவும் அபிப்பிராய விசேஷங்கள் ஒன்று சேரப்பெற்ற நடு மைய ஸ்தானம் எது? விரிவாகப் பிரிந்து கிடக்கும மத பேதங்களையுடைய இந்து மதத்தின உண்மையான ஆதாரம எது?' என்று கேட்டால், வ்யாச சூத்திரங்களே அத்தகைய ஆதாரமாய் அமைந்துள்ளன வென்று சந்தேகமின்றிக் காட்டப்படும்.

ஹ்ருதயத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் கம்பீரமான ஹிமாலய வநப்ரதேசங்களின் ஏகாந்த ஸ்தலங்களிலே தேவ நதியாகிய மந்தாகினியின் சாந்தமான இன்னோசையுடன் கலந்து, அஸ்தி, பாதி, ப்ரியம் * என்று இடிமுழங்குவதுபோல் அத்வைத கேஸரி கர்ஜிப்பதைக் கேட்டாலும்; பிருந்தாவநத்தின் ரமணீயமான லதாமண்டபங்களில் பியா பீதம் † என்று குயில்கள் கூவும் இனிய குரலோசையைக் கேட்டாலும்; காசியின்கண்ணுள்ள மடங்களில் நடக்கும் சாந்தமான தியானங்களையும், நவத்வீபத்தில் அவதரித்த ஸ்ரீ சைதந்ய சுவாமியின் சிஷ்யர்கள் செய்யும் பரவசமான ஆநந்தத் திருநடநங்களையும் தரிசித்தாலும், வடகலை,

---

* அஸ்தி=ஸத், பாதி=சித், ப்ரியம்=ஆநந்தம்; எனவே ப்ரஹ்ம லக்ஷணமான ஸச்சிதாநந்தம் என்றாயிற்று. இந்த ப்ரயோகத்தைப் பஞ்சதசியில் காண்க.

† பியா என்றால ப்ரியா அதாவது கண்ணனது ப்ரிய நாயகியாகிய ராதை யென்றும், பீதம் என்றால் பீதாம்பரதாரியாகிய கண்ணனென்றும் பொருள்.

தென்கலை முதலிய உட்பிரிவுகளை யுடைய விசிஷ்டாத்து வைத ஆசாரியராது பாத நீழலை யடைய அவரது பிரசங் கங்களையாவது மாதவ மதத்தின் ஆசாரியர்களுடைய உபந் யாஸங்களையாவது கேட்டாலும்; வீரரசம் பொழியும் லௌகிக சீக்கியரின் "உவா குருகிபதே" * என்னும் மதப் போர் முழக்கத்தையாவது, உதாஸிகள் நிர்மலர் என்னும் சிக்கிய ஸந்யாஸிகள் தம் மத நூலாகிய கிரந்தசாஹேபின் விஷயமாய்ச் செய்யும் உபந்நியாசங்களையாவது கேட்ட போதிலும்; கபீர்தாஸரின் ஸந்யாஸி சிஷ்யர்களுக்கு ஸத் ஸாஹிப் என்னும் வசனங்கொண்டு வந்தனம் செய்து அவர்கள் சொல்லும் ஸாகிகளைக் கேட்டாலும்; அல்லது ராஜபுதான தேசத்தின் ஆசாரியராகிய தாதுவின் அற்புத கிரந்தங்களையாவது, அவருடைய ராஜ சிஷ்யராகிய ஸுந் தர தாஸர் துவக்கி, இந்தியாவில் சென்ற மூன்று நூற் றாண்டுகளிலும் எந்தப் பாஷையினும் எழுதப்பட்ட கிரந் தங்கள் எல்லாவற்றிலும் மிகுந்த பிராபல்யம் அடைந் திருக்கிற விசாரஸாகரம் என்னும் புத்தகத்தின் கர்த்தா வாகிய நிச்சலதாஸ் ஈறாகவுள்ள ஞானவான்களின் கிரந்தங் களையாவது படநஞ் செய்தாலும்; வட இந்தியாவிலுள்ள பங்கிமேதாரை உட்காரவைத்து அவனுடைய லால் குரு வின் உபதேச விவரத்தைக் கூறும்படி கேட்டாலும் கூட, இவ்விதம் பெருத்த பேதங்களுள்ள ஆசாரியர்களுக்கும், கொள்கைகளுக்கும் ஆதாரமா யிருப்பது யாதெனில்,— சுருதியையே தனக்குப் பிரமாணமாகவும் கீதையையே

* 'எம் குரு ஸ்வாமிக்கு ஜயம்' என்று பொருள்.

அதற்குத் தெய்விக வியாக்கியானமாகவும், சாரீரக சூத்திரங்களையே அதற்கு ஸாங்கமான தத்துவமாகவும, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர் முதல்; அனைவராலும் இகழப்படும் எளியர்களான் லால் குருவின் மேதார் சிஷ்யர்கள் ஈறாகவுள்ள பற்பல கொள்கையினரையுமே தனது அநந்த ஸ்வரூபமாகவு முடைய ஸநாதந தர்மமே என்று எளிதி லுணரலாம்.

ஆகவே ப்ரஸ்தான த்ரயம் * எனும் இம்மூன்று ப்ரஸ்தானங்களுமே த்வைதாத்வைத விசிஷ்டாத்வைத வுரைகளோடும், மற்றும் சில முக்கிய அபிப்பிராயங்களுள்ள வுரைகளோடும் சேர்ந்து இந்து மதத்தின் பிரமாணக் கிரந்தங்களாகக் கொள்ளப்படுகின்றன. முன்னிருந்த காரஸம்ஹிகளுக்குப் பதிலாகப் புராணங்களும், ப்ராஹ்மணங்களுக்குப் பதிலாகத் தந்திரங்களும் தற்காலத்தில் உபயோகப்பட்டு வருகின்றன.

இனி எல்லா வுட்பிரிவினராலும் ப்ரஸ்தாந த்ரயம் பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. ஆனால், புராணங்களும், தந்திரங்களும் ஒவ்வொரு பிரிவினையாருக்கும் தனித்தனியே ஏற்பட்டுள்ளன.

மேற் கூறப்பட்ட தந்திரங்கள் வைதிக கர்மங்களையே சிறிது பேதப்படுத்திப் பிரதிபாதிக்கின்றன. இவற்றைப் பற்றி ஆபாஸமான ஸித்தாந்தங்களை யாவரேனும் ஏற்

* உபநிஷத்து, கீதை, ப்ரஹ்மசூத்திரம் ஆகிய இம்மூன்றுக்கும் சேர்ந்து ப்ரஸ்தாந த்ரயம் என்று பெயர்.

படுத்திக்கொள்ளும் முன்னமேயே, அவர்கள், அத் தந்தி ரங்களை முக்கியமாய் அத்வர்யு சம்பந்தமான ப்ராஹ்மணங் களுடன் ஐகமத்தியப்படுத்திப் படிப்பாரால், தந்திரங்க ளில் வரும் மந்திரங்களில் அநேகம் நேராய் ப்ராஹ்மணங் களினின்றே வார்த்தை வார்த்தையா யெடுக்கப்பட்டதாக அறிவார்கள். ஸ்ரௌத ஸ்மார்த்த விஹித கர்மங்களைத் தவிர்த்து இமயமலைமுதல் குமரிமுனைவரையில் வழங்கி வரும் வேறெல்லா ஆசாரங்களும் தந்திரங்களினின் றெடுக்கப்பட்டன வென்பது மாத்திரமன்றி; சைவ, வைஷ்ணவ, சாக்தீர்தி மதஸ்தரது ஆசாரங்க ளெல்லாம் கூடத் தந்திரங்களையே தழுவிக்கிடக்கின்றன.

இந்துக்க ளெல்லாரும் மேற்கூறிய தங்கள் மதத்தின் பிரமாணங்களை முற்றிலும் அறிந்திருக்கிறார்களென்று நான் இங்குக் கூறவில்லை.

முக்கியமாய்க் கீழ் வங்காளத்திலுள்ள அநேகர் இந் தப் பெருத்த மத பேதங்களையும் கொள்கைகளையும் பற் றிக் கேட்டதேயில்லை. ஆயினும் அறிந்தோ, அறியா மலோ, அவர்களெல்லோரும் அநுஸரித்து வரும் முறை ப்ரஸ்தாநத்ரயத்தில் ஏற்பட்ட முறையேயாம்.

ஆனால், இந்து பாஷையானது எவ்வெவ்விடத்திற் பேசப்படுகிறதோ, அப் பிரதேசங்களிலுள்ள தாழ்ந்த வகுப்பினர்கூடக் கீழ் வங்காளத்திலுள்ள உயர்ந்த வர் ணத்தார் அநேகரைவிட வேதாந்த மதத்தை வெகு நன் ருய் அறிந்திருக்கிறார்கள். அதற்குக் காரணமென்ன?

மிதிலா பூமியினின்றும் நவத்வீபத்துக்குக் கொண்டு வரப்பட்டு, மஹா மேதாவிகளாகிய சிரோமணி, கதாதர, ஜகதீசர் முதலிய எண்ணிறந்த தர்க்காலங்காரர்களால் போஷிக்கப்பட்டும், விர்த்தி செய்யப்பட்டும், சில விஷயங் களில் உலகத்திலுள்ள எவ்வித தர்க்கத்திலும் உயர்ந்த தும் சிறந்ததும் வெகு திருத்தமும் ஆச்சரியமுமான மொழியில் விளக்கப்பட்டும் உள்ள தர்க்க சாஸ்திர முறைக ளடங்கிய வங்க தேசத்திய நியாய சாஸ்திர மானது, இந்துஸ்தானம் முழுவதும் வெகு சிரத்தையுடன் அத்தியயநம் செய்யப்பட்டு வருகிறது.' ஆனால், வேதாத் தியயநமோ, அந்தோ! யாவரும் விசனிக்கத்தக்க தீன தசைக்கு வந்துவிட்டது. சென்ற சில வருஷங்கள் வரையி லும் பதஞ்சலி மஹா பாஷ்யத்தைக் கற்பிக்க ஒருவர் அகப்படுவது வெகு அரிதாயிருந்தது. ஒரே ஒரு முறை தான், என்றும் முடிவில்லாத அவச்சின்ன அவச்சேதக மென்ற தர்க்க வாதங்களுக்கு மேலாக, மஹானுகிய ஸ்ரீ கிருஷ்ண சைதந்ய பகவான் தோன்றினர். உடனே வங்கா ளம் தன் அஞ்ஞான நித்திரையினின்றும் எழுந்து இந் தியாவின் இதர பாகங்களின் ஞான வாழ்விற் சிறிது கலந்தது.

ஸ்ரீ சைதந்யர் தமது ஸந்யாஸாசிரமத்தை ஒரு பாரதி யினின்றும் கிரகித்த காரணம்பற்றி அவரும் ஒரு பாரதி யாயிருந்தும், மாத வேந்திரபுரி என்பவரால் அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்றென்பதை யறிய விசித்திரமா யிருக்கிறது.

வங்காளத்தி லுள்ளவர்களை அஞ்ஞான நித்திரையி னின்றும் எழுப்பி அவர்களுக்கு ஞானத்தை உபதேசிக் கும்படியான ஒரு விசேஷ நியமனம் இந்தப் புரிகளுக் கிருந்ததாகத் தோன்றுகிறது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோதபுரி என்பவரிடத்தில் ஸந்நியாஸாசிர மம் பெற்றார்.

வியாஸ சூத்திரங்களுக்கு ஸ்ரீ சைதந்யர் செய்த பாஷ்யமானது போக்கடிந்துவிட்டது. ஒரு வேளை அங் ஙனம் போக்கடிந்து போகாதிருந்தாலும், அது இது வரையில் வெளிக்கும் வரவில்லை. அவரது சிஷ்யர்கள் தக்ஷி ணத்திலுள்ள மாத்துவர்களில் சேர்ந்துவிட்டார்கள் மஹான்களாகிய ரூப, ஸநாதந, ஜீவகோஸ்வாமிகள் முதலி யோரால் விர்த்தி செய்யப்பட்ட சைதந்ய மதமானது படிப் படியாய்ப் பாவாஜீகளின் கைகளில் அகப்பட்டு அதி தீன தசையை யடைந்து, இப்பொழுதுதான் சிறிது காலமாகச் சீர்பட்டு வருகின்றது. அதற்குமுன் இருந்த சிறப்பை அது மீண்டும் அடையுமென்று நான் நம்புகிறேன்.

ஸ்ரீ சைதந்யருடைய மகிமை இந்தியா முற்றிலும் பரவியிருக்கின்றது. பக்தி மார்க்கம் எங்கெங்கே வழங்கி வருகிறதோ, அங்கெல்லாம் அவரைப்பற்றிப் புகழ்வதும், படிப்பதும், பூஜிப்பதுமாகவே யிருக்கிறார்கள். வல்லபா சாரியர் ஏற்படுத்திய மதமும் சைதந்ய மதத்தின் ஓர் கிளை யே யென்று நம்புவதற்கு எனக்கு அநேக காரணங்க ளிருக்கின்றன. வங்காளத்தில் பெயரளவில் அவருக்குச்

சிஷ்யரா யிருப்பவருள் அநேகருக்கு, அவரது சக்தி இன்றும் இந்தியா முழுதும் பரவியிருக்கும் விதம் தெரியவே தெரியாது. அந்தோ! அது அவர்களுக்கு எங்ஙனம் புலப்படும்? அவர் பாதசாரியாய் இந்தியா முழுவதும் வீடுவீடாய்ச் சென்று ஆசண்டாளம் (சண்டாள ரீறாகவுள்ள யாவரையும்) கடவுளிடத்தில் அன்பு செய்யும்படி செஞ்சியிருக்க, அவரது சிஷ்யர்களோ இப்போது "கதியன்கள்" ஆய்விட்டனர்,—அதாவது, திண்டு திவாசுகள் போட்ட ஆஸனங்களில் வெகு உல்லாஸமாய் வீற்றிருந்து சுகம் அநுபவிக்கின்றனர்.

முக்கியமாய் வங்காளத்திலேயே வழங்கி வருகிற விசித்திரமும் அவைதிகமுமான வழக்கமாகிய பரம்பரா குருத்வ முறையானது, அந்நாடு இந்தியாவின் இதர பாகத்துடன் மத விஷயத்தில் ஒன்றுபட்டிராமைக்கு வேறோர் காரணமா யிருக்கின்றது.

வங்காளமானது, இன்றைக்கும் உயர்தர ஆரிய ஞானத் தேர்ச்சிக்குப் பிரதிநிதிகளும் களஞ்சியமுமாயுள்ள மஹா ஸங்யாஸி சங்கத்தினின்றும் ஓர் உபதேசம் பெறும விருப்பமே எல்லாவற்றிலும் பெருத்த காரணமா யிருக்கின்றது.

வங்காளத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களுக்குத் துறவில் விருப்பமில்லை. அவர்கள் எப்பொழுதும் போகத்திலேயே இச்சை யுள்ளவர்களா யிருக்கின்றனர். அவர்களுக்கு ஆத்ம விஷயங்களில் ஆழ்ந்த நுண்ணிய

விசாரம் எங்ஙனம் நிகழும்? "த்யாகேந நைகேந அம்ருதத்வம் ஆநஶு:" 'துறவெனும் ஒரே சாதனத்தினாலேயே இறவாமை அடைந்தனர்'; என்று வேதம் முறையிடுகின்றது. அது வேறு விதமா யிருக்குமோ?

ஆனால், ஹிந்திபாஷை வழங்கும் நாடெங்கும் வெகு தூரம் கீர்த்தி பரவப்பெற்ற தேஜஸ்விகளாகிய ஸந்நியாஸ போதகர்கள் ஊரூராய்ச் சென்று ஒவ்வொரு சிறு குடிசைக்கும் போய் வேதாந்த உண்மைகளை உபதேசித்திருக்கின்றனர். இந்தத் தியாகிகள் பஞ்சாப் நாட்டை யரசு புரிந்த ரஞ்சித சிங்கின் அரசாட்சியிற் பெற்ற செல்வாக்கினால் வேதாந்த தரிசனத்தின் வெகு நுட்பமான உண்மைகளைக் கடையரிற் கடையரும் அறியும்படி செய்தனர். பஞ்சாப் நாட்டிலுள்ள எளிய பட்டிக்காட்டுப் பெண்கூடத் தன் நெசவு யந்திரம் "ஸோஹம், ஸோஹம்" எனக் கூறும் என்று தக்க இறுமாப்புடன் மொழிவாள். ஹ்ரிஷீகேச வனத்திலுள்ள "மெஹதார்" தியாகிகள் ஸந்யாஸியின் உடை தரித்து வேதாந்த போதுவதை நானே கண்டிருக்கிறேன். உந்நத பதவியிற் செருக்குற்றிருக்கும் அநேகர் இவர்கள் பாத நிழலை யடைந்து வேதாந்தத்தை வெகு களிப்புடன் கற்கலாம். ஏன் அங்ஙனம் கூடாது? "அந்த்யாதபி பரம் தர்மம்" 'உத்தமமான தர்மத்தைத் தாழ்ந்த ஜாதியானிடத்திலும் தெரிந்துகொள்ளலாம்.'

ஆகவே, இங்ஙனம் வங்காளத்திலும், பம்பாயிலும், சென்னையிலும் இருப்பதைக்காட்டிலும் அதிகமான வேதா

ந்தப் பயிற்சியானது வடமேற்கு மாகாணங்களிலும் பஞ்சாப்பிலும் பரவி யிருக்கின்றது. எப்பொழுதும் யாத்திரை செய்துகொண்டே யிருக்கும் வெவ்வேறு பிரிவினையுடைய யோகிகளாகிய * தசநாமிகள், பைராகிகள், பந்திகள் ஒவ்வொருவனுடைய குடிலுக்கும் மதத்தை எட்டச் செய்கின்றனர். அதற்காக அவ் வில்லறத்தான் செலவழிக்க வேண்டியது ஒரு கவளம் அந்நமே யாயினும், அவர்களில் அநேகர் எவ்வளவோ பெருந்தன்மை யுள்ளவராயும் தந்நயம் பாராட்டாதவராயு மிருக்கின்றனர்.

"காச்சு பந்திகள்" என்னும் ஓர் தனிமதக் கூட்டத்தைச் சேர்ந்த ஸந்யாஸி ஒருவர் இருக்கின்றனர். (இதைச் சேர்ந்தவர்கள் வேறெந்தக் கூட்டத்திலும் சேருகின்றனரில்லை.) இவர் ராஜபுதன முழுதும் நூற்றுக்கணக்கான பாடசாலைகளையும் தர்மசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். மேலும் இவர், காடுகளில் ஆஸ்பத்திரிகளையும், ஹிமாலயத்திலுள்ள இடுக்கு வழிகளி லெல்லாம் இருப்புப் பாலங்களையும் அமைத்திருப்பினும், ஒரு காசையும் தன் கைகளால் ஒருகாலும் தொடுகிறதில்லை. இவருக்குக் கம்பளி ஸ்வாமி என்று பெயர் வருவதற்குக் காரணமாகிய ஒரு கம்பளித் துண்டைத் தவிர வேறு இவ்வுலக சொத்து

---

* தசநாமிகள்—பத்துவிதப் பெயர்களையுடைய சங்கராசார்ய சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஸந்யாஸிகள். அப்பெயர்களாவன:— (1) சரஸ்வதி, (2) புரி, (3) பாரதி, (4) பத்ம, (5) தீர்த்த, (6) ஆஸ்ரம, (7) வந, (8) அரண்ய, (9) பர்வத, (10) ஸாகர.

ஒன்று மில்லை. இவர் தமக்கு வேண்டியதை வீடு வீடாய் இரந்து சாப்பிடுகின்றனர். அங்ஙனம் செய்யுமிடத்தும் தம் பொருட்டு இதரர்களுக்கு யாதொரு கஷ்டமும் நேரிடக் கூடாதென் றிருப்பவராதலால், தமக்கு வேண்டிய அந்நம் முழுவதும் ஒரே இல்லத்தினின்றும் அவர் கிரஹித்ததை நான் எப்பொழுதும் கண்டதில்லை. இம்மாதிரியா யிருப்பவர் இன்னும் அநேகருளர். இம் மண்ணுலகிற்குத் தேவர்கள் போன்றிருக்கும் இவர்கள், தகர்க்க முடியாத அரண் போன்ற தம் திவ்ய சீலத்தால் ஸநாதந தர்மத்தை ரக்ஷித்துக்கொண் டிருக்கும் வரையிலும் நமது பிராசீன மதம் நசிக்குமென்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

இந் நாட்டில் பாதிரிகள் வருஷத்தில் ஆறுமாதகால மாத்திரம் ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு மணிநேரம் மாத்திரம் பிரசங்கஞ் செய்வதற்காகச் சில சமயம் 30,000; 40,000; 50,000; 90,000; ரூபாய் அவ்வளவு பெருத்த சம்பளங்களைப் பெறுகின்றனர். தம் மதத்தைக் காப்பாற்றுவதின்பொருட்டு, அவர்கள் லட்சம் லட்சமாய்ச் செலவிடுவதைப் பாருங்கள். உலகம் இப்படியிருக்க, வங்காளத்து வாஸிவர்களோ, தந்நய மென்பதே எள்ளளவும் இருக்கப் பெறாதவர்களும் தெய்வத்தன்மை பொருந்தியவர்களுமான கம்பளி சுவாமியை யொத்த மஹான்களையெல்லாம் வெறும் சோம்பேறித் தடியர்களென்று மதிக்கும்படியாகக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றனர்.

“மஹ் ஸக்தா நஞ்ச யே ஸக்தாஸ்
தே மே ஸக்ததமா மதாஃ”

"என் அடியார்க்கும் எவர் அடியார்களோ, அவரே என் உள்ளத்துக்கு உகந்த சிறந்த அடியார்கள்."

சுத்த மூடனை ஒரு பைராகி செய்கிற காரியத்தை யுற்றுப்பாருங்கள். அவன்கூடத் தான் போகும் கிராமத்தி லுள்ள ஜனங்களுக்குத் தனக்குத் தெரிந்த "துளசிதாஸ் ராமாயணம்", அல்லது "சைதந்ய சரிதாம்ர்தம்", அல்லது தென்தேசத்து ஆழ்வார்கள் பாடிய "நாலாயிர ப்ரபந்தம்" இவற்றில் அறிவு புகட்டத் தன்னு லியன்றவளவும் பிரயத்தனம் செய்கின்றான். இங்ஙனஞ் செய்வதும், ஓர் வித நன்மையல்லவா? அவர்கள் இவ்வளவு செய்தும், அதற்குப் பிரதியாய் நாம் அவர்களுக்கு அளிப்பது ஒரு ஒரு கவளம் அன்னமும் ஒரு துண்டு கந்தையுந்தானே. என் சகோதரர் களே! அவர்களை இரக்கமில்லாமல் கண்டிக்கப் புகுமுன், நீங்கள் பிறந்த தேசத்திலேயே பிறந்த உங்கள் எளிய சகோதரர்களுடைய பணச் செலவின் பேரில் கல்வி கற்றுக் கொண்டும் நீங்கள் பிழைக்கும் பொருட்டும், "பாவாஜிகள் வெறும் தடியர்களே" என்று உங்களுக்குக் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்பொருட்டும், அவ்வெளியோர்களைக் கஷ்டப்படுத்துகிற உங்களால் அவர்களுக்கு உண்டாகும் நன்மை எவ்வளவு? என்பதைப் பற்றிச் சிறிது யோசியுங்கள்.

எமது வங்காள நேசரிற் சிலர், இப்பொழுது இந்து மதம் சிறிது விர்த்தியாவதைக் கண்டு, அதை இந்து மதத்

தின் நவீனத் தோற்றம் என்று கூறிக் கண்டித்திருக்கின்றனர். இதுவரையில் அவர்களறிந்த மதமெல்லாம் உண்ணல், உடுத்தல், குடித்தல், மணத்தல் முதலியவற்றிற் கடுத்த தேசாசாரக் கட்டாயிருந்ததினாலும், இப்பொழுது தான் ஹிந்து மதம் வங்காளத்துட் புகுவதினாலும், அவர்கள் இங்ஙனமதை யிகழ்வது இயல்பேயாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சீடர்கள் இந்தியா முழுவதும் பிரசங்கித்துக்கொண்டுவரும் இந்துமதக் கோட்பாடானது ஸத் சாஸ்திரங்களுக் கொத்திருக்கின்றதா அல்லவா என்னும் பொருத்த விஷயத்தைப்பற்றிச் சர்ச்சை செய்ய இச்சிறு பத்திரிகையில் போதுமான இடமில்லை. ஆயினும், எமது கண்டனைக்காரருக்கு எமது அபிப்பிராயங்களை நன்குணர்த்த வேண்டி ஈண்டுச் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

* காசிதாஸ், † க்ர்த்திவாஸ் முதலினோருடைய வசநங்கள் அமிருத ஸமானமென்பதும், அவற்றைப் படிப்போரும் கேட்போரும் புண்ணியவான்களென்பதும் வாஸ்தவமாயினும், அவர்களது கிரந்தங்களினின்றுமே ஹிந்து மதத்தின் யதார்த்தமான கருத்தை யறியலாமென்று நான் ஒருகாலும் விவாதம் செய்பவனில்லை. ஆனால், வேதங்களை

* காசிதாஸ்: வங்காளி பாஷையில் மஹா பாரதத்தைச் சுலபமான செய்யுள் நடையில் எழுதினவர்.

† க்ர்த்திவாஸ்: வங்காளி பாஷையில் ராமாயணத்தைச் சுலபமான செய்யுள் நடையில் எழுதினவர்.

யும் (தர்சந) சாஸ்திரங்களையும் ஸித்தாந்த ஸ்தாபகர்களான ஆசாரியர்களையும் இந்தியா முழுவதிலுமுள்ள அவர்களது சிஷ்யர்களையுமே நாம் பிரமாணமாகக் கொள்ள வேண்டும்.

ஸஹோதரர்களே! நீங்கள் முதன்முதல் கௌதம சூத்திரங்களில் ஆரம்பித்து, ஆப்தர்களைப்பற்றிய அவரது மதத்தைவாத்ஸ்யாயந பாஷ்யாநுஸாரமாய் அறிந்து, பிறகு, சபரர் முதலானவர்களது பாஷ்யங்களோடு மீமாம்ஸா சாஸ்திரத்தைப் படிப்பீர்களாயின், "அலௌகிக ப்ரத்யக்ஷ"த்தைப்பற்றி அவர்களுடைய அபிப்பிராய மென்னவென்றும், ஆப்தர் என்போர் யாவரென்றும், ஒவ்வொருவரும் அவ்விதமான ஆப்தர் ஆகலாமா கூடாதாவென்றும், வேதங்கள் அத்தகைய ஆப்தர்களின் வசனங்களாயிருக்கும் காரணம்பற்றியே பிரமாணமென்றும் அறிவீர்கள்.

யஜுர்வேதத்துக்கு ஸ்ரீ மஹீதரர் எழுதியுள்ள பாஷியத்தின் பீடிகையைப் படிக்க உங்களுக்கு அவகாசமிருக்கும் பக்ஷத்தில் அதில் வேதங்கள் ஆத்மோஜ்ஜீவந மார்க்கத்தை யுபதேசிக்கும் விதிகள், ஆகவே அவை நித்தியம்: என்னும் விஷயமாய் மிகத் தெளிவுற விசாரிக்கபபட்டிருப்பதைப் பாரக்கக் காணலாம்.

சிருஷ்டியின் நித்யத் தன்மையைப் பற்றியோவெனின், இநதக் கொள்கையானது இந்து மதத்திற்கு மாத்திரமல்லாமல், பௌத்த மதத்திற்கும் க்ஷமண மதத்திற்கும் கூடப் பொதுவானதா யிருக்கின்றது.

இப்பொழுது இந்தியாவிலிருக்கும் எல்லா மத ஸம்ப்ரதாயதத்தோரும ஞான மார்க்கத்தையாவது பக்தி மார்க்கத்தையாவது அநுசரிப்பவரொன்று ஒரு தோராயமாய்க் கூறலாம். ஸ்ரீ சங்கராசாரியர் இயற்றிய சாரீரக பாஷ்யத்தின் உபோதகாததிற் சிறிது தயவுசெய்து பார்ப்பீர்களாயின், ஞானத்தின் "நிரபேக்ஷதை"யானது பூர்ணமாய் விசாரம செய்யப்பட்டிருப்பதையும், ப்ரஹ்மாநுபவத்திற்கும் மோக்ஷவாப்திக்கும் யாதொரு கர்மமாவது சமயக்கோட்பாடாவது ஜாதியாவது வர்ணமாவது ஒருவிதக் கொள்கையாவது அவசியமில்லை யென்றும் ஆங்குக் காண்பீர்கள். ஸாதன சதுஷ்டயமுள்ள எவனுமே அதை யடையலாம்.

பக்தி மார்க்கத்தைப் பற்றியோவெனின், அத்துறையிற் பிரமாணமாய் அங்கீகரிக்கப்பட்டுள்ளவர், ஒருவன் மோக்ஷ மடைவதற்கு வர்ணமாவது, கோத்திரமாவது, திணையாவது, மனுஷிய ஜன்மம் கூடவாவது, அவசியமென்று கூறினாரில்லை யென்று வங்காளிகளே நன்கறிந்திருக்கின்றனர். பக்தி ஒன்றே முக்கியமா யிருக்கவேண்டியது.

ஞானம், பக்தி இவ்விரண்டும் நிபந்தனை யற்றவை யென்றும் எங்கும் கூறப்பட்டிருப்பனவன்றி, மோக்ஷாவாப்திக்கு ஜாதி முதலிய நிபந்தனைகளை யநுஷ்டிக்க வேண்டுமென்று எந்தப் பிரமாணததிலும் கூறப்படவில்லை. "அந்த ராசா பிது தத்திருஷ்டே:" என்னும் வியாஸ

சூத்திரத்திற்குச் சங்கரர், ராமானுஜர், மத்வர் இவர்கள் செய்திருக்கும் பாஷியத்தைப் பார்க்க.

உபநிஷத்துக்கள் முழுவதையும் சர்ச்சை செய்யுங்கள்; ஸம்ஹிதைகளையும் படியுங்கள். வேறு சில மதங்களில் இருப்பனபோன்ற நிர்ப்பந்தமான நிபந்தனைகள் அவற்றில் எங்கும் காணவும் கிடையா. ஆயின், எதற்கும் இடங்கொடுக்கும் அதன் இயல்பை எங்கும்,—அதர்வண வேத ஸம்ஹிதை நாற்பதாம் அத்தியாயத்திலும் பரக்கக் காணலாம். என் ஞாபகம் சரியா யிருப்பின், மூன்றாவது அல்லது நான்காவது சுலோகம் "நபுத்தி பேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்" என்று ஆரம்பிக்கிறது. இவ்வபிப்பிராயம் எங்கும் கூறப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஒருவன் தன் இஷ்டதேவதையை வழிபட்டதற்காகவாவது, நாஸ்திகள் அல்லது லோகாயதனாக ஆனதற்காகவாவது, அவன் குலாசாரங்களை மாத்திரம் வழுவாமல் அனுசரித்த வரையில், அவனை எவரேனும் தூஷித்ததுண்டோ? குலாசார தர்மங்களை ஒருவன் அநுஸரிக்காத காரணங்கொண்டு தண்டனை யடைந்திருப்பினும், மோக்ஷாவாப்திக்கு அப்படிப்பட்ட நிபந்தனை யொன்றும் கிடையாது. அதிஹீனனாகிய பதிதனும் அதினின்றும் தள்ளப்படான். ஆகவே, குலாசாரத்தையும் மதத்தையும் பிரமம் செய்து மயங்கக்கூடாது, உதாரணமாக, மலையாளத்தில் ஒரு சண்டாளன் உயர்குலத்தோர் வசிக்கும் தெரு வழியே செல்லக்கூடாது. ஆயின், அவன் கிறிஸ்தவ

னாகவாவது மகம்மதியனாகவாவது ஆகுங்கால் அவன் எங்கு செல்வதற்கும் எவ்வித ஆக்ஷேபனையும் கூறித் தடுப்பாரில்லை. இவ் வழக்கமானது அநேக நூற்றாண்டுகளாக இந்து அரசரின் தேசங்களில் இருந்து கொண்டேயிருக்கின்றது. இஃது அநேகருக்கு விசித்திரமாகத் தோன்றலாம். ஆயினும் அது, பொருந்தாத நிலைமைகளிலும் இந்து மதம் இதர மதங்களிடத்தில் காட்டும் பொதுத் தன்மையையும் சர்வ சாதாரண வியல்பினையும் குறிக்கின்றது.

எந்த ஒரு தனிக் கோட்பாடானது இந்து மதத்தை உலகத்திலுள்ள வேறு மதங்களினின்றும் பிரித்துக் காட்டுகின்றதோ, எந்த ஒரு தனிக் கோட்பாட்டை விளக்க ரிஷிகள் ஸம்ஸ்கிருத பாஷையின் * கோசத்திலுள்ள வார்த்தைகள் ஏறக்குறைய எல்லாவற்றையும் பிரயோகித்துத் தீர்த்துவிட்டனரோ, அப்படிப்பட்ட தனிக் கோட்பாடானது யாதெனில், 'மனிதன் இப்பிறப்பிலேயே ப்ரஹ்மாநுபவம் எய்தல் வேண்டும்' என்பதே. இவ் வபிப்பிராயத்தை அநுவர்த்தித்தே "கடவுளை யறிதல் கடவுளாதலே" என்று அத்வைத வசனங்கள் மொழிகின்றன. "ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி."

இனி இத்தகைய உத்தம சாதனங்களின் வழிநின்ற முமுக்ஷுவுக்கு ஈசனது திருவருட்பேறு சித்திக்கின்றதென்னும் உத்தமோத்தம ஸித்தாந்தம் தப்பாமல் ஏற்படு

* நிகண்டு.

கின்றது. இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டவர்கள் வைதிக ரிஷிகளும் விதுரனும் தர்மவியாதனும் தான் என்றெண்ணவேண்டாம். தாதுபந்தி சம்பிரதாயத்தைச் சேர்ந்த நிச்சலதாஸ் என்னும் தியாகியும் தாம் இயற்றிய விசாரசாகரத்தில் "பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மமே ஆய்விடுகிறான்; அவன வார்த்தைகள் வேதங்களே; அவை ஸம்ஸ்கிருதத்திலிருப்பினும் அல்லது வேறெந்தத் தேச பாஷையில் இருப்பினும் அஞ்ஞானவிருளை அகற்றுவனவாம்" என்று சிறிது காலத்திற்கு முன்புதான் தைரியமாய்க் கூறியிருக்கின்றனர்.

ஆகவே, த்வைதிகள் கூறும் வண்ணம், ப்ரஹ்மத்தை யனுபவித்தலும், அல்லது அத்வைதிகளின் கொள்கைப்படி ப்ரஹ்மஸ்வரூபமாய் விளங்குதலுமே வேதங்களெல்லாம் உபதேசிக்கும் நோக்கமும் முடிபுமா யிருக்கின்றன. மற்றைப்படி அவற்றிற் கூறிக் கிடக்கும் இதர உபதேசங்கள் ஒவ்வொன்றும், அம்முடிவை யெட்டுவதற்கு நாம் செய்யும் பிரயத்தினங்களின் ஒவ்வோர் படியையே குறிக்கின்றன. இனிப் பகவான் பாஷியகார சங்கராசார்ய சுவாமிகளின் சிறந்த மகிமை என்னவெனின், அவர் கூறிய யுக்திதான் முதன்முதல் வியாஸருடைய அபிப்பிராயங்களை யெல்லாருங் கண்டு ஆச்சரியப்படும்வண்ணம் நன்கு விளக்கியதாமென்க.

எங்ஙனம் சுத்தப் பிரஹ்மம் மாத்திரமே உண்மையான வஸ்துவோ, அங்ஙனமே யெல்லாம் வேறுபாடின்ன

மத பேதங்களும் ப்ரஹ்மத்தின் கண்டமான தோற்றங்களையே தமக்கு ஆகாரமாய்ப் பெற்றிருக்கும் காரணம் பற்றி, அவை இந்தியாவி லிருப்பினும் வேறெத் தேசத்தி லிருப்பினும், பிரஹ்மத்தை நோக்க அவை உண்மையாகவே யிருப்பனவாம்.

ஒருவன் சூரியனை நோக்கி நேராய்ப் புறப்படுவதாக வைத்துக்கொள்வோம். பிரயாணத்தின் ஒவ்வொரு அடியிலும் சூரியனுடைய முன்னிலும் அதிகமான புதிய புதிய காட்சிகளைக் காண்பான். அதனுடைய உருவமும், காட்சியும், பிரகாசமும் அவன் சாக்ஷாத் சூரியனை யடையும் வரையில் நிமிஷத்துக்கு நிமிஷம் நவீனமாகவே தோன்றிக்கொண் டிருக்கும். அவனுக்குச் சூரியன் முதல் முதல் ஒரு பெரிய பந்துபோலத் தோன்றிப், பின்னர் உருவத்தில் பெருத்துக்கொண்டே வர ஆரம்பிக்கிறான். உண்மையில் சூரியன் ஒரு பந்தைப் போன்று சிறுந்தாவது, அல்லது அவன் பிரயாணத்தில் வரிசைக் கிரமமாய்த் தோன்றிய சூரிய உருவங்களைப் போன்றுவது இருப்பதில்லை. ஆயினும், நமது யாத்திரிகன் எப்பொழுதும் காண்பது சூரியனை யென்பதும், சூரியனைத் தவிர வேறொன்றையும் அன்றென்பதும், உண்மை யல்லவா? அம்மாதிரியாகவே இவ்வேறுபாடுள்ள சகல மத பேதங்களும் உண்மையே; ஆனால், சில மதங்கள் "ஏகமேவாத்விதீயம்" ஆகிய உண்மைச் சூரியனுக்குச் சமீபமாயும், சில தூரமாயும் இருக்கின்றன.

இப்படிப்பட்ட சுத்த பிரஹ்மத்தின் லக்ஷணத்தை உபதேசிக்கும் மதக் கிரந்தங்கள் வேதங்களேயாகலானும், வேறு தெய்வ பாவனைகளெல்லாம் இந்த லக்ஷணத்தைக் காட்டிலும் குறுகியனவும் தாழ்ந்தவையுமா யிருக்கின்றமையாலும், * ஸர்வலோக ஹிதைஷிணி சுருதியானது முமுட்சுவைப் பிரஹ்மத்தை யடைவிக்க வேண்டியதற் காவசியமான எல்லாத் துறைகளிலும் படிப்படியாய்ப் பட்சமாய்க் கையைப் பிடித்து நடத்திக்கொண்டு போவதாலும், இனி இதர மதங்களெல்லாம் மேற்சொன்ன லக்ஷணங்களையே குறுக்கியும் ஆபாசப்படுத்தியும் கூறுவதாலும், உலகத்திலுள்ள ஏனைய ஸமயங்களெல்லாம் பெயரற்றதும் எல்லையற்றதும் ஸநாதநமுமாகிய வைதிகமதத்தில் அடங்கியிருக்கின்றன.

அநேக நூற்றாண்டுகள் ஜீவித்து அவ்வளவு காலமும் அதிக பிரயத்தினப்பட்டு உங்கள் மனத்தின் ஒவ்வொரு மூலை முடக்குகளையும் தேடிப் பாருங்கள். அப்பொழுதும், பிரஹ்ம ஞானத்திற்கு ஓர் பெரிய சுரங்கம் போன்றுள்ள அவ்வெல்லையற்ற வேதங்களில் ஏற்கனவே ஏற்பட்டிராத யாதொரு சிறந்த உண்மையையும் கண்டுபிடிக்க வல்லீர் அல்லீர்.

இந்துக்களா லாசரிக்கப்பட்டுவரும் விக்கிரஹாராதனை யெனப்படுவதைப்பற்றியோ வெனின், அவர்கள் அநுஷ்டிக்கும் பூஜாகிரமத்தைப்பற்றி முன்பு நன்றாய்

* எல்லா உலகத்துக்கும் நன்மையைக் கருதும் வேதம்.

விசாரியுங்கள். இனி யவர்கள் உண்மையில் கடவுளை யெவ்விடத்திற் பூஜிக்கின்றனர்? ஆலயத்திலோ? விக்கிரகத்திலா? அல்லது தம் சரீரமாகிய ஆலயத்திலா? முதன் முதல் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நிச்சயமா யறியுங்கள். விக்கிரஹாராதனையைத் தூஷிப்பவரில் நூற்றில் தொண்ணூறு பேர்க்கு இவ் விஷயத்தைப்பற்றிய ஞானம் சுத்த சூனியமே. பின்னர் அதன் உண்மை அனைத்தும் வேதாந்த தத்துவாநுஸாரமாக எளிதில் உங்களுக்கு விளங்கும். என்றாலும், இவ்வித கர்மங்கள் அத்தியாவசியக மானவையல்ல. ஒவ்வொரு விருத்தனும் துரியாசிரமத்தை யவலம்பிக்க வேண்டுமென்றும், அப்படி யவர்கள் அவலம்பித்தாலும் அவலம்பிக்காவிட்டாலும் ஸர்வ கர்மங்களையும் தியஜிக்க வேண்டுமென்றும் மநு கூறுவதைக் காண்க. எவ்வித கர்மங்களும் ஞானத்திலேயே முற்றும் அடங்கியிருக்கின்றன வென அடிக்கடி கூறப்பட்டுள்ளன. "ஸர்வம் கர்மாகிலம் பார்த்ய, ஜ்ஞாநே பரிஸமாப்யதே."

மதத்தைப்பற்றி மாத்திரம் தனியே பேசுமிடத்து, அந்நிய தேசங்களிலிருக்கும் அநேக உயர்குடிப் பிறப்பினர்க் கிருப்பதைவிட இந்தியாவிலுள்ள தாழ்ந்தஜாதியார்க்கும் மதத்தைப்பற்றிய ஞானம் அதிகமாக இருக்கின்றது. எனது நேசரொருவர் எனது உபந்யாஸங்களில், மதம், தத்துவசாஸ்திரம் முதலியவற்றிற்குச் சம்பந்தமான பரிபாஷைப் பதங்களை விளக்க ஐரோப்பிய மொழிகளை உபயோகப்படுத்தினதற்காகக் கண்டித்திருக்கிறார்.

ஸம்ஸ்கிருத வார்த்தைகளை உபயோகிப்பது எனக்கு நிரம்ப ஸந்தோஷமே; மேலும், ஸம்ஸ்கிருத பாஷை ஒன்றுதான் மத விஷயங்களை வெளியிடத்தக்க பூர்ணபாஷை யாதலால், அதை உபயோகப்படுத்துவது எனக்கு இன்னும் வெகு சுலபமா யிருக்கும். ஆனால், நான் உபந்யாசம் பண்ணிய ஸபையி லிருந்தவர் மேற்றிசையோர் என்பதை அந்த நேசர் மறந்துவிட்டார். இனி, ஒரு இந்திய கிறிஸ்தவப் பாதிரி, இந்துக்கள் ஸம்ஸ்கிருத நூல்களின் பொருளை மறந்துவிட்டதாயும், பாதிரிகள்தாம் அவற்றின் பொருளை வெளியிட்டதாயும் என்னிடத்தில் மொழிந்திருந்தும், அப் பெரும பாதிரிக் கூட்டத்தில் ஸம்ஸ்கிருதம் அறிந்த ஒருவரையேனும் நான் காணவில்லை. ஆயினும், அவர்களில் அநேகர் வேதங்களையும், வேதாந்தத்தையும், இந்துக்களுடைய இதர சாஸ்திரங்களையுங் கண்டித்து, வெகு சாதுரியமான உபந்யாஸங்களை யெழுதிப் படித்தனர். நான் எந்த மதத்திற்கும் விரோதி யல்லேன். அங்ஙனமே இந்தியாவிலிருக்கும் பாதிரிகளுக்கும் நான் விரோதியல்லேன். ஆனால், அமெரிக்காவில் பணம் சேர்ப்பதற்கு அவர்கள் செய்யும் உபாயங்களைப்பற்றி மாத்திரம் ஆக்ஷேபிக்கிறேன்,

சிறுவர்களுக்கான பள்ளிப் புத்தகங்களில், இந்து தாயானவள் தன் குழந்தைகளைக் கங்காநதியின் முதலைகளுக்கு இரையாக எறியும் பாவனையாயச் சித்திரப்படங்களை எழுதியிருப்பதின் கருத்தென்ன? அதைப் படிப்போ

ருள்ளத்தில் அதிக அநுதாபத்தை யுண்டாக்கி, அவர்களிடத்திலிருந்து மிகுந்த பணம் கிரகிக்கவேண்டித் தாயைக் கறுப்பு நிறமாகவும், குழந்தையை வெள்ளை நிறமாகவும் சித்திரித் திருக்கின்றதே. மேலும், ஒருவன் தனது மனைவியைக் கொல்ல அவள் ஓர் பிசாசாகி, தனது விரோதியைக் கெடுப்பாளென் றெண்ணி, அவளைத் தானே தன் கையால் நெருப்பில்வைத் தெரிக்கும் பாவனையாய் வரைந்திருக்கும் சித்திரப்படத்தின் பொருள் என்னை? பெருத்த ரதங்களின் கீழ் மனிதர்கள் எறியப்பட்டு நசுக்கப்படும் பாவனையான படங்களின் அர்த்தம் யாது? சில நாட்களுக்கு முன் இவ்வூரில் பிரசுரம் செய்யப்பட்ட புத்தகம் ஒன்றில் அதன் கிரந்த கர்த்தா, தாம் கல்கத்தாவிற்குப் போனபொழுது: அந் நகரின் தெருக்களில் மதப்பித்துக் கொண்டவர்களின்மீது ஒரு ரதம் ஓடினதாகக் கூறுகிறார். இவரைப் போன்ற வேறொரு கனவான், இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்திலும் சிறு குழந்தைகளின் எலும்புகள் நிறைந்த ஒரு குட்டை உண்டென்று "மெம்பிஸ்" என்னும் நகரத்தில் பிரஸங்கஞ் செய்யக் கேட்டிருக்கிறேன்.

இந்துக்கள் இவ் வுலகத்தில் மஹா பாவிக ளென்றும், பயங்கரமான பிசாசுகளென்றும் ஒவ்வொரு கிறிஸ்தவக் குழந்தைக்கும் கற்றுக்கொடுக்கும்படி, இந்தக் கிறிஸ்துவின் சிஷர்களுக்கு இந்துக்கள் என்ன தீங்கு இழைத்தனர்?

கிறிஸ்தவர் ஞாயிற்றுக் கிழமைதோறும் கிறிஸ்துவச் சிறுவர் சிறுமிகளுக்கு மதவிஷயமான பாடம் போதிக்கையில், கிறிஸ்தவனல்லாத யாவரையும், முக்கியமாய் இந்துக்களையும் பகைக்கும்படி கற்பிக்கின்றனர். இதற்குக் காரணம், அச் சிறுவர்களைக் குழந்தைப்பருவம் முதற்கொண்டே அவர்களது பணத்தை மிஷனுக்காகக் கொடுக்கத் தூண்டவேண்டுமென்னும் கருத்தேயாம்.

ஸத்தியத்துக் கஞ்சாமற்போயினும், தங்கள் மக்களின் அபிவிருத்தியின் பொருட்டாவது, கிறிஸ்தவப் பாதிரிகள் இத்தகைய கெடுதிகள் இனியும் அதிகமாகாதபடி தடுக்க முயலவேண்டும். இளமைப்பருவ முதற்கொண்டு இத்தகைய கெடுதிகளில் பழகும் மக்கள் பிற்காலத்தில் பழி பாவத்துக் கஞ்சாத துஷ்டர்களாவது ஓர் ஆச்சரியமா!

எவ்வளவுக் கெவ்வளவு ஓர் பாதிரி நித்திய நரகத்தில் நடக்கும் சித்திர வதைகளையும், அங்கு எரிந்து கொண்டிருக்கும் அக்கினியையும், கந்தகத்தையும்பற்றி வர்ணித்துப் பிரசங்கிக்கிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர் மிகுந்த பக்தியுள்ள பாதிரியென்று மதிக்கப்பட்டு, பாதிரிகளின் ஸமூஹத்தில் புகழப்படுகிறார்.

என்னுடைய சிநேகிதர் ஒருவரது ஊழியத்தில் இருக்கும் ஓர் பெண், இத்தகைய நரகவர்ணனை நிறைந்துள்ள பிரசங்கங்களைக் கேட்க நேர்ந்து, அப் பிரசங்கங்களால் அவள் மனத்தில் உண்டாகிய பயத்தினால் அவளுக்

குப் பயித்தியம் பிடிக்கவே, அவளைப் பயித்தியக்காரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப நேரிட்டது. அவள் உட்கொண்ட நரகாக்னியும் கந்தகமும் கலந்த கிறிஸ்தவ உபதேச மருந்து அவளுக்குத் தலைக்கேறிவிட்டது.

இந்துமத விரோதமாகச் சென்னையில் பிரசுரிக்கப்படும் புஸ்தகங்களைப் பாருங்கள். ஒரு இந்து அங்ஙனம் கிறிஸ்துமத விரோதமாய் ஒருவரி எழுதினாலோ பாதிரிகள் நித்திய நரகமென்றும், நித்திய தண்டனையென்றுங் கூவிப் பயமுறுத்துவார்.

நான் இங்கு வந்து ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. அவர்களுடைய நடவடிக்கைகளை வெகு நுண்ணிய திருஷ்டியுடன் பார்த்துள்ளேன். இத்தேசத்தில் ஆங்காங்குள்ள ஜனங்களுடன் பழகியுமிருக்கிறேன். ஆகவே, இப்பொழுது என் மனத்திற்கு உண்மையெனத் தோன்றுவதென்னவெனின், பாதிரிகள் உலகத்தோர்க்குக் கூறும் வண்ணம், நாமும் பசாசுகளல்லேலம்? அவர்கள் கூறும் வண்ணம், அவர்களும் தேவர்களல்லர் என்பதேயாம். பாதிரிகள் கௌரவமாய்க் காலத்தைக் கழிக்கவும், தங்கள் நடத்தையின் ஊழல்கள் வெளிப்படாமலிருக்கவும் விரும்பின், ஹிந்துக்களின் அக்கிரமம், சிசுஹத்தி, விவாஹ ஏற்பாட்டின் குற்றங்கள் இவைகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமலிருப்பது நலம். கிறிஸ்தவப் பாதிரிகள் ஹிந்துக்களையும் அவர்கள் மதத்தையும்பற்றிப் பொய்யாய்க் கற்பித்துக் கூறும் குற்றங்களை ஓர் படத்திலும், அப்படியே வேறு

சில தேசங்களிலும் மதங்களிலும் காணப்படும் தோஷங்களை வேறொரு படத்திலும் சித்திரித் தெழுதிப் பார்க்கின், இந்துமதக் குற்றப் படமானது இதரமதக் குற்றப்படத்தின் முன் ஒளி மழுங்கிப் பின்வாங்கு மென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

ஆனால், பிறரை இங்ஙனம் இகழும்படி என்னை ஒருவரும சம்பளங் கொடுத்து வைக்கவில்லை. தற்காலம் இந்துக்கள் அநுஷ்டிக்கும் ஆசாரங்களெல்லாம் உத்தமமானவை யென்று யான் ஒருபொழுதும் கூறுபவனல்லன். அநேக நூற்றாண்டுகளாய் அவர்கள் அநுபவித்து வரும் இன்னல்களின் காரணம்பற்றி அவர்களிடத்திற் காணப்படும் குறைவுபாடுகளையும் கெடுதிகளையும் பிறரை விட நான் வெகு நன்றாக அறிந்திருக்கிறேன். எமது புறத் தேசத்தன்பர்களே! எமக்கு யாதொரு தீங்கும் கருதாது உதவி புரியவேண்டுமென்னும் உண்மை யநுதாபத்துடன் வருவீராயின், உங்களுக்குக் கடவுள் அருள் புரிவாராக! அவ்வாறின்றி நெடுங்காலமாய்ப் பல இன்னல்களை யநுபவித்து மனநொந்திருக்கிற இந்துக்களைக் காலத்திலும் அகாலத்திலும் உங்கள் மனது வந்தவாறு தூஷிப்பதின் கருத்து, ஸன்மார்க்க நெறியிற் சிறந்தவர் நீங்களே என்னும் ஜயகோஷமே யாயின், உலகத்திலுள்ள எல்லா ஜாதியாரினும் நன்னெறியிற் சிறந்தவர்கள் இந்துக்களே என்று வெளிப்படையாய்ச் சித்தாந்தப்படுத்துவேன்.

இந்தியாவில் மதமானது எக்காலத்திலும் நிர்ப்பந்தத்துக் குட்பட்டிருக்கவில்லை. ஒருவன் தன் இஷ்ட தேவதை

யை வழிபட்டதற்காகவாவது, தனக்கிஷ்டமான மதத்தை யவலம்பித்ததற்காகவாவது, தனக்கிஷ்டமான குருவை யாசிரயித்ததற்காகவாவது யாவரும் எவ்வித ஆக்ஷேபனையேனும் சொல்லித் தடுத்ததில்லை. ஆகவே, மதமானது வேறெத் தேசத்திலும அடையாத அவ்வளவு விர்த்தியை இந்தியாவில் அடைந்தது. ஆனால், மதமானது இப்படி விர்த்தி யடைவதா யிருந்ததினால், ஆசாரங்களை ஸ்திரமாய் ஏற்படுத்தி அவற்றை நிர்ப்பந்த விதிகளாகச் செய்யும்படி நேரிட்டது. இதனுடைய பலன் என்னவெனின், ஆசாரங்களெல்லாம் படிப்படியாய்ச் சீர்திருத்தம் பெறாமல் பழைய நிலைமையிலேயே நின்றுவிட்டன. அபிவிர்த்திக்கு மூலாதாரம் நிர்ப்பந்த மின்மை யல்லவா? மேற்றிசையிலே விர்த்தியடைந்து வருகிற பாகம் லௌகிக நாகரிக வழக்கங்களும், நிர்ப்பந்த நிலைமையி லிருப்பது மதமுமாம். இப்படி மத விஷயங்களில் நிர்ப்பந்த நிலைமையை யவலம்பிப்பது ஐரோப்பியர் மதத்தின் விலக்ஷணமான தர்மமாய் இன்று வரையில் நிற்பதால், மதாபிவிர்த்தியைக் கோரி யதன்படி நடக்க முயன்ற ஒவ்வொருவனும் பிறரால் வெகு குரூரமாய்த் தூவேஷிக்கப்படும்படி நேரிட்டது. இதனுடைய பலன் என்னவெனில், வெகு அற்புதமான லௌகிக நாகரிகக் கோட்பாடுகளும், கொழுத்த நாஸ்திகக் கொள்கைகளுக்கப்பாற் சிறிதும் மேலெழாத மதமுமேயாம்.

இப்பொழுதுதான் மேற்றிசையானது விழித்துக்கொண்டு தனது துர்ப்பல ஸ்திதியைத் தெரிந்துகொண்

டது. தெரிந்துகொள்ளவே, அத்தேயத்து மதப் பிரவர்த்த கர்களுள் மிகுந்த சீர்திருத்த மடைந்தவர்கள் ஆத்மாவின் உண்மை நிலைமையினை யறிய விரும்பி வேதாந்த விசாரம் செய்துவருகிறார்கள். ஸம்ஸ்கிருத தத்துவ சாஸ்திரம் பயின்றவன் இவ்வுபதேசக் காற்று எத்திசையினின்றும் அடிக்கிற தென்பதை நன்கறிந்திருக்கிறான். ஆகவே, இவ் வுபதேசம் அவர்களுக்கு நூதன அறிவைப் புகட்டிவரும் வரையிலும், அவ் வுபதேசத்தைச் செய்பவர் யாராயினும் பரவாயில்லை.

இந்தியாவின் நிலைமை நாளுக்கு நாள் மாறிக்கொண்டு வருவதால், நமது ஆசாரங்களும் இந் நூதன நிலைமைக ளுக் கேற்கச் சீர்திருத்தம் பெறவேண்டுமென்பது அவசிய மாக ஏற்படுகிறது. இந்தியாவில் சென்ற முக்கால் நூற் றாண்டாகச் சீர்திருத்த சங்கங்களும் சீர்திருத்தக்காரர்களும் சமுத்திரத்திற் றோன்றும் நீர்க்குமிழிபோல் தோன்றி வருகிறார்கள். ஆனால், அந்தோ! அவர்களி லெலாவ் வொருவரும் அபஜயமே யடைந்தார்கள். பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்! ரஹஸ்யமான வுண்மையை யறியாத வர்கள்! ஒவ்வொருவரும் அறியவேண்டிய பெருத்த வுண் மையை யவர்க ளறியவில்லை. நமக்குள் காணப்படும் ஒவ் வொரு குறைவுகளையும் மதத்தின்மீது சுமத்தித், தனது சிநேகிதன் நெற்றியி லுட்கார்ந்த ஈயை யோட்ட விரும்பிய மனிதன் கதையாய் சிநேகிதனையும ஈயுடன் நாசம் பண் ணத்தக்க குத்துகளைப் பிரயோகித்துக்கொண்டு வருகின்ற

னர். ஆனால், இப்படிச் செய்வதில் நல்ல வேலையாய் அவர்கள் என்றும் அசையாக் கற்பாறைகளில் மோதிக்கொண்டார்க ளாகையால், அவர்களின் முயற்சிகள் நிஷ்பலமாய்விட்டன. அவர்களின் முயற்சிகள் குமார்க்கத்திற் பிரயோகிக்கப்பட்ட போதிலும், அவர்கள் தங்கள் தேசத்துக்கு நன்மை புரியவேண்டுமென்னும் எண்ணத்தைக் கொண்டுழைத்த கனவான்க ளாகையால், அவர்கள் நமது நன்றி யறிவுக்குப் பாத்திரர்களேயாம். ஏனெனில், அநேக நூற்றாண்டுகளாகப் பேருறக்கத்திலிருந்த நம்மவர்களை யெழுப்ப அவர்களின வல்சொற்கள் ஆவசியகமாயிருந்தன. ஆனால், அவர்கள் கைக்கொண்ட சாதனங்கள் பிரகிருதத்திலுள்ள ஆசாரங்களை யழிக்கமாத்திரம் சக்தியுள்ளனவா யிருந்தனவே யன்றி, அவ்வாசாரங்களின் ஸ்தானத்தில் வேறு யாதொரு நூதன ஆசாரங்களையும் உண்டாக்கச் சக்தியற்றவையா யிருந்தமையால், அவை நிஷ்பலமாய் விட்டன.

நாம் அவர்களை வாழ்த்துவோமாக. ஏனெனில், அவர்கள்தானே "நாங்கள் செய்த மாதிரி நீங்களும் போலிச் சீர்திருத்தம் செய்ய முயல்வீராகில், எங்களைப்போல் நீங்களும் அபஜய மடைவீர்கள்; ஆகையால் ஜாக்கிரதை." என்று இப்பொழுது நமக்குத் தம் அநுபவத்தின் மூலமாய்க் காட்டுவார்போன் றிருக்கிறார்கள். ஒவ்வொரு விர்த்தியும் உள்ளிருந்து ஆரம்பித்துத்தான் வெளிப்படவேண்டும் என்றும், ஒவ்வொரு சிருஷ்டியும் முன் சென்ற லயத்

தினின்றுமே வரவேண்டும் என்றும் அவர்கள் அறிய வில்லை. விதையானது தன்னைச் சுற்றிலுமுள்ள பொருள்களைத் தன்னினமாக்கித்தான், விருக்ஷத்தைத் தன்னினமா யுண்டாக்குமென்பதை அவர் மறந்தனர். ஒருவேளை இந்துக்களின் பூண்டே நசித்து வேறு ஜாதியார் இந்தியாவைக் கைப்பற்றுங்கால், அவ்விதம் ஏதாவது நடக்கலாமே யொழிய, அதனிடையில் அத்தகைய பிரமாதம் ஒருகாலும் நேரிடவே மாட்டாது. இந்தியாவே முயன்றாலும், அல்லது ஐரோப்பாவே முயன்றாலும், இந்தியா இறவாமல் பிழைத்திருக்கும் வரையிலும், ஒருகாலும் ஐரோப்பா ஆகமாட்டாது.

ஆயின், நம் இந்திய மாதா இறப்பளோ? பிராசீன காலம் முதல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் பிறப்பிடமும், ரிஷிகளின் பரிசுத்த பூமியும், இன்றுவரையிலும் புண்ணியவான்கள் உயிர் வாழப்பெற்றதுமான நமது ஆரியாவர்த்தம் நசிக்குமா? என் சகோதரர்களே! மகா பிரகாசமுள்ள விளக்கை எடுத்துக்கொண்டு, இவ் விரிந்த உலகத்தின் கண்ணுள்ள நாடு நகரம், வனம் வனாந்தரமெல்லாம் உங்களுடன் சுற்றுகிறேன். வேறு எத்தேசத்திலேனும் நம் தேசத்துப் புண்யவான்களைப் போன்ற மகான்களை உங்களால் முடியுமானால் காட்டுங்கள் பார்க்கலாம். "மரத்தினியல்பைக் கனியினாலறிக" எனும் ஆன்றோர் மொழியென்றும் பொய்யா மொழியன்றோ? இந்தியாவிலுள்ள

ஒவ்வொரு மாமரத்தி னருகிலும் சென்று அங்கு உதிர்ந்து கிடக்கும் புழுக்கள் நிறைந்து காய்வாட்டாயுள்ள பழங்களைக் கூடை கூடையாய்ப் பொறுக்கி, அவைகளைப்பற்றி வாலியம் வாலியமாய் நூல்களை யியற்றிபபோதிலும், ஒரு நல்ல மாங்கனியின் பிரபாவத்தையேனும் கூறினதாகுமோ? ஆனால், அம் மரத்தினின்றும் அதி மதுரமும் பக்குவமும் சுவையுள்ளதுமான ஒரு கனியைப் பறித்துப் பார்ப்பீர்களாயின், அப்பொழுது மாங்கனியைப்பற்றிய யாவத் சங்கதிகளையும் நீங்க ளறிந்துவிட்டதாகக் கூறுவேன்.

அதுபோலவே, இந்தியாவிலிருக்கும் ஞானிகள் தங்கள் ஒழுக்கத்தினால் இந்துமதம் இன்னதென்பதை விளக்கிக் காட்டுகின்றனர். மேலும், எந்த உத்தம மதமானது தன்னை அநுஸரித்தவர்களுக்கு மேலான இம்மைச் சுகத்தையும் மறுமைச் சுகத்தையும் அளித்துவருகின்றதோ, அநேகவாயிரம் ஆண்டுகளாய்ப் பல இன்னல்கள் சம்பவித்துத் தன்னைச் சிரழித்த போதிலும, என்றும் மாறாத யெளவன பருவத்துக்குரிய திடகாத்திரத்துடன் விளங்கி வருகின்றதோ, அப்படிப்பட்ட இந்து மதத்தின் இயல்பினையும், சக்தியையும் அதை யநுசரிப்பவர் அடையும் பலனையும் மேற்படி ஞானிகள் காட்டுகிறார்கள்.

இந்தியா நாசமுறுமா? அது நாசமுறுங்கால் உலகத்திலுள்ள அன்பு, பக்தி, ஞானம், வைராக்கியம் இவைகளெல்லாம் நசித்துவிடும். நசிக்கவே, அவற்றின் ஸ்தா

னத்தில் காமமும் போகமுமே தேவதைகளாகவும், செல்வமே குருவாகவும், வஞ்சனை - சூது - அக்கிரமம் இவைகளை புண்ய கர்மங்களாகவும், கடைசியாக மனிதனை இவைகளுக்குப் பலியாகவும் விபரீதப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் இத்தகைய விபரீதம் என்றும் சம்பவியாது; ஆகவே, இந்தியாவும் நாசமடையாது. இந்தியா இத்தனை நாள்களாகக் கஷ்டத்தை அநுபவித்தது வீணாகுமா? "பொறுத்தார் பூமியாள்வார்" என்பது பொய்யோ? கஷ்டங்களைப் பொறுமையுடன் சகிப்பவர்கள் இறுதியில் சுகமடைவார்கள் என்பது பொய்யோ? கஷ்டங்களைப் பொறுமையுடன் சகிப்பவர்கள் இறுதியில் சுகமடைவார்கள் என்பது யாவரும் மறுக்கவொண்ணா உண்மையல்லவா? துவேஷிப்பதைவிட அன்பு பாராட்டுதல் சிறந்ததல்லவா? ஆகவே, தற்காலம் இந்து மதம் விர்த்தியாவதைக் கண்டு அது வெறும் ஆரம்பசூரத்துவம் என்று கூறித் திரிபவர் மதிமோசம் போனவரேயாம்.

இங்ஙனம் இந்து மதமானது தற்காலம் அடைந்து வரும் அபிவிர்த்தியின் காரணத்தைப்பற்றி முதலில் சற்று ஆழ்ந்து யோசிப்போம்.

மேற்றிசை மதங்கள் தற்காலத்திய 'ஸயன்ஸ்' என்னும் சாஸ்திர ஆராய்ச்சியின் எதிர்நிற்கச் சக்தியற்றுப் படுசூரணமாய் மண்ணோடு மண்ணாய் மாறியும்; குருட்டு

நம்பிக்கையையும் மூட விசுவாசத்தையும் மிஷனரி சபைகளில் (Vote) வாக்கின்பேரில் முடிவாகும் சித்தாந்தங்களையுமே பிரமாணமாகக் கொண்டிருக்கும் மேற்றிசை மேற்பூச்சு மதங்களெல்லாம் சாஸ்திர ஆராய்ச்சியாகிற பெருஞ் சம்மட்டியால் மொத்துண்டு இருந்தவிடந் தெரியாமல் பஸ்மமாகியும்; சாஸ்திர ஆராய்ச்சி விர்த்தியாக ஆக, அவைகளை யனுஸரித்து அத் தேசத்திய மத நூல்களுக்கெல்லாம் பொருள் செய்தும், கடைசியில் அதுவும் சரிப்படாமற் போகவே, அம் மதநூல்களெல்லாம் குப்பை கூளங்கள் நிறைந்த அறைகளுக்கு அலங்கார சாமான்களாக மாற நேரிட்டும், மேற்றிசையில் உண்மையாய் மத விசாரணை செய்பவர் தங்கள் மதத்தின் உபயோகமற்ற தன்மையைக் கண்டு, அதைத் துறந்து தீர்க்க சந்தேகிகளாகவும் இருந்துவருகிற இச் சமயத்தில் உண்மையாய் உயிருடன் இருக்கும் மதங்கள் அமிருதகலசங்களென்னும்படியான வேதங்களில் ஞானமிர்தத்தைப் பானம் பண்ணிய இந்துமதமும் பௌத்தமதமுமே என்பது ஓர் அதிசயமல்லவா?

மேற்றிசையில் மதவுண்மையைத் தேடி அலைபவர்கள் கீதையிலும் தர்மபத மென்னும் புத்தமத நூலிலுமே ஆறுதலடைந்து களிப்புறுகிறார்கள்.

இதுகாறும் நமது மதமானது இக்ராதேசத்தவர்களால் தூஷிக்கப்பட்ட போதிலும், தற்காலத்திய சாஸ்திர ஆராய்ச்சியின் சகாயத்தால் இந்துமதம் ஸர்வ

சிரேஷ்டமென்று ஸ்தாபிக்கப்பட்டது. நமது மதத்தை யெதிர்த்த மதங்களிற் சில நசித்தன; சில நமது மதத்தை யனுசரித்துத் தங்கள் கொள்கைகளைச் சீர்திருத்திக்கொண்டு வருகின்றன. இதுவரையில் தன் தேசத்தின் துர்ப்பல ஸ்திதியைக் கண்டு துக்கித்த இந்துவானவன், இப்பொழுது தன் கண்ணீர்களைத் துடைத்துக்கொண்டு பார்க்க ஆரம்பிக்கவே, "ஊர்த்வ மூலம் அதஃசாக அச்வத்தம் ப்ராஹுரவ்யயம்' என்று புகழப்பட்ட ஸநாதந தர்ம விருக்ஷத்தை அடியோடு வெட்டவந்த கத்தியானது வியாதிக்கிரஸ்தனது ரணத்தை யாற்ற ரணவைத்தியன் பிரயோகிக்கும் கத்தியாக மாறின தென்பதை யறிய மிகவும களிப்புறுகின்றான்.

மேலும், தனது மதத்தைக் காப்பாற்ற வேதவாக்கியங்களுக்கு வேறு அர்த்தம் செய்வதும், அல்லது மற்றெவ்வித அயோக்கியத்தனமான குயுக்தி செய்வதும் அநாவசிய மென்பதைக் கண்டுகொண்டான். ஏன், தனது மதத்தில் துர்ப்பலமா யிருப்பனவெல்லாம் துர்ப்பலமானவைகளே யென்று தைரியமாய்க் கூறலாமே. ஏனெனில், அவை துர்ப்பலர்களான மந்தாதிகாரிகளுக் காகவே "அருந்ததீ தரிசன நியாய"த்தை யநுசரித்துப் பூர்வ ரிஷிகளால் ஏற்பட்டமையாலென்க. ஆகவே, சாஸ்திர விஷயங்களில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட வுண்மைகளையும் இனிக் கண்டுபிடிக்கப்படும் உண்மைகளையும் தன்னகத் தடக்கிக்கொள்ளத்தக்க விசாலமுள்ளதும், எக்காலத்தும்

தகர்க்க ஒண்ணாததுமான ஸர்வ சிரேஷ்டமாகிய மதத்தை ஸ்தாபித்த பிராசீன ரிஷிகளை நாம் வந்தித்து வாழ்த்துவோமாக. மேலும், இதர மதங்கள் நாசமடைவதற்குக் காரணமாயிருந்த தற்கால ஐரோப்பிய சாஸ்திர ஆராய்ச்சிகளெல்லாம் நமது முன்னோர்களால் பல யுகங்களுக்கு முன்னமேயே தங்கள் ஞான சக்தியினால் கண்டுபிடிக்கப் பட்டன என்பதையும் அறிந்துகொண்டான்.

ஆகையால் நாம், நமது மத உண்மைகள் எவற்றையும் நம்பாமல் விட்டுவிடவேண்டிய அவசியமுமில்லை, உண்மைகளைத் தேடிக்கொண்டு வேற்றிடங்களுக்குப் போகவேண்டியதுமில்லை. ஆனால், நாம்செய்யவேண்டியது என்னவெனின், நமது முன்னோர்கள் கண்டுபிடித்திருக்கும் உண்மைகளை நமக்கு வேண்டிய அளவு உபயோகப் படுத்திக்கொள்ளவேண்டு மென்பதே. அதையும் நாம் இப்பொழுது செய்ய ஆரம்பித்துவிட்டோம். இஃதல்லவோ இப்பொழுது இந்துமதம் விர்த்தியாவதற்கு உண்மையான காரணம்?

வங்காளத்து வாஸிகளே! முக்கியமாய் உங்களுக்கே நான் விண்ணப்பம் செய்கிறேன்.

சகோதரர்களே! அயல் நாட்டார் இந்துக்கள் எல்லோரையும் இழிவுபடுத்திக் கூறுவதற்குக் காரணமாகிய ஆபாசங்களுக்கெல்லாம் மூல ஸ்தானம் நாமே என்பதை மிகுந்த வெட்கத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம். இந்தியாவின் இதர பாகங்களில் உள்ள

வர்களின் மேல் ஏற்பட்டிருக்கும் பல அநீதியான நிந்தைகளுக்கு நாமே காரண பூதராமேனும். ஆனால், தெய்வ கிருபையால், இத்தகைய குற்றங்களுக் கெல்லாம் காரணமாயிருந்தது நாமே என்பதை யறிந்துகொண்டோம். ஆகையால், இனி நாம் தெய்வ சகாயத்தால் நம்மை மாத்திரம் ரக்ஷித்துக்கொள்வதன்றி, இந்துக்கள் எல்லோரும் நமது ஸநாதந மதத்தின் உண்மையை அறிந்து உய்யும்படியுஞ் செய்வோமாக!

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரிய மெனும் சத்துரு ஷட்வர்க்கத்தை வென்று ஞானத்தையடைய முயல்வோமாக; நன்மை செய்துவரும் எவர்க்கும் கைகொடுப்போமாக; மூன்று லோகங்களிலும் நம் மதத்தின் சந்தோஷச் செய்தியைப் பகிரங்கப்படுத்துவோமாக.

ஸர்வ பூதாந்தர்யாமியும், ஸர்வவ்யாபியும், ஜநநமரண ரஹிதமும், நித்தியமுமாகிய எந்த ஆத்மாவின் மகிமைகளை வர்ணிக்கச் சென்ற வாக்கானது, அப்படிச் செய்யச் சக்தியற்று மனத்துடன் திரும்புகிறது என்று வேதங்கள் முறை யிடுகின்றனவோ, எதை நோக்குமிடத்து மகாபிரகாசமுள்ள சூரியன், நக்ஷத்திர கணங்கள் முதலிய அளவற்ற அண்டங்கள் நிறைந்த அகில பிரபஞ்சமும் ஓர் துளிக்குச் சமானமோ, இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும், க்ஷமணர்களுக்கும் பொதுக் கொள்கையாகிய அத்தகைய ஆத்ம ஸ்வரூபமே நம் மதத்தில் முக்கிய கொள்கை

யென்பதை உணர்ந்து அதை ஆதாரமாகக் கொள்வோம். தேவர்கள் முதல் புழுப்பரியந்தமுள்ள ஸர்வ பூதங்களிலும் அவ்வாத்மா அந்தரியாமியா யிருக்கிறது. ஆகையால், வித்தியாஸம் சரீரத்தைச் சேர்ந்ததேயன்றி ஆத்மாவைச் சேர்ந்ததன்று.

இவ்வாத்தும வஸ்துவின் சக்தியை உலக ஸம்பந்தமான நாகரிக விஷயங்களில் உபயோகித்தால், ஜடசம்பந்தமான நாகரிகம் விர்த்தியாகும்; சிற்றறிவில் உபயோகிக்கின் உலகஞானம் விர்த்தியாகும்; ஆத்மஞானத்தில் உபயோகிக்கின் மனிதனது பிரஹ்ம ஸ்வரூபம் விளங்கும். ஆகையால், நம்முள் ஒவ்வொருவரும் இந்நிலையையடைய முயலல் வேண்டும். அங்ஙனம் முயல்கின்றவர்க்கும் நாம் ஸகாயஞ் செய்யக் கடவோம். யாரையும் பாவியெனக் கூறுதல் கூடாது. ஒவ்வொருவரையும் ப்ரஹ்மஸ்வரூபம் என்றே நினைக்கவேண்டும்.

நாமிருக்கு மிடம் இருள்மூடி யிருந்தால், "இருட்டா யிருக்கிறது, இருட்டா யிருக்கிறது" என்னும் முறைப்பாடே இருளை நீக்க வல்லதன்று. பிரகாசத்தைக்கொண்டு வந்தால்தான் இருள் போகும். வெறும் தூஷணைகளும் கண்டனைகளும் என்றும் நிலைநிற்கா. ஆகவே, உண்மை வஸ்துவை யறிவதற்கே முயலவேண்டும். "நாம் இருக்கிறோம்" "கடவுள் இருக்கிறார்" "நாம் ஆத்ம ஸ்வரூபம்" "சிவோஹம்" "சிவோஹம்" என்று கூறிக்கொண்டு ஞானமார்க்கத்திற் செல்வோம். நாம் ஜடவஸ்துக்க ளல்லேம்;

ஆத்ம ஸ்வரூபிகளே. நாமரூபங்களுள்ளனவெல்லாம் நாமரூபரஹிதமான வஸ்துவுக்கு வசப்பட்டனவாம். இது தான்வேதங்கள் முறையிடும் ஸநாதந தர்மம். விளக்கை உள்ளே கொண்டுவாருங்கள்; இருள் தானாய் நீங்கிவிடும். வேதாந்த ஸிம்ஹம் கர்ஜிக்கட்டும்; நரிகள் தாமாய் வளைகளில் ஓடிப்பதுங்கும். ஆகையால், இவ் வுண்மைகளை எங்கும் பஹிரங்கப்படுத்துங்கள்; முடிவில் ஆகிறது ஆகும். ஆத்மசக்தியை வெளிப்படுத்தி அதை ஆரியாவர்த்த நாட்டி லெங்கும் பரவச் செய்யுங்கள். காரிய ஸித்திக்கு அவசியமான தெல்லாம் தானுய் வந்தமையும்.

நம்முள் இருக்கும் தெய்வ சக்தியை வெளிப்படுத்துவோமேல், மற்றதெல்லாம் தானாகவே கைகூடும். வேதங்களில் கூறப்பட்டுள்ள "இந்திரவிரோசன உபாக்கியான"த்தைக் கவனியுங்கள். ஆசாரியர் இந்திரனுக்கும் விரோசனனுக்கும் பிரஹ்மவித்தையை உபதேசித்தார். ஆனால், அசுரனாகிய விரோசநன் தன் தேகத்தையே பிரஹ்மமாகக் கிரஹித்தான். தேவனாகிய இந்திரனே ஆத்மவே பிரஹ்மமென் றறிந்தான். நீங்கள் இந்திரனுடைய குழந்தைகள்; தேவர்களின் ஸந்ததி. உங்களுக்கு ஜடம் ஒருகாலும் ஆத்மாவாகமாட்டாது; தேகம் ஒருகாலும் ஆத்மாவாக மாட்டாது.

இந்தியர் விர்த்தியடையும்,—ஆனால், அது சரீர பலத்தினால் ஆகத்தக்கதன்று, ஆத்ம பலத்தினாலேயே ஆகத்தக்கது. அதுவும் ஸந்ந்யாஸியின் சிறந்த குணமாகிய

உபசாந்தியாலும் ஸர்வ ஜீவகாருண்யத்தாலும் ஆகுமே யன்றி, எல்லாவற்றையும் நிர்மூலமாய்ப் பாழாக்கக் கங்கணம் கட்டிக் கொள்வதா லன்று; அதிலும் ஸந்யாஸிகள் பிச்சையெடுக்கும் கப்பறையால் ஆகுமேயன்றி செல்வப் பெருக்காலன்று. பலமற்றவர்களா யிருக்கிறோம் என்று சொல்லாதீர்கள். ஏனெனில், ஆத்மா ஸர்வசக்தி யுள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்குத் தொண்டு பூண்டொழுகும் அடியார்கள் தொகையில் குறைந்தவர்களாயினும், அவர்கள் செய்து வரும் பெரும் காரியத்தைப் பாருங்கள். அவர்கள் நமது மதத்தை ஆஸாம்தேசம் முதல் ஸிந்துநதிவரையிலும், ஹிமாசலமுதல் குமரிமுனை வரையிலுமுள்ள நாடெங்கும் பிரவசனம் செய்துவருகிறார்கள். அவர்கள் இமயமலையில் 20,000 அடி உயரமுள்ள இடங்களிலெல்லாம் குளிரென்றும் பனியென்றும் பாராமல் கால் நடையாகவே நடந்து திபேத் தேசத்துக்கும் சென்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆஹாரத்தை இரந்து சாப்பிட்டும், கந்தைகளை உடுத்தும் வருகிறார்கள். அவர்களை போலீசார் பின்தொடர்ந்து பிடித்து ஜெயிலிலும் வைத்தார்கள். ஆனால், அவர்கள் யாதொரு தீங்கும் செய்யாத புண்ணிய சீலர்களென்று ராஜாங்கத்துக்குத் தெரியவே உடனே விடுதலை செய்யப்பட்டார்கள்.

அவர்கள் இப்பொழுது 20 பேரிருக்கிறார்கள். வங்காளத்து யௌவன புருஷர்களே! அவர்களை வேண்டுமானால்

நாளையே 20,000 பேராகச் செய்யுங்கள். அவர்களை உங்கள் தேசம் வேண்டுகிறது. உங்கள் தேசமாத்திரமா, உலகம் முழுவதுமே வேண்டுகிறது. உங்களுக்குள்ளிருக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவீராயின், பசிதாகங்களையும் சிதோஷ்ணங்களையும் பொறுக்கும்படியான சக்தியை யடைவீர்கள். சகல போகங்களும் நிறைந்த மாளிகையில் உண்டுடுத்து மதத்தை யொழுங்காய் எழுதி வைத்துக்கொண்டு அனுசரிப்பது ஏனைய தேசத்தவர்க்கு ஏற்குமேயன்றி, இந்தியாவிற்கு ஏற்காது. இக் கள்ளத்தனத்தை இந்தியா எப்படியோ கண்டுபிடித்துவிடுகிறது நீங்கள் எல்லாவற்றையுந் துறக்கவேண்டும். பெருந்தன்மையுள்ளவரா யிருங்கள். தந்நயம் ஒழியாமல் எவ்விதம் பெருங் காரியமும் நிறைவேறாது. இவ்வுலகத்தைச் சிருஷ்டிப்பதற்காக விராட்புருஷனை தன்னைத்தான் பலியாகக் கொடுத்துக்கொண்டார். உங்கள் சுகங்களையும், போகங்களையும், பெயரையும், புகழையும், அந்தஸ்தையும், அதோடு உங்கள் உயிரையுங்கூட விட்டுவிட்டு, கோடானுகோடி ஜனங்கள் இந்த ஸம்ஸாரக் கடலைக் கடந்து செல்வதற்கான அணையைக் கட்டுங்கள். நன்மை பயக்கும் சக்திகளை யெல்லாம் ஒன்று சேருங்கள். எந்தக் கொடியின் கீழ் நடக்கிறோமென்று யோசிக்கவேண்டாம், நம் நிறம் பச்சையா நீலமா செம்மையா என்றும் யோசிக்கவேண்டாம். எல்லா நிறங்களையும் ஒன்றாய்க் கலந்து அன்பைக் காட்டும் நிறமாகிய வெண்ணிறப் பேரொளியை யுண்டாக்குங்கள். உழைக்க வேண்டியது நமது கடமை பலன் தனக்

குத்தானே உண்டாகும். நீங்கள் தெய்வத்தன்மையரான வற்குக் குறுக்காய் நிற்கும் எவ்வித ஜநஸமூஹக் கட்டுப் பாடும் ஆத்ம சக்திக்கு முன் நிற்காது. இனி வருங்காலம் எப்படி யிருக்குமோ எனக்குத் தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்ளவும் எனக் கிஷ்டமில்லை. ஆனால், ஒரு காட்சி மாத்திரம் எனக்குப் பிரத்தியக்ஷம்போல் நிச்சய மாய்த் தோன்கிறது. அந்தக் காட்சி யென்னவென்றால், நமது பூர்வகால மாதா மறுபடியும் விழித்தெழுந்து புநர் யௌவந ஸௌந்தர்யத்துடன் முன்னிலும் அதிக பிர காசமாய் ஜொலித்துக்கொண்டு தன் திவ்ய ஸிம்ஹாஸநத் தில் எழுந்தருளி யிருக்கிறாள். அவளது மஹிமையை உலகத்துக்கெல்லாம் சாந்தி வசநத்தோடும் மங்களாசீர் வாதத்தோடும் பஹிரங்கமாய்ப் பிரவசனம் செய்யுங்கள்.

இங்ஙனம்,
அன்பிலும் உழைப்பிலும்
என்றும் உங்களவனான
விவேகாநந்தன்.

---

இந்தியாவிலே அநேக பட்டணங்களில் சபை கூடி, அமெரிக்காவில் நமது வேதாந்தக் கொடியை நாட்டிய சுவாமிகளை ஜனங்கள் கொண்டாடி வந்தனோபசார பத்தி ரிகை யனுப்பியது போலவே ராஜபுத்ர ஸ்தானத்திலுள்ள க்ஷேத்திர (கேத்டி) ஸம்ஸ்தானத்து மஹாராஜாவும் இதற்கென்று ஒரு பெரிய தர்பார் கூட்டுவித்து, அதன் கண் அமெரிக்காவில் நமது மதத்தை வெகு சிறப்பாய்

உபந்யசித்த சுவாமிகளையும், அவரை அன்பாய் உபசரித்துக் கொளரவித்த அமெரிக்கரையும், சிகாகோ உலகமத மஹாசபையாரையும் கொண்டாடிப் பேசின சங்கதிகள் அடங்கிய கடிதம் ஒன்று மேற்படி மஹாராஜா சுவாமிகளுக்கு அனுப்பினார். அதற்கு சுவாமிகள் எழுதிய உத்தரத்தில் கம்பீரமான கருத்துக்கள் பல பொதிந்திருக்கின்றமையால், அதை அப்படியே மொழிபெயர்த்து அடியில் வரைகின்றோம்.

க்ஷேத்ரி மஹாராஜா அவர்களுக்கு
சுவாமிகள் எழுதிய நிருபம்.

காம்பீர்ய குணநிதியாகிய ராஜகுமாரா!

"யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்."

"எவ்வெவ் விடங்களில் நீதி குன்றி அநீதி தலையெடுக்கின்றதோ, அவ்வவ் விடங்களில் தர்மத்தை நிலைநிறுத்தும்பொருட்டு நான் தோன்றுகின்றேன்" என்பது அநாதி நித்தியனாய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணன் பவித்திரமாகிய கீதையிலே அருளிய திருவாக்கல்லவா?

இவ் வாக்கியமானது பிரபஞ்சத்தில் மத உணர்ச்சியாகிய ஓர் சக்தியினது அவ்வப்போது ஒங்கிப் பாவும் தன்மையைச் சூசனையாய் விளக்குகின்றது. இம் மாறுதல்கள் தமக்கேற்ற சிறப்பான வழியாய் அடிக்கடித் தோன்றிக் கொண்டு வருகின்றன; மற்றை எல்லா விஷயங்களிலும்

தோன்றும் மகத்தான மாறுதல்களைப்போல் இவைகளும் தம்தம் சுற்றுப்புறத்திலுள்ள ஒவ்வொன்றையும் சற்றேறக் குறைய மாற்றினாலும், சுபாவமாய்த் தம் சக்தியினால் பாதிக்கக்கூடியவைகளையே அதிக தீவிரமாய் மாற்றிவிடு கின்றன. உலக திருஷ்டாந்தமாய்ப் பார்க்கும்போது, பிர பஞ்சத்தின் ஆதி ஸ்திதியில் குணங்களாகிய சக்திகள் எப் படி ஒன்றாய் விளங்குமோ, (இப்படி யிருக்கும் நடுநிலைமை மாறுதலும் மாறினதை மறுபடியும் அடையும்பொருட்டுச் செய்யும் முயற்சியுமே உலகம் தோன்றுதலென நம்மால் சொல்லப்படுகின்றன.) அப்படியே இன்னும் குறைந்த திருஷ்டாந்தம் ஆகிய நமது பூமியில், வஸ்துக்கள் வெவ் வேறு ஆதலும் அதற்கு இன்றியமையாப் பிரதி தர்ம மாகிய ஒருமையான தன்மையாதலும் ஆகிய இவ்விரண் டும், எல்வளவு காலம் உலகத்திலுள்ள பல மானிடஜாதி கள் தனித்தனிக் குணங்களைக் கற்பித்துக்கொண்டு ஜாதி யென்றும் குலமென்றும் பலவித வகுப்புகளை உண்டாக் கிக்கொண்டு, மனிதர்க்கு மனிதராய் வேற்றுமை பாராட் டிக்கொண்டிருப்பார்களோ, அவ்வளவு காலம் அப்படியே இருக்கவேண்டும். ஆகையால், நிஷ்பக்ஷபாதமாயும், நடு நிலைமையாயும் பிரிவினை செய்யப்பட்ட இவ்வுலகில் ஒவ் வொரு ஜாதியும் சிறப்பாய் ஒவ்வொரு வகையான சக்தி யைச் சங்கிரகிக்கவும், பாவச்செய்பவும் வல்ல ஒரு ஆச் சரியமான "சக்தி ஜன்னிய சலன" யந்திரத்தை யொத்து நிற்கும். எல்லாவித உடைமைகளிலும் அந்தச் சிறப்பான தன்மையே அந்த ஜாதியின் முக்கியமான குணமாய்

விளங்கும். மானிடரின் சுபாவத்தில் எதிலாயினும் எழுச்சி நேரிடுங்கால், அது இதர ஜாதிகளைப் பாதித்தாலும், எந்த ஜாதிக்கு அந்த சுபாவம் முக்கியமான குணமாய் இருக்கிறதோ, அந்த ஜாதியை அது மத்திய ஸ்தானமாய் ஆக்கிக்கொண்டு அந்த ஜாதியை அது பாதாளம் வரையில் கலக்கி விடுகின்றது சாதாரணமாய்ப் புறப்படுகின்றது. அவ்வாறே உலகத்தில் மத சம்பந்தமான விஷயங்களில் கொந்தளிப்பு உண்டாகும்காலத்தில், அது இந்தியாவில்விசேஷ மாறுதல்களை உண்டாக்குவது நிச்சயம். இந்தியாவோ அடிக்கடி உண்டாகும் மத எழுச்சிகளுக்கு மத்தியஸ்தானமாயிருக்க நேரிட்டது. ஏனெனில், இந்தியா எல்லாவற்றைக்காட்டிலும் மதவுணர்ச்சியில் பேர்பெற்ற தேசம்.

ஒவ்வொருவனும் தன் தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ள அநுகூலமான தெதுவோ அதைத்தான் சத்தியமென்கிறான். இகத்திலேயே மனதுள்ள ஒருவனுக்குப் பணமாக மாற்றக் கூடியதெல்லாம் சத்தியம்; அப்படிச் செய்யக் கூடாதது அசத்தியம். அதிகாரப் பிரியனுக்குத் தன் அயலாரை ஆளும்படியான தனது கோரிக்கைக் கிசைந்த தெதுவோ, அதுதான் சத்தியம்; மற்றது அசத்தியம். மனிதன் தான் கோரியது எதில் கிடைக்கவில்லையோ, அதில் ஒன்று மில்லையென்று நினைக்கின்றான். பொன்னுக்கும் பிரக்கியாதிக்கும் பற்றுஞ் சில இன்பத்திற்கும் தம்முடைய சக்தியை மாற்றுபேரம் செய்வதே லட்

சியமாக உடையவர்களுக்கும், அணிவகுத்த சைந்நியத்தோடு பிரயாணம் செய்தலே தமது வல்லமையைக் காண்பிக்கிற வகையென்று நினைக்கிறவர்களுக்கும், இந்திரியங்களால் அநுபவிக்கிற இன்பங்களோ நாம் அனுபவிக்கக் கூடிய சுகமென்று நினைக்கின்றவர்களுக்கும் இந்தியாவானது, தாம் கருதியபடி வாழ்நாள் அபிவிருத்தி யடைவதற்கு மிருத்யுவைப் போன்றதாகிக் கொடியகாற்று வீசும் பாலைவனத்தை ஒத்ததாய் எப்போதும் தோன்றும் இந்திரிய உலகத்துக்கு வெகு தூரத்தில் பாய்ந்துகொண்டிருக்கும் நித்தியத்துவமாகிற நதியினின்றும் ஜலம் பருகுவதினால், ஜந்மம் வேண்டுமென்கிற எவருடைய தாகமானது அடங்கிற்றோ, பாம்பானது மேல்தோல் நீக்குவதுபோல் எவர்களுடைய ஆத்மாவானது காமம், காஞ்சனம், கீர்த்தியென்கிற முப்பாசங்களை விலக்கி விட்டதோ, பாசத்தால் கட்டப்பட்டவர்களால் இன்பமென்று மதிக்கப் பெற்றவையும் - உள்ளே ரம்பப்பொடியை நிறைத்து வெளியே பொன் முலாம் பூசப் பெற்றவையுமான உண்டைகளுக்காகச் செய்யும் அற்பமான சண்டைகளையும், சச்சரவுகளையும், மாற்சரியங்களையும் எவர்கள் நிச்சலமென்கிற உந்நதஸ்தானத்தினின்று அன்புடனும் பிரியத்துடனும் பார்க்கிறார்களோ, யாருடைய சஞ்சித சத்கருமங்கள் அவர்களுடைய திருஷ்டியினின்றும் அஞ்ஞானத்தை நீக்கிவிட்டு வீணான ரூப நாம பேதங்களின் மூலமாய் உண்மையைப் பார்க்கும்படி செய்கிறதோ, அப்படிப்பட்டவர்கள் எவ்விடத்திலிருப்பினும், அவர்களது ஞானத்துக்கு மாத்ரு

ஸ்தானமாயும், குறையாச் சுரங்கமாயுமுள்ள இந்தியா வானது, தோன்றி மறையும் சாயையால் கற்பிக்கப்பட்ட இவ்வுலகத்தில் ஒரே சத்துப்பொருளா யுள்ளவரைத் தேடிக்கொண் டிருக்கிறவர்களுக்குப் புகலிடமாய்த் தோன்றி நிற்கின்றது.

இந்திரியங்களால் உணரத் தகுந்தவாறு ஸ்தூலமாய் வல்லமையைக் காட்டினால்தான் மானிடகோடிகளில் பெரும்பாலார் தெரிந்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு யுத்தமென்கிற முரட்டுக் கிருத்தியமும், உற்சாகமும், அதனால் உண்டாகும் வல்லமையும், கொள்ளையுமே மிகவும் சத்தியமானவை. எவ்வாழ்க்கையானது, தன்முன் உள்ள வற்றை யெல்லாம் வாரிக்கொண்டு எழும்பும் சுழல்காற் றைப்போல இருக்கவில்லையோ, அஃதவர்களுக்குச் சாவுக் குச் சமானம். தேசாபிமானமென்பது சற்றேனு மில்லாம லும் ஜனங்களில் கொஞ்சங் கூட ஒற்றுமையில்லாமலும், காத்துக்கொள்ள வேண்டுமென்கிற அபிப்பிராயமேனும் நம்பிக்கையேனும் இல்லாமலும், ஜயசாலிகளான அந்ய தேசத்தாருடைய அடிகளில் பல நூற்றாண்டுகளாய்க் கிடக்கும் இந்தியாவானது அப்படிப்பட்டவர்களுக்கு அழு கிப்போன எலும்புகள் நிறைந்த தேசமாயும், ஜீவனற்று அழுகி நாற்றமெடுக்கும் ஒரு குப்பையாகவுமே புலப்பட வேண்டும்.

தகுந்தவர்களே நிலைக்கிறார்களென வழங்கிவருகிறது. அப்படியானால் எல்லா ஜாதியாரைக் காட்டிலும் தகுதி

யற்றவர்களெனச் சாதாரணமாய் மதிக்கப்பட்ட இந்த ஜாதியார், எந்த ஜாதியாருக்கும் எப்போதும் நேரிட்டிராத கொடிய கஷ்டங்களைச் சகித்தும் ஏன் அழிந்துபோகும் குறிகளைக் காண்பிக்கவில்லை? சௌரியமும், சுருசுருப்பும் உள்ளவரென மதிக்கப்படும் ஜாதியாரின் அபிவிருத்தி யாகும் தன்மை தினம் தினம் குறைந்துகொண் டிருக்க, அழியா இந்து, அவர்களை அதிக்கிரமித்துத் தன் விருத்தி யாகும் திறமையைக் காண்பிக்கிறான். ஒரு க்ஷணகாலத்தில் உலகத்தை இரத்தப் பிரவாகமாக்க வல்லவருக்குச் சந்தேகமில்லாமல் கீர்த்தி உண்டாகவேண்டியதுதான். சில லக்ஷம் ஜனங்களை ஐசுவரியத்தில் தளராமல் வைத்திருபப தற்காகப் பூமியிலுள்ள பாதி ஜனங்களைப் பட்டினி போடு மவர்களும் மிக்க பிரதாபசாலிகள்தாம். ஆனால், மற்றெவருடைய வாயினின்றும் சோற்றைப் பிடுங்கிக்கொள்ளாமல் நூறு லக்ஷக்கணக்கான ஜனங்களை அமைதியோடும் திருப்தியோடும் வைத்திருக்க வல்லவர்களுக்கு ஒரு கீர்த்தியும் கிடையாதோ? இதரர்களுக்குக் கொஞ்சங்கூடக் கெடுதி செய்யாமல் பல நூற்றாண்டுகளாய் அளவிலா லக்ஷக்கணக்கான ஜனங்களை அபிவிருத்தி செய்து நடத்தி வந்தது வல்லமை யல்லவா? முற்காலத்திய எல்லா ஜாதியாரின் மதக்கோட்பாடுகளும் வீரர்களின் கதைகளைச் சொல்கின்றன. அவர்களுடைய பிராணன் அவர்களுடைய தேசத்தின் ஓர் சிறு பாகத்தில் திரண்டிருந்தது. அதைத் தொடுகிறவரையில் அவர்கள் அவத்தியர்களா யிருந்தார்கள். அதைப்போல் ஒவ்வொரு ஜாதியிலும் பிராணன்

திரண்டிருக்கும் ஓர் மத்திய ஸ்தானம் உண்டுபோல் தோன்றுகிறது. அந்த இடம் தொடப்படாதவரையில், எவ்வளவு சஞ்சலமாயினும் கஷ்டமாயினும் அதை அழிக்க மாட்டாது. இந்தியாவுக்கு மதத்தில்தான் பிராணன் நிலைத்திருக்கிறது. இந்துக்கள் தமது முன்னோர்கள் சேகரித்து வைத்த பிதுரார்ஜ்ஜிதத்தை மறக்காதிருக்கும் வரையில், அவர்களை அழிக்கும்படியான சக்தி இப் பூமியில் ஒன்றுமிராது. முற்காலத்திய சங்கதியைப்பற்றி அடிக்கடி நினைப்பூட்டிக்கொள்பவர்களை, இக்காலத்தில் ஒவ்வொருவரும் தூஷிக்கிறார்கள். முற்காலத்தைப்பற்றி அவ்வளவு கவனிப்பதே இந்தியாவின் சஞ்சலத்துக்குக் காரணமென்கிறார்கள். அதற்கு மாறாக, எனக்கோ, அப்படி நினைக்காமலிருத்தல்தான் இந்தியாவின் சஞ்சலத்துக்குக் காரணமெனத் தோன்றுகின்றது. முற்காலத்தை மறந்திருந்த வரையில் இந்துஜாதியார் மயக்கமுற்றிருந்தார்கள். அதைக் கவனிக்க ஆரம்பித்தவுடன், எந்தப் பக்கத்திலும் ஒரு நூதன உஜ்ஜீவன சக்தி பரவித் தழைத்துச் செழித்தோங்கலாயிற்று. கடந்த காலத்தைக்கொண்டே வருங்காலத்தை உருவாக்கவேண்டும். இந்தக் கடந்த காலந்தான் வருங்காலமாகும். ஆகையால், இந்துக்கள் கடந்தகாலத்தைப் பற்றி எவ்வளவு அதிகமாய்க் கவனிக்கிறார்களோ, அவ்வளவு கீர்த்திப் பிரதாபமுள்ளதாகும் வருங்காலம். எவனொருவன் கடந்த கால சம்பவங்களை ஜனங்களுக்குப் புகட்டுகிறானோ, அவன்தான் அந்த ஜாதியாருக்கு மிகுந்த உபகாரம் செய்பவன். இந்தியாவானது தாழ்ந்த ஸ்திதிக்கு,

வந்துவிட்டதற்குக் காரணம் முன்னோர்களுடைய சட்டங்களும், வழக்கங்களும கெட்டதாயிருந்தமையினாலன்று. மற்றேதென்றால், அவைகளை அவற்றின் நியாயமான முடிவைப் பெற விடாமையினால்தான், இந்தியாவின் சங்க விதிகள் சிற்சில காலங்களில் தவறாமல் மாறுதலடைவனவாய் இருக்கின்றன வென்பதை ஒவ்வொரு புத்திமானும் அறிந்திருக்கிறான். முதல்முதல் ஏற்பட்ட காலத்தில் இவ்விதிகள் ஓர் பெரிய கருத்தை நோக்கி ஏற்படுத்தப்பட்டன. அக் கருத்தானது மெதுவாய் நாளுக்குநாள் வெளியாய் வருமாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முற்காலத்திய இந்தியாவின் மஹரிஷிகள் வருங்கால சம்பவங்களை யறிந்தவர்களா யிருந்தமையால், அவர்களுடைய விவேகத்தை உலகத்தார் சரியாய் மதிப்பதற்குப் பல நூற்றாண்டுகள் செல்லும். அந்த ரிஷிகளின் சந்ததியார் அவர்களுடைய விசித்திரமான ஏற்பாட்டை அறிய அசக்தர்களா யிருப்பதே இந்தியா ஹீன ஸ்திதியில் வருவதற்குக் காரணம். முற்காலத்திய இந்தியாவானது பிரஜைகளில் பிரஹ்ம க்ஷத்திரிய ரென்கிற இருவகுப்பினருடைய அதிகார அபேக்ஷையுள்ள ஏற்பாடுகளுக்கு யுத்தரங்கமா யிருந்தது. க்ஷத்திரியர்கள் தங்களுக்குச் சட்டப்படி ஆகாரமென்று எண்ணியிருந்த மகா ஜனங்களிடத்தில் அவர்கள் செய்யும் கொடுமைகளை ஒருகால் புரோஹிதர்கள் (பிராஹ்மணர்கள்) தவிர்க்கிறவர்களா யிருந்தார்கள். மற்றொருகால் பிராஹ்மணர்கள் ஜனங்களைக் கட்டி யாளவேண்டுமென்ற கருத்துடன் அபரிமிதமான மதச் சடங்குகளைக் கற்பித்

11

து செய்துவந்த கொடுமைகளைத் தவிர்ப்பதற்கு முன் வந்தவர்கள் க்ஷத்திரியர்கள். பிராஹ்மணன் கேவலம் "கர்மி"யாகவும், க்ஷத்திரியன் "ஞானி"யாகவும் இருந்தான். நமது சரித்திரத்தின் முற்பாகத்திலேயே இவ்விருதிறத்தாருக்கும் சண்டை நேரிட்டுவிட்டது. இதைச் சுருதிகளில் நன்றாய்க் காணலாம். ஸ்ரீ கிருஷ்ணன் க்ஷத்திரிய தர்மத்தையும் ஞானத்தையும் கைக்கொண்டவர்களுக்குத் தலைவராய் எழும்பிச் சமரஸத்துக்கு வழியைக் காண்பித்த போது சற்று அமைதி யுண்டாயிற்று. அதன் பயன்தான் தத்துவஸாரமாயும் ஸமரஸ ஸித்தாந்த சேகரமாயும் அமைந்து விளங்கும் கீதாசாஸ்திரம். ஆயினும், இவ்விரு திறத்தாருக்குள்ளும் நேர்ந்த கலகத்துக்குக் காரணம் இன்னும் அழியாமல் இருநததமையால், அதன் காரியமும் வெளிப்பட்டே தீரவேண்டியதா யிருந்தது.

ஏழைகளின்மீதும் அஞ்ஞானிகளின்மீதும் அதிகாரம் செலுத்தவேண்டுமென்கிற எண்ணம் இவ்விருதிறத்தவருக்கும் இருந்தபடியினால், மறுபடியும் சண்டை பலமாய் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்திய கிரந்தங்கள் சொற்பமாகையினால் இச் சண்டைகளைப்பற்றி நன்றாய் நாம் தெரிந்துகொள்ள இடமில்லை; ஆயினும், கடைசியில் க்ஷத்திரியர்களுக்கும் ஞானத்துக்கும் சுதந்திரத்துக்கும் ஜயம் உண்டாயிற்று; சடங்குகள் குன்றின; அவற்றில் அநேகம் அடியோடே மறைந்தன. இவ்வெழுச்சிதான் பௌத்த சீர்திருத்த மெனப்படுவது. அது மத விஷயத்தில் கர்மமாகிய

சடங்குகளினின்று விஸ்வாசத்தையும், ராஜாங்கத்தில் ராஜாக்களால் புரோஹிதராகிய பிராஹ்மணர்களுக்குத் தோல்வியையும் உண்டாக்கிவிட்டது. முற்காலத்தில் இந்தியாவில் தோன்றிய இரண்டு மஹான்களாகிய ஸ்ரீ கிருஷ்ணரும், புத்தரும் க்ஷத்திரியரா யிருப்பதும், ஸ்திரீ புருஷ பேதமும் பிறப்புத் தாரதம்மியமுமின்றி ஞானத்தை யாவருக்கும் பொதுவாகச் செய்துவிட்டதும் நன்றாய் யோசிக்கத் தகுந்த விஷயம். புத்தமதமானது அதி அற்புதமான தனது நீதியிலேயே தனது பலத்தைப் பொருந்தி யிருந்தும், கடவுள் என்கிற சிந்தனையைக் கட்டோடே ஒழித்து விட்டமையாலும், அதினுடைய சக்தியை யெல்லாம் கேவலம் நிவிர்த்தியில் செலுத்திவிட்டமையாலும், அது தன்னுடைய ஜந்ம பூமியிலேயே மடிந்துபோகநேரிட்டது. போனதுபோக, அம்மதத்தில் நின்ற பாகம் குருட்டு நம்பிக்கையுள்ள சடங்குகளைப் போதித்ததன்றித், தான் எவற்றை நீக்கவந்ததோ, அந்த மதச் சடங்குகளைக் காட்டிலும் நூறு பங்கு அதிக அநாகரிகமான சடங்குகளை உண்டாக்கிக் கொண்டது. அது ஒருவாறு வேதங்களில் சொல்லியிருக்கிற பசு யஜ்ஞங்களை நடக்கவொட்டாமல் அடக்கினபோதிலும், இந்தத் தேசத்தைக் கோவில்களை, விக்கிரகங்கள், குறிகள், குருமாரின் எலும்புகள் முதலியவற்றால் நிறைத்துவிட்டது.

ஆரியர்களும், மங்கோலியர்களும், அநேக மூடாட்டு ஜாதிகளும் சேர்ந்த ஒரு கலப்பு மதத்தை அது உண்டாக்

இனமையால், பயங்கரமான வாமாசாரங்கள் உற்பத்தியாவதற்குத் தன்னை யறியாமலே இடம் கொடுத்துவிட்டது. முக்கியமாய் இந்தக் காரணங்களால்தான், ஸ்ரீ சங்கராசாரியர் முதலிய ஸந்நியாஸிகளால் மஹானான புத்ததேவருடைய மதம் இந்தியாவினின்று துரத்தப்பட்டது. மானிட ரூபமெடுத்த மஹாத்மாவாகிய ஸாக்ஷாத் புத்த பகவானாலேயே பிரவஹிக்கும்படி செய்யப்பட்ட பிராணனென்கிற நதியானது நீக்காற்றுள்ள குட்டையாய்விட்டது. இந்தியாவோ, ஸ்ரீ சங்கராசாரியரும், அவருக்குப் பின்னால் சீக்கிரமாய் ஒருவருக்குப்பின் ஒருவராய் ஸ்ரீ ராமாநுஜரும், ஸ்ரீ மத்துவரும் புறப்படும்வரையில், பல நூற்றாண்டுகள் காத்திருக்கவேண்டியதாயிற்று. இக்காலத்தில் இந்தியாவின் சரித்திரம் புதிய மாதிரியாய்விட்டது. முற்காலத்திய பிரஹ்ம க்ஷத்திரியர்கள் மறைந்துவிட்டார்கள். ராஜரிஷி பிரஹ்மரிஷி ஸ்தானமாயும், ஆரியாவர்த்தமாயும், ஸ்ரீ கிருஷ்ணன் புத்தன், இவ்விருவர்களுடைய ஜந்ம பூமியாயு மிராநின்ற விந்திய ஹிமய மலைகளுக்கு நடுவிலுள்ள மத்தியப் பிரதேசம் மௌனமாய்விட்டது. மௌனமாகவே, இந்தியாவின் தென்கோடியிலே, மாறுபட்ட நடையுடை பாவனைகளுடைய ஜாதிகளிலிருந்தும், பூர்வீக பிராஹ்மண வம்சபாரம் பரியத்துடன் சம்பந்தம் பாராட்டுங் குலங்களி லிருந்தும், ஹீநஸ்திதி யடைந்துவிட்ட பௌத்த மதத்துக்குப் பிரதிவாதிகள் கிளம்பினார்கள். ஆரியாவர்த்தத்திலிருந்த பிராஹ்மணர்களும் க்ஷத்திரியர்களும் என்ன வானார்கள்? இங்கும் அங்கும் சிலர்

தாங்கள் பிராம்மணர் க்ஷத்திரியர்களென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; மற்றவர்களெல்லாம் மறைந்தனர். இப்பிராஹ்மணர்கள்,

ஏதத் தேசப்ரஸூதஸ்ய ஸகாசாதக்ர ஜந்மந:
ஸ்வம் ஸ்வம் சரித்ரம் சிக்ஷேரந் ப்ருதிவ்யாம் ஸர்வமாநவா:

—மநுஸ்ம்ருதி. II. 20.

என்றபடி, தங்களிடத்திலேயே உலகமெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று தற்புகழ்ச்சி செய்துகொண்ட போதிலும், தென்தேசத்தாருடைய காலடியில் உட்கார்ந்து மிகவும் வணக்கமாய்ப் பிராயச்சித்த வேஷதாரர்களாய்க் கற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. இத் தென் தேசத்தாராலேயே வேதமானது இந்தியாவுக்கு வேதாந்தரூபமாய் மறுபடியும் கொண்டு வரப்பட்டது. கிருஹஸ்தர்களும் ஆரணியகங்களைப் படிக்க ஆரம்பித்தனர். புத்த மதம் பரவுங்கால் வாஸ்தவமாய்ப் படித்தவர்கள் க்ஷத்திரியர்களே; அவர்களில் பெரும்பாலார் பௌத்தர்களாயினர். சீர்திருத்தம் செய்வதிலும், தம் மதத்தில் ஜனங்களைச் சேர்ப்பதிலும் அதிக ஆவலுள்ளவர்களாய் அவர்கள் அந்தந்த ஜனங்களுடைய பாஷைகளையே விருத்தி செய்துவந்தமையால், க்ஷத்திரியர்கள் ஸம்ஸ்கிருத பாஷை கற்பதையும் வேதத்தை அப்பியஸிப்பதையும் விட்டு விட்டார்கள். ஆகையால், தெற்கிலிருந்து வந்த இம்மதச் சீர்திருத்தமானது பிராஹ்மணர்களுக்கு மாத்திரம் அநுகூலமாயிற்று.

மற்ற இந்திய மஹா ஜனங்களுக்கோ அவர்கள் முன் பார்த்திராத விலங்குகளை உண்டாக்கிவிட்டது.

க்ஷத்திரியர்கள், இந்தியாவுக்கு முதுகெலும்பு போன்றவர்கள். அவர்கள்தாம் சாஸ்திராபிவிருத்திக்கும் சுயேச்சைக்கும் ஆதாரமா யிருந்தவர்கள். தேசத்திலுள்ள மூடத்தனத்தை நாசமாக்க அவர்கள்தாம் அடிக்கடி முயன்றவர்கள். பிராஹ்மணர்களுடைய கொடுமை விருத்தியாகாதபடி ஆடங்கமா யிருந்தவர்களும் அவர்கள்தாம். அவர்களிற் பெரும்பாலார் அஞ்ஞானத்தில் அமுந்திவிட்டமையாலும், மற்றவர்கள் மத்திய ஆசியாவின் முரட்டு ஜாதியாருடன் விவாக சம்பந்தங்கள் செய்துகொண்டு பிராஹ்மணருடைய ஆளுகையை ஸ்தாபிக்கக் கையில் கத்தியெடுத்துத் தாமே முன்வந்தமையாலும், இந்தியாவாகிய பரதநாடு முழுகிப் போய்விட்டது. மறுபடியும் க்ஷத்திரியன் முன்போல் எழும்பி, மற்றவர்களுடைய காலில் போட்டிருக்கும் விலங்கைத் தறிக்கும்வரையில் இந்தியா எழும்ப வழியில்லை. புரோஹிதர்களே இந்தியாவுக்கு ஓர் சாபமாய் முடிந்தார்கள். ஒரு மனிதன் தன்னுடைய சகோதரனை ஹீனனாக்கி விட்டுத் தான் அந்தக் கதியினின்று தப்பித்துக்கொள்ள முடியுமா? ராஜாஜீ! உங்களுடைய மூதாதரால் கண்டுபிடிக்கப்பட்ட சிரேஷ்டமான உண்மையானது உலகம் ஒன்றே என்பது. அதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஒருவன் மற்றவனுக்குக் கெடுதி செய்தால் தனக்கே செய்துகொண்ட மாதிரியல்லவோ?

பிராஹ்மணரும் க்ஷத்திரியரும் செய்த கொடுமையானது தொடர் வட்டியுடன் அவர்கள் தலைமேலேயே வந்து விடிந்தது. அவர்களுடைய கர்மமானது ஆயிரம் வருஷங்களாய் அவர்களை ஹீநஸ்திதிக்குக் கொண்டு வந்து விட்டு அடிமைகளாக்கிவிட்டது.

"இஹைவ தைர்ஜிதஃ ஸ்வர்கோ
யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மநஃ."

"சமத்துவத்தில் மனது வைத்தவர்கள் இந்த ஜன்மத்திலேயே முக்தி யடைந்திருக்கிறார்கள்" என்று உங்களுடைய முன்னோர்களில் ஒருவர் சொல்லி யிருக்கிறார். அவரைக் கடவுளுடைய அவதாரமென நம்புகின்றார்கள். நாமனைவரும் அவ்வாறே நம்புகிறோம். அவருடைய வாக்கியத்துக்குப் பொருளில்லையா? அது வீண்போகுமோ? ஒருகாலும் வீண்போகாதென்று நமக்குத் தெரியும். அப்படியாயின் சாதி, பிறப்பு முதலிய வேற்றுமைகளின்றி யாவத் சிருஷ்டிகளையும் சமதிருஷ்டியாகப் பார்ப்பதற்கு விரோதஞ் செய்வது பெரிய தப்பாகும். சமதிருஷ்டியாய்ப் பாராதவர் ஒருவரும் முக்தி யடையார்கள்.

ஆகையால், குணம் பொருந்திய இராஜ புத்திரரே! வேதாந்த விசாரணை செய்து, அதின்படி நடந்துகொள்ளும் நீர் பல பேர் செய்த பாஷ்யங்களைப் பின்தொடரவேண்டிய அவசியமில்லை. உம்முடைய உள்ளத்திலிருக்கின்ற பரமாத்மா சொல்லுமாறு அர்த்தஞ் செய்துகொள்ளும் முக்கியமாக, எல்லாவற்றிலும் கடவு ளிருக்கிறார்; எல்லாம்

ஏகஸ்வரூபமேயென்னும் உயர்ந்த தத்துவத்தை அறிந்துகொள்ளும்.

இதுதான் முக்திக்கு வழி. அசமமாய்ப் பார்ப்பது பந்தத்துக்கு ஆதாரம். எந்த மனிதனாயினும், எந்த ஜாதியானாயினும், எல்லாருடைய தேகமும் ஒன்றென்று நினையாமல் சரீர சுயேச்சை யடையார்கள்; மனது ஒன்றென்று நினையாமல் மனச்சுயேச்சையும் அடையார்கள். ஆசை, அஞ்ஞானம், அசமமான திருஷ்டி இம்மூன்றும் துக்கத்துக்குக் காரணம். ஒன்றுக்கொன்று இன்றியமையாத் துணையாக இவைகள் செல்லும். ஏன் ஒரு மனிதன், தான் மற்ற மனிதர் அல்லது மிருகங்களைக் காட்டிலும் சிரேஷ்டனென்று எண்ணிக்கொள்ளவேண்டும்? கடைசிவரையில் எல்லாம் ஒன்றுதான்.

"த்வம் ஸத்ரீத்வம் புமாநஸி
த்வம்குமார உதவா குமாரீ."

"நீ மனிதன், நீ ஸ்திரீ, நீ இளைஞன், நீ சிறுமி."

"இது சந்நியாசிகளுக்கு உரியதே, நாங்கள் கிருஹஸ்தர்கள்" என்று அநேகர் சொல்லுவார்கள். கிருஹஸ்தன் செய்யவேண்டிய கடமைகள் அநேகம் இருக்கின்றமையால், முற்றிலும் ஸமதிருஷ்டி வைப்பது அஸாத்தியமென்பதற்குத் தடையில்லை. ஆயினும், இது அவர்களுக்கு லக்ஷ்யமாயிருத்தல்வேண்டும். ஏனெனில், எல்லா ஜனங்களும், மிருகங்களும், மற்றப் பொருள்களும் இந்த ஸமத்துவத்தையடையவே பிரயத்நப்பட்டுக்

கொண்டிருக்கின்றன. அந்தோ! ஜனங்கள் அஸமத்வ திருஷ்டியாய்ப் பார்ப்பதே ஸமத்வ திருஷ்டிக்கு வழியென்கிறார்களே. கெட்டது செய்து நல் வழிக்கு வரலாமோ! இந்த அஸமத்வ திருஷ்டியே மனிதருக்கு ஒரு சாபமாயிருக்கின்றது. இதுதான் துக்கத்துக்குக் காரணம். இது தான் மானஸிக, காயிக, பாரமார்த்திக பாசங்களுக்கும் ஆதாரம்.

"ஸமம் பச்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீஸ்வரம்
நஹி நஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம்."

"தேஹங்களெல்லாவற்றிலு மிருக்கிற ஆத்மாவை ஏகரூபமாகப் பார்ப்பவன் தன் மனத்தினால் தன் ஆத்மாவை ஹிம்ஸிக்கமாட்டான். ஆகையால் பரகதியை அடைவான்," இந்த ஒரு வாக்கியத்தில் உலகத்துக்குப் பொதுவாகிய முக்தி வழி சுருக்கமாய் அடங்கியிருக்கிறது.

இராஜ புத்திரராகிய நீங்கள் முற்காலத்தில் கீர்த்தியை வகித்திருந்தீர்கள், நீங்கள் ஹீன ஸ்திதிக்கு வந்ததினால் இந்தியாவிலுள்ள மற்ற ஜாதியாரும் ஹீனஸ்திதியை அடைந்துவிட்டார்கள். அதிகாரத்தைச் செலுத்தப் பார்க்காமல், ஏழைகளுக்குச் சகாயஞ் செய்யும்பொருட்டும், அஞ்ஞானிகளுக்கு அறிவூட்டும்பொருட்டும் பிராமணரும் க்ஷத்திரியரும் ஒன்றுசேர்ந்தாலன்றி, இந்தியா அபிவிருத்தி யடைவதற்கு வழியில்லை.

காலம் நற்காலமா யிருக்கவில்லையென்று யார்தான் சொல்லுவார்கள்? சக்கரமானது மற்றொருமுறை சுழல்கின்றது. பூமியின் நான்கு புறத்திலும்போய் வியாபிக்கும்படியான சக்தி மற்றொருமுறை உண்டாயிருக்கின்றது. இதற்கு முன் அளிக்கப்பட்ட பல வாக்குகள் சேர்ந்து பலம் பொருந்திய ஒரு வாக்காய் அளிக்கப்பட்டிருக்கிறது. ஸரஸ்வதி நதிக்கரையிலுள்ள பல ரிஷிகளுக்குச் சொல்லப்பட்டுப் பர்வத சிரேஷ்டமாகிய இமயமலை முடிகளில் துவனித்துப் பின்னர்க் கீழ்ப் பிரதேசத்தில் பிரவேசித்து, கிருஷ்ண—பௌத்த—சைதந்யர்கள் மூலமாய்ப் பாய்ந்திருக்கின்ற திருவாக்கானது மறுபடியும் உத்கோஷம் செய்திருக்கின்றது. மற்றொரு முறை கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன. பிரகாசம் பொருந்திய பிரதேசத்தில் பிரவேசியுங்கள். கதவுகள் மற்றொருமுறை நன்றாய்த் திறக்கப்பட்டிருக்கின்றன.

என் பிரியமுள்ள ராஜனே! மதத்துக்கு ஆதார பூதமாயும், சகாயமாயு மிருந்த ராஜவம்ஸ திலகரே! ராம கிருஷ்ணர்களுடைய ஸந்ததியில் பிறந்தவரே! நீர் தூர நின்று விடுவீரோ! அப்படிச் செய்யமாட்டீரென்று எனக்குத் தெரியும். மதத்தை மறுபடியும் ஒருமுறை காப்பதற்கு நீர்தான் முதலில் கைகொடுப்பீரென்பது எனக்கு நிச்சயம். மேலும், வம்சபாரம்பரியமாய் சாஸ்திரப் பயிற்சிக்குப் பேர்பெபான ராஜவம்சத்திற் பிறந்து சகல கலைகளையுங் கற்றிருப்பருடன், ஞாநிகளால் சிறந்தவரென் மதிக்கப்பட

வேண்டிய பரிசுத்த சீலத்தையும், எல்லையற்ற ஜீவகாருண்யத்தையும், பூஷணமாகக் கொண்ட ராஜா அஜித்சிங்கு என்னும் பெயருடன் விளங்கும் உம்மை நான் நினைக்குங்காலத்தும், ஸநாதந தர்மத்தை உத்தரிப்பதற்கு உம்மைப்போன்றவர் கைகொடுக்க ஸித்தமாயிருக்கும்பொழுதும், நமது மதத்துக்கு நற்காலம் உண்டென நம்பாமல் இருக்க என்னால் முடியவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஆசீர்வாதம் உனக்கு என்றென்றைக்கும் உண்டாகுக. நீர் பலபேருடைய க்ஷேமத்தின் பொருட்டும் ஸத்தியத்தின் அபிவிர்த்தியின் பொருட்டும் நீடூழி வாழ்க.

இவ்வாறு
ஸதாகாலமும் பிரார்த்திக்கும்
விவேகாநந்தன்.

---

## IV

ஸ்வாமிகள் இங்கிலாந்துக்குப் போதல்—ஸ்டார்டி துரையின் பக்தி—இந்தியாவினின்று ஸாரதாநந்த சுவாமிகளை வரவழைத்தல்—மறுபடியும் அமெரிக்காவுக்குப் போதல்—அங்கிருந்து மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்புதல்—பண்டித மோக்ஷமூலபட்டாசாரியரைக் (Professor Max Muller) காணுதல்—வேதாந்த போதனைக்காக ஸபைகளை ஸ்தாபித்தல்—பத்திரிகைகளின் அபிப்பிராயம்

—ஸ்வாமிகள் ஸ்விட்ஜர்லாந்து தேசத்திலுள்ள ஜூரிக் பட்டணத்தில் நடந்த தர்ம மஹா சபைக்கு விஜயம் செய்தல்—ஜர்மனியிலுள்ள கீல் நகரத்தில் டாய்ஸேன் பண்டிதரைத் தரிசித்தல்—இங்கிலாந்துக்குத் திரும்பிவருதல்—இங்கிலாந்தைவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டுவரும் சமயத்தில் ஆங்கிலேய சிஷ்யர் வாசித்த வந்தனோபசார பத்திரிகையை அங்கீகரித்தல்.

---

இவ்வாறு நமது சுவாமிகள் அமெரிக்காவில் நம் மத விஷயமாய் அநேக பிரசங்கங்கள் செய்துவிட்டு 1895ஆண்டின் இறுதியில் இங்கிலாந்துக்குச் சென்றார். இதற்கு முன்னமே சுவாமிகளின் பிரதாபத்தைக் கேள்வியுற்று, அவரை எப்பொழுது காணப்பெறுவே னென்று, ஸ்ரீ ராமனை எதிர் பார்த்திருந்த பரதன்போல், சுவாமிகளின் வரவை எதிர் பார்த்திருந்த மிஸ்டர் ஸ்டார்டி (Mr Sturdy) என்னும் ஆங்கிலேய அத்வைதியானவர் சுவாமிகளைக் கண்டவுடன் அடங்கா மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்ந்தார். இந்த ஸ்டார்டி என்னும் துரை, வேதாந்த சாஸ்திரத்துக்கு வ்யாஸ சூத்திரங்கள் எப்படியோ, அப்படி பக்தி சாஸ்திரத்துக்கு ஆதாரகிரந்த ரத்நமாகிய நாரத பக்தி சூத்திரம் என்னும் அரிய வடமொழி நூலை சுவாமிகளின் உதவியைக்கொண்டு வ்யாக்யானத்திலே, ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் கோபிகைகளுக்குமுள்ள பக்திரஸ சம்பந்தத்தின் பெருமையை யறியாது அதைச் சிற்றின்பமென இழித்துக்கூறி

யிடர்ப்படும் மதியிலிகளின் மயக்கவுரைகளை நிக்ரஹித்துப் பேரின்பப் பெருக்கமாகிய அந்தப் பிரேமபாராவாரத்தின் வைபவத்தை வெகு விசதமாய் விளக்கி யிருக்கிறார். சுவாமிகள் ஸ்டர்டி துரையின் ஸஹாயத்தால் லண்டனில் அநேக வேதாந்த பிரசங்கங்கள் புரிந்தார். வேதாந்த பாடங் கேட்போரின் தொகை அதிகரிக்கவே, அத்தனை பேருக்கும் தாம் ஒருவராகவே யிருந்து பாடம் சொல்லுதல் அஸாத்தியமெனக் கண்டு, கல்கத்தாவுக் கருகிலுள்ள பேலூட் மடத்திலிருந்து ஸ்ரீ சாரதாநந்த சுவாமி யென்னும் ஸந்நியாசியை வரவழைத்து இங்கிலாந்திலே வேதாந்த பிரவசனம் செய்யும்படி நிறுத்திவிட்டுத் தாம் மீண்டும் (1895ஹு டிசம்பர்மீ) அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றார். அமெரிக்காவில் அவர் ஆரம்பித்த வேலையை அவரது சிஷ்யர்கள் விடாமுயற்சியுடன் செய்துவந்தார்கள். இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தவுடனே அவர் முன் போல வேதாந்த வகுப்புகளிலே பாடஞ் சொல்வதையும், ஆதிவாரந்தோறும் பிரசங்கஞ் செய்தலையும் ஆரம்பித்தார். இவரது பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே திரண்டு வந்த பல்லாயிரம் ஜனங்களுக்கும் போதிய இடம் இல்லாமையால், பலர் பிரசங்க மண்டபத்துக்கு வெளியே நிற்க வேண்டியிருந்தது. இவரது புகழ் திநேதிநே அபிவிர்த்தியாய்க்கொண்டு வந்தது. 1896ஹு ஜனவரிமீத்தில் இவர் பிரசங்கம் செய்துவந்த ஒவ்வொரு வகுப்பிலும் 100 மாணாக்கர் பாடங்கேட்டு வந்தனர். மேற்படி வருஷம் பிப்ரவரி மாதத்தில் டாக்டர் ஸ்ட்ரீட்

என்பவர் ஸ்வாமிகளுக்குச் சிஷ்யராகி, யோகாநந்தர் என்னும் நாமம் தரித்துக்கொண்டார். பிறகு ஸ்வாமிகள் பற்பல பண்டித சபைகளிலும் 'யூநிவர்ஸிடி' என்னும் ஸர்வகலா சங்கங்களிலும் பிரசங்கம புரிந்து மறுபடியும் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஸ்வாமிகள் இங்கிலாந்துக்கு வந்தவுடன் அங்கிருந்த சாரதாநந்தரை அமெரிக்காவுக்கு அனுப்பிவிட்டுத் தாம் இங்கிலாந்தில் நான்குமாச காலம் தங்கியிருந்தார். அவ்வாறிருக்குங் காலையில் ஒருநாள் மஹா பண்டிதராகிய மோக்ஷமூல பட்டாசாரியரை (Professor Max Muller) அவரது வாஸ ஸ்தானமாகிய கோதீர்த்தபுரியில் (Oxford ஓக்ஸ்போர்டு) போய்க் கண்டு அவருடன் வெகு நேரம் வரையில் பல விஷயங்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அந்த ஸந்தர்சனத்தின் விர்த்தாந்தத்தை ஸ்வாமிகள் சிறப்பாய் வர்ணித்து (சென்னையிற் பிரசுரமாகும்) ப்ரஹ்ம வாதி என்னும் வேதாந்த பத்திரிகைக்கு அப்பொழுது எழுதிய நிருபம் வருமாறு:—

ப்ரஹ்மவாதி பத்திராதிபர் அவர்கட்கு,—

"கர்மண்யே வாதிகாரஸ்தே மா ஃபலேஷு கதாசந" (கர்மம் செய்வதற்கு உனக்கு அதிகாரமேயன்றி, அதன் பலனை யடைவதன் பொருட்டு ஒருகாலும் கூடாது) என்ற கீதா வாக்கியமே எப்பொழுதும் நம் ப்ரஹ்மவாதிக்குக் கர்மயோக லக்ஷ்யமா யிருக்கவேண்டியதாயினும், சிரத்தையுடன் கருமம் புரியும் எவனும் தன்னைப் பிரசித்தமாக்கிக்

கொள்ளாமலும், தான் செய்த காரியத்தின் பலோர்தய சூசகமான சில கிரணங்களையாவது பற்றிக்கொள்ளாம லும், தன் கர்ம ஸ்தானத்தை விட்டு அகல்வதில்லை.

நமது காரியாரம்பம் வெகு வைபமாகவே இருந்தது. அவ்விஷயததில் நம் நேசர்கள் காட்டிய மாறாச் சிரத்தை யும் கொண்டாடி முடியாத பெருமை வாய்ந்தேயிருக்கிறது. நிச்சயமான சிரத்தையும் நிர்மல சிந்தையும் காரியசித்தி யளிப்பது திண்ணமாகையால், இக் குணங்களைப் படை யாகக் கொண்டவர் எவ்வளவு சொற்பத் தொகையினரா யிருப்பினும், கடைசியில் ஸகலவித ஆபத்துக்களையும் வென்று ஜயசீலர்களாய் விளங்குவாரென்பதில் எள்ளள வும் ஐயமில்லை.

அபரோக்ஷ ஞானோதயம் தமக்கு உண்டாய்விட்டதெ ன்று கூறித் திரியும் வஞ்சகப் பகடிகளினின்றும் விலகி யிருங்கள். அப்படிப்பட்ட ஞானோதயம் அஸாத்திய மென்று நான் சொல்லவில்லை. ஆனல், அப்படிக் கூறித் திரிவோரில் நூற்றில் தொண்ணூறுபேரின் அந்தரங்கக் கருத்து: பெண்ணும் பொன்னும் புகழுமேயாம். எஞ்சி யுள்ள பதின்மரில் ஒன்பதுபேருடைய சங்கதி ஆயுள்வேத வைத்தியர்களின் அநுக்ரஹத்துக்குப் பாத்திரமேயொழிய, பவரோக வைத்தியர்களான வேதாந்திகளின் கவனத்திற் குரியதன்று.

தக்கோனனும் பெயர் நாட்டுவதே நாம் முதலில் முடிக்கவேண்டிய பெருத்த காரியம். அதாவது, நமது

ஞான நூல்களில் புகழ்ந்தோதப்பட்ட ப்ரதிஷ்டிதா ப்ரஜ்ஞையை அடைவதேயாம். இது தனித்தனி மனிதருக்கெப்படியோ, அப்படியே ஜனசங்கத்துக்கும் பொருந்தும். ஞானமார்க்க விஷயத்திலேகூட ஒவ்வொரு நூதன பிரயத்னத்தையும் உலகம் ஸம்சயத்தோடு நோக்குகிறதென்று அதைரியமடையவேண்டாம். ஐயோ ஏழை யுலகமே! எத்தனைமுறை நீ ஏமாந்துபோயிருக்கிறாய்! பிரபஞ்ச வாழ்க்கை யென்னும் இச் சம்சாரமானது, அபிவிர்த்தியடைந்துவரும் ஒவ்வொரு நூதன சம்பிரதாயத்தையும் எவ்வளவுக் கெவ்வளவு ஸம்ஸயத்துடன் நோக்குகிறதோ, அல்லது அதற்கு எவ்வளவுக் கெவ்வளவு மித்ரபேதம் செய்து வருகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அந்த ஸம்பிரதாயத்துக்கு நல்லகாலமென் றறியுங்கள். இந்த ஸம்பிரதாயத்தால் பரவவேண்டிய உண்மையாவது, இதன் உற்பத்தியால் நீங்கவேண்டிய குறையாவது ஏதேனும் இருக்குமாயின், அந்தக் கணமே, அதனை யெதிர்த்தெழுந்த பழிச்சொல் புகழ்ச் சொல்லாகவும், அவமானப்படுத்தவேண்டுமென்று புறப்பட்ட எண்ணம் அன்பு பாராட்ட வேண்டுமென்னும் எண்ணமாகவும் மாறிவிடுகின்றன. இக் காலத்திலே ஜனங்கள் மதமென்னும் வியாஜம்வைத்துக்கொண்டு தத்தமக்குள்ள லௌகிக ஜனசங்க சம்பந்தமான அபீஷ்டத்தையோ ராஜ்ய தந்திர சம்பந்தமான அபீஷ்டத்தையோ ஈடேற்றிக்கொள்ளப் பார்க்கும் நிலையில் இருக்கிறார்கள். இவ்விஷயத்தில் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். மதத்துக்குச் சாத்தியம் மதமே யன்றி, அது மற்றொன்றுக்கு ஸாதனமா யிருத்தல் தகாது.

எந்த மதமானது—கேவலம் உலக சம்பந்தமான மேம்பாட்டுக்கே சாதனமா யுள்ளதோ, அந்த மதம், மற்ற அம்சங்களில் எவ்வளவு சிறந்திருப்பினும், ஒரு மதமே யன்று. இந்திரியங்களா லுண்டாகும் சகல சுகபோகங் களையும் சுதந்தரமாயும் சம்பூர்ணமாயும் அநுபவிப்பதைத் தவிர வேறு புருஷார்த்த மில்லையென்று நினைப்பது பெரும் பாதகமும் தெய்வ நிந்தையுமா மென்க.

ஸத்யம் (வாய்மை), சௌசம் (தூய்மை), நிஸ்ப்ருஹத்வம் (தன்னயமின்மை) என்னும் இக் குணங்கள் எவனிடம் இருக்கின்றனவோ, அவனை அழிக்கக்கூடிய சக்தி இப் பூமண்டலத்தில் மேலுமில்லை, கீழுமில்லை. இக்குணங் களைக் கவசமாகப் பூண்டவன், உலகம் முழுவதும் தனக்கு விரோதமா யிருப்பினும், தீரமாய் எதிர்த்து நிற்கும் சாமர்த்திய முள்ளவனே.

எல்லாவற்றினும் மிகவும் முக்கியமான விஷயம், பிறருடன் 'ராஜி' பண்ணிக்கொள்ளாம விருப்பதில் ஜாக்கிரதை யிருக்கவேண்டும். இதனால் நீங்கள் எவரையேனும் பகைத்துக்கொள்ளவேண்டு மென்பது என் கருத்தன்று. ஆனால், நன்மை வரினும் தீமை வரினும், இன்பம் வரினும் துன்பம் வரினும், சம்பத்து வரினும், விபத்து வரினும், நீங்கள் கொண்ட விரதத்தில் உறுதியாய் நிற்கவேண்டுமே யன்றிப் பிறரது ஆதரவு கிடைக்குமென்னும் பேராசையினால். அவர்களது துச்சமான வெறிக் கோலங்களுக்கெல்லாம் பொருந்தி யிருக்கும்படி, உங்கள் சித்தாந்தங்களை

யொருகாலும் மாற்றுதேயுங்கள். உங்கள் ஆத்மா ஜகத்துக்கெல்லாம் ஆதாரமாயிருக்க, எவருடைய ஆதரவு உங்களுக்கு வேண்டியிருக்கிறது? பொறுமையோடும் காத்திருங்கள்! சகாயம் புரிவோர் இப்பொழுது ஆயத்தமாயிராவிடில் காலக்கிரமத்தில் வருவார்கள். நாம் ஏன் அவசரப்படவேண்டும்? எல்லாப் பெரும் பிரயத்னங்களின் உண்மையான காரிய சாதக பீஜமாகிய சக்தியும் ஒருவருக்கும் தெரியாமலிருக்கும் அவற்றின் ஆரம்பத்திலேயே முளை போல் அமைந்திருக்கிறது.

வங்காள நாட்டிலுள்ள ஒரு குக்கிராமத்திலே ஒரு எளிய பிராமண குடும்பத்திற் பிறந்த ஒரு பாலகனுடைய வாழ்க்கையும் உபதேசமும், நம் முன்னோர்கள் கனவிலும் அறியாத தூரதேசங்களிலே சில வருஷங்களுக்குள் பரவப்போகிறதென்பதை எவரேனும் நினைத்ததுண்டோ? பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரே அந்தப் பாலகன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களல்லவா? மோக்ஷமூலர் பண்டிதர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிரசம்ஸித்து 'நைன்டீந்த் ஸெஞ்சரி' என்னும் பத்திரிகையில் ஏற்கனவே எழுதியுள்ளார். பரமஹம்ஸருடைய சரிதையையும் உபதேசங்களையும் பற்றிய அம்சங்கள் இன்னும் நிறையக் கிடைக்குமாயின், விரிவான நூல் ஒன்று எழுதுவது அப்பண்டிதருக்கு வெகு சந்தோஷமாயிருக்கும். ஆஹா? பண்டித மோக்ஷமூலர் என்ன அற்புதமான புருஷன்! சில நாளைக்கு முன் நான் அவரைப் பார்க்கப் போயிருந்தேன். அவு

ரைத் தரிசனம் செய்துகொள்ளப் போயிருந்தேனென்று சொல்லவேண்டும்; ஏனெனில், ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்ஸருடத்தில் எவர் அன்புடையவரோ, அவர் எச் சாதி, எம்மதம், எக்கக்ஷி, எந்நாட்டைச் சேர்ந்தவரா யிருப்பினும், அவரைப் போய்ப்பார்ப்பதை ஒரு புண்ய யாத்திரை யென்றே கருதுகின்றேன். "மத்பக்தாநாஞ்ச யே பக்தாஸ் தே மே பக்ததமா:"—"என் அடியார்களுக்கும் எவர் அடியார்களோ, அவரே எனக்குச் சிறந்த அடியார்களாவார்."

அதிசயம் உண்மைதானே?

பண்டிதர் என்னைப் பார்த்தவுடனே, காலஞ்சென்ற கேசவ சந்திரஸேனரது வாழ்க்கையிலே திடீரென்று உண்டான முக்கியமான மாறுதல்களுக்குக் காரணமாயிருந்த அதிருசியமான சக்தியைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார். கேசவ சந்திரஸேநர் பரமஹம்ஸரது பிரபாவத்தால் மாறுத லடைந்த காலம் முதல், பண்டிதரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது சரித்திரத்தையும் உபதேச மொழிகளையும் சிரத்தையாய் ஆராய்ந்து, அவற்றின் அருமை பெருமைகளைப் புகழ்ந்து கொண்டாடி வருவாராயினர். "இப்பொழுது ராமகிருஷ்ணரைப் பல்லாயிரம் ஜனங்கள் பூஜிக்கிறார்கள்" என்று நான் சொன்னதற்குப் பூஜியாவிட்டால் வேறு யாரைத்தான் பூஜிப்பது?" என்று விளம்பினர். பண்டிதர், தயையே உருவெடுத்ததுபோல் விளங்கினர். அவர், ஸ்டர்டி துரையையும் என்னையும் தன்னுடன்

சிற்றுண்டி யருந்த அழைத்தார். பிறகு, கோதீர்த்தபுரியி லுள்ள பற்பல கலாசாலைகளையும் போட்லியன் புஸ்தக சாலையையுங் காண்பித்தார். நான் திரும்பி வரும்போது எனக்கு 'ரெயில்வே ஸ்டேஷன்' வரையில் வழிவிட வந்தார். இவ்வளவு சிரமம் எதுக்கென்று நான் அவரைத் தடுத்துக் கேட்டபொழுது, அவர், 'ராமகிருஷ்ண பரம ஹம்ஸரது சிஷ்யதர்சனம் பிரதி தினமும் கிடைக்குமோ?'' என்றார். ஆஹா! என்ன அன்பு! என்ன விநயம்! அற்புதம்! ஆச்சரியம்! ஆசிரமம் போன்ற அந்தச் சிறிய மாளிகையையும், அதைச் சூழ்ந்துள்ள அழகிய ஆராமத்தையும், அதில் வெள்ளியின் வெண்ணிற வொளியுடன் ஜொலிக்கும் அந்த ரிஷியையும், சாந்தமும் கருணையும் ததும்பப்பெற்ற அவரது முகமண்டலத்தையும்' எழுபது ஆண்டுகளாகியும், குழந்தையின் நெற்றிபோல் மழமழவென்று ஒளிரும் அவரது நெற்றிப் பிரதேசத்தையும், அதில் எங்கேயோ மறைந்து கிடக்கும் ஆழ்ந்த ஞாநாகாரத்தைப் பஹிரங்கப்படுத்துவதுபோல் மௌனப் பிரசங்கம் செய்யாநின்ற ஒவ்வொரு ரேகையையும், அவர் எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளாகி, ஆச்சரியத்தை உண்டாக்கத்தக்க அருமை பெருமையுள்ள புதிய விஷயங்களை உலகத்துக்குத் தெரிவித்து, அவற்றைப் பொறாது இழித்துப் பகைத்துவந்தவர்களின் தூர்வாதங்களைக் கண்டித்துக் கடைசியில் நமது பிராசீன பாரத வர்ஷத்தின் மஹார்ஷிகளின் ஸித்தாந்தங்களுக்கு மேற்றிசையில் அழியாப் புகழை உண்டாக்க உழைத்துவந்த முயற்சியில்,

ஆதிமுதல் இன்று வரையில் அவருக்குற்ற வாழ்க்கைத் துணைவியாய் அமைந்த புண்ணியவதியாகிய அவ்வுத்தம பத்னியையும்.—அவ்வளவேன், அந்த மரங்களையும் மலர்களையும், அந்த சாந்தத்தையும் மாசற்ற விசும்பையும் பார்த்தபொழுது, முற்காலத்தில் நமது தேசத்திற் சிறப்புற்றோங்கிய பிரஹ்ம ரிஷிகளும் ராஜரிஷிகளும் மஹா வாநப்ரஸ்தர்களும், தபோதனர்களான அருந்ததிகளும் வஸிஷ்டர்களும் வாழ்ந்த புண்ய தினங்கள்தாம் இப்பொழுது எனக்குப் பிரத்தியக்ஷ மாயினவோ எனக் கருதலானேன்.

நான் அங்கே கண்டது பாஷா தத்துவ பண்டிதரையுமன்று, வித்வானையுமன்று. மற்றுப் பிரதிதினமும் பிரஹ்ம ஐக்கியத்தை அநுபவித்துக்கொண்டுவரும் ஆத்மாவையும், அகிலாத்மாவுடன் ஏகதத்வமாய்க் கலக்கப் பிரதிதினமும் விசாலமாகிக்கொண்டுவரும் ஹிருதயத்தையுமே கண்டேன். ஸாரமற்ற வீண் விவரங்களெனத்தகும் வறண்ட பாலை வனங்களில் பிறர் அலைந்துகொண்டிருக்கும் இடத்திலே, அவர் ஸாரதத்துவமாகிய நன்னீர்க் கிணற்றை வெட்டியவர்போன்றிருக்கிறார். "தமேவைகம் ஜாநத ஆத்மாநம்; அந்யாவாசோ விமுஞ்சத" என்று முறையிடும் உபநிஷத்துக்களின் மதுரநாதத்தை உள்ளபடியே உணர்ந்த அவரது ஹிருதய தந்திகள் அதன்படியே ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

பிரபஞ்சத்தையெல்லாம் பிரமிக்கச் செய்யும் கல்வியும் சாஸ்திர ஞாநமும் அவருக்கிருந்தும், அந்தக் கல்வி

யும் ஞானமும் அவரைப் படிப்படியாய் ஆத்மாநுபவத்தில் ஓங்கி உத்தம நிலை யடைவிப்பதற்கே பயன்படுவதாயின. அவருக்குள்ள அபரவித்தையானது அவரைப் பரவித்தையை அடைவிப்பதற்கு உள்ளபடியே உபகரித்திருக்கின்றது. இதுதான் மெய்க்கல்வி. 'வித்யா ததாதி விநயம்' 'வித்தை யளிக்கும் விநயம்.' கல்வியானது உத்தம நிலையைக் காட்டாதாயின், அக் கல்வியால் யாது பயன்?

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

இந்தியா விஷயத்தில் அவருக்குள்ள அன்பை நான் என்னென்று சொல்வேன்! அந்த அன்பில் நூற்றில் ஒரு பங்காயினும் எனக்கு என் ஜந்மபூமியின்மாட்டு இராதாவென்று ஆசைப்படுகிறேன். விசேஷமான சுருசுருப்புடன் கூடிய அத்புதமான அவரது மனோவிருத்தியானது சென்ற ஐம்பது வருஷகாலமாய் ஹிந்துக்களின் கல்வியாகிய பிரபஞ்சத்திலேயே வியாபித்து, முடிவிலாக் காடு போன்ற வடமொழி இலக்கியத்தின் ஸூக்ஷ்மங்களையெல்லாம் அதிக அன்போடும் அக்கறையோடும் ஆராய்ந்து, அவை யாவும் தனக்குள் பிரவேசித்து அவற்றின் தன்மையே தன் தன்மையாய் ஆகும் வரையில், அவ் விஷயத்தில் உழைத்திருக்கிறது.

மோக்ஷமூலரை வேதாந்திகளுக்குள்ளும் பெரிய வேதாந்தியெனச் சொல்லவேண்டும். உலகத்திலுள்ள

சமய பேதங்களெல்லாவற்றையும் பிரகாசமுறச் செய்யும் பேரொளி எதுவோ, சகல சமயங்களுக்குள்ளும் புகுந்து அவற்றின் ஜீவ தாதுவாய் விளங்கும் மூலாதார தத்துவமெதுவோ, அத்தகைய பேரொளியும் மூலாதார தத்துவமுமாகிய வேதாந்தத்தை அவர் ஐயந்திரிபற உணர்ந்து அதன் மதுரகீத நாதத்தின் ஸாரத்துவத்தை உள்ளபடியே கண்டு கொண்டிருக்கிறார். இனி, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பெருமை யாதெனில், அவரே மேற்சொல்லிய உத்தமமான பிராசீன பாரத வர்ஷத்தின் பரிபூரண ஸ்வரூபம். இனி வரப்போகும் பாரத வர்ஷத்தின் பூர்வரூபம். அவரே ஜகத்திலுள்ள சகலருக்கும் ஞானப்பிரகாச மளிக்கும் பானுமூர்த்தியுமாம் 'ரத்னங்களின் குணகுணங்களும் மதிப்பும் ரத்ன வியாபாரிக்கன்றோ தெரியும்' என்கிற பழமொழிக்கேற்ப, இந்திய தத்துவ விசாரணை என்னும் ஆகாசத்தில் உதயமாகும் ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும், இந்தியர்களும அவற்றின் பெருமையை அறியும் முன்னரே, இந்த மேல்நாட்டு முநி புங்கவர் கண்டாராய்ந்து கொண்டாடி வருவது ஓராச்சரியமா?

"தாங்கள் எப்போது இந்தியாவுக்கு வருகிறீர்கள்? தம் முன்னோர்களின் ஞானத்தை உண்மையாய் விளக்கிக் காட்டுவதற்கு எவ்வளவோ முயன்றுழைத்த மஹா புருஷனை இந்திய ரனைவரும் பெரு மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு உபசரிப்பார்கள்" என்று நான் சொன்னபொழுது, அந்தப் பெரியவரின் முகம் பிரசன்னமாய் ஜொலிக்க,

அவர் கண்ணின்மேல் ஒரு நீர்த்துளி ததும்ப, அவர் தலையை மெதுவாய் அசைத்தலும் பின்வரும் மொழிகள் அவர் வாக்கினின்றும் வெளிப்போந்தன. "நான் இந்தியாவுக்கு வந்தால், திரும்பி வரமாட்டேன். என்னை அங்கேயே நீங்கள் தஹநம் செய்ய வேண்டியதுதான்" என்றார். இன்னும் அவரைக் கேள்வி கேட்பது, மனிதன் தன் அந்தரங்கமான ரஹஸ்யங்களைப் பத்திரமாய் வைத்திருக்கும் பிரதேசத்தில் அநியாயமாய்ப் புகுந்து நிர்ப்பந்தப்படுத்துவதுபோல் தோன்றியது.

"தச் சேதஸா ஸ்மரதி நூநமபோதபூர்வம்
பாவஸ்திராணி ஜநநாந்தர ஸௌஹ்ருதாநி."

"இருதயத்தில் ஸ்திரமாய்ப் பதிந்திருக்கிற பூர்வ ஜந்மத்திலிருந்த நட்புகளையும் மனத்தினால் ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறான்" என்று மஹா கவி காளிதாஸன் கூறியபடியே, இவருக்குப் பூர்வ ஜன்மத்தின் ஞாபகம் வந்துவிட்டதுபோலும். அப்படியின்றெனச் சொல்ல யாரால்ஆகும்?

அவரது வாழ்க்கை உலகத்துக்கே ஒரு பாக்கியமாயிருக்கிறது. அவர் இன்னும் பல்லாண்டுகள் இவ்வாறே வாழ்ந்து உலகத்துக்கு உபகரித்துக் கடைசியில் உத்தம பதத்தை யடையவேண்டு மென்பதே எனது பிரார்த்தனை."

இங்கிலாந்தில் சுவாமிகளுடைய பிரஸங்கங்களால் விளைந்த பிரயோஜனம் கொஞ்சநஞ்சமன்று. அன்றியும், அவர் பெரிய ஸபைகளின்முன் ஞாநயோகத்தைப்பற்றித்

தொடர்ச்சியாய்ப் பல பிரஸங்கங்கள் செய்ததோடு, வரன் முறையாய்ப் போதிப்பதற்காக வேதாந்த வகுப்புகளும் ஏற்படுத்தி அங்கும் உபந்யஸித்தார். இங்கேயும் அவரைப் புகழ்ந்து கொண்டாடுபவர்கள் பலர் ஏற்பட, வேதாந்த ஸித்தாந்த போதனைக்காக ஒருஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

வேதாந்த ஸித்தாந்தத்தின் அருமையான தத்துவ சூக்ஷ்மங்களைக் கேட்போர் புத்திக்கு இனிது விளங்கு மாறு பேசிய ஸ்வாமிகளின் வாசாலகச் சிறப்பை இதைப் படிக்கும் நண்பர்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அவரது பிரஸங்கங்களினின்றும் சில அம்சங்களை எடுத்துக் காட்டுகின்றோம்.

"அன்பு நிறைந்த ஹிருதய கமலத்திலே பகவானைக் காணலாமே யன்றி, ஞானத்தைக் குணமாகவுடைய அந்தக் கரணத்தினு லன்று. ஞானமென்பது தெருவைச் சுத்தம் பண்ணும் ஊழியனுக்கு ஸமானம். எப்படி யென்றால், மார்க்கத்தை நமது உபயோகத்திற்காகச் சுத்தமாயும் ஒழுங்காயும் வைத்திருப்பது போலீஸ்காரனது கடமை. ஆனால், ஜனங்கள் ஒத்து வாழ்வதற்கு போலீஸ்காரன் வேண்டுமென்கிற அவசியமில்லை. கலஹங்களை நிறுத்தவும் அநியாயங்களை அடக்கவுமே அவன் வேண்டியிருக்கின் றான். அவ்வளவு காரியந்தான் ஞானத்தால் ஆகவேண்டிய தும். ஞாநவாத நூல்களை நீங்கள் படிக்கும்பொழுது, அவற்றை முற்றும் படித்தானவுடன் நீங்கள் நினைப்ப தென்னவென்றால், "இனிமேல் இவற்றை நான் படிக்கா

திருக்கும்படி கடவுள் கடாக்ஷிக்கவேண்டும்'' என்றே யல்லவா? ஏனெனில், அந்தக்கரணம் குருட்டுத்தனமுடையது. அதற்குச் சொந்தமான சலனம் கிடையாது. அதற்குக் காலும் இல்லை, கையுமில்லை. சலிக்குந் தன்மையுள்ளது அன்பு ஒன்றே. மின்சார வேகத்தைப் பார்க்கிலும் —அதைவிட வேகமான தொன்றிருந்தால் அதைப் பார்க்கிலுங்கூட—அநந்த கோடி மடங்கு மஹா வேகமாய்ச் சலிக்குந் தன்மையுள்ளது அன்பு ஒன்றேயாம். உன்னிடத்திலே அன்புளதா என்பதுதான் கேள்வி. உனக்கு அன்பு இருக்குமேல், அதன் மூலமாய் உனக்கு பகவாந் ப்ரத்யக்ஷமாவார். இன்றைக்கு உங்களுக்கிருக்கும் இந்த அன்பே இனி படிப்படியாய் அதிகரித்துச் சிவமயமாகிய உந்நத நிலைக்கு உயர்ந்து, கடைசியில் அனைத்தும் தானேயாகி ஸர்வத்திலும் ஏகத்துவமாய் நின்று விளங்கும் அதுவே அன்பும் சிவமும் ஒன்றாகும் நிலையாம். இவ்வளவு காரியமும் ஞானத்தால் ஒருபோதும் ஆகாது.

வாக் வைகரீ ஶப்தஜரீ ஶாஸ்த்ரவ்யாக்யாந கௌஶலம்
வைதுஷ்யம் விதுஷாம் தத்வத்புக்தயே ந து முக்தயே:

புத்தியைப் பிரமிக்கச் செய்யத்தக்க பற்பல விதமான சொற்பிரயோகங்களும், பற்பல விதமான வியாக்யானங்கள் செய்யும் சாமர்த்தியமும், புலவர்களின் இன்பத்திற்கே யன்றி ஆத்மாவின் முக்திக்குப் பயன்படா.

'டாமஸ் எ. கெம்பிஸ்' என்னும் பகதர் எழுதியுள்ள 'கிறிஸ்து கர்ணாமிர்தத்தை' (The Imitation of Christ)

படித்தவர்களுக்கு அப் புஸ்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தி லும் இவ் விஷயம் வற்புறுத்தப்பட் டிருப்பது நன்கு விளங்கும். உலகத்தில் உதித்த ஒவ்வொரு மஹானும் அதைத்தான் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஞான மானது மிகவும் அவசியமானது. அஃதில்லாவிட்டால் பிரமாதமான தவறுகளுக்கு உள்ளாவோம். பெரும் தப்பி தங்களையும் செய்துவிடுவோம். அவற்றை யெல்லாம் தடுப்பதற்கு ஞானமே சிறந்த ஸாதனம். ஆனால், அதற்கு மேல் அதை யாதாரமாகக் கொண்டு ஒன்றும் செய்ய முயலவேண்டாம். அது சலனமற்றது. அதனால் உண்டா கும் ஸஹாயம் மத்யம பக்ஷம். உண்மையான ஸஹாயம் அன்பேயாகும், பிரேமையேயாகும்.

"உங்களுக்குப் பிறரிடத்தில் அன்பு இருக்கின்றதா? இருக்கும் பக்ஷத்தில், ஐக்கிய தத்துவத்தில் விர்த்தியடை வீர்கள். அவ்வன்பு மாத்திரம் உங்களுக் கில்லாவிடில், நீங் கள் எவ்வளவு உத்தமோத்தம ஞானிகளா யிருப்பினும், ஒன்று மில்லாதவர்களே யாவீர்கள். நீங்கள் இப்பொழுது சுஷ்க ஞானிகளா யிருக்கிறீர்கள். அவ்வாறே இனியும் இருப்பீர்கள். ஆனால், அவ்வன்பு மாத்திரம் உங்களுக் கிருக்குமாகில், யாதொரு நூலையும் உங்களுக்குப் படிக்கத் தெரியவிட்டாலும் சரி, யாதொரு பாஷையும் உங்களுக் குப் பேசத் தெரியவிட்டாலும் சரி, நீங்களே சரியான மார்க்கத்தில் இருப்பவ ராவீர்கள். அப்பொழுது எம்பெரு மான் உங்களுக்குச் சொந்தம்.

"உலக சரித்திரத்தை நோக்குமிடத்து, மஹா யோகிகளுக்கிருந்த அபார சக்தி உங்களுக்குத் தெரியாதா? அஃது எங்கிருந்தது? ஞானத்திலா? அவர்களில் எவரேனும் தர்க்க சாஸ்திரத்தின் கடினமான வாதப்பிரதிவாத சூக்ஷ்மங்களைப் பற்றி நேர்த்தியான தத்துவ நூல்கள் எழுதினரா? ஒருவரும் எழுதவில்லையே. பிடியளவு பேச்சுதான் அவர்கள் பேசினார்கள். கிறிஸ்துவைப்போல் அன்புடையோராய் இருந்தால், நீங்களும் கிறிஸ்துவைப்போலாகலாம். புத்தனைப்போல் அன்புடையரா யிருங்கள், நீங்களும் புத்தராவீர்கள். அன்பே உயிர், அன்பே வலிமை, அன்பே பிராணன். அன்பில்லாவிடில் எவ்வளவு ஞானமிருப்பினும் கடவுளை யடைய முடியாது. ஞானமானது சலந சக்தியற்ற அங்கங்களுக்கு ஸமானம். அன்பெனும் உணர்ச்சி அவ்வங்கங்களுக்குள் நுழைந்து அவற்றை அசைக்கும்பொழுதுதான், அவை அசையத் தொடங்கிப் பிறரைத் தாக்குகின்றன. அதுதான் உலகாநுபவம். நீங்கள் அதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். இவ்விஷயம் வேதாந்த வொழுக்கத்தில் மிகவும் அநுபவஸித்தமானது. ஏனெனில், நீங்கள் யாவரும் யோகிக ளென்பதே வேதாந்தத்தின் உபதேசம். ஆகவே, நீங்கள் யோகிகளா யிருக்க வேண்டும். உங்கள் ஒழுக்கத்திற்கு நூற் பிரமாணமன்று. நீங்களே நூலுக்குப் பிரமாணம். ஒரு நூலானது உண்மையை உபதேசிக்கிறதென்று உங்களுக்கு எப்படித்தெரியும்? அதை நீங்கள் உணர்ந்து அநுஷ்டிக்கக் கூடியதா யிருப்பதா லல்லவா? அதுதான் வேதாந்தத்தின் உபதேசம்."

விவேகாநந்த ஸ்வாமிகள் லண்டன் நகரத்திலே செய்த பிரஸங்கத்தைப்பற்றி, அங்கே பிரசுரமாகும் ஸ்டாண்டர்ட் பத்திரிகை கூறிய தென்னவெனில்:—ராம மோஹநராயர் காலத்துக்குப் பிறகு, கேசவசந்திரஸேனர் ஒருவர் மாத்திரம் நீங்கலாக, அக்டோபர் 22-ஆம் தேதியில் ராஜகுமார மண்டபத்திலே (Prince's Hall) பிரசங்கித்த ஹிந்துவைக் காட்டிலும் மிகுந்த மனோகரமான இந்தியத் திருமேனி இதுவரையில் ஆங்கிலேய பிரஸங்க மேடையிலே வந்து தோன்றியதில்லை. பௌத்தாசாரியர்களைப்போல் நீண்ட காஷாய வஸ்திரந் தரித்து, இடையில் துறவிகளின் மேகலையும், தலையில் இந்துஸ்தானிப் பாகையும் பொலிய விளங்கும் விவேகாநந்த ஸ்வாமிகள், எந்த வேதாந்த சித்தாந்தத்தைப் பரவச் செய்யும்பொருட்டுத் தம் வாணாளை விநியோகித்து வருகிறாரோ, அந்த ஸித்தாந்தத்தின் முக்கிய தத்துவங்களைப்பற்றி, ஒன்றேகால் மணி நேரம் குற்றமற்ற சிறந்த ஆங்கில மொழியிலே பிரஸங்கித்தார்.' 1896-ம் வருஷம் ஜூன் மாதம் 13-ந் தேதி வெளியான லண்டன் அமெரிகன் என்ற பத்திரிகையிலே பின் வருமாறு கூறப்பட்டுள்ளது: "ஹிந்து மதமானது கேவல நீசமான பொம்மை வணக்கமே யென்று அயல் நாட்டார்கள் அதன்மீது ஆரோபித்திருந்த தோஷத்தை விவேகாநந்த ஸ்வாமிகள் நிவிருத்தி செய்ததோடு கூட, அனைவரும் கௌரவித்துப் போற்றத்தக்க உந்நதமான நிலையிலும் அதை நாட்டிவிட்டார்."

1896-ம் வருஷம் ஜனவரி மாதம் 10-ந் தேதி வெளியான இந்தியன் மிர்றர் கூறியது வருமாறு:—

"விவேகாநந்த ஸ்வாமிகள் லண்டனிலே பிரஸித்தமான ஸ்த்ரீ புமான்களின் கோஷ்டிகளில் அவர்கள் உள்ளங்களைக் கவரும்வண்ணம் பிரசங்கித்து வருகிறாரென்று குறிப்பிக்கக் களிப்புறுகின்றோம். ஹிந்து தத்துவ சாஸ்திர விஷயமாயும் யோகசாஸ்திர விஷயமாயும் அவரேற்படுத்தி நடத்திவரும் வகுப்புகளிலே அநேகர் சேர்ந்து அங்கு நடக்கும் உபந்யாஸங்களை அதிக பக்தி விசுவாசத்துடன் சிரவணம் செய்துவருகிறார்களாம். 'லண்டன் நகரத்திலே மிக்க அலங்காரப் பிரியைகளான துரைசானிகள் தரையில் ஹிந்துக்களைப்போல் உட்கார்ந்துகொண்டு (இதற்கு நாற்காலிகளின் குறைவே காரணமென்பது உண்மையாயினும்) பக்தி சிரத்தையுடன் ஸ்வாமிகளின் பிரஸங்கங்களைச் சிரவணஞ் செய்வது ஓர் அபூர்வமான காட்சியே' என்று ஒரு லண்டன் நிருபநேசர் தெரிவிக்கிறார். உவில்பர் போர்ஸ, ஹேய்ஸ் முதலான சிறந்த கிறிஸ்து மதாசாரியர்கள் ஸ்வாமிகளை மிக்க மரியாதையுடன் உபசரித்துப் பெருமைப்படுத்தினார்களெனத் தெரியவருகின்றது. முதற் சொன்ன துரையின் இருப்பிடத்திலே ஸ்வாமிகளைக் கௌரவப்படுத்தும்பொருட்டுக் கூடியிருந்த மித்திரகோஷ்டிக்கு லண்டனிலே பிரசித்தமான சில ஸ்த்ரீ புமான்கள் அழைக்கப்பட்டு வந்திருந்தார்களாம். 'ஆங்கிலேயர்களின் உள்ளங்களிலே இந்தியா விஷயமாய் ஸ்வாமிகள் உண்டாக்கிவரும்

அன்பும் அநுதாபமும் இந்தியாவின் அபிவிருத்திக்குப் பெருந்ததோர் ஆதார ஸ்தானமா யிருக்குமென்பது நிச்சயம்' என்று அதே லண்டன் நிருபநேசர் எழுதுகின்றார்.''

இங்கிலாந்திலிருந்து ஸ்வாமிகள் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜூரிக் நகரத்துக்குப் போய் அங்கு நடந்த தர்ம சபையைப் பார்த்துக்கொண்டு, அங்கிருந்து ஜர்மனி தேசத்திலுள்ள கீல் (Kiel) என்னும் பட்டணம் சென்று, அங்கே தம்மை வரும்படி யழைத்திருந்த ஜர்மன் தேச வேதாந்தியாகிய தாய்சேன் பண்டிதரைக் கண்டதும் அவரது நண்பரானார்; ஸ்வாமிகளைக் கண்டமாத்திரத்தில் அப் பண்டிதர் ஆநந்த பரவசராகித் தாய்ஸன் பண்டிதர் என்னும் தன் ஜர்மன் மொழிப்பெயரைத் தேவஸேன பண்டிதரென்று வடமொழியில் மாற்றி வழங்கினால் தமக்கு அதிக கௌரவமா யிருக்குமென்று ஸ்வாமிகளிடம் கூறி அவருடன் லண்டன் வரையில் துணை வந்து வழிவிட்டுச் சென்றார்.

இங்கிலாந்திலே கல்வி கேள்விகளில் தேர்ந்த நாகரிகச் செல்வர்களின் கோஷ்டியில் ஸ்வாமிகளுக்கிருந்த அபாரமான சிறப்பும் செல்வாக்கும், மற்றைப்படி அத் தேச முழுவதிலும் அவரைப்பற்றிப் பரவியிருந்த நல்லெண்ணமும் இவ்வளவென்று, அவர் லண்டனிலிருந்து புறப்பட்டு வரப்போகும் சமயத்தில் அவருக்கு அளிக்கப் பட்ட பின்வரும் வந்தனோபசாரத்தினின்று விளங்கலாம்.

"தேவரீர் விசேஷ சாமர்த்தியத்துடன் போதிக்கும் வேதாந்த ஸித்தாந்தத்தை லண்டனிலே சிரவணம் செய்து வரும் சிஷ்யர்களாகிய நாங்கள்—தேவரீர் பலாபேக்ஷையின்றி லோகோபகாரமாய்ச் செய்ய முன் வந்திருக்கும் உத்தம காரிய விஷயமாயும், அதன் மூலமாய்த் தேவரீரது சிஷ்யர்களுக்கு விளைந்துள்ள பேருதவியின் விஷயமாயும், எங்களுக் குண்டாயிருக்கும் மனப்பூர்வமான மகிழ்ச்சியை இத்தருணம் வெளிப்படையாய்க் காட்டாமற் போவோமாயின், நாங்கள் செலுத்தவேண்டிய கடமையில் தவறிப் போனவர்க ளாவோமென்று கருதுகின்றோம்.

"தேவரீர் இவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படப் போவதைப்பற்றி நாங்கள் மிகவும் துயரப் படுகின்றோம். ஆனால், இந்தியாவிலுள்ள எங்கள் ஸஹோதர ஸஹோதரிகளும் தேவரீரது உத்தம கைங்கரியத்தின் பயனை யடையவேண்டியவர்க ளென்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளாவிடில், மிகச் சிறந்ததெனக் கருதுமாறு தேவரீர் எமக்குப் போதித்த மிகவும் நேர்த்தியான வேதாந்தத்தை நாங்கள் சரியாய்க் கிரஹித்த மெய்ச் சீடர்கள் ஆகோம்.

"அந்தக் கைங்கரியத்திலே தேவரீருக்கு மேன் மேலும் மங்களம் உண்டாகவேண்டு மென்பதே தேவரீரது போதனையின் உத்தம பிரபாவத்தையும் தேவரீரது கல்யாண குணங்களையும் கண்டு மகிழ்ந்த அனைவரும் ஒன்று சேர்ந்து செய்யும் பிரார்த்தனை. விதியில் இருப்பது போல் ஒழுக்கத்திலும் நாங்க ளனைவரும் எம்பெருமா

னது மெய்யன்பர்களா யிருப்பதற்கு எங்களைத் தூக்கி விட்டு உதவி புரியும் சிறந்த வேதாந்த இலக்கியமா யமைந்துள்ளது தேவரீரது நற்குணப் பொலிவே என நம்புகின்றோம்.

"தேவரீர் இந் நாட்டிற்குக் கூடிய சீக்கிரத்தில் திரும்பி வரவேண்டுமென்று அதிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். ஆனால், தேவரீரது போதனைகளைக் கேட்டதுமுதல் பரதகண்டத்தில் எங்களுக்கு ஒரு அபிநவமான அன்பும் ஆதரவும் உண்டாயிருப்பதால், தேவரீர் புரிந்து வரும் உத்தம தர்ம கைங்கரியத்தின் பிரயோஜனங்களை எங்களைப் போலவே அத்தேசத்தாரும் அநுபவிக்கப் போகிறார்களென்பதைப்பற்றி உண்மையாய் மகிழ்கின்றோம்.

"கடைசியாக, ஹிந்து ஜனங்களுக்கு எங்கள் அன்புள்ள அநுதாபத்தை அறிவிக்க வேண்டுமென்றும், நாமனைவரும் ஒரே ப்ரஹ்மஸ்ரூபமெனத் தேவரீர் உபதேசித்ததை நாங்கள் உண்மையென நம்பி, அவர்களது சுக துக்கங்களை எங்கள் சுக துக்கங்களெனப் பாராட்டுகின்றோமெனும் உறுதியை அடியேங்களிடத்திலிருந்து தேவரீர் அங்கீகரித்தருள வேண்டுமென்றும் மேன் மேலும் விசேஷித்துப் பிரார்த்திக்கின்றோம்."

---

## V

ஸ்வாமிகள் பரத கண்டத்துக்குத் திரும்பி வருதல்—கொழும்பிலே வந்திறங்குதல்—லங்கைவாசிகளின் வந்த

ரோபசாரம்—கீழ் நாட்டில் சுவாமிகளின் பிரதம உபந்யாஸம்—நகர பிரதக்ஷிணம்—கண்டி— யாழ்ப்பாணம்—யாழ்ப்பாணத்தில் சுவாமிகளின் வேதாந்த பிரஸங்கம்.

சுவாமிகள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் களைப்பின்றி யுழைத்துப் பாடுபட்ட பிறகு, ஸெவியர் துரை துரைசானி, குட்வின் துரை முதலிய ஆங்கிலேய சிஷ்யர்கள் ஸஹிதமாம் 1897-ம் வருஷத்திலே பாரத வருஷத்துக்குத் திரும்பிவந்தார்.

[சுவாமிகள் மேற்சொன்ன மூன்று ஆங்கிலேய நண்பர்களுடன் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு, நார்த் ஜர்மன் லாய்ட் லயனைச் சேர்ந்த பரின்ஸ் ரீஜெண்ட் லியப்போல்ட் என்ற நீராவிக் கப்பலில் ஏறி லங்கையின் ராஜதானியாகிய கொழும்புக்குப் பிரயாணமானார். கடல் யாத்திரை வெகு இனிமையா யிருந்தது. மேல் நாட்டிலே மூன்றரை யாண்டு ஓயாமல் பட்ட சிரமத்துக்குப் பிறகு அவருக்கு அவசியம் வேண்டியிருந்த இளைப்பாறுதலுக்கு இந்தக் கடல் பிரயாணம் மிக்க அநுகூலமா யிருந்தது. அன்றியும், கொழும்பி லிருந்து அவர் கல்கத்தா போய்ச் சேரும்வரையில் அவரைக் கவுரவிக்கும்பொருட்டு அங்கங்கே வரிசை வரிசையாக அநேக உபசார சபைகளும் பிரசங்கங்களும் இடைவிடாமல் தொடர்ந்தமையால், இவ் விளைப்பாறுதல் அவர் எதிர் பார்த்திருந்த அளவுக்கு மேலாகவே அவருக்கு வேண்டியிருந்தது. அவருடன் பிரயாணமாய் வந்த மூவர் ஆங்கிலேயர் யாரெனில், ஸெவியர் துரையும் அவர்

பத்னியும், மிஸ்டர் குட்வின் என்கிற மற்றொரு துரையு மாம். ஸெவியர் துரையும் துரைசானியும் இதற்கு முன் னமே ஒருமுறை பரதகண்டத்துக்கு வந்து பலநாள் இருந்து போனவர்கள். அவ்விருவரும் விருத்தர்கள் அவர் களுக்குச் சந்ததியுமில்லை. இங்கிலாந்தில் சுவாமிகளின் பிரசங்கங்களைக் கேட்டு வேதாந்தத்தின் அத்வைத வாதத் தையே தங்கள் மதமெனக்கொண்டவர்கள். இனி பரதகண் டத்தில் ஏகாந்தமான ஒரு பிரதேசத்தில் ஓர் ஆஸ்ரமம் ஸ்தாபித்து அதில் தம் வாழ்க்கையின் மற்ற காலத்தைக் கழிக்கவேண்டு மென்பதும், அத்வைத சித்தாந்தத்தைப் பரவச்செய்வதில் தங்கள் உடற்பொருள் ஆவிகளை விநி யோகிக்க வேண்டு மென்பதுமே அவர்களின் மநோரதம் அம் மநோரதம் ஸபலமாயிற்று. ஹிமாலயத்தைச் சேர்ந்த மாயாவதி எனுமிடத்தில் இப்பொழுதுள்ள ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த அத்வைத ஆசிரமமானது இவர்களின் பொருளுதவியைக்கொண்டே ஸ்தாபிக்கப்பட்டது. ஸெவி யர் துரை சில வருஷங்களுக்கு முன் தேகவியோக மடைந் தார். அவருடைய பத்னி இன்னும் அங்கேயே இருக் கிறாள். பேலூர் மடத்தைச் சேர்ந்த சில சந்யாஸிகளும், மிஸஸ் ஸெவியர் துரைசானியும், அமிருதாநந்த என்னும் அமெரிகா தேசத்துப் பிரஹ்மசாரி ஒருவரும். இத் தேசத்திய ப்ரஹ்மசாரிகள் சிலரும் அவ்வாசிரமத்தில் இப்பொழுது வசித்துவருகிறார்கள். இந்தத் துரைகள் இவ் வாறு தம் மானாபிமானங்களை விட்டு நம் மதத்தில் வைத்த உறுதியான நம்பிக்கையாற் கடலைக் கடந்து இவ்வளவு

தூரம் வந்து ஹிமாசலத்தில் வசிக்குமாறு நிச்சயம் செய்துகொண்டதை நோக்குங்கால், இத்தகைய காரியங்களுக்குக் காரணபூதராயிருந்த விவேகாநந்த சுவாமிகளின் ஊக்கத்தையும் விடா முயற்சியையும் சாலவும் வியக்க வேண்டி யிருக்கின்றது.

மிஸ்டர் குட்வின் துரை ஒரு கள்ளங் கவடற்ற யௌவன புருஷர். பரோபகாரமான கருமங்களைச் செய்வதில் நோக்க முடையவர். அவர் ஸாங்கேதிகலேகக நிபுணர் எனப் பெயர் பெற்றிருந்தார். சுவாமிகள் அமெரிக்காவில் பிரசங்கம் புரிந்துகொண்டிருக்கையில், அவரது ப்ரஸங்கங்களை அப்படியே 'ரிபோர்ட்' செய்வதற்கு இப்படிப் பட்ட மனிதன் ஒருவன் வேண்டுமென்று சமாசாரப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட் டிருந்தது. அதைக் குட்வின் துரை கண்டு முதலில் அந்த வேலையை ஒப்புக் கொண்டார். பிறகு சுவாமிகளின் குணாதிசயங்களைக் கண்டு வியந்து அவருக்குச் சிஷ்யராகி அதுமுதல் அவருடன் கூடவே இருந்துவந்தார். அவர் மூலமாய்த் தான் சுவாமிகளின் பிரசங்கங்களை யாவரும் சாதாரணமாய்ப் படிப்பதற்குச் சாத்திய மாயிற்று, இவர் இந்தியா வந்த சில மாசத்துக் குள்ளாகவே உதகமண்டலத்தில் காலகதி யடைந்ததைப் பற்றி விசனிக்க வேண்டியிருக்கிறது.]

சுவாமிகள் பிரயாணமாகி வந்த நீரா விக் கப்பல் 1897 வருஷம் ஜனவரி மாதம் 15உ பகலில் கொழும்

புத் துறை முகம் வந்து சேர்த்தது. கொழும்பிலுள்ள இந்துக்கள் சுவாமிகளைத் தக்கபடி உபசரிக்கும் பொருட்டு ஓர் உபசாரகாரியசபை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்தச் சபையைச் சேர்ந்தவர்களில் ஸ்ரீ கனகசபை, ஸ்ரீ சொக்க நாதன் எனும் இருவரும், ஸ்வாமிஜியின் குருபாய்களில் ஒருவரான நிரஞ்ஜநாநந்த சுவாமிகளும், கொழும்பு வாசியாகிய ஹாரிசன் என்கிற பௌத்த துரையும் சுவாமிகளைக் கப்பலிலே போய் எதிர்கொண்டு உபசரித்தனர். அவரைக் கரைக்கு அழைத்துப் போவதற்காக முன்னடியாகவே 'ஒரு ஸ்டீம்லாஞ்ச்' ஏற்பாடு செய்திருந்தனர். அதன் மூலமாய் அவர் கரை சேர்ந்தபொழுது, கடற்கரையிலும் பாதை வழிகளிலும் பல்லாயிரம் இந்துக்கள் கூட்டங் கூடியிருக்கக் கண்டார். ஸ்வாமிகளைக் கண்டவுடன் அனைவரும் சந்தோஷத்தால் கைகொட்டி ஆர்ப்பரித்தனர். அக்கூட்டத்தின் ஊடே அவர் நடந்து சென்று வண்டியில் ஏறும்வரையில் அவ்வாரவாரம் ஓயவில்லை. அவர் ம-ா-ா-ஸ்ரீ பி. குமாரஸ்வாமி யவர்களுடன் சகடத்தில் ஏறி, அவரை உபசரிக்கும் பொருட்டு பார்னெஸ் தெருவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோர் அழகிய பங்களாவில் போய் இறங்கினார். பார்னெஸ் வீதியானது கொழும்பு நகரத்தின் வெளிப்புறத்தில் உள்ளது. தோட்டத்தினின்று நேராகச் சென்றால், அந்தப் பங்களாவுக்கும் தோட்டத்துக்கும் கால்மைல் தூரம் இருக்கும். இந்தப் பாதையின் ஆரம்பத்தில் தென்னமரத்தின் கிளைகளாலும் ஓலைகளாலும் குலைகளாலும் அமைத்த மங்கள தோரணத்தில்

ஸ்வாமிகளுக்கு நல்வரவு' என்று வரையப்பட்டிருந்தது. இந்தப் பாதை முதற்கொண்டு பங்களா வரையிலும் பச்சைப் பனையோலைகளைப் பிளந்து தொடர்ச்சியான தோரணங்கள் இருபாரிசத்திலும் கட்டப்பட் டிருந்தன. பங்களாவின் வாயிற்படியில் அநேக மாதிரியான மற்றொரு தோரணம் பிறை வடிவமாய் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பங்களாவிலே ஸ்வாமிகளைப் பகிரங்கமாய் உபசரிக்கச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அங்கே அநேக இந்து மஹா ஜனங்கள் கூடியிருக்க, மாநநீய ஸ்ரீ பி. குமாரசாமி அவர்கள் பின்வரும் ஸ்வாகதோபகார பத்திரிகையைப் படித்தார். [ஸ்வாகதம் = நல்வரவு]

ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகளின்

ஸந்நிதானத்தில் விஞ்ஞாபனம்

பூஜ்யபாதரே!

கொழும்பு நகரத்தில் வசிக்கும் இந்துக்கள் கூடிய பொதுசபையில் செய்த தீர்மானத்தை யநுசரித்து நாங்கள் இத் தீவிலே தேவரீருக்கு மனப்பூர்வமான ஸ்வாகதோபசாரம் ஸமர்ப்பிக்கின்றோம். மேல்நாட்டில் தேவரீர் மேற்கொண்ட பெரும் விரதத்தை முடித்துத் தங்கள் ஜன்மதேசத்தை நோக்கித் திரும்பிவருங்காலையில், தேவரீருக்கு உபசாரம் செய்வதில் நாங்கள் முதன்மையரா யிருக்கக்கிடைத்தது எங்கள் பாக்கியம் என்றே எண்ணுகின்றோம்.

தாங்கள் கைக்கொண்ட விரதமானது கடவுளின் திருவருளால் சித்தி பெற்றதை நோக்கி நோக்கி ஆநந்தங் கொண்டு எம்பெருமானை வாழ்த்துகின்றோம். சகல மத சம்பிரதாயங்களையும் ஸமந்வயப்படுத்தி, ஒவ்வொருஜீவாத்மாவையும், அவனது பரிபக்வ நிலைக்குத் தகுந்த சமய நெறியில் நடத்திக் கடவுள் சமீபத்தில் அன்போடு கொண்டுபோய்ச் சேர்க்கும் சமயமாகிய இந்துக்களின் சகலமத சமரச மார்க்கத்தை ஐரோப்பா அமெரிக்கா நாட்டிலுள்ளவர்களுக்குப் பஹிரங்கப்படுத்தினீர்கள். எவர்கள் தம் திருவடிகளை வைத்து ஸஞ்சரித்து இப் பாரதவர்ஷத்தைப் பரிசுத்தமாக்கி, அதற்கு எத்தனையோ மாறுதல்கள் உண்டாகியும், அதை எப்பொழுதும் தங்கள் கருணை நிறைந்த ஸாந்நித்தியத்தாலும் ஞானோபதேசத்தாலும் ஜகஜ்ஜோதியென விளங்கச் செய்தனரோ, அத்தகைய மஹா புருஷர்களால் தொன்றுதொட்டுப் பாரம்பரியமாய் உபதேசிக்கப்பட்டு வரும் தத்துவ மார்க்கத்தையே தேவரீர் பிரசங்கித்தீர்கள்.

அத்தகைய குருமூர்த்திகளுள் ஒருவராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரது திருவருளாலும், சுயநலங் கருதாது பரோபகாரம் செய்துவரும் தேவரீரது உயர்வான வைராக்கியத்தினாலுமன்றோ, மேல் நாட்டார்கள் பாதகண்டத்தின் பரந்த ஞானத்தின் சம்பந்தம் பெற்று விலைமதிக்கவொண்ணாப் பெரும் பாக்கியத்துக்குப் பாத்திரரானார்கள். அது மாத்திரமா? நம் சுயதேசத்தாரிலும் அநேகர் மேல்நாட்டு நாகரிக மயக்கத்தினின்றும் நிவிர்த்தி

யடைந்து நமது சிறந்த பூர்வார்ஜித சொத்தாகிய ஞாநநிதி யின் மாட்சியைப் பிரத்யக்ஷமாய்க் காணலானார்கள்.

தேவரீரது பரம சற்கைங்கர்யத்தினாலும், மேலான அநுஷ்டானத்தினாலும் மானவ வர்க்கத்தார் அனைவரையும் தீர்க்கமுடியாக் கடைமைப்பாட்டிற்கு உள்ளாக்கினதுடன், எமது அருமை மாத்ரு பூமிக்கும் ஓர் அபிநவ காந்தியை உண்டாக்கி வைத்தீர்கள். தங்களையும் தாங்கள் கைக்கொண்ட கைங்கரியத்தையும் மேன்மேலும் பரிபாலித்துவரும்படி கடவுளின் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

இவ்வாறு, தங்கள் பக்தர்களாகிய
கொழும்பு இந்துக்களின் சார்பில்,
பொ. குமாரசாமி,

கொழும்பு
1897-ம் வருஷம்
ஜனவரிமீ 15உ

இலங்கைச் சட்டநிரூபணச்
சபைப் பிரதிநிதியும்,
சபையின் அக்ராசநாதிபதியும்.
ஏ. குலவீரசிங்கம்,
கார்யதரிசி.

அப்பொழுது சூரியாஸ்தமந சமயமாயிருந்தபடியால், ஜனங்களை வெகுநேரம் நிறுத்திவைக்க மனமற்றவராய் அவர்கள் தமக்குப் பிரீதியுடன் அளித்த வந்தனோபசாரத்தைக் கொண்டாடி, ஸ்வாமிகள் சுருக்கமாகச் சில பிரதியுபசார வசனங்கள் மொழியலுற்றார். "பெரிய ராஜதந்திர நிபுணனுக்காவது, மஹா வீரனுக்காவது கிடைத்

தற்கரிய மரியாதையைக் கேவலம் பிச்சையெடுக்கும் சந்நியாஸியாகிய எனக்கு நீங்கள் செய்ததானது ஹிந்துக்களின் மனம் எப்பொழுதும் சமயச் சார்புடையதென்பதை நிரூபிக்கின்றது. உங்கள் நாடு க்ஷேமமடைந்து மேன்மையாய் விளங்கவேண்டுமாயின், நீங்கள் சமய நெறியை எக்காலத்திலும் கைவிடாது போற்றிவரக் கடவீர்! இப்படிப்பட்ட மரியாதை எனக்குக் கிடைத்ததென்கிற காரணத்தினால் நான் சந்தோஷிக்கவில்லை. மற்று உங்களுக்குள்ள சமயச் சார்பை அது வெளிப்படுத்துகிறதென்கிற காரணம்பற்றியே சந்தோஷிக்கிறேன்.''

இவ்வாறு வசனித்த ஸ்வாமிகளின் பிரசங்காமிருதத்தை அனைவரும் அருந்தி ஆநந்தத்தால் ''ஜெய! ஜெய! மஹாதேவா!'' என உச்சஸ்வரத்துடன் நாம சங்கீர்த்தனம் செய்து, மலர்களைத் தூவ, ஸ்வாமிகள் அனைவர்க்கும் ஆசி கூறி விடையளித்தனுப்பிவிட்டுத் தாம் ஆசிரமத்துட் சென்றார். அதுமுதல் அந்த ஆச்சிரமம் விவேகாநந்த ஆசிரமம் எனப் பெயர் பெறலாயிற்று.

அடுத்த சனிக்கிழமை மாலை கொழும்புநகர்ப் பூந்தோட்டத்திலுள்ள சபா மண்டபத்தில் ஸ்வாமிகள் பிரசங்கித்தார். ஊசி நுழைவக்கூட இடமின்றி, ஜனங்கள் மண்டபம் முழுவதும் நிரம்பியிருந்தார்கள். சிகாகோ மஹாசபையில் பேசியதற்கு முந்தி ஸ்வாமிகள் எங்கும் பஹிரங்க பிரசங்கம் செய்தது இல்லாமையால், இந்தியாவில் இதுவே ஸ்வாமிகளின் பிரதம உபந்யாஸம் என்ற காரணம் பற்றி இது மிக்க விசேஷமானது.

ஸ்வாமிகள் பின் வருமாறு பிரசங்கிக்கலுற்றார்.

## ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள்
## கொழும்புப் பூந்தோட்டத்துச் சபா மண்டபத்திற் செய்த
# பிரசங்கம்

ஸபா நாயகரே! கனவான்களே!—என்றுற் செய்யப் பட்ட அச் சாமானிய கைங்கர்யமானது எனக்கு இயற்கையா யுள்ள சக்தியாற் செய்து முடிக்கப்பட்டதன்று. அருமைப் புண்ணிய பூமியும் நமது ஜந்ம பூமியுமாகிய இந்தப் பாரத வர்ஷத்தினின்றும் யான் மேல் நாட்டை நோக்கிப் புறப்பட்ட காலத்து என்னைத் தொடர்ந்து பின்சென்ற சுப செளபாக்கிய மங்களாசிர்வாதங்களாலேயே அது நிறைவேறியதென்க. அக் கைங்கரியத்தில் சில நன்மை விளைந்தது முண்மையே. அக் கைங்கரியத்தில் நான் தலையிடுவதற்கு முன்னர், என் மனத்தில் கேவலம் பொதுவுணர்வாகவும் உற்சாகமாகவு மாத்திரம் இருந்தவைகள் இப்போது நிச்சயாநுகூலமாகிப் போராற்றலையும் பிரத்யக்ஷ அநுபவமாகிய வன்மையையும் அளித்தமையால், அஃது எனக்கே மிகச் சிறந்த நன்மையாயிற்று. அதுவரையிலும்—இப்போது ஸபா நாயகரவர்கள் உங்களுக்குத் தெரிவித்தவாறு இந்துக்களாயுள்ளவர் ஒவ்வொருவரும் எண்ணுவதுபோல், இத்தேசத்தைப் புண்ணிய பூமியென்றும் கர்ம பூமியென்றும் சொல்வது எனக்கும் எண்ண மாத்திரமாகவே இருந்தது. அஃது உண்மையே என்பது இன்று தான் எனக்குப் பிரத்யக்ஷ அநுபவமாயிற்று. இத்

தாரணியில் தெய்வாநுக்ரஹம் பெற்ற புண்ணிய பூமி தானே என்னும் உரிமை பாராட்டக்கூடிய தேசமும், இப் பூதலத்திலுள்ள சர்வ ஆத்மாக்களும் தம்தம் கர்ம பலத்தை அநுபவிக்கும்பொருட்டு ஜந்மமெடுப்பதற்குரிய தேசமும், ஈசுவராபிமுகமாய்ப் பிரவிர்த்தித்துள்ள ஒவ்வொரு ஆத்மாயும் தானடைய விரும்பும் மேலான மோக்ஷ பதவியைச் சாதிப்பதற்கு வந்தடையவேண்டிய பூமியும்; பரிபூரண சாந்தம், கருணை, பரிசுத்தம், அடக்கம் என்பனவற்றில் மேன்மை வகித்து விளங்கும் மாநுட மண்டலத்தையுடைய தேசமும், இவை யனைத்திற்கும் மேலாக அந்தர்முக ஆத்ம தரிசனமும், சமய பக்தியு முடைய தேசமும் ஒன்றிருக்குமாயின், அது பாரத வர் ஷமேயன்றி வேறன்று. ஆகையாலன்றோ, வெகு பூர்வ காலந்தொட்டுச் சமய ஸ்தாபகாசார்யர்கள் அவ்விடத்தி னின்றும் எழுந்து சமய ஞான தத்துவமென்னும் வற் றாத நன்னீர் நதிப்பெருக்கால் பூமி முழுவதையும் அடிக் கடி நீராட்டினார்கள்? அங்கிருந்தன்றோ பூமியின் எத் திசைகளிலும் தத்துவ சாஸ்திர அலைகள் புரண்டு பரப் பனவாயின? தற்காலத்து உலகத்தில் பரவிக் கலந்து கிடக்கும் லோகாயத நாகரிக விருத்தியை நிவிர்த்தி செய்து அதன் ஸ்தானத்தில் மெய்ஞ்ஞான நிலையை நாட்டப் போகும் தத்துவ சாஸ்திர அலைகள் இன்னும் அங்கிருந்து தானே புரளப்போகின்றன? இதர தேசங்களிலேயுள்ள கோடாநுகோடி ஜீவர்களின் இருதய கோசங்களைத் தஹித்துவரும் லோகாயத விருத்தியென்னும் அவியாது

கொழுந்து விட்டெரியும் அக்கி ஜ்வாலையைத் தணிக்க வல்ல ஜீவாமிருத ஞான தடாகம் இப் புண்ணிய பூமியின் கண் தான் இருக்கின்றது. என் மித்திரர்களே! இது நிச்சயமாய் நடக்கப்போகின்ற தென்பதை நம்புங்கள்.

நான் பார்த்தமட்டில் இது தவறுமல் சம்பவிக்குமென்கின்ற நிச்சயம் எனக்குண்டு. உலக சரித்திரத்தைக் கற்றறிந்த உங்களுக்கும் அது தெரிந்த விஷயந்தான். இந்த நம் மாத்ரு பூமிக்கு உலகம் முழுவதும் கடன்பட்டிருப்பது இவ்வளவென்று சொல்லி முடியாது. உலகத்திலுள்ள எந்தத் தேசத்தை நோக்கினுலும, சாந்த குணமே உருவெடுத்ததுபோல் விளங்கும் சாதுக்களாகிய ஹிந்துக்களுக்குக் கடமைப்பட்டிராத ஜாதியாரே கிடையார். 'சாது வாய இந்து' என்னும் சொல்லைச் சிலர் இழி சொல்லாக வழங்குவதுண்டாயினும், இழி சொல்லினும் விசேஷ உண்மை சில சமயம் மறைந்திருக்குமென்பதற்கு ஈசுவரானுக்கிரஹம் பெற்ற இந்துவைக் குறித்து வழங்கும் 'சாதுவாகிய இந்து' என்னும் இச் சொல்லே சாக்ஷி.

பலம் பொருந்திய பலவகை நாகரீகங்கள் பிறதேசங்களில் உண்டாயின். பூர்வ காலங்களிலும் தற்காலத்திலும் பல பராக்கிரம முள்ள பெருஞ் ஜாதியார்களிடத்திலிருந்து மேலான கருத்துக்கள் உதித்தன. பூர்வ காலத்திலும் தற்காலத்திலும் ஒரு ஜாதியாரிடத்தில் விளங்கிய ஆச்சரியகரமான புதிய கருத்துகள் மற்ற ஜாதியாரிடத்தும் போய்ப் பரவலாயின. பூர்வகாலத்திலும் தற்காலத்திலும் தத்துவ

ஞானத்தைப் பரவச்செய்ய விரும்பிய ஜாதியார்கள் தத் தம் அதிகார வைபவ ஆடம்பரங்களோடு நாடுகள் தோறும் சென்று பிரசங்கிப்பாராயினர். நண்பர்களே! கவனமாய்க் கேளுங்கள்! தமக்குத் தெரிந்த அற்ப உணர் வை அயல் நாட்டாருக்குப் போதிக்கம்போனவர்கள் ரண பேரி முழக்கத்தோடும் சேனாசமூஹ சகாயத்தோடுமே சென்றார்கள். அவர்களின் மதக்கொள்கைகள் ஒவ்வொன் றும் ஒவ்வோர் இரத்தப் பிரளயத்தில் தோய்ந்தே பரவ வேண்டியவாயின. அவர்களின் கொள்கை ஒவ்வொன் றும் ஒவ்வோ ரிலக்ஷம் மனிதர்கள் மாண்ட ரத்தப் பிரவா ஹத்தில் நடந்து செல்வனவாயின. அவ் யுத்த வீரர்க ளின் வாயினின்று வெளிப்படும் வீரவுரைகள் ஒவ்வொன் றாலும் இலக்ஷம் ஜனங்கள் புலம்பிப் பிராணனை விட்ட னர்; குழந்தைகள் தம் பெற்றோரைப் பறிகொடுத்துப் பிரலாபித்தன. பெண்கள் தம் புருஷரை யிழந்து கண்ணீர் விட்டுக் கலங்கினர். இவ்வாறன்றோ பிற ஜாதியார்கள் தம் மதத்தைப் பரவச் செய்தனர். இந்தியாவோ எப்பொழு தும் தன நிலை தவறாமல் பல்லாயிர மாண்டாக இருந்து வருகின்றது. கிரீஸ் (Greece) தேசம் இன்னும் ஏற்படாத காலத்தும், ரோமாபுரி யென்கிற பெயர் கூட நினைக்கப் படாத காலத்தும், தற்காலத்திய ஐரோப்பியரின் முன் னோர்கள் நீல வர்ணம் பூசி: அடர்ந்த ஜர்மனிக் காடு களிலே பசுப்பிராயமாய்ச் சஞ்சரித்த பூர்வ காலத்தி லும், எமது தேகத்திலே உத்தம பிரவிர்த்தி உண்டா யிருந்தது. இன்னும், உலக சரித்திரத்துக்கு அதீதமான

தும், கர்ண பாரம்பரியமும் எட்டிப் பார்க்கத் துணியாது
தியங்கும்படி கிடப்பதுமான அப் பூர்வகாலந் தொட்டு
இந்த க்ஷணம் வரையிலும், நம் தேசத்திலிருந்து எத்
தனையோ கொள்கைகள் ஒன்றின்பின் ஒன்றாய் உண்டாகி
வெளிக் கிளப்புவனவாயின. அப்படிக் கிளம்பிய கொள்
கைகள் ஒவ்வொன்றும் முன்னே உபசாந்தியும் பின்னே
அநுக்கிரஹமும் சூழத் திரண்டெழுந்த திவ்ய வாசகங்க
ளானமையால் உலகத்துள்ள எல்லா ஜாதியாருக்குள்
ளும் ஹிந்துக்களாகிய நாம்தாம் பிறரை வென்று ஆள
வேண்டுமென்னும் எண்ணம் எக்காலத்தும் கொள்ளாதவ
ராய் இருந்துவருகிறோம். அக்காரணம்பற்றியே நாம் அவ்
வீசுவராநுக்ரஹத்தைத் தலைமேல் தாங்கி இன்றுவரை
யில் வாழ்ந்து வருகிறோம். கிரீஸ் தேசத்து மஹா சைனி
யங்கள் படை யெடுத்துச் சென்றபோது பூமண்டலம் கிடு
கிடென்று நடுங்கிய காலமும் ஒன்றிருந்ததன்றோ? இப்
பொழுதோ மறைந்து போய்விட்டதே பூதலத்தைவிட்டு
அந்தப் பிரதாபம். ஒரு கதைகூட இல்லாமற் போய்விட்
டதே அதன் பெருமையைச் சொல்ல. போய்விட்டதே
அடியோடு கிரேக்கர்களின் நாடு. இவ் வுலகத்தில்
எங்கும் ரோமாபுரியின் கழுகுக்கொடி சிறப்புடன் பறந்த
காலமும் ஒன்றிருந்ததல்லவோ? ரோமாபுரியார் சென்ற
விடமெல்லாம் அதன் அதிகாரத்தை மானிடவர்க்கத்தா
ரின்மேல் செலுத்திக்கொண்டு போனார்களே. ரோம் என்
கிற பெயரைக் கேட்டளவிலேயே பூமி முழுவதும் நடு
நடுங்கிற்றே. இப்பொழுதோ அதன் திவ்யாலங்கார மாளி

கைகள் நிறைந்த 'காபிடலைன்' பர்வதம் அடியோடு அழிந்துபோய் நாசராசியாய்விட்டது. ரோம ராஜாக்களாகிய ஸீஜர்கள் அரசாண்ட சபா மண்டபமானது இப்போது சிலந்தி வலைகட்டிக்குடியிருக்கும் இடமாய்ப்போய் விட்டது. இவ்வண்ணமே இன்னும் எத்தனையோ தேசத்தரசர்கள் சிறப்புற் றோங்கிய உயர்ந்த நிலை யடைந்து, க்ஷணப்போது அதிகார வைபவத்தால் பூரிப்புடன் வாழ்ந்து, நீரின்மேல் தோன்றும் குமிழிபோல், காலந்தோறும் தோன்றி யழிவாராயினர்.

உலகத்தில் அவர்கள் வந்ததின் பயன் இவ்வளவே யாக, நாம் மாத்திரம் என்றும்போல் ஸ்திரமா யிருக்கின்றோம். மநுவே இப்பொழுது திரும்பிவந்து நம் தேசத்தைப் பார்த்தபோதிலும், அவருக்கு இஃது ஓர் அந்ய தேசமாகத் தோன்றாது. இஃது அதிக மாறுத லடைந்து விட்டதென்று அவர் ஆச்சரியப்படவுமாட்டார். அவரால் பண்டு உபதேசிக்கப்பட்ட அதே அநாதியான தர்மங்களும், அத் தர்மங்களுக்கேற்ற புராதனத்தினும் புராதனமான சாசுவத விதிகளும், எத்தனையோ யுகங்களின் அநுபவத்தாலும் - முதிர்ந்த சூக்ஷ்ம புத்தியினாலும் கண்டு கொண்ட ஆசார வழக்கங்களும், சிறிதேனும் மாறாமல் இன்றும் நிலைபெற்றிருக்கின்றன. இனி, காலஞ் செல்லச் செல்ல இடுக்கண்மேல் இடுக்கண்கள் அவற்றின்மேல் மோதியும், அத் தர்மங்கள் சிறிதேனும் கலங்காமல் அம் மோதுதலினால் இன்னும் அதிகமாய் வன்மை யடைந்து

ஸ்திரமாகி ஓங்கி வளர்வனவாயின. இந்த சாசுவத தர்மங்களுக் கெல்லாம் ஆதி உற்பத்தி ஸ்தானமாகிய இருதய ஸ்தான மெதுவென்று விசாரிக்கில், இவ்வுலகத்தில் எனக்குள்ள சொற்ப அநுபவத்தைக் கொண்டு நான் சொல்வதை நம்புங்கள்! அந்த உற்பத்தி ஸ்தானம் இங்கேதான் இருக்கின்றது.

உலகத்திலுள்ள மற்ற ஜாதியாருக்கோ, அவர்களுக்குள்ள எத்தனையோ வகையான உலக வியாபாரங்களில் மதமும் ஒன்றாயிருக்கிறது. அவர்களுக்கு ராஜ்ய தந்திரம் இருக்கிறது, சம்சாரசுக மிருக்கிறது, சம்பத்தால் சாதிக்கத் தக்கதெல்லாம் இருக்கிறது, பிரபுத்துவத்தால் பெறத் தக்கதெல்லாம் இருக்கிறது, இந்திரியங்களால் அநுபவிக்கக் கூடியதெல்லாம் இருக்கிறது, இதற்கப்பாலும் இன்னும் ஏதாவது இந்திரிய சுக போகங்கள் உளவாகில், அவற்றையும் பெறவேண்டு மென்னும் ஆவலும் அவர்களுக்குண்டு. இவ்வாறான பலவகை போக போக்கியங்களுக்குள்ளே அவர்களுக்குச் சிறிதளவு சமயாசாரமும் வேண்டியிருக்கிறது. இந்தியாவிலோ சமயாசாரம் ஒன்றே ஜனங்களது முக்கியமான பிரவிர்த்தியா யிருக்கிறது. சில காலத்துக்கு முன் சீன ஜப்பானிய யுத்தம் நடந்த சங்கதி உங்களுக்குள் எத்தனை பேருக்குத் தெரியும்? அப்படித் தெரிந்திருந்தாலும் வெகு சிலரினும் சிலருக்குத்தான் தெரிந்திருக்கும். மேல்நாட்டிலே பிரமாதமான ராஜாங்கப் பிறழ்ச்சிகளும் ஜனசங்கக் கிளர்ச்சிகளும் உண்டாகி வரும்

சங்கதி உங்களுக்குள் எத்தனை பேருக்குத் தெரியும்? வெகு சிலருக்குத்தான் தெரிந்திருக்கலாம். ஆனால், அமெரிக்காவில் சர்வமத மகாசபை ஒன்று நடந்ததென்றும், அங்கே இந்து ஸந்யாஸி ஒருவர் போயிருந்தாரென்றும், சாமானியமான கூலிக்காரனுக்கும் தெரிந்திருப்பதைக் காண எனக்கு எவ்வளவோ ஆச்சரியமா யிருக்கிறது. அதனால் நம்மவர்களின் மனோ நிலை எதை நாடி யிருக்கிறதென்பது அங்கிருந்து வீசும் வாடைக் காற்றால் விளங்குகிற தன்றோ? உலகத்திலுள்ள பலவகைத் தேசத்து ஜனங்களின் குணாதிசயங்களையும் எளிதில் அறிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆவலுடன் வெகு விரைவாய்ப் பூப்பிரதக்ஷணம் செய்யும் அயல் நாட்டுப் பிரயாணிகள் எழுதியுள்ள புஸ்தகங்களாலும், மற்றும் வேறு தேசத்தினர் சொல்லிவரும் சமாசாரங்களாலும், நம் இந்து ஜனங்கள் அஞ்ஞான இருளில் மூழ்கியிருப்பதாக அவர்கள் புலம்புவதை நான் பலமுறையும் கேள்வியுற்றிருக்கிறேன். அப்படி அவர்கள் சொல்வது ஒரு விதத்தில் மெய்யெனவும், மற்றொரு விதத்திற் பொய்யெனவும் இப்பொழுது நான் அறிந்துகொண்டேன். மேல்நாட்டில் இங்கிலாந்திலாயினும், அமெரிக்காவிலாயினும், பிரான்சிலாயினும், ஜர்மனியிலாயினும், மற்றெத் தேசத்திலாயினும் உள்ள குடியானவனைக் கண்டு, நீ எந்தக் கக்ஷியைச் சேர்ந்தவன் என்று கேட்டால், அவன், தான் பிரஜானுகூலக் கக்ஷியைச் சேர்ந்தவன் அல்லது இராஜானுகூலக் கக்ஷியைச் சேர்ந்தவன் இன்ன கக்ஷிக்காகச்

சீட்டுப் போடப் போகிறேன் என்பவற்றைப் பற்றி விவரமாய்ச் சொல்லுவான். அமெரிக்காவிலுள்ள குடியானவனே தான் *ரிபப்ளிகன் கக்ஷியைச் சேர்ந்தவனே, அல்லது டெமொக்ராட் கக்ஷியைச் சேர்ந்தவனே என்பதை நன்கறிந்திருக்கிறான். அதோடு † வெள்ளி நாணய வட்டத்தின் சங்கதியுங்கொஞ்சந் தெரிந்துகொண் டிருக்கிறான்.

ஆனல், அவனைப் பார்த்து, உன் சமயம் என்னவென்று வினவுங்கால், நான் கோவிலுக்குப் போய் வருவதுதான் எனக்குத் தெரியும்; அதுவும் என் தகப்பனர் அந்த சர்ச்சுக்குப் போய்க்கொண் டிருந்தமையால், நானும் போகிறேன்; அவ்வளவு செய்தால் அதுவே எனக்குப் போதுமானது என்பான்.

---

* ரிபப்லிகன்—டெமொக்ராட்:—எந்த நாட்டின் ஆட்சியானது அந் நாட்டிலுள்ள சகல ஜனங்களாலும் ஒருமுகமாய் நடத்தப் படுகிறதோ, அதற்கு டெமொக்ரஸி (Democracy) என்று பெயர். எந்தத் தேசத்தின் ஆட்சி முறையானது தன் பிரஜா சமுதாயத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் வசத்தில் இருக்கிறதோ, அதற்கு ரிபப்லிக் (Republic) என்று பெயர். முற்காலத்திய ஆதென்ஸ் ரோம் முதலிய நாடுகளின் ஆட்சி டெமொக்ரஸிக்கும், தற்காலத்திய ப்ரான்ஸ், அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்கள் முதலியவைகளின் அரசுமுறை ரிபப்லிக் ஆட்சிக்கும் உதாரணங்களாம். இவ் விருவகை ஆட்சி முறைகளிலும் அபிமான முள்ளவர்களுக்கு முறையே டெமொக்ராட்டுகளென்றும், ரிபப்லிகன்கள் என்றும் பெயர்.

† வெள்ளி நாணய வட்டம் (Silver Question).

அதைவிட்டு இந்தியாவுக்கு வந்து அங்குள்ள குடியானவனொருவனைப் பார்த்து, "ராஜ்ய தந்திர சங்கதியைப் பற்றி ஏதாவது உனக்குத் தெரியுமா?" என்று வினவினால் அவன், "அது என்ன சங்கதி? எனக்கு ஒன்றும் தெரியாதே" என்பான். இனி, ஸோஷியலிஸம் என்னும் ஜனசங்கக் கிளர்ச்சியைப்பற்றியும், மூலதனத்துக்கும் உழைப்புக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும், இன்னும் இவை போன்ற தற்கால நூதன விஷயங்களைப் பற்றியும், அவன் பிறந்தது முதல் ஒன்றுமே கேட்டறியான். அவன் கஷ்டப்பட்டு வேலை செய்து அதில் கிடைப்பதைக் கொண்டு ஜீவனம் செய்கிறான். அதற்கு மேல் இவ்வுலக விஷயங்களைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அவனை "உன் மதம் என்ன?" என்று வினவுவோமாயின், "இதோ பாரும் ஐயா! என் நெற்றியில் குறித்திருக்கிறேன்" என்பான். இதுவேயன்றி, சமயசாஸ்திர விஷயமாயும் இரண்டொரு சங்கதிகளைப்பற்றி வழியாய்ச் சொல்வான். இஃது என் பிரத்தியக்ஷ அநுபவம். இதுவே நம் ஜாதியாரின் வாழ்க்கை யியல்பாம்.

ஒவ்வொருவனும் தனித்தனி வெவ்வேறு குணங்களுடன் கூடியிருத்தலால், முன் பிறவிகள்தோறும் செய்த கர்மங்களுக்குத் தக்கபடி, ஒவ்வொருவனுடைய வாழ்க்கையும் விருத்திவகையும் இப் பிறவியில் வெவ்வேறு விதமாக ஏற்படுகின்றன. எவ்வாறு முன் பிறவியில் செய்த கர்மங்களின் பயனை இப் பிறவியில் அநுபவிக்க வேண்டுமோ,

அவ்வாறே, இப் பிறவியில் செய்யும் கர்மங்களின் தன்மையை யநுசரித்து இனிவரும் பிறவியும் நிர்ணயிக்கப்படும். இவ்விதமாக, இவ்வுலகத்திற் பிறக்கும் ஒவ்வொருவனும் தான் சென்று அபிவிர்த்தி யடைவதற்கு வேண்டிய தனித் தனி மனச் சார்பும் பொருத்தமும் உள்ளவனாகிறான். இவை தனியான ஒரு மனிதனைப்பற்றி எப்படி யுண்மையோ, அப்படியே அத்தகைய மனிதர்களின் சமஷ்டியான பெருஞ் சாதியாருக்கும் உண்மையாகின்றன. ஆகவே, ஒவ்வொரு ஜாதியாரும் ஒவ்வொரு மனச்சார்பு உள்ளவர்களாயும், தம் தம் நிலைக்கேற்ற நியாய முடையவர்களாயும், தாம் தாம் மேற்கொண்ட கர்மங்களையே செய்து முடித்து, அவற்றின் கருத்தை நிறைவேற்றும் விசேஷ நியமன முள்ளவர்களாயு மிருக்கின்றனர்.

இராஜ்யதந்திர வுயர்வும் படைத்திறப் பெருமையும் சாதிக்க வேண்டுமென்பது எப்போதும் நம் ஜாதியார் கொண்ட கருத்தன்று. அவர்கள் அவ்வண்ணம் கொண்டிருந்ததுமில்லை, இனி இருக்கப் போகிறதுமில்லை. இது சத்தியம். நமது ஜாதியாருக்கு ஏற்பட்ட கருத்தோ வேறு. நமது ஜாதியாரிடத்திற் றிரண்டிருக்கும் தத்துவஞான சத்தியனைத்தையும் வாஞ்ஸ்திரமாகச் சேகரித்துச் சேமித்துக் காப்பாற்றி, அதனைச் சரியான சமயம் வாய்க்குங்கால் உலகத்தின்மீது பிரளயம்போல் பிரவஹிக்குமாறு பிரயோகிப்பதே நம் ஜாதியாருக்கு ஏற்பட்டுள்ள கைங்கரியமாம். பாரசீகர், கிரேக்கர், ரோமர், அராபியர், ஆங்கிலர்

என்பேரருள் எவர் வேண்டுமாயினும் தம் படைத்திறத்தால் உலகத்தை வென்று சகல ஜாதியாரையும் ஒன்றுயிணைத்தபோதிலும், பரதகண்டத்தின் தத்துவஞானமும் சமயநெறியும் அவர்கள் புதிதாய் அமைக்கும் வாய்க்கால் வழியோடி உலகத்திலுள்ள ஜாதியாரின் நரம்புகளிலே சென்று பாய்வதற்குச் சித்தமாயிருக்கின்றன. உலகத்தில் மானவஜாதி அபிவிர்த்தி யடைந்து சிறப்பெய்த வேண்டுமாயின், சாந்தகுண சம்பன்னர்களாகிய ஹிந்துக்கள் ஒவ்வொருவரும் தம்தம் ஞானக்களஞ்சியத்தி லிருந்து தமக்குரிய பாகத்தை அதற்குத் தாராளமாய்க் கொடுத்து உதவவேண்டும். உலகத்துக்குப் பரதகண்டம் அளிக்கத்தக்க கொடை ஞானப்பிரகாசம் ஒன்றேயாம்.

இவ்வண்ணமே, பிறநாடுகளினின்றும் விலகி ஏகாந்தமாயிருந்து ஞானவிசாரம் செய்வதும், அவ்விசாரத்துக்குப் பங்கம் வந்தெய்தும் பொழுதெல்லாம் விழித்தெழுந்து மீண்டும் அவ் விசாரத்திற்றுனே ஆர்ந்திருப்பதுமே தன் சுபாவமாகவுடைய பரதகண்டத்தைப் பூர்வகாலத்திலும் பல்வேறு ஜாதியார்கள் வந்து கைப்பற்றி, உலகத்திலுள்ள ஏனைய ஜாதிகளோடு எமது ஜாதியாரையும் இணைத்தபோதெல்லாம், நமது தத்துவஞான விஷயங்கள் உலகமெங்கும் பெருகி வியாபித்த சங்கதி சரித்திர நூலாராய்ச்சியுள்ளோருக்குத் தெரியாததல்லவே. ஆதியில் நமது வேதங்களைப் பாரசீக மொழியில் தெளிவின்றிச் செய்த மொழிபெயர்ப்பைப் பார்த்துப் பிராஞ்சிய னொருவன்

லத்தின் பாஷையில் செய்து வெளியிட, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜர்மனி தேசத்தில் விளங்கிய ஷோப்பன்ஹார் என்னும் மஹா பண்டிதர் அம்மொழி பெயர்ப்பை யாதாரமாகக் கொண்டு வேதங்களையும் உபநிஷத்துக்களையும் ஆராய்ந்து, "உபநிஷத் விசாரத்தைப்போல் விசேஷ ஞானத்தை யளிக்கத்தக்கது உலகத்தில் வேறொன்றுமில்லை. அவற்றை மூல பாஷையில் உள்ளபடி விசாரித்தறிவதே சிறப்புடைத்து. என் ஜீவனகாலத்தில் அவ் வுபநிஷத்துக்கள் எனக்கு அதிக ஆறுதல் அளிப்பனவா யிருந்தன. என் நிர்யாண காலத்தும் அவையே யெனக்கு ஆறுத லளிப்பனவாம்." என்று கூறினர். அன்றியும், அதே ஜர்மன் பண்டிதர் எதிர்கால நிகழ்ச்சியைச் சொல்லத் தொடங்கி, "கிரீக்கு வித்தியாபிவிர்த்தியா லுண்டான ஞானக் கிளர்ச்சியைவிட மிக்க விரிவானதும் விசேஷ வன்மை பொருந்தியதுமாகிய மத மொன்று உண்டாகி வியாபிக்கப் போவதை இவ்வுலகம் வெகு சீக்கிரத்திற் பார்க்கப்போகிறது" என்று கூறியுள்ளார். அவர், எதிர்கால வுணர்வால் அறிந்துரைத்த விஷயம் இன்று நிச்சயமாய் நிறைவேறிவருகின்றதல்லவா? உலகத்தின் அபிவிர்த்தியைக் கண்கொட்டாமல் விழிப்பாயிருந்து பார்த்து வருபவர்களும், மேற்றிசை வாசிகளாயுள்ள பற்பல ஜாதியாருடைய மனோ விருத்திகளை அறியும் ஆற்ற லுள்ளவர்களும், மாநிலத்து மானவ ஜாதியாரின் மனக் கொள்கைகளை உற்றுணரும் கூர்ந்த ஆராய்ச்சியுடையவர்களும், திசைதோறும் அவர்களது குணம்

போக்கு, கிரமம், கல்வி யிவைகளில் இடைவிடாமல் மேல் லெனப் பெருகிப் பரவிவரும் பாரத கண்டத்தின் ஞானத் தால் உண்டாகிய விசேஷமான மாறுதலைக் காண்பர். நான் மேலே சூசனையாய்ச் சொல்லியபடி மற்றொரு குண விசேஷமு முளது. அதாவது, வாட்படையாலும் வெங்கன லாலும் நாம் எப்போதும் நம் மதத்தைப் பரவச் செய்த தில்லை. உலகத்துக்குப் பரதகண்டம் செய்யும் தானத்தை யும், உலகத்தோர் பரதகண்டத்துக் கலைஞானத்தால் அடையும் பயனையும் விளக்கத்தக்க ஆங்கிலேய பதம் ஒன்றிருக்குமாயின் அது வசீகரம் என்கிற பொருள் தரும் (Fascination) பாசினேஷன் எனும் சொல் ஒன்றேயாம். வசீகரம் என்பது மந்திரசக்திபோல் மாந்தரைக் கண்ட மாத்திரத்தில் திடீரென்று மயக்குந் தன்மையுள்ளதன்று. ஆரியாவர்த்தத்தின் மதமும், ஆரிய ஆசாரங்களும் சம்பிர தாயங்களும், ஆரிய ஞானசாஸ்திரங்களும், காவ்யாலங் கார கலைஞானங்களும் பலருக்கு முதலில் வெறுப்பை உண்டாக்கும். ஆனால், அவர்கள் விடா முயற்சியுடன் வழிபாய்ப் படித்துப் பழகியறிவரேல், யாவரும் அவற் றால் பரவசமடைந்து வசீகர மாவார்க ளென்பதற்குச் சிறிதேனும் சந்தேக மில்லை. காலை நேரத்திலே கண்ணுக் குப் புலப்படாமலும் காதுக்குக் கேட்காமலும் விழும் மெல்லிய பனியானது பூமி முழுவதையும் நனைத்துக் குளிர்ச்சி தருவதுபோல், சாந்தமும் க்ஷமையும் கொண்டு சுகதுக்கங்களைச் சமமாய்க் கருதும் ஞானி சிலர்களாகிய இப் பாதகண்டவாசிகளின் செயல்கள் உலகத்தார் கருத் தை யெல்லாம் கவர்ந்துவருகின்றன.

சரித்திர நூல் கூறுவதுபோல் முன்னொரு காலத்தில் நடந்தவைகள் மீண்டும் நடக்கப்போகின்றன. ஏனெனில், பார்வைக்குப் பலமுள்ளனபோல் தோன்றும் காரணத்தால் அழிதற்கு அசாத்தியமாகிய பழங்காலத்து ஐரோப்பிய மத நம்பிக்கைகள் தற்கால பௌதிக விஞ்ஞான சாஸ்திரப் பிரகாசத்தின் வன்மையால் நிர்த்தூளியாய் வருகின்றமையாலும், தம்தம் கொள்கைகளை உண்மையெனச் சாற்றி வந்த சமயவாதிகளின் கக்ஷிவாதங்கள் சின்னபின்னமாகத் தகர்ந்து காற்றில் பறந்தோடுகின்றமையாலும், இக்காலத்திற் செய்யப்படும் புராதன தத்துவ ஆராய்ச்சி யென்னும் செம்மட்டி யடிகளால் பலவகைப்பட்ட பண்டைக்காலத்து மூடப் பிடிவாத மதங்களெல்லாம் மொத்துண்டு மண் பாண்டங்களைப்போற் பரிபூர்ணமாய் மறைதலாலும், இக்காலத்தில் மேற்றிசையில் மதத்தை யனுசரிப்பது மந்த புத்திகளின் இயல்பெனக் கருதப்படுதலாலும், தெளிந்த புத்தியுள்ளவர்கள் மேற்றிசை மதத்தின் சம்பந்தம் பெற்ற சகலத்தையும் இழிவாய்க் கருதுகின்றமையாலும், இப்படிப்பட்ட தக்க சமயத்தில் உயர்ந்த தத்துவ சித்தாந்தங்களை யெல்லாம் தினந்தோறும் அநுசந்தானம் செய்து வரும் ஆரிய ஜாதியாரின் சிறந்த வேதாந்தமானது அவர்கள் முன்வந்து பிரகாசிக்கின்றது. அவர்கள் தம் மதத்தில் அதிர்ப்தி யடைந்து உயர்ந்த தத்துவம் எங்கே கிடைக்குமென் றேங்கிநிற்கும் சமயத்தில் அவர்களுக்கு உற்றதுணையாய் வந்துதவும் வேதாந்தத்தை அவர்கள் சமயசஞ்சீவியெனப் போற்றுவது ஸஹஜந்தானே. அகஸ்

டமாயும் ஆநந்தமாயுமுள்ள இவையாவும் ஏக தத்துவமே யென்பதும், அவ் ஏக தத்துவம் நிர்க்குணமான தென்பதும், ஆத்மாக்கள் அநாதி யென்பதும், சர்வ பிராணிகளின்கண்ணும் இடையீடின்றித் தங்கி நிற்பது அவ் ஏகதத்துவமே யென்பதும், பிரபஞ்சம் அநாதி நித்யமென்பதும், படிப்படியாய் ஜனங்களுக்குள் பரவத் தொடங்கிவிட்டன. இவ்வுலகமானது ஒரு சேற்றுநீர்க்குட்டை யென்றும், காலமென்பது ஏதோ சில தினங்களுக்கு முன்தான் தொடங்கியதென்றும் மேல்நாட்டுச் சமயவாதிகள் கருதுகின்றார்கள். காலதேச நிமித்தங்களானவை எல்லையற்ற அகண்டத்தன்மை யுடையன வென்பதும் அதிலும் ஆன்மதத்துவம் அற்புதமான தென்பதும், நமது பிராசீன கிரந்தங்களிலேயே எத்தனையோ யுகங்களாக விளக்கப்பட்டிருக்கின்றன வல்லவா? அப்படியிருக்க தற்கால மேற்றிசை விஞ்ஞான நூல்கள் நாட்டியுள்ள சிருஷ்டிலய கிரமத்தைப் பற்றிய சித்தாந்தங்களால் அங்குள்ள ஆபாச சமயக் கோட்பாடுக ளெல்லாம் மொத்துண்டு மடியாநிற்கையில், அவர்கள் கொண்ட மயக்கத்தை நீக்கி, மனத்தை விரிவுறச் செய்து, மேன்மைப் படுத்திக் கற்றோர் சித்தத்தை அடிமை கொண்டு ஆட்சி செலுத்தும் ஆற்றலானது மஹா அத்புத திவ்விய வாக்காகிய நமது வேதாந்தத்திற்கன்றி வேறெதற்குளது?

இந்தியாவுக்குப் புறம்பேயுள்ள அவ் அந்ய தேசங்களில் நம் மதம் பரவி வருகின்றதென்று யான் சொல்

னும்போது, அவர்கள் மனத்தைக் கவர்ந்திருப்பது நம் மதத்தின் மூலாதார தத்துவங்களாகிய ஞானாம்சங்களென்பதே என் தாற்பரியமாம். ஆனால், அவ்வந்த தேசத்துக்கும் காலத்துக்கும் தக்கவாறு ஏற்பட்ட வர்ணாசிரம தர்மங்களும் தேசாசாரங்களும் சாசுவத தர்மமென்னும் பெயருக்குள் அடங்கா. இவ்விஷயம் நமது சாஸ்திரங்களில் மிகத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றது. நமது மதமானது ஞானபாகமென்றும் கர்மபாகமென்றும் இரு பகுதியுடையது. ஞானபாகமென்பது ஆத்ம லக்ஷணம், ஈசுவர லக்ஷணம், ஜீவேசுவர சம்பந்தம், மனித இயல்பு, முக்தியுபாயம் முதலியவற்றைப்பற்றியும்; சிருஷ்டிக்கிரமம், பிரளய வியல்பு, பிரபஞ்ச பேதம் முதலியவைகளைப் பற்றியும் கூறுவதாகும். கர்மகாண்டமோ நம் ஜாதியாருக்குச் சிறப்பு வகையாய் அமைந்துள்ள ஆசாரநுஷ்டான ஆஹார வியவஹார விவாகாதி முறைமைகளைப் போதிப்பதாகும். இவை ஸ்மிருதிகளாலும் புராணங்களாலும் ஏற்பட்டனவேயன்றி பொதுப் பிரமாணமாயுள்ள சுருதிகளால் பிரதிபாதிக்கப் பட்டனவல்ல. இங்ஙனம் இக்காண்டத்தால் ஏற்பட்ட வியவஸ்தைகள் முன்சொன்ன ஞானபாகத்தோடு சம்பந்தப்படா வென்பதற்கு நமக்குள்ளும் அந்த வியவஸ்தைகள் யுகதர்மாநுசாரமாய் அடிக்கடி மாறிவருவதே சாக்ஷி. ஒரு யுகத்தின் ஆசாரங்கள் இன்னொரு யுகத்தின் ஆசாரங்களாகா. யுகங்கள்தோறும் அவை மாறிக்கொண்டே வருவனவாம். அவ்வவ் யுகங்களில் உண்டாகும் நூதன சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி

மஹரிஷிகளும் தோன்றி முன்னிருந்த தர்மங்களையும் கிரியைகளையும் மாற்றி மனிதனை யுக்தமான மார்க்கத்தில் செலுத்தி நடத்துவார்கள். இவ்வாறு யுகதர்மங்கள் மாறினும் ஜகஜீவ பாங்களைப்பற்றி எமது விசேஷ அற்புத அகண்ட திவ்யபரிபூரண சமயமானது போதிக்கும் மேலான மூலதத்துவ ஞானமானது என்றும் மாறுவதில்லையாம். அவற்றிற்கு உற்பத்தி ஸ்தானம் புண்ய பூமியாகிய எமது பாதகண்டமே. ஆகையாற்றான் இந் நாட்டில் என் தெய்வமே உண்மை, உன தெய்வம் உண்மை யல்லவென்று எதிர் வழக்கிட்டு உயிரை மாய்க்கும் தொழிலை ஒருவரும் செய்யாதிருக்கின்றனர். ஒரு சிறு குலதேவதையின் பொருட்டுப் பெருஞ்சண்டை செய்யும் எண்ணம் உண்டாகாத தேசமும் இப் பாதகண்டமேயாம். மேற்சொன்ன பாதத்துவ ஞானம் அநாதி நித்தியமா யிருந்து வருதலால், அஃது இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு மாநுடருககு உபகரித் துதவியதோ அது போலவே இன்னும் பரோபகாரம் செய்யும் ஆற்றலுடன் விளங்குகின்றது. இப் பூமி உள்ளளவும், எமது கர்மகதியுள்ளளவும், நாம் அனைவரும் தனித்தனியே பிறந்து கர்மத்தைத் தொலைத்து முக்தி யடையுமளவும், அந்த பாதத்துவஞானம் பரோபகார சக்தி யுடையதாய் நிலைபெற்றுத் திகழும்.

இஃதொரு புறமிருக்க, நம் பாதகண்டம் உலகத்துக்குச் செய்யவேண்டிய தானம் ஒன்றிருக்கின்றது. இவ்வுல

கத்திலுள்ள பலவகை ஜாதியாருக்குள்ளும் தோன்றி வழங்கிவரும் சமய வரலாறுகளை நாம் விசாரிக்குங்கால், ஒவ்வொரு ஜாதிக்கும் ஆதியில் ஒவ்வொரு கடவுள் இருந்ததாகத் தெரியவரும். இந்த ஜாதியார்கள் மித்திரராய்க் கலந்து வாழ்வாராயின், இந்தத் தெய்வங்களுக்கும் சமுதாயத்தில் ஒரு பொதுவான பெயர் உண்டாகும். இதற்கு உதாரணம்: பாபிலோனிய தெய்வங்களுக்குள்ள பேயல் (Baal) என்னும் நாமதேயமே அப்படியே யூத ஜாதியாரின் பலவகைப்பட்ட தெய்வங்களுக் கும் மோலோக் என்ற பொதுப்பெயர் இருந்தது. இஃதிப்படியாக, இஜ் ஜாதியார்கள் பரஸ்பரம் சண்டையிட்டு ஒரு ஜாதியாரை இன்னொரு ஜாதியார் வென்று அவர்களை ஆள்வோராய் வரும் சமயத்தில், தம் அரசனை எல்லோருக்கும் அரசனெனச் சாதிப்பது போலவே, தங்கள் தெய்வத்தையே மற்ற ஜாதியார்களும் தெய்வமெனக் கொள்ளவேண்டுமென்பார்கள். பேயல் மெரொடாக் (Baal Merodack) என்ற தெய்வமே உயர்ந்த தெய்வமென்றும், மற்றத் தெய்வங்க ளெல்லாம் அதற்குத் தாழ்ந்தவை யென்றும் பாபிலோனியர் பகர்ந்தனர். மோலக்யாவே (Moloch Yaveh) தான் எல்லா மோலோக்துகளுக்கும் உயர்ந்தவன் என யூதர் மொழிந்தனர். இவ்வாறு விவாதங்கள் உண்டான காலையில், அந்த அந்த ஜாதியாருக்குள் நடந்த யுத்தங்களால் உண்டாகும் ஜயாபஜயங்களாலேயே இந்தத் தெய்வம் உயர்ந்தது, இந்தத்தெய்வம் தாழ்ந்தது என்ற நிர்ணயம் ஏற்படும், நமது நாட்டிலும் அத்தகைய

போராட்டம் முன் உண்டாயிற்று. ஆனால், அச் சமயத்தில் இந்தத் தேசத்தின் அதிஷ்டத்தாலும் அதன் வழியால் உலகத்திலுள்ள மற்றைத் தேசங்களின் அதிஷ்டத்தாலும், 'ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி' (உண்மைப் பொருளாயுள்ள கடவுள் ஒருவரே; அறிஞர் அவரைப் பல பெயர்களால் வழங்குகின்றனர்) என்ற வேத வாக்கானது எழுந்து அப் போராட்டத்தை ஒழித்துவிட்டது. அதன் கருத்து, சிவன் விஷ்ணுவுக்கதிகர் என்றாவது, விஷ்ணு சிவனுக் கதிகரென்றாவது, சர்வமும் விஷ்ணுமய மென்றாவது, அன்றிச் சர்வமும் சிவமயமென்றாவது ஏகதேசமாய்க் கொள்வதன்று. ஏகமாய் உள்ள அந்த வஸ்துவைச் சிவனென்றாயினும் விஷ்ணுவென்றாயினும் இன்னும் எத்தனைப் பெயரிட்டழைத்தாலும் அவ்வாறு அழைக்கப்படுவது ஒரு வஸ்துவேயாம். கேவலம் நாமபேதமேயன்றி வஸ்துபேதம் கிடையாது. பாதகண்டத்திலே உள்ள அளவற்ற சாஸ்திர புராண இதிஹாசங்களாகிய சமஸ்த கிரந்தங்களிலும் செறிந்திருக்கும் உண்மை யெல்லாம் இவ்வொரு வாக்கியத்தில் திரண்டிருக்கிறது. இந்த சார தத்துவத்தையே எண்ணிறந்த நூல்கள் திவ்யமான கம்பீர வாக்கில் கூறியது கூறலாய் உணர்த்துமா றெழுந்தன. இவ்வாறு தெவிட்டத் தெவிட்டப் பகட்டப்பகட்ட ஞானாமிருதமானது நம் நாட்டாரின் தேக முழுவதும் பாவித் தோய்ந்து ததும்பி, இரத்தத்துடன் இரத்தமாய்க் கலந்து, நரம்பு மண்டலங்களிலும் பாய்ந்து, நம்மவர் உயிரிலும் உடலின் சத்துவத்திலும் பேதமின்றி ஏகத்துவமாய்ச்

சேர்ந்து விளங்குவதாலன்றோ, இந்நாடு சகல விதமான மத சித்தாந்தங்களையும் அன்புடன் எதிர்கொண் டுபசரிக்கும் அற்புத சமரஸத் திருநாடாகத் திகழ்ந்துவருகின்றது.

இந் நாட்டிற் காணப்படும் மதத்தின் உட் பிரிவுகள் பார்வைக்குப் பரஸ்பரம் விரோத முள்ளனபோற் றோன்றினும், இவ்வளவு சமரஸத்துடன் ஒத்து வாழ்வதற்குக் காரணம் இதுவேயாம். நீர் துவைதியா யிருக்கலாம் நான் அத்வைதியா யிருக்கலாம். நீர் ஆண்டானாகிய கடவுளுக்கு எக்காலமும் அடிமையென்ற சித்தாந்தங்கொண்டவரா யிருக்கலாம். இன்னொருவன் ஜீவேசுவர ஐக்கியவாதியா யிருக்கலாம். ஆனாலும், நாமெல்லோரும் சுத்த வைதிகராகிய ஹிந்துக்களே யாவோம்.

• அஃதெவ்வாறு கூடுமெனில்—ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி என்னும் சுருதியே அதற்குச் சமாதானமாம். ஆதலால், நம் தேசத்தோரே! இவ்வுண்மையே நாம் உலகத்துக்குப் போதித்து எங்கும் பரவச்செய்யவேண்டும். கல்வி கேள்விகளிற் சிறந்த அந்யதேசத்தார்கூட நமது மதத்தின் பெயரைக் கேட்டவளவிலேயே முகத்தைச் சுளித்துக் கொண்டு, அது வெறும் பொம்மைப் பூஜையென் றிகழ்கின்றார்கள். அதை நான் நேரே கண்டிருக்கிறேன். ஆனால், தங்கள் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் மூடபக்திக் கொள்கைகளை நினைத்துப் பார்க்க அவர்களுக்கு அவகாசம் காணோம். இவ்வகை சுவயமத தூரபிமானமும் இழிந்த அற்ப புத்தியும் எங்கும் சாதாரணமா யிருக்கின்

அதைவிட்டு இந்தியாவுக்கு வந்து அங்குள்ள குடியானவனொருவனைப் பார்த்து, "ராஜ்ய தந்திர சங்கதியைப் பற்றி ஏதாவது உனக்குத் தெரியுமா?" என்று வினவினால் அவன், "அது என்ன சங்கதி? எனக்கு ஒன்றும் தெரியாதே" என்பான். இனி, ஸோஷியலிஸம் என்னும் ஜன சங்கக் கிளர்ச்சியைப்பற்றியும், மூலதனத்துக்கும் உழைப்புக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும், இன்னும் இவை போன்ற தற்கால நூதன விஷயங்களைப் பற்றியும், அவன் பிறந்தது முதல் ஒன்றுமே கேட்டறியான். அவன் கஷ்டப்பட்டு வேலை செய்து அதில் கிடைப்பதைக் கொண்டு ஜீவனம் செய்கிறான். அதற்கு மேல் இவ்வுலக விஷயங்களைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அவனை "உன் மதம் என்ன?" என்று வினவுவோமாயின், "இதோ பாரும் ஐயா! என் நெற்றியில் குறித்திருக்கிறேன்" என்பான். இதுவேயன்றி, சமயசாஸ்திர விஷயமாயும் இரண்டொரு சங்கதிகளைப்பற்றி வழியாய்ச் சொல்வான். இஃது என் பிரத்தியக்ஷ அநுபவம். இதுவே நம் ஜாதியாரின் வாழ்க்கை யியல்பாம்.

ஒவ்வொருவனும் தனித்தனி வெவ்வேறு குணங்களுடன் கூடியிருத்தலால், முன் பிறவிகள்தோறும் செய்த கர்மங்களுக்குத் தக்கபடி, ஒவ்வொருவனுடைய வாழ்க்கையும் விருத்திவகையும் இப் பிறவியில் வெவ்வேறு விதமாக ஏற்படுகின்றன. எவ்வாறு முன் பிறவியில் செய்த கர்மங்களின் பயனை இப் பிறவியில் அநுபவிக்க வேண்டுமோ,

அவ்வாறே, இப் பிறவியில் செய்யும் கர்மங்களின் தன்மையை யநுசரித்து இனிவரும் பிறவியும் நிர்ணயிக்கப்படும் இவ்விதமாக, இவ்வுலகத்திற் பிறக்கும் ஒவ்வொருவனும் தான் சென்று அபிவிருத்தி யடைவதற்கு வேண்டிய தனித் தனி மனச் சார்பும் பொருத்தமும் உள்ளவனாகிறான். இவை தனியான ஒரு மனிதனைப்பற்றி எப்படி யுண்மையோ, அப்படியே அத்தகைய மனிதர்களின் சமஷ்டியான பெருஞ் சாதியாருக்கும் உண்மையாகின்றன. ஆகவே, ஒவ்வொரு ஜாதியாரும் ஒவ்வொரு மனச்சார்பு உள்ளவர்களாயும், தம் தம் நிலைக்கேற்ற நியாய முடையவர்களாயும், தாம் தாம் மேற்கொண்ட கர்மங்களையே செய்து முடித்து, அவற்றின் கருத்தை நிறைவேற்றும் விசேஷ நியமன முள்ளவர்களாயு மிருக்கின்றனர்.

இராஜ்யதந்திர வுயர்வும் படைத்திறப் பெருமையும் சாதிக்க வேண்டுமென்பது எப்போதும் நம் ஜாதியார் கொண்ட கருத்தன்று. அவர்கள் அவ்வண்ணம் கொண்டிருந்ததுமில்லை, இனி இருக்கப் போகிறதுமில்லை. இது சத்தியம். நமது ஜாதியாருக்கு ஏற்பட்ட கருத்தோ வேறு. நமது ஜாதியாரிடத்திற் றிரண்டிருக்கும் தத்துவஞான சத்தியனைத்தையும் வாளைஸ்திரமாகச் சேகரித்துச் சேமித்துக் காப்பாற்றி, அதனைச் சரியான சமயம் வாய்க்குங்கால் உலகத்தின்மீது பிரளயம்போல் பிரவஹிக்குமாறு பிரயோகிப்பதே நம் ஜாதியாருக்கு ஏற்பட்டுள்ள கைங்கரியமாம். பாரசீகர், கிரேக்கர், ரோமர், அராபியர், ஆங்கிலர்

என்பொருள் எவர் வேண்டுமாயினும் தம் படைத்திறத்தால் உலகத்தை வென்று சகல ஜாதியாரையும் ஒன்றுயிணைத்தபோதிலும், பரதகண்டத்தின் தத்துவஞானமும் சமயநெறியும் அவர்கள் புதிதாய் அமைக்கும் வாய்க்கால் வழியோடி உலகத்திலுள்ள ஜாதியாரின் நரம்புகளிலே சென்று பாய்வதற்குச் சித்தமாயிருக்கின்றன. உலகத்தில் மானவஜாதி அபிவிர்த்தி யடைந்து சிறப்பெய்த வேண்டுமாயின், சாந்தகுண சம்பன்னர்களாகிய ஹிந்துக்கள் ஒவ்வொருவரும் தம்தம் ஞானக்களஞ்சியத்தி லிருந்து தமக்குரிய பாகத்தை அதற்குத் தாராளமாய்க் கொடுத்து உதவவேண்டும். உலகத்துக்குப் பரதகண்டம் அளிக்கத்தக்க கொடை ஞானப்பிரகாசம் ஒன்றேயாம்.

இவ்வண்ணமே, பிறநாடுகளினின்றும் விலகி ஏகாந்தமாயிருந்து ஞானவிசாரம் செய்வதும், அவ்விசாரத்துக்குப் பங்கம் வந்தெய்தும் பொழுதெல்லாம் விழித்தெழுந்து மீண்டும் அவ் விசாரத்திற்றானே அமர்ந்திருப்பதுமே தன் சுபாவமாகவுடைய பரதகண்டத்தைப் பூர்வகாலத்திலும் பல்வேறு ஜாதியார்கள் வந்து கைப்பற்றி, உலகத்திலுள்ள ஏனைய ஜாதிகளோடு எமது ஜாதியாரையும் இணைத்தபோதெல்லாம், நமது தத்துவஞான விஷயங்கள் உலகமெங்கும் பெருகி வியாபித்த சங்கதி சரித்திர நூலாராய்ச்சியுள்ளோருக்குத் தெரியாததல்லவே. ஆதியில் நமது வேதங்களைப் பாரசீக மொழியில் தெளிவின்றிச் செய்த மொழிபெயர்ப்பைப் பார்த்துப் பிராஞ்சிய னொருவன்

லத்தின் பாஷையில் செய்து வெளியிட, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜர்மனி தேசத்தில் விளங்கிய ஷோப்பன்ஹார் அர் என்னும் மஹா பண்டிதர் அம்மொழி பெயர்ப்பை யாதாரமாகக் கொண்டு வேதங்களையும் உபநிஷத்துக்களையும் ஆராய்ந்து, "உபநிஷத் விசாரத்தைப்போல் விசேஷ ஞானத்தை யளிக்கத்தக்கது உலகத்தில் வேறொன்றுமில்லை. அவற்றை மூல பாஷையில் உள்ளபடி விசாரித்தறிவதே சிறப்புடைத்து. என் ஜீவனகாலத்தில் அவ் வுபநிஷத்துக்கள் எனக்கு அதிக ஆறுதல் அளிப்பனவா யிருந்தன. என் நிர்யாண காலத்தும் அவையே யெனக்கு ஆறுத லளிப்பனவாம்." என்று கூறினர். அன்றியும், அதே ஜர்மன் பண்டிதர் எதிர்கால நிகழ்ச்சியைச் சொல்லத் தொடங்கி, "கிரீக்கு வித்தியாபி விர்த்தியா லுண்டான ஞானக் கிளர்ச்சியைவிட மிக்க விரிவானதும் விசேஷ வன்மை பொருந்தியதுமாகிய மத மொன்று உண்டாகி வியாபிக்கப் போவதை இவ்வுலகம் வெகு சீக்கிரத்திற் பார்க்கப்போகிறது" என்று கூறியுள்ளார். அவர், எதிர்கால வுணர்வால் அறிந்துரைத்த விஷயம் இன்று நிச்சயமாய் நிறைவேறிவருகின்றதல்லவா? உலகத்தின் அபிவிர்த்தியைக் கண்கொட்டாமல் விழிப்பா யிருந்து பார்த்து வருபவர்களும், மேற்றிசை வாசிகளா யுள்ள பற்பல ஜாதியாருடைய மனோ விருத்திகளை அறியும் ஆற்ற லுள்ளவர்களும், மாநிலத்து மானவ ஜாதியாரின் மனக் கொள்கைகளை உற்றுணரும் கூர்ந்த ஆராய்ச்சி யுடையவர்களும், திசைதோறும் அவர்களது குணம்

போக்கு, கிரமம், கல்வி யிவைகளில் இடைவிடாமல் மெல்லெனப் பெருகிப் பரவிவரும் பரத கண்டத்தின் ஞானத்தால் உண்டாகிய விசேஷமான மாறுதலைக் காண்பர். நான் மேலே சூசனையாய்ச் சொல்லியபடி மற்றொரு குண விசேஷமு முளது. அதாவது, வாட்படையாலும் வெங்கணலாலும் நாம் எப்போதும் நம் மதத்தைப் பரவச் செய்ததில்லை. உலகத்துக்குப் பாதகண்டம் செய்யும் தானத்தையும், உலகத்தோர் பாதகண்டத்துக் கலைஞானத்தால் அடையும் பயனையும் விளக்கத்தக்க ஆங்கிலேய பதம் ஒன்றிருக்குமாயின் அது வசிகாம் என்கிற பொருள் தரும் (Fascination) பாசிநேஷன் எனும் சொல் ஒன்றேயாம். வசீகரம் என்பது மந்திரசக்திபோல் மாந்தரைக் கண்ட மாத்திரத்தில் திடீரென்று மயக்குந் தன்மையுள்ளதன்று. ஆரியாவர்த்தத்தின் மதமும், ஆரிய ஆசாரங்களும் சம்பிரதாயங்களும், ஆரிய ஞானசாஸ்திரங்களும், காவ்யாலங்கார கலைஞானங்களும் பலருக்கு முதலில் வெறுப்பை உண்டாக்கும். ஆனால், அவர்கள் விடா முயற்சியுடன் வழிபாய்ப் படித்துப் பழகியறிவரேல், யாவரும் அவற்றால் பரவசமடைந்து வசீகர மாவார்களென்பதற்குச் சிறிதேனும் சந்தேக மில்லை. காலை நேரத்திலே கண்ணுக்குப் புலப்படாமலும் காதுக்குக் கேட்காமலும் விழும் மெல்லிய பனியானது பூமி முழுவதையும் நனைத்துக் குளிர்ச்சி தருவதுபோல், சாந்தமும் க்ஷமையும் கொண்டு சுகதுக்கங்களைச் சமமாய்க் கருதும் ஞானி சிலர்களாகிய இப் பாதகண்டவாசிகளின் செயல்கள் உலகத்தார் கருத்தை யெல்லாம் கவர்ந்துவருகின்றன.

சரித்திர நூல் கூறுவதுபோல் முன்னொரு காலத்தில் நடந்தவைகள் மீண்டும் நடக்கப்போகின்றன. ஏனெனில், பார்வைக்குப் பலமுள்ளனபோல் தோன்றும் காரணத்தால் அழிதற்கு அசாத்தியமாகிய பழங்காலத்து ஐரோப்பிய மத நம்பிக்கைகள் தற்கால பௌதிக விஞ்ஞான சாஸ்திரப் பிரகாசத்தின் வன்மையால் நிர்த்தூளியாய் வருகின்றமையாலும், தம்தம் கொள்கைகளை உண்மையெனச் சாற்றி வந்த சமயவாதிகளின் கக்ஷிவாதங்கள் சின்னபின்னமாகத் தகர்ந்து காற்றில் பறந்தோடுகின்றமையாலும், இக்காலத்திற் செய்யப்படும் புராதன தத்துவ ஆராய்ச்சி யென்னும் செம்மட்டி யடிகளால் பலவகைப்பட்ட பண்டைக்காலத்து மூடப் பிடிவாத மதங்களெல்லாம் மொத்துண்டு மண் பாண்டங்களைப்போற் பொடிசூர்ணமாய் மறைதலாலும், இக்காலத்தில் மேற்றிசையில் மதத்தை யனுசரிப்பது மந்த புத்திகளின் இயல்பெனக் கருதப்படுதலாலும், தெளிந்த புத்தியுள்ளவர்கள் மேற்றிசை மதத்தின் சம்பந்தம் பெற்ற சகலத்தையும் இழிவாய்க் கருதுகின்றமையாலும், இப்படிப்பட்ட தக்க சமயத்தில் உயர்ந்த தத்துவ சித்தாந்தங்களை யெல்லாம் தினந்தோறும் அநுசந்தானம் செய்து வரும் ஆரிய ஜாதியாரின் சிறந்த வேதாந்தமானது அவர்கள் முன்வந்து பிரகாசிக்கின்றது. அவர்கள் தம் மதத்தில் அதிர்ப்தி யடைந்து உயர்ந்த தத்துவம் எங்கே கிடைக்குமென் றேங்கிநிற்கும் சமயத்தில் அவர்களுக்கு உற்றதுணையாய் வந்துதவும் வேதாந்தத்தை அவர்கள் சமயசஞ்சீவியெனப் போற்றுவது ஸஹஜந்தானே. அகண்

டமாயும் அநந்தமாயுமுள்ள இவையாவும் ஏக தத்துவமே யென்பதும், அவ் ஏக தத்துவம் நிர்க்குணமான தென்பதும், ஆத்மாக்கள் அநாதி யென்பதும், சர்வ பிராணிகளின்கண்ணும் இடையீடின்றித் தங்கி நிற்பது அவ் ஏகதத்துவமே யென்பதும், பிரபஞ்சம் அநாதி நித்யமென்பதும், படிப்படியாய் ஜனங்களுக்குள் பரவத் தொடங்கிவிட்டன. இவ்வுலகமானது ஒரு சேற்றுநீர்க்குட்டை யென்றும், காலமென்பது ஏதோ சில தினங்களுக்கு முன்தான் தொடங்கியதென்றும் மேல்நாட்டுச் சமயவாதிகள் கருதுகின்றார்கள். காலதேச நிமித்தங்களானவை எல்லையற்ற அகண்டத்தன்மை யுடையன வென்பதும் அதிலும் ஆன்மதத்துவம் அற்புதமான தென்பதும், நமது பிராசீன கிரந்தங்களிலேயே எத்தனையோ யுகங்களாக விளக்கப்பட்டிருக்கின்றன வல்லவா? அப்படியிருக்க தற்கால மேற்றிசை விஞ்ஞான நூல்கள் நாட்டியுள்ள சிருஷ்டிலய கிரமத்தைப் பற்றிய சித்தாந்தங்களால் அங்குள்ள ஆபாச சமயக் கோட்பாடுக ளெல்லாம் மொத்துண்டு மடியாநிற்கையில், அவர்கள் கொண்ட மயக்கத்தை நீக்கி, மனத்தை விரிவுறச் செய்து, மேன்மைப் படுத்திக் கற்றோர் சித்தத்தை அடிமை கொண்டு ஆட்சி செலுத்தும் ஆற்றலானது மஹா அத்புத திவ்விய வாக்காகிய நமது வேதாந்தத்திற்கன்றி வேறெதற்குளது?

இந்தியாவுக்குப் புறம்பேயுள்ள அவ் அந்ய தேசங்களில் நம் மதம் பரவி வருகின்ற தென்று யான் சொல்

னும்போது, அவர்கள் மனத்தைக் கவர்ந்திருப்பது நம் மதத்தின் மூலாதார தத்துவங்களாகிய ஞானாம்சங்களென்பதே என் தாற்பரியமாம். ஆனால், அவ்வந்த தேசத்துக்கும் காலத்துக்கும் தக்கவாறு ஏற்பட்ட வர்ணாசிரம தர்மங்களும் தேசாசாரங்களும் சாசுவத தர்மமென்னும் பெயருக்குள் அடங்கா. இவ்விஷயம் நமது சாஸ்திரங்களில் மிகத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றது. நமது மதமானது ஞானபாகமென்றும் கர்மபாகமென்றும் இரு பகுதி யுடையது. ஞானபாக மென்பது ஆத்ம லக்ஷணம், ஈசுவர லக்ஷணம், ஜீவேசுவர சம்பந்தம், மனித ரியல்பு, முக்தி யுபாயம் முதலியவற்றைப்பற்றியும்; சிருஷ்டிக்கிரமம், பிரளய வியல்பு, பிரபஞ்ச பேதம் முதலியவைகளைப் பற்றியும் கூறுவதாகும். கர்மகாண்டமோ நம் ஜாதியாருக்குச் சிறப்பு வகையாய் அமைந்துள்ள ஆசார நுஷ்டான ஆஹார வியவஹார விவாகாதி முறைமைகளைப் போதிப்பதாகும். இவை ஸ்மிருதிகளாலும் புராணங்களாலும் ஏற்பட்டனவேயன்றி பொதுப் பிரமாணமாயுள்ள சுருதிகளால் பிரதிபாதிக்கப் பட்டனவல்ல. இங்ஙனம் இக்காண்டத்தால் ஏற்பட்ட வியவஸ்தைகள் முன்சொன்ன ஞானபாகத்தோடு சம்பந்தப்படா வென்பதற்கு நமக்குள்ளும் அந்த வியவஸ்தைகள் யுகதர்மாநுசாரமாய் அடிக்கடி மாறிவருவதே சாக்ஷி. ஒரு யுகத்தின் ஆசாரங்கள் இன்னொரு யுகத்தின் ஆசாரங்களாகா. யுகங்கள்தோறும் அவை மாறிக்கொண்டே வருவனவாம். அவ்வவ் யுகங்களில் உண்டாகும் நூதன சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி

மஹரிஷிகளும் தோன்றி முன்னிருந்த தர்மங்களையும் கிரியைகளையும் மாற்றி மனிதரை யுக்தமான மார்க்கத்தில் செலுத்தி நடத்துவார்கள். இவ்வாறு யுகதர்மங்கள் மாறினும் ஜகஜீவ பாரங்களைப்பற்றி எமது விசேஷ அற்புத அகண்ட திவ்யபரிபூரண சமயமானது போதிக்கும் மேலான மூலதத்துவ ஞானமானது என்றும் மாறுவதில்லையாம். அவற்றிற்கு உற்பத்தி ஸ்தானம் புண்ய பூமியாகிய எமது பரதகண்டமே. ஆகையாற்றான் இந் நாட்டில் என் தெய்வமே உண்மை, உன தெய்வம் உண்மை யல்லவென்று எதிர் வழக்கிட்டு உயிரை மாய்க்கும் தொழிலை ஒருவரும் செய்யாதிருக்கின்றனர். ஒரு சிறு குலதேவதையின் பொருட்டுப் பெருஞ்சண்டை செய்யும் எண்ணம் உண்டாகாத தேசமும் இப் பரதகண்டமேயாம். மேற்சொன்ன பரதத்துவ ஞானம் அநாதி நித்தியமா யிருந்து வருதலால், அஃது இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு மாநுடருககு உபகரித் துதவியதோ அது போலவே இன்னும் பரோபகாரம் செய்யும் ஆற்றலுடன் விளங்குகின்றது. இப் பூமி உள்ளளவும், எமது கர்மகதியுள்ளளவும், நாம் அனைவரும் தனித்தனியே பிறந்து கர்மத்தைத் தொலைத்து முக்தி யடையுமளவும், அந்த பரதத்துவஞானம் பரோபகார சத்தி யுடையதாய் நிலை பெற்றுத் திகழும்.

இஃதொரு புறமிருக்க, நம் பரதகண்டம் உலகத்துக்குச் செய்யவேண்டிய தானம் ஒன்றிருக்கின்றது. இவ் வுல

கத்திலுள்ள பலவகை ஜாதியாருக்குள்ளும் தோன்றி வழங்கிவரும் சமய வரலாறுகளை நாம் விசாரிக்குங்கால், ஒவ்வொரு ஜாதிக்கும் ஆதியில் ஒவ்வொரு கடவுள் இருந்ததாகத் தெரியவரும். இந்த ஜாதியார்கள் மித்திரராய்க் கலந்து வாழ்வாராயின், இந்தத் தெய்வங்களுக்கும் சமுதாயத்தில் ஒரு பொதுவான பெயர் உண்டாகும். இதற்கு உதாரணம்: பாபிலோனிய தெய்வங்களுக்குள்ள பேயல் (Baal) என்னும் நாமதேயமே அப்படியே யூத ஜாதியாரின் பலவகைப்பட்ட தெய்வங்களுக் கும் மோலோக் என்ற பொதுப்பெயர் இருந்தது. இஃதிப்படியாக, இஜ் ஜாதியார்கள் பரஸ்பரம் சண்டையிட்டு ஒரு ஜாதியாரை இன்னொரு ஜாதியார் வென்று அவர்களை ஆள்வோராய் வரும் சமயத்தில், தம் அரசனை எல்லோருக்கும் அரசனெனச் சாதிப்பது போலவே, தங்கள் தெய்வத்தையே மற்ற ஜாதியார்களும் தெய்வமெனக் கொள்ளவேண்டுமென்பார்கள். பேயல் மெரோடாக் (Baal Merodack) என்ற தெய்வமே உயர்ந்த தெய்வமென்றும், மற்றத் தெய்வங்களெல்லாம் அதற்குத் தாழ்ந்தவை யென்றும் பாபிலோனியர் பகர்ந்தனர். மோலக்யாவே (Moloch Yaveh) தான் எல்லா மோலோக்குகளுக்கும் உயர்ந்தவன் என யூதர் மொழிந்தனர். இவ்வாறு விவாதங்கள் உண்டான காலையில், அந்த அந்த ஜாதியாருக்குள் நடந்த யுத்தங்களால் உண்டாகும் ஜயாபஜயங்களாலேயே இந்தத் தெய்வம் உயர்ந்தது, இந்தத்தெய்வம் தாழ்ந்தது என்ற நிர்ணயம் ஏற்படும். நமது நாட்டிலும் அத்தகைய

போராட்டம் முன் உண்டாயிற்று. ஆனல், அச் சமயத்தில் இந்தத் தேசத்தின் அதிஷ்டத்தாலும் அதன் வழியால் உலகத்திலுள்ள மற்றைத் தேசங்களின் அதிஷ்டத்தாலும், 'ஏகம் ஸத்விப்ராபஹுதா வதந்தி' (உண்மைப் பொருளாயுள்ள கடவுள் ஒருவரே; அறிஞர் அவரைப் பல பெயர்களால் வழங்குகின்றனர்) என்ற வேத வாக்கானது எழுந்து அப் போராட்டத்தை ஒழித்துவிட்டது. அதன் கருத்து, சிவன் விஷ்ணுவுக்கதிகர் என்ருவது, விஷ்ணு சிவனுக் கதிகரென்ருவது, சர்வமும் விஷ்ணுமய மென்ருவது, அன்றிச் சர்வமும் சிவமயமென்ருவது ஏகதேசமாய்க் கொள்வதன்று. ஏகமாய் உள்ள அந்த வஸ்துவைச் சிவனென்ருபினும் விஷ்ணுவென்ருபினும் இன்னும் எத்தனைப் பெயரிட்டழைத்தாலும் அவ்வாறு அழைக்கப்படுவது ஒரு வஸ்துவேயாம். கேவலம் நாமபேதமேயன்றி வஸ்துபேதம் கிடையாது. பாதகண்டத்திலே உள்ள அளவற்ற சாஸ்திர புராண இதிஹாசங்களாகிய சமஸ்த கிரந்தங்களிலும் செறிந்திருக்கும் உண்மை யெல்லாம் இவ்வொரு வாக்கியத்தில் திரண்டிருக்கிறது. இந்த சார தத்துவத்தையே எண்ணிறந்த நூல்கள் திவ்யமான கம்பீர வாக்கில் கூறியது கூறலாய் உணர்த்துமா றெழுந்தன. இவ்வாறு தெவிட்டத் தெவிட்டப் பகட்டப்பகட்ட ஞானாமிருதமானது நம் நாட்டாரின் தேக முழுவதும் பரவித் தோய்ந்து ததும்பி, இரத்தத்துடன் இரத்தமாய்க் கலந்து, நரம்பு மண்டலங்களிலும் பாய்ந்து, நம்மவர் உயிரிலும் உடலின் சத்துவத்திலும் பேதமின்றி ஏகத்துவமாய்ச்

சேர்ந்து விளங்குவதாலன்றோ, இந்நாடு சகல விதமான மத சித்தாந்தங்களையும் அன்புடன் எதிர்கொண்டுபசரிக்கும் அற்புத சமரஸத் திருநாடாகத் திகழ்ந்துவருகின்றது.

இந்நாட்டிற் காணப்படும் மதத்தின் உட்பிரிவுகள் பார்வைக்குப் பரஸ்பரம் விரோத முள்ளனபோற் றோன்றினும், இவ்வளவு சமரஸத்துடன் ஒத்து வாழ்வதற்குக் காரணம் இதுவேயாம். நீர் துவைதியா யிருக்கலாம் நான் அத்வைதியா யிருக்கலாம். நீர் ஆண்டானாகிய கடவுளுக்கு எக்காலமும் அடிமையென்ற சித்தாந்தங்கொண்டவரா யிருக்கலாம். இன்னொருவன் ஜீவேசுவர ஐக்கியவாதியா யிருக்கலாம். ஆனாலும், நாமெல்லோரும் சுத்த வைதிகராகிய ஹிந்துக்களே யாவோம்.

அஃதெவ்வாறு கூடுமெனில்—ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி என்னும் சுருதியே அதற்குச் சமாதானமாம். ஆதலால், நம் தேசத்தோரே! இவ்வுண்மையே நாம் உலகத்துக்குப் போதித்து எங்கும் பரவச்செய்யவேண்டும். கல்வி கேள்விகளிற் சிறந்த ஆங்யதேசத்தார்கூட நமது மதத்தின் பெயரைக் கேட்டவளவிலேயே முகத்தைச் சுளித்துக் கொண்டு, அது வெறும் பொம்மைப் பூஜையென் றிகழ்கின்றார்கள். அதை நான் நேரே கண்டிருக்கிறேன். ஆனால், தங்கள் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் மூடபக்திக் கொள்கைகளை நினைத்துப் பார்க்க அவர்களுக்கு அவகாசம் காணோம். இவ்வகை சுவயமத துரபிமானமும் இழிந்த அற்ப புத்தியும் எங்கும் சாதாரணமா யிருக்கின்

றன. ஒவ்வொருவருக்கும் தம்மிடத்துள்ள பொருளே சிறப்பானதாகும். வெள்ளிக்காசும் செல்வப்பேறுமே சிறந்த தெய்வமெனக் கும்பிட்டுப் போற்றும் வாழ்வே அவர்களுக்குப் பெரு வாழ்வாகும்: மற்றவர் சொத்து எக்கேடு கெடினும், தம் சொத்தையே எவ்விதத்திலும் பாதுகாக்கவேண்டியது. ஒருவன் மண்ணினால் ஏதோ வொரு அவலக்ஷணத்தைப் புதிதாய்ச் செய்துவிட்டாலும், அல்லது புதிய யந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்து விட்டாலும், அதையே யாவரும் மிகச் சிறந்ததெனக் கொண்டாடவேண்டு மென்கிறான். எவ்வளவு படிக்கும் ஞானமு மிருந்தும் உலக முழுவதும் இப்படியே இருக்கிறது. ஆனால், உலகத்திலே உண்மையான கல்வியும் நாகரிகமும் இன்னும் எங்கும் தலைக் காட்டவில்லை உலகத்தில் முக்காலே மூன்றுவீசம் பேரும் இன்னும் காட்டு மிரண்டிகளாகவே இருக்கின்றார்கள். பலவகைப்பட்ட மதங்கள் யாவும் ஒன்றோடொன்று தோழமை பாராட்டி யொழுகவேண்டு மென்று கூறும் பல புஸ்தகங்களையும் நாம் படித்திருக்கலாம். இதை வாசா கைங்கரியமாய்ச் சொல்லித் திரிவோரும் பலருளர். ஆனால், அவ்வாறு தோழமை பாராட்டி யொழுகும் சங்கதி பிற நாடுகளில் எங்கும் இன்னும் ஏற்படக் காணோம். என்னுடைய அனுபவமே இதற்குச் சாக்ஷி. நான் பார்த்து வந்த தேசங்களிலே நூற்றில் தொண்ணூற் றொன்பது பேர் அதை நினைப்பது கூடக் கிடையாது. கொடிய மதக் கலகங்களும் புதிதாக ஒன்றைக் கற்றறியக் கூடாதென்று

பழைய தூராக்ஷேபனைகளும் ஆங்காங்கு இன்னுமிருக்கின்றன. இப்படிப் பலவகைப்பட்ட மத சித்தாந்திகளும் ஒருவாறு தோழமை பூண்டொழுகும் குணம் ஒரு சிறிது எங்கேனும் காணப்படின், அஃது ஆரியர் திருநாடாகிய இந் நாட்டிலன்றி வேறெந்நாட்டிலும் இன்று. முகம்மதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்கள் கோவில் கட்டி யுபகரிப்பதை இந் நாட்டிலன்றி வேறெந்நாட்டிற் காணலாம்? நீங்கள் பிற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மகம்மதியர் முதலிய புறச் சமயத்தாரை 'எங்களுக் கோராலயம் கட்டித் தருக' என்று கேட்பீரேல், அப்பொழுது தெரியவரும் அவர்கள் செய்யும் உபகாரம். அவர்கள் உபகாரம் செய்வதற்குப் பதிலாக, உங்கள் கோவிலையும் கூடுமானால் உங்களையுங் கூட, கீழே தள்ளி மாய்த்துவிட வழி தேடுவார்கள். ஆகையால், பல பேதப்பட்ட சமயிகள் அனைவரும் சமரஸபாவனையாய் ஒழுகுவதுடன் அநுதாபமுடையவரா யிருக்கும் நம் ஆரியாவர்த்தத்தினின்றும் கற்றுக்கொள்ளவேண்டியதே இப்பொழுது உலகத்துக்கு அத்தியாவசியமாய் அமைந்திருக்கின்றது.

பற்பல மலைகளில் பற்பல நதிகள் உற்பத்தியாகி நேராயும் வளைந்தும் ஓடிப் பிரவஹித்தாலும் கடைசியில் கடலிற் சென்று சங்கமமாவதுபோல், சிவபெருமானே! உலகமெல்லாம் உன் அடிக்கே வருகின்றது. அவர்கள் பற்பல வழிகளால் வந்தாலும், எல்லோரும் உன்னைக் காட்டும் வழியிலேயே இருக்கின்றனர். சிலர் கொஞ்சம்

கோணலாயும் சிலர் நேராயும் நடக்கக்கூடும். ஆனால், ஈசா! எல்லோரும் ஈற்றில் நின்னையே வந்தடைவர். அப்பொழுதுதான் அன்பும் சிவமும் ஒன்றாகும். ஈசனை இலிங்கத்தின் மாத்திர மன்றி எங்குமே காணலாவதும் சத்தியமாகும். அப்படிக் காண்கின்றவனே மெய்ஞ் ஞானி. ஹரியை எல்லா மநுஷரிடத்தும் பொருள்களிடத்தும் எவன் காண்கின்றானோ அவனே ஹரிபக்தன். எவன் சிவத்தை எல்லாப் பொருளிடத்தும் எல்லா மநுஷரிடத்தும் காண்கின்றானோ, அவனே உண்மையான சிவ நேசன். உண்மை யறிந்தவனே யாயினும், அறியாதவனே யாயினும், யூதனேமாயினும், கிறிஸ்தவனே யாயினும், பௌத்தனே யாயினும், அவர்களனைவரும் முழந்தாளிட்டோ மற்றெவ்விதமாகவோ, எந்த நாமத்தை யுச்சரித்தோ, எந்த வுருவத்தைத் தரிசித்தோ, செய்யும் வழிபாடெல்லாம் நாம் வணங்கும் பகவானுக்கே யென்று கருதவேண்டும். அவர்கள் சமர்ப்பிக்கும் புஷ்பங்களெல்லாம் சர்வேசுவரனும் ஆத்மாக்களுக்கெல்லாம் ஆத்மாவாயும் விளங்கும் அவன் திருவடிகளிலேயே சமர்ப்பிக்கப்படுவனவாம். உலகம் வேண்டிநிற்பது இன்னதென்பது கிஞ்சிஞ்ஞராகிய உங்களுக்கும் எனக்கும் தெரிந்திருப்பதைவிட ஈசனுக்கு அநந்தகோடி மடங்கு அதிகமாய்த் தெரியுமன்றோ? உலகத்தில் காணப்படும் பேதமெல்லாம் ஒழிந்துபோவது கூடாமையே. அவை இருந்தே தீரவேண்டும். அஃதில்லையேல் உலகமும் இல்லாதொழிய வேண்டும். இந்தப் பேத நிலைமை இருப்ப

தினால்தான், பிரகிருதி விகார முண்டாவதும், ஒளி யுண்டா வதும், ஜங்கமக் காட்சி முதலிய சகல காட்சிகளும் ஆவனவாம். முடிவில்லா விபரீதமே தனக் கியல்பாக வுடைய இப் பேத நிலைமை எப்பொழுதும் இருந்தே தீரு மாயினும், அதற்காக நாம் ஒருவரை ஒருவர் பகைத்து யுத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை, ஆகையால் ஆதி யில் நம் தாய் நாட்டில் அருளப்பட்டதும், இனி நம்மால் பிற நாட்டாருக்கு உபதேசிக்கப்பட வேண்டியதுமான இந்தத் திவ்யோபதேசத்தை நாம் மறுபடியும் ஓதி உணர்ந்து கொள்ளல்வேண்டும். ஏன்? அது சாஸ்திரங்க ளிலே விளக்கப்பட்டது மாத்திரமன்றி, நம் நாட்டின் காவ்யாலங்காராதி எல்லா இலக்கியங்களிலும் நுழைந்து, நமது நித்திய கர்மங்களிலுங் கலந்து நிற்பதாலென்க. அவ் வுபதேசம் தினந்தோறும் அநுஷ்டிக்கப் பெறுவது இந் நாடேயன்றி மற்றெந்நாடு மன்றென்பதைக் கண் படைத்த யாவரும் கண்டறியலாம். இவ்வாறே நாம் பிற ருக்குச் சமயபோதம் செய்யவேண்டும். இது போன்றன வும் இதனினும் உயர்ந்தனவுமான மற்றும் பல உபதேசங் களும் பரதகண்டத்தில் உள. அவை யாவும் ஞானத் தேர்ச்சி யுடையோர்க்கேயாம்.

சாந்தகுணம், சாதுத்தன்மை, க்ஷமை, சமரஸம், அநுதாபம், சகோதரபாவம் ஆகிய இவற்றை ஆண், பெண், சிறுவர், கற்றோர், கல்லாதவர், எச்சாதியில் எச் சமயத்தில் எவ்வருணத்தில் சேர்ந்தவரேயாயினும், எல் லாரும் கற்றுணர்ந் தொழுகுதலே உத்தம தர்மமாம்.

"உலகம் நின்னைப் பல பெயரிட்டுப் போற்றுகின்றது; நீயோ ஏகன்."

"ஏகம் ஸத் விப்ரா 'பஹுதா வதந்தி."

## இலங்கையில் வேதாந்த பிரசங்கம் முற்றிற்று.

---

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை யானபடியால், அநேகர் சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். சுவாமிகள் அன்று முழுவதும் தன்னைப்பார்க்க வந்தவர்களுடன் பேசிக்கொண்டிருந்து, மாலைவேளையில் தேவாலயத்துக்குச் சென்றார். அவரைப் பின் தொடர்ந்து சென்ற ஜனக் கூட்டத்தைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. வீதி யெங்கும் வாழைகளும், தோரணங்களும், பூர்ண கும்பங்களும், தீப பந்திகளும் கண்ணைக் கவர்ந்தன. இடையிடையே நகர வாசிகள் தம்தம் இல்லங்களினின்றும் புஷ்பம், பழம், தாம்பூலம், பனிநீர் முதலிய பூஜாத் திரவியங்களுடன் வந்து சுவாமிகளின் வண்டியை நிறுத்தி அவருக்குப் பூமாலை சாத்தி, அவரது திருமேனியைப் பனிநீரால் நனைத்தனர். சுவாமிகள் செக்குவீதி வழியாய்ச் சென்று சிவாலயத்தையடைய, அங்குத் திரண்டிருந்த தொண்டர் திருக்கூட்டம் அவரை, 'நமஃ பார்வதீபதயே, ஜய ஜய மஹாதேவ' என்கிற நாமசங்கீர்த்தனத்துடன் ஆலயத்துக்குள் எதிர்கொண்டழைத்து உபசரித்தனர். சுவாமிகள் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அடியார்க் கெளியராம் அம

லனையும் அம்பிகையையும் கண்ணாரத் தரிசித்து அங்கிருந்த குருக்களுடன் சிறிது நேரம் சம்பாஷித்துவிட்டுத் தம் இருப்பிடம் திரும்பினார். அடுத்த சோமவாரத்தன்று பல்லாயிரம் ஜனங்கள் கூடியிருந்த சபையின்கண்ணே இன்னொரு பிரசங்கம் செய்தனர். அதில் கூறியவை யெல்லாம் சுவாமிகளின் மற்றைப் பிரசங்கங்களில் அடங்கியிருப்பதால் அதனை நாம் இங்கே மொழிபெயர்க்காது விட்டோம்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை, சுவாமிகள் 'ரெயில்' வழியாய்க் கண்டிக்குப் புறப்பட்டார். கண்டி ரெயில்வே ஸ்டேஷனில் சுவாமியை எதிர்கொள்ள ஒரு பெருங் கூட்டம் காத்திருந்தது. சுவாமிகள் வண்டியை விட்டு இறங்கியவுடன் அவர்கள் மேள வாத்தியத்தோடும் யானை குடைகொடி முதலிய கோயிற் பரிவாரங்களோடும் சுவாமிகளை எதிர்கொண் டழைத்து ஊர்கோலம் வந்து, அவர்க்கென ஏற்படுத்தியிருந்த பங்களாவில் கொண்டு போய் விட்டனர். அங்கே ஒரு வந்தனோபசார பத்திரிகை வாசிக்கப்பட்டது. அதற்கு சுவாமிகள் தக்கவாறு சுருக்கமாய் விடையளித்து விட்டுச் சிறிது நேரம் சிரம பரிஹாரம் செய்துகொண்டு, அவ்வழகிய நகரத்தின் விசேஷமான காட்சிகளைப் பார்த்து விட்டு யாழ்ப்பாணத்துக்குப் பிரயாணமாயினார். வழியில் அநுராதபுரத்தில் தங்கினார். இவ்வூர், உலகத்திலுள்ள மிகப் பழைய நகரங்களில் ஒன்று. சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னே அது

ஜகத் பிரசித்தமான பெரும் பட்டணமாய்ச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினதென்பதைக் காட்டும் அடையாளங்கள் அநேகம் இன்றைக்கும் அவ்வூரில் காணப்படுகின்றன. இப்பொழுது ஒரு போதி மரமும் பிராசீன தடாகம் ஒன்றுமே இவ்வூரின் பழைய நாட்புகழுக்குச் சான்றாய் விளங்குகின்றன. அந்தப் போதி மரத்தின் நீழலில் சுவாமிகள் மூவாயிரம் ஜனங்களுக்கு முன் ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அதை துவிபாஷிகள் தமிழிலும் சிங்கள பாஷையிலும் மொழி பெயர்த்துச் சொன்னார்கள். சுவாமிகள் 'உபாசனை' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசத்தொடங்கி, வீண் ஆடம்பரமான வெளிப்பூஜை செய்வதைவிட வேதங்களிற் சொல்லியபடி நடப்பதே சிறந்ததென்று பிரசங்கித்தார். பிறகு மதத்தின் சர்வார்ஹத் தன்மையைப்பற்றி உபந்யசிக்கத் தொடங்கி, சிவனென்றும், விஷ்ணுவென்றும், புத்தனென்றும் வேறெந்தப் பெயர் கொண்டும் உபாசிக்கப்படும் ஈசன் ஒருவனே யென்றும், பற்பல மதங்களைச் சேர்ந்தவர்களும் பரஸ்பரம் சமரஸ புத்தியோடும் அநுதாப சிந்தையோடும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அந்தப் பௌத்த மஹா க்ஷேத்திரத்தில் பிரசங்கித்தார்.

அங்கிருந்து இரண்டுநாள் பிரயாணம் செய்து ஸ்வாமிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணத்து இந்து காலேஜுக்கெதிரில் போடப்பட்டிருந்த பந்தலில் ஸ்வாமிகளுக்கு வந்தனோபசார பத்திரிகை வாசிக்கப்பட்

டது. அதற்குத் தக்கவாறு ஸ்வாமிகள் விடையளித்து, அடுத்தநாள் மாலை அதே பந்தரில் "வேதாந்த மத'த்தைப் பற்றி அடியில் வரும் உபந்யாசத்தைச் செய்தார்.

## வேதாந்த மதம்

நான் இன்று பிரசங்கிப்பதற்காக எடுத்துக்கொண்ட விஷயமோ பெரியது. எனக்குள்ள அவகாசமோ சொற்பம். ஓரே பிரசங்கத்தில் ஹிந்துமதத்தைப் பூர்ணமாய் விவரித்துக் கூறுதல் அசாத்தியம். ஆகவே, நம் மதத்தின் முக்கியமான அம்சங்களை மாத்திரம் என்னால் இயன்றவரையிலும் சுலபமாய் எல்லாருக்கும் விளங்கும்படி எடுத்துச் சொல்லுகிறேன். நம்மை ஹிந்துக்களென்று சொல்லிக் கொள்வது இப்பொழுது சர்வ சாதாரணமாய்விட்டதல்லவா? ஆனால், இப்பதத்துக்கு முன்னிருந்த பொருள் இப்பொழுது போய்விட்டது. ஏனெனில், இப் பதத்திற்கு இந்தஸ் நதியின் அக்கரையி லுள்ளவரென்றே பொருள். 'ஸிந்து' என்னும் வடமொழிப் பதத்தைப் பண்டைக் காலத்துப் பாரசீகர் 'ஹிந்து' எனச் சிதைத்து, அவ் 'ஹிந்து' நதியின் எதிர்க்கரையிலுள்ளவர்களை யெல்லாம் ஹிந்துக்களென் றழைத்தனர். இவ்விதமாக இப் பெயரை நாம் பெற்றவரானோம். மகம்மதிய அரசாட்சியிலே நாமே இப் பெயரை யெடுத்து விவரிக்கலானோம். உண்மையில் இப் பதத்தை உபயோகிப்பதில் யாதொரு ஹானியும் இல்லாமலிருக்கலாம். ஆனால், அதற்கிருந்த பழைய அர்த்தம் இப்பொழுது போய்விட்டது. ஏனெனில் ஸிந்து

நதியின் இக்கரையி லுள்ளவர்க ளெல்லாம் முன்போல் இப்பொழுது ஒரே மதத்தை அநுசரிக்கின்றவ ரல்லர். ஆகவே, இப்பதத்தை சாக்ஷாத் ஹிந்துக்களா யுள்ளவர் விஷயத்தில் மாத்திரமன்றி, மகம்மதியர், கிறிஸ்தவர், ஜைனர் முதலிய பிற மதத்தார் விஷயத்திலும் அந்வயிக்க வேண்டி வருகின்றது. ஆகையால்தான் 'ஹிந்து' என்ற பதத்தை வழங்க எனக்கிஷ்டமில்லை. ஆனால், வேறெப் பதத்தை யுபயோகிக்கலா மெனில், வைதிகர் என்றேனும், அல்லது அதைவிட மிகப் பொருத்தமுடையதான வேதாந் திக ளென்றேனும், பிரயோகிக்கலாம். உலகத்திலுள்ள மதங்களிற் பெரும்பாலும், ஒவ்வொன்றும் சிற்சில நூல் களைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கின்றன. அம் மதங்களுக் காதாரமாயுள்ள அந்நூல்கள் ஈசுவர வாக் கென்று சிலராலும் தைவத்தன்மையுள்ள மஹா புருஷர் களின் வாக்கென்று சிலராலும் நம்பப்படுகின்றன. இனி, இத்தகைய நூல்களுக்குள்ளே ஹிந்துக்களின் வேதங் களே மிகப் பிராசீனமானவையென்று மேற்றிசைப் பண்டி தர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால், இவ்வேதங்களைப்பற்றிச் சிறிது விசாரிப்பாம்.

## வேதம்

'வேதம் என்ற பெயருடன் விளங்கும் நூற்றிரட்டு யாதொரு புருஷராலும் செய்யப்பட்டதன்று. ஆகவே, 'அபௌருஷேயம்' என்ற பெயர் அதற்குண்டா யிருக் கிறது. அதன் கால நிர்ணயம் இதுகாறும் ஏற்படவில்லை.

இனி ஏற்படவும் முடியாது. வேதம் நித்திய மென்பதே ஹிந்துக்களின் சித்தாந்தம். இதில் ஒரு விசேஷம் நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். அஃதென்னவெனில், உலகத்திலுள்ள மற்ற மதங்களெல்லாம் தாந்தம் பிரமாண நூல்கள் ஒரு சகுணமூர்த்தியால் பிரஜைகளுக்கு அருளப் பட்டனவென்று சிலவும், பல மூர்த்திகளால் அருளப் பட்டனவென்று சிலவும், தேவதூதர்களால் சில விசேஷ புருஷருக்கு அருளப்பட்டனவென்று சிலவும் கூறுநிற்க, ஹிந்துக்களோ, தங்கள் வேதமானது வேறோர் பிரமாணத்தை ஆசிரயிக்காதென்றும், அது நித்தியமான ப்ரஹ்ம ஞான ஸ்வரூபமானதால் ஸ்வதஃ பிரமாணம், அதாவது தனக்குத்தானே பிரமாணமா யுள்ளதென்றும் உரைக்கின்றனர். அஃது எப்பொழுதும் எழுதப்பட்டதன்று, சிருஷ்டிக்கப்பட்டதுமன்று, எக்காலமும் இருந்துகொண்டே இருக்கின்றது.

எப்படி சிருஷ்டியானது அடி முடி யற்று அநாதி நித்தியமாய் விளங்குகின்றதோ, அப்படியே பிரம்மஞானமும் அநாதி நித்தியமா யிருக்கிறது. இத்தகைய நித்திய மான பிரம்ம ஞானத்துக்குத்தான் நாம் வேதமென்ற பெயர் வைத்திருக்கிறோம். அவ் வேதமென்னும் பதம் அறி என்னும் பொருளுள்ள 'வித்' என்னும் வினையடியால் வந்திருப்பது காண்க. இனி, வேதாந்த மென்னும் ஞானத்திரட்டு ரிஷிகளென்ற சில புருஷரால் காணப் பெற்ற உண்மைகளாம். ரிஷி என்றால் மந்திர திரஷ்டா,

அதாவது கருத்தைக் கண்டறிவோன் என்று பொருள். அவ்வளவேயன்றி அக்கருத்து அந்த ரிஷியினதன்றாம். எப்பொழுதாவது வேதத்தில் இன்ன மந்திரம் இன்ன ரிஷியினிடத்திலிருந்து வந்ததென்றும் நீங்கள் கேள்வியுற்றால், அந்த ரிஷியே அதை யெழுதினுனென்றாவது, அல்லது தன் மனோ தர்மத்தால் அதை உண்டாக்கினுனென்றாவது நினைக்கக்கூடாது. ஏற்கெனவே உலகத்தில் நித்தியமாயிருந்த உண்மையை அவர் கண்டறிந்தார் என்பதே அதன் கருத்தாம்.

இந்த வேதமானது கர்மகாண்டம் ஞானகாண்டம் என இரு பிரிவுகளுடையது. கர்மகாண்டம் பலவகையான யாகங்களைப் பற்றிக் கூறும். அவற்றில் பெரும்பான்மையும் இக்காலத்தில் அநுஷ்டிக்க முடியாதென்று விடப்பட்டது. சிற்சில கர்மங்கள் வெவ்வேறு விதமாய் இன்றும் ஆசாரத்தில் இருக்கின்றன. கர்மகாண்டத்தின் முக்கிய அம்சங்களாகிய வர்ணுசிரம தர்மங்கள் இன்றும் ஏறக்குறைய அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஆனுல், வேதாந்தமென்றும் வேதசிரஸ்ஸென்றும் வேதசாரமென்றும் வேதமுடிவென்றும் புகழ்ந்தோதப்பட்ட ஞானகாண்டமாகிய உத்தரபாகத்தில்தான் நம் மதத்தின் அத்யாத்ம தத்துவங்கள் அடங்கி யிருக்கின்றன. வேதஞானத்தின் சாரத்துக்கே வேதாந்த மென்றும் உபநிஷத் தென்றும் பெயரிடப்பட்டமையால், பரத கண்டத்திலுள்ள த்வைதிகளும், விசிஷ்டாத்வைதிகளும், அத்வைதிகளும்;

சைவ, வைஷ்ணவ, சாக்த, சௌர, காணுபதர்களும், இன்னும் இந்துமதத்தின் எல்லைக்குள் பிரவேசிக்கும் தைரியம் எவருக்கேனும் இருக்குமேல், அக் கொள்கையினரும் வேதோபநிஷத்துக்களையே பிரமாணமாய் அங்கீகரித்துத் தீரவேண்டும். அவரவர்கள் தத்தமக்குச் சிறப்பான பாஷியங்களை வைத்துக்கொள்வதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், அவர்களெல்லோரும் அப்போது பிரமாணத்துக்குக் கீழ்ப்படியவேண்டும் ஆகையால்தான் நாம் இந்து வென்ற சொல்லுக்குப் பதிலாக வேதாந்தி என்ற சொல்லை உபயோகிக்க வேண்டுமென்கிறோம். பரதகண்டத்திலுள்ள வைதிக தர்சனகாரர்களனைவரும் வேதாந்தத்தின் பிராமாண்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களே, இக்காலத்தில் நம் நாட்டில் தோன்றியுள்ள நூதன மதங்கள்கூட —அவை எவ்வளவுதான் அற்பமாயிருப்பினும், அவற்றின் உத்தேசம் இன்னதென்றறிய முடியாதிருப்பினும், சரியாய் ஆராய்ந்து பார்க்குங்கால் உபநிஷத்தின் கருத்துக்களையே அவை தழுவியிருப்பனவாக ஏற்படும். இவ்வுபநிஷத்துக்கள் நம் ஜாதியாரின் இயற்கையில் எவ்வளவு தூரம் கலந்து நிற்கிறதென்றால், நம்மவருள் வழங்கும் மிகத் தாழ்ந்த தெய்வ பூஜைகளிலும் உபநிடதக் கருத்துகள் உருவக வடிவமாய் அமைந்திருப்பதைக் கொண்டு கண்டறியலாம். உபநிஷத்தின் கருத்துகளையே பின்னர் ஏற்பட்ட புராணங்களும் விக்கிரகாராதனமும் உருவக வகையால் விளக்கிக் காட்டுகின்றன.

உபநிஷத்துக்களிலுள்ள உத்தம தத்துவ சித்தாந்தங்கள் இப்பொழுது நம் வீடுகளில் * பிரதீகரூபமாய் நடக்கும் பூஜா விதானங்களாய் விளங்குகின்றன. ஆகவே, இப்பொழுது வழங்கும் வெவ்வேறு சின்னங்களும் வேதாந்தத்திலிருந்தே வந்தனவென்று . வெளிப்படையாயிற்று. ஏனெனில், அவை முதலில் வேதாந்தத்திலே இலக்கணையாகப் பிரயோகிக்கப் பெற்றுப் பின்னர் ஜனங்களுக்குள் பரவி, அவர்களது நித்திய கர்மங்களிலும் பிரதீகரூபமாய்ப் புகுந்து சர்வ சாதாரணமாய்விட்டன.

## ஸ்மிருதிகள்

வேதாந்தத்துக்கு அடுத்தவை ஸ்மிருதிகள், இவைகளும் ரிஷிப்ரோக்தமான நூல்களே யாயினும், ஸ்மிருதிகளின் பிரமாணத்தன்மை வேதாந்த பிராமாண்யத்துக்குந் தாழ்ந்ததாம். ஏனெனில், புறச் சமயங்களின் பிரமாண நூல்கள் ஸ்மிருதிகளை நோக்க எப்படித் தாழ்ந்தவையோ, அப்படியே அந்த ஸ்மிருதிகளும் வேதவேதாந்தங்களுக்குத் தாழ்ந்தபடியி லுள்ளனவாம். ஸ்மிருதிகள் ரிஷிகளால் எழுதப்பட்டவையென்று நாம் ஒப்புக்கொள்ளுகின்றமையால் புறச்சமய நூல்களும் நமது ஸ்மிருதிகளும் பௌருஷேயமென்னும் காரணம் பற்றி ஒன்றுகின்றன. அவ்வளவேயன்றி ஸ்மிருதிகள் முடிவான பிரமாணங்களல்ல. வேத வேதாந்தங்களுக்கு ஸ்மிருதி விரோதமா யிருப்பின்

* பிரதீகம்=புலன்களுக்கு விஷயமாகும் விக்கிரகம் முதலிய சின்னங்கள்.

அந்த ஸ்மிருதி தியாஜ்யமாம். அதன் பிரமாண்யம் போய் விட்டது. இந்த ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றன. கிருதயுகத்தில் இன்ன ஸ்மிருதி பிரமாணமென்றும், திரேதாயுகத்தில் இன்ன ஸ்மிருதி பிரமாணமென்றும், துவாபர யுகத்தில் சில ஸ்மிருதிகள் பிரமாணமென்றும், கலியுகத்தில் சில ஸ்மிருதிகள் பிரமாணமென்றும் கூறப்பட்டிருக்கின்றன வல்லவா? ஜனங்களுக்குள் ஒருகாலத்திலுள்ள ரீதி நீதிகள் மாறிப் புதிய ரீதிகளும் சம்பிரதாயங்களும் குடிகொள்ளும்பொழுது ஜனங்களின் ஆசார விவஹாரங்களுக்கு முக்கிய பிரமாணமாயுள்ள இந்த ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறவேண்டி வந்தன. இந்த அம்சத்தை நீங்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்று நான் விசேஷித்து வேண்டிக்கொள்ளுகிறேன். வேதாந்தத்திலுள்ள தத்துவசித்தாந்தங்கள் எக்காலத்தும் மாறாத் தன்மையன. ஏனெனில், அவை நித்தியமாயுள்ள சித் அசித் என்னும் பதார்த்தங்களை யாதாரமாகக்கொண் டெழுந்துள்ளமையா லென்க. ஆத்மா, முக்தி முதலியவற்றைப்பற்றிய சித்தாந்தங்கள் எக்காலத்தும் மாறா. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் அவை யெப்படி யிருந்தனவோ அப்படித்தான் இன்றைக்கு மிருக்கின்றன. இனிப் பல்லாயிரம் ஆண்டுகள் சென்ற பின்னரும் அப்படியேதான் இருப்பனவாம். ஆனால், நமது சம்சார சம்பந்தமான ஆசாரங்கள் காலந்தோறும் மாறிக்கொண்டே வரவேண்டும். ஆகையால், ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு விதமான ஆசாரங்கள் நியாயமா யிருக்குமே.

யன்றி அதே ஆசாரங்கள் இன்னொரு காலத்துக்குப் பயன்படா. ஆகவே, ஒருவித ஆஹாரத்துக்கு ஒரு காலத்தில் விதியும், இன்னொரு காலத்தில் நிஷேதமும் ஏற்பட்டன. ஏனெனில், அவ்வாஹாரம் அக்காலத்துக்குப் பொருந்தி யிருந்தது. பிறகு தேச பேதத்தினால் சீதோஷ்ண பேதமும் மற்ற ஸ்திதி பேதங்களும் உண்டாகும் போது, அம் மாறுபட்ட நிலைகளுக்கேற்ப முன்னிருந்த ஆஹாரமானது ஸ்மிருதியால் நிஷேதிக்கப்பட்டது. அது போலவே, இக்காலத்தும் நமது ஜன ஸமூஹத்துக்குச் சில ஆசார பேதங்கள் அவசியமாய் ஏற்படின், அவற்றின் பொருட்டு ரிஷிகள் அவதரித்து அவ்வாசார பேதங்களைப் பிரவர்த்திப்பிக்கும் வழியைக் காட்டுவார்கள். நம் மத சித்தாந்தங்களில் ஓர் அணுவளவும் மாறாது. அவை ஸ்திரமாய் நிலைத்திருக்கும்.

## புராணங்கள்

இனி, புராணங்களைப்பற்றிப் பேசுவோம். புராணம் பஞ்ச லக்ஷணம் என்றபடி அவை சிருஷ்டி, பிரதிசிருஷ்டி, ராஜவம்சம், மந்வந்தரம், வம்சாநுசரிதம் என்பவற்றைக் கூறுவதுடன் வேதாந்த தத்துவங்களையும் அவை கதாரூபமாய் எடுத்துச்சொல்லுகின்றன. அவை, வைதிகமதத்தை அனைவருக்கும் தெளிவாக விளக்கும்பொருட்டு எழுதப்பட்டன. வேதபாஷை மிகப் பழமையானது. பண்டிதர்களுக்குள்ளும் வெகு சிலரே இந்நூல்களின் கால நிர்ணயத்தைக் கண்டறிவர். புராணங்களோ ஜனங்களுக்குள் அக்காலத்தில் வழங்கிவந்த பாஷையில் எழுதப்பட்டன.

அந்தப் பாஷையைத்தான் இப்பொழுது நாம் காவிய சம்ஸ்கிருத மெனச் சொல்லுகிறோம். அவை பண்டிதர்களுக் கன்றிப் பாமரர்க்கெனவே ஏற்பட்டன. பாமரர்களுக்கு உயர்ந்த தத்துவ சாஸ்திரம் விளங்காது. ஆகவே, அவ்வுயர்ந்த தத்துவங்கள் முநிவர், மன்னவர், மஹா புருஷரது சரித்திரவாயிலாகவும், அவர்களது வம்சங்களில் நிகழ்ந்த முக்கிய சரித்திர சம்பவங்களின் வாயிலாகவும் ஜனங்களுக்குப் போதிக்கப்பட்டன. மஹர்ஷிகள் தங்களுக்கு அகப்பட்டதை யெல்லாம் எடுத்து நித்தியமான பரதத்துவ ரஹஸ்யங்களை விளக்கும்பொருட்டு அவற்றுள் ஒவ்வொன்றையும் உபயோகித்தனர்.

இப் புராணங்களன்றி, தந்திரங்களென்ற மற்றொரு வகை நூல்களும் உள. இவை பெரும்பான்மையும் புராணங்களைப் போன்றே யிருக்கின்றன. அவற்றுள் சில: கர்மகாண்டத்திற் கூறட்பட்ட பழைய யக்ஞ யாகாதிகளை மீண்டும் ஆசாரத்துக்குக் கொண்டுவர முயன்றன.

இக்கூறிய நூல்களனைத்தும் ஹிந்துக்களின் மதக்கிரந்தங்களாம். ஒரு ஜாதியார் இத்துணை மத நூல்களையும் பிரமாணமாய் வைத்துக்கொண்டு தங்கள் சக்தியை யெல்லாம் ஆன்ம விசாரணையிலும் தத்துவ ஆராய்ச்சியிலுமே விநியோகித்திருப்பாராயின், அவர்களுக்குள் இத்தனை உண் மதப் பிரிவுகளேற்படுவது ஸஹஜமேயாம். இன்னும் ஆயிரம் உபதேசங்கள் இல்லையென்பதே ஆச்சரியமாம். இந்த மத பேதங்கள் சிற்சில அம்சங்களில் தமக்குள் வேறுபட்

டிருக்கின்றன. இந்த வேற்றுமைகளையும் அவற்றின் தத்துவ வரலாறுகளையும் விசாரிக்க நமக்கு அவகாசமில்லை. ஆகவே, எல்லா ஹிந்துக்களுக்கும் பிரமாணமாயுள்ளனவும் இவ் வுபயேதங்களுக்கெல்லாம் மூலாதாரமாயுள்ளனவுமான அம்சங்களைப்பற்றி மாத்திரம் பேசுவேன்.

முதலாவது சிருஷ்டி விஷயம். இயற்கையென்றும், பிரகிருதியென்றும், மாயையென்றும் சொல்லப்படும் இந்த சிருஷ்டி அநாதி நித்தியமானதாம். சில நாளைக்கு முன் இவ்வுலகம் சிருஷ்டிக்கப்பட்டதென்பதும், ஒரு தேவன் வந்து இவ் வுலகத்தை சிருஷ்டித்துவிட்டுப் பின்னர் நித்திரை செய்யப்போய்விட்டாரென்பதும் எமது கொள்கையன்று. சிருஷ்டியானது இன்னும் நடந்துகொண்டே இருக்கிறது. ஈசுவரன் எப்போதும் சிருஷ்டித்தவண்ணமாகவே இருக்கிறார். அவரது சிருஷ்டிக்கு ஒழிவே இல்லை. "நான் ஒரு நிமிஷம் சும்மாயிருப்பேனுயின் இந்தப் பிரபஞ்சமெல்லாம் அழிந்துபோய்விடும்" என்று பகவான் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். நம்மைச் சுற்றிலும் இரவும் பகலும் வேலை செய்துகொண்டிருக்கிற சிருஷ்டி சக்தியானது ஒரு விநாடி நேரம் ஓய்வடையினும், இப் பிரபஞ்சமெல்லாம் விழுந்துபோய்விடும். இப் பிரபஞ்ச முழுவதிலும் அச் சிருஷ்டி சக்தி வேலை செய்யாமலிருக்கும் காலம் எப்பொழுதும் கிடையாது. பிரளய காலங்களில் மாத்திரமே அது ஒடுங்கிநிற்கும். சிருஷ்டி என்ற வடமொழிப் பதத்துக்கு ஒன்றினின்று மற்றொன்றை உண்

டாக்குதல் பொருளையன்றி சூநியத்தினின்று உண்டாக்குதல் என்றல்ல. இப்பிரபஞ்சம் யாவும் ஒரு சமயம் விரிந்து விளங்கியும், பிறகு சூக்ஷ்மமாகி ஒடுக்கமுற்றும், மீண்டும் முன்போல் விரிந்து ஒடுங்கும் தன்மையதாம். இந்தத் தோற்ற வொடுக்க மென்னும் பிரவாஹமானது எக்காலம் நிகழ்ந்து வருவதாம். கால தேச நிமித்த மென்பவை யெல்லாம் இந்தப் பிரகிருதிக்கு உட்பட்டனவே. ஆகவே, இதற்கு ஆதி யுண்டென்று சொல்வது ஆபாசமாம். அதற்கு ஆதியும் அந்தமும் உண்டென விவகரித்தல் அசம்பாவிதமாகு மாகையால், நமது சாஸ்திரங்களில் ஆதி அந்தம் என்னும் பதங்கள் வருமாயின், அதை ஒரு கல்பத்தின் ஆதியும் அந்தமு மென்றே கொள்ளவேண்டும்.

இந்த சிருஷ்டிக்கு முதற்காரணம் யாது? பிரமம். அந்தப் பிரமத்தின் இலக்ஷணமென்ன? அவர் நித்தியராய், நித்திய சுத்தராய், நித்திய புத்தராய், சர்வ சக்தி யுள்ளவராய், சர்வஞ்ஞராய், சர்வ தயாபரராய், சர்வ வியாபகராய், நிஷ்களராய், நிரஞ்சநராய் விளங்குகின்றவர். அவர் இவ்வுலகத்தை சிருஷ்டிக்கிறார். அவர் எப்பொழுதும் இவ்வுலகத்தை சிருஷ்டித்துப் பாதுகாத்து வருகிறவராயின், இரண்டு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒருவன் சுகியாய்ப் பிறக்கிறான், மற்றொருவன் துக்கியாய்ப் பிறக்கிறான். ஒருவன் பணக்காரனா யிருக்கிறான்; ஒருவன் தரித்திரனா யிருக்கிறான். இது பக்ஷபாத மல்லவா? அது மாத்திரமன்று, கொடுமையுங்கூட விருக்கின்றது. எப்படியெனில், இவ்

வுலகில் பிறப்பென்றால் இறப்பும் அதனுடன் கூடவே யிருக்கிறது. ஒரு பிராணி மற்றொன்றைச் சின்னபின்ன மாய்க் கிழித்துவிடுகிறது. ஒவ்வொருவனும் தன் அயலானைப் பிடித்துத் தள்ளி அவன்மேல் ஏறி மிதிக்கப் பார்க்கிறான். இந்தப் போட்டியும் கொடுமையும், கோரமான காட்சியும், இரவும் பகலும் ஆகாசத்தைப் பிளக்கும் நெட்டுயிர்ப்புமே நம்முலகத்தின் வாய்பாடா யிருக்கின்றன. இப்படிப்பட்ட உலகம் கடவுளின் சிருஷ்டியாயின், அக் கடவுள் கொடியவரினும் கொடியவராயும், ராக்ஷசனினும் ராக்ஷசனாயு மிருக்கவேண்டும். ஆனால், வேதாந்தம் இதைப்பற்றிச் சொல்வதென்னவெனில்,—இந்தப் போட்டிக்கும் பக்ஷபாதத்துக்கும் காரணம் கடவுளல்லர். பின் யாரெனில்,—நாமே. மேகமானது எல்லா வயல்களினும் சமமாகவே மழையைப் பொழிவதாயினும், நன்றாய் உழப்பெற்ற வயல் மாத்திரமே அம்மழையின் பிரயோஜனத்தைப் பெறுவதல்லாமல், அவ்வாறு உழப்பெறாத நிலம் அந்தப் பயனைப் பெறுவதில்லையாம். அப்படிப் பெறாத்து மேகத்தின் குற்றமாகுமோ? அதுபோலவே, கடவுளின் கிருபையும் நித்தியமாயும் எப்பொழுதும் மாறாததாயு மிருக்கின்றது. அது வித்தியாசப் படுவதற்குக் காரணம் நாமே. ஆனால், அந்த வித்தியாசத்துக்குக் காரணம் என்ன? சிலர் சுகிகளாய்ப் பிறக்கிறார்கள்; சிலர் துக்கிகளாய்ப் பிறக்கிறார்கள். அந்த வித்தியாசத்தை அவர்களே செய்துகொள்ள வில்லையே யெனில்,—அவர்கள்

தாம் செய்துகொண்டார்கள், பூர்வ ஜன்மத்திற் செய்த வினைகளால் என்க.

## ஜீவன் நித்தியம்

இனி ஹிந்துக்களுக்கு மாத்திரமன்றி பௌத்த ஜைநர்களுக்கும் பொதுவாயுள்ள இரண்டாம் சித்தாந்தத்தைப் பற்றிப் பேசுவோம். ஜீவன் நித்திய மென்பதை நாம் எல்லோரும் அங்கீகரிக்கிறோம். அது சூனியத்தினின்றும் உண்டாயிற்றென்பது அமையாது. அப்படிப்பட்ட ஜீவன் ஒரு ஜீவனேயன்று. ஆதி எதற்குண்டோ அதற்கு அந்தமும் உண்டு. பிராணனானது நேற்றே உற்பத்தியாயிருந்தால், நாளைக்கு அது முடிவுக்கு வரவேண்டும. ஆகவே நாச மென்பது நிச்சயமாயிற்று. ஆனால், அது சாஸ்திர விரோதமானது. இக்காலத்தில் அதன் உண்மையையறிவது அவ்வளவு கஷ்டமன்று. ஏனெனில் தற்காலத்திய விஞ்ஞாநசாஸ்திரங்களெல்லாம் பௌதிக உலகத்தை ஆராய்ச்சி செய்து அதன் மூலமாம் நமது வேதசாஸ்திர சித்தாந்தங்களின் உண்மையை நிலைநாட்டி நமக்குப் பெரிதும் உபகரித்து வருகின்றன. ஆத்மா நித்தியமானதென்பது உங்களுக்கு ஏற்கனவே தெரியும். புதிதாய்ப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் அதற்குமுன் சுத்தமாய் இல்லாதிருந்து, கவிகள் வர்ணிப்பதுபோல், அப்பொழுதுதான் அபிநவமாய்ப் பிரகிருதி தேவியின் கரத்திலிருந்து திடீரென உதித்ததன்று. அநாதிகாலந்தொட்டு அ பிறப்பு இறப்புகளுக்குட்பட்டு, முற்பிறவிகளிற் செ

வினைகளுக்குத் தக்கபடி இப் பிறவியை எடுக்கின்றது. இதற்குத்தான் புநர்ஜந்ம சித்தாந்தமென்று பெயர். நம் விதிக்குக் காரணம் நாமே. நாம் இப்பிறவியில் இன்னின்ன வாறு செய்யவேண்டு மென்பதை முன்னுகவே கடவுள் ஏற்படுத்தியிருக்கிறு ரென்றும், அதுவே தலைவிதி யென்றும் கூறும் கொள்கைகளை மேற்சொன்ன புநர்ஜந்ம சித்தாந்தமானது தலையில் ஓங்கி யறைந்து கீழே வீழ்த்திக் கடவுளுக்கும் மனிதருக்கும் ஒரே மத்தியஸ்தமாய் விளங்குகின்றது.

நாம் படும் சுகதுக்கங்களுக்குக் காரணம் நாமே யன்றி வேறொருவரு மல்லர். காரணமும், காரியமும் நாமாகவே இருக்கின்றமையால், நாம் சுதந்திரர், நான் துக்கியாயிருப்பின், அது நான் செய்துகொண்டதே யானமையால், நான் இஷ்டப்படின் சுகியாயும் இருக்கலாமென் றேற்படுகின்றது. நான் அசுத்தனுயிருந்தால், அதுவும் நான் செய்து கொண்டதுதான். ஆனதுபற்றியே, எனக்கு இஷ்ட முண்டானல், நான் சுத்தமுள்ளவனு யிருக்கலா மென் றேற்படுகின்றது. இவ்வாறே இன்னும்மற்ற விஷயங்களிலும் அமைத்துக்கொள்க. மாநுட சங்கற்பமானது எல்லாவித நிலைமைகளையும் கடந்து நிற்பதாம். அதன் முன், பிரகிருதியின் சக்திகள் உள்பட எல்லா சக்திகளும் தாழ்ந்து ஒடுக்க முறுகின்றன. அவை மனிதனிடத்தில் வலிமை பொருந்தி அபாரமாயும் அநந்தமாயும் விளங்கும் சங்கற்பத்துக்கும் சுதந்திர சக்திக்கும் வேலைக்காரர்களைப் போலாகி அடங்கி விடுகின்றன.

## ஆன்மா

இனி, ஆன்மா என்பது யாது என்னும் ஆசங்கை நிகழும். நமது சாஸ்திரங்களில் ஆன்ம விசாரமின்றி ப்ரஹ்ம விசாரமில்லை. பௌதிக சம்பந்தமான பிரகிருதிப் பொருள்களின் ஆராய்ச்சியால் பிரகிருதிக்கு அதீதமான ஸ்வரூபத்தின் ஒரு சிறிதை யறிய இந்தியாவிலும் இந்தியாவுக்குப் புறம்பேயுள்ள நாடுகளிலும் பிரயத்னங்கள் செய்யப்பட்டன. அப் பிரயத்னங்கள் எவ்வளவு நிஷ்ப்பலமாய் முடிந்தனவென்பதை நாம் அனைவரும் அறிவோம். பிரபஞ்சப் பொருள்களை நாம் ஆராய ஆராய, பிரபஞ்சாதீதத்தின் இயல்பு விளங்குவதற்குப் பதிலாக, நாமே இன்னும் அதிக பிராகிருத சுபாவமுள்ளவ ராகின்றோம். அதற்கு முன்னிருந்த கொஞ்சநஞ்சம் ஆஸ்திக புத்திகூட ஒழிந்து போய்விடுகின்றது. ஆகவே, மேலான தத்துவத்தை அறிவதற்கும் ஆத்மாநுபவ மடைவதற்கும் இப் பௌதிக விசாரம் சாதனமாய் உபகரியாது. ஆத்மவிசாரமே அத்தகைய சாதனமாய் உபகரிப்பதாகும். புற வுலகமாகிய பௌதிக புவனத்தின் பிரவிர்த்திகள் அநந்த அதீதப் பொருளைப்பற்றி யாதொன்றும் வெளியிடா. அதை வெளியிடும் சக்தி அகவுலக சம்பந்தம் பெற்ற அந்தராத்மாவுக்கே யுள்ளதாம். ஆகவே, ஆன்ம விசாரத்தினாலேயே பிரமஞானம் உதிக்குமென்றேற்பட்டது. ஜீவான்மாவின் இலக்ஷணத்தைப்பற்றி நமக்குள் அபிப்பிராய பேத முண்டாயிருப்பினும், நாம் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிற

பொதுவான அம்சங்களும் சிலவுள. அவையாவன:—இவ்வான்மாக்கள் உற்பத்தி நாச ரஹிதமானவை யென்பதும் இயல்பிலேயே இறவாமையுடையன வென்பதும்; அருள், தூய்மை, சர்வ வியாபகத்வம், சர்வஞ்ஞத்துவம் முதலிய குணங்கள் ஒவ்வோர் ஆன்மாவிலும் மறைந்திருக்கின்றன வென்பதுமேயாம். இக்கூறிய கம்பீரமான பாவனையை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். எவ்வளவு துர்ப்பலமாயும் துஷ்டவியல்பினதாயு மிருந்தாலும், மஹத்தா யிருப்பினும் அற்பமா யிருப்பினும், மனிதருள்ளும் பிராணிகளுக்குள்ளும் அந்தர்யாமியாயிருப்பது சர்வவியாபகமாயும் சர்வஞ்ஞமாயுமுள்ள அவ்வொரே பரமாத்மாவாம். வெளிக்குத் தோன்றும் பேதம் ஆன்மாவைச் சேர்ந்ததன்று. உபாதியைச் சேர்ந்ததாம். எனக்கும் அதி அற்பமான பிராணிக்கும் உள்ள வேற்றுமை உபாதி சம்பந்தமானதேயன்றி, வஸ்து சொரூபத்தை நோக்குங்கால் அதுவும் நானும் ஒன்றே, ஒரே ஆத்மசுவரூபமாம் இதுவே பாரதவர்ஷத்தில் போதிக்கப்பட்ட சிறந்த தத்துவமாம். ஆகையால்தான் இப் பாரதவர்ஷத்தில் சர்வ சஹோதரத்துவம் என்பது கேவலம் மனிதரை மாத்திரம் சகோதரரெனக் கருதுவதுடன் அமையாமல், எறும்பீறாகவுள்ள எல்லா உயிரையும் நம் உயிரைப்போல் பாவிக்கும் சர்வஜீவ காருண்யமாய்த் திகழ்கின்றது, 'ஏவந்து பண்டிதோ ஜ்ஞாத்வா ஸர்வ பூதமயம் ஹரிம்' என்றபடி, 'ஹரே பகவான் ஸர்வ தேகங்களிலும் இருக்கிறார்' என்று பண்டிதனாயுள்ளவன் உணர்ந்து ஸர்வத்தையும் ப்ரஹ்மஸ்வ

ரூபமென்று வணங்குவான். ஆகையால்தான் பாரதவர்ஷத்திலுள்ளோர் ஜீவகாருண்ய வொழுக்கத்திற் சிறந்து விளங்குகின்றார்கள். ஆத்ம லக்ஷணசம்பந்தமாய் நமக்குள்ள பொதுக் கொள்கைகளில் இதொன்றாம்.

## 'ஆத்மா' வேறு, 'Soul (ஸோல்)' வேறு

இனி, பிரமத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். அதற்கு முன் ஆன்மாவைப்பற்றி ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது, ஆங்கிலம் படிப்பவர்கள், 'ஸோல் (Soul)' 'மைன்ட் (Mind)' என்னும் இரு சொற்களை யுபயோகிப்பதில் அடிக்கடி மயங்கி நிற்கின்றனர். நமது சாஸ்திரங்கள் பேசும் 'ஆன்மா'வுக்கும், ஆங்கிலத்திலுள்ள 'ஸோலுக்'கும் எவ்வளவோ பேத மிருக்கிறது. நாம் எதை 'மனஸ்' என்கிறோமே அதையே அவர்கள் 'ஸோல்' (ஆத்மா) என்கிறார்கள். மேற்றிசையிலே சென்ற இருபது வருஷகாலமாகத்தான் ஸம்ஸ்கிருத ஞானசாஸ்திரம் பரவி வருகின்றது. அதற்கு முன் அங்கே ஆத்மா என்ற கொள்கையே கிடையாது. எப்படியெனில், முதலில் தேகம், அதற்கப்பா லுள்ளது மனஸ்; ஆனால், இந்த மனஸ், ஆத்மாவாகாது; அதை நாம் சூக்ஷ்ம சரீர மென்போம். அதுதான் பிறப்பிறப்புகளுக்கு உட்பட்டது; ஆனால், அதற்கும் அப்பாலுள்ளது எதுவோ அதுவே ஆத்மாவாம். அதற்குப் பிரதிபதமாய் ஸோல், மைன்ட் என்னும் சொற்களை ஆங்கிலத்தில் வழங்குதல் கூடாது. ஆத்மா என்ற பதத்தை அப்படியே உபயோகிக்கவேண்

டும்; அல்லது, சமீபகாலத்திற் சில மேற்றிசை தத்துவ நூலோர் வழங்க முயன்றபடி 'தான்' என்று பொருள் படும் 'Self' (ஸெல்ப்) என்று சொல்லலாம். எந்தச் சொல்லை யுபயோகித்தாலும், ஆத்மாவானது மனத்தினின் றும் சரீரத்தினின்றும் வேறானதென்றும், இவ்வாத்மா சூக்ஷ்மசரீர மெனப்படும் மனத்துடன் சேர்ந்தே ஜநந மாணங்களை யடைகின்றதென்றும் தெளியவேண்டும். இனி, அவ்வாத்வா மெய்ஞ்ஞான மடைந்து பூரண ஸ்வரூப மாகுங்கால், இந்த ஜநந மாணங்கள் அதற்கு நின்றுபோய் விடுகின்றன. பிறகு அந்த மனஸ், அல்லது சூக்ஷ்ம சரீ ரத்தை வைத்துக்கொள்வதும், அல்லது அதை ஒரேயடியா மாய் விட்டுவிட்டு எக்காலமும் சுயேச்சையாய் முக்தி பெற்று விளங்குவதும் அதன் இஷ்டமாம். ஆத்மாவுக்கு மேலான புருஷார்த்தம் முக்தி. இது நம் மதத்துக்கு மாத் திரம் சிறப்பானதன்று. நம் மதத்திலும் சுவர்க்க நரகங் கள் உள. ஆனால், அவை எக்காலமும் முடிவின்றியிருக் கும் தன்மையனவல்ல; அப்படி யிருத்தல் இயற்கை விதிக்கு விரோதமாகையா லென்க. சுவர்க்க லோகங் களும் நம் பூலோகத்தைப் போன்றனவே; ஆனால், அங்கே அதிகமான சுக போகங்கள் இருக்கும்; இதுதான் வித்தியாசம். சுகபோகம் அதிகமாக ஆக, அத்தனையும் துக்கத்தின் பொருட்டே யாகும். இத்தகைய சுவர்க்கங் கள் எத்தனையோ இருக்கின்றன. இப் பூலோகத்தில் பலா பேட்சையுடன் நற்கருமங்கள் செய்கிறவர்கள் மரித்தபின் சுவர்க்கலோகத்திலே இந்திரன் முதலிய தேவராகப்

பிறக்கின்றனர். இந்தத் தேவதைகள் ஒவ்வோர் பதவியின் பெயரைக் குறிப்பவராவார். அவர்களும் ஒரு காலத்திலே மனிதராயிருந்து நற்கருமத்தால் தேவரானவர்களே. ஆகவே, இந்திரன் முதலிய தேவ நாமங்கள் ஒரே புருஷனைக் குறிக்கும் பெயர்களல்ல. ஆயிரம் இந்திரர்கள் இருப்பார்கள். நஹுஷன் என்கிற மஹாராஜா ஒருவன் இருந்தான். அவன் மரித்தபின் இந்திரனானான். ஆகவே, அஃது ஓர் பதவிமாத்திரமே. ஓர் ஆன்மா நல்வினைப் பயனால் மேலான கதி பெற்று, இந்திர பதவி யடைந்து, சிலகாலம் அப் பதவிக்குரிய போக மநுபவித்தபின் மரித்து மீண்டும் மனிதனாய்ப் பிறக்கின்றது. ஆனால், மனித தேகமே எல்லாவற்றிலும் சிறந்தது. தேவருட் சிலர் உத்தம கதியை நாடித் தேவபோகங்களைத் துறக்க முயல்வோராயினும், தேவலோகத்துச் செல்வமும் பதவியும் போகமும் பலரை மயக்குந் தன்மையவாகையால், அத் தேவருட் பலரும் மோஹ பரவசராகி நல்வினைப் பயன் உள்ளளவும் சுவர்க்க போக மநுபவித்துப், பின்னர் அவ்விடத்தினின்று தள்ளுண்டு, மீண்டும் மனிதராய்ப் பிறக்கின்றனர். ஆகையினால், இந்தப் பூமி கர்மபூமி யெனப்பட்டது. பூலோகத்தினின்றே முக்தி யடையப்படுகின்றது. ஆகவே, சுவர்க்காதி புவனங்களும் வேண்டற்பாலனவல்ல. அற்றேல், வேண்டற்பாலது யாதெனின், முக்தியேயாம். உத்தமலோகம் சென்றாலும் பந்தமுளதென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றமையால், இருபதினாயிரம் ஆண்டு அரசனா யிருந்தாலும் பயனென்? சரீர முள்ளளவும், போகத்துக்கு

அடிமையா யிருக்குமளவும், கால தேசங்களுக் குட்பட்டிருக்குமளவும், நீ அடிமைதானே. ஆகையால், உள்ளும் புறமும் சுதந்தரமாய் இருக்கவேண்டு மென்பதே கருத்தாம். பிரகிருதி உன் காலின் கீழ் நிற்க, நீ அதை மிதித்து நிவிர்த்தி பெற்றுப் பெருமையுடன் அதைக் கடந்து செல்லவேண்டும். இனி, பிறப்பு உண்டாகாது, ஆகையால், இறப்பும் இல்லை; சுக போக முண்டாகாது, ஆகையால், துக்கமு மில்லை. எல்லாவற்றையுங் கடந்து பேசற்கரிய அழிவற்ற பேரானந்தமே பயனாய் முடியும். இம்மையில் நாம் சுகமென்றும் நன்மை யென்றும் சொல்வதெல்லாம் அவ் வழிவிலாப் பேரின்பத்தின் துளிகளேயாம். அப் பேரின்பமே பெறத்தக்க பெறும் பேறு.

ஆத்மாவுக்கு ஆண் பெண் என்ற திணை வேற்றுமை இல்லை. அவ் வேற்றுமை, சரீரத்திற்கே யுரியது. ஆகவே, ஆண் பெண் என்ற விவகாரம் சரீர சம்பந்தமாய்ப் பேசுமிடத்துப் பொருந்துமேயன்றி, ஆத்ம விஷயத்தில் பொய்யாம்; வயது விஷயமும் அவ்வாறே. அப் 'பழம் பொருள்' என்றும் ஒரே படித்தாக விருக்கின்றது.

அப்படியாயின், அது பவத்திற்கு உட்படுவானேன்? எனில், அதற்கு ஒரே விடைதான் நமது வேதசாஸ்திரங்களில் இருக்கிறது. அதாவது, அஞ்ஞானத்தினாலேயே நாம் பந்தத்துக்கு உள்ளானோம். ஞானமே அதை நிவிர்த்தி செய்து நம்மைக் கரையேற்ற வல்லது. அந்த ஞானம் எவ்வாறு உண்டாகும்? எனில், அன்பால், பக்தியா

லென்க. அவ் அன்பாவது, ஈசனை வழிபடுதலும், ஜீவ கோடிகளை யெல்லாம் அவன் தங்கியருளும் திருக் கோயில்களெனக் கருதுதலுமேயாம். இவ்வாருக மெய் யன்பினுல் ஞான முதயமாகும்: அஞ்ஞானம் மறைந்து போம்; பந்தங்கள் அற்றுப்போம்; ஜீவன் வீடு பெறும்.

## ஸகுண நிர்க்குணம்

நமது சாஸ்திரங்களிலே கடவுளுக்குச் சகுணம் நிர்க்குணம் என இருவகைத் தன்மைகள் உளவென்று கூறப்பட்டுளது. ஸகுணப் பிரஹ்ம சித்தாந்தமாவது: கடவுள் சர்வ வியாபியாய் அனைத்தையும் படைத்துக் காத்து அழிப்பவ ரென்றும், உலகத்துக்கு அம்மையும் அப்பனுமாய் உள்ளவ ரென்றும், ஆனுல், ஜீவாத்மாக்களி னின்றும் எக்காலமும் வேருகி விளங்குவோ ரென்றும், முக்தி யென்பது அவரது சாமீப்பிய மடைந்து அவரது வியாப்திக் குட்பட்டு வாழ்தலென்றும் கொள்வதாம். நிர்க்குண பிரஹ்ம சித்தாந்தத்திலோ, மேற் சொல்லிய விசேடணங்கள் யாவும் மிகையெனவும் தர்க்க விரோத மானவை யென்றும் தள்ளப்பட்டு, எங்கும் நிறைந்த நிஷ் கள வஸ்துவே பரம்பொருளென நிச்சயிக்கப்படும். அதனை ஞாதுரு என்பது கூடாது, ஞானம் மனத்திற் குரியபடி யால் அதனைச் சிந்திக்கும் பொருளெனல் கூடாது, சிந்தை பலவீனர்களின் காரிய மாதலால். அதனைத் தர்க்கிக்கும் பொருளெனவும் கூடாது, தர்க்கம் பலவீனத்தின் குறி யாதலால், அதனைப் படைக்கும் பொருளெனவும் கூடாது,

படைப்பு பந்தத்திலன்றி வேறெங்கும் நிகழாமையால் பரம்பொருளுக்குப் பந்தமேது? இஷ்டா பூர்த்திக்கே எவரும் கருமம் செய்கின்றனர். அவருக்கு என்ன இஷ்ட மிருக்கும்? அல்லது குறை தீர்த்துக் கொள்ளச் சிலர் கரும மியற்றுவர். அவருக்கு என்ன குறைவு? வேதங்களிலே கடவுளைப்பற்றிப் பேசுமிடத்து வழங்கு லுறும் சொல், 'அவன்' அன்று 'அது'வேயாம். ஏனெனில், 'அவன்' என்றால், கடவுள், ஆண்பால் என்ற மயக்க அறிவை யுண்டாக்குமாதலால், ஆண் பெண் என்ற பேதத்தைக் கடந்த கருத்தை யறிவிக்கும் நிஷ்கள வாசகமான 'அது' என்ற சொல்லே பிரயோகிக்கப்பட்டுளது. அந்த நிஷ்கள ஸ்வரூபமே வேதப் பிரதிபாத்தியமாம். இதுதான் அத்வைத சித்தாந்தம்.

இந்த நிஷ்களப் பொருளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்த மென்னவெனில், நாமே அதுவாம். நாமும் அதுவும் ஒன்றே. உள்ளவை எல்லாவற்றிற்கும் ஆதாரமான அந்த நிஷ்கள ஸ்வரூபியின் ஆவிர்ப்பாகமே நாம் ஒவ்வொருவரும் இவ் அநந்த நிஷ்கள ஸ்வரூபத்தினின்றும் நாம் வேறென நினைப்பதே துக்கமும், இந்த அற்புத நிஷ்களமும் நாமும் ஒன்றென உணர்வதே முத்தியுமாம். இவையே நம் சாஸ்திரங்களிற் சொல்லியுள்ள இருவகைக் கடவு ளிலக்கணமாம். இந்த நிஷ்களஸ்வரூபக் கொள்கையால்தான் எவ்வகையான நீதி நெறியும் நிலைகொள்ளும். "மன்னுயிரைத் தன்னுயிர்போல் நினை" என்ற உண்மையை ஒவ்வொரு நாட்டி

னும் தொன்றுதொட்டு உபதேசித்து வருகிறார்கள். நம் பரத நாட்டிலோ, 'அனைத்துயிரையும் உன்னுயிர்போல் நினை' என்று உபதேசிக்கப்பட்டது. அன்பு பாராட்டும் விஷயத்தில் மனிதனுக்கும் பிராணிகளுக்கும் நம் நாட்டில் வேற்றுமை பாராட்டினதே கிடையாது. அதற்குக் காரணமென்ன? எல்லாவற்றையும் தன்னைப்போல் கருதி நேசிப்பது எவ்வாறு நியாயமாகும்? என்றால், நிஷ்கள ஸ்வரூபியாகிய கடவுள் எவ்விடமும் நீக்கமற நிறைந்திருப்பதால், பிரபஞ்ச முழுவதும் ஏகஸ்வரூபமா யிருக்கின்றது, ஆதலால், எதற்கேனும் நான் தீங்கு செய்வேனாயின், எனக்கே தீங்கு செய்துகொண்டவ னாகிறேன்; எதையேனும் நேசிப்பேனாயின், என்னையே நேசிக்கிறவ னாகிறேன். பிறருக்கு நாம் ஏன் தீங்கிழைக்கக் கூடாதென்பதற்கு இதனின்றும் நியாயம் சரியாய் ஏற்படுகின்றதல்லவா? ஆகையால், இந்த நிஷ்களஸ்வரூபக் கொள்கையால்தான் நல்லொழுக்கத்திற்குச் சரியான காரணம் ஏற்படும். இன்னும் சில விஷயங்களும் இதைச் சேர்ந்திருக்கின்றன. ஸகுணப் பிரம்மோபாசனையினால் உண்டாகும் அற்புதமான அன்பின் பெருக்கத்தை யான் அறிந்துளேன். அந்த அந்தக் காலத்தில் ஜனங்களுக்கும் பக்தியா லுண்டான அபாரமான ஆநந்த பரவசத்தின் அருமையும் எனக்குத் தெரியும். ஆயினும், இப்பொழுது நம் நாட்டிற்கு இன்றியமையாமல் வேண்டி யிருப்பது ஒரு சிறிது வலிமையே யன்றிக் கண்ணீர் கப்பலை யன்று. மனிதன் சகலவித மூடபக்திகளையும் தூர எறிந்துவிட்டு, உலகத்தில் நிறைந்

துள்ள நிஷ்களப்பொருள் 'நானே' என்ற ஞானத்துடன் தைரியமாய் எழுந்து நிற்கும்பொழுது, ஆஹா, அந்த நிஷ்கள ஸ்வரூபத்தில் எவ்வளவு பலமும் பௌருஷமும் பராக்கிரமமும் பிரகாசிக்கின்றன. என்னைப் பயப்படுத்தக் கூடியது எது? பிரகிருதியின் நியமங்களும் எனக்கு லக்ஷ்ய மில்லை. மரணம் எனக்கோர் வேடிக்கை. மனிதன், அநாதி நித்யமாயும் அமிருத ஸ்வரூபமாயுமுள்ள ஆத்ம வைபவத்தில் நிலைகொண்டவனன்றோ? எதை ஆயுதங்கள் ஊடுருவிச் செல்லவோ, வெயில் உலர்த்தாதோ, தீ எரிக்காதோ, நீர் கரைக்காதோ, எதன் பெருமைக்கு முன்னே சூரிய சந்திராதி மண்டலங்கள் நீர்த்துளியெனத் தோன்றுகின்றனவோ, எதன் வைபவத்துக்கு முன்னே தேசமானது சூந்யமாய்ச் சூர்ண மாகின்றதோ, காலமானது காணமற் போகின்றதோ, அத்தகைய ஆதியந்த மற்றதும் ஜனன மரண ரஹிதமுமான ஆத்ம ஸ்வரூபத்தை நாம் நம்பவேண்டும். அதினின்றும் சர்வ சக்தியும் உண்டாகும். நீ எவ்வாறு நினைத்துக்கொள்ளுகிறையோ, அவ்வாறே ஆவாய். உன்னைப் பலஹீநனென்று நீ நினைத்துக்கொள்வையேல், பலஹீநனாயிருப்பாய்; பலவானென்று நினைத்துக்கொள்வையேல், பலவானாவாய்; அசுத்தனென்று நினைத்துக்கொள்வையேல், அசுத்தனாவாய்; சுத்தனென்று நினைத்துக்கொள்வையேல், சுத்தனாவாய், உங்களைப் பலஹீநர்களென நினைத்துக்கொள்ளவேண்டாம். உங்களைப் பலசாலிகளென்றும், ஸர்வ சக்தி யுள்ளவர்களென்றும்; சர்வஞ்ஞத்துவ முள்ளவர்களென்றும் நினைத்துக்கொள்ளு

மாறு வேதாந்தம் போதிக்கின்றது. அந்தக் குணங்கள் நம்மிடத்தில் இப்பொழுது வெளிப்படையாய் விளங்காவிடினும், அவை நமக்குள் அடங்கியிருக்கின்றன. எல்லா ஞானமும்; எல்லா சக்தியும், எல்லா பரிசுத்தமும், எல்லா பந்த நிவிர்த்தியும் நமக்குள்ளாகவே இருக்கின்றன என்பது உண்மையாயின், அவை யேன் நம்மிடத்தில் வெளிப்படையாய் விளங்கவில்லை யென்றால்: அவற்றில் நமக்கு இன்னும் நம்பிக்கை உண்டாகவில்லை. நம்பிக்கை மாத்திரம் இருக்கும்பக்ஷத்தில், அவை வெளிப்படையாய் விளங்கவே செய்யும். இதுதான் நிர்க்குணவாதம் போதிக்கும் உண்மையாம். ஆதலால், நீங்கள் உங்கள் குழந்தைகளை இளமை முதற்கொண்டு திடகாத்திர சம்பன்னர்களாக்கிக் கொண்டு வாருங்கள்! பலஹீனத்தன்மையையும், ஜீவனற்ற வெறுங் கருமங்களையும் அவர்களுக்குக் கற்பித்துக்கொடாதேயுங்கள்! அவர்கள் பலவான்களாய்ப், பிறருதவியை எதிர் பாராது ஸ்வய சக்தி யுடையவர்களாய்த், தீரர்களாய், எதையும் வென்று வருவோராய், எதையும் பொறுப்பவர்களாய் வளரட்டும். அதன் பொருட்டு அவர்களுக்கு ஆத்ம மஹிமையை முதலில் கற்பியுங்கள். அஃது உங்களுக்கு வேதாந்தத்தில்தான் கிடைக்கும்; வேறெங்கும் கிடைக்காது. ஏனைய மதங்களிலுள்ள பக்தி வைராக்கியாதிகள் வேதாந்தத்தில் இன்னும் அதிகமாய் இருந்த போதிலும், அதற்கு ஜீவ களையை அளித்துவரும் கொள்கை இந்த அற்புதமான ஆத்மஞானமேயாம். ஜட வாதத்தில் அழுந்தியிருக்கும் உலகத்தை ஒரு புரட்டு புரட்டி

யெடுத்து பௌதிக ஞானத்தைச் சமய நெறியுடன் ஸமந்வயப்படுத்தும் பெருங் கருத்து அவ் ஆத்மஞானத்திலன்றி வேறெங்கும் இல்லை யென்க.

## அநுபவ வேதாந்தம்

இவ்விதமாக நம் சமயத்தின் மூலாதார தத்துவங்களாயுள்ள முக்கியாம்சங்களை ஒருவாறு எடுத்துச் சொன்னேன். இனி, அவற்றின் அநுஷ்டானக் கிரமத்தைப் பற்றிச் சிறிது கூறி அமைவேன். பாரதவர்ஷத்திலுள்ள நிலைமைகளை உத்தேசித்து, இத்தனைச் சமய பேதங்கள் இருக்கவேண்டுவது இன்றியமையாமை யென்பது கண்டோம். இத்தனைச் சமய பேதங்கள் இருப்பினும் அவை ஒன்றுடனொன்று சச்சரவு செய்வதில்லை. வைஷ்ணவர்களெல்லாரும் நரகத்துக் கிரையாவர் என்று சைவன் சொல்வதில்லை. சைவர்களெல்லோரும் நரகத்துக்கு அதிதிகளென்று வைஷ்ணவனும் சொல்வதில்லை. ஆனால், அச் சைவனும் வைஷ்ணவனும் சொல்வதென்னவெனில்:—இது என்னுடைய வழி, உன் வழிப்படி நீ நடந்துகொள் கடைசியில் நாம் ஒன்றாகச் சேரவேண்டுமென்பதே. இக் கொள்கை இந்தியாவிலுள்ள எல்லாச் சமய பேதங்களுக்கும் பொதுவானது. இதற்கு இஷ்டதேவதோபாசனம் என்று பெயர். கடவுளை வழிபடும் விதங்களில் பல்வேறு வேறுபாடுகள் இருக்கலா மென்பது பண்டைக்காலந் தொட்டு அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. அவரவர்களின் வெவ்வேறான மனச் சார்புகளுக்

கேற்ப மத பேதங்களும் வேண்டியிருக்கின்றன. கடவுளை யடைவதற்கு உங்களுக்கு ஏற்றதாயுள்ள வழி எனக்குச் சரிப்படாமலிருக்கக் கூடும். ஒருவேளை அதனால் எனக்குத் தீங்கு விளைந்தாலும் விளையலாம். எல்லோருக்கும் ஒரே வழி யென்பது கேடு பயக்கத் தக்கதாயும் நிரர்த்தகமாயு மிருப்பதால், அதை விட்டொழித்தல் வேண்டும். எப்பொழுது எல்லோரும் ஒரே மதாபிப்பிராய முள்ளவர்களா யிருக்கின்றனரோ, அப்பொழுது உலகத்துக்கு நாசமென்பது திண்ணம். அப்பொழுது சர்வ மதாசாரமும் தத்துவ விசாரமும் ஒழிந்துபோமன்றோ? இவ்வாறு பலபலவாய் வேறுபட்டிருக்குந் தன்மையன்றோ வாழ்க்கைக்கு இனிமையைத் தந்து திகழ்வது? அஃது அழியுங்கால் பிரபஞ்சம் முழுவதும் அழியும். ஆகவே, இந்தச் சமய பேதமும் தத்துவ பேதமும் இருக்கும்வரையிலும் நாமும் இருப்போம். ஆதலால், இந்தப் பேத ஸ்திதியைப்பற்றி நாம் சண்டை போட்டுக்கொள்ள வேண்டியதில்லை. உங்கள் வழி உங்களுக்கு உத்தமமாய் இருக்கலாமேயன்றி எனக்கன்று. என் வழி எனக்கு நலமாயிருக்குமேயன்றி உங்களுக்கன்று. இதற்குத்தான் ஸம்ஸ்கிருதத்தில் இஷ்டம் என்று பெயர். நமக்கு உலகத்திலுள்ள எம்மதத்துடனும் வாதில்லை. நாம் அனைவரும் அவரவர் இஷ்ட தேவதையை வழிபட்டு நற்கதி யடைவோமாக. ஆனால், சிலர் கிளம்பி, “இதுதான் உண்மை மார்க்கம்” என்று கூறி இந்தியாவிலுள்ள எம்பால் அதைப் பலாத்காரமாய் உபதேசிக்க வருவதை நாம்

பார்க்கையில், நாமும் ஒரு பேச்சுப் பேசவேண்டி யிருக்கிறது. அவர்களைக் கண்டு நாம் நகைப்பதன்றி வேறென்ன செய்யலாம்? இப்படிப்பட்டவர்கள் அன்பைப்பற்றிப் பேசுவது ஆபாசமென்க. பிறர், வேறு மதத்தை அநுஷ்டிப்பதின் காரணமாக அவர்களை அழிக்க விரும்புவோரின் அன்பும் ஓர் அன்பா? என்னை? இன்னொருவன் தனக்கிஷ்டமான தேவபக்தி செய்வதைக் கண்டு சகியாதவர்களோர் அன்பைப்பற்றிப் பேச முன் வருகிறார்கள்! அஃது அன்பாகில், பகை யென்பது யாது? உலகத்தின்கண் உள்ள எம்மதத்துடனும் எமக்கு வாதில்லை. அவர்கள் கிறிஸ்துவையேனும், புத்ததேவனையேனும், மஹம்மது நபியையேனும், வேறெந்த மஹா புருடனையேனும் பூஜிப்பவர்களா யிருக்கட்டும். ஹிந்துக்கள் சொல்வ தென்னவெனில்: "நமஸ்காரம் சுவாமிகளே! சுபமஸ்து. என்னாலான உபகாரம் உங்களுக்குச் செய்கிறேன். ஆனால், என் மதாசாரப்படி நான் நடந்துகொள்ள எனக்கு அநுமதி தாருங்கள். அதுவே என் இஷ்டம். உங்கள் வழி யாதொரு சந்தேகமுமின்றி உத்தமமா யிருக்கலாம். ஆனால், அது எனக்கு அநர்த்தத்தை விளைக்கக்கூடும். எனக்கு இன்ன போஜனவகை இதமான தென்பதற்கு என் சொந்த அநுபவம் இருப்பதால், கோடி வைத்தியர்கள் கூடிவந்தாலும் அதை மாற்ற முடியாது. ஆகையால், எந்த பந்தா (வழி) எனக்கு நலத்தைத் தருமென்பது என் சொந்த அநுபவத்திலேயே ஏற்பட்டிருக்கிறது" என்பதாம். இதுவே உத்தம கதியாயும், இஷ்டமார்க்க வொழுக்கமாயு மிருத்தலால், எவ்வித

மான ஆலயமோ, விக்ரஹமோ, அல்லது வேறெந்த அடையாளமோ உள்ளே இருக்கும் தெய்வத்தன்மையை அநுபவிப்பதற்கு அநுகூலமா யிருப்பின், அவற்றை நீங்கள் வைத்துக்கொள்வதில் என்ன ஆக்ஷேப மிருக்கிறது?' இருநூறு விக்ரஹம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். தெய்வாநுபவம் உண்டாவதற்கு எந்த எந்த ஆசாரநுஷ்டானங்கள் அநுகூலமா யிருக்கின்றனவோ, அவை யனைத்தையும் நீங்கள் இஷ்டம்போல அநுஷ்டிக்கலாம். அது கடவுளுக்குச் சம்மதமே. ஆகவே, ஈசுவர சாந்நித்தியத்துக்கு ஸாதகமாயுள்ள ஆலய தரிசனம், கர்மாநுஷ்டானம் எல்லாவற்றையும் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், அவற்றைப்பற்றி வீண் வாதம் செய்யவேண்டாம். எப்பொழுது நீங்கள் வாதுசெய்யத் தலைப்படுகிறீர்களோ, இனி நீங்கள் நாடிச் செல்வது தெய்வத்தன்மையன்று, மிருகத் தன்மையைப் பின்னோக்கிச் சென்று நாடுவீர்கள்.

## ஜாதிக் கட்டுப்பாடு

நம் மதத்தின் சித்தாந்தங்கள் சிலவற்றை மேலெடுத்துக் கூறினேன். உலகத்திலுள்ள சர்வ மதங்களும் நம் மதத்தில் அடங்கும் தன்மையனவேயன்றி அதற்குப் புறம்பானவையல்ல. நமது ஜாதியாசார முறைமைகள் பார்வைக்கு மாத்திரம் மதத்துடன் கலந்திருப்பினும், உண்மையில் மதசம்பந்த முடையனவல்ல. நாம் நாகரிக மற்ற பிற நாட்டாருடன் கலந்து கெட்டுப் போகாதபடி

நம்மைக் கட்டுப்படுத்திப் பாதுகாப்பதற்கு இவை முதலில் அவசியமாய் ஏற்பட்டன. அத்தகைய பாதுகாப்பின் ஆவசியகம் அபாவமாகுங்கால், அந்த ஜாதிக் கட்டுப்பாடுகள் தாமாகவே கழிந்துபோகும். ஆனால், எனக்கு வயது செல்லச் செல்ல, தொன்றுதொட்டு ஆன்றோர் வழக்கம் பெற்றுவரும் இந்த ஜாதி தர்மத்தின் மேன்மை எனக்கு மேலும் மேலும் புலப்பட்டுக்கொண்டு வருகிறது. இந்த ஆசாரங்களெல்லாம் சுத்தமாய்ப் பயனற்றவை யென்று நான் ஒருகால் எண்ணங்கொண்டிருந்ததுண்டு. ஆனால், எனக்கு வயது ஆக ஆக, அவற்றுள் எதையேனும் தூஷிப்பதென்றால், எனக்கே தைரியக் குறைவாயிருக்கிறது; ஏனெனில், அவை ஒவ்வொன்றும் பல நூற்றாண்டுகளின் அநுபவத்தைக்கொண்டு ஏற்பட்டன அன்றோ? நேற்றுப் பிறந்து நாளைக்கு மரிக்கும் அற்ப ஆயுட்பெயர்வழி யொருவன் என்னிடம் வந்து என் பத்ததிகளை யெல்லாம் மாற்றவேண்டுமென்று பிரசங்கம் செய்கிறான். அந்தச் சிறு பிள்ளையின் பேச்சைக் கேட்டுக்கொண்டு நான் என் ஆசாராநுஷ்டானங்களை யெல்லாம் மாற்றி விடுவேனாயின், கடைசியில் முட்டாளாய் நிற்பது நானேயன்றி வேறொருவருமல்லவே? இதைப்போன்ற புத்தியைத்தான் இப்பொழுது பல்வேறு தேசத்தார்களும் நமக்குப் புகட்டி வருகிறார்கள். அப்படி அவர்கள் சொல்ல வருவார்களேல் நீங்கள் பேசும் சீர்திருத்த மார்க்கங்களால் உங்கள் ஜாதி சீர்ப்பட்டு ஸ்திரமாயிற்றென்று ஏற்படட்டும்; பின்னர் நீங்கள் சொல்வதைக் கேட்போம்'' என்று அவர்களுக்கு

விடை பகருங்கள். ஒரு பாவனையை இரண்டு நாளைக்குத் தாரணை செய்ய உங்களுக்கு வலியில்லை; நீங்கள் சண்டையிட்டு மாள்கிறீர்கள். வேனிற்காலத்தில் உண்டாகும் பூச்சிகள்போல் நீங்கள் பிறந்து, அவற்றைப்போலவே ஐந்து நிமிஷத்திலே அழிந்துபோகிறீர்கள். நீங்கள் நீரின் மேற் குமிழிபோற் றோன்றி அவற்றைப்போலவே நிலையற்றுப்போகின்றீர்கள். ஆகவே, முதலில் வர்ண வ்யவஸ்தை (ஜாதி முறைமை) யைப்போல் ஸ்திரமான ஜனசமூஹம் நீங்கள் உண்டுபண்ணுங்கள்! எத்தனை நூற்றாண்டுகளானாலும் வலி குன்றாமல் நிலைநிற்கும் சட்டதிட்டங்களையும் வ்யவஸ்தைகளையும் முதலில் ஏற்படுத்துங்கள்! இதையெல்லாம் நீங்கள் செய்தால், அப்பொழுது அதைப்பற்றி உங்களுடன் பேச எங்களுக்கு அவகாசமுண்டேயன்றி, அதுவரையில், நண்பனே! நீ மயக்கங்கொண்ட சிசுவேயன்றி வேறில்லை.

## ஆத்மஞானதானம்

நம் மதத்தைப்பற்றி நான் சொல்லவேண்டியிருந்ததைச் சொல்லி முடித்தேன். இனி, இக்காலத்துக்கு இன்றியமையாததாயுள்ள ஒரு விஷயத்தை மாத்திரம் உங்களுக்கு ஞாபகப்படுத்திவிட்டுப் பிரசங்கத்தை முடிக்கின்றேன். மஹாபாரதம் செய்த மஹானாகிய வேதவியாசரின் அநுக்கிரஹத்தால் இக் கலியுகத்தில் சிறந்த கர்மம் ஒன்று நமக்கேற்பட்டிருக்கிறது. மற்ற யுகங்களிலே அநுஷ்டிக்கப்பட்டு வந்த தபஸ் முதலிய கடினமான

போகங்கள் இப்பொழுது அசாத்தியமாய்விட்டன. இந்த யுகத்தில் அவசியமானது தானமே. தானம் என்றால் கொடை, பிறருக்கு உபகாரம் செய்தல்.

தானம் என்றால் என்ன? ஆத்மஞான தானம் உத்தமமான தானம். இம்மைக்குரிய ஞானதானம் மத்தியமமான தானம். அதற்கடுத்தது உயிரைக் காப்பாற்றுதல். கடைசியானது அன்னபானங்களின் தானம். ஆத்மஞான மளிக்கின்றவன் பல பிறவிகளினின்றும் ஆத்மாவை இரட்சிக்கிறான். இம்மைக்குரிய ஞானத்தைப் புகட்டுகின்றவன் அந்த ஆத்மஞானம் உண்டாகவேண்டி மனிதனது கண்ணைத் திறக்கிறான். உயிரைக் காப்பாற்றுவது உள்பட மற்ற எல்லாத் தானங்களும் இந்த ஞானத்துக்குக் கீழ்ப்பட்டனவே. ஆகவே, நீங்கள் இதை அறிந்துகொண்டு மற்ற கருமங்க ளெல்லாம் இந்த ஞானதானம் என்னும் கருமத்தை நோக்க எவ்வளவோ குறைந்தவை யென்பதைக் கவனிக்க வேண்டியது. ஆத்ம ஞானோபதேசமே பரமோபகார மானது. நமது வேத சாஸ்திரங்கள் என்றும் வற்றாத ஆத்மஞான ஊற்றாய் விளங்குகின்றன. வைராக்கியத்துக்குச் சிறந்த பூமியெனத் திகழும் இந்நாட்டிலன்றி இப் பூமண்டலத்தில் வேறெந்நாட்டில் பிரம்ம ஞானானந்தச் செல்வர்களைக் காணலாம்? எனக்கும் உலகானுபவம் சிறிதுண்டு. நான் சொல்வதை நம்புங்கள். பிற நாடுகளில் மதத்தைப் பற்றிய பேச்சுகள் அதிகமாய் நடக்கின்றன. ஆனால்: அவற்றை யெல்லாம் அநுபவத்துக்

குக் கொண்டுவந்த பிரம்ம ஞானிகள் இந் நாட்டிலேயே உளராவார்; மற்றெந்நாட்டிலும் இலரென்க. வெறும் பேச்சு ஞான மாகாது. அது வாசா கைங்கரியமே. கிளிகளும் அவ்வாறு பேசும். இக்காலத்தில் யந்திரங்களும் பேசுகின்றன. ஆனல், வைராக்கியம், உபரதி, ஆத்ம ஞானம், பொறை, சம திருஷ்டி, அளவு கடந்த அன்பு ஆகிய இவற்றைப் பூஷணமாய்ப் பெற்ற வாழ்க்கையை எனக்குக் காட்டுங்கள்! அப்பொழுது நீங்கள் ஆக்மஞான முள்ளவர்க ளென்பதை ஒப்புக்கொள்வேன். நல்லது, இனி நம் நாட்டில் இத்தகைய மேலான கருத்துகளேயும், பிரமாநுபூதிச் செல்வர்களேயும் வைத்துக்கொண்டு, நமது புத்தியிலும், இந்த மகா யோகிகளின் இருதயங்களிலும் விளங்கும் ஞான பொக்கிஷத்தை யெல்லாம் வெளியே கொணர்ந்து, தனிகர் தரித்திரர் மேலோர் கீழோர் ஆகிய எல்லோருக்கும் அளிக்காமலிருத்தல் நியாயமாகுமா? இந்நாட்டில் மாத்திரமன்றி உலகத்திலுள்ள யாவருக்குமே அதனே யுபதேசிக்கவேண்டும் இதுவே சிறந்த தருமம். பிறருக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் உபகாரம் செய்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கே உபகாரம் செய்துகொண்டவராவோம். உங்களுக்கு உண்மையான சமய பக்தியும் தேசாபிமானமும் இருக்குமாயின், நீங்கள் எந்தப் பாடாவது பட்டு, சோம்பலே உதறி யெறிந்து ஆண்மக்களென எழுந்து நின்று, இப்பொழுது மூடி முத்திரையிட்டிருக்கும் புஸ்தகங்களிலிருக்கும் செல்வத்தை யெடுத்து அதற்கு நியாயமான பாத்தியஸ்தர்களுக்கு

ஒப்புவிக்க வேண்டுமென்னும் ஒரே கருத்துடன் இந்தக் கடமையை நீங்கள் செய்யவேண்டும். இவையெல்லா வற்றையும் விட ஒரு விஷயம் மிகவும் முக்கியமானது. அதாவது, பல நூற்றாண்டுகளாக நம்மிடத்தில் பொறாமைக் குணம் குடிகொண்டிருக்கிறது. எப்பொழுதும் நாம் ஒருவரைப்பார்த் தொருவர் அசூயை பாராட்டி வருகிறோம். "இவனுக்கேன் இவ்வளவு சிறப்பு? அது எனக்கேன் கூடாது?" என்கிற எண்ணம் உண்டாகிறது. ஸ்வாமி தரிசன விஷயத்திலும் நமக்கு முதன்மை வேண்டுமென்கிறோம். முதல் தீர்த்தம் என்னுடையதென்கிறார் ஒரு சுவாமி. இப்படிப்பட்ட அற்பமான அடிமைத்தனத் துக்கு நாம் வந்துவிட்டிருக்கிறோம். எல்லோரும் கட்டளையிடவேண்டுமென்கிறார்கள். கீழ்ப்படிவதற்கு ஒருவருக்கு மிஷ்டமில்லை. எல்லோரும் பல்லக்கேறினால் தூக்குவோர் யாவர்? ஆகவே, கீழ்ப்படிவதற்கு முதலில் கற்றுக் கொள்ளுங்கள்; கட்டளையிடும் அதிகாரம் தானே வரும். எப்பொழுதும் சேவகனாயிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; நீங்களே எஜமானராவீர்கள். இவற்றிக்கெல்லாம் ஆகார பூதமாயிருந்த அந்தப் பண்டைக் காலத்து அற்புதமான பிரஹ்மசர்யம் இப்பொழுது இல்லாமலிருப்பதே நம் நாட்டின் க்ஷீண கதிக்குக் காரணமாம். இந்தப் பொறாமைக் குணத்தை வேரறுத்துத் தள்ளுவீர்களேல், இனிச் செய்ய வேண்டியிருக்கும் பெரிய கருமங்களைச் செய்து முடிக்கும் வலிமை பெறுவீர்கள். நமது முன்னோர்கள் மகா அற்புதமான காரியங்களைச் செய்தார்கள். அவற்றை நோக்கும்

பொழுது நமக்கு ஒருவித பக்தியும் பெருமையும் உண்டாகின்றன. ஆனால், நாமும் உழைத்துப் பெருங் காரியங்களைச் செய்யப் போகிறோமாகையால், நமக்குப் பின் வருபவர்கள் நம்மையும் வாழ்த்துதலோடும் பெருமையோடும் நோக்கித் தம் பெரியோரெனக் கொண்டாடும்வண்ணம், பரமபதியின் திருவருளால் இங்குள்ள ஒவ்வொருவரும் சிறப்பும் பெருமையும் பொருந்திய நம் முன்னோர்களின் அரிய செயல்களையும் மிஞ்சத்தக்கனவான பெருங் காரியங்களைச் செய்வார்களாக.

---

## VI

*இராமநாதபுரத்துக்குப் பிரயாணம்—சேதுபதியுடன் ஸல்லாபம்—வந்தநோபசாரத்திற்குப் பிரதி வசனம்—ராமேசுவர யாத்திரை—ஆலயத்தில் பிரசங்கம்—ஸ்தம்ப ஸ்தாபனம்—ராமநாதபுர விஜயம்—வந்தநோபசாரம்—அதற்கு ஸ்வாமிகளின் பிரதி வசனம்—பரமகுடி—மானமதுரை—மதுரை—திரிசிரபுரம் — கும்பகோணம்—மாயவரம்—சென்னைக்குப் பிரயாணம்.*

யாழ்ப்பாணத்துப் பிரசங்கம் முடிந்தவுடன் இந்தியாவுக்குப் புறப்படும்பொருட்டு வேண்டிய ஸந்நாஹங்கள் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்துக்கும் பாம்பனுக்கும் ஐம்பது மைல்தூரம். அவ்வழியே செல்வதற்காக ஒரு தோணியை வாடகைக்குப் பேசி இராத்திரி ஒரு மணிக்குப் புறப்பட்டார்கள். காற்று சுகமாய் வீசினமையால் பிரயாணம் மிக்க மநோஹரமாயிருந்தது. மறுநாள் பகற்பொழுதுக்குச் சற்று முன் பாம்பனை யடைந்தார்கள்.

ஆனால், ஸ்வாமிகள் 3 மணி வரையிலும் படகைவிட்டிறங்கவில்லை. மாலை 6 மணிக்கு இராமநாதபுரத்து ராஜா அவர்கள் ஸ்வாமிகளைத் தம் ஸம்ஸ்தானத்துப் படகிலே எதிர்கொண்டுபசரித்து அழைத்துச் சென்றார். அச் சமயம் யதிபதியும் நரபதியும் மெய்யன்புமேலிட அளவளாவியிருந்த அரிய காட்சியானது கண்டோர் உள்ளத்தைக் கரைக்கத் தக்கதாயிருந்தது. ஸேதுபதி மன்னர் ஸ்வாமிகளை, 'என் பிரபுவே!' என்றழைத்து, அவரது திருவடிகளிலே மலர் மாரி பொழிந்தார். ஸ்வாமிகள் படகில் ஏறினவுடனே ஸேதுபதி மன்னர் பரிவார சகிதமாய் ஸ்வாமிகளின் சேவடிகளிலே அடிசாய்ந்த மரம்போல் விழுந்து வணங்கினார். சிகாகோவுக்குப் போகவேண்டுமென்கிற எண்ணத்தை முதன்முதல் ஸ்வாமிகளுக்கு உண்டாக்கி அதைச் செய்து முடிக்கும்படி அவரைத் தூண்டித் துணைநின்றவர் பாஸ்கர ஸேதுபதி மன்னரேயாதலால், ஸ்வாமிகள் தாம் பாரத பூமியில் வந்திறங்கியவுடன் அம் மன்னரையே முதலில் சந்திக்க வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டதாகச் சொன்னார். அவர் ஏறியிருந்த படகு அரைமணி நேரத்திலே கரை சேர்ந்ததும், அங்கே அவர் வரவை ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பாம்பன் நகரவாசிகள் லங்கை நீராவிக் கப்பல் சங்கத்தாரின் ஏஜண்டாகிய நாகலிங்கம்பிள்ளை யவர்களை முன் வைத்துக்கொண்டு அச் சமயத்திற்கென அழகாய் அமைத்திருந்த பந்தரிலே ஸ்வாமிகளை ராஜோபசாரதிவ்யோபசாரத்துடன் எதிர்கொண் டழைத்துக் கௌர

வித்தார்கள். அப்பொழுது மிஸ்டர் எஸ். கே. நாயரும் ஸேதுபதி மன்னரும் ஸ்வாமிகள் க்ஷேமமாய் ஜன்மதேசத்துக்குத் திரும்பிவந்த விஷயமாய் அவருக்கு நல்வரவு கூறிப் பிரசங்கித்தார்கள். மன்னரவர்கள் ஜனங்களை நோக்கி,—"பதினைந்து தினங்களுக்கு முன் உங்கள் வீதிகளிலும் சாலைகளிலும் திருவிளக்குகள் வைக்குமாறு நீங்கள் பெற்ற லௌகிகப் பிரகாச பாக்கியமானது பின் வரப்போகும் ஞானப்பிரகாசத்துக்கு அறிகுறியாய் அமைந்தது" என்றும், "அந்த ஞானதீபமே இன்று உங்கள் உள்ளங்களையும் ஆத்மாக்களையும் ஜ்வலிக்கச் செய்ய வந்திருக்கிறது" என்றும் சொன்னார். பிறகு, இங்கிலீஷில் வந்தனோபசார பத்திரிகை வாசிக்கப்பட்டது. அதை ஸ்வாமிகள் அங்கீகரித்துச் செய்த சிறந்த பிரஸங்கத்தை அங்குக் கூடியிருந்த யாவரும் தமேகத் தியானமாய்க் கேட்டு மகிழ்ந்தார்கள். அப் பிரசங்கம் வருமாறு:—

"எமது புண்ணியம் வாய்ந்த தாய்நாடு சமயநெறிக்கும் தத்துவஞானத்துக்கும் தாயகம்; பிரம்மாநுபூதிச் செல்வர்களின் பிறப்பகம்; வைராக்கியத்துக்குக் குலவீடு. தொன்றுதொட்டு இற்றைநாள்வரை உத்தம புருஷார்த்தம் விளங்கித் தழைத்துவரும் நாடு இதுவேயன்றி வேறெதுவுமன்று.

"நான் மேலைத் தேசங்களுக்குப் போயிருக்கிறேன் பற்பல நாடு நகரங்களுக்குச் சென்று அங்குள்ள பற்பல ஜாதியார்களையும் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த ஒவ்

வொரு ஜாதியாரும் ஒரு விசேஷமான கருத்தைத் தம் வாழ்க்கைப் பயனாகக் கொண்டு அதனை யடையும்பொருட்டே தம் வாழ்நாள் முழுவதும் முயன்று வருகின்றார்கள். நம் இந்தியாவுக்குள்ள விசேஷ கருத்தோ ராஜ்ய தந்திரமன்று, படைத்திறமன்று, வாணிப மேன்மையன்று, அபாரமான யந்திரசக்திச் சிறப்புமன்று. நமக்குள்ள செல்வச் சிறப்பெல்லாம் சமயநெறியே. இனியும் அச் சமய நெறியையே செல்வமாகப் பாராட்டிப் போற்ற எண்ணங்கொண்டிருக்கிறோம். தத்துவஞானமே பாரத வர்ஷத்தின் குலதன்மாம்.

"புஜபல பராக்கிரமம் பெருமை தங்கியதே. விஞ்ஞான நூல் வல்லமையால் யந்திரங்களில் விளங்கும் புத்தி நுட்பமும் அற்புதமானதே. ஆயினும், அவற்றுள் ஒன்றாவது ஆத்ம பிரபாவத்தால் உலகத்துக் குண்டாகும் பிரயோஜனத்துக்கு நிகராகமாட்டாது.

"ஹிந்துக்கள் சுறுசுறுப்பற்றவர்களெனச் சிலர்சொல்லிவருகிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்வதில்லை. நமது பூர்வ சரித்திரத்தைப் பார்த்தால் இதன் உண்மை வெளிப்படும். ஊக்கத்திலும் உழைப்பிலும் நாம் எந்த ஜாதியாருக்கும் குறைந்தவ ரல்லோம். பண்டைக்காலந் தொடங்கிப் பெருமை வாய்ந்த நம் ஜாதியானது இன்றுவரையில் உலகத்தில் அழியாமல் ஜீவித்திருப்பதே அதற்கு சாக்ஷி. நம் நாட்டின் ஊக்கத்தையும் உழைப்பையும் நமது மேலான ஞான விசாரத்திற் பரக்கக் காணலாம்.

"ஞானதாகம் கொண்ட உலகமனைத்தும் பாதகண்டத்தையே ஆவலாயெதிர்பார்த் திருக்கின்றமையால், பாதகண்டமானது மற்ற நாட்டாருக்கெல்லாம் உபகாரம் செய்ய வேண்டிய சமயம் வந்திருக்கின்றது. மனிதருக்கு வேண்டிய உத்தம புருஷார்த்தம் இங்கேதான் உள்ளது. அது நமது ஸம்ஸ்கிருத ஞான சாஸ்திரங்களிலேயே இருக்கின்றமையால், அதை நீ அறிந்துகொள்ள மேற்றிசைப் புலவர்கள் இப்பொழுது பிரயாசைப்பட்டு வருகிறார்கள்.

"ஹிந்து சமய சித்தாந்தத்தைப் பிரசாரம் செய்ய எந்த ஆசாரியரும் இதற்கு முன் வெளி நாடுகளுக்குச் சென்றதில்லை. இப்பொழுதோ அற்புதமான மாறுதல் நடந்து வருகிறது. "தர்மம் குன்றி அதர்மம தலையெடுக்கும் பொழுது நான் ஜகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு அடிக்கடி அவதரிக்கின்றேன்." என்று கண்ணன் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றா ரல்லவா? உலகத்திலுள்ள மற்றைய மதங்களிற் காணப்படும் ஆத்ம நித்தியத்துவம், அறநெறி இயல முதலியனவெல்லாம ஏகேனும் ஒருவிதமாய் நம் சாஸ்திரங்களினின்றே எடுத்துக் கொள்ளப்பட்டன என்று இக்காலத்தில் செய்துவரும் மத ஆராய்ச்சியால் ஏற்படுகின்றது.

"மெலியாரை வலியார் வருத்துவதும், வழிப்பறியும், வன்கண்மையும் இப் பத்தொன்பதா நூற்றாண்டின் இறுதியில் இருந்ததுபோல் வேறெக்காலத்தும் இருந்ததில்லை.

ஆசையை அடக்கினாலன்றி மோக்ஷமில்லையென்றும், பிரகிருதி பந்தத்துக் குட்பட்டிருக்கும் வரையில் எவனுக்கும் முக்தி யில்லையென்றும், நம்முள் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கிறதல்லவா? இந்த உண்மையை உலகத்திலுள்ள மற்ற ஜாதியார்கள் இப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சமாய் அறிந்துவருகிறார்கள். இந்த உண்மையை யறிந்துகொள்ளும் பக்குவம் சிஷ்யனுக்கு உண்டான வுடனே அவனுக்குச் சற்குருவின் திருவாக்கு வந்துதவுகின்றது. அபார கருணாநிதியான பகவான் தன் குழந்தைகளுக்குச் சமயம் பார்த்து ஸஹாயம் செய்கிறார். அவரது கருணைக்கு எப்பொழுதும் தடையில்லை. அது எல்லாக் கொள்கைகளிலும் எக்காலமும் பிரவஹித்துக்கொண்டிருக்கிறது. எமது பகவானே எல்லாச் சமயங்களிலும் பகவானாய் விளங்குகின்றவர். 'சமயகோடிகளெலாம் தந்தெய்வமெந்தெய்வ' மெனப் போற்றும்படி விளங்குவது நம் கடவுளே. இந்தக் கருத்து பாரதவர்ஷத்துக்கே யுரியதென்று நான் வீரவாதம் செய்கின்றேன். உலகத்திலுள்ள ஏனைய சமய நூல்களில் இக் கருத்தை யாரேனும் எடுத்துக் காட்டுங்கள் பார்ப்போம்.

''ஹிந்துக்களாகிய நமக்குத் தெய்வச் செயலால் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலையில் நாம் மிகுந்த ஜாக்கிரதையோடும் உத்தரவாதம் மேற்கொண்டும் நடக்கவேண்டியவர்களாயிருக்கின்றோம். மேற்றிசை ஜாதியார்கள் ஆத்தியாத்ம ஞானத்தில் நம் ஸஹாயத்தைப் பெறும்பொருட்டு

வருகின்றார்கள். உலகத்தோருக்கு உத்தம புருஷார்த்தத்தை வெளிப்படுத்துதற் குரிய ஸகல ஸந்நாஹத்துடனும் ஸித்தமா யிருக்கவேண்டிய தர்மபாரமானது பாரத வர்ஷத்திற் பிறந்த மக்களையே பொறுத்திருக்கின்றது. நாம் பெருமை பாராட்டக் கூடிய அம்சம் ஒன்று நம்மிடம் இருக்கின்றது. அஃதென்னவெனில்:— முற்காலத்தில் மலைத் துர்க்கங்களில் வசித்து, அங்கிருந்து அடிக்கடி வெளிக்கிளம்பி வழிப்போக்கர்களின் மேல் விழுந்து கொள்ளையடிப்பதைத் தொழிலாகவுடைய கள்ளர் ஜாதிப் பாளையக்காரர்களையே மற்ற நாடுகளிலுள்ள பெரியோரும் நல்லோரும் தம் முன்னோர்களென நிலை நாட்டிப் பெருமை பாராட்டி அதனையே தமக்கோர் கௌரவமெனக் கருதா நிற்க, ஹிந்துக்களாகிய நாமோ, கிரி குகைகளில் வசித்துக் கந்தமூல பலாதிகளை யுண்டு பகவத்தியானபராயணர்களா யிருந்த சிரேஷ்டர்களின் சந்ததியாரென நம்மைச் சொல்லிக்கொள்வதில் பெருமை பாராட்டுகின்றோமல்லவா? தற்காலம் நாம் தாழ்ந்து தீன ஸ்திதிக்கு வந்திருக்கலாம். ஆனால், நாம் எவ்வளவு தீன ஹீன ஸ்திதியிலிருந்தபோதிலும், நாம் மாத்திரம நம் சமயத்தை முன்னிட்டு உண்மையான சிரத்தையோடும் பக்தியோடும் உழைக்கத் தொடங்குவோமாயின், நாம் சீரும் சிறப்பும் பெறுவோ மென்பது திண்ணம்.

"நீங்கள் தயவுகூர்ந்து உள்ளன்புடன் எனக்களித்த நல்வரவின்பொருட்டு நான் ஹிருதய பூர்வமாகச் செய்யும்

வந்தனங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். ஸ்ரீ ஸேதுபதி மன்னர் என்னிடம் வைத்துள்ள அன்பு விஷயமாய் எனக்குள்ள நன்றியறிதலை இவ்வளவென் றெடுத்துச் சொல்ல என்னால் முடியவில்லை. என்றாலும் என் மூலமாயும் ஏதாவது நற்காரியம் நடந்திருந்தால், அதில் ஒவ்வொரு அணுவுக்கும் பாரதவர்ஷமானது அம் மன்னருக்கே கடன்பட்டிருக்கின்றது. ஏனெனில் நான் சிகாகோவுக்குப் போக வேண்டுமென்கிற எண்ணம் அவருக்கே முதலில் உண்டாயிற்று. பிறகு அக்கருத்தை யென் தலையிலேற்றி அதைச் செய்து முடிக்கும்படி ஓயாமல் என்னை வற்புறுத்தியதும் அவரே. அவரே இப்பொழுதும் என் பக்கலிலே நின்று, முன்னிருந்த உற்சாகம் சிறிதும் குறையாதவராய், முன் நடந்ததை விட பெரிய பெரிய காரியங்களெல்லாம் இனி நடக்கவேண்டுமென்று இன்னும் ஆசை கொண்டிருக்கிறார். இவரைப் போன்ற அரசர் இன்னும் அறுவர் நம் அருமைத்தாய் நாட்டில் சிரத்தைக்கொண்டு அதன் பாரமார்த்திக க்ஷேமத்தின் பொருட்டுப் பாடுபட வேண்டு மென்பதே என் விருப்பம்.”

இந்தப் பிரசங்கம் முடிந்தவுடன், ஸ்வாமிகள் வண்டியேறி ராஜாவின் பங்களாவை நோக்கிச் செல்லலும், மன்னரும் மற்றவரும் ஸ்வாமிகள் ஆரோஹணித்திருந்த சகடத்தை யிழுத்துச் சென்றனர். மறுநாள் ஸ்வாமிகள் ஸ்ரீ ராமேசுவர திவ்யாலயத்துக்குச் சென்றார். அவர் அதற்கு அஞ்சு வருஷத்துக்கு முன் அதே ஸ்தலத்திற்

ருப் பல யாத்திரிகர்களுள் தாமும் ஒருவராய்க் கால் நடையாய்ச் சென்றிருந்தது இப்பொழுது அவர் ஞாபகத்துக்கு வந்தது. முன் சென்றிருந்தபொழுது அவர் ஒருவருக்கும் தெரியாது. இப்பொழுதோ என்ன மரியாதை! என்ன உபசாரம்! ஐயன் திருவருள் இருந்தவாறென்னே! ஸ்வாமிகள் ஆலயத்தைச் சமீபித்தவுடன் கோயில் ஸ்தானிகர்கள் யானை, ஒட்டகம், குதிரை மங்கள வாத்தியம், ஆலவட்டம் முதலிய மரியாதைகளுடன் அவரை எதிர்கொண்டழைத்து வர, யாவரும் கோயில் வந்து சேர்ந்தனர். ஸ்வாமிகள் அங்கே அன்பர்க்கெளியனாய் எழுந்தருளியிருக்கும் அமலனைத் தரிசித்தார். ஸ்வாமிகளுக்கும் அவரது சிஷ்யர்களுக்கும் கோயில் திருவாபரணங்கள் காட்டப்பட்டன. பின்னர் ஸ்வாமிகளைக் கோயிலைச் சுற்றிப் பிரதக்ஷிணமாய் அழைத்துச் சென்று அங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் முதலிய சிற்ப விசித்திரங்களைக் காட்டினர். அப்பொழுது அங்கே ஜனங்கள் பெருங் கூட்டமாய்த் திரண்டிருப்பதைப் பார்த்து, அவர்களின் பொருட்டு ஓர் பிரசங்கம் செய்யுமாறு சிலர் வேண்டிக்கொள்ள, ஸ்வாமிகளும் அதற்கிசைந்து, உபாசனம் என்னும் விஷயத்தைப்பற்றிப் பின்வருமாறு பேசினார். அனந்த நாகலிங்கம் பிள்ளையவர்கள் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னார். அந்தப் பிரசங்கம் வருமாறு:—

"சமயவொழுக்கமென்பது உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான

பக்தியே யன்றி வெறும் வெளிச் சடங்குகளல்ல. ஒருவன் மனமொழி மெய்களில் பரிசுத்தனை யிருந்தாலன்றி, அவன், கோயிலுக்குள் வந்து சிவனைத் தரிசித்தலாற் பயனில்லை. மனத்திலும் மெய்யிலும் பரிசுத்தமாய்ப் பிரார்த்திப்பவர்களுக்கே சிவபெருமான் பிரஸந்நராகிறார். அபரிசுத்தமான மனத்துடன் பிறருக்குத் தத்துவோபதேசம் புரிய வருபவர்களின் கதி துர்க்கதியே. பஹிர்முக உபாசனம் அந்தர்முக உபாசனைக்குக் கேவலம் அடையாளமாய் அமைந்திருக்கிறது. அந்தர்முக வுபாசனையும் அகத்தூய்மையுமே உண்மையானவை. அவை யின்றேல் வெளிப் பூசையால் பயன் ஒன்றுமில்லை. ஆகவே, நீங்கள் யாவரும் இதனைக் கருத்தில் வைக்க வேண்டும். தற்காலத்திலே கலியுகத்தின் மகிமையால் ஜனங்கள் தாம் எதை வேண்டுமாயினும் செய்யலாமென நினைக்கும்படியான தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டார்கள். புண்ய க்ஷேத்திரத்துக்குப் போய்விட்டால் தங்கள் பாவமெல்லாம் போய்விடுமென்று நினைக்கிறார்கள். ஒருவன் அபரிசுத்தமாய்க் கோயிலுக்குள் போவானையாகில், அவன் அங்குள்ள பாவங்களையும் மூட்டைக் கட்டிக்கொண்டு முன்னினும் அதிகப் பாவச் சுமையுடன் வீட்டுக்குத் திரும்பிப் போவான். தீர்த்தமாவது பரிசுத்த பொருள்களும் புண்ணிய புருஷரும் நிறைந்துள்ள விடம். ஆனல், ஓரிடத்தில் புண்ய புருஷர் இருப்பாராயின், அங்கே ஒரு கோயில்கூட இல்லாவிடினும் அது தீர்த்தமே. அபரிசுத்தர் உள்ளவிடத்தில் ஆயிரம் கோவில் இருந்தாலும் அதன்

தீர்த்த மகிமை போய்விடும். அன்றியும், தீர்த்த மகிமையுள்ள ஸ்தலத்தில் வசிப்பது மிகக் கடினம். ஏனெனில், சாதாரண இடங்களில் செய்யப்படும் பாவம் எளிதில் விமோசனமாகும்; தீர்த்த மகிமையுள்ள ஸ்தலத்தில் செய்த பாவமோ கொஞ்சத்தில் தீராது. ஆகவே, சித்த சுத்தியும் பரோபகாரமுமே சகலமான உபாசனையின் சாரமுமாம். வறியோரிடத்திலும், மெலிந்தோரிடத்திலும் நோயால் வருந்துவோரிடத்திலும் எவன் சிவனைப் பார்க்கின்றானோ, அவனே உண்மையான சிவபக்தன். அவன், விக்கிரகத்தில் மாத்திரம் சிவனைப் பார்ப்பவனாயிருந்தால் அவன் பூஜை ஆரம்ப தசையிலுள்ளதே, பக்குவமானதன்று. எவன் ஜாதி மத குல பேதமின்றி ஓர் ஏழை மனிதனிடத்திலாவது சிவஸ்வரூபத்தைக் கண்டு அவனுக்குப் பாடுபட்டு உதவி புரிகின்றானோ, அவனிடத்தில் சிவபிரானுக்கு உண்டாகும் அன்பைப்போல் ஆலயங்களில் மாத்திரம் சிவனைக் காண்பவனிடத்தில் உண்டாவதில்லை.

"ஒரு பணக்காரனுடைய தோட்டத்தில் இரண்டு தோட்டக்காரர் இருந்தனர். அவர்களில் ஒருவன் பெருஞ்சோம்பேறி, வேலை செய்வதே யில்லை. ஆனால், எஜமானன் தோட்டத்துக்குள் வந்துவிட்டால், அந்தச் சோம்பேறி எழுந்து நின்று கை கட்டிக்கொண்டு, "என் எஜமான் முகம் எவ்வளவு அழகாய் இருக்கிறது?" என்று கொண்டாடி அவன் முன் கூத்தாடுவான். மற்றொரு தோட்டக்காரனோ அதிகமாய்ப் பேசமாட்டான். கஷ்டப்

பட்டு வேலை செய்து சகலவித பழங்களும் காய்கறி பதார்த்தங்களும் பயிராக்கி, அவற்றைத் தன் தலைமேல் தூக்கிக்கொண்டு வெகு தூரம் நடந்து எஜமான் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பான். இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் எஜமானனுக்கு எவன்மேல் அதிக பிரீதியிருக்கும்? கஷ்டப்பட்டு வேலை செய்கிறவனிடத்தி லல்லவா? அதுபோல், சிவனே அந்த எஜமானன். இவ்வுலகமே அவன் தோட்டம். இதிலுமே இருவகை வேலைக்காரர்கள் இருக்கின்றார்கள். ஒருவகை வேலைக்காரர்கள் சோம்பேறிகளாயும் கபட வேஷதாரிகளாயு மிருந்து, யாதொரு வேலையும் செய்யாது, சிவனுடைய கண்களையும் மூக்கையும் மற்றும் இதுபோன்றவைகளையுமே எப்பொழுதும் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். மற்றொருவித வேலைக்காரர்களோ பரமசிவனுடைய பிள்ளைகளுள் ஏழையாயும் பலஹீனமாயு முள்ளவர்களையும் மற்றுமுள்ள பிராணிகளையும் பாதுகாத்து வருகின்றார்கள். இவ்விருவகையாருள் யாரிடத்தில் சிவனுக்கு அதிக பிரீதி யிருக்கும்? அவரது பிள்ளைகளுக்காக உழைப்பவரிடத்தில்தானே? ஆகவே பிதாவைச் சேவிக்க விரும்புகிறவன் முதலில் அவன் பிள்ளைகளைச் சேவிக்கவேண்டும். அவ்வாறே, சிவனைச் சேவிக்க விரும்புகிறவர்கள் அவரது பிள்ளைகளுக்கு அதாவது உலகத்துக்கு உபகாரமாய் உழைக்கவேண்டும். "என் தொண்டர்களுக்கு யார் தொண்டு செய்கிறார்களோ அவர்களே எனக்குச் சிறந்த தொண்டர்கள்," எனக் கண்ணன் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்; அதை நீங்கள் கருத்தில் வைக்கவேண்டும்.

உங்கள் மனம் பரிசுத்தமா யிருக்கவேண்டும். 'தேஹி' என்று வருபவர்களுக்கு உங்களா லியன்றதைக் கொடுத்துதவுங்கள் அதுதான் புண்ய கர்மம். அப் புண்ய கர்மத்தின் பிரபாவத்தால் சித்த சுத்தி யுண்டாகும்; சித்த சுத்தி யுண்டானால், சர்வாந்தர்யாமியாயுள்ள சிவன் பிரத்தியக்ஷமாவார். அவர் எப்போதும் எல்லாருடைய ஹிருதயங்களிலும் இருக்கின்றார். கண்ணாடியில் மண்ணும் மாசும் படிந்திருந்தால், நம் முகத்தை அதில் நன்றாய்ப் பார்க்க முடியாதல்லவா? அதுபோலவே, நமது ஹிருதயமாகிற கண்ணாடியின்மேல் அஞ்ஞானம், துஷ்டத்தன்மை என்னும் மண்ணும் மாசும் படிந்திருக்கின்றன. நம் காரியத்தையே முதலில் கருதுவதான சுயநலம் பாராட்டுதல் உண்டே—அது மகா பாபம். நான் முதலில் உண்ணவேண்டும், மற்றவர்களுக் குள்ளதைவிட அதிக பணம் எனக் கிருக்கவேண்டும், எல்லாம் எனக்கே வேண்டும்," என்றும், 'எல்லாருக்கும் முன் நானே சுவர்க்கத்துக்குப் போகவேண்டும், நானே முக்தியடையவேண்டும்," என்றும் நினைக்கின்றவனே, சுயநலம் பாராட்டுகின்றவனாம். சுயநல மற்றவன் சொல்வதே—"நான் எல்லாரினும் கடையனா யிருப்பேன், எனக்குச் சுவர்க்கங்கூட வேண்டாம்; நரகத்துக்கு வேண்டுமாயினும் போகிறேன்; அங்குப் போவதால் மற்றவர்களுக்கு என்னால் உபகாரமா யிருக்குமாயின் அதுவே எனக்குப் போதும்," என்றேயாம். இந்தத் தன்னய மின்மையே உண்மைச் சமய நெறியின் அறிகுறியாம். தன்னய மின்மை ஒருவனிடத்தில்

அதிகமாக ஆக, அவனுக்குச் சிவஞானமும் திருவருளும் மேன்மேலும் அதிகரிக்கும். அவன் படித்தவனாயினும் படியாதவனாயினும், அவன் தெரிந்தே செய்யினும் தெரியாமலே செய்யினும், அவனே எல்லாரையும்விட அதிகமாகச் சிவசாமீப்யம் பெற்றவனாவான். சுயநலப்பிரியன் எத்தனை ஆலயங்களுக்குப் போனாலும், எத்தனை ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தாலும், தேகமெல்லாம் திருநீறு பூசிக்கொண்டாலும், அவன் இன்னும் சிவனுக்கு வெகு தூரத்திலேயே இருப்பவனாவான்."

இந்தத் திவ்யோபந்யாஸத்தை அனைவரும் செவிமடுத்துச் சிந்தை மகிழ்ந்து கரகோஷம் செய்தார்கள். அடுத்த நாள் பாஸ்கரபூபதி யவர்கள் ஸ்வாமிகளின் வரவைப் பெருமைப் படுத்தவேண்டிப் பல்லாயிரம் ஏழை ஜனங்களுக்கு அந்ந வஸ்திரங்கள் அளித்து, ஸ்வாமிகள் மேல்நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து முதன்முதல் பாம்பன் என்கிற இடத்தில் இறங்கியபடியால் அந்த விசேஷத்தைப் பெருமைப் படுத்தவேண்டி, அந்த ஸ்தானத்தில் அடியில் வரும் சாஸனம் அமைந்த மஹா ஸ்தம்ப மொன்று ஏற்பாடு செய்தனர். அச் சாஸனம் வருமாறு:—

ஸத்யமேவ ஜயதே

ஸ்ரீமத் பூஜ்யபாத விவேகாநந்த ஸ்வாமிகள்

ருடகோளார்த்தத்திலே

வேதாந்த ஸித்தாந்தத்தைப் பரவச் செய்யும்பொருட்டு

லோகோபகாரமாய் உத்தம கைங்கரியம் புரிந்து

அங்கே அத்விதீயமான காரியஸித்தியுடன் அழியாப்புகழ்
பெற்று, ஜயசீலராய் விளங்கி, அங்கிருந்து புறப்பட்டு
ஆங்கில சிஷ்யர் புடைசூழப் பாரத பூமியிலே
முதன்முதலாய் 1897ஹு ஜனவரிமீ 26உயன்று திருவடி
வைத்த புண்ய ஸ்தலத்தைக் காட்டும் இந்த
ஞாபக ஸ்தம்பம்

ராமநாதபுரம் பூபாலராகிய
ஸ்ரீ பாஸ்கர ஸேதுபதியால்
நாட்டப்பெற்றது.

பிறகு யாவரும் கரை வழியாய்ப் புறப்பட்டு ஒரு தர்ம சத்திரத்தில் வந்திறங்கி அங்கே போஜனம் செய்து கொண்டு திருப்புல்லாணி யடைந்து, அங்கிருந்து ராமநாத புரம்போய்ச் சேர்ந்தார்கள். அங்கே ஓர் அழகிய ஏரிக்கரை யின்மேல் பாஸ்கர சேதுபதி: ஸ்வாமிகளைப் பரிவார சகித மாய் எதிர்கொண்டு உபசரித்து அந்த ஸம்ஸ்தானத்தின் பிரதான கனவான்கள் பலரை அவருக்குப் பரிசயம் செய் வித்தார். இவர்கள் கோஷ்டியாய்ச் சேர்ந்து வருவதை முன்னதாய்த் தெரிவிக்கும் பொருட்டுப் பீரங்கி வெடி தீர்க்கப்பட்டது. பிறகு பாணவேடிக்கையுடன் ஸ்வாமிகளை ஸம்ஸ்தானத்து வண்டியில் ஆரோஹணிக்கச் செய்து, அதில் அரசனது அங்கரக்ஷகர்களையும் நிறுத்தி, அரசன் பாதசாரியாய் வழிகாட்டிக்கொண்டு முன்னே செல்ல, யாவரும் ஊர்கோலமாய்ச் சென்றனர். வீதியின் இருபாரி சத்திலும் தீவர்த்திகள் ஜொலித்தன. நாட்டு வாத்தியமும்

ஐரோப்பிய வாத்தியமும் அந்த திவ்யோத்ஸவத்தை இன்னும் அதிகமாய்ச் சிறப்பித்தன. "பாருங்கள் வெற்றி வீரன் வருகிறான்" என்று பொருள்படும் "See The Conquering Hero Comes" என்கிற ஆங்கிலேய கீர்த்தனத்தை இங்கிலீஷ் வாத்தியங்கள் முழக்கின. பாதிவழியானதும் ஸ்வாமிகள் மன்னரது வேண்டுகோளின்படி திவ்யமான ஸமஸ்தானப் பல்லக்கொன்றில் ஆரோஹணித்துக் கொள்ள, அப்படியே சங்கர விலாசம் போய்ச் சேர்ந்தார்கள். ஸ்வாமிகள் சிறிது சிரம பரிஹாரம் செய்து கொண்டவுடன், அவரை அங்குள்ள பெரிய சபா மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல, அங்குக் கூடியிருந்த ஜனங்கள் சந்தோஷத்தாற் கரகோஷம் செய்தனர். பாஸ்கரபூபதி ஸ்வாமிகளைப் பெரிதும் கொண்டாடிச் சபையின் காரியத்தைத் துவக்கித் தம் சகோதரராகிய ராஜா தினகர சேதுபதியை வந்தனோபசாரப் பத்திரிகையை வாசிக்கும்படி பணிக்க, அவரும் அதை முறைப்படி வாசித்து, அந்தப் பத்திரிகையைத் திவ்யமான வேலைப்பாடமைந்த வெள்ளி முலாம் பூசிய பெட்டியில் வைத்து ஸ்வாமிகளுக்கு ஸமர்ப்பித்தார். அவ் வந்தனோபசார பத்திரிகையின் சங்கிரஹம் வருமாறு:—

"ஸ்ரீ பரமஹம்ஸ யதிராஜ திக்விஜய கோலாஹல ஸர்வமத ஸம்ப்ரதிபன்ன பரமயோகீஸ்வர ஸ்ரீமத் பகவத் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ கரகமல ஸஞ்ஜாத ராஜாதிராஜ சேவித ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் திவ்ய ஸங்

நிதியில் செய்துகொள்ளும் விநய பூர்வகமான விஞ்ஞாபன மாவது:—

"சேதுபந்த ராமேசுவரமென்றும் ராமநாதபுரமென்றும் சொல்லப்படும் இந்தப் புராதன ஸம்ஸ்தான வாசிகளாகிய அடியோங்கள் தேவரீரை எங்கள் தாய் நாட்டிற்கு ஹிருதய பூர்வமாய் நல்வரவு கூறி யழைக்கின்றோம். தேவரீர் இந்த நாட்டில் வந்திறங்கியதும், வீரசூடாமணியும் எங்கள் ஸ்வாமியுமாகிய ஸ்ரீ ராமசந்திர பகவான் தம் திருவடிச் சுவடுவைத்துப் புனிதமாக்கிய இப் புண்ணிய க்ஷேத்திரத்திலே தேவரீரை முதல் முதல் சேவிக்கும்படி கிடைத்தது எங்கள் அபூர்வமான பாக்யமென்றே கருதுகின்றோம்.

"எமது மேன்மை தங்கிய பிராசீன மதத்தின் திவ்ய குணங்களையும் சிறப்பியல்பையும் மேலைநாட்டு மேதாவிகளுக்கு விளக்கமாய் எடுத்துரைப்பதில் யாவரும் கொண்டாடும்படியாய்த் தேவரீர் செய்த முயற்சிகள் ஒருவரும் எதிர்பாராதவண்ணம் கைகூடிய விசேஷத்தை நாங்கள் மிகுந்த பெருமையுடனும் மனமகிழ்ச்சியுடனும் கவனித்திருக்கிறோம். ஹிந்துமதமே ஸர்வ ஸம்பிரதிபன்னமான சமயத்தின் லக்ஷணங்களெல்லாம் பொருந்தப்பெற்றதென்றும், ஸர்வ தேசங்களினு முள்ள ஸர்வ ஜாதி ஆடவர் பெண்டிரின் பக்குவ பேதங்களுக் கேற்ப அமைந்துள்ளதென்றும், ஐரோபாவிலும் அமெரிக்காவிலும் கல்வி கேள்விகளிற் றேர்ந்த சபையோர்களுக்குத் தேவரீர் இணை

யற்ற வாக்கு வல்லபத்துடன் அனைவரும் அறிந்துகொள்ளக்கூடிய எளிய மொழியில் எடுத்துரைத்தீர்கள். பரோபகாரம் செய்யவேண்டுமென்னும் பரிசுத்த நினைவுடன் தேவரீர் எவ்வளவோ கஷ்டங்களுக்குள்ளாகி, ஸத்தியமும் சாந்தியும் பொருந்தி விளங்கும் திவ்ய மங்களத் திருவாக்கை வெளிப்படுத்தும் பொருட்டுக் கரையற்ற கடல்களையும் மஹா சமுத்திரங்களையும் கடந்து சென்றீர்கள். தேவரீர் உபதேசத்தாலும் அநுஷ்டானத்தாலும் ஸர்வஜன ஸஹோதரத்துவத்தின் சாத்தியத்தன்மையையும் முக்கியவியல்பையும் மெய்ப்பித்தீர்கள். அவ்வெல்லாவற்றையும் விட மேலான இன்னொரு பிரயோஜனமும் நிகழ்ந்திருக்கிறது. அதாவது, இந்தியாவில் சுய மதத்தில் சிரத்தையற்றிருந்தவர்கூடத் தேவரீரது காரியங்களின் பெருமையைக் கேட்டதுமுதல் தங்கள் உறக்கத்தை உதறித் தள்ளி விழித்தெழுந்து, தம் முன்னோர்கள் அநுஷ்டித்த மதத்தின் பெருமையையும் மேன்மையையும் உணரத்தொடங்கி, அதுமுதல் தங்கள் மதிப்பில்லா அருமைச் சமயத்தை ஆராய்வதிலும் அநுஷ்டிப்பதிலும் உண்மையான சிரத்தாபக்திகள் காட்டி வருகின்றார்கள்.

"கீழ்நாடும் மேல்நாடும் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் தேவரீர் செய்யும் பரோபகாரமான கருமத்தின் விஷயத்தில் எங்கள் நன்றியறிதலைத் தக்கவாறு எடுத்துரைக்க நாங்கள் சக்தியற்றவரா யிருக்கின்றோம். தேவரீரது சிரத்தையுள்ள சிஷ்யர்களுள் ஒருவராகிய எங்கள் ராஜாவி

னிடத்தில் தேவரீர் எப்போதும் காட்டிவரும் மாறாக் கருணையைப் பற்றிப் பேசாமல் இந்த வந்தனோபசாரத்தை முடிப்பது தகுதியன்று. தேவரீர் கருணைகூர்ந்து இந்த ராஜ்யத்திலே திருவடிவைத்த கிருபையால் அவருக்கு உண்டாயிருக்கும் கௌரவத்தையும் பெருமையையும் இவ்வளவென் றெடுத்துரைக்க முடியாது. முடிவில் தேவரீர் மேற்கொண்ட இந்த நற்கருமத்தை இனிது நடத்துமாறு தேவரீருக்குத் தீர்க்காயுளும், தேகாரோக்கியமும், திடகாத்திர வன்மையும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| ராமநாதபுரம்<br>1897௵<br>ஜனவரிமீ 25உ | தேவரீரது சரணாரவிந்தங்களில்<br>பக்திபூண்டொழுகும்<br>சிஷ்யர்களும், சேவகர்களும். |

இந்தப் பத்திரிகைக்குப் பிரதிவசனமாக ஸ்வாமிகள் செய்த பிரஸங்கத்தின் ஸாராம்சமாவது:—

"வெகு காலமாய்த் தூங்கிக்கொண் டிருந்த நம் நாடாகிய பாரத மாதா இப்பொழுது உறக்கத்தை உதறியெறிந்து கண்விழித் தெழுந்துவிட்டாள். இனி அவளைத் தடைப்படுத்த யாவராலும் ஆகாது. இனி அவள் ஒருகாலும் தூங்கப் போகிறதில்லை. இனி அவளை இழுத்துப் பிடிக்க முடியாது.

நமது தாய் நாட்டின்பொருட்டும் மதத்தின் பொருட்டும் அடியேன் செய்த காரியத்தில் ஏதேனும் ஒரு சிறிது

நன்மை யிருக்குமாயின், அதற்காக யாவரும் ஸ்ரீ ராமநாத புர ராஜாவுக்கே கடன்பட்டவ ராவார். இனி நாம் பெரிய கருமங்களைச் செய்யவேண்டி யிருக்கிறது. அற்புத சக்திகளைக் காட்டவேண்டும். உலகத்திலுள்ள பிற ஜாதியாருக்குப் பல விஷயங்களை நாம் போதிக்கவேண்டும். ஞானம், நீதி, அருள், பொறை, ஜீவகாருண்யம் முதலியவற்றில் இன்றைக்கும் நம் தேசமே முதன்மையா யிருக்கின்றது. நம்மவருக்குள் சிறந்த பிரம்மஞானிகள் இருப்பதினாலேயே, நமக்கு எத்தனையோ இடுக்கண்கள் நேர்ந்தும், எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக வேற்றரசர் அரசாட்சியால் பலவிதமான கொடுமைகள் விளைந்தும், நாம் இது வரையில் இவ் வுலகத்திலிருந்து ஒழிந்துபோகாமல் நிலைத்திருக்கிறோம்.

மேற்றிசையாரோ இராஜ்யலோபத்துக்கும் பொருளாசைக்கும் அடிமைகளாகி இழிவுற்றிருக்கிறார்கள். 'சிலர் மாத்திரம் அதிக பணக்காரரா யிருப்பதேன்? அந்தப் பணத்தைப் பங்கிட்டு எல்லாரும் சுகமா யிருக்கும்படி கொடுப்பதற்கு என்ன சூழ்ச்சி செய்யலாம்?' என்ற யோசனைகளிலேயே அவர்கள் பிராணன் பாதி போய்விடுகிறது. அப்படிப்பட்டவர்களின் உடலில் புதிய உயிரைப் புகுத்தி ஜீவகளையை யுண்டுபண்ணும் சமய நெறியும் ஞானநிஷ்டையும் . இந் நாட்டிலேயே இப்பொழுதும் வற்றாத நன்னீரூற்றாக விளங்குகின்றன. நம் சமயநெறி உபதேசிக்கும் மேலான தர்மம் வைராக்கியமே. இவ்

வுலகம் இரண்டு நாளைய மயக்க வாழ்வு. இதற்கப்பா லுள்ளதே திவ்ய வாழ்வு. அதைத் தேடி யடையுங்கள்! அந்தத் திவ்ய வாழ்விலும் வெறுப்புற்ற தீரரான மஹா ஞானிகள் நம் நாட்டில் உண்டாயிருக்கின்றனர். ஆதியந்த மற்ற கால தேசங்களும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. அவர்கள் அவற்றிற் கப்பாலும் சென்று நித்திய வாழ்வை யடைகின்றார்கள். அதுவே நம் சமயநெறியின் உண்மை யியல்பாம். இதை யடைவதற்கு நம்மவர்கள் எத்தனை கஷ்டமேனும் படுவார்கள். இப்படிப்பட்டவர்களை இலௌகிக விஷயங்களில் அழுந்தி உற்சாகங் கொள்ளும்படி செய்ய உங்களுக்கு மன மிருக்குமாயின் உங்களாலான முயற்சியைச் செய்துபாருங்கள்! ராஜ்யதந்திரம், சங்கச் சீர்திருத்தம், பொருளீட்டும் உபாயம், வர்த்தகச் சூழ்ச்சி முதலியவற்றைப்பற்றி நீங்கள் பேசும் பேச்சுகளெல்லாம் அவர்களைச் சிறிதேனும் அசைக்க முடியா. ஆகவே, இந்த ஞான வைராக்கியத்தையே நாம் உலகத்தாருக்கு உபதேசித்தல் வேண்டும். பிற ஜாதியாரிடத்திலிருந்து நாம் கற்றுணர வேண்டியவை யொன்று மில்லையோ வெனின், இலௌகிக ஞானத்தில் அவர்களிடத்திலிருந்து நாம் சிறிது கற்றுக்கொள்ளலாம். பலபேர் ஒன்று சேர்ந்து காரியத்தைச் செவ்வனே செய்யும் பான்மையும், அதிகாரம் செலுத்தும் முறைமையும், சிறிய பொருளைக் கொண்டு பெரும் பயன்களை உண்டாக்கும் திறமையும் அவர்களிடத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். ஞான வைராக்கியமே நமது சாஸ்திரங்களின் உபதேசமா

யிருப்பினும், ஒரு தேசத்தில் எல்லாரும் பூராயமாய்ப் ஞானவைராக்கிய சீலர்களா யிருப்பது அசாத்திய மாகை யால், மேற் சொன்ன லௌகிக விஷயங்களை மேற்றிசையா ரிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். அவ்வளவு மாத்திரமே யன்றி 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்கிற உபதேசத்துடன், இஹலோக சுக போகமே ஈசன் வணக்கமென ஒருவன் இந்தியர்களுக்குப் பிரசங்கிக்க வருவானாயின், அவன் பெரும் பொய்யனாவான். இப் புண்ய பூமியில் அவனை ஒருவரும் சேர்க்கமாட்டார் கள். "அப்படிப்பட்டவன் பேசும் பேச்சைக் கேட்க எங்க ளுக்கு இஷ்டமில்லை" என்போம். மேற்றிசை நாகரிகத் தில் எவ்வளவு பகட்டும், மினுக்கும், பரிஷ்காரமும், அதி கார சம்பத்தும் விளங்கினபோதிலும், அவையெல்லாம் வெறும் மாயாவிகாரமேயென்று பஹிரங்கமாய் இப் பிர பிரசங்க மேடையில் நின்றுகொண்டு அவர்கள் முகத்தில் இடித்துக் கூறுவேன். இவையெல்லாம் நிலையற்றன. கடவுள் ஒருவரே—ஆத்மா ஒன்றே—நித்திய ஸ்வரூபி; பாமார்த்த ஞானமொன்றே நிததியமா யுள்ளது. அதை யே உறுதியாய்ப் பற்றுங்கள்.

"ஆயினும், உத்தம புருஷார்த்தத்தை யடைவதற் குரிய பரிபக்குவநிலை கைகூடாத நம்மவர் பலருக்கும் ஒரு வகை லௌகிய விஷயப்பற்று அவசியமானதென்றே தோன்றுகிறது. நிஷ்காம கர்மம் செய்வதற்கும், அதன் பிறகு கர்மங்களை யொழித்துத் தியானயோகத்தில் அமர்

ந்து ஞானநிஷ்டையி லிருப்பதற்கும் பக்குவ மற்றவர்கள் அவைகளைச் செய்ய முயல்வரேல், அவர்கள் வஞ்சக ரெனப்படுவார்கள். அவர்கள் ஸகாம கர்மங்களையே முதலிற் செய்யவேண்டும். அதன்மூலமாய் அவர்கள் இகலோக சுகத்தில் வெறுப்படைந்து அதன்மேல் நிஷ்காம கர்மம் செய்து சித்தசுத்தி யடைந்து அதன் பின்னர் ஞானநிஷ்டைக்கு அர்ஹ ராவார்கள். இதுவே கீதையின் உபதேசம். இதை யறிந்தே முற்காலத்தில் இந்தியாவில் அனைவரும் தத்தம் அதிகார வேறுபாட்டிற் கேற்ப ஒழுகி வந்தனர். அந்தக் கிரமம் இப்பொழுது தவறிவிட்டது. மேற்றிசையாருக்கோ இந்தச் சங்கதியே தெரியாது. ஒவ்வொருவனும் உலக சுகங்களை யநுபவித்து அவை பயனற்றவை யென உணர்ந்த பிறகே சந்நியாசி யாகவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. வைராக்கிய முதிர்ச்சியாலேயே சந்நியாசம் வரவேண்டும். இப்பொழுதோ சந்நியாசிகளுக்குரிய நியமங்களை மற்றவர்களும் கைப்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் இவர்களுக்கு வைராக்கியமும் கைகூடுவதில்லை; இவ்வுலக காரியங்களும் சரிவர நிறைவேறுவதில்லை. வைராக்கிய சீலத்துக்குரிய யோக்கியதை யில்லாமல் அதற் கேற்பட்ட கடுமையான நியமங்களை யநுஷ்டிப்பதனால், அவர்கள் செய்யவேண்டிய உலகக் கடமைகளைச் செய்யாது தர்மப்பிரஷ்ட ராகின்றனர். இதனாலேயே இத் தேசத்தில் வறுமையும் துயரமும் அதிகமாகி வருகின்றன. ஒன்று மறியாத ஏழையின் தலைமேல் ஏன் இவ்வளவு கஷ்டங்களை ஏற்றி வைக்கிறீர்கள்? அவனும்

அறிந்து இவ்வுலகத்தை யநுபவிக்கப்படட்டுமே. இந்த விஷயத்தில் நாம் மேற்றிசையாரிடத்திலிருந்து சிறிது கற்றுக்கொள்ளலாம். ஆனால், இதில் பெரிய அபாயம் ஒன்றுண்டு. அதாவது, இக்காலத்தில் ஐரோப்பியரிடத்திலிருந்து நூதன விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று முன்வருகிறவர்களில் பெரும்பாலார், அவர்களது தோஷங்களைக் கைக்கொள்ளுகிறார்களே யன்றிக் குணங்களைக் கொள்வோர் வெகு சிலரினும் சிலரேயாவர். இப்படி ஐரோப்பியரின் சம்பிரதாயங்களை நன்று யறிந்துகொள்ளாது அவர்களது புஸ்தகங்களில் எழுதியுள்ளவற்றை மாத்திரம் முன்பின் சம்பந்தமின்றி நெட்டுருப்போட்டு, எதிலும் நம்பிக்கையின்றி வீணாய்ப் பிதற்றித் திரிவார்களைவிட பழைய ஆசாரங்களை அநுஷ்டிக்கும் வைதிகர்களே சிறந்தவர்களெனக் கொள்ளலாம். இந்த ஐரோப்பியக் கல்விபபிமானிகளுக்குச் சுயபுத்தி கிடையாது. ஆங்கிலேயரின் தயவைச் சம்பாதிக்கும் பொருட்டு நம் ஆசாரங்களைத் தூஷித்துத் திரிவார்கள். 'நம் ஆசாரங்களிற் சிலவற்றை ஏன் துராசாரங்களென்று சொல்லுகிறீர்கள்?' என்று விசாரித்தால், ஐரோப்பியர்கள் அவ்வாறு கூறுகிறார்கள்' என்று விடையளிப்பார்கள். இப்படிப்பட்டவர்களால் தேசத்துக்கு என்ன உபயோகம்? பழைய வைதிகர்களுக்கு ஆங்கிலேய பத்ததிகள் ஒன்றும் தெரியாமற்போயினும், அவர்கள் தாம் கொண்ட நிலையில் உறுதியாய் நிற்கின்றார்கள். அவர்களை ஆண்மக்களெனச் சொல்லத்தகும். உறுதிப்பாடற்ற தற்காலத்திய ஆங்கிலங்

கற்ற இச் சிறுவர்களை யென்னவென்று சொல்லலாம்? இவர்கள் இன்னும் அவ்வபக்வ நிலையிலேயே இருக்கிறார்கள். இவர்களை ஆணென்றோ, பெண்ணென்றோ, ஜந்துக்களென்றோ, மற்றேதென்றோ கூறுவேன்! ஆனாலும், எல்லாரும் இப்படியில்லை. அப்படியில்லாத சிலரிலேயே உங்கள் ராமநாதபுரத்து ராஜா அவர்களையும் ஒருவரென நான் கருதுகின்றேன். ஹிந்து மதாபிமானத்தில் இவரைவிடச் சிறந்தவர் இப் பரதகண்டத்தில் வேறொருவரு மில்லை. கீழ்நாட்டு விவகாரங்களிலும், மேல்நாட்டு விவகாரங்களிலும் இந்த ராஜ குமாரனைவிட மேலான தேர்ச்சி பெற்றவன் வேறெந்த ராஜகுமாரனும் கிடையாது. இவர் அந்த அந்த நாட்டிலுள்ள நன்மைகளை ஆராய்ந்தறிந்து ஸமரஸ பாவனை மேற்கொண்டு விளங்குகின்றார்.

ச்ரத்தயாநஸ் ஸுபாம் வித்யாம்
ஆததீதா வராதபி
அந்த்யாதபி பரம் தர்மம்
ஸ்த்ரீ ரத்நம் துஷ்குலாதபி.

"நல்லறிவை இழிந்த குலத்தோனிடத்தினின்றும் சிரத்தையுடன் கற்கலாம். மேலான அறநெறியை நீசனிடத்தினின்றும் கற்கலாம். உத்தமமான பெண்மணியைத் தீய குலத்தினின்றும் கொள்ளலாம்," எமது மநு கூறியிருக்கிறார். ஆகையால், சிறந்த விஷயங்கள் எந்த ஜாதியாரிடத்திற் காணப்பட்டாலும் அவற்றை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், உங்களுடைய சுதந்

திரத்தை விட்டுவிடக் கூடாது. நீங்கள் இந்துக்களென்பதை யொருகாலும் மறக்கலாகாது. மற்றது எது வந்தாலும் அந்த இந்து தர்மத்துக்கு உட்பட்டே இருக்கவேண்டும். ஒவ்வொருவனும் தன் பூர்வ கர்மங்களுக்குத் தக்கபடி இப் பிறவியில் சில கடமைகளை நிறைவேற்றவேண்டியிருக்கிறான். இந் நகரவாசிகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட ஒரு கடமையுடன் பிறந்திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட கடமையுடைமையே நம் முன்னோர்களின் பெருமை யென்க. நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் உங்கள் முன்னோர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், ஜாக்கிரதையாயிருங்கள்! அக் கடமையாவது என்னவெனில்: பிராமணனைப்பற்றி மநு சொல்லியிருப்பதைக் கேளுங்கள்:

> ப்ராஹ்மணோ ஜாயமானோஹி
> ப்ருதிவ்யாம் அதிஜாயதே
> ஈஸ்வர: ஸர்வ பூதாநாம்
> தர்மகோஸஸ்ய குப்தயே.

தர்மமாகிய நிதியைக் காக்கும்பொருட்டுப் பிராமணன் பிறந்திருக்கிறான் என்கிறார். தர்மமென்றால் ஸநாதன தர்மமாகிய இந்துமதமென்பது பொருள். ஆகவே, இந்தத் தர்மரக்ஷணமே இப் புண்யபூமியிற் பிறந்தவர்களுடைய கடமையாம். இதை நாம் மறந்து உலக வின்பங்களைப் பெரிதெனப் போற்றுவோமாயின், மூன்று தலைமுறைக்குள் இந்து ஜாதியென்ற பெயர்கூட இல்லாமற் போய்விடும்.

"ஆகையால் என் நண்பர்களே! நமது முன்னோர்களால் நமக்குக் குலதனமாகக் கிடைத்திருக்கும் இந்த பிரஹ்மஞானத்தை நாம் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்தால்தான் நாம் க்ஷேமமாய் இருக்கலாம். உங்களுக்கு இந்த ஞானத்தில் நம்பிக்கை யிருந்தாலும் இல்லாவிட்டாலும், நம் ஜாதியின் பெருமையைக் கருதியாவது அதைக் கைவிடாமல் காப்பாற்றுங்கள். அதை முதலில் பத்திரப் படுத்திக்கொண்டு பிறகு உங்களுக்கு வேண்டியவற்றை மற்ற நாட்டாரிடத்தினின்றும் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால், அவை யாவும் நம் தேசத்தின் உத்தம புருஷார்த்தத்துக்குக் கீழ்ப்பட்டே இருத்தல்வேண்டும். இவ்வாறு நம் பிரஹ்மஞானத்தையும் பிறநாட்டிலுள்ள விஞ்ஞான நூற் பயன்களையும் ஒன்று சேர்ப்பீர்களாயின், அதனின்றும் அற்புதமான மகிமை பொருந்திய புதிய பாரதவர்ஷம் உண்டாகும்; இப்பொழுதே அது உண்டாகி வந்துகொண்டிருக்கிறதென்று நம்புகிறேன். அது பண்டைநாள் பாரத நாட்டைவிட எவ்விதத்தும் அதிக சீரும் சிறப்பும் பெருமையும் வாய்ந்து விளங்குவதாகும். முன்னிருந்த ரிஷிகளைவிட மேலான மஹர்ஷிகள் தோன்றுவார்கள். உங்களது முன்னோர்களும் தமது திவ்ய பதவியிலிருந்து கீழே பார்க்கும்போது, முன்னிலும் அதிக மகிமையும் சிறப்பும் பெற்று விளங்கும் தங்கள் சந்ததியாரைக் கண்டு திருப்தியடைவது மாத்திரமன்றி பெருமையும் பாராட்டுவார்கள். ஆகவே, என் சகோதரர்களே! நாம் எல்லோரும் சிரமப்பட்டு வேலை செய்வோம். இது தூங்குவதற்குச்

சமயமன்று. இனி வரப் போகும் பாரதவர்ஷம் நாம் செய்யும் காரியத்தின் குணகுணங்களைப் பொறுத்திருக்கிறது. நம் பாரத மாதா வித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறாள். அவள் இதுவரையில் தூங்கிக்கொண்டிருந்தாளேயன்றி வேறில்லை. நீங்கள் எழுந்து அவளை எழுப்புங்கள்! அவள் —நம் தாயாகிய பாரததேவி— முன்னிலும் அதிக தேஜஸ்ஸுடன் ஜொலித்துக்கொண்டு புநர் யௌவனோதமடைந்து தன் நித்திய சிங்காசனத்தில் வீற்றிருக்கட்டும். எவனைச் சைவர்கள் சிவனென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவென்றும், கர்மவாதிகள் கர்மமென்றும், பௌத்தர்கள் புத்தனென்றும், ஜைனர்கள் ஜினனென்றும், யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஜெஹோவாவென்றும், முஹம்மதியர்கள் அல்லாவென்றும் ஸர்வ மதஸ்தர்களும் ஸ்வாமியென்றும், வேதாந்திகள் பிரஹ்மமென்றும் போற்றுகின்றனரோ, எவனது மகிமை பொருந்திய ஸ்வரூபத்தை இந் நாட்டினரே பூரணமாய் அறிந்திருக்கின்றனரோ, அந்தப் பரம காருணிகனும், எமதப்பனும், அம்மையும், நண்பனும், துணைவனுமான பகவான் எம்மை இரட்சிப்பாராக! எமக்கு அருள் புரிவாராக! எமக்குப் பராக்கிரமம் அளிப்பாராக! இக் கருமத்தை நிறைவேற்ற எமக்குச் சக்தி யளிப்பாராக! நாம் சிரவணத்தா லுணர்ந்தது நம்மில் அங்கமாகி நமக்குப் பலத்தைக் கொடுப்பதாக! பிறருக்கு உதவி செய்யும் பொருட்டு அது நமக்குச் சக்தியாய் அமைவதாக! குருவும் சிஷ்யராயுமுள்ள நாம் ஒருவரை

யொருவர் பகையாமல் இருப்போமாக! ஓம் ஶாந்திః ஶாந்திః ஶாந்திః ஹரிః ஓம்."

ஓம் ஸஹ நாவவது | ஸஹ நௌ புனக்து |
ஸஹ வீர்யம் கரவாவஹை |
தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை |
ஓம் ஶாந்திః ஶாந்திః ஶாந்திః
ஓம் ஹரிః ஓம்.

---

இந்த உபந்யாஸம் முடிந்தவுடன், ராஜா எழுந்திருந்து, சுவாமிகளின் வரவைப் பெருமைப்படுத்தும் பொருட்டு அவ்வூரில் சந்தா வசூல் செய்து சென்னை க்ஷாம நிவர்த்தி நிதிக்கு அனுப்பவேண்டுமென்று பிரே ரேபித்தலுடன் சபை கலைந்தது. சுவாமிகள் மறுநாள் அரண்மனைக்கு விஜயஞ் செய்து அங்கே சேர்ந்திருந்தவர் கள் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் வாசித்த உபசார பத்திரிகைகளுக்குத் தக்கவாறு பிரதிவசன மளித்து, அந்த ராஜாவுக்கு ராஜரிஷி யெனப் பட்டமுங் கொடுத்தார். அன்றியும், 'போகோகிராப்' என்ற 'ஸ்வநக்ராஹி'யில் ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அதில் சக்தி பூஜையின் ஆவசியகத்தை வற்புறுத்திப் பேசினார்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டுப் பரமகுடிக்கு வந்து சேர்ந்தார். சுவாமிகள் அவ் வூரார் செய்த உபசாரத்தை யேற்று அங்கே ஒரு பிரசங்கம் செய்துவிட்டு, மானா மதுரை வந்து சேர்ந்தார். அங்குக் கூடியிருந்தவர்கள்

செய்த வந்தனோபசாரத்தைத் திருவுள்ளம்பற்றி அதற்குப் பிரதியாக ஒரு பிரசங்கம் செய்துவிட்டு மதுரைக்கு வந்தார். மதுரையிலும் வழக்கப்படி உபசாரமும் பிரசங்கமும் நடந்தன. பிறகு சுந்தரேசுவராலயத்துக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு, அங்கிருந்து புறப்பட்டுத் திரிசிராப்பள்ளிக்குச் சென்று, அங்கிருந்து கும்பகோணத்துக்குப் போனார். சுவாமிகள் கும்பகோணத்தில் மூன்று நாள் தங்கியிருந்தார். இரண்டு இடங்களில் சுவாமிகளுக்கு நல்வரவு கூறி வந்தனோபசார பத்திரிகைகள் படிக்கப்பட்டன. சுவாமிகள் அவைகளை யேற்று ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். மற்றப் பிரசங்களில் சொன்ன சங்கதிகளையே இதிலும் வற்புறுத்திப் பேசினபோதிலும், தான் முக்கியமாய் அத்வைதத்தையே யதிகமாய்ப் போதித்து வருவதற்குக் காரணம் இன்னதென இதில் இனிது விளக்கிப் பேசினார். அவர் சொன்னதாவது:— "நான் அத்வைதத்தையே அதிகமாய்ப் பிரசங்கித்து வருகிறேனென்றும், த்வைதத்தைக் கொஞ்சங்கூடச் சொல்லுகிறதில்லையென்றும், நான் அமெரிக்காவிலிருக்கையில் சிலர் குறைகூறக் கேட்டிருக்கிறேன். அஃது உண்மையே. த்வைத சித்தாந்தத்தை யநுசரித்த பூஜையிலும் உபாசனையிலும் எவ்வளவோ அபரிமிதமான அழகும், அற்புதமான அன்பும், அளவு கடந்த ஆநந்த பாவசமும் உண்டென்பது எனக்குத் தெரியும், ஆனால், ஆநந்தத்தில் அழுவதற்குக் கூட இது சமயமன்று. இதுவரையில் நாம் அழுதது போதும். அழுதழுது அகமெகிழ உருகுவதற்கு இனி

சிறிதும் சரிப்படாது. நாம் இப்படி நெஞ்சம் உருகி நலிந்தே மிருகப்பிராயராய்விட்டோம். இரும்பை யொத்த தசை வன்மையும், எஃகை நிகர்த்த நரம்பின் ஆற்றலும் படைத்து, எதற்கும் அஞ்சாமல் பிரபஞ்சத்தின் அத்புதமான ரஹஸ்ய தத்துவங்களை உள்நுழைந்தறிந்து, அந்தப் பிரயத்னத்தில் கடலின் அடியிற் போகவேண்டி வந்தாலும், எதையும் லக்ஷ்யம் செய்யாமல் காரியத்தைச் சாதிக்கும் வல்லமை வாய்ந்த ஸ்திர சங்கல்பமுள்ள மஹா தீரர்களே நம் நாட்டிற்கு இப்பொழுது வேண்டியவராயிருக்கிறார்கள். இந்தக் காரியம் நமக்கு ஆகவேண்டியிருந்ததலால், அத்தகைய நிலைமையானது ஏற்பட்டு நிலைபெற்று உறுதிப்படுவதற்கு, அத்வைதத்தால் போதிக்கப்படுவதான எல்லாம் ஏகஸ்வரூபமென்னும் தத்துவத்தை யறிந்து அநுசந்திப்பதினாலேயே சாத்தியமாகும். நம்பிக்கை நம்பிக்கை யென்கிறார்களே, அந்த நம்பிக்கையை நம் சக்தியிலும் ஈசனது திருவருளிலும் வைக்கவேண்டும். அதுவே பெருமை படைவதற்குத் தகுந்த உபாயம். உங்கள் புராணங்களில் சொல்லியுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களிடத்தும், அவர்களும் போதாமல் அயல் நாட்டார்களால் அவ்வக்காலத்தில் கொண்டு வரப்பட்டு உங்களுக்குள் நிலைகொண்டிருக்கிற மற்ற தேவர்களிடத்தும் உங்களுக்கு நம்பிக்கையிருந்து, உங்களிடத்தில் மாத்திரம் நம்பிக்கை யில்லையென்றால் உங்களுக்கு மோக்ஷமே யில்லை ஆகவே, உங்களிடத்திலேயே முதலில் நம்பிக்கை கொள்ளுங்கள்! அந்தப் பக்தியை யாதாரமாகக்கொண் டெழுந்து

பலசாலிகளாயிருங்கள்! அதுதான் நமக்கு வேண்டியது! நாம் எண்ணிக்கையில் முப்பத்து மூன்று கோடி ஜனங்களாயிருந்தும், தரையில் தண்டம்போல விழுந்துள்ள நம் தேகங்களின்மேல் மிதித்துத் துவைக்கக் கருதி வரும் அற்பத்தொகையினரான அயல் நாட்டார் எவருமே நம்மைச் சென்ற ஆயிரம் ஆண்டுகளாக அடக்கி ஆண்டுவருவதற்குக் காரணமென்ன? அவர்களுக்குச் சுய பலத்தில் நம்பிக்கை யிருந்தது, நமக்கு அந்த நம்பிக்கை யில்லை யென்பதுதான் காரணம். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள ஜனங்களின் சிறப்புக்குக் காரணமென்ன தெரியுமா? அவர்களுக்குச் சுய பலத்திலுள்ள விசேஷமான நம்பிக்கையே. ஒரு சாதாரணமான ஆங்கிலேயச் சிறுவனும், "நான் ஆங்கிலேயன், நான் எதையும் செய்வேன்" என்று சொல்வான். அமெரிக்கச் சிறுவனும் அப்படியே சொல்வான். ஒவ்வொரு ஐரோப்பியப் பையனும் அவ்வாறே புகல்வான். நமது சிறுவர்களும் அதே பிரகாரம் இங்கே சொல்லுவார்களா? ஒரு காலு மில்லை. அந்தச் சிறுவர்களின் தகப்பன்மார்கூடச் சொல்லமாட்டார்கள். நமக்குச் சுய சக்தியில் நம்பிக்கை போய்விட்டது. ஆகையால் தான் ஜனங்களுக்கு உள்ளக் கிளர்ச்சியை யுண்டாக்குவதற்கும், ஒவ்வொருவருக்குள்ளும் தான் தான் என்று ஸ்புரிக்கும் அறிவுக்கு விஷயமாயுள்ள ஆத்மாவின் சுவரூப மகிமையை உணர்த்துவதற்கும், இந்த அத்வைத வேதாந்தத்தைப் பிரசங்கிப்பது அத்தியாவசியகமாகின்றது. அதைக்கொண்டுதான் நான் அத்வைதத்தைப்

போதிக்கிறேனே யல்லது சுவமத பக்ஷபாதத்தா லன்று. எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய சர்வாங்கீகாரமா யுள்ள ஆதாரங்களைக் கொண்டே நான் இதைப் பிரசங்கிக்கின்றேன்.

இனி, த்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் மனவருத்த முண்டாகாதவாறு ஸமரஸ வழியைக் கண்டறிவதும் கடினமன்று. ஈசன் உள்ளுக்குள்ளே இருக்கிறானென்றும், எல்லாவற்றிலும் ஈசுவர ஸ்வரூபம் இருக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளாத மதம் ஒன்றுகூட இவ் விந்தியாவில் கிடையாது. பரிசுத்தத் தன்மையும், பூர்ணத்தன்மையும், ஆத்மாவினிடத்தில் ஏற்கனவே இருக்கின்றனவென்பது எல்லா வேதாந்திகளுக்கும் ஒப்ப முடிந்ததே. சில வேதாந்திகளின் சித்தாந்தப்படி இந்தப் பூர்ணத்தன்மை சில காலம் சங்கோசமடைந்தும், சிலகாலம் விகாஸமடைந்தும் விளங்குகிறதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். எப்படியாயினும அந்த லக்ஷணம் அங்கே இருக்கிறதல்லவா? அத்வைதிகளோ, "அந்தத் தன்மை சுருங்குவதும் இல்லை விரிவது இல்லை" என்றும், "இப்பொழுது மறைந்திருக்கிறது, மறைக்கும் உபாதி ஒழிந்தால் பிரகாசமுறும்" என்றும் சொல்லுகிறார்கள். எப்படிச் சொன்னபோதிலும் பலிதார்த்தம் ஒன்றுதானே. இதையெடுத்துச் சொல்லும்பொழுது அத்வைதமானது ஒருவேளை தர்க்க ரீதியையநுசரித்து யுக்தி யுக்தமாகச் சொல்லக்கூடும். அவ்வளவே யன்றி முடிவு ஒன்றுதான். இந்த முக்கியமான

கருத்துதான் இப்பொழுது உலகத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்கிறது. அதிலும் நம் தாய் நாட்டிற்கு அத்தியாவசியகமாய் வேண்டியிருக்கின்றது. நண்பர்களே! இனி, சில கடுஞ் சொற்களை உங்களுக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. நம்முள் யாரையாவது ஓரிரெசியவனை ஆங்கிலேய னொருவன் கொன்றுவது கொடுமையாய் நடத்தியாவது விடும்பக்ஷத்தில், நாடெங்கும் அதைப்பற்றிப் பெரிய கோஷம் உண்டாகிற சங்கதி வர்த்தமான பத்திரிகைகளின் மூலமாய் நமக்குத் தெரிகிறதல்லவா? அதை நானும் படித்து மனந் தாளாமல் அழுகின்றேன். ஆனால், 'இதற்கெல்லாம் உத்தரவாதம் சொல்லவேண்டியவர் யார்? என்று உடனே ஒரு சந்தேகம் என்மனத்தில் உண்டாகின்றது. நான் வேதாந்தியாயிருந்து, அவ்வித கேள்வியை என்னையே கேட்டுக்கொள்ளாம லிருக்கலாமா? இந்துவானவன் எப்போதும் அந்தர் முகப் பார்வை புள்ளவன் அவன் எல்லாவற்றிற்கும் காரணம் தனக்குள்ளேயே தெரிந்து கொள்ளப் பார்க்கிறான். ஆகவே, இதற்கு உத்தரவாதி யாரென்று என்னை நான் கேட்டுக் கொள்ளுந்தோறும், ஆங்கிலேயரல்லரென்றே விடை வருகின்றது. அவர்கள் ஒருகாலும் உத்தரவாதிக ளாகார். நமது சகலவித துக்கங்களுக்கும், க்ஷீண தசைக்கும் காரணம் நாமே யன்றி வேறொருவரு மல்லர். உயர்குடிப் பிறப்பும். செல்வச் செருக்குமுள்ள நம் முன்னோர்கள் நாட்டின் ஏழை ஜனங்களைக் காலால் மிதித்து வருத்தினார்கள். அவ் வேழைக

ளும் இந்தக் கொடுமைக்கு வெகு நாளாக உட்பட்டு, ஆகார வற்று, வலியற்று, ஒளிமழுங்கித். தாம் மானிடஜன்ம மென்பதைக் கூட மறந்து விட்டார்கள். அவர்களைக் கேவலம் கட்டை வெட்டும்படியும், தண்ணீர் தூக்கும்படியும் நம் முன்னோர்கள் பல நூற்றாண்டுகளாக நிர்ப்பந்தித்தபடியால், அவர்களும் தாங்கள் அடிமைகளாகவே பிறந்தவர்களென்றும், கட்டை வெட்டுவதற்கும் தண்ணீர் தூக்குவதற்குமென்றே பிறந்தவர்களென்றும் நம்பியிருக்கிறார்கள். இப்படியிருக்க, யாராவது அவர்களைப்பற்றி ஒரு நல் வார்த்தை சொல்வாராகில், நம்மவர்கள் தற்காலக் கல்வியில் எவ்வளவோ தேர்ந்தவர்களென்று பெருமையடித்துக்கொண்டபோதிலும், இந்தக் காலா லடிபட்டு வருந்தும் ஏழைகளைக் கைகொடுத்துத் தூக்கிவிடும் விஷயத்தில் இவர்கள் பின் வாங்குவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அது மாத்திரமன்று; இந்த ஏழைகளை இன்னும் மிருகப் பிராயமாக்கி, அவர்களை முன்னிலும் அதிகமாய் வருத்துவதற்காகவேண்டி, மேற்றிசை நூல்களினின்றும் சாஸ்திர யுக்திப்போலிகளைக் கொண்டு வந்து சிறிதேனும் ஈவு இரக்கம் தயை தாட்சிண்ணியமற்ற இராக்ஷதர்களைப்போல் வாதாடுகின்றார்கள். "கல்வியறிவு பரம்பரையாய் வரவேண்டும்" என்றும், "திடீரென்று ஒருவனுக்கு அதைப் புகட்டினால் அவன் விர்த்தியடையான்" என்றும் அவர்கள் வாதம் செய்கிறார்கள். இது உண்மையல்லவென்பதற்கு என் கண்ணால் கண்ட ஒரு நிதர்சனம் கூறுகின்றேன். கேளுங்கள்! அமெரிக்காவில் நடந்த சர்வ

மத சபைக்கு வந்திருந்த பலருள் ஒரு நீக்ரோ ஜாதி இளைய னும் வந்திருந்தான். அவன் நாகரிகமற்ற ஆப்ரிகா கண்டத்திற் பிறந்த நீக்ரோவன். அவன் அந்த சபையில் அழகிய பிரசங்கமொன்று செய்தான். அதுமுதல் அவனிடத்தில் நான் குதூஹலங் கொண்டு அடிக்கடி அவனுடன் பேசினேன். ஆனால், அவனைப்பற்றி யாதொரு சங்கதியும் தெரியவில்லை. பிறகு சிலநாள் கழித்து நான் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது, சில அமெரிக்கர்களைக் கண்டு பேசிக்கொண்டிருக்கையில், அந்த நீக்ரோவனைப்பற்றி இவ்வாறு அவர்கள் சொன்னார்கள்: "இந்தச் சிறுவன் ஆப்ரிக்கா கண்டத்தின் மத்தியப் பிரதேசத்திலுள்ள ஒரு நீக்ரோ தலைவனது மகன்" என்றும், "ஒருநாள் இன்னொரு தலைவன் இவன் தகப்பன்மேல் சினங்கொண்டு அவனையும் அவன் மனைவியையும் கொன்றுவிட்டு அவர்களைச் சமைத்துச் சாப்பிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அந்தப் பையனையும் அவ்வாறே செய்யக் கருதி கொன்றுவிடும்படி உத்தரவு செய்ய, இந்தப் பையன் அதை யறிந்து ஊரைவிட்டு ஓடிப்போய் பல்லாயிரம் மைல் தூரம் நடந்து, எத்தனையோ கஷ்டங்களை யநுபவித்துக் கடற்கரை யடைந்தான்" என்றும், "அங்கே வந்திருந்த அமெரிக்கா கப்பலொன்று அவனை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவில் கொண்டுவந்து சேர்த்தது" என்றும் சொன்னார்கள். இந்தப் பையன்தான் அந்தப் பிரசங்கத்தைச் செய்தான்! அப்படியிருக்க, நீங்கள் சொல்லும் பரம்பரா வாசனை வாதத்தைப்பற்றி நான் என்னவென்று நினைப்பது? ஹே பிராமணர்களே!

பிராமணனுக்குப் பரம்பரா வாசனையின் காரணமாகப் படிப்பில் பறையனுக் கிருப்பதைவிட அதிக ஊற்றம் இருக்குமாயின், பிராமணன் படிப்புக்காகக் கொஞ்சங்கூடப் பணம் செலவிடவேண்டாம். அதை யெல்லாம் பறையனுக்கே செலவிடுங்கள்! இல்லாதவருக்குக் கொடுங்கள்! ஏனெனில், அவர்களுக்குத்தானே அந்தக் கொடை அதிகமாய் வேண்டியிருக்கிறது. பிராம்மணன் பிறப்பினாலேயே கெட்டிக்காரனா யிருப்பானாகில், அவன் யாதொரு சகாயமுமின்றித் தானே கற்றுக்கொள்வான். மற்றவர்கள் அவ்வாறு கெட்டிக்காரராய்ப் பிறவாத பக்ஷத்தில் அவர்களுக்கே எல்லாக் கல்வியையும் அளியுங்கள்! இதுதான் நியாய மென்றும் யுக்தமென்றும் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, மேற் ஜாதியாரின் காலின் கீழ் அகப்பட்டு நசுங்கும் இந்த ஏழைகளுக்கு அவர்களின் உண்மை நிலை இன்னதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. பல முள்ளவர்களுக்கும் பல ஹீனர்களுக்கும், மேலோருக்கும் கீழோருக்கும், எல்லாருக்கும் பொதுவில் ஒரே அநந்தாத்மாவான பரம்பொருள் சாக்ஷியாய் விளங்கி, நற்பதவியும் உயர்நிலையும் அடைவதற்கு எல்லாருக்கும் அதிகார முண்டென்பதை வெளிப்படுத்துகிறதென்ற சங்கதியை ஒவ்வொருவரும்: ஆணா யிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும், குழந்தையா யிருந்தாலும்; ஜாதி, பிறப்பு, பலம், பலக்குறைவு என்கிற வேற்றுமை யின்றி எல்லாரும் கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும். "உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந்நிபோதத" 'எழுந்திருங்கள்! கண் விழித்துக்கொள்ளுங்கள்! கருதிய கருமம்

கைகூடும் வரையில் ஓய்யாமல் உழையுங்கள்!" என்று எல்லோருக்கும் பஹிரங்கமாய்ச் சொல்லக்கடவோம! எழுந்திருங்கள்! கண் விழித்துக்கொள்ளுங்கள்! துர்ப்பலத்தையுண்டாக்கும் இந்த மோஹ நித்திரையினின்றும் எழுந்திருங்கள்! உண்மையில் எவனும் பலஹீனனில்லை. ஆத்மா அநந்தமாயும், ஸர்வசக்தியுள்ளதாயும், சர்வஞ்ஞமாயும் இருப்பதன்றோ? எழுந்து நில்லுங்கள்! நின்று உங்கள் பெருமையைக் காட்டுங்கள்! உங்களுக்குள் இருக்கும் ஈசுவர ஸ்வரூபத்தை பஹிரங்கப்படுத்துங்கள்! சும்மா இராதேயுங்கள்! அளவு கடந்த சோம்பலும், துர்ப்பலத்தன்மையும், மோக நித்திரையுமே நம்மவர்களை வெகு நாளாகச் சூழ்ந்திருக்கிறது. இன்னும் நம்மைவிட்டுப் போகவில்லை. ஓ தற்காலத்திய ஹிந்துக்களே! இந்த வசீகர நித்திரையினின்றும் எழுந்திருங்கள்! அதைப் போக்கிக்கொள்ளும் வழி உங்கள் சாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் கற்றுணர்ந்து, பிறருக்கும் கற்றுக்கொடுத்து, ஸ்வஸ்வரூபோதயத்தைக் கண்டு ஆனந்திக்குமாறு நித்திரையிலழுந்தியுள்ள ஆத்மாவை எழுப்புங்கள்! இப்பொழுது நித்திரை செய்துகொண்டிருக்கும் ஆத்மா ஸ்வஸ்வரூபஞானமடைந்து கண்திறந்து எழுந்து விடும்பொழுது, அதிகாரம் வரும், மகிமை வரும், நற்குணம் வரும், பரிசுத்தத்தன்மை வரும், எது எது சிறந்ததோ அதுவெல்லாம் வருமென்க. கீதையிலே ஸ்ரீ கிருஷ்ணனது உபதேசமெல்லாம் திரண்டு உருவானதுபோலுள்ள இர

ண்டு சுலோகங்களே எனக்கு மிகவும் அபிமதமானவை. அவைதாம்.—

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஸ்வரம்
விநஸ்யத் ஸ்வவிநஸ்யந்தம் யஃ பஸ்யதி ஸ பஸ்யதி
ஸமம் பஸ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீஸ்வரம்
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராங்கதிம்.

என்பன.

அவற்றின் கருத்தாவது: எல்லாப் பூதங்களினிடத்தும் வேற்றுமை யற்று விளங்குபவனும், அழிவுள்ள பொருள்களின் மத்தியில் அழியாது விளங்குபவனுமான பரமாத்மாவை எவன் கண்டானோ, அவனே கண் படைத்த பயனடைந்தவன். ஏனெனில், எங்கும் ஒரேவிதமாய் வியாபித்து விளங்கும் பகவானை யறிந்தவன் தன்னைத்தானே அழித்துக்கொள்ளாதவனாகிப் பரகதி யடைகின்றான்.''

ஆகவே, இந்நாட்டிலும், பிற நாட்டிலும் வேதாந்தத்தைக்கொண்டு லோகோபகாரம் செய்வதற்கு இதுவே தக்க சமயமாம். கடவுள் ஸர்வ வ்யாபி, ஸர்வ ஸமன் என்கிற அற்புத ஸித்தாந்தத்தை இந் நாட்டிலும் பிற நாட்டிலும் பிரசங்கித்து மானிடவர்க்கத்தின் நிலையை உயர்த்திச் சீர்ப்படுத்தவேண்டும். துன்பமும், அஞ்ஞானமும், ஞானக் குறைவும் எவ்வெவ்விடங்களில் இருந்தபோதிலும் அவற்றிற்குக் காரணமென்னவென்று விசாரிக்குங்கால், வேற்றுமைகள் பாராட்டுவதினாலேயே எல்லாத் துன்பமும் விளைகின்றதென்றும், எல்லாம் ஒன்றெனும்

ஸம திருஷ்டியால் அத் துன்பம் நீங்கி, நன்மை உண்டா கின்ற தென்றும் நமது சாஸ்திரங்களில் கூறியிருப்பதை என் அநுபவத்தில் கண்டறிந்திருக்கிறேன். இதுதான் வேதாந்தத்தில் உபதேசிக்கப்படும் மகா தத்துவமாம். ஆனால், இப்படிப்பட்ட தத்துவம் ஒன்றிருக்கின்றதென மாத்திரம் உணர்வது போதாது. அதை ஒழுக்கத்துக்கும் கொண்டுவருதல் வேண்டும். சாஸ்திரக் கருத்தை உபதே சிப்பது வெகு சுலபம்; அதை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவ தெப்படி? அநுஷ்டானத்தைப் பற்றிப் பேசும்போதுதான் எல்லாவித கஷ்டமும் உண்டாகின்றது. அநேக நூற்றாண்டுகளாக ஜாதி விவகாரமும் சங்கச் சீர் திருத்த விஷயமும் இதன்பொருட்டுத்தான் நமக்குப் பெருங் கஷ்டமான விஷயங்களாய் விட்டன. நானோ ஜாதி யை ஒழிக்க வந்தவனுமல்ல, சீர்திருத்தக்காரனுமல்ல; உங்கள் ஜாதிகளுடனாவது சீர்திருத்தக்காரருடனாவது எனக்கு நேரான சம்பந்தம் ஒன்றும கிடையாது. உங்க ளுக்கு இஷ்டமான ஜாதியில் நீங்கள் இருங்கள்! ஆனால், அந்த ஜாதி யபிமானத்தைக்கொண்டு இன்னொரு ஜாதியை யாவது மனிதனையாவது பகைப்பதற்கு என்ன நியாய மிருக்கிறது? நான் உபதேசிப்பது அன்பைத் தவிர மற் றொன்றுமன்று. அதற்காதாரம் வேதாந்தமே. சென்ற நூறுவருஷங்களாக, நம் நாட்டில் அநேக சீர்திருத்தக்கா ரர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் நாட் டை நன்னிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்னும் நல் லெண்ணங் கொண்டவர்களே. சில விஷயங்களில் அவர்க

ளது உத்தேசமும் புகழத்தக்கதுதான். ஆனால், சென்ற நூறு வருஷங்களாகச் செய்துவந்த சீர்திருத்த முயற்சியால் நிரந்தரமான யாதொரு பிரயோஜனமும் சாதிக்கப்படவில்லையென்பது வெளிப்படையன்றோ? எண்ணிறந்த உபந்யாசகர்கள் பிரசங்க மேடைகளின் மேலேறி பிரசங்கமாரி பொழிந்தார்கள் பிராசீனமான இந்து மதாசார நாசரிகங்களை வாய்கொண்டமட்டும் வைது தூற்றினார்கள். கார்யாம்சத்தில் மாத்திரம் ஒருபயனையும் காணோம். அதற்குக் காரணமென்ன? அவர்கள் செய்த தூஷணமே. முதலாவது, தொன்றுதொட்டு நம் ஜாதியாருக்கு ஏற்பட்டிருக்கும் சிறப்பியல்பை நாம் ஜாக்கிரதையாய்க் காத்துக் கொள்ளவேண்டும். பிற ஜாதியாரிடத்திலிருந்தும் நாம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நமது சீர்திருத்தக்காரர்கள் அளவுமீறி மேற்றிசைப் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வதைக் காண எனக்கு வருத்தமாயிருக்கின்றது. அது ஒருகாலும் நம் இந்தியாவுக்குப் பொருந்தாது. இக் காரணத்தால் இந்தச் சீர்திருத்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப்போயின. இரண்டாவது. நன்மை செய்வதற்குத் தூஷணம் புரிதல் ஒருபோதும் தக்க வழியாகமாட்டாது. நமது சங்கத்தில் தோஷங்கள் உளவென்பது கேவலம் குழந்தைக்குக்கூடத் தெரியும். எந்தச் சங்கத்தில் தோஷங்களில்லை? எல்லாச் சங்கங்களிலும்தான் இருக்கின்றன. நான் உலக முழுவதும் சுற்றியிருக்கிறேன். அங்கங்குள்ள ஜனங்களை உற்று நோக்கியதில், இந்துக்களே நல்

லொழுக்கத்திலும் தெய்வ பக்தியிலும் சிறந்தவர்களென்றும், நமது ஜாதி மதாசார முறைமைகளே மனித ஜாதியின் சுகாபிவிர்த்திக்கேற்ற தகுதி பெற்றுள்ளனவென்றும் நிச்சயமாயின. ஆகையால், நான் யாதொரு புதிய சீர்திருத்தமும் வேண்டேன். என்னுடைய அபீஷ்டம் என்னவென்றால், சாஸ்திரத்தை யனுசரித்து அபிவிர்த்தியடைய வேண்டுமென்பதே. என் தாய் நாட்டின் முற்கால சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்க்குங்கால், அதைப்போல் மற்றெத் தேசமாவது மானுட அபிவிர்த்திக்காக அவ்வளவு உபகாரம் செய்திருப்பதாகத் தோன்றவில்லை. ஆகையால், என் ஸ்வதேசத்தாரை நான் தூஷணை புரியேன். ''நீங்கள் செய்த வரையில் நன்றாய்ச் செய்திருக்கிறீர்கள்; இனி அதை விட நன்றாய்ச் செய்ய முயலுங்கள்!'' என்றே அவர்களை நோக்கி நான் சொல்லுவேன். இந் நாட்டிலே முற்காலத்தில் பெரிய காரியங்கள் நடந்தேறின. அவற்றை விட பெரிய காரியங்கள் செய்வதற்குக் காலமும் தேசமும் இன்னும் அதிகமா யிருக்கின்றன. நாம் நடுவில் நின்றுவிட முடியாதென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? மேற்செல்லாமல் நடுவில் நின்றோமோ, நாம் நாசமடைவது நிச்சயம். நாம் முன்னோக்கியாவது செல்லவேண்டும்; பின்னோக்கியாவது போகவேண்டும். அபிவிர்த்தியாவது அடையவேண்டும்; க்ஷீணகதியாவது அடையவேண்டும்; வேறு வழியில்லை. நமது முன்னோர்கள் பெருங் காரியங்களைச் செய்தார்கள். நாம் அவற்றைவிடப் பெருங் காரியங்களைச் செய்யவேண்டும். அப்படியிருக்க, நாம் எவ்வாறு

பின்னேக்கிச் சென்று க்ஷீண கதி யடையலாம்? ஒரு காலும் கூடாது. நாம் அப்படிச் செய்யவேபடாது. பின்னேக்கிச் சென்ருல் நாம் தாழ்மை யடைந்து அழிந்து போவது திண்ணம். ஆகையால், முன்னேக்கிச் சென்று பெரிய காரியங்களைச் செய்வோம். இதுதான் நான் உங்களுக்குச் சொல்லும் புத்திமதி. நான் அற்பமான ஆசார சீர்திருத்தங்களொன்றையும் எடுத்துச் சொல்லவந்தவனல்ல; தோஷங்களைப் பரிகரிக்கவும் நான் முயலவில்லை. நான் உங்களுக்குச் சொல்வதெல்லாங் கூடி, மாநுட அபிவிருத்தியின்பொருட்டு, நமது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட உத்தமமான அநுபவ நெறியை நீங்கள் கைப்பற்றி அதை முற்றுவிக்கவேண்டு மென்பதே. மனிதனது நித்தியத் தன்மையையும் தெய்வத்தன்மையையும் வற்புறுத்தும் வேதாந்த சம்பிரதாயத்தை நீங்கள் அநுஷ்டிக்கவேண்டுமென்றே நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவரையில் நம் நாட்டில் உண்டான மாறுதல்களையும், இனி உண்டாகப்போகும் மாறுதல்களையும் நம் முன்னோர்கள் முன்னதாகவே எதிர்பார்த்து அதற்குத் தகுந்தவாறு நாம் எந்தவிதமாய் நடக்கவேண்டு மென்பதைப்பற்றி ஒரு சிறிதும் விடாமல் விதிகள் ஏற்படுத்திப் போயிருப்பதை, எனக்கு அவகாச மிருக்குமாயின், உங்களுக்குச் சந்தோஷமாய் எடுத்துச் சொல்லுவேன். அவர்களும் ஜாதிக்கட்டை உடைத்திருக்கிருர்கள். ஆனல், அவர்கள் நமது தற்காலச் சீர்திருத்தக்காரர்களைப் போன்றவரல்லர். அவர்கள் ஜாதிக்கட்டை உடைத்ததின் கருத்து—

பட்டணத்திலுள்ளவர்க ளெல்லோரும் ஒன்றாய் உட்கார்ந்து கோமாம்ச பக்ஷணமும் மதுபானமும் செய்யவேண்டுமென்றாவது, நாட்டிலுள்ள சமஸ்த மூடர்களும் உன்மத்தர்களும் சேர்ந்து தமக் கிஷ்டமானவர்களை இஷ்டமான காலத்தில் இஷ்டமான விடத்தில், கால தேச பாத்திர விவஸ்தை யின்றி மணந்துகொள்ள வேண்டுமென்றாவது சிறிதேனுமன்று. அன்றியும், ஒரு நாட்டில் எவ்வளவு அதிகமாக விதவா விவாஹங்கள் நடக்கின்றனவோ, அவ்வளவு அதிகமாக அதன் செல்வமும் ஓங்கிநிற்கு மென்றாவது அவர்கள் நினைத்தவரல்லர். அப்படிப்பட்ட செல்வச் சிறப்பு வாய்ந்த நாட்டாரை நான் இதுகாறும் கண்டதில்லை. நமது முன்னோர்களால் வர்ணிக்கப்பட்டுள்ள உத்தம மனிதன் பிராமணனே. இந்தப் பிராமணத் தன்மையே நமது சமய நூல்களிலெல்லாம் சிறந்து விளங்குவது. பிற நாடுகளிலுள்ளோரர் தங்கள் வம்சத்திற்கு ஒரு கொடுங்கோலனை மலைக் கள்ளனை மூல புருஷனாக ஸ்தாபித்தாலன்றித் திருப்தி யடைகின்றார்களில்லை. மஹாராஜர்க்களும் மதாசாரியர்களும் அவ்வித வம்ச பாரம்பரியத்தைத் தமக்குத் தேடி நாட்டிக் கொள்வதிலேயே களிப்புறுகின்றார்கள். நம் தேசத்திலோ கௌபீனதாரியாய்க் காய் கிழங்குகளைத் தின்று வேதமோதிக் காட்டில் வாழும் ரிஷிகளையே ராஜாதி ராஜாக்களும் தங்கள் கோத்திரத்துக்கு மூல புருஷரென நாட்ட முயல்வார்கள். ஆகவே, நாம் கொண்டுள்ள மேற்குலத்துக்கும், பிற நாட்டாரின் மேற்குலங்களுக்கும் வித்தியாச முண்டு. ஞான வைராக்

கிய சீலனாய் விளங்கும் வேதியனே நமக்கு உத்தம புருஷன், அத்தகைய உத்தம பிராமணனிடத்தில் உலக வாசனை சிறிதேனு மின்றிப் பிரமஞானமே சிறந்து விளங்கும். அப்படிப்பட்ட பிராமணன் நாட்டுச் சட்டங்களுக்கு மேற்பட்டவ னென்றும், அவனைக் கட்டுப் படுத்தும் சட்டமே யில்லை யென்றும், அவன் ராஜாக் களின் ஆளுகைக்கு உட்பட்டவ னல்லவென்றும், அவன் தேகம் துன்பமுறா தென்றும் சொல்வதைக் கேட் டிருக்கின்றீர்களல்லவா? அது முழுவதும் உண்மையே. அதற்குச் சுவய காரிய துரந்தரர்களான மதியற்ற மூடர் கள் சொல்லும் பொருளைக் கொள்ளவேண்டாம். வேதா ந்த நூல்களில் கூறப்பட்ட உண்மைப் பொருளையே அதன் பொருளாகக் கொள்க! தன்னலத்தை யொழித்து, ஞான மும் அன்பும் பெற்று, அவற்றைப் பிறருக்கும் அளிக்க உழைப்பவனே பிராமணனாகில், அப்படிப்பட்ட பிராம ணர்கள், அதாவது தெய்வ பக்தியும் நல்லொழுக்கமும் வாய்ந்து விளங்கும் ஸ்திரீ புருஷர்கள் வாழும் தேசத்தைச் சட்டத்துக்கு மேற்பட்டதெனக் கருதுவது ஓராச்சரியமா? அவர்களை யாள்வதற்கு எந்த போலீஸ் வேண்டும்? எந்த சைநியம் வேண்டும்? அவர்களை ஆளவேண்டிய ஆவசியக மும் உளதோ? அவர்கள் ஏன் ஓர் அரசாட்சிக்குள் வாழவேண்டும்? அவர்களோ நல்லோராயும், உதார குண முள்ளவராயும், கடவுளைச் சேர்ந்தவர்களாயும் இருக்கின்றனர். அப்படிப்பட்டவரைத் தாம் உத்தம பிரா மணரெனக் கூறுகின்றோம். இனி, சத்திய (கிருத) யுகத்

திலே பிராமண ஜாதியொன்றுதான் இருந்ததாகப் புரா ணங்களில் தெரிய வருகின்றதல்லவா! ஆதியில் உலகத் திலே பிராமணர்களே இருந்தன ரெனவும், அவர்கள் கெட்டுப்போனமையால், பற்பல ஜாதியாராய்ப் பிரிந்ததாக வும், காலசக்கரம் மீண்டும் சுழன்று வரும்பொழுது அவர் கள் மறுபடியும் அந்தப் பிராமண ஜாதிக்கே திரும்பி வரு வார்க ளென்றும் மகா பாரதம் கூறுகின்றது இப்பொழுது அக் காலசக்கரம் சுழன்று வருகின்றமையால், இந்தச் சங் கதியைக் கவனிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளு கிறேன். ஆகவே, நாம் செய்யும் ஜாதிச் சீர்திருத்தமானது உயர்குலத்தோரை இழிகுலத்தாராக்கிக் கெடுப்பதன்று; விதிவிலக்கின்றி கண்டதைத் தின்பதும் கிடைத்ததைக் குடிப்பதுமன்று; அவரவர்களுக் கேற்பட்டிருக்கும் கட் டுத் திட்டங்களைக் கேவலம் சுகபோகத்தை வேண்டிக் கடந்து செல்வதுமன்று; மற்றென்னவெனில், நாம் அனை வரும் வேதாந்த மதத்திற் சொல்லியபடி யொழுகி ஆன்ம ஞானம் பெற்றுப் பிராமணத் தன்மை அடைவதேயாம். இந் நாட்டிலுள்ள பிராமணன் முதல் பறைய னீறாகவுள்ள எல்லா ஜாதியார்களும் முயன்று இப்படிப்பட்ட பிராம ணத் தன்மையை யடையவேண்டு மென்று உங்கள் ஒவ் வொருவருக்கும் ஒரு ஆஞ்ஞை உண்டாயிருக்கிறது.

இந்த வேதாந்தத்துக்கு உரிய இடம் இத்தேச மாத் திரமன்று; உலக முழுவதிலும் அதன் அதிகாரம் செல் லும். ஆகவே, நம் நாட்டின் வர்ணாசிரம கிரமமானது

சகல மானுட வர்க்கத்தையும் ஆதரவுடன் படிப்படியாய் மேலான மார்க்கத்தில் நடத்தி; நிர்வைரம், சாந்தி, ஸ்திரத்தன்மை, பரிசுத்தம், தெய்வபக்தி, தியானம் முதலிய சீலங்கள் வாய்ந்த உத்தம வாழ்க்கையில் நிலையுறச் செய்வதற் கேற்பட்ட சிறந்த சாதனமாம். அப்படிப்பட்ட சாதனமன்றோ தெய்வாம்சம் பொருந்தியது.

இக்காரியங்களை யெல்லாம் செய்து முடிப்ப தெப்படி? நிஷ்டுர வார்த்தைகளாலும், தூஷணைச் சொற்களாலும் யாதொரு நன்மையும் விளையாதென்று நான் மீண்டும் சொல்லுகின்றேன். அன்பின் வழியாகவும், அநுதாபத்தின் வழியாகவுமே நற் பயன்கள் உண்டாகும். இது பெரிய விஷய மாகையால் எனக்கு நாளுக்குநாள் இதைப் பற்றி யுண்டாகும் எண்ணங்களை எடுத்துரைக்கப் பல பிரசங்கங்கள் வேண்டும். ஆகவே, ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் உங்களை ஞாபகப்படுத்திவிட்டுப் பிரசங்கத்தை முடிக்கின்றேன். அதாவது, ஓ இந்துக்களே! நம் ஜாதி என்கிற கப்பலானது வாழ்நாளென்கிற மகா ஜலத்தில் அநேக காலமாகப் பலருக்கும் பயன்படும்படி போய்க் கொண்டிருக்கிறது இன்றைக்கோ அதில் சில ஓட்டைகள் உண்டாய் விட்டன. ஆகவே, இந் நாட்டின் குழந்தைகளாகிய நீங்களும் நானும் நம்மா லானவரையிலும் முயன்று அவ் வோட்டைகளை அடைக்கவேண்டும். இந்த அபாயத்தை நம் நாட்டாருக்குத் தெரிவிப்போம். அவர்கள் விழித்தெழுந்து காரியத்தைப் பார்க்கட்டும்,

ஜனங்களை யெழுப்பி அவர்களுக்கு நேர்ந்த நிலைமை யும், அதில் அவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் அறிவிக்கவேண்டி, இந் தேசத்தின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் வரையில், என்னாலானவரையில் உரத்த சத்தமிட்டுக் கூவுவேன். ஒருவேளை அவர்கள் நான் சொல் வதைக் கேளாவிட்டாலும், அவர்களைப்பற்றி ஒரு வசை மொழியேனும் தூஷணை வசனமேனும் உரையேன். சென்ற காலத்தில் நம்மவர் பெரிய காரியங்களைச் செய்த னர். இனி, எதிர்காலத்தில் அவற்றைவிடப் பெருங் காரி யங்களைச் செய்ய எம்மால் இயலாதாயின், நாம் எல்லோ ரும் ஒன்றாய் இறந்து முழுகிப்போய்விடுவோ மென்கிற தேறுதலாவது நமக்கிருக்கட்டும். தேசாபிமானிகளா யிருங்கள்! பூர்வகாலத்தில் நமக்காக இவ்வளவு பெருங் காரியங்களைச் செய்து முடித்த வம்சத்தை நேசியுங்கள்! உலகாநுபவம் எனக்கு அதிகமாக ஆக, என் ஸ்வ தேசத் தாராகிய உங்கள்மேல் எனக்கு அன்பு அதிக மாகின்றது. உங்களுக்கோ இதுவரையில் நேர்ந்ததெல்லாம் துன்பமே, சொல்லி முடியாத கொடுங்கோன்மைக்கெல்லாம் உட்பட் டிருந்தீர்கள். இதுவே இவ் வுலக மாயையின் விசித்திரத் திருவிளையாடலாம். ஆனால், நீங்கள் அதை லக்ஷ்யம் செய்ய வேண்டாம். காலக்கிரமத்தில் ஆத்மபக்ஷமே வெற்றி பெறும். அதுவரையில் நாம் சிரத்தையுடன் உழைப்போம். காற்றால் அடிபட்டுக் கால வியல்பால் மெலிந்துள்ள, முக்காலும் பரிசுத்தமான நம் தாய் நாட் டின் தர்ம ஸ்தாபனங்களைத் தூஷிக்காமலிருப்போம். மிக

வும் தாழ்ந்த மூடபக்தியாகவும் புத்தியற்ற சடங்காகவும் தோன்றுமவற்றைக்கூடக் கண்டித்துப் பேசவேண்டாம். ஏனெனில், அவற்றாலும் ஒரு காலத்தில் ஒரு நன்மை நிகழ்ந்திருக்கவேண்டும். இந் நாட்டின் வர்ணாசிரமாதி தர்மங்களை விட மேலான தர்மங்கள் உள்ள வேறொரு நாடும் இவ் வுலகத்தில் இல்லையென்பதை ஞாபகத்தில் வையுங்கள்! உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலுள்ள ஜாதி முறைமைகளையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அவையெவற்றிலுக்கும் நம்ஜாதி ஏற்பாட்டின் மேலான நோக்கமாயினும் கருத்தாயினும் கிடையாது. இவ்வாறு ஜாதியென்பது இன்றியமையாததென்றேற்படும் பக்ஷத்தில், செல்வத்தால் ஏற்பட்ட ஜாதியைவிட ஞான வைராக்கிய சீலங்களின் மேன்மையால் ஏற்படும் ஜாதியே எவ்விதத்திலும் சிறந்ததாகும். ஆகவே, எவ்வித தூஷணைங்களும் புரியவேண்டாம்! உங்கள் வாயை மூடிக்கொண்டு ஹிருதயங்களைத் திறவுங்கள்! இந் நாட்டிற்கு மாத்திரமன்றி உலக முழுமைக்கும் க்ஷேமமுண்டாகும்படி முயலுங்கள்! இந்தச் சுமை உங்கள் ஒவ்வொருவருடைய தோளிலும் இருப்பதாகக் கருதி உழையுங்கள்! அப்படி உழைக்குமிடத்துக் காரியசித்தி எத்தன்மைத்தாயிருப்பினும், ஒரு மஹத் காரியத்துக்காக உயிர் வாழ்ந்து மரித்தோமென்னும் திர்ப்தி உங்களுக்கிருக்கும். இக்காரியத்துக் குண்டாகும் ஜய சித்தியிலேயே மானுடவர்க்கத்தின் இம்மை மறுமைப் பயன்கள் நிலைபெற்றிருக்கின்றன.''

சுவாமிகள் பிறகு கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் பரிவாரத்துடன் பிரயாணமானார். முன் நடந்த மாதிரியாகவே உபசாரங்கள் வழி முழுதும் 'ஸ்டேஷன்'கள் தோறும் நடந்தன. மாயவர வாசிகள் 'ஸ்டேஷன் ப்ளாட்பார'த்திற்கு வந்து ஸ்வாமிகளைத் தரிசித்து வந்தனோபசாரம் அளித்தனர். அங்கே திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். அவ் வுபசாரத்துக்கு ஸ்வாமிகள் தக்கவாறு விடை பகர்ந்தவுடன், ஜனங்கள் ஜயகோஷம் செய்ய, வண்டித்தொடர் நகர்ந்து சென்றது.

---

## VII

[சென்னைக்கு விஜயம்—உபசாரனைகள்—பிரசங்கங்கள்]

'ஸ்வாமிகள் சென்னைக்கு வருகிறார்' என்கிற செய்தியைக் கேட்டுப் பல்லாயிரம் ஜனங்கள் அதிகாலையில் எழுந்து எழும்பூர் ஸ்டேஷனண்டைச் சென்றார்கள். நீதியதிபர் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் முதலானவர்கள் ஸ்வாமிகளையெதிர் கொண்டழைக்க ப்ளாட்பாரத்திற் கூடியிருந்தனர். பட்டணம் முழுவதும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே ஸ்டேஷனுக்குச் சென்று அவ்விடத்தை எள்விழற்கிடமின்றி நிறைந்திருக்க, ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டிருந்த ஸ்வாமிகள் வண்டியிலிருந்து இறங்கினார். உடனே அவரையும் அவரது சிஷ்யர்களையும் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் முதலிய பிரமுகர்கள் எதிர்கொண்டுபசரித்துப் பூமாலை யிட்டு வண்டியில் ஆரோஹணிக்கச் செய்தனர்.

பிறகு ஸ்வாமிகளேறிய வண்டி அசைய ஆரம்பித்தது. ஆண், பெண், பாலர், விருத்தர் உள்படப் பல்லாயிரம் ஜனங்கள் அவ் வண்டியைப் பின்பற்றி ஊர்கோலமாய் வந்தனர். ஸ்டேஷன் முதல் கடலோரத்தில் ஐஸ்மெத்தை வரையிலும் மகரதோரணங்களும், பூரண கும்பங்களும், வேறு பல இனிய காட்சிகளும் நிரம்பியிருந்தன. மார்க்கந் தோறும் பிரதான விடங்களிலெல்லாம் "பாரதகண்டத்து மாட்சிமை தங்கிய மைந்தராகிய விவேகாநந்தருக்கு நல்வரவு" என்ற மங்கள வசனம் வரையப்பட்டிருந்தது. அவ் விடங்களி லெல்லாம் ஸ்வாமிகளுக்கு உபசார பத்திரிகைகள் படிக்கப்பட்டன. வண்டியானது சிறிது தூரம் வந்த பிறகு, ஜனங்கள் அதிற்பூட்டி யிருந்த அசுவங்களை அவிழ்த்துவிட்டுத் தாமே வண்டியை யிழுத்துச் சென்றனர்.

ஸ்வாமிகள் இங்ஙனம் வழி முழுவதும் திவ்ய தேஜஸ் பிரகாசிக்கும் தம் முகாரவிந்தத்தால் அக் காட்சியைக் கண்டு களிக்க வந்திருந்த பல்லாயிரம் ஜனங்களுக்கும் நேத்திரானந்தத்தை விளைவித்துக் கடைசியாய் ஐஸ்மெத்தைக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது ஸ்ரீ பிலிகிரி ஐயங்கார் முதலியவர்கள் மங்கள வாத்திய கோஷத்துடன் ஸ்வாமிகளை எதிர்கொண்டுபசரித்து உள்ளே அழைத்துச் சென்று, ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமான் கோயிலிலிருந்து வரவழைக்கப்பெற்ற திவ்ய தீர்த்தத்தால் ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் செய்வித்து, அவரது கண்டத்தில் திருமாலை

சாத்திப் பனி நீர் தெளித்தனர். பிராமணோத்தமர்கள் வேதகோஷம் செய்து,

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃
𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃
𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇
𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 ।
𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌦𑍌 𑌸𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃
𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌲𑍀𑌨𑌸𑍍𑌯
𑌯𑌃 𑌪𑌰𑌃 𑌸 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

என்ற சுருதிகளால் மங்களாசாஸனம் செய்தனர். பிறகு ஸம்ஸ்கிருத காவ்ய நாடகாதி கலா விநோத சபையாகிய வித்வன் மனோரஞ்ஜநீ ஸமாஜத்தாரால் ஸம்ஸ்கிருத பாஷையில் ஒரு வந்தனோபசார பத்திரிகை வாசிக்கப்பட்டது. ஸ்வாமிகள் இவற்றையெல்லாம் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு வந்தவர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டார்.

அன்றைத்தினம் மாலை ஸ்வாமிகள் நகரவாசிகளைக் காணும்பொருட்டு விக்டோரியா ஹாலுக்குச் சென்றார். முதலில் ஹாலுக்குட் சென்று அங்கே சென்னை வாசிகளின் உபசாரப் பத்திரிகையையும், கேத்திரி மஹாராஜா அனுப்பியிருந்த உபசாரப் பத்திரிகையையும் வாசிக்கக் கேட்டார்.

பிறகு அவர் ஹாலைவிட்டு வெளியேவந்து கோச் வண்டி ஒன்றில் உந்நத ஸ்தானத்தில் ஏறிக்கொண்டு பேசத் தொடங்கினார். அப்பொழுது அவரைப் பார்த்து அவரது பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்த ஜனங்களின் தொகை சுமார் பதினாயிர மிருக்கும். அவர் பேசுவதை அத்தனை ஜனங்களும் கேட்க முடியா தாகையால், எல்லோரும் கேட்கவேண்டுமென்று மாசையால் வண்டியின் சமீபத்துக்கு வர முயன்றதில், அதிக ஜன நெருக்கத்தால் சபையை நடத்த முடியாமற் போய்விட்டது. ஆனபோதிலும் ஸ்வாமிகள் பின் வருமாறு சுருக்கமாய்ப் பதிலுரைத்தார்:—

"மனிதன் ஒன்று நினைத்தால் தெய்வம் மற்றொன்று நினைக்கின்றது. வந்தனோபசாரங்களும் அவற்றிற்குப் பிரதிவசனங்களும் ஆங்கிலேய பத்ததியில் நடக்கவேண்டுமென்று யோசனை செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஈசுவர சங்கற்பம் அதை மாற்றிவிட்டது. அன்று ஸ்ரீ கிருஷ்ணன், போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததுபோல், நானும் இப் பரந்த வெளியில் இரதத்தின் மேலேறிப் பிரசங்கிக்கும் பாக்கியம் பெற்றேன். அதன் பொருட்டு நாம் திருவருளைத் துதிப்போமாக. இப்படி நேர்ந்ததும் எனக்கோர் உற்சாகத்தை யளிக்கின்றது. உங்கள் எல்லோருக்கும் கேட்கும்படி என்னால் பேச முடியுமோ என்னவோ தெரியாது. ஆயினும், என்னாலானவரையில் முயன்று பார்க்கிறேன். பரந்த வெளியில் இத்தனை ஜனங்களுக்கு

முன் பிரசங்கிக்கும்படியான சமயம் இதற்குமுன் ஒரு போதும் எனக்கு வாய்க்கவில்லை. கொழும்பு முதல் சென்னை வந்துசேரும் வரையிலும் எனக்கு அதிக மன மகிழ்ச்சியுடன் செய்யப்பட்ட உபசாரங்களையும், இனியும் நடக்கப்போவதாகத் தோன்றும் உபசாரங்களையும் நோக்கும்போது எனக்குண்டாகும் ஆநந்தத்தைச் சொல்லி முடியாது. இதனால் ஹிந்துக்களுக்கு மதத்தில் எவ்வளவு பக்தி இருக்கிறதென்று நிரூபணமாகின்றது. அதன் பொருட்டே நான் சந்தோஷிக்கிறேன். மற்ற நாடுகளி லெல்லாம் ஜனங்களுக்கு ராஜாங்கத் தொழில் வர்த்தகம் முதலியவற்றில் நோக்கமேயன்றி, மதத்தில் அவ்வளவு பிடிப்பில்லை. ஹிந்து ஜாதியார்களே இதில் சிறப்பெய்தின வர்கள். இல்லாவிடில் எந்நாட்டிலாவது பிக்ஷை யெடுக் கும் சந்நியாசிக்கு இவ்வளவு உபசாரம் நடக்குமா? இப் பொழுது உலகத்திலுள்ள ஜாதியார்கள் இரண்டு கடின மான விஷயங்களை ஆராய்வதில் பிரவிர்த்தித் திருக்கிறார் கள். அவற்றுள் ஒரு விஷயத்தை இந்தியா மேற்கொண் டது. மற்றொன்றைப் பிறநாட்டார்கள் கொண்டனர். அந்த விஷய மென்னவெனில், ‘எது நித்தியமான பிரயோஜ னம்? எதனால் ஒரு ஜாதியார் அழியாமல் ஜீவித்திருக்கக் கூடும்? அஹிம்ஸை அன்பா? அல்லது பகைமையா? சுகபோக மா? அல்லது வைராக்கிய சீலமா? இந்த லோகயாத்திரை யென்னும் போராட்டத்தில் ஜடம் வெற்றி பெறுமா? சித்தி வெற்றி பெறுமா?’ என்பதே. இவ் விஷயத்தை நம் முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆராய்ந்து

சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். அச் சித்தாந்தமாவது: வைராக்கிய சீலமும், அதிகார வெறுப்பும், அன்புடைமையுமே நித்திய சுகத்துக்கு வழியெனக் கொள்ளும் கொள்கையாம். இதற்கு நிதர்சனம் உலக சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். எத்தனையோ தேசத்தார்கள் சிலகாலம் சிறப்புற்றோங்கி உயர்ந்த நிலையடைந்து க்ஷணப்போது அதிகார வைபவத்தால் பூரிப்புடன் வாழ்ந்து, பிறகு நீரின் மேற் றோன்றும் குமிழிபோல் அழிந்துபட்டனர். நம் மஹா ஜாதியோ எத்தனை இடுக்கண்கள் தோன்றி அதை யழிக்க முயன்றும், இன்னும் சாசுவதமா யிருக்கின்றதல்லவா? இதற்குக் காரணமென்ன? நம் நாட்டிலுள்ள வைராக்கியசீலமே. வைராக்கிய மில்லாத வொரு சமயநெறியும் தழைத்திருக்க முடியுமோ? ஐரோப்பிய ஜாதியார்களோ, "ஒருவன் எவ்வளவு செல்வம் சம்பாதிக்கலாம்? எவ்வளவு அதிகாரம் பெறலாம்?" என்று யோசித்து, அவை கைகூடுவதற்கு வேண்டிய உபாயங்களை யெல்லாம் செய்கின்றனர். அதனால் ஜனங்களுக்குள் போட்டியும், பகையும், கொடுமையும் உண்டாகின்றன. இதுவே ஐரோப்பாவின் தற்கால நிலை. நாமோ வர்ணாசிரம தர்மமென்னும் சிறந்த சாதனத்தைக் கைக்கொண் டிருக்கின்றோமாதலால், ஜனங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் போட்டி போடாமல், குரூர சிந்தையை மறந்து தத்தம் ஜாதி தர்மங்களை நடத்தப் பரமார்த்தத்தையும் பெறுகின்றனர்."

ஜனக்கூட்டம் வரவர அதிகமாய்க்கொண்டு வந்தமையால், அவர்க ளெல்லோருக்கும் கேட்கும்படி பிரசங்கிக்க

ஸ்வாமிகளால் முடியாமற்போய்விட்டது. ஆகவே, அவர் பின் வருமாறு பிரசங்கத்தை முடித்தார்.

"பிறகு மற்றொரு சமயம் சாவகாசமாய் நாம் சலந்து பேசலாம். இப்போது இவ்வளவுமட்டும் போதும். போய் வாருங்கள்.

நாற்புறமும் திரும்பி உங்களைப் பார்த்துப் பிரசங்கிப்பது அசாத்தியம். நீங்கள் இன்றைக்கு என்னைப் பார்த்ததுடன் மாத்திரம் திருப்தியடையவேண்டும். மற்றொரு சமயம் விவரமாய்ப் பிரசங்கம் செய்கின்றேன். நீங்கள் உற்சாகத்துடன் நல்வரவு கூறிச் செய்த உபசாரத்தினால் நான் கிருதார்த்தனானேன்."

சுவாமிகள் ஒரு வாரத்துக்குமேல் சென்னையில் தங்கியிருந்து ஆறு பிரசங்கங்கள் செய்தார். அவை தவிர, சீர்திருத்தக்காரர் சபையிலும், அன்னதான ஸமாஜத்திலும் பேசினார். வித்வந்மனோரஞ்நீ சபையார் வேதாந்த நாடகமாகிய பிரபோதசந்திரோதயத்தை சுவாமிகளின் விஜயத்தைப் பெருமைப்படுத்தவேண்டி விக்டோரியா நகரமண்டபத்தில் அபிநயித்தபொழுது, அதைக் காண எழுந்தருளுமாறு அச் சபையார் அவரை வேண்டிக்கொள்ள, அவரும் அதற்கிசைந்து நகரமண்டபம்சென்று, அந் நாடகப் பிரயோகத்தைக் கண்ணுற்று, அச் சபையின் முக்கிய அங்கத்தினரான தக்ஷிண தேசத்துப் பிராம்மணரின் சுத்தமான ஸம்ஸ்கிருதோச்சாரணத்தின் அழகைப் புகழ்ந்து கொண்டாடினர்.

# VIII

## சென்னையில் முதற் பிரசங்கம்.

### என் யுத்த ஸந்நாஹம்.

1897ஹு பிப்ரவரிமீ 9உ மாலை சென்னை விக்டோரியா நகர மண்டபமானது ஸ்வாமிகளின் உபந்யாசத்தைக் கேட்க வந்திருந்த பிரதான பெரிய மனிதர்களாலும் மாணுக்கர்களாலும் நிறைக்கப் பட்டிருந்தது. டிக்கட்டுகள் வைத்தபோதிலும் ஆள் நிற்கக்கூடப் போதுமான இடம் கிடைக்கவில்லை. ஸ்வாமிகளின் பிரசங்கமானது இடி முழக்கம்போல் முழக்கிக் கேட்பவர்களை மந்திரத்தால் கட்டுப்பட்டவர்போல் ஆக்கிவிட்டது. அவருடைய உண்மையான மனதும், அவருடைய உற்சாகமும் வல்லமையும், அவருடைய வாக்ஜாலமும் கேட்டவர்களைப் பரவசம் செய்யத்தக்கதாயிருந்தன.

"அன்றைத் தினம் கூட்டமாயிருந்தமையால் பிரசங்கத்தை முடிக்க முடியாமற்போய்விட்டது. சென்னை வாசிகள் என்னிடத்தில் ஒருங்கே காட்டிவந்த கருணைக்காக அவர்கள் பால் எனக்குள்ள நன்றியறிவை இச் சமயத்தில் தெரிவிக்கின்றேன். அவ்வுபசார பத்திரிகைகள் ஒவ்வொன்றிலும் விளங்கிய அழகிய வசனங்களுக்காக என் நன்றியை எவ்வாறு காட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை. கருணை நிரம்பிய அவ் வுதார வசனங்களுக்கு என்னை யுரியவனாக்க வேண்டுமென்றே நான் பகவானைப் பிரார்த்திக்கின்றேன். என் வாழ்நாள் முழுவதும் நம் மதத்தின் பொருட்டும் நம் தாய்நாட்டின் பொருட்டும் நான்

உழைப்பேனாக! அக் காரியத்தைச் செய்ய நான் தகுதியுடையவனா யிருக்குமாறு கடவுள் அருள் புரிவாராக! கனவான்களே! என்னிடத்தில் எத்தனையோ பிழைகள் இருப்பினும், ஒரு சிறிது தைரியமும் இருக்கிறதென்று நினைக்கின்றேன். நான் இந்தியாவிலிருந்து மேற்றிசைக்கு ஒரு தூது மொழியுடன் சென்றிருந்தேன். அதை அமெரிக்கர் முன்னும், ஆங்கிலேயர் முன்னும் தைரியமாய் உரைத்தேன். இன்றைய விஷயத்தைத் துவக்கு முன் உங்கள் அனைவருக்கும் சில தைரியமான வசனங்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னை அதைரியப் படுத்தி, என் காரிய விர்த்தியை எதிர்த்து, கூடுமானால் என்னையும் நசுக்கி ஒழித்துவிடச் சில பிரயத்னங்கள் செய்யப்பட்டன. ஆனால், எம்பெருமான் திருவருளால் அவை ஒன்றும் சாயவில்லை. அத்தகைய முயற்சியின் பயன் எப்பொழுதும் அப்படித்தானே முடியும். ஆபினும், சென்ற மூன்று வருஷங்களாகச் சிறிது மனஸ்தாபம் மாத்திரம் இருந்து கொண்டே வந்தது. நானும் அயல் நாடுகளில் இருந்த வரையில், அதைப்பற்றி ஒரு சொல்லேனும் பேசாமல் வாய் பொத்தி யிருந்தேன். இப்பொழுதோ, என் தாய் நாட்டின் மண்மேல் நான் வந்து நிற்கின்றபடியால், விவரமாய்ச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். நான் சொல்லப் போகும் இவ் வார்த்தைகளின் முடிவு என்னவாகுமெனக் கருதியாவது, இவ் வசனங்களால் உங்கள் உள்ளங்களில் எவ்வகையான உணர்ச்சி யுண்டாகுமென் றெதிர்பார்த்தாவது நான் பேசவில்லை. அதைப்

பற்றி எனக்குச் சிறிதேனும் கவலை யில்லை. நான்கு வருஷங்களுக்கு முன் தண்டகமண்டலு தாரியாய் உங்களுக்கு வந்த அதே சந்நியாசி யாகத்தான் நான் இன்றைக்கும் இருக்கின்றேன். அதே விரிந்த உலகந்தான் இப்பொழுதும் என் முன் இருக்கின்றது. இனி, அதிக பீடிகை யின்றி நான் சொல்லவேண்டியதை ஆரம்பிக்கிறேன். முதலாவது, திவ்யஜ்ஞான (தியசாபிகல்) சங்கத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவேண்டி யிருக்கிறது. திவ்யஜ்ஞான சங்கத்தால் இந்தியாவுக்குக் கொஞ்சம் உபகாரம் செய்யப்பட் டிருக்கிறதென்று நாம் சொல்லாமலே அமையும். அதுவரையில் அந்தச் சங்கத்தாருக்கு, அதிலும் முக்கியமாய் Mrs. அன்னிபெஸன்ட்டுக்கு, எல்லா இந்துக்களும் நன்றியுள்ளவரா யிருக்கின்றனர். பெஸன்ட் அம்மையைப்பற்றி எனக்குத் தெரிந்தது வெகு சொற்பமாயினும், நான் அறிந்தமட்டில், அவள் நம் தாய் நாட்டின் க்ஷேமத்தை உள்ளன்புடன் நாடினவளென்றும், நம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவரத் தன்னா லியன்றவளவும் சிறிதும் வஞ்சனையின்றி உழைத்து வருபவளென்றும் என் மனத்துக்குப் பட்டிருக்கின்றது. அதற்காக உண்மையான இந்தியன் ஒவ்வொருவனும் அவளிடத்தில் என்றென்றைக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவனே. அவளுக்கும் அவளைச் சேர்ந்தவர்களுக்கும் என்றென்றைக்கும் தேவாநுக்ரஹம் மேன்மேலும் உண்டாகுக. ஆனால், அது வேறு சங்கதி, திவ்யஜ்ஞான சங்கத்தைச் சேருவது மற்றொரு சங்கதி. கௌரவமும், மதிப்பும், அன்புடைமை

யும் ஒரு விஷயம். ஒருவர் சொல்வதை யெல்லாம் யுக்திக் குப் பொருந்திப் பாராமலும், சீர் தூக்கிப் பாராமலும் விழுங்கிவிடுவது வேறு விஷயம். இது நிற்க, அமெரிக்கா விலும் இங்கிலாந்திலும் என்றாற் செய்து முடிக்கப்பட்ட சில காரியங்களுக்கு திவ்யஜ்ஞான சங்கத்தாரே துணையா யிருந்தவர் என்றதோர் வதந்தி யுலாவி வருகின்றது. அவ் வதந்தி யவ்வளவும் தப்பு வார்த்தை யென்றும், பொய் யுரை யென்றும் நான் உங்களுக்கு வெளிப்படையாய்ச் சொல்வேன். நாங்கள் உதாரமான கொள்கை யுடையவர்க ளென்றும், எம்மினும் வேறுபட்டவரது அபிப்பிராயங்க ளினும் நாங்கள் சமரஸத்தன்மை பாராட்டுகின்றவர் என்றும் வீணுரை கூறுபவரை இவ் வுலகத்திற் பலரைப் பார்த்திருக்கின்றோம். அவர்கள் கூறுவதுபோலவே செய் கையிலும் இருந்தால் மிகவும் நன்மையே. ஆனால், அவர் கள் சொல்வதை யெல்லாம் நான் நம்பிக்கொண் டிருக்கும் வரையிலும்தான் அவர்கள் என்னிடம் பிரீதி பாராட்டு வார்கள். அவர்கள் சொல்வதை நான் கொஞ்சம் தைரிய மாய் ஆக்ஷேபிக்கத் தொடங்கிவிட்டாலோ, உடனே அந் தப் பிரீதியும் அன்பும் எங்கோ ஓடிப்போய் விடுகின்றன. மற்றும் சிலர், தூங்குகிறவன் தொடையில் திரித்தமட்டும் லாபமென்று பிறரைத் தங்கள் மதத்தில் சேர்ப்பதிலேயே விழிப்பாயிருந்து உழைத்து வருகிறார்கள். அவர்கள் காரி யத்துக்கு ஏதாவது பங்கம் நேர்ந்துவிட்டால், அவர்களுக் குண்டாகும் வயிற்றெரிச்சலும் துவேஷமும் இவ்வள வென்று சொல்லி முடியாது. அப்புறம் அவர்களுக்கு

இன்னதுதான் செய்யலாமென்று தெரிவதில்லை. இந்துக்கள் தங்கள் வீடுகளைப் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ள முயன்றால், பாதிரிகளுக் குண்டாகும் கெடுதியென்ன? இந்துக்கள் தம்மைத் தாமே சீர்திருத்திக்கொள்ள தம்மாலான வரையிலும் முயன்றால், பிராஹ்ம ஸமாஜிகளுக்கும் மற்றைச் சீர்திருத்த சபைகளுக்கும் வரும் ஹானி என்ன? அவர்கள் ஏன் இம் முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்க வேண்டும்? ஏனென்றுதானே நான் கேட்கிறேன்? ஆனால், அவர்களது த்வேஷத்துக்கும் பொறாமைக்கு முள்ள உக்கிரத் தன்மையைப் பார்த்தால், ஏன், எப்படி என்ற கேள்விகளைக் கேட்பதற்குச் சாத்தியமில்லை யெனத் தோன்றுகிறது.

இன்னொரு சங்கதி. சீர்திருத்தக்காரர்களின் பத்திரிகையொன்றில் நான் சூத்திர னென்றும், சூத்திரனுக்கு ஸந்நியாஸத்தில் அதிகார மேதென்றும் எழுதியிருப்பதைப் படித்தேன். அதற்கு நான் சொல்வ தென்னவெனில், நான் சூத்திரஜாதியானால், அந்தப் பத்திராதிபர் பறைச்சாதியைச் சேர்ந்தவர். ஒவ்வொரு பிராமணனும் "யமாய தர்ம ராஜாய சித்ர குப்தாய வை நம:" என்ற மந்திரத்தைக் சொல்லி எவருடைய திருவடிகளைப் பணிகின்றேனோ, எவருடைய வம்சஸ்தர்கள் உத்தம க்ஷத்திரியராய் விளங்குகின்றனரோ, அத்தகைய மஹானே எங்கள் வம்சத்தின் மூல புருஷனென்று அறியுங்கள்! இதிஹாஸ புராணங்கள் பிரமாண நூல்களாயின், எங்கள் வம்

சத்தார் முற்காலத்தில் இந் நாட்டிற்குச் செய்த உபகாரங்கள் ஒருபுற மிருக்க, அவர்கள் இந்தியாவின் பாதி பாகத்தைப் பல நூற்றாண்டுகளாய் ஆண்டு வந்தார்க ளென்பதை இந்த வங்காளச் சீர்திருத்தக்காரர் அறியக்கடவர். எங்கள் ஜாதியைக் கணக்கில் எடுக்காவிடில், இந்தியாவின் தற்கால நாகரிகத்தில் எவ்வளவு மிகுந்து நிற்கும்? ஒரு பங்காளத்தில் மாத்திரம் உண்டான சிறந்த தத்துவசாஸ்திரிகளும், கவிச்சிரேஷ்டரும், சரித்திர நூலாசிரியரும், புராதன சாஸன பரிசோதகரும், மதப்பிரவர்த்தகர்களும் எங்கள் ஜாதியிலன்றோ பிறந்தவர்கள் தற்கால இந்திய சாஸ்திர விற்பன்னருக்குள் சிறந்தவராய் விளங்கும் ஸ்ரீ ஜகதீச சந்திரபசு எங்கள் ஜாதியைச் சேர்ந்தவர்தானே? என் ஜாதியா சூத்திரஜாதி! அப்பொழுது இந்தப் பத்திராதிபன் பறைய னென்பதற் காக்ஷேபணையே யில்லை. நம் சரித்திரத்தையே அவர் சிறிது அறிந்துகொண்டிருக்கவேண்டும்; முதன் மூன்று ஜாதிகளின் தர்மங்களைப் பற்றியும் சிறிது தெரிந்துகொண்டிருக்க வேண்டும். பிராமண க்ஷத்திரிய வைசியர் என்னும் மூன்று வர்ணத்தாருக்கும் வேதாத்தியயனத்திலும் ஸந்நியாஸத்திலும் ஸமாநாதிகார முண்டென்பதை இவர் அறிந்து பேசியிருக்கவேண்டும்.

இதெல்லாம் பிரஸ்தாபத்துக்கு வந்ததினால் சொன்னேனேயன்றி வேறில்லை. அவர்கள் என்னைச் சூத்திரனென்று சொன்னதினால் எனக்குக் கொஞ்சமாவது வருத்தமில்லை. என் முன்னோர்கள் ஏழைகளிடத்தில் காட்

டிய கொடுமைக்கு இவ்வேதார் சிறிய பரிஹாரமாகும். நான் பறையனாயின் எனக்கு இன்னும் சந்தோஷமே. ஏனெனில், என் குருநாதன் தான் பிராமணோத்தமனாயிருந்தும் ஒரு பறையனுடைய வீட்டைச் சுத்திசெய்ய திருவுள்ளங் கொண்ட மஹாநுபாவனன்றோ? ஆனால், இப் பறையன் அவரை அவ்வாறு செய்யவிடவில்லை. அப்படிச் செய்ய விட அவனுக்கு எவ்வாறு மனம் வரும்? இந்தப் பிராமண சந்நியாசியே அவனுடைய வீட்டுக்குப் போய்ச் சுத்தி செய்வது! ஆனால், இவர் நள்ளிரவில் எழுந்து ஒருவருக்கும் தெரியாமல் அந்தப் பறையன் வீட்டில் நுழைந்து அவனுடைய கக்கூஸைச் சுத்திசெய்து தன் நீண்ட மயிரால் அவ்விடத்தைத் துடைத்தார். தாம் எல்லாருக்கு தாஸானுதாஸனாய் இருக்கவேண்டி அவர் இப்படிப் பல நாள் செய்து வந்தார். அபபடிப்பட்டவரது திருவடிகளையன்றோ யான் என் சென்னிமேல் தாங்கி நிற்கின்றேன். அவரே என் நாயகன். நாயகனது சிறந்த வொழுக்கத்தையே நான் பின்பற்றி நடக்க முயல்வேன். அப்படியல்லவோ இந்துவாயுள்ளவன் உங்களை முன்னுக்குக் கொண்டுவரப் பார்க்கின்றான். இந்துக்கள் இந் நாட்டுப் பாமர ஜனங்களை அயல் நாட்டுப் பழக்கங்களின் கலப்பின்றி இவ்வாறுதான் முன்னுக்குக் கொண்டுவருவார்கள். சென்ற இருபது வருஷமாய் இந்நாட்டில் வேரூன்றியுள்ள மேற்றிசை நாகரிகத்தில் பழகின் தேரிய வொருவன் அயல் நாட்டில் தன் சொந்த நண்பன் பேரும் பிரதாபமும் பெற்று விளங்குவதைக் கண்டு சகியாது, தன் சம்பாத்தி

யத்துக்கு அவனை பொருவிகாதமெனக் கருதி, அந் நண்பனுக்கு அன்னபானாதிகள் அகப்படவொட்டாமல் தடுக்கப் பார்க்கிறான். இதுவே மேற்றிசை நாகரிகத்தினால் விளைந்த பெரும் பயன், மற்றொரு மஹா புருஷனோஸ்வதேசத்தி லுள்ள கலப்பில்லாத பரிசுத்த வைதிக இந்துமதம் எப் படி யுபகரிக்குமென்பதற்குச் சிறந்த நிதர்சனமாய் விளங்குகிறார். நமது சீர்திருத்த நேசர்களில் எவரேனும் ஒரு பறைபனுடைய கக்கூஸைச் சுத்திசெய்து அதைத் தன் மயிரால் துடைக்கச் சித்தமாயிருக்கும் ஒழுக்கத்தை வெளியிடட்டும். அந்த க்ஷணமே நான் அவன் பாதாரவிந்தங்களில் படிந்து அவன் சொல்வதைக் கேட்கிறேன். அதுவரையில் நான் அவர்களை மதியேன். இருபதினாயிரம் மணங்கு மஹாப் பிரசங்கங்களைக் காட்டிலும் அரைபலம் அநுஷ்டானம் எவ்வளவோ மேலானதென்க.

இனி, சென்னையிலுள்ள சீர்திருத்தச் சங்கங்களைப் பற்றிப் பேசுவோம். அச் சங்கத்தார் என் விஷயத்தில் அதிக பட்சம் காட்டியிருக்கிறார்கள்; அன்புள்ள மொழிகளைப் பேசியிருக்கிறார்கள். வங்காளத்துச் சீர்திருத்தக் காரர்களுக்கும் சென்னைச் சீர்திருத்தக்காரர்களுக்கும் பேதமிருக்கிறதென்று அவர்கள் சொல்லியிருப்பதை நானும் மனப் பூர்வமாய் அங்கீகரிக்கின்றேனை. இப்பொழுது சென்னை ராஜதானியானது வெகு நேர்த்தியான நிலையிலிருக்கிறதென்று நான் பல தடவைகளிலும் சொல்லியுள்ளது உங்களில் அநேகருக்கு ஞாபகத்தில்

இருக்கலாம். வங்காளத்தில் சீர்திருத்தமும் அதன்மேல் வைதிகாபிவிருத்தியும் உண்டாகி ஒன்றுடனொன்று முரணிக்கொண் டிருக்கின்றன. அத்தகைய முரண்கள் சென்னையில் இல்லை. இங்கே முதலிலிருந்து படிப்படியாய் அபிவிருத்தியே காணப்படுகின்றது. ஆகவே, சென்னைச் சீர்திருத்தக்காரர்கள் சொல்லுகிறபடி வங்காளிகளுக்கும் சென்னை வாசிகளுக்கும் பேதம் உள்ளதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அவர்களுக்குத் தெரியாத வித்தியாசம் இன்னொன்றிருக்கிறது. இந்தச் சீர்திருத்தச் சங்கத்தாரில் சிலர் என்னைப் பயமுறுத்தித் தங்கள் சங்கத்தில் சேரச் செய்ய எண்ணங் கொண்டாற்போலிருக்கிறது. அது சாயாத காரியமென்பதை அவர்களறியக்கடவர்! சென்ற பதினான்கு வருஷங்களாகப் பசிப்பிணியைப் பிரத்தியக்ஷமாய் அநுபவித்துக் கொண்டு வந்து, அடுத்த நாள் இன்ன அன்னம் கிடைக்கும், இந்த இடத்தில் தூங்குவோம், என்றறியாமல் திரிந்தவனை அவ்வளவு சுலபமாய்ப் பயமுறுத்திவிட முடியாது. கௌபீனதாரியாய் அத்தியந்த சீதளப்பிரதேசங்களில் சஞ்சரித்தவனை இந்தியாவில் அவ்வளவு சுலபமாய் ஏய்க்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு முதலில் நான் இப்படிச்சொல்வேன். எனக்குச் சொந்தமான சங்கற்பம் சிறிது உண்டு. எனக்கும் கொஞ்சம் அநுபவமிருக்கிறது. உலகத்துக்கு நான் சொல்ல வேண்டிய தூதுமொழியொன்றுண்டு. அதை நான் துணிவோடும் பிற்காலத்தைப் பற்றிக் கருதாமலும் சொல்வேன். சீர்திருத்தக்காரர் வங்

தால்—உங்களைவிட நான் பெரிய சீர்திருத்தக்காரன் என்று அவர்களுடன் சொல்வேன். அவர்கள், இங்கு மங் கும் துண்டு துண்டாயன்றோ திருத்தம் செய்யவேண்டு மென்கிறார்கள்; நானோ வேரோடு திருத்த வேண்டுமென் பேன். அவர்கள், இருப்பதை அழிக்கவேண்டு மென்கிறார் கள்; நானோ, இருப்பதை வைத்துக்கொண்டு அதன் மேல் கட்டடம் கட்டவேண்டு மென்கிறேன். மேல் பூச்சான சீர் திருத்தத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. அடியிலிருந்து உண்டாகும் அபிவிருத்தியிலேயே எனக்கு நம்பிக்கை. யில்லை. அடியிலிருந்து உண்டாகும் அபிவிருத்தியிலேயே எனக்கு நம்பிக்கை. கடவுளின் ஸ்தானத்தில் நின்று கொண்டு ‘‘இந்த வழியேதான் நீங்கள் போகவேண்டும், அந்தவழி கூடாது’’ என்று நம் ஜன ஸமூகத்தைப்பார்த் துச் சொல்லும் துணிவு எனக்கு வரவில்லை. முன் ஸ்ரீ ராமன் கட்டிய அணைக்கு உதவி புரிந்த அணிலானது தன் சக்திக்குத் தக்கவாறு ஏதோ சிறிது மணலைத்தானே கொண்டுவந்து போட்டது. அவ்வளவு சொற்ப சகாயமா வது என்னால் நம் நாட்டுக்குக் கிடைத்தால் அதுவே என பாக்கியமாகும். நமது ஜாதியாகிய அற்புதமான யந்திரம் இத்தனை யுகங்களாக வேலைசெய்து வந்திருக்கிறது. இந்த ஜாதியென்னும் அற்புத மஹா நதியானது நம் முன் பிரவ ஹித்துக்கொண் டிருக்கிறது. அது நல்லதுதானா என்ப தும், அது எப்படி இயங்கவேண்டு மென்பதும் யாருக்குத் தெரியும்? எத்தனையோ ஆயிரம் நிலைமைகள் அதைச் சூழ்ந்துகொண்டு அதற்குச் சிறப்பு வகையான ஒரு பிர

விர்த்தியை யுண்டுபண்ணி, அதைச் சில சமயம் மந்தகதி யுடையதாகவும் சில சமயம் வேகமுள்ளதாகவும் செய்து வருகின்றன. அதன் சலனத்தை நியமிக்கும் சாஹஸம் எவருக்குண்டு? கீதையிற் சொல்லியபடி, நம் கடமையைச் செய்துவிட்டு, நிர்ப்பயமாய்ப் பக்கத்தில் நின்றிருக்க வேண்டியதே நாம் செய்யக்கூடியது. அதற்கு வேண்டிய சாதனங்களைக் கொண்டு அதை நாம் போஷிக்கலாமேயன்றி, அதன்மேல் உண்டாகும் வளர்ச்சி அதனுடையதே. இப்படித்தான் வளரவேண்டுமென்று அதற்கு யாரும் சட்டளையிட முடியாது. நமது சங்கத்தில் தோஷங்கள் ஏராளமா யிருக்கின்றன. ஏனைய ஒவ்வொரு சங்கத்திலும் அப்படித்தான் தோஷங்கள் இருக்கின்றன. இங்கே விதவைகளின் கண்ணீரால் தரை நனைந்திருந்தால், அங்கே மேற்றிசையில், கல்யாண மாகாத கன்னியர் விம்மி விம்மித் துயருற்று விடும் சுவாஸத்தால் காற்று கலுஷிதமாகின்றது. இங்கே வறுமைப் பிணியானது உலகவாழ்க்கையை வருத்துகின்றது; அங்கே மிதமிஞ்சின சுகபோகத்தால் வாழ்க்கையில் வெறுப்புண்டாகி அவர்களைப் பிணிபோல் பீடிக்கின்றது. இங்கே வயிற்றிற்குத் தின்ன ஒன்று மில்லாக் குறையால் ஜனங்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்; அங்கேயோ, இவ்வளவு அதிகமாய்த் தின்பதற்கிருக்கிறதே யென்று பிரமித்துக் தற்கொலை புரிந்து கொள்ளுகிறார்கள். முடக்கு வாயுவைப்போல் தோஷங்கள் எங்குமே இருக்கின்றன. அதைக் காலிலிருந்து துரத்தினால் தலைக்கேறுகிறது; அங்கிருந்து வந்

ளால் இன்னொ ரிடத்திற்குப் போகிறது; கடைசியில் இடத்துக்கிடம் தூரத்தி வேட்டையாடுவதாய் முடியுமே யன்றி வேறில்லை. ஆகவே, குழந்தைகளே! தோஷத்தைப் பரிஹரித்தலே உண்மை வழியாம். நமது ஞானசாஸ்திரமோ, நன்மையும் தீமையும் பிரிக்கப்படாத நித்திய சம்பந்த முடையவை யென்றும், அவை, ஒரே நாணயத்தின் முன் பின் பக்கங்களைப் போன்றவை யென்றும் போதிக்கின்றது. ஒன்று வேண்டுமானால், இன்னொன்றையும் அநுபவித்துத்தான் தீரவேண்டும். கடலில் ஓர் அலை உண்டானால், இன்னோரிடம் அதற்குத் தக்கபடி குழிந்தே யாகவேண்டும். அதுமாத்திரமா? வாழ்க்கை அவ்வளவும் துக்கம் நிறைந்தே யிருக்கின்றது. நாம் ஒரு மூச்சு விட்டாலும் அதினால் எத்தனையோ சூக்ஷ்மப் பிராணிகள் மடிகின்றன. இன்னொருவனைப் பட்டினிபோடாமல் ஒரு கவளம் அன்னமாவது நாம் உண்பதில்லை. இதுவே உலக ரீதியாய் இருக்கின்றது. ஆகவே, நாம் எவ்வளவு பேசினாலும், உண்மையில் தோஷ பரிஹார மாவதில்லை. நன்மையும் தீமையும் எவ்விதத்திலும் கலந்திருப்பதால், ஜனங்களுக்குக் கல்வியைப் புகட்டுவதே தோஷங்களால் உண்டாகும் துன்பத்தைத் தடுப்பதற்குத் தகுந்த உபாயமாம். துவேஷத்தாற் செய்யப்படும் எந்தச் சீர்திருத்தமும் நிறைவேறாதென்பதற்கு உலக சரித்திரமே நமக்குச் சாக்ஷி. அடிமைகளை வைத்துக்கொள்ளும் வழக்கத்தை யொழிக்க வேண்டு மென்பதைப்பற்றி அமெரிக்காவில் மூன் பெரும் போர் விளைந்ததல்லவா? அதன் முடிவு என்ன? இவ்

வழக்கத்தை நிறுத்துவதன் முன் இருந்ததைவிட இப்பொழுது எத்தனையோ ஆயிர மடங்கு அடிமைகள் தாழ்மையான நிலையிலிருக்கிறார்கள். இவ் வழக்கம் நின்று போகுமுன் இவ் வெளிய நிக்ரோவர் யாரேனுமொருவருக்குரிய சொத்தா யிருந்தபடியால், சொத்துக்காரர்கள் அவர்களைக் காப்பாற்றி வந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் ஒருவருடைய சொத்து மல்லாதவராய்ப் போய்விட்டமையால், அவர்கள் உயிருக்கு மதிப்புப் போய்விட்டது. ஏதாவது சாக்குப் போக்குகள் காட்டி அவர்களை யுயிருடன் எரித்து விடுகிறார்கள். அவர்களைச் சுட்டுக்கொல்லும் கொலைபாதகர்களுக்குத் தண்டனை விதிக்கும் சட்டங் கிடையாது. 'அந் நிக்ரோவர் கறுப்புப் பயல்கள்தானே? அவர்கள் மனிதர்களா? அவர்கள் ஜந்துக்களிலும் தாழ்ந்தவரல்லவோ?' என்று வெள்ளையர் கருதுகின்றனர். தோஷங்களைப் பலாத்காரமாய்ச் சட்டத்தைக் கொண்டு நிறுத்திய பயன் இதுதான். ஆகையால், நன்மை செய்வதற்குக்கூடப் பலாத்காரமாயும் துவேஷபுத்தியுடனும் பிரவிர்த்தித்தால் என்ன பயன் உண்டாகுமென்பதற்கு மேற்கூறிய நிதர்சனத்தைச் சரித்திரம் காட்டுகின்றது. இஃது எனக்குப் பிரத்தியக்ஷ அநுபவமாகையால், தூஷணை புரியும் இந்தச் சீர்திருத்தச் சங்கங்களில் யான் சேரேன். ஒருவரை ஏன் தூஷிக்கவேண்டும்? எல்லா ஜாதியாரிலுந் தான் தோஷங்க ளிருக்கின்றன. அது எல்லாருக்குமே தெரியும். இன்றைக்குப் பிறந்த குழந்தைக்கும் தெரியும். அதுவும் மேடைமே லேறி நின்று இந்து ஸமாஜத்தின்

பயங்கரமான தோஷங்களைப்பற்றிச் சண்டப்பிரசண்டமாய் உபந்யசிக்கும். ஒன்றுந் தெரியாத அயல் நாட்டார்கூட இங்கே வந்து, ரெயில் மார்க்கமாய்ப் பிரயாணம் செய்து கொண்டே இந்தியா முழுவதும் பார்த்துவிட்டதா யெண்ணிக்கொண்டு, சீமைக்குப்போய் இந்தியாவின் கெடுதல்களைப் பற்றி மிக்க கல்வித் திறமையுடன் பேசுகின்றார்கள். இதில் ஆச்சரியமென்ன? நாம்தாம் அதை ஒப்புக்கொள்ளுகிறோமே. கெடுதலை யெடுத்துக் காட்ட எல்லாராலும் முடியும். கஷ்டத்திலிருந்து தப்பும் வழியைக் காட்டும் அவனல்லவோ உலகத்துக்கு மித்திரன்? ஒரு பையனும் ஒரு தத்துவசாஸ்திரியும் நீரில் விழுந்து முழுகிப்போய்க் கொண்டிருக்கையில், தத்துவ சாஸ்திரி பையனைப் பார்த்து, "என்னை நீரிலிருந்து முன்னே எடுத்துவிடு" என்று பிரசங்கித்தானும். அந்தக் கதையை யறிந்த நம்மவர் இப்பொழுது சீர்திருத்தக்காரர்களை நோக்கி, "சீர்திருத்தப் பிரசங்கங்களும், சபைகளும், பத்திரிகைகளும் இதுவரையில் ஏற்பட்டவை எங்களுக்குப் போதும். எங்களை இழுத்து மேலே எடுத்துவிடும் மஹாநுபாவன் எங்கே? எங்களை உண்மையாய் நேசிக்கும் நண்பன் எங்கே? எங்களிடத்தில் அநுதாபம் காட்டும் அன்பன் எங்கே?" என்று கத்துகின்றனர். அப்படிப்பட்டவனே இப்போது வேண்டியிருக்கிறான். இந்த விஷயத்தில்தான் இந்தச் சீர்திருத்தச் சங்கங்களில் எனக்கு முழுவதும் உடம்பாடு கிடையாது. இச் சங்கங்கள் ஏற்பட்டு ஒரு நூறு வருஷங்களாயின. அவற்றால் விளைந்த நன்மை யாது, தூஷணை நிறைந்த

நூல்களை உண்டாக்கியதைத் தவிர! இவையில்லாமலிருந் தால் உலகம் எவ்வளவு க்ஷேமமா யிருந்திருக்கும்? அவர் கள் மேலும்மேலும் வைதிகர்களைத் தூஷித்துக் கண் டித்து திட்டிவந்தமையால், அவற்றைப் பொறுக்க முடி யாத வைதிகர்களும் திருப்பிக்கொண்டு அவர்கள் தம்மை வைத மாதிரி தாங்களும் அவர்களை வையத் தொடங்கவே, நம் வம்சத்துக்கும் நாட்டுக்கும் வெட்கத்தை யுண்டாக்கத் தக்க தூஷணைக் கிரந்தங்கள் பிரதிதேச பாஷையிலும் உற்பத்தியாயின. இதுவோ சீர்திருத்தம்? இதுதானா நம் நாட்டை மகிமைப்படுத்தும் வழி? இது யாருடைய குற் றம்?

இஃதன்றி இன்னொரு விஷயமும் இருக்கின்றது. இந் தியாவிலே நாம் எப்பொழுதும் அரசர்களாலேயே ஆளப் பட்டு வந்திருக்கிறோம். நமது சட்டங்களை யெல்லாம் செய் தது அரசர்களே. அப்படிப்பட்ட அரசர்கள் இப்பொழுது போய்விட்டமையால், அவ் விஷயங்களில் பிரவேசிப்பதற்கு இப்பொழுது ஒருவரு மில்லை. இப்படிப்பட்ட சங்கதிகளில் தலையிட இக்காலத்திய துரைத்தனத்தாருக்கும் தைரியம் இல்லை. அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை யநுசரித் துத் தம் காரியங்களை யமைக்கவேண்டியவரா யிருக்கின்ற னர். ஜனங்கள் தங்கள் கஷ்டங்களைத் தாங்களே தீர்த்துக் கொள்வதற்குத் தகுதியான குற்றமற்ற சிறந்த பொதுஜன அபிப்பிராயம் உண்டாக வெகுகாலம் செல்லும். அது வரையிலும் நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே,

சங்கச் சீர்திருத்த விஷயத்தைத் தெளிவாய்ச் சொல்ல வேண்டில், 'சீர்திருத்தத்தை வேண்டி நிற்பவர் யாவர்?' என்ற கேள்வி கேட்கவேண்டியிருக்கிறது. அவர்களைக் காட்டுங்கள்! சீர்திருத்தம் வேண்டும் ஜனங்கள் எங்கே? சில பேர் ஒன்று சேர்ந்துகொண்டு பலரை நிர்ப்பந்தப் படுத்துவதைப் போன்ற கொடுமை இவ்வுலகத்தில் வேறொன்று கிடையாது. சில பேர் சேர்ந்து சிற்சில ஆசாரங்கள் கெடுதலானவை யென்று நினைத்துவிட்ட மாத்திரத்தில், ஒரு பெருஞ் சாதி யவ்வளவும் அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண் டசையாது இந்த ஜாதி யேன் அசைவதில்லை? முதலில் எல்லா ஜனங்களுக்கும் கல்வி புகட்டுங்கள்! உங்கள் ஆசாரங்களை யேற்படுத்தவும் மாற்றவும் திருத்தவும் அதிகாரமுள்ள தர்ம நிரூபண சபைகளை முதலில் ஏற்படுத்துங்கள்! பிறகு சட்டம் தானே வரும். முதலில் சட்டம் செய்யும் அதிகாரத்தை யுண்டாக்கினால் அவ்வதிகாரத்தினின்று சட்டம் உற்பத்தியாகும். நம் சொந்த அரசர்கள் போய்விட்டபடியால், அவர்களுக்குப் பதிலாய் அதிகாரம் வஹித்துச் சட்டங்களுக்கு அநுமதி யளிப்பவர் இப்பொழுது வேண்டு மல்லவா? அவர்களை யேற்படுத்துங்கள்! ஆகவே, சங்கச் சீர்திருத்தத்துக்குக் கூட, ஜனங்களுக்குக் கல்வி புகட்டவேண்டிய தென்பது முதற் கடமை யாகின்றது. அந்தக் காலம் வரும் வரையில் நாம் காத்திருக்கவேண்டும். சென்ற ஒரு நூற்றாண்டாகப் பேசப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் பெரும்பாலும் அலங்கார விவகாரங்களாகவே முடிந்தன. அச் சீர்திருத்தங்களில் ஒவ்வொன்றும்

முதல் இரண்டு ஜாதிகளுக் குரியவையே யன்றி மற்ற ஜாதிகளுக்கு அவற்றால் யாதொரு பயனுமகிடையாது. விதவா விவாஹ விஷயமானது இந் நாட்டு மாதரில் நூறறில் எழுபதுபேரைக் கூடச் சம்பந்தியாது. அப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் கல்வி கற்ற உயர்ந்த ஜாதியாருக்கே உபயோக முள்ளவை. அவ்வுயர்ந்த ஜாதியாரும் தாழ்ந்த ஜாதியாருக்கு ஒன்றும் கற்பியாமல் தாங்கள் மாத்திரம் கல்வி கற்றுத், தங்கள் வீடுகளை ஒழுங்குபண்ணிக் கொள்வதற்கும், அயல் நாட்டாரான ஐரோப்பியரின்முன் தங்களை நேர்த்தியும் நாஜூக்கு முள்ளவர்களாய்க் காட்டிக் கொள்வதற்குமே சகலவிதமான முயற்சிகளும் செய்து வருகிறார்கள். இது சீர்திருத்த மாகாது. அடியிற் சென்று வேர் முதல் வேலை செய்யவேண்டும். அதைத்தான் நான் வேருடன் செய்யும் சம்பூர்ணச் சீர்திருத்தமென்பது! அனலை மூட்டிவிடுங்கள்! அது ஜ்வாலை வீசி எரிந்து எதிர்காலத்து இந்திய மஹா ஜாதியை உண்டாக்கட்டும். அந்தக் காரியம் அவ்வளவு எளிதன்று. அது அரிய பெரிய அகன்ற விஷயமாய் நம்முன் விளங்கா நிற்கின்றது. அவசரப்படவேண்டாம். நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்! இது இன்று நேற்று உண்டான விவகாரமன்று; சென்ற பல நூற்றாண்டுகளாகப் போராடி வருகின்றது. இக்காலத்திலே, முக்கியமாய் இத் தென்னாட்டில், பௌத்த மதத்தைப் பற்றியும் பௌத்தர்களின் லோகாயத மதத்தைப்பற்றியும் பேசுவது பலருக்கு ஒழுங்காய்த் தோன்றி யிருக்கின்றது. இப்பொழுது நமக்கு வந்திருக்கும் இந்த இழிந்த நிலை

யானது அப் பௌத்த மதத்தால் விளைந்த தென்பதை அவர்கள் சிறிதேனும் அறிந்திலர்.

இதுதான் நமக்கும் பௌத்த மதத்தால் கிடைத்த பாக்கியம். பௌத்த மதம் இந் நாட்டில் தோன்றி யழிந்த வரலாற்றைப் படித்தறியாதவர் எழுதிவைத்த நூல்களிலே, 'பௌத்த மதத்தின் வியாபகத்துக்குக் காரணம் கௌதம புத்தரது அற்புதமான நீதி யுபதேசமும், அவரது அற்புத சக்தியுமே' என்று கூறி யிருப்பதை நீங்கள் படித்திருப்பீர்க ளல்லவா? புத்த பிரானிடத்தில் எனக்கு எவ்வளவோ மதிப்பும் வணக்கமும் உண்டு. ஆயினும், பௌத்த கோயில்களாலும், விக்கிரஹங்களாலும், உற்சவாலங்காரங்களாலும் பௌத்த மதம் பரவியதுபோல் புத்தரது நீதி யுபதேசத்தாலும் அவரது அற்புத சக்தியாலும், பரவவில்லை. புத்த மதத்தின் வியாபகத்துக்கு இதுதான் உண்மைக் காரணம். பௌத்த மதம் ஏற்படுவதற்கு முன் நம் நாட்டில் கோயில்களும், விக்கிரஹங்களும் அவற்றின் சம்பந்தமான உற்சவாதிகளும் கிடையா. ஜனங்கள் தத்தம் வீடுகளில் தினந்தோறும் அக்கியில் ஆஹுதி செய்து ஔபாசனாதிகள் செய்துவந்தார்கள். இப்பொழுது பௌத்த மதத்தால் ஏற்பட்ட பிரமாண்டமான கோவில்களுக்கும் உற்சவாலங்காரங்களுக்கும் முன் நின்று ஈடுகொடுக்க ஹிந்துக்களின் வீடுகளிலுள்ள சிறிய அக்நிஹோத்திர சாலைகளால் முடியாமற் போகவே, ஹிந்துக்களும் கோவில் முதலியவை கட்டி உற்சவங் கொண்டாடத் தொடங்கினர்.

அப்படிச் செய்ததின் பயன் என்னவெனில், வரவர நமது ஆலய விஷயங்களெல்லாம் கெட்டுப்போய்விட்டன. அதனால் ஏற்பட்ட அசப்பியத்தை இச் சபையின்முன் எடுத்துச் சொல்ல என் நா கூசுகின்றது. இதைக் காண விரும்புவோர்கள் இத் தமிழ் நாட்டுப் பெரிய கோயில்களின் சிற்ப வேலையைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். பௌத்தர்களிடத்திலிருந்து நமக்குக் கிடைத்த பாக்கியமெல்லாம் இது தான். பிறகு, மஹானாகிய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளும் அவரது சிஷ்யர்களும் அவதரித்தனர். அவரது அவதார காலமுதல் இன்று வரையிலும் இத்தனை நூற்றாண்டுகளாயும் இந் நாட்டு ஜனங்களைப் பரிசுத்தமாகிய பிராசீன வேதாந்த மதத்துக்குத் திருப்பிக்கொண்டு வரும் வேலையே இன்னும் மெதுவாய் நடந்து வருகின்றது. அப்பொழுதிருந்த தீமைகளை இவ் வாசாரியர்கள் நன்கறிந்திருந்தும், அவர்கள் எவரையும் தூஷிக்கவில்லை. "உங்களிடத்துள்ளவையெல்லாம் தப்பு, நீங்கள் அவற்றைத் தள்ளிவிட வேண்டும்" என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் ஒருகாலும் அப்படிச் சொல்லவேமாட்டார்கள். "முன்னூறு வருஷங்களுக்குள் கிறிஸ்து மதமானது உரோமக் கிரேக்க மதங்களின் மாட்சியை ஒழித்துவிட்ட" தென்று என் நண்பர் டாக்டர் பாரோஸ் துரை பிரசங்கித்தாரென்று இன்றைய பத்திரிகையில் படித்தேன். இது ஐரோப்பாவையும், கிரீஸ் ரோம் நாடுகளையும் பார்த்தவர் பேசும் பேச்சாயில்லை. ரோமக கிரேக்க மதங்களின் பெருமை அவ்வளவும் ப்ரோடெஸ்டாண்ட் தேசங்களிற்கூட ஓங்கி

நிற்கின்றது. பெயர்கள் மாத்திரம் மாறிவிட்டன. பழைய தேவர்கள் புதிய ஸ்வரூபத்துடன் விளங்குவாராயினர். தேவதைகளுக்கெல்லாம் மேரி யென்ற பெயரும், தேவர்களுக்கெல்லாம் ஞானிகளென்ற பெயரும் உண்டாகிவிட்டன. சடங்குகளும் புதியவையாய்விட்டன. பழைய ரோமக ஆசார்ய பீடமாகிய பாண்டி பெக்ஸ் மாக்ஸிமஸ் என்ற பெயர்கூட இன்னும் இருக்கின்றது. ஆகவே, பழைய வழக்கங்களை அடியோடு ஒழித்துவிடுவது அவ்வளவு சுலபமன்று. அதைச் சங்கராசார்யர் நன்றாய் அறிந்துகொண்டார். இராமாநுஜரும் அவ்வாறே அறிந்துகொண்டார். புதிய மாறுதல்களை உண்டாக்குவது அசாத்தியமானது. ஆகவே, அவர்கள் அவ் வழியை யநுசரிக்காமல், ஜனங்கள் அக்காலத்தில் அனுஷ்டித்துவந்த மதத்தைப் படிப்படியாய் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும் வழியைக் கைக்கொண்டனர். அவர்கள் அப்படிச் செய்யாமல் மற்றொரு வழியை மேற்கொண்டிருப்பார்களாயின், அவர்கள் வஞ்சகர்களாகவல்லவோ இருந்திருப்பார்? ஏனெனில், பலவகைக் கர்மங்களாலும் சாதனங்களாலும் ஞானநிலையைப் படிப்படியாய் அடையவேண்டுமென்பதே வேதாந்த சித்தாந்த மாகையால் அவற்றைத் தூஷிக்க எவருக்கு மனம் வரும்?

பிரதிமாராதனம் தவறான தென்று இக் காலத்தில் அநேகர் சாதாரணமாய்ச் சொல்லிவருவதைப் பலரும் யோசனையின்றி நம்பிவிடுகிறார்கள். நானும் ஒரு காலத்தில் அப்படித்தான் நினைத்தேன். அந்தப் பாபத்திற்குக்

தயாடனையாக, நான் பிரதிமாராதனத்தினின்றே எல்லாப் பெருமைகளையும் பெற்ற ஒரு மனிதனது திருவடியையடைந்து உபதேசம் பெறவேண்டிய தாயிற்று. அவர் தான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர். இந்துக்களே! பிரதிமாராதனத்தினின்றும் இப்படிப்பட்ட ராமகிருஷ்ண பரமஹம்ஸர்கள் உண்டாவார்களாயின், உங்களுக்குப் பிரதிமாராதனம் வேண்டுமா? சீர்திருத்த மதம் வேண்டுமா? சொல்லுங்கள்! பிரதிமாராதன மூலமாய் ராமகிருஷ்ண பரமஹம்சர்களை உண்டாக்குவது சாத்தியமானால், இன்னும் ஆயிரம் பிரதிமைகள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்! உங்களிடத்திலுள்ள எந்த உபாயத்தாலாவது இப்பேர்ப்பட்ட உத்தமர்களை உண்டாக்குங்கள்! இவர்கள் பிரதிமாராதனத்தை இவ்வாறு இகழ்கின்றார்களே; அதற்குக் காரண மென்ன வென்றால், ஒருவருக்கும் தெரியாது. எப்பொழுதோ பல நூற்றாண்டுகளுக்கு முன் யூத ஜாதியிற் பிறந்த எவனோ ஒருவன் அதை இகழ்ந்து பேசினானாம். அதாவது, அவன் தன் ஜாதி விக்கிரகங்களைத் தவிர்த்து மற்ற ஜாதியாரது விக்கிரகங்களை யெல்லாம் இகழ்ந்து பேசினானாம். பகவானைச் சுந்தர வடிவமாகவாவது லிங்க ரூபமாயாவது அமைத்துக் கொண்டால் அது மகா பாபமென்றான் யூதன். ஆனால், ஒரு பேழையின் மேல் இரண்டு தேவதூதர் உட்கார்ந்திருக்க, அதன் மேல் ஒரு மேகம் தொங்கித் தவழும் பாவனையாகப் பகவத்சொரூபத்தை யமைக்கும் பக்ஷத்தில், அது மகா பரிசுத்த மங்கள ஸ்வரூப மென்பான் அதே யூதன். ஆனால், அதே பக

வான் பசு வடிவமாய் வந்தானெனில், அது அஞ்ஞான மூட பக்தி; அதைக் தொலைத்துவிட வேண்டுமென்பர் அவ் யூத ஜாதியின் அபிப்பிராயங்களைப் பின்பற்றியவர். இதுவே உலகத்தின் போக்கா யிருக்கின்றது. ஆகையாற்றான "என்னே இம் மாந்தரின் மூடமதி" என்று பாடியுள்ளான் ஓர் கவிஞன். ஆகையாற்றான், ஒரு மதத்தார் மற்றொரு மதத்தாரின் அபிப்பிராயங்களை நன்கறியாம லிருக்கின்றனர். அதுதான் மானிட வர்க்கத்துக்கு ஓர் பெருங்கேடாய் வந்திருக்கின்றது. பகைக்கும் பொறாமைக்கும் சண்டைக்கும் சச்சரவுக்கும் காரணமா யிருப்பதுவும் அதுவே. ஏ சிறு பிள்ளைகாள்! மீசை முளைத்த சிசுக்காள்! எத்தனையோ ஆயிரம் வருஷகாலமாய்ப் பரம்பரைக் கிரமமாய் வரும் ஆசாரங்களை அநுஷ்டித்து வரும் முப்பது கோடி ஜனங்களுக்கும் சென்னபட்டணத்தை விட்டு ஒருபொழுதும் வெளியே செல்லாத நீங்களோ ஆசார சீர்திருத்தத்தைப் போதிக்கப் போகிறீர்கள்! உங்களுக்கு வெட்கமில்லையா? அப்படிப்பட்ட மகா பாதகத்தினின்று உடனே விலகிநின்று, உங்களுக்கு அவசியமாய்த் தெரிந்திருக்க வேண்டியவற்றை முதலில் கற்றுக்கொள்ளுங்கள்! சிரத்தா பக்தியற்ற சிறு பிள்ளைகளே! ஏதோ சில வரிகளைக் காகிதத்தின் மேல் கிறுக்கி விடுவதற்கும், அதை ஒரு மூடனைக் கொண்டு பிரசுரம் செய்விப்பதற்கும் உங்களுக்குச் சக்தி யிருப்பதினாலேயே, நீங்களே இவ் வுலகத்துக்குப் புத்திபுகட்டும் உபாத்தியாயர்களென்றும், நீங்கள் சொல்வதே இப் பாரத கண்டத்தின் பொது ஜனவாக்

கியமென்றும் நினைத்துக் கொண்டுவிட்டார்களோ? சென்னையிலுள்ள ஆசார சீர்திருத்தங்களுக்கு நான் சொல்வதென்னவெனில், அவர்களிடத்தில் எனக்கு மேலான மதிப்பும் அன்பும் உண்டு. அவர்களது உதார சிந்தைக்காகவும் தேசாபிமானத்திற்காகவும், ஏழைகளிடத்தும் துன்பப்படுவோரிடத்தும் அவர்களுக்குள்ள அன்பின்பொருட்டும், அச் சீர்திருத்தக்காரர்களை நான் நேசிக்கின்றேன். ஆனால், அவர்கள் அநுசரிக்கும் பத்ததி சரியானதல்ல வென்றுமாத்திரம் சகோதர வாற்சல்யத்துடன் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவேன். சென்ற நூறு வருஷங்களாக அந்தப் பந்ததியைக் கைக்கொண்டு முயன்றும் யாதொரு பயனையும் காணோம். ஆகவே, புதிய தொன்றை அநுசரித்துப் பார்ப்போம். இந்தியாவில் சீர்திருத்தக்காரர்களுக்கு எப்பொழுதேனும் பஞ்சமுண்டா? இந்துதேச சரித்திரம் நீங்கள் படித்திருக்கிறீர்களல்லவா? ராமாநுஜர் யார்? சங்கரர் யார்? நாநக் யார்? சைதந்யர் யார்? கபீர் யார்? தாது யார்? முதல்தரமான நக்ஷத்திர மண்டலம்போல் ஜொலித்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராய் வரும் இந்த மஹாமத பிரவர்த்தகர்கள் யார்? இராமாநுஜர் தாழ்ந்த ஜாதிகளுக்காக அநுதாபப்படவில்லையா? அவர் பறையரையும் தம் கோஷ்டியில் சேர்த்துக் கொள்வதற்காகத் தம் ஆயுளிருந்தவரையிலும் முயலவில்லையா? முகம்மதியரையும் தம் மதத்திற் சேர்க்க அவர் பார்க்கவில்லையா? நாநக் என்பவர் இந்துக்களுடனும் முகம்மதியருடனும் கலந்து யோசித்துப் புதியதோர் சம்பிரதா

யத்தை யுண்டாக்கப் பிரயத்தினப்படவில்லையா? அவர்கள் செய்த முயற்சிகளெல்லாம் வீணாகாமல் விருத்தியாய்க்கொண்டு வருவதற்குக் காரண மென்ன? அவர்கள் தற்காலத்திய சீர்திருத்தக்காரர்களைப்போல் வீண் ஆடம்பரங்கள் வைத்துக்கொள்ளவில்லை. அவர்கள் தற்காலத்திய சீர்திருத்தக்காரர்களைப்போல் சாபம் கொடுக்கவில்லை. அவர்களது திருவாயினின்றும் ஆசீர்வாத வசனங்களே வெளிவந்தன. அவர்கள் ஒருபோதும் தூஷணம் புரிந்ததில்லை. "நம் ஜாதி எப்பொழுதும் வளர்ந்துவர வேண்டும்" என்றே அவர்கள் ஜனங்களுக்குச் சொன்னார்கள். அவர்கள், சென்ற காலத்தைப் பின்னோக்கிப் பார்த்து உரைத்ததாவது: "ஓ இந்துக்களே! இதுவரையில் நீங்கள் செய்தது நன்றாகவே யிருக்கிறது; இனி அதைவிட நல்ல காரியங்களைச் செய்வோம்" என்றனரே யன்றி, "நீங்கள் துஷ்டர்களோ யிருக்கிறீர்கள்; இனி நல்லவரா யிருப்போம்" என்று சொல்லவில்லை. "நீங்கள் நல்லவரா யிருந்திருக்கிறீர்கள்; இப்பொழுது அதைவிட நல்லவரா யிருக்கப் பார்ப்போம்" என்றே அவர்கள் சொல்லினர். அதனால் எவ்வளவு வித்தியாசம் உண்டாகிறது பாருங்கள்! நம் இயற்கைக் கேற்றபடி யல்லவோ நாம் வளர வேண்டும். அயல் நாட்டு ஜனசமூஹத்தார் நம் மேல் ஒட்டவிட்டிருக்கும் ஆசார முறைகளை அநுசரிக்க முயல்வது வீணேயாகும்; அஃது அசாத்தியம். அஃது அப்படி அசாத்தியமாயிருப்பதும், நம்மை முறுக்கி நெறுக்கி அயல் நாட்டாரின் சுவரூபத்தை யடையும்படி அடித்துவிட முடி

யாதிருப்பதும் ஈசனது கிருபையினாலே யாகையால் அவரை வாழ்த்துவோம். அயல் நாட்டாரின் ஆசார அநுஷ்டான சம்பிரதாயங்களை நான் தூஷிக்கவில்லை. அவை அவர்களுக்கு ஏற்றவை, நமக்கல்ல. அவர்களுக்கு அமுதமா யிருப்பது நமக்கு நஞ்சாயிருக்கலாம். அதுதான் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முதல் பாடம். அவர்களுக்குள்ள சாஸ்திரங்கள், ஸ்தாபனங்கள், பெரியோர் ஆசாரங்கள் முதலியவற்றுக்குப் பொருந்தும்படி அவர்களது தற்கால நாகரிகம் ஏற்பட்டிருக்கிறது. நாமும் நமக்குள்ள பூர்வாசாரத்தை யொட்டியும், எத்தனையோ ஆயிரம் வருஷகாலமாய் வரும் கர்மபலத்தை யொட்டியும் நமக்கேற்பட்டிருக்கும் வழியில்தான் நடக்க முடியும். அதை யொட்டித்தான் நாம் இனியும் நடக்கவேண்டும். அப்படியாயின், என்னுடைய ஏற்பாடு யாது? மகான்களான முன்னோரது கருத்துக்களை யநுசரிப்பதே என் ஏற்பாடு. அவர்கள் செய்துள்ள வேலையை நான் ஆராய்ந்தறிந்து, அவர்கள் வேலை செய்துள்ள விதத்தைக் கண்டுபிடிக்கும் பெருமையைப் பெற்றிருக்கிறேன். அவர்கள் ஜன சமூகங்களை ஏற்படுத்திய மகான்கள். அவர்கள் வீர்யமும், பரிசுத்தமும், ஜீவகளையும் அளித்த பெரியோர். அவர்கள் மஹா அற்புதமான வேலையைச் செய்தனர். நாமும் அப்படிப்பட்ட அற்புதமான வேலையைச் செய்யவேண்டும். இப்பொழுது காலஸ்திதி சிறிது மாறியிருக்கின்றது. அதற்குத் தக்கபடி நாம் காரிய கதியையும் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒவ்வொரு பிரதான புருஷார்த்தம்

இருப்பதாகத் தெரியவருகின்றது. இங்கிலாந்து முதலிய சில தேசங்களில் இராஜதந்திரமே முக்கிய புருஷார்த்தம். வேறு சில நாட்டாருக்குச் சுகமான பிரபஞ்ச வாழ்க்கையே பிரதானமானது. இந்தியாவிலோ மோக்ஷமே முக்கிய புருஷார்த்தம். இந்நாட்டிற்கு இம் மோக்ஷமே உயிர்நிலையாதலால், இதை யெவரேனும் தாக்கித் துன்பப்படுத்துவரேல், நம் ஜாதியார் அழிந்துபோவது திண்ணம். ஆகவே, நீங்கள் உங்களுக்கு உயிர் நிலைபோலுள்ள இச் சமயநெறியை விடுத்து அந்நிய நாட்டாருக் குரியனவாகிய ராஜ்ய தந்திரம், ஜனசமூஹ தந்திரம் முதலியவற்றை முக்கியமாய் வைத்துக்கொண்டு நடக்க முயல்வீர்களாயின், நீங்கள் இவ் வுலகத்திலேயே இல்லாது நசித்துப் போய்விடுவீர்கள். அப்படிப்பட்ட கதியை வராமல் தடுக்கும்பொருட்டு, உங்கள் சமய நெறியை உயிர்நிலைபாய் வைத்துக்கொண்டு, அதன் மூலமாய் உங்களுக்கு வேண்டிய மற்றைப் பயன்களைப் பெற முயலவேண்டும். அமெரிக்காவில் மதத்தைப் பிரசங்கஞ் செய்யவேண்டுமானால், அதனால் அவர்கள் பிரபஞ்சவாழ்க்கைக் குண்டாகும் பிரயோஜன மின்னதென்று நிரூபிக்காவிடில், அம் மதத்தைப்பற்றி அங்கே நான் பிரசங்கிக்க முடியாது. இங்கிலாந்திலே வேதாந்தத்தை ஒப்புக்கொள்வதினால் அற்புதமான ராஜதந்திர மாறுதல்கள் உண்டாகுமென்று நிரூபணஞ் செய்தாலொழிய அங்கே மதத்தைப் பிரசங்கம் செய்ய முடியாது. அவ்வாறே இந்தியாவிலும் சங்கச் சீர்திருத்தத்தையும், ராஜ்ய தந்திரத்தையும் பிரசங்கிக்க வேண்டுமானால், அவற்றால் நம் நாட்டின்

பிரதான புருஷார்த்தமாகிய மோக்ஷ சாதனம் எவ்வளவு அபிவிர்த்தியாகுமென்பதை நிரூபித்துக் காட்டவேண்டும். ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு அபிமதம் உள்ளதுபோல் ஒவ்வொரு ஜாதிக்கும் உண்டு. நம்முடைய அபிமதம் இன்னதென்று நாம் அநேக யுகங்களுக்கு முன்னமே ஏற்படுத்திக்கொண்டுவிட்டபடியால், அதன்படியே நாம் நடக்க வேண்டும். கடைசியில் அது அப்படிப்பட்ட கெடுதலானதுமன்று. ஜடத்தை விலக்கிச் சித்தைக் கொள்ளுதலும், மனிதனைத் தள்ளி ஈசனை மெய்ப்பொருளெனக் கொள்ளுதலும் கெடுதியை யுண்டாக்கக்கூடிய அபிமதமோ? மறுமையில் அவ்வளவு தீவிரமான சிரத்தையும், இம்மையில் அவ்வளவு தீவிரமான துவேஷமும், உறுதியான வைராக்கிய சக்தியும், ஊர்ஜிதமான ஈசுவர பக்தியும். அழிவில்லாத ஆத்ம வஸ்துவினிடத்தில் நிலையான நம்பிக்கையும் உங்கள் மனத்தில் குடிகொண் டிருக்கின்றன. அவற்றை விட்டுவிட யாரேனும் முயலுங்கள் பார்ப்போம். உங்களால் முடியாதென்று நான் பந்தயம் போடுகிறேன். சில மாதம் நாஸ்திகம் பேசி, "நாங்கள் நாஸ்திகராய்விட்டோம்" என்று நீங்கள் என்னை ஏமாற்றப் பார்க்கலாம். ஆனால், உங்கள் உண்மையான மனோநிலை இன்னதென்று எனக்குத் தெரியும். உங்கள் தலைமீது என் கையை வைக்கிறேன் பாருங்கள்! நீங்கள் உடனே பழையபடியே ஆஸ்திகராய்த் திரும்பிவிடுவீர்கள். உங்கள் சுபாவத்தை மாற்றிக்கொள்ள உங்களால் எப்படி முடியும்? அதுதான் உங்கள் உண்மை நிலை. ஆகவே, இந்தியாவில் எவ்விதத்

திருத்தங்களைச் செய்ய வேண்டுமாயினும். மத விஷயத்தை முதலில் சீர்ப்படுத்த வேண்டும். இந்தியாவிலே சங்கச் சீர்திருத்த விஷயமாயும் ராஜ்ய தந்திர விஷயமாயும் ஓர் அபிப்பிராய வெள்ளத்தை யுண்டாக்க வேண்டுமாயின், அத்தியாத்ம சிந்தா பிரவாஹத்தில் நாட்டை முதலில் அமிழ்த்துங்கள்! அதுதான் முதல் முதல் செய்யவேண்டுவது. ஆகவே, நாம் முதலில் செய்ய வேண்டியதாவது:—நமது வேத சாஸ்திர புராணங்களிலே பொதிந்துள்ள அற்புதமான உண்மைகள் நூல்களிலும், மடங்களிலும், ஆசிரமங்களிலும், குருபீடமாயுள்ள சில ஜாதியாரிடத்திலும், மனிதரிடத்திலுமே மறைந்திருப்பதால், அவற்றை அவ் விடங்களினின்றும் வெளிப்படுத்தி நாடெங்கும் பரவச் செய்யுங்கள்! அப்பொழுது அவ் வுண்மைகள் தேசமெங்கும், வடக்கே இமயமலைமுதல் தெற்கே குமரிமுனை வரையிலும், மேற்கே ஸிந்துதேச முதல் கிழக்கே பிரமபுத்திரா நதி வரையிலும் பரவி நிற்கும். அவை ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில், 'ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதிப்யாஸிதவ்ய:' 'அதைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும்' என்று கூறி யிருக்கின்றமையின்; ஆகையால், ஜனங்கள் இதை முதலில் சிரவணம் செய்யட்டும். ஜனங்கள் தங்கள் வேதசாஸ்திரங்களின் உண்மைகளைச் சிரவணம் செய்யும்படி எவர்கள் உதவி புரிகின்றார்களோ, அவர்கள் செய்யும்படியான அப் புண்ணிய கர்மத்துக்கு ஈடானது வேறொன்று மில்லை. வியாசர் சொல்லுகிறார்: "இந்தக் கலியுகத்திலே ஒரு கர்மந்தான் மிகுந்திருக்

கின்றது. யாக யக்ஞங்களும், கடுந் தவங்களும் இக் காலத்திற் பயன்படா. கர்மங்களிலே ஒன்று மாத்திரம் நின்றிருக்கின்றது,—அதாவது தானம் என்னும் கருமமே. இந்தத் தானங்களிலும் பிரஹ்மவித்யா தானமே சிறந்தது; அதற்கடுத்தது லௌகிக வித்யாதானம்; அதற்கடுத்தது பிராணதானம்; அதற்கடுத்தது அந்நதானம்.'' அற்புத தானசீலராய் விளங்கும் நம் இனத்தாரைப் பாருங்கள். ஏழையினும் ஏழைத் தேசமாகிய இந்நாட்டிலும் எவ்வளவு தான தர்மங்கள் நடக்கின்றன பாருங்கள். இந்த நாட்டிலே ஒருவன் வடக்கிலிருந்து தெற்கே புறப்பட்டு வந்தால், வழிதோறும் அவனுக்கு அன்னபானாதிகள் அளிக்கத் தர்ம சத்திரங்கள் இருக்கின்றன. பிச்சைக்காரர்கள் பட்டினியின்றி யிருக்கும் நாடு இதுவன்றோ?

'இப்படிப்பட்ட தர்ம பூமியிலே மேற்சொன்ன முதலிரண்டு தர்மங்களையும் செய்ய முயல்வோம். முதலில் பிரஹ்ம வித்தையைப் பரவச் செய்வோம். அந்த வித்தையை இந்தியாவுக்குள் மாத்திரம் பரவச் செய்வது போதாது. உலக மெங்கும் அதைப் பிரவசனம் செய்யவேண்டும். இதுவே நமது பழைய வழக்கமாம். இந்திய சாஸ்திர ஞானம் இந்தியாவைவிட்டு எப்பொழுதும் வெளியே சென்றதில்லை என்றும், அயல் நாடுகளுக்கு முதல் முதலாய்ப் பிரசங்கிக்கச் சென்றவன் நானே தானென்றும் சொல்லுகிறவர்கள் தங்கள் வம்ச சரித்திரத்தையே உணராதவராவார். இத் தகைய அருஞ்செயல்கள் அடிக்கடி

நிகழ்ந் திருக்கின்றன. உலகத்துக்கு அவசியமாயிருந்த பொழுதெல்லாம், இவ்வாத்ம ஞானமென்னும் வற்றா நீர்ப் பெருக்கானது கரை புரண்டு உலகமெல்லாம் பிரவஹியா நின்றது. ராஜ்ய தந்திர ஞானத்தைப் பேரிகை முழக்கத் துடனும், கயபிரமாய்ச் செல்லும் போர் வீரர்களின் ஆரவாரத்துடனும் உண்டுபண்ணலாம். லௌகிக ஞான த்தையும் சங்கச் சீர்திருத்த விஷயமான ஞானத்தை யும் தீயும் வாளுங்கொண்டு ஜனங்களுக்கு நிர்ப்பந்த மாய்ப் புகட்டலாம். ஆத்ம ஞானத்தையோ சாவதானமா யும் மௌனமாயும் தான் உபதேசிக்க வேண்டும். எவரது கண்ணுக்கும் தென்படாமலும் காதுக்குக் கேளாமலும் மென்மையாய் விழுந்தும் திரள் திரளான ரோஜா மலர்க ளைப் புஷ்பிக்கச் செய்யும் பனித் துளியின் செய்கை போன்றது பிரஹ்மவித்தையின் பிரபாவம் இது தான் இந் தியாவானது உலகத்துக்கு அடிக்கடி அளிக்கும் தானம். ஒரு பெருஞ் ஜாதியார் ஜயசீலர்களாய் உலகமெங்கும் பரவி உலகத்திலுள்ள மற்ற பெருஞ் ஜாதியார்களையும் ஒன்று சேர்த்தும், சாலைகளையும் போக்கு வரவு சாதனங் களையும் அதிகமாய் ஏற்படுத்தியும் வரும் காலந்தோறும் இந்தியாவானது அந்தச் சமயத்தில் உடனே எழுந்து உல காபிவிர்த்தியின் பொருட்டுத் தன்னிடத்துள்ள பிரஹ்ம வித்தையை யளித்து உபகரிக்கின்றது. இவ் வழக்கம் புத் தாவதாரத்துக்கு எவ்வளவோ காலம் முன் முதல் இருந்து கொண்டிருக்கிறது. அதன் அடையாளங்களை இப்பொழு தும் சீனாவிலும், சின்ன ஆசியாவிலும், மலயத் தீவுகளின்

மத்தியிலும் காணலாம். கிரீக் தேசத்தாளுகிய மஹா அலெக்ஸாந்தர் அக்காலத்திய உலகத்தின் நாற்புறங்களையும் ஒன்றாய்ச் சேர்த்தபொழுது இதே சங்கதிதான் நடந்தது. அப்பொழுது இந்தியாவின் பிரஹ்மவித்தை கிளம்பிப் பிற நாடுகளில் பரவிற்று. நாகரிகமென்று இப்பொழுது பெருமையாய்க்கூறப் படுவதெல்லாம் அந்த பிரஹ்மவித்யா பிரவாஹத்திற் சிதறுண்டுபோய் மிகுந்திருக்கும் ஒரு சிறிதேபாம். அப்படிப்பட்ட சமயம்தான் இப்பொழுது வந்திருக்கிறது. இங்கிலாந்து தேசத்தின் பிரபுத்துவத்தினல் உலகத்திலுள்ள 'ஜாதியார்களெல்லாம் முன் எப்பொழுதும் இல்லாத விதமாக இப்பொழுது ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆங்கிலேயர் ஏற்படுத்திய பாதைகளும், போக்குவரவு சாதனங்களும் உலகத்தின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரையில் கிளம்பி வியாபித் திருக்கன்றன. ஆங்கிலேயரின் சாமர்த்தியத்தால் இன்று உலகமானது ஒன்று யிணைக்கப் பெற்றிருப்பதுபோல் எப்பொழுதும் இருந்ததில்லை. ஆங்காங்கு நடுமையமாயுள்ள விடங்களில் வர்த்தகஸ்தானங்கள் இப்பொழுது ஏற்பட்டிருப்பதுபோல் எப்பொழுதும் இருந்ததில்லை. ஆகவே, அறிந்தோ அறியாமலோ உடனே இந்தியாவானது கிளம்பி தன் அத்யாத்ம ஞானச் செல்வத்தைக் கைநிறைய வாரிவாரி வழங்குவதாயிற்று. இந்த ஞானச் செல்வமானது உலகம் முழுவதும் போய் நிறையும் வரையில் மேற்சொன்ன பாதைகளின் வழியே மேலும்மேலும் போய் விழுந்துகொண்டே இருக்கவேண்

டும். நான் அமெரிக்காவுக்குப் போனது என் காரியமு மன்று, உங்கள் காரியமுமன்று. ஆனால், இந்தியாவின் யோக க்ஷேமங்களை நடத்திவரும் பகவான் என்னையும் என்னைப்போன்ற நூற்றுக் கணக்கானவர்களையும் உலகத்திலுள்ள எல்லா ஜாதியார்களிடத்துக்கும் அனுப்புவார். உலகத்திலுள்ள எவ்வித சக்தியும் அதைத் தகைந்து நிறுத்த முடியாது. ஆகவே, நீங்கள் உங்கள் மதத்தைப் பிரவசனம் செய்வதற்காக இந்தியாவை விட்டு வெளியே சென்று, இப் பூமண்டலத்தில் வாழும் ஒவ்வொரு ஜனங்களுக்கும் அதைப் பிரவசனம் செய்யவேண்டும். இது நீங்கள் முதற் செய்யவேண்டிய காரியம். அத்தியாத்ம ஞானத்தைப் பிரவசனம் செய்த பின்னர், லௌகிக ஞானமும் உங்களுக்கு வேண்டிய மற்றெவ்வித ஞானமும் வரும். ஆனால், சமய பக்தியின்றி லௌகிக ஞானத்தை மாத்திரம் பெற விரும்புவீர்களேல், நான் வெளிப்படையாய்ச் சொல்லுவதைக் கேளுங்கள்! இந்தியாவில் உங்கள் முயற்சி வீணையாகும்; அதில் ஜனங்களுக்கு ஒருபோதும் பிடிப்பு உண்டாகாது. பெருமை தங்கிய பௌத்தர்களின் முயற்சி வீணானதற்கும் ஒருவாறு காரணமாயிருந்தது அதுவே. அது தவறிப்போனால் நீங்கள் என்ன செய்யலாம்? நான்தான் என்ன செய்யலாம்? ஆகவே, என் நண்பர்களே! நம் நாட்டு இளைஞர்களைச் சமய சாஸ்திரங்களில் பயிற்றுவித்து அவர்களைக்கொண்டு இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் நம் வேத சாஸ்திரங்களின் உண்மைகளைப் பிரவசனம் செய்விக்கும் பொருட்டு

வித்தியாசாலைகளை இந்தியாவில் ஏற்படுத்தவேண்டு மென் பதே என் யோசனை. ஆண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகள்,— இவர்களே இக் காரியத்துக்கு வேண்டும். மற்றதெல்லாம் தானாய் ஸித்தமாகும். வல்லமையும், பூர்ண யோக்கியதை யும், சுருசுருப்பும், சிரத்தையும் உள்ள ஆண்பிள்ளைக ளான இளைஞர்களே வேண்டும். அப்படிப்பட்டவர்கள் நூறுபேர் இருந்தால் போதும், இவ்வுலகத்தைத் தலை கீழாக்கி விடலாம். மனச் சங்கற்பமே மற்றெல்லாவற்றை யும் விட வல்லமை யுள்ளது. அந்த ஸங்கற்பத்துக்கு முன் எல்லாம் தாழ்ந்து செல்லவேண்டும். ஏனெனில், அது பகவானிடத்திலிருந்து உண்டானதாம். பரிசுத்தமும் வல் லமையும் பொருந்திய சங்கல்பமானது சர்வசக்தி யுள்ள தாகும். அதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லையா? உங்கள் மதத்தின் மேலான உண்மைகளைப் பிரவசனம் செய்யுங்கள்! பிரவசனம் செய்யுங்கள்!! உலகமானது அவற்றிற்காகக் காத்துக்கொண் டிருக்கின்றது. பல நூற் றாண்டுகளாக நீசத் தன்மையான கோட்பாடுகள் ஜனங்க ளுக்குப் புகட்டப் பட்டிருக்கின்றன. அவர்களுக்கு யாதொரு அதிகாரமாவது பாத்தியதையாவது இல்லை யென்று உபதேசமாயிருக்கின்றது. உலகத்திலுள்ள பாமர ஜனங்களைப் பார்த்து மற்றவர்கள், "நீங்கள் மனிதப் பிராணிகளே யல்லீர்" என்று சொல்லிவந்திருக்கிறார்கள். இப்படிப் பல நூற்றாண்டுகளாக அவர்கள் பய முறுத்தப் பட்டு வந்து, கடைசியில் மிருகப்பிராய ராய்விட்டனர்.

ஆத்மாவைப் பற்றிச் சிரவணம் செய்வதற்கு அவர்க ளுக்கு ஒருபோதும் நம்மவர் இடங் கொடுக்கவில்லை.

ஆகவே, அவர்கள் ஆத்மாவைப்பற்றிக் கேட்கட்டும். ஒரு போதும் இறவாததும், ஒருபோதும்பிறவாததும், கத்தியினால் குத்தவொண்ணாததும், தீயினால் எரிக்கவொண்ணாததும், காற்றினால் உலர்த்த வொண்ணாததும், அழிவற்றதாயும், ஆதியந்த மற்றதாயும், சர்வ சுத்தமாயும், சர்வசக்தி யுள்ளதாயும், சர்வ வியாபியாயும் உள்ளுக்குள்ளே விளங்கும் ஆத்மாவைக் கடையரிலும் கடையவரான நீசரும் கேட்கட்டும். அவர்களுக்குத் தம்மிடத்திலேயே நம்பிக்கை யுண்டாகட்டும். ஏனெனில், ஆங்கிலேயருக்கும் உங்களுக்கு முள்ள வித்தியாச மென்ன? அவர்கள் மதத்தைப்பற்றியும் கடமையைப் பற்றியும் வேண்டுமானது பேசட்டும். வித்தியாசத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன். அவ் வித்தியாசமாவது என்னவெனில், இங்கிலீஷ்காரனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை யுண்டு, உங்களுக்கு அஃதில்லை. தான் இங்கிலீஷ்காரனென்றும், எதைச் செய்யவும் தன்னா லாகுமென்றும் அவனுக்கு நம்பிக்கை யிருக்கின்றது. உங்களுக்கோ, உங்களால் ஒன்று மாகாதென்று உபதேசம் யிருக்கிறது. அதற்குத் தக்கவாறே நீங்கள் நாளுக்கு நாள் சூன்யபதார்த்தமாய்க் கொண்டுவருகிறீர்கள். ஆகவே, உங்களிடத்திலேயே நம்பிக்கை கொள்ளுங்கள்!

நமக்கு இப்பொழுது வேண்டியது பலமே.

நாம் துர்ப்பலராய்விட்டோம். அதனால்தான் நம்மிடத்திற்கு ரஹஸ்ய வித்தைகள், குப்த வித்தைகள் முத

ஸிய அற்ப விஷயங்களெல்லாம் வருகின்றன. அவற்றில் உயர்ந்த உண்மைகள் இருக்கலாம். ஆனால், அவை நம்மை அநேகமாய் அழித்துவிட்டன. ஆகவே, உங்கள் நரம்புகளைப் பலமாக்குங்கள். இரும்பு போன்ற தசைகளும், எஃகு போன்ற நரம்புகளுமே நமக்கு வேண்டியிருக்கின்றன. நாம் வெகு காலமாய் அழுது வருகிறோம். இந்த அழுகை இத்துடன் போதும். இனி சுய பலத்துடன் எழுந்து நின்று ஆண்மக்களாயிருங்கள்! ஆண்மகனாய்ச் செய்யும் கோட்பாடுகளே நமக்கு வேண்டும். எவ்விதத்திலும் ஆண்மகனாய்ச் செய்யும் கல்வியே நமக்கு வேண்டும். இதுதான் உண்மைக்கு உரைகல். எது எது உங்களைச் சரீர விஷயமாயும், புத்தி விஷயமாயும், அத்தியாத்ம ஞான விஷயமாயும் பலஹீனராக்குகின்றதோ அதை விஷமெனத் தள்ளுங்கள்! அதில் உயிரில்லை; அஃது உண்மையாயிருக்க முடியாது. உண்மையானது பலமளிப்பதாம்; உண்மையே பரிசுத்தம்; உண்மையே யெல்லா அறிவுமாம். உண்மையானது பலமளிப்பதாயும், அறிவு கொளுத்துவதாயும், வீர்யோத்பாதகமாயும் இருத்தல் வேண்டும். மேற்சொல்லிய ரஹஸ்ய வித்தைகளிலே சில உண்மைகளிருந்தபோதிலும், அவை பொதுவில் துர்ப்பலகாரிகளாயிருக்கின்றன. நான் சொல்வதை நம்புங்கள்! அவ் விஷயத்தில் என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்லுகிறேன். இந்தியா முழுவதும் ஓர் இடம் விடாமல் பிரயாணம் செய்திருக்கிறேன். ஏறக்குறைய இந்நாட்டிலுள்ள எல்லாக் குகைகளிலும் போய்த் தேடிப் பார்த்திருக்

கிறேன். பல வருஷங்கள் இமாசலத்தில் வசித்துமிருக் கிறேன். தம் ஜீவகால முழுவதும் அங்கேயே வசித்த ஜனங்களையும் அறிந்திருக்கிறேன். அவை யெல்லாவற் றிலு மிருந்து நான் செய்த ஒரே தீர்மான மென்ன வெனில்,—சித்திகள் பெறவேண்டுமென்று உபதேசிக்கும் ரஹஸ்ய வித்தைகள் துர்பலத்தையே உண்டுபண்ணுகின் றன. நானோ என் தேசத்தாரை நேசிக்கிறேன். நீங்கள் தாழ்மையடைவதை நான் பார்த்துக்கொண்டிரேன். இப்பொழுதே நீங்கள் துர்ப்பலமுற்றிருக்கிறீர்கள். இனி யும் நீங்கள் துர்ப்பலதசை யடைவதைப் பார்த்துக்கொண் டிரேன். ஆதலால், நான் உங்களுக்காகவும் உண்மைக்காக வும், "போதும் நிறுத்து" என்று கூவி, என் தேசத்தார் இவ்வாறு க்ஷீணகதி யடைவதை நிறுத்தும்பொருட்டு என் குரலை நீட்டிக் கூக்குரலிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது உள்ள நிலையிலேயே நில்லுங்கள்! பலமுடை யவரா யிருங்கள்! ஜ்வலித்துக்கொண்டும், பல மளிப்ப தாயும், பிரகாசம் பொருந்தியும் இராநின்ற தத்துவ சாஸ் திரமாகிய உபநிஷத்துக்களினிடமே திரும்பிச் செல்லுங் கள்! துர்ப்பலத்தை யுண்டாக்கும் இந்த ரஹஸ்ய வித்தை களுக்கு ஒரு கும்பிடுபோட்டுத் தூர விலகுங்கள்! இந்த தத்துவசாஸ்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! உயர்ந்த உண்மைகள் இவ்வுலகத்தில் மிகச் சாதாரணமான சங் கதிகள். உங்கள் இருப்பு எவ்வளவு சாதாரணமோ, அவ்வ ளவு சாதாரணம் அவ்வுண்மைகளும். உங்களுக்கெதிரே இவ்வுபநிஷத்துக்களின் உண்மைக ளிருக்கின்றன.

'அவற்றை யெடுத்துக் கொண்டு அவற்றின்படி நடவுங்கள்! 'அப்பொழுது இந்தியாவுக்கு விமோசனம் ஏற்படும்.

இன்னும் ஒரு வார்த்தை. அத்துடன் என் பிரசங்கத்தை முடித்துவிடுகிறேன். தேசாபிமானத்தைப்பற்றிப் பேசுகின்றீர்களல்லவா? எனக்குத் தேசாபிமானத்தில் நம்பிக்கை யுண்டு. தேசாபிமானத்துக்கு நான் சில லக்ஷணங்கள் ஏற்படுத்தி வைத்துக்கொண் டிருக்கிறேன். பெரிய காரியங்களைச் செய்து முடிக்கவேண்டுமானால், மூன்று விஷயங்கள் அவசியமா யிருக்கவேண்டும். முதலாவது, ஹிருதயத்தின் அடியிலிருந்து அனுதாபம் உண்டாக வேண்டும். வெறும் புத்தியிலும் யுக்தியிலும் என்ன இருக்கின்றது? அது கொஞ்ச தூரம் சென்று அங்கேயே நின்றுவிடுகின்றது. ஆனால், ஹிருதயத்தின் மூலமாகவே அருள் உதிக்கின்றது. திறக்கமுடியாத கதவுகளையெல்லாம் அன்பானது திறக்கச் செய்கின்றது. உலகத்தின் இரகசியங்களை யெல்லாம் அறிவதற்கு வாயிலா யுள்ளது அன்பொன்றே. ஆகவே, இனிச் சீர்திருத்தக்காரராகவும் தேசாபிமானிகளாகவும் வரப்போகின்ற என் நண்பர்களே! பிறரது சுக துக்கங்களில் அநுதாபங் கொள்ளுங்கள்! அவ்வுணர்ச்சி உங்களுக்கிருக்கின்றதா? தேவதைகளின் வம்சத்திலும், ரிஷிகளின் வம்சத்திலும் பிறந்த லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் இப்பொழுது மிருகங்களுக்குச் சகோதரரான நிலையில் நின்றுதவிக்கிறார்களே என்ற உணர்ச்சி உங்களுக் கிருக்கின்றதா! இலக்ஷக்கணக்கான

ஜனங்கள் இன்று பசியால் மடிகிறார்களே, லக்ஷக்கணக்கான ஜனங்கள் பல்லாயிர வருஷகாலமாகப் பசியால் மடிந்து வருகிறார்களே என்ற உணர்ச்சி உங்களுக்கிருக்கிறதா? அஞ்ஞானமானது இந்நாட்டைக் கரிய மேகம் போல் வந்து கவிந்துகொண்ட தென்பதை நீங்கள் உணர்கின்றீர்களா? அது உங்களை இருப்புக்கொள்ளாமல் அலையச் செய்கிறதா? அஃது உங்களை நித்திரை யற்றவர்களாகச் செய்கின்றதா? அஃது உங்கள் இரத்தத்துக்குள் சென்று, இரத்தக் குழாய்களின் ஊடே சுழன்று, உங்கள் இருதயம் அடித்துக் கொள்வதற்கு அநுசாதமாய் இடைவிடாமல் படபடவென்று அடித்துக்கொண் டிருக்கின்றதா? அது உங்களை ஏறக்குறைய பைத்தியமா யடித்துவிட்டதா? நாசத்தால் உண்டாகும் துக்கமாகிய ஒரே எண்ணம் உங்களைப் பிடித்துக்கொண்டதா? அந்தக் காரணத்தால் நீங்கள் உங்கள் பேரையும் புகழையும், மனைவி மக்களையும் வீடு வாசல்களையும், உங்கள் சரீரங்களையுங்கூட மறந்துவிட்டீர்களா? அவ்வளவு தூரம் நீங்கள் செய்தீர்களானால், அதுதான் தேசாபிமானி யாவதற்கு முதற்படி. சர்வமத மஹா சபைக்காக நான் அமெரிக்காவுக்குப் போகவில்லையென்று உங்களில் பலருக்கும் தெரியுமே. ஆனால், இந்த அநுதாப உணர்ச்சி யென்னும் ராக்ஷசன் எனக்குள் இருக்கின்றான். இந்நாட்டை முன்னுக்குக் கொண்டுவர எவ்விதமாக வேலை செய்யலாம் என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டே பன்னிரண்டு வருஷகாலம் இந்தியா முழுவதும் சுற்றினேன். ஆகையால்தான் நான்

அமெரிக்காவுக்கும் போனேன். என்னை அப்பொழுது அறிந்த பலருக்கும் அந்தச் சங்கதி தெரியும். இந்தச் சர்வ மத மஹா சபையைப்பற்றி யாருக்குக் கவலை? இங்கே என் உடன் பிறந்த சொந்த சதையும் இரத்தமும் நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டு வருகையில், அந்தச் சங்கதிக ளெல்லாம் யாருக்கு வேண்டியிருக்கிறது? ஆகவே, இது தான் முதற்படி.

அநுதாப வுணர்ச்சி உங்களுக்கு இருக்கலாம். ஆனால் வீணாய்ப் பேசிக்கொண்டிருப்பதற்குப் பதிலாகப் பய னுள்ள காரியம் ஏதேனும் செய்வதற்கும், தூஷணைபுரி ந்து கொண்டிருப்பதற்குப் பதிலாக ஏதேனும் சிறிது சகாயம் செய்வதற்கும், நம்மவர்கள் துக்கங்களை நிவர்த்தி செய்து, அவர்களை உயிர்ப்பிண மாக்கிவரும் மரணத்தி னின்று மீட்பிக்கக்கூடிய இனிய வசனங்களை மொழிவதற் கும் வழி கண்டுபிடித்தீர்களா? அவ்வளவெல்லாம் செய்தா லும் இன்னும் போதாது. மலைபோல் உயர்ந்த இடையூறு கள் வந்திடினும், அவற்றை லக்ஷியம் செய்யாது வேலை செய்யும்படியான திடசங்கற்பம் உங்களுக் கிருக்கின்றதா? உலக முழுவதும் கையில் கத்தியுடன் உங்களுக்கு விரோதமாய் நின்றாலும், அப்பொழுதும் நீங்கள் உண்மை யெனக் கருதியிருப்பதைச் செய்ய நீங்கள் தைரியப்படு வீர்களா? உங்கள் மனைவி மக்கள் உங்களுக்கு விரோதமா யிருந்தாலும், உங்கள் பணமெல்லாம் போயிடினும், உங் கள் பெயர் அழிந்திடினும், உங்கள் செல்வம் சென்றி

டினும், அப்பொழுதும் நீங்கள் கொண்ட கருமத்தையே உறுதியாய்ப் பற்றி நிற்பீர்களா? அப்பொழுதும் அதையே பின்பற்றி உங்கள் உத்தேசிய ஸ்தானத்தை நோக்கித் திடமாயும் சாவதானமாயும் செல்வீர்களா? பர்த்ருஹரி மஹாராஜா சொன்னதுபோல்,

> நிந்தந்து நீதிநிபுணா யதி வா ஸ்துவந்து
> லக்ஷ்மீ: ஸமாவிஶது கச்சது வா யதேஷ்டம்
> அத்யைவ வா மரணமஸ்து யுகாந்தரே வா
> ந்யாய்யாத் பத: ப்ரவிசலந்தி பதம் ந தீரா:

அதாவது, "நீதியில் வல்லோர் நிந்தனையாவது செய்யட்டும், அல்லது புகழ்ச்சியாவது செய்யட்டும்; திருமகள் வந்தாலும் சரி, தன் இஷ்டமான விடத்திற்குப் போனாலும் சரி; மரணமானது இன்றாவது வரட்டும், அல்லது இன்னும் நூற்றாண்டுகள் கழித்தாவது வரட்டும்; உத்தம குண சீலர்கள் ஆரம்பித்த காரியத்தை ஒரு சிறிதும் விடமாட்டார்கள்."

அப்படிப்பட்ட திட சங்கற்பம் உங்களுக் கிருக்கின்றதா? இம் மூன்று அம்சங்களும் உங்களிடத்தே இருக்குமாயின், உங்களில் ஒவ்வொருவரும் அற்புதங்கள் செய்வீர்கள். நீங்கள் சமாசார பத்திரிகைகளில் எழுதவேண்டியதில்லை. உங்கள் முகமண்டலமே ஜொலித்துக்கொண்டிருக்கும். நீங்கள் குகைகளில் வாசஞ் செய்தாலும், உங்கள் எண்ணங்கள் அக் குகைகளின் கற்சுவர்களையும்

ஊடுருவிச் சென்று, உலக முழுவதும் அலை புரள்வது போல புரண்டு சென்று, நூறு வருஷகாலம் பொறுத்தாயினும் ஒரு மூளையைப் போய்ப் பற்றி அங்கே வேலை செய்யத் தொடங்கும். நல் எண்ணம், சித்த சுத்தி, பரிசுத்த நோக்கம் என்பவற்றின் பெருமை அப்படிப்பட்டதாம்.

இன்னும் ஒரே வார்த்தை உங்களை வெகு நேரம் எங்கே காக்கவைக்கிறேனென்று அஞ்சுகின்றேன். என் தேசத்தவரே! என் சிநேகிதர்களே! என் குழந்தைகளே! நம் ஜாதி என்கிற கப்பலானது வாழ்நாளென்கிற மகா ஜலத்தில் கோடிக் கணக்கான ஜனங்களை ஏற்றிக்கொண்டு அநேக நூற்றாண்டுகளாகப் போய்க்கொண் டிருக்கிறது. அக் கப்பலின் மூலமாய் ஆனந்த மயமான அக்கரைக்கு அநேகம் பேர் கொண்டுபோகப்பட்டார்கள். இன்றைக்கோ நம்முடைய குற்றத்தால் கப்பல் ஓட்டையாய்விட்டது; கொஞ்சம் பழுதாயும் போய்விட்டது. உலகத்துக்குள்ளிருக்கிற எல்லாக் கப்பல்களைக் காட்டிலும் அதிக வேலை செய்த இந்தக் கப்பல் முழுகிப்போகட்டுமென்று சபித்துவிட்டு, அதின் பக்கலில் நாம் சும்மா விருப்பது சரியா! நமது ஜாதி என்கிற கப்பல் ஓட்டையாய்விட்டால் அந்த ஜாதிக்குக் குழந்தைகளாய்ப் பிறந்த நாம், அங்குண்டான அவ் வோட்டைகளை அடைப்போம். மனப் பூர்த்தியாய்ச் செய்து, முடியாவிட்டால் இறப்போம். நம்முடைய புத்தியையே மூளையாகச் செய்து அவ் வோட்டைகளை அடைப்போம். அவ்வளவே தவிர ஒருகாலும் அதைப் பழியாதே

யுங்கள்! உங்கள் ஜாதியைப்பற்றிக் குறை கூறுதேயுங்கள்! அதின் முக்கால வைபவத்தைப் பற்றியல்லவா நான் அதை விரும்புவது? கடவுளுடைய குழந்தைகளென்றல்லவா நான் உங்களை விரும்புகின்றேன்? உங்களுடைய முன்னோர்களுடைய பிள்ளைகளல்லவா நீங்கள்? எல்லாருடைய ஆசிர்வாதமும் உங்களுக்குக் கிடைக்கட்டும்! சாபம் மாத்திரம் வேண்டாம். என்னுடைய ஏற்பாட்டைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வந்தேன். நீங்கள் இவைகளை ஆதரவாய்க் கேட்டால், உங்களோடு கூடச் சேர்ந்து நானும் வேலை செய்யத் தயாரா யிருக்கிறேன். நீங்கள் கேட்காமல் என்னை உதைத்துத் துறத்திவிடும் பட்சத்தில், மறுபடியும் வந்து, "ஐயோ! நாமெல்லோரும் முழுகிக்கொண்டிருக்கிறோமே என்று சொல்லி, உங்கள் மத்தியில் உட்கார்ந்து உங்களோடு நானும் முழுகிப்போவேன். ஆனகயினால், நாம் சபிக்காம லிருப்போம்," என்று ஜனங்களுடைய மனமெல்லாம் உருகப் பிரசங்கித்தார்.

## IX

### சென்னையில் இரண்டாம் பிரசங்கம்.

### பரத கண்டத்து மஹான்கள்.

பரதகண்டத்து மஹான்களைப்பற்றிப் பேசவேண்டுமென்று நினைக்கும்பொழுது, சரித்திர நூலோராலும் நிர்ணயிக்க முடியாத அதி புராதன காலத்திற் போய் என் மனம் நிற்கின்றது. இருள் மூடியதுபோ லிருக்கும் அப்பண்டைக் காலத்தின் நுட்பங்களை யறிய, தொன்று

தொட்டு வரும் கர்ண பரம்பரையான ஐதிகங்களும் பயன் படாமற் போகின்றன. அது முதல் பரதகண்டத்தில் உண்டான மஹான்கள் எண்ணிறந்தவர் ஏனெனில், இத்தனை ஆயிர வருஷங்களாக மஹான்களை உண்டாக்குவதைவிட இந்துநாட்டாருக்கு வேறென்ன வேலை இருந்தது? ஆகவே, அத்தகையவருள் மிகச் சிறந்தவரெனக் கருதத்தகும் மஹா புருஷர்களைப்பற்றி நான் ஆராய்ந் தறிந்திருப்பதை இன்று உங்கள் முன் சொல்ல உத்தேசித் திருக்கிறேன். முதல் முதல் நமக்குப் பிரமாணமாயுள்ள சாஸ்திரங்களைப் பற்றிச் சில அம்சங்கள் நாம் அறியவேண்டி யிருக்கிறது. அதாவது, நம் சாஸ்திரங்களிலே இருவகை வித்தைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. அவைதாம் பரவித்தை, அபர வித்தை யென்பன. முதலாவதாகிய பரவித்தை யென்பது நித்யமானது. இரண்டாவதான அபரவித்தையோ அவ்வளவு பிரமாணமுள்ள தல்லாவிடினும் சிற்சில காலதேச வர்த்தமான விசேஷங்களை யொட்டிப் பிரமாணமாயுள்ளது ஜீவாத்மலக்ஷணம், பரமாத்ம லக்ஷணம், ஜீவேஸ்வர சம்பந்த லக்ஷணம், முக்தி லக்ஷணம் என்னும் நித்திய தத்துவங்கள் அடங்கிய ஞானத் திரட்டையே நாம் சுருதி என்றும், வேதமென்றும் வியவஹரிக்கின்றோம். இதற்கடுத்தபடியிலுள்ள தர்ம தத்துவங்களின் திரட்டை நாம் ஸ்மிருதிகளென்கிறோம். அவை தாம் மநு, யாஜ்ஞவல்கியர் முதலிய பெரியோர்களால் அருளப்பட்ட தர்ம சாஸ்திரங்களிலும், மற்றும் புராணங்கள் முதல் தந்திரங்க ளீறாகவுள்ள கிரந்தங்களிலும் கூறப்படுவன. இரண்டாவது

வரிசையிலே சொன்ன நூல்களும் அவற்றில் விதிக்கப் பட்ட தர்மங்களும் முன் சொன்ன சுருதிக்குத் தாழ்ந்தவை. ஏனெனில், ஸ்மிருதி புராணாதிகள் சுருதிக்கு விரோதமாயிருக்குமாயின், சுருதியை உயர்ந்த பிரமாண மென்பது ஸித்தாந்தம். அப்படிச் சொல்வதின் கருத்து என்ன வெனில், மனிதர் பரகதி யடைவதற்குவேண்டிய மூல தத்துவங்க ளெல்லாம் வேதங்களிலே தெள்ளென விளக்கப்பட் டிருக்கின்றன வென்றும், அவற்றின் விசேஷ விவரங்கள் ஸ்மிருதி புராணாதிகளிலே கண்டு கொள்ளுமாறு விடப்பட்டன என்றுமாம். மூல தத்துவ சம்பந்தமான பொது விதிகளுக்குச் சுருதிகளே போதுமானவை. பரமார்த்த ஸாதனத்துக்குச் சுருதிகளில் அருளியிருப்பதை விட அதிகமாக வேறு அம்சம் சொல்லவாவது அறியவாவது முடியாது, எது எது அவசியமோ அவைகெல்லாம் முன்னமே அறிந்தாய்விட்டது. ஜீவாத்மா பரிபூர்ண நிலையை அடைவதற்கு அவசியமாய் வேண்டியயாவும் சுருதிகளிலேயே பரிபூர்த்தியாய் விட்டன. மற்று இரண்டாம் பக்ஷமான விசேஷ விவரங்கள் மாத்திரம் அவற்றில் கூறாது விடப்பட்டன. இவ் விசேஷ அம்சங்களைத்தான் ஸ்மிருதிகள் அவ்வக்காலத்துக் கேற்பவிதித்து வருகின்றன. இதன் சம்பந்தமான வேறொரு விசேஷம் என்ன வெனில், இந்தச் சுருதிகளிலே அருளப்பட்ட உண்மைகளை அநேக ரிஷிகள் கண்டறிந்து வேதரூபமாய்ச் சொன்னதாகப் பிரமாணம். அவர்களுள் பெரும்பான்மையோர் புருஷர்கள். ஸ்திரீகளும் சிலர் உளர். அவர்களைத்தாம்

மந்திர திரஷ்டாக்கள் என்று சொல்வார்கள், அப் புருஷர்களின் சரித்திரம் ஜனன காலம் முதலியவற்றைப் பற்றி நமக்குத் தெரிந்தது வெகு சொற்பமே யாயினும், அவர்களது சிறந்த கருத்துகளும், அவர்கள் ஈசனது திருவருளால் யோகாநுபவத்திற் கண்டறிந்த மேலான மெய்யநுபவங்களும், நம் தேசத்தின் சிறந்த சாஸ்திரமாகிய பரிசுத்த வேதங்களிலே பொதிந்து கிடக்கின்றன. ஆனால், ஸ்மிருதி புராணாதிகளிலோ மஹா புருஷர்களைப் பற்றிய வரலாறுகள் நிரம்பியிருக்கின்றன. அவற்றில்தான் பிரபஞ்சத்தைப் போதிக்கும்படியான மஹா புருஷர்கள், கண்டோர் பிரமிக்கத்தக்க பிரமாண்டமான வலிய உருவத்துடன் முதன் முதல் நம் முன் வந்து நிற்பதுபோ லிருக்கிறது. அவர்கள் செய்த உபதேசங்களைவிட அவர்களைத் தாங்கிய திருமேனிகளே சில சமயங்களில் அளவிற் பெருத்திருக்கின்றன.

இதுநிற்க, வேறொரு விசேஷ அம்சம் நாம் அறிய வேண்டியிருக்கிறது. அஃதாவது, நமது மதமானது ஸகுண நிர்க்குண ஸ்வரூபமான ப்ரஹ்மத்தைப் பிரசங்கிக்கின்றது. அது நிர்க்குண தத்துவங்களையும் ஸகுண தத்துவங்களையும் அநேகமாய்ப் பிரசங்கித்தபோதிலும், நம் மதத்திற்கு முக்கியப் பிரமாணமா யுள்ளவை சுருதிகளெனும் வேதங்களேயாம். அவற்றில் கூறப்பட்டவையெல்லாம் நிர்க்குண வாதமே. ஸ்மிருதிகளிலும் புராணங்களிலுந்தான் எல்லா சகுணவாதமும், உத்தமமான அவ

தாரங்களும், ஈசன் அருள் பெற்ற மஹான்களின் வரலாறும் வருகின்றன. இந்த ஸகுண வாதத்தில்தான் நம் மதத்துக்கும் பிற மதங்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கின்றது. எப்படியெனில், நமது மதத்தைத் தவிர்த்து, உலகத்திலுள்ள மற்ற ஒவ்வொரு மதமும் தன் தன் ஸ்தாபகன் அல்லது ஸ்தாபகர்களின் ஜீவித சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்டு விளங்குகின்றது. கிறிஸ்துமதமென்னும் கட்டடம் ஏசுகிறிஸ்துவின் சரித்திரமாகிய அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறே முஹம்மதிய மதம் முகம்மத் நபியின் சரித்திரத்தையும், பௌத்தமதம் புத்ததேவரது சரித்திரத்தையும், ஜைந மதம் ஜினபுருஷர்களின் சரித்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டு உற்பத்தியானவையாம். ஆகவே, இம் மதங்களிலெல்லாம் அவற்றை ஸ்தாபித்ததாகச் சொல்லப்படும் மஹா புருஷர்கள் வாஸ்தவமாகவே இவ்வுலகத்தில் இருந்தவர்களென்று நிரூபிப்பதற்கு வேண்டிய "சரித்திரப் பிரமாணம்" என்பதைப்பற்றிப் பலமான விவாதங்கள் நிகழவேண்டுமென்றேற்படுகிறது. எப்பொழுதாவது அம் மஹா புருஷர்கள் பண்டைக்காலத்தில் இருந்ததைப்பற்றிச் சரித்திரப்பிரமாணம் துர்ப்பலப்படுமேயாகில், அவ்வித பிரமாணத்தை யாதாரமாகக் கொண்ட மதங்களெல்லாம் தரைமேல் சாய்ந்து சுக்கல் சுக்கலாய் உடைந்து போய்விடுகின்றன. நாம் மாத்திரம் இந்த ஆபத்தினின்று தப்பித்துக்கொண்டோம். அதற்குக் காரணம், நமது மதம் கேவலம் புருஷர்களால் ஸ்தாபிக்கப்படாதது, அபௌரு

ஷேபமாய் நித்திய தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டதாய் விளங்குகின்றமையேயாம். நமது மதத்தை நாம் அநுஷ்டிப்பதற்குக் காரணம்: அஃதோர் ரிஷியின் பிரமாணத்தைக் கொண்டிருப்பதென்றாவது, அல்லது ஒரு அவதார புருஷனால் ஏற்பட்டதென்ற ஆதாரத்தைப் பற்றியாவது அன்று. வேதங்களுக்குக் கிருஷ்ணன் பிரமாணமன்று; ஸ்ரீ கிருஷ்ணனுக்குத்தான் வேதங்கள் பிரமாணம் வேதார்த்தத்தைப் பிரசங்கித்தவர்களுக்குள் அவர் சிறந்தவ ரென்பதனாலேயே அவருக்கு மஹிமை உண்டாயிருக்கின்றது. அவ்வாறே மற்ற அவதார விஷயமும்; மற்ற மஹான்கள் விஷயமும் அவ்வாறேயாம். நமக்கு முக்கியமான மூல ஸித்தாந்தம் என்னவெனில், மனிதன் பரிபூர்ணநிலை அடைவதற்கும் முக்தியடைவதற்கும் அவசியமான அனைத்தும் வேதங்களிலேயே இருக்கின்றன. அவற்றில் இல்லாமல் நீ புதிதாகக் கண்டறியப்போவது ஒன்றுமில்லை. ஞானத்தின் எல்லையாகிய பூர்ண ஐக்கியத்தைக் கடந்து மேல் செல்வதென்பது அசாத்தியம், அசம்பாவிதம். இந்த எல்லை முன்னமே ஏற்பட்டுப்போய் விட்டபடியால், அவ்வித ஐக்கியத்துக்கு மேற்செல்வது முடியாத காரியமென்க. 'தத் த்வம் அஸி' என்ற அம் மஹா வாக்கியம் எப்பொழுது பிரவர்த்தித்ததோ, அப்பொழுதே தத்துவஞானம் பரிபூர்த்தி யடைந்துவிட்டது. அம் மஹா வாக்கியமோ வேதத்திலே இருக்கிறது. ஆகவே, அவ் வேதத்தில் சொல்லப்படாமல் எஞ்சி நின்ற பாகம் யாதெனில்,—அவ்வச் சமயங்களில் ஏற்படும் கால தேச

வர்த்தமான பேதங்களை யனுசரித்து ஜனங்களுக்கு விதிவிலக்கு வடிவமான தர்மங்களை உணர்த்தவேண்டிய அம்சமேயாம். ஜனங்களைத் தொன்றுதொட்டு வரும் அறநெறியின் வழியே நடத்தவேண்டி யிருந்தது. அதற்காகவே இந்த மஹான்களான ஆசார்யர்களும் முனிவர்களும் அவதரித்தார்கள். இதற்குக் கண்ணன் கீதையிலே கடாக்ஷித்திருக்கிற பிரசித்தமான சுலோகமே சிறந்த பிரமாணம்.

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்
பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்,
தர்ம-ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

“எவ்வெப்பொழுது தர்மத்துக்குக் கெடுதியும் அதர்மத்துக்கு உயர்வும் உண்டாகின்றதோ, அப்பொழுது நான் அவதரிக்கின்றேன். ஸாதுக்களை ரக்ஷிக்கும்பொருட்டும், துஷ்டர்களைச் சிக்ஷிக்கும்பொருட்டும், தர்மத்தை நிலைநிறுத்தும்பொருட்டும் நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.”

இதுதான் இந்தியாவிலுள்ள மதத்தின் இயல்பு.

இதுவரையில் சொன்னவற்றால் ஏற்படுவது யாது? தமக்குத் தாமே பிரமாணமாயும், வேறு தர்க்கம் முதலிய பிரமாணங்களைக்கூட அபேக்ஷிக்காமலும், எப்பேர்ப்பட்ட மஹர்ஷிகளா யிருப்பினும், எத்தகைய மஹிமை பொருந்

திய அவதார புருஷர்களா யிருப்பினும், அவர்களது பிரமாணத்தைக்கூட ஆதாரமாகக் கொள்ளாமலும் விளங்கும் நித்திய தத்துவங்களை யாதாரமாகக் கொண்ட சித்தாந்தம் ஒருபுறம் இருக்கக் காண்கிறோம். இத்தகைய சிறப்பான நிலை இந்தியாவிலே இருப்பதினால்தான் அனைவரும் பொதுவாய் அநுசரிக்கத்தக்க மதம் வேதாந்தமே தவிர வேறில்லையெனக் கூற நமக்குப் பாத்திய மிருக்கிறது. அது கேவலம் மஹா புருஷர்களைப்பற்றி மாத்திரம் பிரசங்கிக்காது பரம புருஷார்த்த தத்துவங்களையும் போதிக்கின்றமையால், அஃது ஏற்கனவே உலகத்தில் ஸர்வார்ஹ மதமாய் அமைந்திருக்கின்றது. கேவலம் ஒரு புருஷனது சரித்திரத்தை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு உற்பத்தியான மதம் எதுவும் எல்லா ஜனங்களுக்கும் ஏற்ற மதமாகாது. நமது நாட்டிலேயே எத்தனையோ மஹா புருஷர்கள் இருந்ததாகத் தெரியவருகிறது. ஒவ்வொரு ஊரிலும் அவரவர்கள் தத்தம் மனோ நிலைக்குத் தக்கவாறு பற்பல பெரியோர்களைப் பிரமாணமாகக் கொண்டிருக்கிறார்கள். அப்படி யிருக்க, மஹம்மது, புத்தன், கிறிஸ்து என்பவர்களுக்குள்ளே எவரையேனும் ஒருவரையே உலகம் முழுவதும் தனிப்பெரும் பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்றால் எப்படி முடியும்? அவ்வளவு மாத்திரமா? உலகத்திலுள்ள நல்லொழுக்கம், தர்மம், ஞானம், பக்தி என்கிற இவை யெல்லாம் அவ்வொரே புருஷனது ஸம்மதி பெற்றிருந்தால்தான் உண்மையாம். அது முடியுமா? ஆனால், வேதாந்த மதத்துக்கு அப்பேர்ப்பட்ட யாதொரு

பௌருஷேயப் பிரமாணமும் வேண்டியதில்லை. மனிதனது நித்தியமான ஆத்ம ஸ்வரூபமே அதற்குப் பிரமாணம். அது வற்புறுத்தும் நல்லொழுக்கத்துக்கு மனிதனது அத்யாத்ம நித்ய சிந்மயத் தன்மை ஏற்கெனவே இருப்பதும் அடையப்பட்டதுமே யின்றி இனி அடையப்பட வேண்டியதன்று. (ஏனெனில், அதுவே ஆத்மாவின் நிஜ ஸ்வரூப மானமையா லென்க.) இதுதான் நம் தேசத்தின் உத்தம நிலையான ஞானதத்துவம். ஆனால், சாதாரணமாயுள்ள ஜனங்கள் பெரும்பான்மையோருக்கு இது கஷ்டசாத்தியமானபடியால், அவர்கள் சுலபமாய்த் தெரிந்துகொண்டு பின்பற்றக்கூடிய ஒரு மஹாபுருஷனது அநுஷ்டானமும் திவ்யசரித்திரமும் அவசியமாய் இருக்க வேண்டுமென்பதை வெகு காலத்துக்கு முந்தியே நமது ரிஷிகள் அறிந்திருக்கிறார்கள்.

ஸகுணப்பிரஹ்மவாதத்தை மறுத்துப் பிரசங்கித்த ஸாக்ஷாத் புத்தமுனியையே அவர் மறித்து ஐம்பது வருஷமாவதற்குள் அவரது சிஷ்யர்கள் ஒரு பகவானாகக் கற்பித்து விட்டார்கள். ஆகையால் இந்த சகுணரூபமான பகவான் அவசியம் என்றேற்படுகிறது. ஆனால், அப்பேர்ப்பட்ட பகவானைப்பற்றி நாமே நம் மானஸ கல்பனாசக்தியால் கற்பித்துக்கொள்ளும் வீணானபாவனைகள் பெரும்பாலும் மனிதர் பூஜிப்பதற்குத் தகாதவையாயிருத்தலால், அவற்றைப்பார்க்கிலும் நமக்குள்ளாகவே அவ்வக்காலங்களிலே பிறந்து நம்முடன் அந்யோந்யமாய்க் கலந்து வாழும் பிரத்தியக்ஷதேவதைகளான மஹான்களே சிறந்த

வர்களென்பது நமக்குத்தெரியும். யாதொரு கல்பிதக் கட வுளையேனும், நாம் கல்பனாசக்தியால் சிருஷ்டிக்கும் யாதொரு பதார்த்தத்தையேனும், அதாவது நாமே உண்டு பண்ணும் தேவதாபாவனையையேனும் பூஜிப்பதைவிட உண்மையாயுள்ள மஹான்களைப் பூஜிப்பது எவ்வளவோ உத்தமமானது.

நீங்களாவது நானாவது கல்பிக்கக்கூடிய ஈசுவர பாவனையைப் பார்க்கிலும் ஸ்ரீ கிருஷ்ணன் எவ்வளவோ சிறந்தவனன்றோ? நீங்களாவது நானாவது மனத்தால் பாவிக் கக்கூடிய எவ்வித பாவனையைப் பார்க்கிலும் கௌதம புத்தர் எவ்வளவோ உத்தமமான பிரத்தியக்ஷ பரிபூர்ண பாவனையல்லவா? ஆகையால்தான் ஸர்வ ஜனங்களும் கல்பனா தேவதைகளைக் கூட உபேக்ஷித்து அம்மஹான் களையே அதிகமாகப் போற்றிப் பூஜிக்கின்றார்கள். இதை நம் பெரியோர்கள் அறிந்தே எல்லா ஹிந்துக்களும் யாதொரு வித்தியாசமுமின்றி அப்பேர்ப்பட்ட மஹான் களையும் அவதாரபுருஷர்களையும் ஆராதிக்குமாறு ஏற் படுத்தினார்கள். அவ்வளவு மாத்திரமா? அவதாரங்களுக் குள்ளே உத்தமமான அவதார புருஷன் சொல்வதைக் கேளுங்கள்.

யத் யத் விபூதிமத் ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா
தத் ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஸ ஸம்பவம்.

"ஐசுவரியமும், பலபராக்கிரமமும், உற்சாகமும், கா ந்தியும் ஆகிய இவற்றுடன் சேர்ந்த எவ்வெவ் வஸ்துக்கள்

உளவோ, அவையெல்லாம் என் தேஜஸ்வின் அம்சத்தா லுண்டானவை யென்றறிவாயாக.''

இதனால் உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் பிறந்த அவதாரபுருஷர்களையும் ஹிந்துக்கள் யாதொரு ஆக்ஷேபமு மின்றிப் பூஜிக்கலாமென் றேற்படுகிறதல்லவா? எந்தத் தேசத்தில் பிறந்தவ ராயினும், எந்த ரிஷியையும் எந்த ஞானியையும் ஹிந்துக்கள் பூஜிக்கலாம். அவ்வளவேன்? நாமே பற்பல தடவைகளில் கிறிஸ்தவர்களின் ஆலயங் களுக்கும், பற்பல தடவையும் முஹம்மதியர்களின் மஸ்ஜிதுகளுக்கும் போவது பிரத்தியக்ஷ விஷயந்தானே. அப்படிச் செய்வதுதான் நல்லது. ஏன் செய்யக்கூடாது? நமது மதம் ஸர்வ ஸாதாரண ஸமரஸ மதமென்று நான் ஏற்கனவே சொல்லவில்லையா? அது எல்லாவித மத சித் தாந்தங்களையும் சேர்த்துக்கொள்ளும்படியான விசால மானது. இவ் வுலகத்தில் இதுவரையில் ஏற்பட்டுள்ள மத சித்தாந்தங்களை யெல்லாம் நம் மதத்தில் உடனே சேர்த் துக்கொண்டு, இனி வரப்போகும் எல்லா ஸித்தாந்தங்களை யும் அவ்வாறே வேதாந்த மதத்தின் விரிந்த கைகளால் அணைத்துக் கட்டிச் சேர்த்துக்கொள்வதற்கும் நாம் பொறுமையுடன் காத்திருக்கலாம்.

இதுதான் மஹா புருஷர்களைப்பற்றியும், ஈசுவராவ தாரங்களைப்பற்றியும், ஏறக்குறைய நமது சித்தாந்தம் அவர்களன்றி இதர மத்தியம புருஷர்களும் இருக்கின் றார்கள். வேதங்களிலே ரிஷி என்கிற சொல் அடிக்கடிப்

பிரயோகிக்கப்பட் டிருப்பதைக் காணலாம். இக்காலத்தில் அது வெகு சாதாரணச் சொல்லாய்விட்டது. எல்லாவற்றிற்கும் ரிஷியே சிறந்த பிரமாண மென்கிறார்களே; அதன் கருத்தென்ன? "ரிஷிர்மந்த்ர த்ரஷ்டா" அதாவது, "ரிஷியென்பவர் மந்திரங்களை (யோகாநுபவத்திற்) கண்டவர்" என்பது வேதங்களிலே கூறப்பட்ட ரிஷி லக்ஷணம் 'மதம் உண்மை யென்பதற்கு நிரூபணம் (ருஜு-Proof) யாது?' என்ற இக் கேள்வி, வெகு பூர்வ காலத்திலேயே நிகழ்ந்தது. அதற்கு ஸமாதானம், இந்திரியங்களால் நிரூபணஞ் செய்ய முடியா தென்றார்கள்.

'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ'

'எதை யடைய முடியாமல் வாக்கானது மனத்துடன் திரும்பிவிடுகின்றதோ' என்றும்,

'ந தத்ர சக்ஷுர் கச்சதி ந வாக் கச்சதி'
"அங்கே கண் செல்லாது, வாக்கு செல்லாது"

என்றும் வேதம் முறையிடுகின்றது. ஆத்மநிச்சயம், ஈசுவர நிச்சயம், நித்தியாநந்த வாழ்வு, உத்தம புருஷார்த்தம் முதலியவற்றைப்பற்றி பஹிர்முகமாய்க் காணப்படும் பிரபஞ்சப் பொருளின் மூலமாய்த் தெரிந்துகொள்ள முடியாது. இதில் பிரவிர்த்திக்கும் மனமானது இடைவிடாது மாறிக்கொண் டிருப்பது, எப்பொழுதும் சஞ்சல ஸ்வபாவமுள்ளது, கண்டத்தன்மை யுள்ளது, ஆகையினால், சிதறுண்டு போகக் கூடியது. இந்தப் பிரகிருதியினால் அநந்த

மாயும், நிச்சலமாயும், நிஷ்களமாயும், அகண்டமாயும், நித்தியமாயும் உள்ள பரம்பொருளைப்பற்றி யாது சொல்ல முடியும்? ஒன்று மாகாது. இவ் விஷயத்தைப்பற்றி உயிரற்ற ஜடரூபமான பிரகிருதியைச் சோதித்து உண்மை கண்டுபிடிக்க மனிதர்கள் வீண்முயற்சி செய்த விடங்களிலெல்லாம் விளைந்த கேடுகளைச் சரித்திரத்தைப் படித்தால் அறியலாம். அப்படியாயின், வேதங்களிலே பிரதிபாதிக்கப்படும் ஞானத்தின் வரலாறு யாது?' என்றால், அது ரிஷியின் மூலமாய் உதயமாகிற தென்போம். இந்த ஞானம் இந்திரியங்களில் உள்ளதன்று. ஆனால், அந்த ஞானமே இந்திரியங்களாகவும், மனிதன் அடையவேண்டிய உத்தம புருஷார்த்தமாயு முள்ளது. இந்திரியங்களை மனிதன் அடையவேண்டிய உத்தம புருஷார்த்தமென்று யார் தைரியமாய்ச் சொல்வார்கள்? நாம் அன்பாய் நேசித்திருந்தவர் மரணத்தை நாம் நேரிற் காணும் பொழுதும், நமக்குப் பெரும் விபத்து நேரும்பொழுதும், அல்லது அத்தியந்தமான ஆநந்தம் உண்டாகும்பொழுதும், சில நேரம் வரையிலும் நம் மனம் நிச்சலமாயிருப்பது அநேகருக்கு அநுபவஸித்தமா யிருக்கலாம். மற்றும் பல சமயங்களில் நமது மனம் நிச்சலமாகி, அந் நேரத்திற்காவது தன் உண்மை நிலையை உணர்வதுபோலவும், வாக்குக்கும் மநத்துக்கும் எட்டாத வெகு தூரத்திலுள்ள எல்லைபற்ற பரவெளியின் பேரொளியை மின்மினியின் சிற்றொளியைப் போல் நாம் அநுபவிப்பது போலவும் தோன்றுகின்றது. இது சாதாரணமான அநுபவமாயுள்ளது. இதையே புர

மார்த்தத்திலே அப்பியாஸப்படுத்திப் பரிபூர்த்தி செய்ய வேண்டியிருக்கின்றது. ஆத்மாவானது இந்திரியங்களால் கட்டுண்டதன்றெனவும், அளவுபடுத்தப்பட்டதன்றெனவும், தற்போதத்தாற் கூட (Consciousness) அளவுபடுத்தப்பட்டதன்றெனவும், அநேக யுகங்களுக்கு முன்னே மனிதர்கள் கண்டுணர்ந்தார்கள்.

இந்தத் தற்போத மென்பது அகண்ட ஞானமெனும் சங்கிலியின் ஓர் அம்சத்தின் பெயர் மாத்திரமாம். பிரஹ்மமும் தற்போதமும் ஒன்றல்ல; தற்போத மென்பது ப்ரஹ்மத்தின் ஒரு கூறு மாத்திரமேயாகும். தற்போதத்தைக் கடந்த விடத்தில்தான் தீரர்கள் உண்மைப்பொருளைத் தேடுகின்றனர். தற்போதம் இந்திரியங்களால் கட்டப்பெற்றது. அதற் கப்பாலும், இந்திரியங்களுக்கு அப்பாலுந்தான், மனிதர்கள் அத்தியாத்ம வுண்மைகளை அறியவேண்டும். அவ்வாறு இந்திரியங்களின் எல்லையைக் கடந்து காரிய ஸித்தி பெறும் புருஷர்கள் இப்பொழுதும் இருக்கின்றனர். இவர்களுக்குத் தான் ரிஷிகள் என்று பெயர். ஏனெனில், அவர்கள் அத்தியாத்ம வுண்மைகளை நேருக்கு நேராய்க் காண்கின்றார்கள். ஆகவே, நேருக்கு நேராய்க் காணுதலெனும் ப்ரத்யக்ஷமே வேதங்களின் பிரமாண நிரூபணமாம். என் முன் இருக்கும் இந்த மேஜையானது உண்மையில் உள்ளதென்பதற்கு, அதை நான் நேராய்க் காண்பதே சிறந்த பிரமாண மாதல்போல், வேதங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் உண்மையென நிரூபிப்பதற்கு ரிஷிகளின் ப்ரத்யக்ஷ தத்துவ தர்சனமே

சிறந்த சாட்சியாம். இம் மேஜையை நான் என் புலன்களால் அறிகின்றேன். அதுபோல், அத்தியாத்ம வுண்மைகளையும் ஆத்மாவின் இந்திரியாதீத ஞானதசையில் அறிகின்றோம்.

இந்த ரிஷித்தன்மை காலத்தாலும், தேசத்தாலும், ஆண் பெண் என்னும் ஜாதியாலும், ஆரியர் ஆரியரல்லாதவர் என்கிற ஜன ஸமூக பேதத்தாலும் பாதிக்கப் படாததாம். இந்த ரிஷித்துவம் ரிஷிகளின் சந்ததிகளான ஆரியர்களுக்கும், அவ்வாறல்லாத அநாரியர்களுக்கும், அவ்வளவேன், மிலேச்சர்களுக்குங்கூட சமான பாத்தியமுள்ள போது சொத்தென்று வாத்ஸ்யாயன முனிவர் தைரியமாய் மொழிகின்றார். இதுதான் வேதங்களிலே கூறப்படும் ரிஷித்வ மென்பது. இந்தியாவின் அரிய ஞானச் செல்வமாகிய இதனை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். இதைப் பிரபஞ்சத்திலுள்ள பிறநாட்டார்களும் கற்றறிந்து கொள்வார்களாயின், சண்டைகளும் சச்சரவுகளும் எவ்வளவோ குறைந்துபோகும். சமய நெறியானது நூல்களிலேனும், கோட்பாடுகளிலேனும், மத சித்தாந்தங்களிலேனும் உள்ளதன்று. உற்ற நிலையிலிருந்து அதனின்றும் படிப்படியாய்ப் பக்குவமடைந்து பரகதி யடைதலே அதன் இயல்பாம்.

என் நண்பர்களே! உங்களில் ஒவ்வொருவரும் ஒரு ரிஷியாகி அத்தியாத்ம விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்க் காணும்வரையில், உங்களுக்குச் சமய நெறி ஆரம்பமாக

வில்லை யென்றே சொல்வேன். இந்திரியாதீதமான ஞானம் உங்களுக்கு உண்டாகும் வரையில் சமயநெறி யென்பது வெறும் பேச்சாகவும் சாதனமாகவுமே முடியும். உங்கள் பேச்செல்லாம் இரண்டாந்தரம், மூன்றாந்தரமான பேச்சே யன்றி வேறில்லை. இவ் விஷயத்தில்தான், புத்த பகவான் சில பிராமணர்களுடன் வாதம் செய்தபொழுது சொல்லிய அழகிய வாக்கியம் நன்றாய்ப் பொருந்துகின்றது. அந்தப் பிராமணர்கள் ப்ரஹ்ம லக்ஷணத்தைப் பற்றி வாதம் பண்ணிக்கொண்டு வருவதைப் புத்த பகவான் பார்த்து, "நீங்கள் ப்ரஹ்மத்தைக் கண்டீர்களா?" என்று வினவ, "இல்லை" என்றான் ஒரு பிராமணன்; "அல்லது, உன் பிதாவாவது கண்டாரா?" "இல்லை, அவரும் காணவில்லை." "அல்லது, உன் பாட்டனாவது." "அவர்கூட ப்ரஹ்மத்தைப் பார்த்திருப்பாரென்று நான் நினைக்கவில்லை." அதைக் கேட்டு புத்த பகவான், "அப்பா! உன் பிதாவாவது, பாட்டனாவது ஒருபோதும் பார்த்திராத புருஷனைப் பற்றி நீங்கள் எப்படி வாதம் பண்ணி ஒருவரை யொருவர் கீழே தள்ளப் பார்க்கின்றீர்கள்?" என்றார். உலக மெங்கும் நடக்கும் காரியம் இதுதான். ஆகவே, நாம் வேதாந்தங்களிலே கூறியபடி,

> "நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா
> ந பஹுநா ஸ்ருதேந."

இந்த ஆத்மா, அதிகமாய்ப் பேசுவதாலாவது, சிறந்த புத்தியினாலாவது, வேதாத்தியயநத்தினாலாவது

அடையப் படுவதன்று" என்று சொல்லுவோம். ஜகத்தி லுள்ளவர்களை யெல்லாம் நோக்கி வேத வாக்கியாநுஸார மாய் இவ்வாறு மொழிவோம்:—உங்கள் சண்டை சச்சர வுகளெல்லாம் வீணே; எந்தக் கடவுளைப்பற்றி நீங்கள் பிரசங்கிக்க வேண்டுமென்கிறீர்களோ, அவரை நீங்கள் கண்டறிந்தீர்களா? நீங்கள் கண்டறியாவிட்டால், உங்கள் பிரசங்கம் வீணே; நீங்கள் சொல்வது இன்னதென்று உங் களுக்குத் தெரியாது. ஆனால், நீங்கள் கடவுளைக் கண்ட றிந்திருப்பீராயின் சண்டையிடமாட்டீர்கள்; உங்கள்முகத் திலே ப்ரஹ்ம தேஜஸ் ஜ்வலிக்கும். முற்காலத்திலே உப நிஷத்துக்களிலே பிரஸித்தரான ஒரு பிராசீன ரிஷியான வர் ப்ரஹ்மத்தை யறியுமாறு தன் குமாரனை யனுப்ப, அவன் திரும்பி வந்தபொழுது "நீ என்ன தெரிந்துகொண் டாய்?" என்று பிதா கேட்டார். 'இத்தனை சாஸ்திரங்களைக் கற்றேன்' என்று மகன் சொல்ல, "அது ஒன்றும் பயன் படாது; மறுபடியும் போ!" என்றார் பிதாவான ரிஷி. மக னும் அவ்வாறே திரும்பிச்சென்று, மறுபடியும் திரும்பி வந்தபொழுது, முன்போலவே பிதா கேட்க, முன் சொன்ன சாஸ்திரங்களையே கற்றதாகக் குமாரன் விடை பகர்ந்தான். மறுபடியும் அவன் திரும்பிப் போகவேண்டி வந்தது. அடுத்த முறை அவன் திரும்பி வந்தபொழுது அவன் முகம் முழுவதும் ஜ்வலித்துக்கொண் டிருந் தது. அதைக் கண்ட அவன் பிதா எழுந்து நின்று, "ஆஹா, குழந்தாய்! இன்றுதானடா, உன் முகமண்டலம் ப்ரஹ்ம ஞானியின் முகம்போல் ஜ்வலிக்கின்றது" என்று

சாம். அதுபோல, எப்பொழுது உங்களுக்கு ப்ரஹ்ம ஞாநம் உண்டாகின்றதோ, அப்பொழுது உங்கள் முகமே மாறிவிடும்; உங்கள் குரல் மாறும்; உங்கள் தோற்றம் முழுமையுமே மாறிவிடும்; நீங்கள் மாநுஷ கோடிகளுக்குப் பெரும் பாக்கியமாய் விளங்குவீர்கள். அப்பொழுது நீங்கள் ரிஷியாக ஆவதை நிறுத்த யாராலும் முடியாது. இது தான் நம் மதத்தின் உத்தம லக்ஷணத்தை விளக்கும் ரிஷித்வம் என்பது. மற்றப்படி, இப் பிரசங்கங்களும், வாதங்களும், தத்துவ சாஸ்திரங்களும், த்வைதங்களும், அத்வைதங்களும், ஸாக்ஷாத் வேதங்கள் கூட வெறும் சாதனங்களே, இரண்டாம் பக்ஷமேயாம். முதற் சொன்னது முதன்மையானது. மற்று வேதம், வியாகரணம். ஜ்யோதிஷம் முதலிய வெல்லாம் மத்தியம பக்ஷமானவையே. நிர்விகாரமான பரம்பொருளின் அபரோக்ஷாநுபூதியை யளிக்கும் ஞாநமே உத்தம ஞாநம். இப்போர்ப்பட்ட அநுபூதியுள்ளவர்கள் தாம் வேதங்களிற் சொல்லப்படும் ரிஷிகளாவார். ஆகவே, ரிஷித்வம் என்பது மனிதர்கள் அடையக்கூடிய உத்தம நிலையென்று ஏற்பட்டது. நம் ஜன்மத்தில் எப்பொழுதாவது நாமும் அவ்வித ரிஷியாக வேண்டுமென்பதே உண்மை இந்துக்களாகிய நம் ஒவ்வொருவருடைய அபேக்ஷையுமாம். அந்நிலைதான் முக்தி நிலை; வெறுங் கோட்பாடுகளை நம்புவதில் இல்லை; பல்லாயிரம் கோவில்களுக்குப் போவதிலும் இல்லை; பிரபஞ்சத்திலுள்ள நதிகளிலெல்லாம் முழுகுவதிலும் இல்லை; மற்று மந்த்ர த்ரஷ்டா (மந்திரங்களைக் காண்போன்)

வாகிய ரிஷியாவதுண்டே, அதுதான் முக்தி, அதுதான் பரமபதம்.

இது நிற்க; மேற்சொன்னவற்றிற்குப் பிந்திய காலத்திலே, உலக மெல்லாம் தம்மைப் பின்பற்றும்படி செய்த அற்புத சக்தியுள்ள மஹான்களும், அவதார புருஷர்களும் உண்டானார்கள். அப்பேர்ப்பட்டவர்களின் கணக்கு அநந்தமென்று ஸ்ரீ பாகவதத்திலே கூறப்பட்டிருக்கின்றது. அவர்களுள் பரதகண்டத்திலே முக்கியமாய்ப் பூஜிக்கப்படுவோர் ஸ்ரீ ராமனும், ஸ்ரீ கிருஷ்ணனுமாம். ஸ்ரீ ராமனது பெருமையை யான் எவ்வாறு வர்ணிப்பேன்? அவன், உம்பர் புகழும் உத்தம க்ஷத்திரிய குலத்திலே பிறந்த வீரசூடாமணி, உண்மைக்கு உறைவிடம், தர்மத்துக்குத் தாயகம், உத்தம புத்திரன், உத்தம பர்த்தா, உத்தமபிதா, ஸர்வோத்தம ராஜாதிராஜன், என்ற இவ்வித சிறப்புடைய ராமனை வால்மீகி மஹரிஷி நமக்கு அளித்திருக்கின்றார். ஸ்ரீ ராமனது புண்ய சரித்ரத்தை வர்ணித்த வால்மீகியின் வாக்கைக் காட்டிலும் அதிக அத்தமாயும், பவித்ரமாயும், அழகாயும், மிருதுவாயும், மதுரமாயும், ஸரளமாயும் உள்ள வாக்கு வேறொன்றுண்டோ? இடையவே கிடையாது. சீதையைப் பற்றியோ—என் சொல்வது? உலகத்தில் இதுவரையில் ஏற்பட்டுள்ள இலக்கியங்களைத் திருப்பித் திருப்பிப் பாருங்கள்! இனியுண்டாகப்போகும் இலக்கியங்களை வேண்டுமானாலும் திருப்பிப் பாருங்கள்! எங்கே பார்த்தாலும், சீதையைப்

போல் சிறந்த சுந்தரியைக் காண முடியுமோ? சீதைக்குச் சமானமே கிடையாது. அந்தத் திவ்ய குணாத்மம் ஒரே ஒரு முறைதான் வர்ணிக்கப்பட்டது. அதைப்போல் வேறொன்று "நபூதோ ந ஹவிஷ்யதி" உண்டானதுமில்லை. இனி உண்டாகப்போவது மில்லை. ஒருகால் ராமர்கள் பலர் இருக்கக்கூடும், சீதையைப் போன்றவர்களோ எக்காலும் கிடையார். பாரதகண்டத்து ஸ்திரீகள் இன்ன சீலத்துடன் விளங்கவேண்டு மென்பதற்குச் சிறந்த இலக்கியமாய் அமைந்தவள் சீதாபிராட்டியே. ஏனெனில், நம் நாட்டின் உத்தம ஸ்திரீகளுக் கமைந்த பரிபூர்ண லக்ஷணங்கள் யாவும் அந்தத் தன்னேரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மாளுகிய சீதாபிராட்டியாரின் மாசற்ற வாழ்க்கையையே சூழ்ந்து விளங்குகின்றமையா லென்க. அப்பேர்ப்பட்ட உயர்ந்த ஸ்தாநத்திலே பிராட்டியார், ஆரியாவர்த்தம் முழுவதிலு முள்ள ஒவ்வொரு ஆடவராலும் பெண்டிராலும் குழந்தைகளாலும் பூஜிக்கப்பெறும் செல்வாக்குடன் இத்தனை யாயிர வருஷகாலமாய் வீற்றிருக்கின்றாள். அந்த ஸ்தாநத்திலேயே எக்காலமும் வீற்றிருப்பாள் அவ்வுத்தமி, அம் மஹிமை பொருந்திய மைதிலி, சுத்தத்திலும் பரிசுத்தமானவள், எல்லாம் பொறுப்பவள், எல்லாம் சகிப்பவள். ஒரு குறையும் கூறாது வாழ்க்கையில் எல்லாம் துன்பத்தையே அநுபவித்த சீதை, என்றும் பதிவிரதையான சீதை, என்றும் பரிசுத்த தர்ம பத்தினியான சீதை, பிரஜைகள் போற்றும் பொன்மணி, விண்ணவர் புகழும்

விதேஹராஜன் குலமணி, இவ்வித சிறப்பு வாய்ந்த மஹா குணமணியான சீதாதேவியே என்றும் நம் தேசத்தின் அதிதேவதையாய் விளங்கவேண்டும். சீதாபிராட்டியாரைப் பற்றி நம்முள் ஒவ்வொருவருக்கும் நன்றாய்த் தெரிந்திருப்பதால், அதைப்பற்றி நான் விசேஷித்து வர்ணிக்கவேண்டியதில்லை. நம்புராணங்களெல்லாம் போய்விட்டாலும், நம் வேதங்கள்கூடப் போய்விட்டாலும், தேவ பாஷையாகிய நம் ஸம்ஸ்கிருத பாஷையும் மறைந்து போய்விட்டாலும், மிகவும் இழிந்த கொச்சைப் பேச்சைப் பேசும் ஐந்து ஹிந்துக்களாகிலும் இங்கே இருக்கும்வரையில், சீதாதேவியாரின் கதையும் ஜீவித்திருக்கும். சொன்னேன் சொன்னேன். என் பேச்சைக் கவனியுங்கள்! சீதாதேவி நம் ஜனங்களின் பிராண தாதுவிலேயே பிரவேசித்திருக்கிறாள். அந்தத் தேவி ஹிந்து ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவருடைய நரம்புகளில் ஓடும் இரத்தத்திலும் வியாபித்திருக்கிறாள். நாம் எல்லோரும் சீதாபிராட்டியாரின் குழந்தைகளல்லவா? நம் மாதர்களைத் தற்கால நவீன நாகரிகவதிகளாக்கும்பொருட்டுச் செய்யப்படும் எவ்வித முயற்சியிலாவது அவர்களைச் சீதாதேவியின் சிறந்த ஒழுக்கத்திற்கு மாறாக நடக்கும்படி செய்யும் அம்சம் இருக்குமாயின், அது உடனே பயனற்றுப்போவதை நாம் தினந்தோறும் பார்த்து வருகின்றோம். சீதாபிராட்டியார் அடி வைத்துச் சென்ற வழியையே நம் மாதர்களும் பின்பற்றி வளர்ந்து விர்த்தியடைய வேண்டும். அதுதான் அவர்களுக் கிசைந்த உத்தமமான ஒரே வழியாம்.

"இதற்கடுத்தவர் வெவ்வேறு ரூபமாய்ப் பூஜிக்கப் படும் பரம புருஷனும், அவரே ஸ்திரீகளும் புமான்களும், குழந்தைகளும் பெரியவர்களும் பிரீதியுடன் கொண்டா டும் இஷ்ட தெய்வம், நான் யாரைச் சொல்கிறேனென் றால் எவரைப் பகவத்கீதை எழுதினவர் பகவானுடைய அவதாரமென்றி சொன்னதுடன் திருப்தி யடையாமல், "மற்ற அவதாரங்க ளெல்லாம் பகவானுடைய அம்சாவ தாரங்கள் மாத்திரமேயாம்; ஆனால், ஸ்ரீ கிருஷ்ணனோ ஸாக்ஷாத் பகவானே" என்று வர்ணித்தாரோ, அவர்தான். அவரது ஸர்வதோமுகமான குண வைபவத்தைக் கண்டு நாம் வியப்படையும்பொழுது, அவரை வர்ணிக்கும் பொருட்டு அப்பேர்ப்பட்ட விசேஷணங்களை உபயோகித் திருப்பது ஆச்சரியமன்று. அவர் மஹா ஆச்சரியகர மான சந்நியாஸியாயும், மஹா அற்புதமான கிருஹஸ்த ராயும் ஒரே சமயத்தில் இருந்தவர். அதி ஆச்சரியகரமான ரஜோகுண வடிவமான அதிகார சக்தி அவரிடத்தில் இருந்ததுடன், அதியற்புதமான வைராக்கியமும் கூடி கொண்டிருந்தது. கீதையின் சார தத்துவத்தை யுணர்ந்தா லன்றி ஸ்ரீ கிருஷ்ணனை உள்ளபடியே அறிந்துகொள்ள ஒருகாலும் முடியாது; ஏனெனில், அவர் செய்த உபதேச த்துக்கு அவரே சிறந்த இலக்கியமாய் விளங்கினவர்.

இவ் வவதார புருஷர்கள் ஒவ்வொருவரும் தாம் உப தேசிக்கவந்த தத்துவங்களை அநுஷ்டான வகையில் தாமே எடுத்துக் காட்டிய நிதர்சனமென விளங்கினர். கீதாசாரிய

ஞகிய கண்ணன் அவரது ஆயுள் முழுவதும் அம் மோக்ஷ சாஸ்திரத்தின் வியாக்கியானமாய் விளங்கினர். அப் பரம புருஷனை பற்றற்ற தன்மையின் பரந்த *இலக்கியமாய்ப் பிரகாசித்தார். அவர் அநேகருக்குச் சிங்காதனை மளித்தார். தாமோ ஒரு சிங்காதனத்தையேனும் கைப்பற்றினரில்லை. பாதகண்டத்துக் கெல்லாம் தலைவராகிய அவர் ஒரு சொல் சொன்னவளவில், எல்லா முடிமன்னரும் தம் சிங்காதனத்தை விட்டுக் கீழே இறங்கி அடிபணியும்படியான அந்தஸ்தி லிருந்தும், அவர் மாத்திரம் ஒருகாலும் அரசனுயிருக்க இஷ்டங் கொள்ளுவதில்லை. அவர் சாதாரணமான கிருஷ்ணனுகவே,—கோபிகைகளுடன் லீலை புரிந்த கோபாலகிருஷ்ணனுகவே, எப்பொழுதும் இருக்கிறார். ஆஹா! அவரது திவ்ய சரித்திரத்தின் அத்புதமான அம்சம் அவர் கோபிகைகளுடன் கூடிப் புரிந்த அத்புத லீலை யல்லவோ? அரிதற் கரிதாகிய அத் திவ்ய லீலையானது மந மொழி மெய்களில் பரிபூர்ணமான தூய்மையையும் களங்க மின்மையையும் அடைந்தவர்களே யன்றி, மற்றெவரும் உணர்தற்குக் கூட முயலவொண்ணுத பெருமையினை யுடையதன்றே? பிருந்தாவநத்தின்கண் நிகழ்ந்த அழகிய நாடகமென உவமித்து வர்ணிக்கப்பெற்ற அந்தத் திவ்யமான * ப்ரேமபாராவாரத்தின் ஆழத்தை, பிரேமாமிருத பானத்தால் வெறிகொண்டவர்களன்றி மற்றவர்கள் அறியவும் கூடுமோ?

* ப்ரேம பாராவாரம்—அன்பாகிய கடல்.

கோபிகைகளின் காதல் நோயின் மர்மங்கள் யாருக்குத்தான் தெரியும்? அன்பின் பரிபூர்த்தியை அதில் தானே காணலாம். அதுவே வேறெதனையும் வேண்டாத நிறைவான அன்பு, ஸ்வர்க்கத்தையும் லக்ஷ்யம் செய்யாத அன்பு, இவ்வுலகத்திலேனும் மறு வுலகத்திலேனும் எதையும் பொருட்டெனக் கருதாத அன்பும் அதுவே, என் நண்பர்காள்! இங்குதான்,—கோபிகைகளின் இந்தக் காதலின் வாயிலாகத்தான்—ஸகுண நிர்க்குண ப்ரஹ்ம பாவனைகளுக்குள்ள விவாதத்துக்கு ஸமாதானம் ஏற்பட்டது. மனித வாழ்க்கையில் சாத்தியமான உயர்ந்த பாவனை ஸகுண பிரஹ்மந்தான் என்று நாம் அறிவோம்; உலகத்திலே அந்தர்யாமியாயிருந்து தானே அனைத்துமாய்த் தோன்றும் நிர்க்குணப் ப்ரஹ்மத்தை நம்புவதுதான் தத்துவசாஸ்திர சம்மத மென்பதும் நமக்குத் தெரியும். அப்படியிருந்தும் நம் இந்திரியங்களுக்கு விஷயமாகும் பிரத்தியக்ஷமான வஸ்துவையே நம் மனம் அபேக்ஷிக்கின்றது. அதன் திருவடிகளிலே நம் ஹிருதயத்தை அர்ப்பித்து தைல தாரையைப்போல் இடையறுமல் நம் அன்பைச் செலுத்த அபேக்ஷிக்கின்றோம். ஆகவே, ஸகுண ப்ரஹ்மம் மானுட வியல்பால் கருதக்கூடிய உயர்ந்த பாவனையாய் முடிகின்றது ஆனால், யுக்தியோ இந்த பாவனையைக் கேட்டமாத்திரத்திலேயே ஸ்தப்தமாய் நின்றுபோய் விடுகின்றது. ப்ரஹ்ம சூத்திரங்களிலே நிகழ்ந்த அந்த பழைய விஷயவாதந்தான் இப்பொழுதும் உண்டாகின்றது. இதுதான் திரௌபதியானவள் வனத்

திலே யுதிஷ்டிரரைக் கேட்ட கேள்வியும்,—"ஸர்வ தயாபரனுய், ஸர்வசக்திமானுய் உள்ள ஸகுணரூபியான பகவான் ஒருவர் இருக்கும் பக்ஷத்தில், நரகத்தைப் போன்ற இம் மண்ணுலகம் இருப்பானேன்? அவர் ஏன் இதைப் படைத்தார்? அவர் பக்ஷபாதமுள்ளவரா யிருக்க வேண்டும்." இதற்கு ஒன்றும் சமாதானம் ஏற்படவில்லை. கோபிகைகளின் அன்புதான் இதற்குத்தக்க சமாதானமென்று சொல்லலாம். எப்படியெனில், கண்ணனை விசேஷித்து வர்ணிக்கும்பொருட்டுச் சொல்லிய விசேஷணம் ஒவ்வொன்றையும் அவர்கள் பகைத்தார்கள். அவன் உலகத்தைப் படைத்த ஒருதனி முதல்வனென்றும், எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளென்றும், சர்வேசுவரனென்றும் அறிவது அவசியமென அவர்கள் நினைக்கவில்லை. அவர்கள் அறிந்த ஒரே அம்சம் என்னவெனில், அவன் அளவு கடந்த அன்பாயிருக்கின்றான், என்பதே. அதுவே அவர்களுக்கு சர்வமும், கோபிகைகளுக்குக் கிருஷ்ணனை பிருந்தாவனத்தில் விளையாடும் பாலகிருஷ்ணனென்றுதான் தெரியும். தேவாதிதேவனும் ராஜாதிராஜனுமான அப்பரம புருஷன் அவர்களுக்கு எப்பொழுதும் இடையனுகிய கோபாலகிருஷ்ணனுகவே விளங்கினுன். * "செல்வம் வேண்டேன், பந்துஜனங்கள் பலரும்வேண்டேன், கல்வி

* யநம் ந ஜநம் ந ஸுந்தரீம்
கவிதாம் வா ஜகதீஶ காமயே;
மம ஜந்மநி ஜந்மநீஶ்வரே
பவதாத் பக்திரஹைதுகீ த்வயி.

யும் வேண்டேன், ஸ்வர்க்குத்துக்குப் போவதுகூட எனக்கு வேண்டாம். ஆனால், எனக்கு எத்தனைப் பிறவிகள் வந்தெய்தினும், நின் திருவடிகளிலே பலாபேட்சையின்றி அன்புக்காகவே அன்புசெலுத்தவேண்டுமென்னும் இவ்வொரு வரம் மாத்திரம் எனக்குத் தந்தருளும் சுவாமீ'' என்ற பிரார்த்தனையின் தாற்பர்யமே அக்கோபிகைகளின் பக்தியவ்வளவும். மற்ற மதங்களைப் பார்க்கிலும் நம்மதத்துக்குள் சிறப்பெல்லாம் இந்தப் பக்தியில்தான் இருக்கின்றது. வேறு பயன்களை எதிர்பாராமல் அன்பின்பொருட்டே அன்பு செலுத்த வேண்டுமென்பதும், கர்மத்தின் பொருட்டே கர்மத்தைச் செய்யவேண்டு மென்பதும், தர்மத்தின் பொருட்டே தர்மத்தைச் செய்யவேண்டுமென்பதும்தான் அந்தப் பக்தியின் லக்ஷணம். அப்படிப்பட்ட உத்தமமான உபதேசத்தை இவ்வுலகத்திலே முதல்முதல் புண்யபூமியாகிய பரதகண்டத்தில் திருவாய்மலர்ந்தருளியவர், அவதாரங்களுக்குள் உத்தமாவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே, கடவுள் தண்டிப்பாரென்ற பயம் காரணமாக உற்பத்தியான மதங்களின் காலமெல்லாம் போய்விட்டது. நரகபயம், ஸ்வர்க்க சுகம் அநுபவிக்கவேண்டுமென்னும் அபேக்ஷை, எனும் இவற்றிற்குப் பதிலாகப் பலாபேட்சையின்றி, அன்பின் பொருட்டே அன்பு, தர்மத்தினபொருட்டே தர்மம், கர்மத்தின் பொருட்டே கர்மம் என்னும் உத்தம ஸித்தாந்தங்கள் ஏற்பட்டன. ஆஹா என்ன அன்பு! என்ன காதல்! கோபிகைகளின் அன்பை அறிந்துகொள்வது வெகு கடினம் என்று சற்றுமுன்

தானே சொல்லியிருக்கிறேன். அந்த மஹா அத்புதமான லீலையின் அத்புதமான தாற்பரியத்தை யறிந்துகொள்ள முடியாத மூடர்கள் நமக்குள்ளும் இல்லாமலில்லை. நம்முடைய ரத்தக்கலப்பு முண்டான சில அசுத்தரான மூடர்கள் அந்த லீலையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஏதோ அசுத்தமான விஷயத்தைக் கண்டு தூர விலகுபவர்களைப் போல் விலகப் பார்க்கிறார்களென்று மீண்டும் சொல்லுகின்றேன். அவர்களை நோக்கி நான் சொல்லவேண்டியதென்னவெனில்,—முதலில் உங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்ளுங்கள்! கோபிகைகளின் காதல் சரித்திரத்தைக் கூறுகிறவர் ஸாக்ஷாத் சுகப்பிரஹ்மரிஷியே யன்றி வேறொருவரும் அல்லர் என்பதையும் ஞாபகத்தில் வையுங்கள்—என்பதேயாம். கோபிகைளின் இந்த அற்புதமான அன்பை வர்ணித்த சரித்திரகாரர் சுத்தராய்ப் பிறந்தவரும் வியாஸமுனிவரின் புதல்வருமான நித்திய சுத்தரான ஸ்ரீ சுகதேவரல்லவா? ஹிருதயத்தில் தன்நலம் பாராட்டும் தன்மை இருக்கும்வரையில் பகவானிடத்தில் ப்ரேமை உண்டாவது அசாத்தியம். அது வர்க்கத்தைத் தவிர்த்து வேறொன்றுமன்று. சுவாமி! நான் உமக்கு ஒன்று கொடுக்கிறேன், நீர் ஒன்று எனக்குத் தாரும், என்று நாம் சொல்ல, கடவுள், இதை நீ செய்யாவிட்டால் நீ சாகும்பொழுது உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன், இனி எக்காலமும் உன்னை நரகத்தீயில் வறுத்து வாட்டிவிடுகிறேன் வா, என்று இப்படியெல்லாம் பயமுறுத்துகிறார். கடவுளைப்பற்றி இப்படிப்பட்ட கருத்

துக்கனைக் கொண்டவனுக்குக் கோபிகைகளின் உன்மத்த மான காதல் நோயின் மர்மங்கள் எவ்வாறு விளங்கும்? * "ஆஹா, அவ் இனிய அதரங்களின் ஒரே ஒரு முத்தம் கிடைக்கும் பாக்கியம் கிட்டுமோ! நீ யாரை முத்த மிடு கிறையோ அவர்களுக்கு உன்னிடத்தில் அவா இன் னும் அதிகரிக்கின்றதே. துயரங்களெல்லாம் தொலைந்து போகின்றனவே. உன்னைத் தவிர்த்து மற்றெவ் வஸ்துவி னிடத்திலும் அன்பு என்பதையே மறந்துபோய் விடுகின் றோமே" என்பதல்லவோ மெய்யன்பினது பிரார்த்தனை. ஆகவே, பொன்னிலும் பெயரிலும் புகழிலும் வைத்துள்ள ஆசையையும், நீரின் குமிழிபோல் க்ஷணபங்குரமாயுள்ள இச்சிறு உலகத்தின் ஆசையையும் முதலில் ஒழித்துவிடு. அப்பொழுதுதான் கோபிகைகளின் பிரேமை உனக்கு விளங்கும். அவ் வன்பானது, நீ எல்லாவற்றிலும் வைத் துள்ள பற்றை யொழித்தாலன்றி, அறியவொண்ணாத அவ்வளவு பரிசுத்தமானது, நீ பரிபூர்ண பரிசுத்தனானா லன்றி உணர முடியாத அவ்வளவு தூய்மையானது. சிற் றின்பத்திலும், செல்வத்திலும் புகழிலுமே ஸதா புத்தி யைச் செலுத்தும் புல்லர்களோ கோபிகைகளின் அன்பை

---

* ஸுரதவர்த்நம் சோகநாசநம்
ஸ்வரிதவேணுநா ஸுஷ்டு சும்பிதம்
இதர ராக விஸ்மாரணம் நரூணாம்
விதர வீர நஸ்தே(அ)தராம்ருதம்.
கோபிகாகீதை, ஸ்ரீபாகவதம்.

யுணர்ந்து ஆற்றங் கூற ஸாஹஸிப்பவர்! விந்தை!! விந்தை!!! கிருஷ்ணாவதாரத்தின் சாரமெல்லாம் அந்தக் கோபிகைகளுடன் கலந்து புரிந்த திவ்ய லீலைகளிலல்லவோ திரண்டிருக்கின்றது. உத்தம மோக்ஷ சாஸ்திரமாகிய ஸாக்ஷாத் கீதைகூட அக் கோபிகைகளின் காதல் வெறிக்கு நிகரன்று; ஏனெனில், கீதையிலே பாகதியடையும் உபாயமானது கிரமக்கிரமமாய் சிஷ்யனுக்கு உபதேசிக்கப்படுகிறது. ஆனால், கோபிகைகளின் விஷயத்திலோ ஆநந்த வெறியும், அன்பா லுண்டான உந்மாதமுமே மேல்நோக்கி நிற்க, அந் நிலையில் குரு, சிஷ்யன், உபதேசம், பகவாந், பரமபதம் முதலியவெல்லாம் ஏகமயமாய்விடுகின்றன. சமஸ்தமும் தள்ளுண்டு போகின்றன. மிகுந்து நிற்பது, அன்பெனும் பைத்தியமே. எல்லாவற்றையும் மறந்து, கிருஷ்ணனைத் தவிர வேறெதனையும் பாராமலும், ஒவ்வொரு பிராணியும் கிருஷ்ண ஸ்வரூபமாயும், தன் முகமே கிருஷ்ணனது திருமுக மண்டலத்தை நிகர்த்தும், தானும் ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண மயமாயும் விளங்கும் நிலையே அவ் அன்பெனும் பைத்திய நிலையாம். அதுவே கிருஷ்ணனது உண்மை ஸ்வரூபம். உங்களுக்குள்ள காலத்தைப் பயனற்ற சில்லறை விவாதங்களிலே வீணாக்கவேண்டாம். புருஷார்த்த சாரமான மூல தத்துவத்தைக் கைப்பற்றுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் சரிதத்திலே சரித்திர நீதியாய் உண்மையென ஸ்தாபிக்க முடியாத அம்சங்களும் பின்னால் சேர்க்கப்பட்ட அம்சங்களும் பல இருக்கக் கூடும். இப்படிப்பட்ட

தவறுகளெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். ஆன போதிலும், இவ்வளவு அதி யத்புதமான மஹிமைகளுக்கு ஓர் ஆதாரம் இருந்திருக்கவேண்டும். உலகத்தில் வேறெந்த மஹா புருஷனது சரித்திரத்தை யுற்று நோக்கினும், அம் மஹான் அவருக்கு முன் இருந்த கொள்கைகளைத் திரட்டி யுபதேசிக்கின்றவ ராகவேனும், அவர் காலத்திலேயே நாடெங்கும் பரவியிருக்கும் கொள்கைகளைப் பிரசங்கிக்கின்றவராகவேனும்தான் இருந்ததாக அறிகின்றோம். அப்படிப்பட்ட மஹா புருஷன் இருந்தாரா இல்லையா என்ற விஷயமாகக்கூடப் பெருத்த சந்தேகங்கள் நிகழலாம். ஆனால், நம் மதத்திலோ, பலாபேட்சையின்றிக் கருமத்திற்காகவே கர்மமும், அன்பிற்காகவே அன்பும், கடமைக்காகவே கடமையும் செய்வதெனும் உத்தம ஸித்தாந்தங்களை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சுவயமாய்ச் சொல்லவில்லை யென்று யாராவது முன்வந்து நிரூபிக்கட்டும் பார்ப்போம். ஆகவே, இவ்விசேஷ ஸித்தாந்தங்களை முதலில் ஒருவர் சுவயமாய்ச் சொல்லி யிருக்கவேண்டும். வேறு யாரிடத்திலிருந்தாவது அவற்றைக் கிரஹித்துச் சொல்லியிருக்கலா மென்பதும் பொருந்தாது. ஸ்ரீ கிருஷ்ணன் பிறக்கும்பொழுது அவ் வபிப்பிராயங்கள் காற்றில் பறந்துகொண் டிருக்கவில்லை! ஆகவே, ஸ்ரீ கிருஷ்ணன் தான் இதை முதன் முதல் பிரவசனம் செய்தது. அவரது ஸிஷ்யராகிய வியாசபகவான் அதை எடுத்து உலகத்தாருக்குப் பிரசங்கித்தார். இதுதான் நாம் கருதக்கூடிய உத்தமமான பாவனை. அவனைப் பற்றி நாம் அடையக்கூடிய

சிறந்த அறிவு அவன் கோபீஜந வல்லபன், பிருந்தா வனத்திலே திருவிளையாடல் புரிந்த கோபாலபாலகன் என்னும் அறிவேயாம். உங்களுக்கு எப்பொழுது அப்படிப்பட்ட பைத்தியம் பிடிக்குமோ, எப்பொழுது நீங்கள் கோபிகைகளின் உண்மை ஸ்வரூபத்தை யறிவீர்களோ, அப்பொழுதுதான் அன்பு இன்னதென் றுணர்வீர்கள். எப்பொழுது உங்களுக்கு உலக முழுதும் இல்லாது போகின்றனவோ, வேறு சிந்தனைகள் யாவும் அழிந்து போகின்றனவோ, வேறு யாதொரு பலனையும் அபேக்ஷிக்காமல், உண்மையைத் தேடவேண்டு மென்று கூடக் கருதாமல் பரிசுத்த மனத்தராய் எப்பொழுது ஆவீர்களோ, அப்பொழுதுதான் அவ்வன்பின் பைத்தியமும், கோபிகைகளுக்கிருந்த—அன்பிற்காகவே அன்பெனும்—எல்லையற்ற அன்பின் வலிமையும் சக்தியும் உங்கள் முன் பாய்ந்து வரும். அதுதான் உத்தம கதி. அது உங்களுக்குக் கிட்டிவிட்டால், எல்லாம் கிட்டிவிட்ட தென்னலாம்.

"அன்புடையார் எல்லா முடையார்"

ஆயர்பாடியிலே அவதரித்து அதி மாநுஷ சேஷ்டிதங்களைச் செய்தருளிய கோபாலகிருஷ்ண மூர்த்தியைப்பற்றி இதுவரையில் ஆராய்ந்தோம். இனி அவரே கீதாசாரியனாய் விளங்கிய வைபவத்தை விசாரிப்போம். இவ் விஷயமாய்க், குதிரையைப் பின்னும் வண்டியை முன்னும் நிறுத்துவது போன்ற அசந்தர்ப்பமான பிரயத்தனம் இந்தியாவிலே தற்காலம் தோன்றியிருக்கிறது. கிருஷ்ண

ளைக் கோபிகாரமணன் எனக் கருதுதல் பெருந்தவறென்று நம்மவருள் பலர் நினைக்கிறார்கள். ஐரோப்பியர்களுக்கும் அத்தகைய கிருஷ்ணன் பிடிக்கிறதில்லையாம். பலான பலான துரைக்கு அது பிடிக்கவில்லை யென்றால், அப்புறம் கோபிகைகளின் பாடு திண்டாட்டந்தானே! ஐரோப்பியர்களின் சம்மத மின்றிக் கண்ணன் எவ்வாறு இருக்க முடியும்? முடியவே முடியாது! மகா பாரதத்திலே இரண்டோர் இடங்களில் தவிர கோபிகைகளைப்பற்றிப் பிரஸ்தாபமே கிடையாது. அப்படிப்பட்ட சில இடங்களும் மிகவும் பிரதானமானவை யல்ல. திரௌபதியின் சரணாகதி ஸ்துதியில் கிருஷ்ணன் பிருந்தாவனத்தில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிசுபாலன் செய்த தூஷணையிலும் பிருந்தாவன பிரஸ்தாபம் இருக்கின்றது. இவை யெல்லாம் பின்னால் கள்ளத்தனமாய்ச் சேர்க்கப் பட்டவையாம். ஐரோப்பியர்களுக்கு வேண்டாத தெல்லாம் தள்ளிவிட வேண்டியதுதானே! கோபிகைகளையும் கண்ணனையும் பற்றி என்னென்ன சொல்லப்பட் டிருக்கிறதோ அவை யெல்லாம் ப்ரக்ஷிப்தங்களேயாம். அதாவது இடையே நுழைத்தவையாம்! ஆஹா! இப்படிப்பட்ட முழுமதிகளின் நெஞ்சில் கொழுத்த வர்த்தகரீதியன்றோ குடிகொண் டிருக்கின்றது? அவர்களுக்குச் சமய நெறியும் ஒருவித வர்த்தகமே. அவர்கள் இம்மையிலே சில கருமங்களைச் செய்வதாற் பரகதி யடையப் பார்க்கின்றனர்; செட்டிப்பிள்ளை தொடர் வட்டி வேண்டுமென்கிறான். இங்கே கொஞ்சம் முதல் வைத்து அதன் புயனை மறுமை

யில் அநுபவிக்கவேண்டு மென்கிறான். இப்படிப்பட்ட வியாபாரத்திலே கோபிகைகளுக்கு இருக்க இடமில்லை யென்பது நிச்சயந்தான். இனி, கீதாசாரியனான கண்ணனைப் பற்றி யாராய்வோம். வேதார்த்தத்தை விளக்குவதில் கீதையைவிட மேலான வியாக்கியானம் உண்டானது மில்லை, உண்டாகப்போவது மில்லை, சுருதிகளின் அர்த்தத்தைப் பற்பல பாஷியகாரர்கள் தம் தம் இஷ்டப்படி வியாக்கியானம் செய்கிறபடியால், அவற்றின் தாத்பரியம் இன்னதென் றறிந்துகொள்வது வெகு கடினம். ஆகவே, முன் சுருதிகளைத் தந்தருளிய அந்தப் பகவானே அவற்றின் பொருளை விளக்கும் பொருட்டுக் கீதாசாரியனாய் வந்தார். இப்பொழுது இந்தியாவுக்கும் உலகம் முழுவதுக்கும் நற்கதி யடைய அந்தக் கீதையைவிட வேறு சிறந்த வியாக்யானம் வேண்டியதேயில்லை இப்பால் சுருதிகளுக்கும் கீதைக்கும் வியாக்யானம் செய்பவந்தவர்கள் அவற்றின் முடிவான கருத்தைப் பல இடங்களில் கிரஹிக்க முடியாமற்போனமை ஆச்சரியமா யிருக்கின்றது. எப்படியென்றால்:—கீதையில் இருப்பதென்ன? தற்கால வியாக்கியானகாரர்கள் கூறுவதென்ன? என்று யோசிக்குங்கால், வியாக்கியானகாரர் அத்வைதியாக இருந்தால், அவர் ஓர் உபநிஷத்தை யாதாரமாக எடுத்துக்கொள்ளுகிறார். அதில் துவைத சுருதிகள் அநேகம் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் அவர் வலித்து இம்சித்துக் கடைசியில் தன் அத்வைத பக்ஷத்துக் கநுகூலமாய் அவற்றினின்றும் அர்த்தத்தைக் கக்கவைக்கிறார். துவைத வியாக்

யானகாரர் வந்தால், அவர் அத்வைத சுருதிகளை யெல்லாம் இம்சித்துத் துவைதார்த்தத்தை ஸ்தாபிக்கப் பார்க்கிறார். ஆனால், கீதையிலோ சுருதிகளை ஹிம்ஸிக்கும்படியான எவ்வித பிரயத்தினமும் இல்லாமலிருத்தலைப் பாக்கக் காணலாம். அவ் வழிகளெல்லாம் சரியானவையே. ஆத்மா, மெல்ல மெல்லக் கொஞ்சம் கொஞ்சமாய்ப், படிப் படியாய், மேலுயர்ந்து ஸ்தூலத்தினின்று ஸூக்ஷ்மத்துக்கும், ஸூக்ஷ்மத்தினின்று ஸூக்ஷ்மதரத்துக்கும் வந்து, கடைசியில் உத்தம பதவியை யடையவேண்டும் என்று பகவான் அருளிச்செய்கிறார். அதுதான் கீதையின் உபதேசம். அதில் கர்மகாண்டத்தையும் ஏற்றுக்கொண்டு, அது நேராய் மோக்ஷம் அளிக்க முடியாதென்றும், ஆனால் சித்தசுத்தியுடன் செய்யுங்கால் கர்மமும், விக்கிரஹாராதனையும் சோபானக்கிரமமாய் மோக்ஷ மளிக்க வல்லனவாகையால், அவை யாவும் அநுஷ்டிக்கத்தக்கவை யென்றும் காட்டப்பட் டிருக்கின்றன. உபாஸனை செய்யத்தக்கதே. ஹிருதயம் சுத்தமாயும் உள்ளன்பு நிறைந்தும் இருக்குமேல், அவ் வுபாசனை உத்தம கதி யளிக்கும். ஆகவே, இப் பலவகை ஆராதனைகளும் அவசியமானவையேயாம்; இல்லாவிடில் அவை யேற்படுவானேன்? மதங்களும் சம்பிரதாயங்களும், இக் காலத்தில் நம்மவருள் சிலர் நினைப்பதுபோல், வஞ்சகர்களும் துஷ்டர்களும் பொருள் சம்பாதிக்கும்பொருட்டுக் கண்டுபிடித்தவையல்ல. அவர்கள் சொல்லும் சமாதானம் எவ்வளவு நியாயமாய்த் தோன்றினும், அஃது உண்மையன்று.

அவை அவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டவையல்ல. அவை பல வகைப்பட்ட சித்த பரிபாக முள்ளவர்களின் ஆவசியகத்திற் கேற்ப அமைந்த வழிகளாம். பல வித மான பின்னருசி யுள்ளவர்களின் அவாவையும் ஆவலையும் தீர்க்கும்பொருட்டே அவை யேற்பட்டிருக்கின்றன. ஆகையால், நீங்கள் அவற்றிற்கு விரோதமாய்ப் பிரசங் கிக்க வேண்டியதில்லை. என்றைக்கு அப்படிப்பட்ட அவசி யத்தன்மை இல்லாமற்போகின்றதோ, அன்றைக்கு அத் துடன் அம் மத பேதங்களும் சம்பிரதாய பேதங்களும் ஒழிந்து போம். ஆனல், அப்படிப்பட்ட அவசியத்தன்மை இருக்கிற வரையிலும், அம் மத பேதங்களும் சம்பிரதாய பேதங்களும், நீங்கள் எவ்வளவு பிரசங்கித்தாலும், கண் டித்தாலும், இருந்தே தீரும். உங்கள் சொற்படி கேளாத வர்களைக் கத்தியால் வெட்டிவிட்டாலும், துப்பாக்கியாற் சுட்டுவிட்டாலும், உலகத்தையே இரத்தப் பிரவாஹ மாகச் செய்து விட்டாலும், விக்கிரஹாராதனைக்கு ஓர் ஆவ சியகம் இருக்கிறவரையில் அவ் விக்கிரஹங்கள் இருந்தே தீரவேண்டும். இந்தக் கர்மாநுஷ்டானங்களும் சோபானக் கிரமமான பலவகை மாதாசாரங்களும் இருக்கவே இருக் கும். அவை யேன் இருக்கவேண்டு மென்பதை ஸ்ரீ கிருஷ்ணபகவான் விளக்கி யிருக்கிறார்.

இனி, இந்தியாதேச சரித்திரத்தின் துக்ககரமான அத்தியாயம் ஒன்று வருகின்றது. உள்மதச் சண்டைக ளின் தூரத்திலிருந்து வரும் இரைச்சலானது கீதையிலே

ஏற்கனவே நம் காதில் விழுகின்றது. அதையெல்லாம் ஸமந்வயப்படுத்தி ஸமரஸ ஸித்தாந்தத்தை நிலை நிறுத்தவே மஹா ஸமந்வயாசாரியாராகிய ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபகவான் வருகின்றார். அவர் சொல்லுவதாவது:—

"மயி ஸர்வம் இதம் ப்ரோதம்
ஸூத்ரே மணிகணா இவ."

"நூலிலே மணிகள்போல் என்னிடத்திலே இவையெல்லாம் கோக்கப்பட்டிருக்கின்றன." நம் தேசத்தில் பிரதான ஜாதிகளான பிராஹ்மணர்களுக்கும் ராஜாக்களுக்கும் நிகழ்ந்த சண்டையின் மெல்லிய சப்தம் ஏற்கனவே நம் காதில் விழுகின்றது. அக் காலத்துக்குமுன் ஜனங்களுக்குள் சமரஸமும் சமாதானமும் இருந்திருக்க வேண்டுமென்று தெரியவருகிறது. அவ்வித சமாதானத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்காக இவ் விந்தியாவிலே சற்றேறக்குறைய ஆயிர வருஷகாலம் பிரவஹித்த தர்மமாகிய மஹா சமுத்திரத்தில் எழுந்த பேரலையின் உச்சியிலே மஹா மஹிமை பொருந்திய தேஜோ மூர்த்தியொருவர் விளங்குகின்றார். அவர்தாம் நம் கௌதம சாக்கிய முனி. அவரது உபதேசங்களைப்பற்றி உங்கள் யாவருக்கும் தெரியும். அவரைப் பகவானுடைய அவதாரமெனக் கருதிப் பூஜிக்கின்றோம். நீதி மார்க்கத்தை அவரைப் போல் அவ்வளவு தைரியமாய் இவ் வுலகத்தில் வேறெந்த மஹா புருஷனும் பிரசங்கிக்கவில்லை. தாமே தம் சிஷ்யனைய் அவதரித்ததுபோல், முன் அவதரித்த கிருஷ்ண பக

வானே தாம் உபதேசித்த பரமார்த்தங்களை அநுஷ்டிக்கும் வழியைக் காட்டக் கௌதம புத்தனைத் தோன்றினர்.

"ஸ்வல்ப மப்யஸ்ய யர்மஸ்ய
த்ராயதே மஹதோ பயாத்.
ஸ்த்ரியோ வைஸ்யாஸ் தயா ஸூத்ராஸ்
தேபி யாந்தி பராம் கதிம்."

"இந்தத் தர்மத்தைச் சிறிது அநுஷ்டித்தாலும், பெருத்த பயத்தினின்றும் காப்பாற்றுகின்றது. ஸ்திரீகளாயினும், வைசியர்களாயினும், சூத்திராாயினும் உத்தமமான கதியை யடைகின்றனர்." என்று கீதையிலே முழங்கிய மஹா சப்தமே மீண்டும் வந்தது. எல்லாருடைய பந்தத்தையும் விலங்கையும் தகர்த்து, உத்தம கதியை யடைய அனைவருக்கும் அதிகார முண்டென்று ஸித்தாந்தப்படுத்தும் பொருட்டுக் கீதையைத் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீ கிருஷ்ணன் மேக கர்ஜனையை நிகர்த்த கம்பீரமான கண்டத்துடன் சொல்லிய தென்னவெனில்:—

"இஹைவ தைர் ஜிதஸ் ஸர்கோ
யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மநஃ
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம
தஸ்மாத் ப்ரஹ்மணி தே ஸ்திதாஃ.
ஸமம் பஸ்யந் ஹி ஸர்வத்ர
ஸமவஸ்திதம் ஈஸ்வரம்.
ந ஹிநஸ்த் யாத்மநாத்மாநம்
ப்ராப்நோதி பராம் கதிம்."

"சமத்துவத்தில் மனது வைத்தவர்கள் இந்த ஜன்மத்திலேயே ஸ்வர்க்கத்தை ஜயித்துவிட்டார்கள். ப்ரஹ்மமானது தோஷ மற்றதாயும் சமமாயும் இருப்பதால், அவர்கள் ப்ரஹ்மத்திலேயே இருப்பவ ராகின்றனர்."

"தேகங்க ளெல்லாவற்றிலு மிருக்கிற ஆத்மாவை ஏகரூபமாகப் பார்ப்பவன் தன் மனத்தினால் தன் ஆத்மாவை ஹிம்ஸிக்கமாட்டான். ஆகையால், பரகதி யடைவான்."

இவ் வுபதேசத்தை அநுஷ்டான முகத்தால் நிதர்சனப்படுத்தவும், அதன் ஓர் அம்சத்தையேனும் அநுஷ்டான ஸாத்தியமாக்கவும் தான் வந்தவர்போல் அக்கிதாசாரியனே வேறொரு ரூபத்துடன் தோன்றினார். அவர்தாம் கௌதம சாக்கியமுனி. அவர் எளியோர்களுக்கும் திக்கற்றவர்களுக்கும் தர்மோபதேசம் செய்தவர்; தாம் சொல்வது ஜனங்களுக்கு விளங்கவேண்டுமென்ற விருப்பத்தினால் தேவ பாஷையையும் தள்ளிவிட்டு, ஜனங்களின் தேச பாஷையில் பேசினவர். பிச்சைக்காரருடனும் வறியோருடனும், தாழ்ந்தோருடனும் கலந்து வாழவேண்டி சிங்காசனத்தைத் துறந்தவர்; இரண்டாவது * இராமனே எனும்படி சண்டாளனையும் அன்பால் மார்புறத் தழுவியவர். அவர் செய்த பெருங் காரியமும் அவரது சிறந்த ஒழுக்கமும் உங்கள் யாவருக்கும் தெரிந்தவையே.

* சக்ரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீ ராமசந்திரன், நீச ஜாதியானாகிய குஹனை அன்பால் தழுவிக்கொண்டார்.

ஆனால், அக் காரியத்தில் ஒரு பெருங் குறைவு இருந்தது. அதற்காக நாம் இன்றுவரையிலும் அவஸ்தைப்படுகிறோம். பகவான்மீது யாதொரு தோஷமுமில்லை. அவர் பரிசுத்தர், மஹிமை பொருந்தியவர். ஆனால், அவர் பிரமசனம் செய்த உயர்ந்த உண்மைகளை அநுசரிக்கும்பொருட்டு ஆரியர் கூட்டத்திலே வந்தடைந்த கல்வி நலமற்ற பல வகை அநாகரிக ஜாதியார்களும் அவற்றை நன்றாய் நிர்வஹித்து நடக்க முடியாமற்போன துரதிஷ்டமே அந்தக் குறைவுக்குக் காரணம். நாநாவிதமான மூட பக்திகளையும் பயங்கரமான பூஜைகளையும் கைக்கொண்ட இஜ் ஜாதியார்கள் ஆரியர் கூட்டத்திலே வந்து விழுந்து சிலகாலம் வரையில் நாகரிக மடைந்தவரெனத் தோன்றினபோதிலும், ஒரு நூற்றாண்டு கழியுமுன், தங்கள் பாம்புகளையும் பூதங்களையும் தம் முன்னோர் வழக்கமாய் வணங்கிவந்த மற்றவை யனைத்தையும் கொண்டுவந்து விடவே, பாரத கண்ட முழுவதும் அதி நீசமான மூடபக்திப் பிண்டமாய்ப் போய்விட்டது. ஆதியிலிருந்த பௌத்தர்கள் பிராணி ஹிம்சை கூடாதென்று பிரஸங்கித்த கோபத்தில், வேதங்களிலே விதிக்கப்பட்ட யஜ்ஞங்களையும் நிந்தித்தார்கள். இந்த யஜ்ஞங்களோ அக் காலத்தில் ஒவ்வொரு கிருஹத்திலும் நடக்கும். ஒவ்வொரு வீட்டிலும் அக்கி நித்தியமாய் எரிந்துகொண்டிருக்கும், அதுதான் சகல பூஜாத்திரவியமும். பௌத்தர்களது பிரஸங்கத்தால் இவ் யஜ்ஞங்கள் நின்றுவிடலும், அவற்றின் ஸ்தானத்தில் பிரமாண்டமான கோயில்களும் ஆடம்பரமான சடங்காசாரங்களும், புரோ

ஹித பரம்பரையும், மற்றைப்படி இக் காலத்தில் இந்தியாவில் என்னென்ன காணப்படுகின்றனவோ அவை யாவும் உண்டாய்விட்டன. 'பிராஹ்மணர்களின் விக்கிர ஹாராதனத்தைப் புத்தமுனி யழித்துவிட்டார்' என்று இக்காலத்தியவர் சிலரால் எழுதப்படும் புஸ்தகங்களைப் படிக்கும்பொழுது எனக்கு நகைப்பு உண்டாகின்றது. இவர்கள் நன்றாய் ஆராய்ந் திருப்பார்களேல் இவ்வாறு கூறார். இந்தியாவிலுள்ள தற்காலத்திய பிராஹ்மண மதத்தையும் விக்கிர ஹ ஆராதனையையும் உண்டாக்கியது பௌத்தமதமே என்பது அவர்களுக்குச் சிறிதேனும் தெரியாது. இரண்டொரு வருஷங்களுக்கு முன் ஒரு ருஷிய கனவான் எழுதி வெளியிட்ட புஸ்தகத்திலே யேசுகிறிஸ்துவைப் பற்றிய அதிசயமான சரித்திர மொன்று தான் கண்டு பிடித்ததாய்ச் சொல்லியிருந்தார். அப் புத்தகத்தில் ஓரிடத்திலே, யேசு கிறிஸ்துவானவர் ஜகந்நாத க்ஷேத்திரத்துக்குப பிராஹ்மணர்களிடம் சாஸ்திரங்களைக் கற்பதற்காகச் சென்றாரென்றும், அவர்கள் அயலாருடன் சேராமல் பிரத்தியேகமாய் இருக்கும் ஆசாரத்தையும் அவர்கள் பூஜிக்கும் விக்கிர ஹங்களையும் கண்டு வெறுப்படைந்தா ரென்றும், ஆகவே, அவர்களை விட்டு அவர் திபேத்து தேசத்து லாமாக்களிடம் சென்று பரிபூர்ண ஞானம் பெற்று ஊருக்குத் திரும்பினாரென்றும் சொல்லியிருக்கின்றது. இந்தியாதேச சரித்திரத்திற் சிறிது தெரிந்தவர்களுக்குக் கூட மேற் சொல்லிய சங்கதியினாலேயே அப் புஸ்தகத்தில் கூறப்பட்ட வரலாறு

அவ்வளவும் ஒரு புரட்டென்று விளங்கும். எப்படி யென்றால், ஜகந்நாதத்திலுள்ள ஆலயம் ஒரு பழைய பௌத்தக் கோவில்; நாம் அதையும் மற்றக் கோவில்களை யும் கைப்பற்றி ஹிந்து கோவில்களாக மாற்றிவிட்டோம். இதைப்போல் அநேக காரியங்கள் நாம் இனியும் செய்ய வேண்டிவரும். அதுதான் ஜகந்நாத க்ஷேத்திரத்தின் உண்மை. அங்கே ஒரு பிராஹ்மணன் கூட அப்பொழுது இல்லை. அப்படியிருந்தும் அங்கிருந்த பிராஹ்மணர்க ளிடம் படிப்பதற்காக யேசுகிறிஸ்து வந்தாரென்று சொல் லப்படுகிறது. இப்படிச் சொல்லுகிறவர் யாரெனில், புரா தந சாஸ்த்ர விற்பன்னராகிய நம் நண்பர் ருஷிய கனவானே. ஆகவே, புத்த பகவான் பிரசங்கித்த ஜீவகாருண்யமென்ன, உத்தமமான நீதிமார்க்கமென்ன, நித்தியமான ஆத்மா வென்பதொன்று உண்டா இல்லையா என்பதைப் பற்றிய அதி சூக்ஷ்மமான தத்துவ வாதங்களென்ன—இவையெல் லாமிருந்தும், பௌத்த மதமென்னும் கட்டடம் முழுவ தும் தரைமேல் விழுந்து சுக்கல் சுக்கலாய்ச் சிதறுண்டு போய்விட்டது. அதனால் உண்டான நாசம் கேவலம் பயங் கரமானதே. பௌத்தமதம் போனதின்பின் நிகழ்ந்த கோரமான கதியை விளக்க எனக்கு அவகாசமு மில்லை, இஷ்டமுமில்லை. அதிகோரமான சடங்குகளும், மனிதர் தம் மூளையை உபயோகித்து எவ்வளவுதூரம் கருதக்கூடு மோ அவ்வளவு பயங்கரமும் அசப்பியமுமான புஸ்தகங் களும், மதமென்று பேர்வஹித்த மிருகத்தன்மையான ஆசாரங்களும் நீசகதி யுற்ற பௌத்த மதத்தாலேயே உற்பத்தியாயின.

ஆனால், பாரதகண்டம் உஜ்ஜீவிக்க வேண்டியிருப்பதால் ஸர்வேசுவரன் மறுபடியும் அவதரித்தருளினார். "தர்மம் தாழும்பொழுதெல்லாம் நான் அவதரிப்பேன்" என்று வாக்களித்தவர் மறுபடியும் வந்தார். இந்தச் சமயத்தில் இவ் அவதாரம் தென்னாட்டிலே நிகழ்ந்தது. பதினாறும் வயதிலேயே தம் நூல்களை யெல்லாம் எழுதி முடித்ததாக எவரைப்பற்றிச் சொல்லியிருக்கிறேதா, அத்தகைய அத்புதப் பெருமை வாய்ந்த பிராஹ்மண பாலகன் தோன்றினார். இந்தப் பதினாறு வயது பாலகனது கிரந்தங்கள் இக்காலத்திய உலகத்தின் அதிசயங்களாய் விளங்குகின்றன. அதுதான் அப்பாலகனது பெருமை. அவர் பாரதகண்டத்தை அதின் புராதன பரிசுத்த நிலைக்கு மீண்டும் கொண்டுவர எண்ணங் கொண்டார். அது எளிதில் முடிகிற காரியமா? அக் காலத்தில் இந்நாடிருந்த நிலையைப் பற்றிச் சற்று முன் சிறிது கூறினேனல்லவா? இப்பொழுது நீங்கள் சீர்திருத்த முயன்றுகொண்டிருக்கும் கொடுமைகளெல்லாம் அப்பொழுதிருந்த நீச நிலையினின்றே உண்டாயின. தார்த்தாரிகள், பெலுச்சிகள் முதலிய சகலவிதமான கோர சாதியார்களும் இந்தியாவுக்கு வந்து பௌத்த மதத்திற் பிரவேசித்து, நம் நாட்டாருடன் கலந்து தங்கள் ஜாதியாசாரங்களையும் நுழைத்துவிடவே, நம்மவர் வாழ்க்கை யவ்வளவும் மிகவும் கோரமான மிருகத்தன்மை பொருந்திய மஹா துராசாரமாய்ப் போய்விட்டது. அது தான் அந்தப் பாலகனுக்குப் பௌத்தர்கள் வைத்துவிட்டுப் போன ஆஸ்தி. அது முதல் இதுவரையில் பாரதகண்ட

யானது பௌத்த மதத்தினால் வந்த நீச கதியினின்று வேதாந்தத்தினால் மீண்டும் ஜயிக்கப்பட்டு வருகிறது. இக் காரியம் இப்பொழுதும் நடந்துகொண்டே யிருக்கின்றது; இன்னும் முடியவில்லை. சங்கராசாரியர் சிறந்த தத்துவ ஞானியாய் விளங்கி, பௌத்தமதத்தின் யதார்த்த ஸாரத்துக்கும் வேதாந்தத்தின் யதார்த்த ஸாரத்துக்கும் அதிக பேதமில்லை யென்றும், புத்த பகவான் சொல்லியவற்றின் உண்மைப்பொருளை அவரது சிஷ்யர்கள் நன்குணராமல் இழிநிலையில் ஆழ்ந்து ஆத்மாவும் கடவுளும் இல்லை யென்று கூறி நாஸ்திகர்களானார்களென்றும் நிரூபித்தார். அவ்வாறு சங்கரர் ஸித்தாந்தப்படுத்தலும், பௌத்தர்களெல்லாம் புராதனமான ஆர்ய மதத்திற் சேரத் தொடங்கினார்கள். ஆனால், மேற்சொன்ன ஆசாரச் சுமைகளையெல்லாம் தாங்கி நின்றார்கள். என்ன செய்யலாம்!

பிறகு, மஹா தேஜஸ்வியாகிய ராமானுஜர் வந்தார். சங்கரர் மஹா ஞானியாயிருந்தும் அவரிடத்தில் அவ்வளவு இரக்கம் இல்லையென நினைக்கிறேன். இராமானுஜரது ஹிருதயமோ கருணாஸாகர மென்னலாம். அவர் தீனர்களுக்கிரங்கி அவர்கள் நிலையைக் கண்டு பரிதபித்தார். கல்மஷம் மூடியிருந்த கர்மானுஷ்டானங்களைக் கூடியவரையில் சுத்தப் படுத்தியும், நூதன கர்மங்களையும் நூதன பூஜாக் கிரமங்களையும் ஏற்படுத்தியும், ஜனங்களின் குறையைத் தீர்த்தார். அன்றியும், அவர் மோக்ஷத்துவாரத்தைப் பிராமணனுக்கும் பறையனுக்கும் பேதமின்றித் திறந்து

விட்டார். அதுதான் ஸ்ரீ ராமாநுஜர் நிறைவேற்றிய கைங்கர்யம். அந்த மஹா கைங்கர்யம் மேலோங்கி எழுந்து வடநாட்டில் வியாபித்து, அதன் பின் மஹம்மதியர் அரசாட்சியிலே ஆங்குத் தோன்றிய மஹா புருஷர்களால் ஆதரிக்கப் பெற்றுப் பிரகாசித்தது. வடநாட்டிலே தோன்றிய அம் மஹா புருஷர்களுட் சிறந்தவர் ஸ்ரீ கிருஷ்ண சைதந்யர். ஸ்ரீ ராமாநுஜர் காலம் முதல் ஒரு விசேஷமான அம்சத்தை நீங்கள் கவனிக்கலாம். அதாவது, ஒவ்வொருவரும் ஜாதிபேதமின்றிப் பரகதியடையுமாறு ஞானக்கதவு திறக்கப்பட்டமையேயாம். அதுவே சங்கரருக்கு முன் தோன்றிய மஹா புருஷர்கள் கைக்கொண்ட மூல தத்துவமா யிருந்தது; அதுபோலவே ராமாநுஜருக்குப் பின் வந்த ஆசார்யர்களும் கைக்கொண்ட மூலதத்துவமாயிருந்து வருகின்றது. அனைவரும் மோக்ஷாதிகாரிகள் என்னுங் கொள்கையைச் சங்கரர் சம்மதிக்கவில்லையென்று ஏன் சொல்லவேண்டுமோ எனக்குத் தெரியவில்லை. அவ்வித அபிப்பிராயத்தை அவரது கிரந்தங்களில் எங்கும் காணேன். சங்கரரது ஸித்தாந்தத்தில் ஆரோபிக்கப்பட்ட இக்குறைவானது புத்தபகவானின் உபதேச விஷயத்தில் எப்படியோ அப்படியே, சங்கரரது சிஷ்யர்களின் கிராஹ்ய சக்திக் குறைவாலேயே உண்டாயிற் றென்றும், ஆசாரிய ஸ்வாமிகளின் கருத்தன்றென்றும் நினைக்கின்றேன். உத்தர தேசத்தில் அவதரித்த இந்தக் கிருஷ்ணசைதந்ய ஸ்வாமியைப்பற்றி மாத்திரம் கூறிவிட்டு இவ்வுபந்யாஸத்தை முடிக்கின்றேன். அவர் கோபிகைகளின் காதற்பற்றை

அநுஷ்டித்துக் காட்டியவர். அவர் பிராஹ்மணர்களுக்குள்ளே தர்க்க சாஸ்திரம் அதிகமாய்ப் பயிலும் வம்சத்திலே பிறந்து, தாமும் சிறந்த தார்க்கிகரெனப் பெயரெடுத்துப் பல பண்டிதருடனும் வாதம் புரிந்து திக்விஜயம் செய்தார். இப்படிப்பட்ட புகழ்தான் மனிதன் அடையத்தக்க சிறந்த புருஷார்த்தமென்று அவர் குழந்தைப் பருவமுதல் கற்றறிந்தது. ஆனால், ஒரு முனிவரின் அநுக்கிரஹத்தால் அவர் வாழ்க்கை முழுவதும் மாறிவிட்டது. அவர் தம் கல்விச் செருக்கையும், தர்க்கவாதங்களையும், தர்க்காசாரியத் தொழிலையும் விடுத்துப் பரமபுருஷனது பக்தியிலே ஈடுபட்டு, இவரைப்போல் இப்பிரபஞ்சத்தில் பக்தி செய்தவர்களில்லை எனும்படியாய் ஒப்பற்ற உத்தம பக்தியின் ஆசாரியராய் விளங்கினர். அவரது பக்தி வங்காள நாட்டிலெல்லாம் வியாபித்து ஒவ்வொருவருக்கும் ஆறுதலளித்தது. அவரது அன்புக்கு அளவில்லை. புண்யாத்மாவுக்கும், பாபாத்மாவுக்கும், இந்துவுக்கும் முஹம்மதியனுக்கும், பரிசுத்தனுக்கும் அபரிசுத்தனுக்கும், வேசைக்கும் வீதியில் நடப்பவனுக்கும்,—அனைவருக்கும் அவரது அன்பிலும் அருளிலும் பாகமிருந்தது. இவ்வுலகத்திலுள்ளவை அனைத்தும் க்ஷீணிப்பதுபோல் அவரது மதமும் இக்காலத்தில் க்ஷீணித்திருந்தும், தரித்திரருக்கும் தீனருக்கும், ஜாதியிழந்தவர்களுக்கும், துர்ப்பலர்களுக்கும், ஜனங்களால் தள்ளிவிடப்பட்டவர்களுக்கு ஸ்ரீ சைதன்யாது வைஷ்ணவ ஸம்பிரதாயமே இன்றுவரையிலும் அடைக்கலமாயிருந்து. ஆனால்,

உண்மையைச் சொல்லவேண்டி வருங்கால், ஒரு விசேஷமும் வெளிப்படையாய்த் தோன்றுகின்றது. தர்க்கசாஸ்த்ர ஆதாரமுள்ள சம்பிரதாயங்களிலே அத்புதமான சமரஸம் விளங்குகின்றது. இந்தியாவிலுள்ள பல வகைப்பட்ட சம்பிரதாயங்களும் உண்மையில் ஒன்றற்கொன்று பேதமுள்ளவை யென்று சங்கராசார்ய ஸித்தாந்தத்தை யவலம்பிக்கின்ற எவனும் சொல்லானுயினும், ஜாதியாசார விஷயங்களிலோ சங்கராசார்யர் மஹா வைராக்கிய முள்ளவர் ஆனால், வைஷ்ணவர்களுக்குள் ஜாதி சம்பந்தமான விஷயங்களில் அதிக ஸமரஸபாவமிருக்கத், தத்துவ விஷயங்களிலே அதிக நிர்ப்பந்த மிருக்கின்றது.

"ஒருவர் (சங்கரர்) பரம ஞானமூர்த்தி, மற்றவர் (சைதந்யர்) பரம கருணாமூர்த்தி, ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அபாரமான ஞானசக்தியையும் ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சுவாமிகளின் கருணைநிறைந்த விசாலமான ஹிருதயத்தையும் ஒரே திருமேனியில் பொருந்தி விளங்கப்பெற்றவரும், எல்லாச் சம்பிரதாயங்களிலும் பிராணி சமூதாயங்களிலும் சாக்ஷி பூதமாய் விளங்கும் ஒரே பிரஹ்ம ஸ்வரூபத்தைக்கண்டு மகிழக்கூடியவரும், இந்தியாவிலாயினும் இந்தியாவுக்கு வெளியிலாயினும் எல்லா இடங்களிலும் உள்ள ஏழைகள், பலஹீனர்கள், ஜாதிக்குப் புறம்பானவர்கள், துரவஸ்தைக் குட்பட்ட தீனர்கள் முதலிய பிரபஞ்சத்திலுள்ள பிரதிபிராணிகளின் பொருட்டும் உள்ளங் கரைந்து உருகி அநுதாபப்படக் கூடியவரும், இந்

தியாவிலும் அதற்குப் புறம்பேயும் பரஸ்பரம் வைர முற்று வாது புரியும் பல்வேறு சமயங்களையும் ஸமந்வயப்படுத்திப் பக்தியும் ஞானமும் ஒருங்கே யமைந்த ஆச்சரியமான ஸமரஸ ஸித்தாந்த நிலையை ஸ்தாபிக்கக்கூடிய மஹா மேன்மை தங்கிய கம்பீரமான திவ்யோபதேசம் புரியும் ஒப்பற்ற ஞானமூர்த்தியுமான மஹான் ஒருவர் அவதரிப்பதற்குக் காலம் பக்குவமாயிருந்தது. அப்பொழுதுதான் அந்த மஹாநுபாவர் பிறந்தார். அவரது திருவடிகளிலே அநேக வருஷகாலம் தொண்டு பூண்டொழுகும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. காலம் பரிபக்குவமாகி யிருந்தது. அத்தகைய பெரியவர் அவதரிப்பதும் ஆவசியகமாயிருந்தது. அவர் அவதரித்தார். அதில் ஒரு விசேஷமென்னவெனில், ஐரோப்பியக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் இந்தியாவிலுள்ள மற்ற விடங்களைவிட அதிகமாய்ப் பாராட்டி, ஐரோப்பிய நாகரிகமயமாய் விளங்கும் கல்கத்தா நகரத்துக் கருகிலேயே அப் பெரியவரது சரித்திரமெல்லாம் நிகழ்ந்தது. அவர் அங்கே பிறந்து யாதொரு நூலையும் ஓதா துணர்ந்தார். அவ்வளவு மஹா ஞானியாயிருந்தும் தம் பெயரை யெழுதவும் அவருக்குத் தெரியாது. அவ்வாறிருந்தும், பிரதி மனிதனும்,— நமது சர்வ கலாசாலைகளில் மஹா மேதாவிகளென்று பிரசித்தம் பெற்ற பட்டதாரிகள் கூட—அவரது அபாரமான ஞானத்தைக் கண்டு அதிசயித்தார்கள். அவர் அதி விசித்ரமானவர். அவரது திவ்ய சரித்திரம் மிக்க விரிவானதாகையால் அவரைப் பற்றி யாதொன்றும் சொல்ல இன்று எனக்கு அவகாச

யில்லை. அவர் திருநாமம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ மூர்த்தி யென்றும், அவரே சகல முனிவர்களுடைய லக்ஷண பரிபூர்த்தி யென்றும், இக்காலத்துக்குத் தகுந்த மஹா னென்றும், அவரது உபதேசங்களை இந்த நிமிஷத்தில் நன்மை பயப்பனவென்றும் மாத்திரம்சொல்லி நிறுத்துகின்றேன். அவருக்குப் பின்னை யிருந்து அருமையான வேலைசெய்யும் தெய்வசக்தியை யுற்று நோக்குங்கள். ஓர் ஏழை அர்ச்சகப் பிராஹ்மணன் மகனாய் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவர்; அவரை ஒருவருக்கும் தெரியாது; அவரைப்பற்றி ஒருவரும் நினைத்தது மில்லை. அப்படிப்பட்டவரை இன்று ஐரோப்பிலும் அமெரிக்காவிலும் பல்லாயிரம் ஜனங்கள் யதார்த்தத்தில் வணங்கி வருகிறார்கள். நாளைக்கும் இன்னும் பல்லாயிரம் ஜனங்கள் வணங்குவார்கள். ஈசனது திருவருட் செயல்களை யாரே கண்டார்? ஆகவே, என் ஸஹோதரர்களே! இப்பொழுது நடக்கும் காரியங்களில் ஸர்வதயாபரனான ஸர்வேசுவரனுடைய திவ்ய சக்தி உங்களுக்குப் புலப்படவில்லையாயின், நீங்கள் குருடர்களா யிருத்தலே,—பிறவிக் குருடர்களா யிருத்தலே அதற்குக் காரணம். சமயமும் சந்தர்ப்பமும் நேருமாகில், அவரைப்பற்றி உங்களுக்கு மற்றொரு முறை சொல்வேன். இப்பொழுது இவ்வளவு மாத்திரம் சொல்லி யமைகின்றேன்.—நான் ஓர் உண்மை வசனமேனும் சொல்லியிருந்தால் அஃது அவருடையதேயன்றி வேறெவருடையது மாகாது; உண்மை யல்லாதனவும், சரி யல்லாதனவும், ஜனங்களுக்கு உபகார மல்லாதனவுமான பல

விஷயங்களை நான் சொல்லியிருந்தேனாயின், அவை யாவும் என்னுடையவே; அவற்றிற்கு உத்தரவாதம் பண்ண வேண்டிய பாரம் என்மீதே யேறும்.

ஸ்வாமிகளின் விசேஷ வாக் சாதுர்யத்தையும், விஷயங்களை எடுத்துச் சொல்வதில் அவருக்கிருந்த மனோஹரமான சாமர்த்தியத்தையும் கண்டு களித்த வொருவர், "ஹிந்து" பத்திரிகையில் வெளிப்படுத்திய ஒரு கடிதத்தில் "இப்படிப்பட்ட திவ்ய தேஜோமயமான பிரசங்காமிர்தத்தை வர்ஷிக்கும் வாசாலகரைப்போல் வேறெவரும் பேசிக் கேட்டதாக இச் சென்னை மாநகரத்து அதிக வயது சென்ற பழங்கால மனிதருக்குக்கூட ஞாபக மில்லை" என்று வியந்து கூறியிருந்தார்.

---

## X

### சென்னையில்
### இரண்டாம் பிரசங்கம்.

## "இந்திய வாழ்க்கையில் வேதாந்த வொழுக்கம்."

நமது ஜாதிக்கும் சமயத்துக்கும் பொதுப் பெயராய் வழங்கி வரும் பதமொன் றிருக்கின்றது. அஃதாவது, ஹிந்து என்னும், பதமாம். அப் பதத்திற்கும், நான் உபயோகிக்கும் வேதாந்தம் என்பதின் பொருளுக்கும் உள்ள சம்பந்தத்தை சிறிது விளக்கவேண்டி யிருக்கின்றது. 'ஹிந்து' என்னும் இப்பெயரானது பண்டைக்காலத்

துப் பாரஸீகர் ஸிந்து நதிக்கிட்ட பெயராகும். ஸமஸ்கிருத பாஷையில் 'ஸ' எனும் எழுத்து வருமிடத்தி லெல்லாம் பழையகாலத்துப் பாரசீக மொழியில் அது 'ஹ' எனும் எழுத்தாய் மாறும். அப்பாரஸீகருக்குப் பின் இந்நாட்டின் மேல் படையெடுத்து வந்த கிரேக்கர்களுக்கு 'ஹ' காரத்தை யுச்சரிப்பது கஷ்டமா யிருந்தபடியால், அவர்கள் ஹிந்து என்னும் சொல்லிலுள்ள 'ஹ'கார மெய்யை ஒழித்துவிட்டன ரென்றும், அதன் பிறகு நமக்கு 'இந்தியர்கள்' என்ற நாமதேயம் உண்டாயிற் றென்றும் உங்களுக்கு ஏற்கனவே தெரியு மல்லவா? பூர்வகாலத்தில் இந்தப் பதத்துக்கு 'ஹிந்து நதியின் அக்கரையிலுள்ளோர்' என்பது முதலான வேறெந்தப் பொருள் உண்டாயிருந்த போதிலும், இக் காலத்தில் இந்தச் சொல்லுக்கு அந்தப் பொருளே போய்விட்டது. ஏனெனில், ஹிந்து நதியின் இக்கரையி லுள்ளோர் எல்லாம் முன்போல் ஒரே சமயத்தைச் சேர்ந்தவ ரல்லர். ஹிந்துக்க ளென்கிற சிறப்புப் பெயர் பெற்றவர்கள் மாத்திரமேயன்றி, முகம்மதியர்களும், பாரசீகர்களும், கிறிஸ்தவர்களும், பின்னும் சில பௌத்தர்களும் ஜைனர்களுங்கூட இருக்கின்றனர். "ஹிந்து" என்னும் சொல்லிற்கு "ஹிந்து நதியின் இக்கரையி லுள்ளோர்" என்பது நேர்ப்பொருளாக, அஃது இவ்வெல்லா ஜனங்களையும் அந்வயிக்கவேண்டு மல்லவா? ஆனால், சமயநெறியைக் குறித்துப் பேசும் போது அவர்களனைவரையும் ஹிந்துக்களெனப் பொதுமையாய் அழைப்பது பொருந்தாது. பலவகைக் கொ

ள்கைகளும், கோட்பாடுகளும், கர்மவிதிகளும், ஆசாரங்களும் ஒரு பெயரின்றி ஒரு தலைமைக்கு உட்படாமல், ஒரு சம்பிரதாயத்துக் குள்ளடங்காமல், இவை யெல்லாம் ஒருங்கு சேரப்பெற்றதே நமது சமய மாகையால், இத் தன்மை பொருந்திய நமது சமயத்திற்கு ஒரு பொதுப் பெய ரிடுவது கஷ்டமேயாம். ஆயினும்; 'நம்மிலுள்ள பற்பல சம்பிரதாயத்தாரும் ஒரே மனமாய் ஒப்புக்கொள்ளும் அம்சம் ஒன்றுண்டு. அதாவது, நாமெல்லோரும் வேதத்தையே பிரமாணமாகக் கொள்ளுகின்றோம். வேதத்தை உத்தமப் பிரமாணமாக ஒப்புக் கொள்ளாதவன் ஹிந்துவென் றழைக்கப்பெறுவதற்கு உரியவன் அல்லனென்பது நிச்சயம்.' இவ் வேதமானது கர்ம காண்டம் ஞானகாண்டமென இரு பகுதியாக வகுக்கப்பட்டிருக்கின்ற தென்பது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயமல்லவா? கர்ம காண்டமானது வேள்வி முதலிய வைதிக கிரியைகளைப் பிரதிபாதிப்பது. அக் கிரியைகளிற் பெரும்பான்மை இக் காலத்தில் அநுஷ்டிக்கப்படுவதில்லை. வேதத்தில் அத்யாத்ம போதங்க ளடங்கியதே ஞானகாண்டமாம் அதற்கு உபநிஷத்துக்களென்றும் வேதாந்தமென்றும் நாமாந்தரங்கள் உள அது, நமது ஆசாரியர்களாலும், தத்துவவாதிகளாலும், நூலாசிரியர்களாலும், அவர்கள் துவைதிகளாயினும், விசிஷ்டாத்வைதிகளாயினும், அத்வைதிகளாயினும், —உத்தமப் பிரமாணமாகக் கொள்ளப்பட் டிருக்கின்றது எவ்வித தத்துவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தவனாயினும், எச் சமயத்தை யநுசரிப்போனாயினும், அவன் உபநிஷத்

துக்களையே பிரமாணமாகக் கொள்ளவேண்டியவனாயிருக்கின்றான். அப்படி அவன் கொள்ளானாயின், அவன் சேர்ந்துள்ள சம்பிரதாயம் அவைதிகமாகும். ஆகவே, இக்காலத்தில் பல்வேறு பேதங்களுடன் கூடியிருக்கும் ஹிந்துக்களனைவரையும் ஒரு பொதுப் பெயரால் குறிக்க வேண்டின், 'வேதாந்தி' என்றபெயரே பொருந்தும். அல்லது நீங்கள் சொல்லுகிறதுபோல், 'வைதிகன்' என்றாலும் அமையும். 'வேதாந்தம்' என்ற சொல்லை எப்பொழுதும் நான் இந்தப் பொருளிலேயே உபயோகிக்கின்றேன். இந்தப் பொருளைச் சிறிது தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டியிருக்கின்றது. ஏனெனில், வேதாந்தம் என்றால் அத்வைதமென்ற பொருள் கொள்வது பலருக்கும் வரவர வழக்கமாய்விட்டது. உபநிஷத்துக்களைப் பிரமாணமாகக் கொண்டு உண்டாயிருக்கும் பலவகைப்பட்ட தத்துவ சம்பிரதாய பேதங்களுள் அத்வைதமும் ஒன்றாமென்பது நாமெல்லோரும் அறிவோமல்லவா? உபநிஷத்துக்களின் விஷயத்தில் எவ்வளவு குருத்துவம் அத்வைதிகளுக் குண்டோ, அவ்வளவு விசிஷ்டாத்வைதிகளுக்கும் உண்டு. வேதாந்தம் அத்வைதிகளுக்கு எவ்வளவு பிரமாணமோ அவ்வளவு விசிஷ்டாத்வைதிகளுக்கும் பிரமாணமாயிருக்கின்றது. துவைதிகளுக்கும் மற்றெல்லாச் சமயத்தோருக்கும் இப்படியே யென்றறிக. ஆயினும், சாதாரணமாய், 'வேதாந்தி' என்றால் 'அத்வைதி' என்ற பொருள் செய்கிறார்கள். இதற்கும் சிறிது நியாயம் இருக்கலாம் எனத் தோன்றுகிறது. எவ்வாறெனில், நமக்கு வேதமே

பிரதான மதக்கிரந்தமா யிருந்தாலும், அவ் வேதத்தின் சித்தாந்தங்களைத் தெளிவாய் எடுத்து விளக்குவதற்கு ஸ்மிருதிகளும் புராணங்களும் பிற்காலத்தில் உண்டா யிருக்கின்றன. ஆனால், வேதத்துக்குள்ள அவ்வளவு பிரமாண்யம் இந்த ஸ்மிருதிகளுக்கும் புராணங்களுக்கும் கிடையாது. ஏனெனில், வேதம்-ஸ்மிருதி-புராணம்-இம் மூன்றும் நமக்குப் பிரமாணீகமாய் இருந்தபோதிலும், சுருதிக்கும் புராணத்திற்கும் முரண் நேரிடும்போது சுருதியே உயர்ந்த பிரமாணம் என்பது நமக்குத் தெரிந்த விஷயமே. அத்வைதிகள் தங்கள் சித்தாந்தத்தைத் ஸ்தாபிக்கும் பொருட்டுச் சுருதியையே விசேஷமாய் ஆதாரமாய்க் கொள்ளுகின்றார்கள். துவைதிகளோ விசேஷமாய்ப் புராணங்களை மேற்கோளாகக் கொள்வதும், ஸ்மிருதிகளை அவைகளுடைய முக்கியத் தன்மைக்கு ஏற்றவாறு எடுத்துக் காட்டுவதும் வழக்கம். ஆகையினாலே, அத்வைதிக்கே வேதாந்தி என்ற பெயர் சித்தித்தது. மேலும், இந் நாட்டில் நிலைபெற்றிருக்கும் ஒவ்வொரு மதமும் வேதத்திற்கு உட்பட்டதாகச் சொல்லவேண்டும். துவைதி, அத்துவைதி விசிஷ்டாத்துவைதி என்னப்பட்டவைகளோடு, பௌத்தம் சமணம் என்பவைகளுக்கும் கூட வேதம் இடங்கொடுக்கின்றது. கடைசியிற்கூறிய மதங்களின் நீதிகள் நேராகவே வேதத்தினின்று எடுக்கப்பட்டன. "உபநிஷத்தில் பக்திக்கு ஆதாரம் இல்லை" என்று சிலர் சொல்லுகிறார்கள். அது பிசகு. பிற்காலத்தில் புராணங்களில் பக்தி விசேஷமாய் எழுவதற்கு ஏது இருப்பினும், உபநிஷத்தில்

பக்தி, வித்தினிடத்தில் விருக்ஷம்போல் அடங்கியிருக்கிறது. சிலர், "நமக்குள்ள பக்திக்குக் காரணம் நம்முடைய மதத்திற்குப் புறம்பான இடத்திலிருந்து உண்டாயிற்று" என்று சொல்லுகிறார்கள். அது முழுவதும் பரிகாசம் செய்யத்தக்கதான விஷயம். அவர்கள் உபநிஷத்தைப் படியாதவர்கள். சம்ஹிதைகளிலாவது பயமுறுத்தும் தன்மைத்தான மதம் இருக்கிறது. அவைகளில் மனிதன் வருணனுக்கு முன்பு நடுங்குவதும், பாவத்திற்கு வருந்துவதும், இவை முதலியன காணலாம். ஆனால், உபநிஷத்திலோ அப்படியல்ல. எல்லாம் பக்தியும ஞானமுமேயாம்.

இவ் உபநிஷத்துக்கள் வெவ்வேறு விதமாய் உரை செய்யப்படுகின்றன. உபநிஷத்துக்களும் புராணங்களும் பேதிக்கும்போது நூற்றில் தொண்ணூறு பெயர் பௌராணிகர்களாகவும், பத்துப்பெயர்தான் வேதாந்திகளாகவும் பிரிகிறார்கள். மேலும், கிராமாந்தரங்களில் வழங்கிவரும் ஆசாரங்கள் மதத்தை அனுசரித்தவைகளாயும், அஞ்ஞானிகளால் இந்துமதம் என்று நம்பப்படுகின்றவைகளாயுமிருக்கின்றன. அவைகளும் அம் மனிதர்களுக்கு வேதாந்தமே யாகின்றன. மேலும், நமமுடைய மதத்தினுடைய கிரந்தங்கள் விஸ்தாரமாயிருக்கின்றன. பதஞ்சலி முனிவருடைய மகா பாஷியத்தில் ஸாம வேதத்திற்கு ஆயிரம் சாகைகள் உண்டெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளெல்லாம் இப்போது எங்கே போயின? மறைந்து போயின. நம்மால் அவைகள் கண்டெடுக்க முடியா. அவைகள்

சில குடும்பங்களால் பாதுகாக்கப்பட்டவைகளாய் இருந்து அக் குடும்பங்களோடே தாமும் இருந்த இடம் தெரியாமல் நசித்துப் போயின. ஆயினும் எந்தத் தேசாசாரமாயினும் சுருதிக்கு விரோதிப்பட்டால் அவ் வாசாரத்திற்காகப் பரிந்து பேசுவோர் 'அவைகள் மறைந்துபோன சுருதிகளை ஆதாரமாயுடையன' என்று சொல்லுகிறார்கள். இவைகள் தவிர பாஷையினால் உண்டாகும் கஷ்டங்கள் சிலவுள, இத்தியாதி கஷ்டங்கள் இருந்தபோதிலும், பொதுவான அபிப்பிராயங்கள் உபநிஷத்துக்களைப் படிப்பவர்களுக்கெல்லாம் உண்டு, எல்லாருக்கும் பொதுவான அம்சம் இல்லாவிடில் இவ்வளவு காலம் உபநிஷத்துக்கள் நிலைபெற்றிருக்கமாட்டா உபநிஷத்துக்களுக்குப் பாஷியம் செய்தவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்திற்கு ஏற்றவாறு வாக்கியங்களைத் திருப்பிக்கொண்டனர். ஸம்ஸ்கிருத பாஷை வெகு பழமையானது. மேலும், அது வெகு சிக்கு. ஆகையால், பாஷியம் செய்பவர்களுக்கு மனம்போன பிரகாரம செய்ய இடங்கொடுத்தது. பண்டிதர்கள் எந்தப் பதத்திற்கானாலும் ஏதாவது ஓர் அர்த்தம் செய்துவிடுவார்கள். ஆனால், உபநிஷத்துக்கு அர்த்தம் எளிதில் புலப்படத் தகுந்ததே ஒழிய வேறல்ல. துவைதியாகவும், அத்வைதியாகவும், பக்தனாகவும், ஞானியாகவும் இருந்த ஒருவரோடு வாசம் செய்தபடியால் உபநிஷத்துக்களுக்கு நான் சுயமாக அர்த்தம் செய்து கொண்டேன். என்னுடைய ஆராய்ச்சிக்கு உபநிஷத்துக்களில் ஒன்றோடொன்று முரணுகிற வாக்கியங்கள் இல்லையென்றும்,

பாஷியங்களுக்கு ஆவசியகம் இல்லையென்றும், எல்லாம் வெகு அழகாயும் ஒற்றுமை பொருந்தும்படியாயும் நோக்கப்பட்டிருக்கின்றனவென்றும் தோன்றுகின்றன. எல்லா உபநிஷத்துக்களும் துவைதத்தை முதலில் சொல்லி முடிவில் அத்வைதத்தைச் சொல்லுகின்றன. ஆகையினால், துவைதியும் அத்வைதியும் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ள வேண்டாம். இவ் விருதாரத்தாரும் நம்மவர்களில் அத்தியாவசியகர்களே. இவர்களில்லாவிட்டால் நம் மதம் நில்லாது. ஒன்று மற்றொன்றின் முடிவு. ஒன்று வேரும், மற்றொன்று பழமும்போலாம். ஆகையினால், வாக்கியார்த்தங்கள் செய்வது பரிகாசத்திற்கு இடமாகும். உபநிஷத்தைப் படிப்பவர்கள் அவைகளுடைய பாஷா நயத்தைக் கண்டு மெச்சாமல் இருக்கமுடியாது. அந்தப் பாஷையோ வெகு விநோதமானது. அது இந்துக்களுடைய மனம் அந்தர்முகமான நோக்கமுடையதென்பதைக் காண்பிக்கிறது. மேற்குத் தேசத்தில் வெர்ஜில் என்றும், டாண்டி என்றும், ஹோமர் என்றும் சொல்லப்பட்ட மகா கவிகளுடைய கிரந்தங்களில் வெகு கம்பீரமான பாகங்கள் எதைக் குறிக்கின்றனவென்றால், அளவில்லாத வெளியை அதாவது ஆகாயத்தைக் குறிக்கின்றன. வேத ரிக்குகளிலும் ஸம்ஹிதைகளிலும் இந்துக்கள் சிருஷ்டியைக் குறித்து விவகரிக்கும்போது எவ்வளவு உயர்ந்த எண்ணங்களை அடையக்கூடுமோ அந்தளவுமடைந்து அதினாலேயும் கடவுள் அடையப்படாதவர் என்று திரும்பிவிட்டனராயினர். உபநிஷத்தின் வாக்கியங்

கள் வேறு மாதிரி, அதாவது நியதி வாக்கியங்கள் இந்திரியங்களுக்கு முடியாததும் மனதினால் அறியப்படாததுமாயினும் உண்டென்று சொல்ல வேண்டியதுமான ஓர் வஸ்துவைச் சுட்டுகின்றன. இந்துக்களுடைய வசனங்களிலே மானிடர் முக்தியடையும் மார்க்கம் நன்றாய் வர்ணிக்கப்படுகிறது. அழகான சிறகுகளையுடைய இரண்டு பக்ஷிகள் ஓர் மரத்தில் உட்கார்ந்திருந்தன. அவைகளில் ஒன்று மரத்தின் தாழ்ந்த கிளையின்மேலிருந்து கொண்டு அதிலிருக்கும் தித்திப்பும் கைப்புமான பழங்களைத் தின்னுகின்றது; மற்றொன்று சும்மாச் சாந்தமாய், கம்பீரமான சுகதுக்க நுகர்வின்றி இருக்கின்றது. இதுதான் ஜீவசர்களுடைய நிலையைக் காட்டும் உவமானம். இந்திரியங்களுக்கு விஷயமான பொன் முதலிய அற்ப பதார்த்தங்களைத் தேடுகிறவன் பிறப்பில் உண்டான சுக துக்கங்களால் மொத்துண்ணுகிறான். இளம்பிராயத்தில் 'இதை அடையலாம், அதை யடையலாம்' என்று ஆசைப்படுவதும், வார்த்திகத்தில் 'இதை யடையவில்லையே, அதை யடையவில்லையே' என்று விசனப்படுவதுமா யிருக்கிறான். இப்படி யிருக்கும்போது ஒவ்வொருவனுக்கும் ஒருகாலம் வருகிறது. அப்போது சூரியனை மறைக்கும் மேகங்கள் கலைந்து, கீர்த்தி செல்வம் முதலிய அற்ப உலகப் பொருள்களுக் கெல்லாம் மேற்பட்ட தனக்குள் தான் திருப்தி அடைந்து சாந்தியடைந்து கம்பீரமாய் உட்கார்ந்திருக்கும் மற்றோர் பறவையைப் பார்த்துச் சிறிதுநேரம் சிந்திக்கிறான். அதன் பிரகாசம் இவன்மேலில் விழுகிறது.

விழுந்த க்ஷணமே அதனுடைய பிரதிபிம்பத்தைத் தன்னிடத்தில் காண்கிறான்; தானே அதுவாகிறான்; கடவுளாகிறான்; திருப்தியை அடைகிறான். மேற்கூறிய உபமானத்தினாலே துவைதமும், அத்துவைதமும் இரண்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. இத்தகைய உபமானங்கள் அநேகம் சொல்லக்கூடும். இந்த உபநிஷத்து வாக்கியங்கள் ஒவ்வொன்றும் சம்மட்டி அடிபோல் பலத்துடன் விழுகின்றன. கதைகளாலும், அடைமொழிகளாலும், மறைப்புகளாலும் அவைகள் பலங் குன்றினவைகளாக இல்லை. நேராக வருகின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் உபநிஷத்துக்கள் பலத்தையே வற்புறுத்துகின்றன. "மனிதனே! பலவானாய் இரு, பலவீனனாய் இருக்கவேண்டாம்" என்று உபநிஷத்துக்கள் நமக்குக் கற்பிக்கின்றன. மஹா அலக்சாந்தர் என்ற அரசன்: பூஜ்யராயும், நிர்வாணமாய் இந்து தேசத்திய ஓர் புண்ணிய நதியின் தீரத்தில் வசிப்பவருமான ஓர் சந்நியாசியைப் பார்த்து, "நீர் எம்முடைய தேசத்திற்கு வாரும்; வருவீரானால் உமக்குச் சம்பத்துக்கள் விசேஷமாய் அளிப்பேன்" என்றான். சந்நியாசி புன்னகை செய்து, இராஜாவைப் "போ" என்று கையால் காட்டினார். அதற்குமேல் அரசன் தன்னுடைய அதிகாரத்தைக் காட்டிப் "பலாத்காரம் செய்வேன்" என்றான். சந்நியாசி நகைத்து, "அப்பா! நீ இந்த உலகத்திற்கு அதிபதி, நானோ பிறப்பும் இறப்பும் அற்ற ஆத்மா; ஆகையால், நீ ஒன்றும் தெரியாத குழந்தையாய் இருக்கிறாய், போ" என்றான். நான் உங்களின் பொருட்டுப் பிரலாபிக்

கிறேன். ஐயோ! உங்களுக்குப் பலம் எப்போது தேவையா யிருக்கிறதோ, அப்போது திராணி யற்றவர்களா யிருக்கிறீர்கள். உங்களுக்குப் பலத்தைப் புகட்டுபவர் யார்? இவ் வுலகத்திலுள்ள புத்தகசாலைகளை யெல்லாம் நிரப்பி விடும்படியான பிருதியையுடைய கதைகளோ நமக் கனேகமாய் உள. இக் கதைகளே நம்முடைய சனங்களை அநேகமாயிரம் ஆண்டுகளாகப் பல வீனப்படுத்திக் கொண்டு வருகின்றன. நம்மை வெற்றிகொண்ட ஒவ்வொரு அரசன் காலின் கீழேயும் நெளியும் புழுக்களாய்த் தற்காலத்தில் ஆய்விட்டோம். உபநிஷத் வாக்கியங்கள், இந்த உலகம் முழுவதையும் பலப்படுத்தும்படியான தன்மை யுடையன. வெகுவாய்க் கசக்கப்பட்ட தேசத்தவரைக் கூட மறுபடியும் தங்கள் சுவாதீனத்தை யடையும்படி செய்பக்கூடிய சாமர்த்தியம் அவைகளுக்குண்டு. நமக்கு வேண்டுவ தென்னவென்றால், மனோவாக்குக் காயம் என்னும் மூவகைப்பட்ட சுதந்திரமாம். இவைகளை யல்லவோ உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன? வேதாந்த மதத்தின் கோட்பாடு, சீவன் மாயையினின்றும் விடுபட வேண்டுமென்பதே. இதையே தற்காலத்திய வித்துவான்களும் அங்கீகரிக்கத் தலைப்படுகின்றனர். இந்தக் கோட்பாடு, உலகத்தையே மாற்றிவிடப் போகிறது. இதனால் மனிதன் அசக்தன் என்னும் அபிப்பிராயம் அடிபட்டுவிடப் போகிறது. சிருஷ்டி முழுவதிலும் ஏகத்துவத்தை அங்கீகரிக்க உலகம் தலைப்படுகின்றது. மின்சாரமும் நீராவியும் உலகத்தாரை நெருங்கச் செய்தன. இந்துக்கள் தற்காலத்தில்

புறத்தேயத்தாரைப் பசாசுகளென்று நினைப்பதும், புறத் தேயத்தார் நம்மை நரமாம்சம் புசிப்பவரென்று எண்ணு வதும் அசாத்தியமாய்விட்டன. நம்மவர்கள் அயல்தேசங் களுக்குப் போனால் அங்கே நம்மை நல்வரவு கொண்டாடு பவர்கள் உளர். 'அஞ்ஞானத்தால் துனபமும், ஞானத்தி னால் சுகமும் விளையும்' என்னைப்பட்ட உபநிஷார்த்தம் எல்லாருக்கும் அமையும். ராஜதந்திரத்திலேயும் ஜனாசார விஷயத்திலேயும் ஒற்றுமை அங்கீகரிக்கப்படுகிறது. தற்காலத்தில் எல்லாச் சாதியாரும் பொதுவான ஏற்பாடு களையே கேட்கின்றனர். சடசாஸ்திரம் சொல்வதின் பிர காரம் உலகம் எல்லாம் ஓர் சட சமுத்திரம் போலவும், அதில் சூரிய சந்திர நக்ஷத்திரங்கள் சுழல்கள் போலவு மாம். அப்படியே இவ்வுலகத்தை மனோமயமாய்ப் பார்க்கு மிடத்து எண்ணங்கள் நிறைந்த சமுத்திரமான இவ் வுல கத்தில் மனிதர்களாகிய நாம் சுழல்களாய் இருக்கிறோம். இந்த ஒற்றுமை நம்முடைய புஸ்தகங்களில் முறையிடப் பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் ஐயோ நாம் எவ்வ ளவு பலவீனராயிருக்கிறோம்! தேசதாருட்டிய மில்லாதவ ராய்ச் சோம்ப லுற்றவராய், ஒருமித்து ஒரு காரியத்தைச் செய்யக்கூடாதவராய்ச், சுய காரியப்புலிகளாய் இருக்கின் றோம். மூன்று இந்துக்கள் ஓரிடத்துச் சேர்வார்களே யானால் ஒருவரை ஒருவர் வெறுக்கின்றனரே. ஏற்பாடு யாதுமின்றி நெற்றியில் குறி இப்படி யிடுவதா? அப்படி இடுவதா? என்கிற இவைபோன்ற அமுக்கியமான விஷயத் தைக் குறித்துப் போர் புரிகின்றனரே. ஒருவன் சாப்பாட்

டை மற்றொருவன் பார்த்தால் என்றாகும் என்பதைக் குறித்துக் கல்வித் திறம் அமைந்த பெரும் புத்தகங்கள் எழுதுகின்றனரே. இம்மாதிரியான விநோதமான விஷயங்களைக் குறித்து யோசிக்கும் அவர்கள் புத்தி எவ்வளவு அற்புதமானது! நமக்குவெட்க மில்லையா? ஆகையால், முதல்முதல் தேகத்தில் பலம் வரவேண்டும்; நம் சிறுவர் காலால் எறியும் பந்துக்களையும் ஆடட்டும்; கீதையையும் படிக்கட்டும். இவை வெகு தைரியமான வார்த்தைகள். ஆயினும், உங்கள்பேரில் எனக்குள்ள நேசத்தினால் நான் இப்படிச் சொல்லுகிறேன். தோள்வலி யிருந்தால் கீதையின் உபதேசமும் செவ்வையாய் விளங்கும். நான் அத்வைத மதத்தைப் போதிக்கிறே னென்று என் பேரில் அசூயை அடைகிறார்கள். நான் யாதொரு மதத்தையும் போதிக்கவில்லை, ஆத்மாவைப் பற்றிச் சொல்லுகிறேன். ஓர் இராஜபத்தினி தன் சிசுவுக்குத் தாலாட்டுப் பாட்டிலேயே 'அக்குழந்தையினுடைய ஆத்மா நிஷ்களங்கமானது' என்று சொல்லி அதற்குப் பிரமஞானத்தை யூட்டினள். ஆகையினால், நீங்கள் உயர்ந்தவர்கள் என்று உங்களை நினையுங்கள். ஆங்கிலேயர் அப்படி நினையாமல், அவர்கள் பைபிலில் சொல்லுவதுபோல் தங்களைப் பாபிகளான ஏழைகள் என்று நினைத்த பக்ஷத்தில், இப்போது அடைந்திருக்கும் ஜய லக்ஷ்மியை யடைந்திருப்பாரோ? ஆங்கிலேயர் இந்த அபிப்பிராயங்களை உட்கொண்டு மானா அவமானத்தை யோசியாமல் அவ் வபிப்பிராயங்களைப் பிரசங்கிக்கின்றனர். உங்களில் அப்படிச் செய்பவர் எத்தனை பேர்

இருப்பார்கள்? அநேக நூற்றாண்டு காலமாய்ப் பழகியிருந்தும் காலம் வந்தபொழுது எழுந்து வேலை செய்ய ஒருவனைக்கூடக் காணோம். வெகு அசங்கியமானதல்லவா இப்படி இருப்பது? அதற்குக் காரணம் பலவீனந்தானே. வேற்றரசர்களுடைய அரசாட்சியும், வர்ணாசிரமங்களுடைய கொடுமையும், முதுகெலும்பற்ற புழுக்களாக நம்மைச் செய்துவிட்டன. ஆகையால், "நான் ப்ரஹ்மம்" என்ற உபநிஷத்துக்களுடைய உபதேசத்தை நிலைநிறுத்துங்கள். இது முதலிய அபிப்பிராயங்கள் குகைகளிலேயும், காடுகளிலேயும், பள்ளிக்கூடங்களிலேயும், ஜட்ஜிகள், வக்கீல்கள் எல்லாரிடத்திலேயும், கோவிலிலேயும், குடிசையிலேயும், ஸ்திரீ புருஷர் யாவருக்கும் பரவும்படி செய்யுங்கள். இப்படியாக வேதாந்தத்தின் கோட்பாடுகளை அறிந்தார்களானால் சாதிகள் இருக்கும். ஆனால், அவைகளுடைய உரிமைகள் போய்விடும். ஏனெனில், ஜாதி என்பது சுயமாய் ஏற்பட்டது. ஆனால், உரிமைகளாகிய பசாசுக்கள் அப்படியல்ல. அரசனுக்கும் சக்கிலிக்கும் யாது பேதம்? அரசன் செருப்புகளைப் பழுது பார்க்க மாட்டான்; சக்கிலி அரசாட்சி செய்யமாட்டான். இவர்களில் உயர்ந்தவன் யார்? அவனவன் வேலையில் அவனவன் உயர்ந்தவன்தான். வேதாந்தத்தின் உபதேசமாவது யாவருக்கும் சமத்துவம் வேண்டுமென்பதும், ஒருவனுக்கு உரியது மற்றொருவனுக்கும் உரியதுதான் என்பதுமாம். செம்படவனுக்கு வேதாந்தத்தைக் கற்பித்தால், அவன் "உன்னைப்போல் நானும் மனிதனே; நான் செம்படவன்,

நீ தத்துவஞானி; அவ்வளவு தானே; உன்னிலுள்ள அதே கடவுள்தான் என்னிடத்திலு மிருக்கிறார்'' என்பான். அதுதான் நமக்கு வேண்டியது. ஒருவருக்கும் அதிகமான உரிமை கூடாது, எல்லோருக்கும் சமமா யிருக்கவேண்டும். ஒவ்வொருவனுக்கும் தன்னிடத்தில் தெய்வத் தன்மை இருக்கிறதென்று கற்பிக்கப்படட்டும். அவன், முக்தி யடையும் மார்க்கத்தைத் தானே தேடிக்கொள்வான். அபிவிர்த்திக்கு முதன்முதல் வேண்டியது சுவாதந்திரியமே.

"ஸ்திரீகளும் குழந்தைகளும் கடைத்தேறுவதற்கான மார்க்கத்தை நான் சாதித்துவிடுவேன்'' என்று உங்களில் யாரேனும் சொல்லத் துணிவது பிசகாம்; பல தடவையும் பிசகாம். "விதவைகளின் விஷயமாக உங்கள் அபிப்பிராய மென்ன? ஸ்திரீகளின் சுவாதந்திரிய விஷயத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்?'' என்று என்னை மீண்டும் மீண்டும் கேட்கின்றீர்கள். இதற்கு நான் கூறும் ஒரே பிரதி யுத்தர மென்னவெனில், "நீங்கள் என்னை இந்த அவலக்ஷணமான கேள்வி கேட்பதற்கு நான் என்ன ஸ்திரீயா?'' ஸ்திரீகளின் விஷயத்தைத் தீர்மானிப்பதற்கு நீங்கள் யார்? பிரதி ஸ்திரீயையும் பிரதி விதவையையும் ஆள்வதற்கு நீங்கள் சாக்ஷாத் பரமேசுவரனா? நீங்கள் இதை விட்டுவிட்டு அப்புறம் போங்கள். அவர்கள் தங்கள் காரியத்தைத் தாங்களே தீர்மானித்துக் கொள்வார்கள். என்ன புத்தியீனம்! யாருக்கேனும் ஏதாவது செய்ய

உங்களால் முடியுமென்று நினைக்க முயலும் கொடியர்காள்! இதை விட்டுப்போங்கள். தெய்வம் எல்லோரையும் பார்த்துக்கொள்ளும். 'எல்லாம் எங்களுக்குத் தெரியும்' என்று சர்வஞ்ஞத்துவம் வஹிப்பதற்கு நீங்கள் யார்? ஓ தெய்வ நிந்தகர்காள்! 'கடவுளையும் மீறிச் செல்ல வல்லோம்' என்று நினைக்க நீங்கள் எவ்வாறு துணிகின்றீர்கள்? ஒவ்வொரு ஆத்மாவும் கடவுளின் ஆத்மாவென்று உங்களுக்குத் தெரியாதா? ஓ தேவ நிந்தகர்காள்! உங்கள் கர்மத்தை நீங்கள் கவனியுங்கள். ஒரு சுமை கர்மம் உங்களுக்குள் இருந்துகொண்டு வேலை செய்கிறது. ஓ தேவ தூஷிகாள்! உங்கள் தேசத்தார் உங்களை உந்நத ஸ்தானத்தில் எடுத்து வைக்கக்கூடும்; உங்கள் ஜன சமூகத்தார் உங்களை ஆகாசத்தில் தூக்கிவைத்து உற்சாகப்படுத்தக்கூடும்; மூடர்கள் உங்களைப் புகழவுங்கூடும். ஆனால், அவன் உறங்குவதில்லை; அவன் உங்களைப் பிடித்துக்கொள்வான். பிறகு, இம்மையிலாவது மறுமையிலாவது தண்டனை நிச்சயம். ஆகையால், பிரதி மனிதனையும் ஸ்திரீயையும் கடவுளாகக் கருதுங்கள்! எவருக்கும் உதவிபுரிய உங்களாலாகாது. கைங்கரியம் செய்வதுதான் நீங்கள் செய்யக் கூடிய காரியம். கடவுளின் குழந்தைகளுக்குக் கைங்கரியம் புரியுங்கள்! கூடுமானால் கடவுளுக்கே கைங்கரியம் செய்யுங்கள். கடவுளின் குழந்தைகளுக்கு உதவி செய்யுமவ்வளவு கிருபை கடவுள் உங்களுக்குப் புரிவாராயின், நீங்கள் பாக்கியவான்களே. அகம்பாவம் கொள்ளவேண்டாம். அவரது குழந்தைகளுக்கு உதவி புரியும்படியான உரிமை உங்களுக்குக் கிடை

த்து அது மற்றவர்களுக்கு இல்லாமலிருப்பது உங்கள் பாக்கியமாகும். ஆகையால், இந்த வீண் பெருமையை விட்டுவிடுங்கள். இங்கே எவரும் உங்கள் உதவியை விரும்பி நிற்கவில்லை. பூஜை புரிந்தாலே அந்த உதவி யாகும். ஏழைகள் சில ரிருக்கிறார்கள். அவர்களைப் போய்ப் பூஜிப்பேன். அதனால் எனக்கு மோக்ஷமுண்டாகும். கடவுள் அங்கே இருக்கிறார். இதோ சிலர் துக்கப்படுகின்றவர்கள் இருக்கின்றனர். நானும் நீங்களும் கடைத்தேறும் பொருட்டுப் பகவானை ஆராதிப்பதற்காக அவர் துக்கானுபவிகள், குஷ்டரோகிகள், பாவிகள் ஆகிய இவ் வுருவங்களாய் வருகின்றமையால், நாம் அவ் வுருவங்களில் அவரைப் பூஜித்துக் கதி பெறுவோமாக!

இந்த என் வசனங்கள் தைரிய வசனங்களாகவே யிருக்கும். அவ்வளவு தைரியமாய் நான் ஏன் பேசுகின்றேனெனில், இக் கூறிய வுருவங்களில் நாம் கடவுளைக் கண்டு தொழும்படி கிடைத்தது நமது பாக்கியமென் றறியுங்கள். யாரேனும் ஒருவரை ஆளுவதனால் அவருக்கு நன்மை செய்யலா மென்னும் எண்ணத்தை விட்டுவிடுங்கள்! ஒரு செடிக்கு எவ்வளவு செய்யலாமோ அவ்வளவு தான் செய்ய முடியும். விதை போடலாம். அதற்கு வேண்டிய நிலம், நீர், காற்று ஆகிய இவைகளையும் அமைத்தும் வைக்கலாம். அது தன் இயற்கைப்படித் தனக்கு வேண்டியதை யெல்லாம் எடுத்துக்கொண்டு இசைத்துக்கொண்டு தன் இயற்கையாலேயே வளர்கின்றது. ஞானப் பிரகா

சத்தை உலகத்துக்கு நிறையக் 'கொண்டுவாருங்கள்! ஞானம்தான் வேண்டும். ஆகையால், அந்த ஞானத்தையே கொண்டுவாருங்கள்! ஒவ்வொருவருக்கும் ஞானமுண்டாகட்டும். ஒவ்வொருவரும் கடவுளை யடைகிறவரையில் இந்த வேலையை நிறுத்தவேண்டாம். ஏழைகளுக்கு ஞான வொளியை அளியுங்கள்! செல்வவான்களுக்கு அதை இன்னும் அதிகமாய் அளியுங்கள்! ஏழைகளைவிட அவர்களுக்குத்தான் அந்த ஞானம் அதிகமாய் வேண்டியிருக்கிறது. மூடர்களுக்கு" ஞானம் புகட்டுங்கள்! கற்றவர்க்கு இன்னும் அதிகமாய்ப் புகட்டுங்கள்! ஏனெனில், உங்கள் காலத்தில் ஏற்பட்ட இந்த அற்பப் படிப்பால் விளையும் வீண் கர்வம், அம்மம்ம, அசாத்தியமா யிருக்கிறது. இவ்வாறு எல்லோருக்கும் அறிவு புகட்டுங்கள்! மற்றதைக் கடவுளுக்கு விட்டுவிடுங்கள்! ஏனெனில், அந்தப் பகவானே சொல்லியிருக்கிறபடி "கர்மண்யே வாதிகாரஸ்தே மாபலேஷு கதாசந" "வேலை செய்ய உனக்கு அதிகாரமே யன்றி அதன் பயனுக்கு அதிகாரமில்லை." ஆகவே, உங்கள் கர்மங்களின் பலன் உங்களுக்கு வேண்டாம். ஆயினும், அதனால் நீங்கள் ஒருபோதும் கர்மம் செய்யாதிருக்க வேண்டாம். இத்தகைய கம்பீரமான கருத்துக்களை எவர் நமக்கும், முந்நாள் நம் முன்னோருக்கும், போதித்தாரோ, அந்தப் பரமபுருஷன் தமது ஆக்ஞைகளை நிறைவேற்றுவதற்கான பலத்தை நாம் பெறுமாறு நமக்குத் துணை புரிவாராக.

இந்தப் பிரசங்கத்துக்குப் பின் இதற்கு முன் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட 'பரதகண்டத்து மகான்கள்' என்ற பிரசங்கம் செய்யப்பட்டது. அதுவே மூன்றாவது பிரசங்கம். அது இரண்டாவது பிரசங்கமெனப் பிசகாக அச்சிடப்பட்டது. அதனை நேயர்கள் தயவு கூர்ந்து திருத்திக் கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றோம். நான்காவது பிரசங்கம் "நமக்கு முன் இருக்கும் வேலை" என்ற விஷயமாய்த் திருவல்லிக்கேணி 'லிடரரி சொஸைட்டி' என்ற கல்விச் சங்கத்தில் செய்யப்பட்டது. ஸ்வாமிகள் முதலில் இந்தச் சங்கத்தின் அங்கத்தினருடன் செய்த தர்க்கங்களே அவருடைய மகா சக்தி வெளிப்படுவதற்கும், அதன் விளைவாக அவர் அமெரிக்காவுக்குச் சென்று சிகாகோவில் இந்து மதத்தின் பிரதிநிதியாகப் பிரசங்கங்கள் புரிவதற்கும் ஹேதுபூதமாயின. இந்தப் பிரசங்கத்திலே, முற்காலத்தில் நம் தேசத்தில் ரிஷிகள் உண்டானது போல் இனியும் உண்டாவார்களென்றும், பூர்வ ரிஷிகளின் சந்ததியாராகிய நாம் நம் மத வுண்மைகளை உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவச் செய்யவேண்டுமென்றும், ஸ்வாமிகள் பேசிப் பின் வருமாறு பிரசங்கத்தை முடித்தார். "எல்லா சக்திகளும் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன. எதைச் செய்யவேண்டுமென்றாலும் உங்களா லாகுமென்பதை நம்புங்கள்! நீங்கள் பலவீனர்களென்று நம்பாதீர்கள். 'நம்மால் ஒன்றும் ஆகாது' என்று இப்போது அநேகர் நம்பியிருப்பதுபோல் நீங்கள் நம்ப வேண்டாம். எல்லா சக்தியும் உங்களுக்குள் இருப்பதால் நீங்கள் எழுந்து நின்று உங்களுக்குள் இருக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துங்கள்!"

# XI

## சென்னையில்
## கடைசி பிரசங்கம்
## "இந்தியாவின் எதிர்காலம்"

சுவாமிகளின் கடைசிப் பிரசங்கம் ஒரு பெரிய கூடாரத்திற் செய்யப்பட்டது. அதில் 4000 ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். அப்பொழுது சுவாமிகள் பின் வருமாறு பிரசங்கிக்கலுற்றார்:—

ஞானம் பிற நாடுகளில் வியாபிப்பதற்கு முன் அதற்கு உறைவிடமாயிருந்தது இத் தேசமே. இவ்விந்தியாவில் கடல் போன்ற நதிகள் ஓடுவது இந் நாட்டில் உதிக்கும் ஆத்ம ஞானத்தைக் குறிப்பிடுவதுபோ லிருக்கின்றது. இங்கன்றோ ஹிமாசலம் எப்பொழுதும் பனியால் மூடப்பட்டதாகி விண்ணுலகத்து ரகசியங்களை அறியப்புகுவது போற் படிப்படியாய் உயர்ந்து ஆகாயத்தை யளாவுகின்றது? இத் தேசத்திலன்றோ ஞானிகளிற் சிறந்தவர் வாழ்ந்தனர்? இங்கன்றோ 'மனிதன் எத்தகையவன்? பிரபஞ்சம் எத்தகையது?' என்ற விசாரங்கள் முதன் முதல் நிகழ்ந்தன? 'ஆத்மா நாசமற்றது, நியந்தாவாகிய கடவுள் ஒருவர் உளர், ஜகத்திலும் ஜீவனிலும் நிறைந்த கடவுள் அவரே' என்ற சித்தாந்தங்கள் இங்குத்தானே முதன்முதலிற் செய்யப்பட்டன. மதமும் தத்துவ விசாரமும் எட்டக்கூடிய தூரம்வரை எட்டினமை இங்குத்தானே? இத்தேசத்திலிருந்தன்றோ தத்துவஞானம் கடலி

னின்றும் எழும் அலைகளைப்போல் அந்ய தேசங்களுக்குப் பரவிற்று? இனிமேலும் இங்கிருந்துதான் மேற்கூறிய ஞானமானது தற்காலத்தில் மெலிந்து கிடக்கும் தேசங்களுக்குச் சென்று அத் தேசத்தவருக்கு வலிமை ஊட்டவேண்டும். அநேக வருஷங்களாய் அந்ய ராஜாக்களால் எதிர்க்கப்பட்டும், பற்பல ஆசாரங்களும் ஒழுக்கங்களும் இடையிடையிற் கிளம்பியும், இவைகளாற் சலியாமற் பர்வதம்போல் நாசமற்ற ஜீவத்துவம் பொருந்திய அந்த பாரதவர்ஷமன்றோ? இது சிலையைக் காட்டிலும் ஸ்திரமானதாய், அழியாத வீரியமுள்ளதாய் நாசமற்ற வாழ்வு பெற்றிருக்கும் நாடு இதுதானே? எவ்வாறு நாம் 'ஆத்மா ஆதியந்த மற்றது' என்று சொல்லுகிறோமோ, அப்படிப்பட்ட ஆதியந்த ரஹிதமும் அமிர்த சொரூபமானது மன்றோ இத் தேசத்தின் நிலையும்? அப்படிப்பட்ட தேசத்தின் பிள்ளைகளல்லவோ நாம்? ஓ பாரதவர்ஷத்தின் பிள்ளைகாள்! இப்பொழுது நடக்கவேண்டிய காரியங்கள் சிலவற்றைக் குறித்து நான் உங்களோடு பேசப் போகின்றேன். அந்த உத்தேசத்தைக் கொண்டுதான் முற்காலத்தில் நமக்கிருந்த பெருமையை இப்போது உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவந்தேன். 'பூர்வகாலப் பெருமைகளைப் பிரசங்கிப்பதால் க்ஷீணகதி யுண்டாகிறதேயன்றி வேறு பயன் ஒன்று மில்லை' எனப் பலகாலும் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அஃதுண்மையே. ஆனால், முற்காலத்தை யனுசரித்தன்றோ வருங்காலத்தின் உருவம் அமைகின்றது? ஆதலால், இதுகாறும் நமக்குக் கிடைத்

திருக்கும் எக்காலமும் வற்றாத நித்திய நிர்மலமான ஞான ஊற்றுக்களிலிருந்து பூர்ணமாய் அருந்துங்கள்! அருந்திய பின் எதிர் நோக்கிப் பாருங்கள்! முன்னேக்கிச் செல்லுங்கள்! சென்று பாரதவர்ஷத்தை முன்னிருந்ததைவிட அதிக பிரகாசமும் பெருமையும் உயர்வும் பொருந்தியதாகச் செய்யுங்கள்! நம முன்னேர்கள் பெரியோர்களே. அதை நாம் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். நம்மை உண்டாக்கின அம்சங்களின் தன்மையையும், நம் உடம்பின் நரப்புகளில் ஓடும் முன்னேர்களின் ரத்தத்தின் பெருமையையும், தெரிந்துகொண்டு, அந்த ரத்தத்திலும் அது முற்காலத்தில் செய்த அருஞ் செயல்களிலும் நம்பிக்கை வைத்து, முன்னிலும் உயர்ந்த ஒரு நவீன பாரதவர்ஷத்தை நாம் உண்டாக்க வேண்டும். நாம் நடுவாந்தரத்தில் க்ஷீண கதியை அடைந்தோமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அதனாலென்ன? அஃது அவசியமேயாம். மகா விருக்ஷங்கள் அழுகிய பழங்களைத் தருகின்றன; அப் பழத்தைப் பூமியிற் போடுகின்றோம்; அஃது அழுகி முளைக்கத் தலைப்படுகின்றது; அதனின் றுண்டாகும் மரம் முதல் மரத்தைத் தோற்கடிக்கக்கூடும்; ஆகையினால், நமது தூர்த்தசை நமக்கு ஆவசியகமேயாம். அதனின்றுதான் எதிர்காலத்திய பாரத வருஷம் புறப்படப்போகின்றது. அஃது இப்பொழுதே முளைத்து மூன்றிலை பாரித்திருக்கின்றது. 'ஊர்த்துவமூலம்' என்னப்பட்ட மகா விருக்ஷத்தை இப்போதே காணலாம். அதைக் குறித்துத்தான் இன்று நான் பேசப்போகின்றேன்.

இத் தேசத்தின் விஷயங்கள் மற்றெந்தத் தேசத்தி லிருப்பவைகளைப் பார்க்கிலும் வெகு சிக்கலானவை. இந்தத் தேசத்தில் ஆரியர்களும், திராவிடர்களும், தார்த்தாரி தேசஸ்தர்களும், துருக்கர்களும் மொகலாயர்களும் ஐரோப்பியர்களும், இன்னும் மற்றெல்லாத் தேசத்தவர்களும் வந்து விழுந்திருக்கின்றனர். பாஷைகளும், நடை யுடை பாவனைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாமல் அநேகம் இங்கே வெகு விசித்திரமாய்க் கலந்து நிற்கின்றன. இத் தேசத்தின் இரண்டு பிரிவினருக்குள் இருக்கும் பேதமோ ஐரோப்பியருக்கும் ஆசியா கண்டத்தினருக்கும் உள்ள பேதத்தையும் அதிக்கிரமிக்கும். அப்படி யிருந்தும் நமக்குப் பொது எதுவென்றால், நமது மதமே. ஐரோப்பா வில் இராஜாங்க விஷயம் ஜனங்களுக்குள் ஒற்றுமையை விளைவிக்கின்றது; ஆசியாவில், மதமே அவ்வாறு செய்கின்றது. ஆகையினால், இந்தியா க்ஷேம மடைவதற்கு முதலில் வேண்டியது யாதெனின், நாம் ஒரே மதத்தை அங்கீகரிப்பதேயாம். ஒரே மதம் என்பதனால் கிறிஸ்தவர்கள் மகம்மதியர்கள் பௌத்தர்கள் இவர்களைப்போல் நான் அபிப்பிராயப்பட்டவனல்லன். நம்மவர்களில் வெவ்வேறு சித்தாந்தங்களைப் பெற்றிருக்கும் பக்ஷத்தினர் யாவருக்கும் பொதுவாய் அங்கீகரிக்கத்தக்க விஷயங்கள் இருக்கின்றன வன்றோ? அவைகளை நான் குறிக்கின்றேன். இப்பொதுக் கோட்பாடுகளுக்கு உட்படாத விஷயங்களில் நமக்கு எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும் இருக்கலா மன்றோ? நாம் அவைகளுக்கு உட்பட்டு எப்படி நடந்து

கொண்டாலும் நடக்கலாமன்றோ? இதற்கு நமது மதம் இடங்கொடுக்கிறதல்லவா? இப் பொதுக் கோட்பாடுகளை ஸ்திரீ புருஷர்கள் பாலர்கள் ஒவ்வொருவருக்கும் புகட்டி அவர்களை உஜ்ஜீவிக்கும்படி செய்வது நமது முதன்மைக் கடனாகும். ஆசியாவில், அதிலும் இந்தியாவில், மதத்தைக் குறித்து நாம் வேலை செய்வோமாயின், ஜாதிகள் பாஷைகள் இவை முதலியவைகளினால் வரக்கூடிய இடையூறுகள் யாவும் ஒருங்கு சேர்க்கும் திறனுடைய மதாபிமானத்திற்கு முன் நில்லா வென்பது நமக்குத் தெரிந்த விஷயமே ஆகவே, இதுதான் நமக்கு முதல் ஆதாரம்; முதற்படி போன்றது. அத்துவைதிகள், விசிஷ்டாத்துவைதிகள், துவைதிகள், சைவர்கள், வைஷ்ணவர்கள்' பாசுபதர்கள் இன்னும் பிறரும் தங்க ளெல்லோருக்கும் பொதுவான அபிப்பிராயங்கள் உளவென்பதைக் கற்று நம்மவருடைய க்ஷேமத்தைக் கருதித் தங்களுக்குள் இருக்கும் அற்ப சச்சரவுகளை விட்டொழித்தல் வேண்டும்; அவைகள் தோஷமானவைக ளென்றும், சாஸ்திரங்களாற் கண்டிக்கப்பட்டவைக ளென்றும், நம் முன்னோருக்கு அசம்மதமான காரியங்க ளென்றும் அறியவேண்டும். அற்ப போராட்டங்களை விட்டொழித்தால் அதைத் தொடர்ந்தே மற்ற அபிவிர்த்தியும் வரும். இரத்தத்திற் பலம் இருந்தால் நோய்க்கு ஏதுவாகிய சில பிராணிகள் நமது தேகத்திற் பிழைத்திருக்க மாட்டா. நமக்கு ஞானமே ஜீவாதாரமான இரத்தமாகும்; அது தெளிவாயும் சுத்தமாயும் வீரிய முள்ளதாயும் இருக்குமேல், ராஜாங்கத்திலும் ஜனசாரத்திலும்

இன்னும் பல முக்கிய விஷயங்களிலும் நமக்கிருக்கும் குறைகள் எல்லாம் சீர்திருத்த மடையும். இதற்கு வைத்திய சாஸ்திரத்திலேயே உதாரணம் இருக்கின்றது. வியாதிக்குக் காரணமாகும் பிராணிகள் நிமிஷம் ஒன்றுக்கு லக்ஷம் லக்ஷமாய் நம்முடைய தேகத்திற் புகுந்து புகுந்து வெளிப்படுகின்றன. ஆயினும், நமது தேக தாருட்யம் குறைந்தாலொழிய அவைகள் தங்கி வியாதியை விளைப்பதற்குச் சக்தி யற்றவைகளாய் இருக்கின்றன.

ஒரு மனிதனுக்குப் போலவேயாம் ஒரு தேசத்தவர்க்கும். தேசமாகிய ஜனங்கத்தின் தேகத்தில் பலங் குன்றியக்கால் இராஜாங்க விஷயம், ஜனசாரம் வித்தியா விஷயம் இவைபோல்வன எல்லாவற்றிலும் வியாதியாற் பீடிக்கப் பட்டவர்க ளாகிறார்கள். ஆகையால், இந்த வியாதியின் வேரைக் களைந்து இரத்தத்தைப் பரிசுத்தம் பண்ணவேண்டும். அதை நமது மதத்தைக்கொண்டே பண்ணவேண்டும். அது சரியானதோ தவறானதோ என்பதைக் குறித்து நான் இப்போது விசாரிக்கப் போவதில்லை. நல்லதற்கோ கெட்டதற்கோ, அஃது உங்களுக்குச் சம்பவித்திருக்கிறது. அதை உங்களால் தள்ளிவிட முடியாது. தள்ளிவிட முயல்வீராகில் நாச மடைவீர்கள். ஏனெனில், மதமே நமக்குப் பிராணாதாரம். அதைப் பலப்படுத்தவேண்டும். பூர்வத்தில் நமது பெரியோர்கள் தங்கள் உயிர்களைத் துறந்தேனும் மதத்தைக் காப்பாற்றி வைத்ததனாலன்றோ இப்போது நாம் தலை நிமிர்ந்து நடக்கின்றோம்? மிலேச்சர்களால்

இடிக்கப்பட்ட கோயில்களின் கோபுரங்கள் மறுபடியும் உடனே எழுப்பப்பட்டனவே. தென்னிந்தியாவில் இருக்கும் சில தேவாலயங்களும், குஜராத்திற் சோமநாதர் கோயிலும் நம்முடைய சரித்திரத்தைப் புத்தகங்களை விட மிக்க யதார்த்தமாய் விளங்கும். பல தடவைகளில் இடித்து நிரவப்பட்டும் மீண்டும் கிளம்பின; இவ்வாலயங்கள் நமது தேசத்தாருடைய மனது போகும் வழியைக் காட்டுகின்றது. அந்த வழியே செல்வோமாயின் பெருமை அடைவோம். இல்லாவிடில் நிர்மூலமாய்ப் போய்விடுவோம். இதனால் ராஜாங்க ஜனாசாரச் சீர்திருத்தங்கள் நமக் கவசியமில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அவை யெல்லாம் இரண்டாம் பக்ஷமே.

நமக்கு மதமே முக்கியம். அதை நாம் பலப்படுத்த வேண்டும். அதை எவ்விதமாய்ச் செய்வதென்பதைக் குறித்து எனக்கிருக்கும் அபிப்பிராயத்தை உங்களுக்குத் தெரிவிக்கப்போகின்றேன். அவ் வபிப்பிராயங்கள் என் மனதில் வெகு நாளாய்க் குடிகொண் டிருந்தன. சென்னையிலிருந்து அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் போனது அந்தக் காரணத்தைப் பற்றியேயாம். மதவிஷயமாகக்கூடிய மகா சபைக்காக நான் போகவில்லை. நான் போவதற்கு அஃதோர் முகாந்திரமாகமாத்திரம் இருந்தது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், முதன்முதலில் நமது புஸ்தகங்களிலும், மடங்களிலும், ஆசிரமங்களிலும் புதைந்து கிடக்கும் ஞானத்தைப் பகிரங்கப்படுத்தவேண்

டும்; ஸாதாரண ஜனங்கள் பல்லோரும் அறியும்படி செய்ய வேண்டும். இப்போது அது மறைந்திருப்பதற்குக் காரணம் மறைக்கும் மனிதர்கள் மாத்திரமே அன்று. பழைய பாஷையாகிய ஸம்ஸ்கிருத பாஷையே பெருத்த கஷ்டத்தை உண்டுபண்ணுகிறது. ஆகையால், இதை வெல்லவேண்டுமானால் நமது சிறப்புப் பொருந்திய ஸம்ஸ்கிருத பாஷையை நம்மவர் எல்லோரும் படித்து வித்துவான்களாக வேண்டும். பிறந்தது முதல் ஸம்ஸ்கிருதம் படித்த எனக்கே ஒவ்வொரு புதிய புஸ்தகமும் புதியதாகவே இருக்கின்றதெனின், நன்றாய்ப் படியாதவர்களுக்கு அந்தப் பாஷை இன்னும் எவ்வளவு கஷ்டமாய் இராது? ஆகையினால், ஸம்ஸ்கிருத பாஷையை அபிவிர்த்தி செய்வதோடு, ஞானத்தை ஜனங்கள் வழங்கிவரும் பாஷையிலேயும் போதிக்க வேண்டும். ஸம்ஸ்கிருத பாஷையில் ஏதாவது சொல்லப்படுமேயானால் அது நமக்கு வெகு கண்ணியத்தையும், சிறப்பையும், பலத்தையும் கொடுக்கின்றது. இராமாநுஜர், சைதந்யர், கபீர் முதலிய பெரியோர் தாழ்ந்த ஜாதியர்களை உயரச் செய்ய முயன்றது அவர்கள் செய்த காரியங்களுள் வெகு அற்புதமானது. அப்படி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குப் பூரணமாய் இருந்தும், அவர்கள் மாண்ட நூறு வருஷத்திற்குள்ளாக அவர்கள் செய்த காரியங்கள் நிஷ்பலனாய்ப் போனதற்குக் காரணம் ஸம்ஸ்கிருத பாஷையை ஜனங்கள் விசேஷமாய்க் கற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யாமற் போனதேயாம். மேன்மை தங்கிய புத்த பகவானும் ஜனங்

கள் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்பதைத் தடுத்த வரையில் ஒரு தப்பிதம் செய்தவரே யாவர். அவர், சீக்கிரமாயும் அவசரமாயும் தம் வேலையை முடிக்க விரும்பித் தமது போதனையை அக்காலத்துப் பாஷையாகிய பாலியில் மொழி பெயர்த்தபோது அது வெகு நேர்த்தியாகத்தான் இருந்தது. ஜனங்கள் வழங்கும் பாஷையாகையால் அதை எல்லோரும அறிந்தனர். மேலும், அஃது அவருடைய அபிப்பிராயங்களை வெகு தூரத்துக்கு வெகு தூரம் பரவும்படி செய்தது. ஆனால், அதனுடனே ஸம்ஸ்கிருத பாஷையையும் விர்த்தி செய்திருக்க வேண்டும். ஜனங்களுக்கு ஞானம் வந்திருந்தும் அவர்கள் அந்தஸ்தில்லாம லிருந்தார்கள். கல்வி யன்றோ ஆபத்துக்களிற் சலியாமல் நிற்பது? கேவலம் ஞானத்தை மாத்திரம் ஜனங்களுக்குக் கொடுத்தால் அதில் உபயோக மில்லை; கல்விச் சிறப்பும் வேண்டும். நமக்குத் தெரிந்த தேசத்தவர் பலருக்கு அறிவு மிகுந்து இருந்தும், அவர்கள் புலிகள் போலவும் காட்டு மனிதர் போலவும் இருக்கின்றார்கள். அறிவும் நாகரிகமும் மேலோடேயே இருக்கின்றன. சுரண்டினால் உள்ளே இருக்கும் கொடுந் தன்மைகள் வெளியாகும். ஆகையால், ஜனங்களுக்கு அவரவர் பாஷைகளிற் போதிப்பது அவரவர்களுக்கு ஸமாசாரத்தைத் தெரிவிக்குமே யொழிய சாசுவதமான நன்மையை உண்டுபண்ணாது. ஆகையால், ஸம்ஸ்கிருதத்தை விருத்தி பண்ணவேண்டும். பண்ணினால் ஒரு புதிய ஜாதி உண்டாய் ஸம்ஸ்கிருத பாஷையின் உதவியைப் பெற்று, சீக்கிரத்தில் மற்றச் சாதிகளைப் பார்க்கிலும் உயர்

ந்து அவைகளை யாளும். ஓ கீழ்ப்பட்ட ஜாதியார்களே! உங்களை உயர்த்துகிறதும், உங்களுக்கு க்ஷேமகரமானதும எதுவென்றால் ஸம்ஸ்கிருத பாஷையைப் பயில்வதேயாம். உயர்ந்த வர்ணத்தாரை இகழ்ந்து பேசுவதும் எழுதுவதும் மனஸ்தாபங்களை விர்த்திபண்ணி, ஏற்கனவே பிரிவு பிரிவாய்க் கிடக்கும் நம்மை இன்னும் அநேகமாய்ப் பிரியும்படி செய்துவிடும். ஆகையால், உயர்ந்த வர்ணத்தாருடைய பலத்துக்குக் காரணமாயிருக்கும் அவருடைய படிப்பு ஏதொன்றுண்டோ அதைப் பெறுவீரேல் அதுதான் நீங்கள் விரும்புவதாகிய சமத்துவத்தை விளைவிக்கும்.

இந்தச் சென்னை இராஜதானியிலே ஒரு விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, இந்தப் பிராந்தியத்திலே, திராவிடர்கள் என்ற ஒரு ஜாதியார் இருந்தனர் என்றும், அவர்கள் வடக்கேயிருந்த ஆரியர்களிற் சேராதவர்கள் என்றும், இத் தென்னிந்தியாவில் இருக்கும் பிராமணர்கள் மாத்திரந்தான் வடக்கே இருந்த ஆரியர்களினின்றும் பிரிந்து வந்தவர்களென்றும், ஏனைய தென்னிந்திய மனிதர்கள் அவ்வாறு ஆரியரைச் சேர்ந்தவர் அல்லர் என்றும், பிராமணருக்கு முழுதும் வேறுபட்ட ஜாதியாரென்றும் சொல்லுகின்றனர், இது முழுவதும் ஆதாரமற்றது. ஏனெனில், வடதேசத்தாருக்கும் தென்தேசத்தாருக்கும் பாஷாபேதம் இருக்கிறதென்பதொன்றே தவிர வேறு என்ன பேதம் இருக்கிறது? இங்கே சில வடதிசையார் வந்திருக்கிறோம். நமது ஆங்கிலேய சிநேகிதர்கள்

இந்தக் கூட்டத்தில் வடதேசத்தாரையும் தென்தேசத்தாரையும் பகுக்க வல்லீரோ? இத்தேசத்துப் பிராமணர்கள் வடக்கேயிருந்து வந்தவர்களாயிற்றே. அவர்கள் ஸம்ஸ்கிருதத்தை மறந்தனரோ. ஏன் அவ்வாறே ஏனைய ஜாதியாரும் தங்கள் பாஷையை மறந்து திராவிட பாஷையைக் கற்றுக்கொண்டிருக்கக்கூடாது? இந்த நியாயம் இருதலைக் கொள்ளிபோல் இருதரத்தாருக்கும் பாதகமாகுமே. இவைகளை யெல்லாம் நம்பாதீர்கள். திராவிட ஜனங்கள் இருந்திருக்கலாம். அவர்களிற் காட்டிலும் மேட்டிலும் தப்பியிருக்கும் சிலர் போக மிகுந்தவர்கள் இங்கே கிடையார். அவர்களுடைய பாஷையை மாத்திரம் வைத்துக் கொண்டதாக இருக்கக்கூடும். ஆனால், எல்லாரும் வடக்கே இருந்துவந்த ஆரியர்களே. சில ஆங்கிலேயர்கள் சொல்வதென்னவெனில், சூத்திரர்கள் சுதேசிகள் என்றும், வெளியிலிருந்து வந்த ஆரியரால் அவர்கள் அடிமை கொள்ளப்பட்டார்களென்றும் சொல்லுகின்றனர். ஆரியர் எங்கிருந்து வந்தார்கள் என்றால், திபத்தின் மத்தியப் பிரதேசத்திலிருந்தென்று சிலரும், ஆசியாவின் மத்தியிலிருந்தென்று வேறு சிலரும், பூமியின் வடக்கு நுனியில் வசித்தார்களென்று நவீனமாய்ச் சிலரும், ஆரியர்கள் தங்களைப்போற் செம்பட்டை மயிர் உள்ளவர்களென்று சில வெள்ளைக்காரரும், கறுத்த ரோமங்களுடையராயிருந்தனர் என்று சிலரும், பலவாறாகப் பேசுகின்றனர். நம்முடைய சாஸ்திரங்களில் இவைகளுக்கெல்லாம் யாதோர் ஆதாரமும் கிடையாது. இந்தியாவுக்குப் புறம்பாக யாதோ

ரிடத்தையும் ஆரியர்களுக்கு இருப்பிடமாகச் சாஸ்திரங்கள் சொல்லவில்லை. முற்காலத்தில் இந்தியாவின் எல்லையில் ஆப்கானிஸ்தானமும் அடங்கியிருந்தது. இவ்வளவுதான் சொல்லக்கூடும். இதற்கு மேற்பட்டுக் கூறுவனவெல்லாம் அறிவற்றதும் நியாயமற்றதுமாகவே முடியும். மேலும், அமெரிக்கர்களும்-ஆங்கிலேயர்களும்-போர்த்துகல் தேசத்தார் முதலியவர்களும் எளிய ஆப்பிரிகா தேசத்தாரைப் பிடித்து அவர்களை அடிமைப்படுத்தி அவர்களிறந்தால் அவர்கள் சவத்தை எறிந்துவிடுவதும், அவர்களுடன் புணர்ந்து பிறந்த குழந்தைகளையும் வெகுகாலம் அடிமைப்படுத்தி வைத்திருப்பதுபோல், எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன் ஆரியர்களும் தாங்கள் போன ஊரிலிருந்த ஜனங்களை அவ்வாறே அடிமைப்படுத்தினர் என்று நினைக்கின்றனர். இந்த அசாத்தியம். இருபான்மையரான ஆரியர்களைப் பெரும்பான்மையராகிய அடிமை ஜனங்கள் ஐந்து நிமிஷத்தில் பக்ஷித்துவிட்டிருப்பார்களே. சரியான விஷயம் என்னவென்றால், மகாபாரதத்திற் சொல்லியிருப்பதுபோல, சத்தியயுக ஆரம்பத்திலே பிராமணஜாதி ஒன்றே இருந்தது. பிறகு, தொழில் பேதத்தினால் இப்போதிருக்கும் சாதி பேதங்கள் உண்டாயின. இதுதான் சரியாயும் நியாயம் பொருந்தினதாயும் இருக்கின்றது. வரப்போகிற ஸத்திய யுகத்திலேயும் எல்லா ஜாதிகளும் முன்னிருந்ததுபோல் ஆய்விடும். ஆகையால், இப்போது வர்ணாசிரமங்களைத் திருத்தும் விவாதம் எப்படி முடியும் என்றால், உயர்ந்த ஜாதியாரைத்

தாழ்மைப் படுத்துவதனாலன்று, தாழ்ந்த சாதியாரை உயரச்செய்வதனாலேயாம். பிரம்ம ஞானத்தை அடைந்தவனே பிராமணன்; அவனே மனித சிரேஷ்டன்; அப்படிப்பட்ட பிரம்ம ஞானிகளை உண்டாக்கும் பொருட்டுக் கீதாசாரியர் உபதேசஞ் செய்யவந்ததாகச் சங்கராசாரியர் தமது பாஷியத்தில் வற்புறுத்தி இருக்கின்றானன்றோ? இப்போது பிராமணர்கள் எவ்வளவு க்ஷீண கதியை யடைந்திருந்தும் அவர்களுக்குரிய சிறப்பை நாம் பாராட்ட வேண்டியவர்களாகவே யிருக்கிறோம். ஏனெனில், இதுகாறும் பிரம்ம வித்துக்கள் மற்ற ஜாதிகளில்விட அவர்களுடைய ஜாதியிலிருந்தன்றோ அதிகமாய் உண்டாயினர்? நாம் தைரியமாய் அவர்களுடைய குறைகளை யெடுத்துக் காட்டவேண்டும். ஆனால், அவர்களுக்குரிய பெருமையையும் அங்கீகரிக்க வேண்டும். ஆகையால், ஜாதி விஷயமாய், நேசர்காள்! போர் புரியாதீர்கள். இன்னும் நாம் பிரிந்துபோவதற்கு அஃது இடமாம். நாம் இன்னமும் க்ஷீணித்து விடுவோம். 'மரியாதைகள் தங்களுக்கே யுரியன' என்ற காலம் போய் விட்டது. அஃது ஆங்கிலேய அரசாட்சியின் ஒரு நன்மையாகும். மகம்மதிய ஆளுகையும் இந்த விஷயத்தில் நன்மையைச் செய்தது. வருந்தும் ஏழை ஜனங்களுக்கு அது க்ஷேமத்தை உண்டுபண்ணிற்று. ஆகையால், நம்மவர்களில் ஐந்திலொரு பாகத்தார் மகம்மதியர்களாய்விட்டனர். 'குத்துக்கும் வெட்டுக்கும் பயந்தே எல்லோரும் மகம்மதியர்களாய்விட்டார்கள்' என்று நினையாதீர்கள்! நீங்கள் ஜாக்கிரதைப்படாத பக்ஷத்தில் இச் சென்னையி லிருக்கும் ஜனங்க

ளிற் பாதிப்பெயர் கிறிஸ்தவராய்விடுவார்கள். நான் மலையாளச் சீமையிற் பார்த்ததைவிட அற்ப காரிய மிருக்குமோ? உயர்ந்த ஜாதியான் செல்லும் தெருவிற் பறையன் போதல் கூடாதாம். ஆனால், அப் பறையன் தன் பெயரை மாற்றி ஆங்கிலேய அல்லது துருக்கப் பெயர் பூண்டுகொள்வானாகில், அவ் வீதியிற் போகலாமாம். இதனால் மலையாளத்தார் வெறி பிடித்தவர்களென்று கொள்ளாமல் வேறெவ்வாறு அவர்களை மதிக்கக்கூடும்? இப்படிப்பட்ட துராசாரங்களை அநுசரிக்கும் அவர்களை மற்றைய இந்துதேசத்தில் ஞானமுள்ள வகுப்பினரெல்லோரும் இகழக்கடவர். தனக்கு உரிமையான குழந்தையாய் இருக்கும்போது அதைப் பட்டினி போடுவதும், அதுவே வேறொருவனுக்குச் சொந்தமானால் அதற்கு வெண்ணெ யூட்டி வளர்ப்பதும்போலிருக்கிறது. ஆகையால், ஜாதியைக்குறித்துச் சண்டை வேண்டாம். தாழ்ந்தஜாதியாரை உயர்த்தவேண்டும். உயர்ந்தவரைக் கீழே தள்ளக்கூடாது. இதுதான் நமது சாஸ்திரங்களுக்குச் சம்மதம். சாஸ்திரங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள அறிவில்லாதவர்கள் என்ன சொன்னாலும், சாஸ்திரத்திற் சொல்லியிருப்பதென்னவெனில், 'உயர்ந்த அந்தஸ்திற் பிராமணன் இருக்கிறான், தாழ்ந்த அந்தஸ்திற் சண்டாள னிருக்கிறான்' என்றும், 'இந்தச் சண்டாளனைப் பிராமணனாக ஆக்கவேண்டும்' என்றும், 'கொஞ்சம் கொஞ்சமாய்ச் சண்டாளர்க்குச் சிற்சில உரிமைகளைக் கொடுக்கவேண்டும்' என்றும், ஆகிய இவையெல்லாம்தான். 'சூத்திரன் வேதங்களைக் கேட்பானேயாகில் அவன் காதில்

நயத்தை யுருக்கிக் கொட்டு' என்றும், 'அவன் ஞாபகத்தில் வைத்திருந்தால் அவனை வெட்டிவிடு' என்றும், 'அடா பிராமணா' என்று சொல்வானாகில் 'அவன் நாக்கை யறுத்துவிடு' என்றும், இப்படியெல்லாம் எழுதி வைக்கின்ற புஸ்தகங்களும் இருக்கின்றன. இப்படிச் சொல்லத்தக்க பிசாசுகள் முற்காலத்தி லிருந்தன. சட்டம் ஏற்படுத்தினவர்களை நாம் தூஷிக்கலாகாது. அவர்கள், தாங்கள் கண்ட அநுஷ்டானங்களைப் புத்தகங்களில் வரைந்து வைத்தனர். ஆனால், பிறகு என்ன சொன்னார்களென்றால், 'சூத்திரனுக்கு உயர்ந்த விஷயங்களை உபதேசிக்க வேண்டாம்' என்றார்கள். இக் காலத்திற்கு அமையும் ஸ்மிருதிகளிலே, 'பிராமணன் செய்வதைச் சூத்திரனும் செய்வது அவனுக்குச் சிலாக்கியம்' என்று சொல்லப்படுகிறது. இப்படித்தான் போய்க்கொண்டிருக்கும். இவைகளை யெல்லாம் விவரமாய்ச் சொல்ல இப்போது நேரம் இல்லை. மொத்தமாய், என்ன செய்யவேண்டு மென்றால், எல்லாச் சாதிகளையும் உயர்த்தவேண்டும். அந்தச் சாதிகளோ அநேகம். அவர்களிற் சிலர் பிராமணர்களாகவேண்டுமென்று எத்தனிக்கிறார்கள். எந்தச் சாதியோராயினும் தாங்கள் பிராமணர்கள் என்று சொல்லிக்கொண்டால் தடுப்பவர் யாவர்? இப்போது சாதியொன்றினுக்குப் பதினாயிரம் ஜனங்கள் வீதம் அநேகம் ஜாதிகள் இருப்பதாய் வைத்துக்கொள்வோம். இவர்கள் ஒருங்கு சேர்ந்து 'நாங்கள் பிராமணர்கள்' என்றால், 'அல்லீர்' என்று மறுப்பவர் யார்? இதை நான் பிரத்யக்ஷமாய்க் காண்கிறேன். சில பகுதியார் பல

மடைந்து ஒரே சார்பாய் நிற்பார்களேயானால், அவர்களைத் தடுப்பவர் யாவர்? அவர்கள் மற்றவர்களுடைய ஸமாசாரங்களிற் பிரவேசிப்பதில்லை. சங்கராசாரியர் முதலிய பெரியோர்கள் ஜாதிகளை யேற்படுத்தினவர்கள். அவர்கள் செய்தனவெல்லாம் சொல்வேனாகில் நீங்கள் சிலர் என்மீது கோபம் கொள்வீர்கள். ஆனாலும், என்னுடைய யாத்திரைகளிலும், என் அனுபவத்திலும் ஏற்பட்டவரையில் அவர்கள் செய்த காரியங்களின் முடிவு வெகு விநோதமாகவே தோற்றுகின்றது. அவர்கள் கும்பல் கும்பலாய்ச் செனுச்சிஸ்தானம் தேசத்தாரைப் பிடித்து ஒரே நிமிஷத்தில் க்ஷத்திரியராக்கிவிடுவதும், வலையர் கூட்டத்தை ஒரே க்ஷணத்திற் பிராமணராக்கி விடுவதுமாகிய இவையெல்லாம் செய்தார்கள். ஆனால், அவர்கள் ரிஷிகளானபடியால் நாம் அவரை வணங்கக்கடவோம். நீங்களும் ரிஷிகளாகுங்கள்! அதுதான் சூக்ஷ்மம். ரிஷி என்றால் யார்? பரிசுத்தமானவனே. பரிசுத்தமின்றி ஒருவன் 'நான் ரிஷி' என்றால் ரிஷியாய்விடுவானா? நிஜமாய் ரிஷியாய்விட்டால் உங்களிடத்திலிருக்கும் ஏதோ ஒரு மகிமையினால் நீங்கள் சொல்லும் பிரகாரம் மற்றவர் நடப்பார்கள். உங்கள் அபிப்பிராயங்கள் அவர்களுக்கு அநிஷ்டமானவைகளானாலும் அவைகளுக்கு இணங்கி அவைகளை நிறைவேற்றிவிடுவார்கள். அப்படிப்பட்ட மகத்துவம் உங்களிடத்தி லிருக்கும். அதுதான் ரிஷித்தன்மை. இவையெல்லாமு எடுத்த விஷயத்தை விவரித்தவா றன்று; விவரம் தலைமுறை தலைமுறையாய் அப்போதைக் கப்போது ஏற்படவேண்டியது. இதனால்

என்ன ஏற்படுகிறதென்றால், இந்தச் சண்டைகள் கூடா வென்பதே. சாதிகளைக் குறித்த சச்சரவுகளே எனக்கு மிகவும் மன வருத்தத்தை உண்டுபண்ணுகின்றன. இரு தாத்தாருக்கும் அது நிஷ்பலம்; உயர்குலத்தாருக்கே, அதிலும் பிராமணர்களுக்கே முக்கியமாய் அது பயனற்ற தாகும். ஏனெனில், தங்களுக்கே சில மரியாதைகள் உரிய வை, ஏனையோருக்கு இல்லை என்று சொல்லும்படியான சுதந்திரத்திற்குக் காலம் போய்விட்டது. உயர் குலம் தன்னை அடக்கம் செய்யும்பொருட்டுத் தானே குழி வெட் டிக்கொண்டால் மிக்க நலம். மேலும், அப்படிச் செய்வது அதனுடைய கடமை யாகும்.

உயர் குலமானது அவ்வாறு செய்யத் தாமதஞ் செய் யுமாயின், அஃது அழுகிக் கோரமான மரணத்தை யடை யும். மற்றையாருடைய க்ஷேமத்தின்பொருட்டு முயலவே ண்டியவன் இந்தியாவிற் பிராமணனே யாவன். அதைச் செய்தால்தான் அவன் பிராமணன் ஆவான். அப்படிச் செய்யாமற் பணத்தைச் சம்பாதிப்பவன் பிராமணனல்லன். சரியான பிராமணனையும் பாத்திரவானையும் இருப்பவனுக் குக் கொடுப்பீராகில் மோக்ஷம் பெறுகிறீர்கள். "பாத்திர னல்லாதவனுக்குக் கொடுப்பவன் நரகத்தை யடைவான்" என்று சாஸ்திரம் சொல்லுகின்றதன்றோ? லௌகிக வியவ காரம் இல்லாதவனே பிராமணன்—லௌகிகம் இதர ஜாதி களுக்கே உரித்து. ஆகையால், வெகு காலமாய்த் தங்க ளுக்குச் சொந்தமான வித்வத்தைக் கொண்டு இதரர்களுக்

குப் போதிக்கும்படி பிராமணர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் பிராமணர்கள் என்பதை அவர்கள் கவனிக்கவேண்டியது. "பிராமணனுக்கு மரியாதைகள் ஏன் செய்யவேண்டுமென்றால், அவன் நற்குணங்களுக்கு நிதியாய் இருக்கின்றமையால்" என்று மனு சொல்லியிருக்கின்றார். அந்த நிதியைத் திறந்து யாவருக்கும் தானம் செய்யுங்கள்! இந்து தேசத்து இதர சாதியாரைவிட முன்பாக உலக வாழ்க்கையை யொழித்தவன் பிராமணன்தான். அவன் மேலான புருஷார்த்தத்தை யடைந்துவிட்டான் என்றால், ஏன் மற்ற ஜாதிகள் சோம்பல் கொண்டிருந்து அவனை மீறிப்போகும்படி விடுத்தனர்? ஆனால், இப்படி அதிகாரம் பெற்றும், அவ்வதிகாரத்தைத் துர்விநியோகம் செய்ப லாகாது. நன்மைக்கே உபயோகிக்க வேண்டும். தனக்குக் கிடைத்திருக்கும் படிப்பை மற்றவருக்கும் புகட்டவேண்டும் "சர்ப்பத்தாற் கடியுண்ட ஒருவன், மீண்டும் அச் சர்ப்பம் வந்து தன் விஷத்தை உறிஞ்சிவிட்டால், அவன் பிழைப்பான்" என்று பங்காளத்தில் ஒரு குருட்டு நம்பிக்கை உண்டு. அதுபோல், பிராமணனும் தானிட்ட விஷத்தைத் தானே உறிஞ்சிவிடவேண்டும். பிராமணரல்லாத மற்ற ஜாதியார்களை நோக்கி நான் சொல்வதாவது, நீங்கள் அவசரப்படக் கூடாது. பிராமணர்களோடு சண்டையிடக் கூடாது. 'ஞானமும் சம்ஸ்கிருதப் படிப்பும் சம்பாதித்துக் கொள்ளவேண்டாம்' என்று உங்களைத் தடுத்தவர்கள் யார்? அதைவிட்டு நீங்கள் வீடுகளிலேயும், பத்திரிகைகளிலேயும் போர் புரிவது துர்மார்க்கமும் பாபகரமுமாம்.

ஆகையால், இந்தத் தூஷணைகளை யெல்லாம் ஒழித்துவிட்டுப், பிராமணனுக்கிருக்கும் ஞானத்தைச் சம்பாதிப்பதில் உங்கள் சக்திகளை யெல்லாம் செலுத்துவீர்களாயின், உங்கள் காரியம் சித்திக்கும். நீங்கள் ஏன் ஸம்ஸ்கிருத பண்டிதர்களாகக் கூடாது? இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியார்களுக்கும் ஸம்ஸ்கிருதக் கல்வியைச் சொல்லி வைப்பதற்காக லக்ஷம்லக்ஷமாய் நீங்கள் ஏன் செலவிடக்கூடாது? எந்த க்ஷணம் ஸம்ஸ்கிருதம் கற்கின்றீர்களோ, அந்த க்ஷணமே பிராமணருக்கு ஸமானமாய் விடுகிறீர்கள்.

இந்தியாவில் ஸம்ஸ்கிருத பாஷைக்குத்தான் அதிகாரம் என்ற இரகசியத்தை யறியுங்கள்! அது உங்களுக்கு வரின், உங்கள் மேரில் ஒருவனாலும் குற்றம் சொல்ல முடியாது. மன வலிமையினால் ஒருவன் அநேகரை நடத்திக் கொண்டுபோகின்றான். "இவ்வுலகமே ஒன்றன் ஸங்கல்பத்தால் உளதாயிற்று" என்ற அத்துவைதிகளுடைய அபிப்பிராயத்தைப்போல், ஒரே அபிப்பிராயத்தை எல்லோரும் வகித்தால், அத்தனை பேரும் பலமுடையவராகின்றோம். 40 லக்ஷம் ஆங்கிலேயர், 300 லக்ஷம் இந்துக்களை எவ்வாறு அடக்கி ஆளுகின்றன ரெனின், அவர்கள் ஒருங்கு சேர்ந்து முயலுகின்றனர். நாம் தனித்தனியே நிற்கின்றோம். ஆகையினாலே, இனி இந்து தேசம் மேன்மையை யடையவேண்டுமாயின், நாமெல்லோரும் ஒருமித்து, ஒரே மனத்தராய் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இப்படிச் சொல்லும்போது அதர்வணவேத சம்ஹிதையிற் சொல்

லப்பட் டிருக்கின்ற சுருதி ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அஃதாவது,

ஸம்கச்சத்வம் ஸம்வதத்வம்
ஸம் வோ மநாம்ஸி ஜாநதாம் |
தேவா பாகம் யதா பூர்வே
ஸம்ஜாநாநா உபாஸதே |
ஸமாநோ மந்த்ர: ஸமிதி: ஸமாநீ
ஸமாநம் மந: ஸஹ சித்தமேஷாம் ||
ஸமாநம் மந்த்ரமபி மந்த்ரயே வ:
ஸமாநீ வ ஆகூதி:
ஸமாநா ஹ்ருதயாநி வ:
ஸமாநமஸ்து வோ மநோ |
யதா வ: ஸுஸஹாஸதி ||

“நீங்கள் எல்லோரும் ஒரே மனத்தையும் ஒரே எண்ணத்தையும் உடையவர்களாய் இருங்கள்! ஏனெனில், தேவர்கள் ஆதியில் ஒரே மனதுடையவர்களாய் இருந்தமையால் மனிதர்களாற் பூஜிக்கப்பட்டனர்” அப்படி இருப்பதே நமக்கு க்ஷேமகரமாகும். திராவிடர்கள் என்றும், ஆரியர்கள் என்றும், அந்நியரென்றும் இவ்வகைப்பட்ட அறிவற்ற சண்டைகளைத் தவிர்ந்தால் வருங்காலத்து பாரத வருஷம் மேன்மையை யடையும். சைன தேசத்தார் எல்லோரும் ஒரே மாதிரியாயும், ஜப்பான் தேசத்தார் எல்லோரும் ஒரே மாதிரியாயும் நினைக்கின்றார்கள். அதன் பிர

யோஜனம் உங்களுக்குத் தெரிந்தே இருக்கின்றது. சிறிய தேசத்தில் ஜனங்கள் சுலபமாய் ஒருமித்துப் போகின்றபடியால், அவர்கள் பெரிய தேசங்களையும் வென்று ஆளுகின்றனர். தேசம் பெரிதா யிருக்குமேயாயின், ஜனங்கள் தமக்குள் ஒழுங்கின்றி வெறுங் கூட்டமாய் நிற்கின்றார்கள். அவர்கள் ஒன்று கூடுவதில்லை. இந்தச் சண்டைகளெல்லாம் நின்றுபோக வேண்டும்.

நம்மிடத்தில் இன்னொரு குறைவும் இருக்கிறது. பல நூற்றாண்டுகளாகப் பிற நாட்டாருக்கு அடங்கி அடிமைத்தனத்தில் இருந்து வருவதால் நாம் ஸ்திரீகளைப்போல் ஆய்விட்டோம். இந்தத் தேசத்திலாவது, வேறெந்தத் தேசத்திலாவது மூன்று ஸ்திரீகள்கூட ஒரு 5 நிமிஷமாவது ஒற்றுமையாய்க் கூடியிருக்கமாட்டார்கள். உடனே சண்டை போடுவார்கள். ஐரோப்பிய தேசங்களிலே பெருத்த சபைகள் ஏற்படுத்தி ஸ்திரீகளின் வல்லமையைப்பற்றிப் பிரமாதமாய்ப் பிரசங்கிக்கின்றார்களே யன்றி, அவர்கள் சண்டை போடுவதை மாத்திரம் விடுவதில்லை. அதன் பிறகு ஒரு புருஷன் வந்து அவர்களை அடக்கிவிடுகின்றான். அவர்களை யடக்கி யாள இன்னும் ஒரு புருஷன் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது. உலக முழுவதும் அப்படியேதான் இருக்கிறது, நாம் இப்பொழுது அப்படி யாய்விட்டோம் கேவலம் ஸ்திரீகளாய்விட்டோம் நாம். ஸ்திரீகளை மற்றொரு ஸ்திரீ ஆளவந்தால், அவர்களெல்லாரும் உடனே அவளிடத்தில் குற்றங் கண்டுபிடிக்கத் தொடங்கி அவளைச்

டும்; ஸ்னைப் படுத்தி உட்கார்ந்துகொள்ளும்படி செய்து வேண்டும். அதுவே ஒரு புருஷன் வந்து அவர்களைச் ணாம ..மையாய் நடத்தி அப்போதைக்கப்போது கடுஞ் பல சொல்லி வருவானுனல், அது அவர்களுக்குச் ..ரியா யிருக்கின்றது, இப்படிப்பட்ட மாயா ஜாலத்தில் அகப்பட்டுக்கொள்வது அவர்களுக்கு சகஜமாய்விட்டது. இவ் வுலக முழுவதும் அப்படிப்பட்ட மாயா பந்தத்துக் குட்பட்டவர்களாலேயே நிறைந்திருக்கிறது. நாமும் அப்ப டித்தான் இருக்கின்றோம். நம்மவருள் ஒருவன் எழுந்து மேலான இடத்தை அடைய முயன்றால், அவனை நாமெல் லோரும் கீழே தள்ளிவைத்திருக்கப் பார்க்கின்றோம். அதுவே வெளி நாட்டார் வந்து நம்மை உதைத்தாலும் அது நமக்குப் பாந்தமா யிருக்கிறது. அது நமக்கு வழக்க மாய்ப் போய்விட்ட தல்லவா? அடிமைகள் பெரிய எஜ மான்க ளாகவேண்டும். ஆகவே, இந்த மோகத்தை விட்டு விடுங்கள்! இதுவே இனி உங்களுக்குப் பீஜ மந்திரமாய் இருக்கக்கடவது! இன்னும் 50 வருஷம் வரையிலும் இந்த மஹா மாத்ரு மூர்த்தியையே போற்றக் கடவீர்கள் மற்ற வீண் தேவதைக ளெல்லாம் ஒதுங்கி யிருக்கட்டும். நமது சுஜன சுதேச ஸ்வரூபமாயுள்ள இந்தக் கடவுள்தான் இப்பொழுது விழித்துக்கொண்டிருப்பது. எங்கும் தன் கைகளையும், எங்கும் தன் திருவடிகளையும், எங்கும் தன் செவிகளையும் உடையவரும்; சர்வ வியாபியும், விராட் சொரூபியுமாகிய இந்தக் கடவுளை விட்டுவிட்டு, அயலார்க ளின் வீண் தேவதைகளை ஏன் தொழப் போகின்றீர்கள்?

எங்கும் நிறைந்த இந்தக் கடவுளை நீங்கள் பூஜித்சது. சிறிய எல்லாத் தெய்வங்களையும் பூஜிக்கச் சக்தியுள் போகின்றகள். அரை மைல் நகருவதற்குச் சக்தி வராததற்று ஆனுனமே ஹனுமானைப்போல் கடலைக் கடக்கவேண்டு மென்கிறீர்கள். அது முடியவே முடியாது. ஒவ்வொருவனும் யோகியாய்ப் போய்விட வேண்டு மென்கிறான். தியானத்தில் அமர்ந்திருக்க வேண்டு மென்கிறான். இது சாயுமா? நாள் முழுவதும் உலக விவகாரங்களைச் செய்துகொண்டு கர்ம காண்டத்தில் அழுந்தி யிருந்துவிட்டுச், சாயங்காலத்தில் மூச்சை மூன்று தடவை இழுத்தால் ஆகாயத்திலிருந்து ரிஷிகள் குதித்துவிடுவார்களோ? இது என்ன கேலி விளையாட்டோ? இதைவிட வேறு ஆபாசமும் உண்டோ? இவை யெல்லாம் சிரிப்புக் கிடமாகும். சித்த சுத்தியும், தூய்மையான இருதயமும் முதன்முதலில் வேண்டியது. அதற்கு விராட் சொரூபத்தைப் பூஜிப்பதே உபாயமாகும். நம்மைச் சுற்றிலு முள்ள மனிதர்களும், மற்ற ஜீவ கோடிகளுமே அந்த விராட் சொரூபம். ஆகவே, அந்தச் சொரூபதைதப் போற்றுங்கள்! உங்களைச் சுற்றிலு முள்ள இந்த மனிதர்களும், பிராணிகோடிகளுமே உங்களுக்குத் தெய்வம். அதிலும் நீங்கள் முதன்மையாகப் பூஜிக்கவேண்டிய தெய்வம் உங்கள் சொந்த சுதேசஸ்தர்களே யாவர். ஆகையால், ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமைப்படாமலும், ஒருவருடனொருவர் சண்டை சச்சரவு செய்யாமலும் உங்கள் சுதேசஸ்தராகிய தெய்வத்தைப் பூஜியுங்கள்! அப்படிச் செய்யாமற்போன காரணத்தினால்தான் இப்

போது நாம் கஷ்டப்படுகின்றோம். அப்படியிருந்தும் நாம் இன்னும் கண் விழித்துக்கொள்ளாம லிருக்கின்றோம். இவ் விஷயம் மிகப் பெரியதானமையால் இதை எங்கே நிறுத்துகிறதென்று தெரியவில்லை. ஆகையால், சென்னையில் நான் செய்ய உத்தேசித்திருக்கிற காரியங்களைப்பற்றி உங்களுக்குச் சுருக்கமாய்த் தெரிவித்துவிட்டு இந்த உபந்யாசத்தை முடித்துவிடுகின்றேன்.

நமது தேசத்தாரின் வைதிக லௌகிகக் கல்விப் பயிற்சியை நமது வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த விஷயம் உங்கள் உணர்ச்சியில் நன்றாய் உறைக்கின்றதா? நீங்கள் கனவிலும், நனவிலும், கருத்திலும், பேச்சிலும், செய்கையிலும் இதையே எப்பொழுதும் நிறைவேற்றப் பார்க்க வேண்டும். அதுவரையில் நமக்கு விமோசன மில்லை. இப்போது உங்களுக்குக் கிடைக்கும் கல்வியில் சில நல்ல அம்சங்கள் இருப்பினும், கெடுதியே மேலிட்டிருப்பதால், உள்ள சில நல்ல அம்சங்களும் அந்தக் கெடுதியின் பாரத்தின் கீழ் அகப்பட்டுக்கொண்டு போய் விடுகின்றன. முதலில் அது உத்தம மனிதர்களை உண்டாக்கும் கல்வி யன்று. உள்ளதை அழிப்பதே அதன் முழு வேலையுமாம். நமக்கு அருமையா யுள்ளவற்றில் நம்பிக்கையைப் போக்கி நமக்கு நாசகரமாய் முடியும் படிப்பு மரணத்தினும் கொடிதாம். குழந்தை பள்ளிக்கூடத்துக்குப் போனவுடனே முதலாவது தன் தகப்பன் முட்டாள் என்றும், இரண்டாவது தன் பாட்டன் மூளைபுரண்ட

பைத்தியக்கார னென்றும், மூன்றுவது தன் குல குருக்கள் எல்லோரும் வேஷதாரிக ளென்றும், நான்காவது தன் வேதங்க ளெல்லாம் அபத்த மென்றும் கற்றுக் கொள்ளுகிறுன். இவ்வாறு படித்துப் பதினுறு வயதானுல், அவன் திடனற்று, உயிரற்று, யாவற்றையும் இல்லையென மறுக்கும் பிண்ட மாய்விடுகிறுன். ஆகையால், தான் இந்தக் கல்வி ஐம்பது வருஷகாலமாய்க் கற்பிக்கப்பட்டு வந்தும், இந்த மூன்று ராஜதானிகளிலும் சொந்த புத்தியுள்ள ஒருவன்கூட அதனுல் நமக்கு லபிக்கவில்லை. அப்படிப் பட்ட சொந்த புத்தியுள்ள சிலர் இருப்பாராயின், அவர்கள் வேறே படிப்பை வேறிடங்களினின்றும் கற்றும், அல்லது பழைய நாளைய குருகுலங்களுக்குச் சென்று மூட பக்திகளின் பற்றறப் பரிசுத்த மடைந்தும் அவ்வித மானுர்களே யன்றி இப்போது வழங்கும் கல்வியா லன்று. இஃதெல்லாம் படிப்பாகமாட்டாது. படிப்பென்றுல் சமாசாரங்களை மண்டையில் ஏற்றிவைப்பதன்று. குணத்தையும் சீலத்தையும் செவ்வைப்படுத்தி, ஆத்மோந்நதியையும் புருஷார்த்த லாபத்தையும் கைகூடச் செய்யவேண்டும். புத்தகசாலையிலுள்ள புத்தகங்களை யெல்லாம் நெட்டுருப்போட்டு மனப்பாடமாய் ஒப்பிக்கின்றவனைவிட ஐந்து அபிப்பிராயங்க ளாயினும் தாதாத்மியமாகப் பொருந்த வமைத்து அதற்குத் தக்கபடி தன் வாழ்க்கையையும் நடவடிக்கையையும் திருத்திக்கொள்பவனே மேலானவனுவான்.

யதா கரஶ்சந்தனபாரவாஹீ
பாரஸ்ய வேத்தா நது சந்தனஸ்ய

சந்தனக்கட்டைச் சுமையைச் சுமந்துகொண்டு போகும் கழுதை, சுமையை மாத்திரம் அறியுமேயன்றிச் சந்தனத்தின் அருமை பெருமைகளை அறியாதல்லவா? சமாசாரங்களை நிறைத்து வைப்பதே கல்வியாயின், புஸ்தகசாலைகளே இந்தப் பிரபஞ்சத்தில் மஹா ஞானிகளாயும், 'என்சைக்லொபீடியா'க்களென்கிற சகலகலாதரங்கிணிகளே மஹரிஷிகளாயும் கொள்ளலாமன்றோ? ஆகவே, நாம் லக்ஷியமாய் வைத்துக்கொள்ளவேண்டிய தென்னவெனில், வைதிகமும் லௌகிகமுமாகிய நமது தேசத்தின் கல்விப் பயிற்சி முழுவதையும் நம் கைவசமாக்கிக்கொண்டு, அதைக் கூடியவரையில் நமது தேசத்தின் பழக்க வழக்கங்களுக்கு இயைந்தவாறு நாமே செய்துகொள்ளல் வேண்டும். இது பெருத்த காரியந்தான் இது முடியுமோ முடியாதோ! ஆனால், காரியத்தை நாம் ஆரம்பிக்கவேண்டும். எப்படி யெனில், இந்தச் சென்னைப் பட்டணத்தை யெடுத்துக் கொள்வோம். இதில் ஓர் ஆலயம் ஏற்படுத்தவேண்டும். ஏனெனில், ஹிந்துக்களுக்கு மதமே எதற்கும் முதலில் வரவேண்டும். ஆனால், சகல வர்ணத்தாரும் அக் கோவில் விஷயமாய்த் தமக்குள் போராடுவார்களே யெனில், அவ்வாறு போரிடாவண்ணம் எல்லாக் குறிகளுள்ளும் உயர்ந்ததாகிய 'ஓம்' எனும் குறியை ஏற்படுத்தி, அந்தக் கோவிலை மதக் கக்ஷிகளுக்கு

அதிதயானதாகச் செய்வோம். "ஓம் என்ற குறியானது தகாது" என்று எந்த மதப் பிரிவினர் சொல்லுகின்றனரோ அவர்கள் இந்துக்களெனத் தம்மைச் சொல்லிக் கொள்வதற்கு அதிகார மற்றவ ராகின்றார்கள். எல்லோருமே இந்துக்க ளென்று சொல்லிக்கொள்ளப் பிரியப்படுவார்களாகையால், அந்த அந்தச் சமய பேதத்தார் தம்தம் சமயக்கொள்கைகளுக் கியைந்தவாறு அர்த்தம் செய்துகொள்ளும் உரிமை யுடையவர்களா யிருப்பர். ஆனால், ஆலயம் மாத்திரம் பொதுவா யிருக்கவேண்டும். உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் இஷ்ட தெய்வ விக்கிரகங்களை வேறிடங்களில் வைத்துக்கொள்ளலாம். ஆனால், இந்தப் பொது ஸ்தானத்தில் உங்கள் மத பேதங்களைப் பற்றிச் சண்டை போடவேண்டாம். இவ் வாலயத்தில் நமது சமயபேதங்களுக்குப் பொதுவாய் அமைந்துள்ள அம்சங்களெல்லாம் உபதேசிக்கப்படும். அதுமாத்திர மல்லாமல், நம் மதத்திலுள்ள வெவ்வேறு சம்பிரதாயஸ்தர்களும் இவ்விடத்தில் வந்து தத்தம் மதக் கொள்கைகளைத் தாராளமாய்ப் பிரசங்கிக்கலாம். மற்ற சம்பிரதாயஸ்தருடன் மாத்திரம் அவர்கள் சண்டை போடக்கூடாது. இந்த ஒரு நிர்ப்பந்தத்துக்குத்தான் அவர்கள் உட்படவேண்டும். ஒவ்வொருவரும் தாமாய்ச் சொல்ல விரும்புவதை எல்லோரும் கேட்பர். அது உலகத்துக்கும் வேண்டியிருக்கின்றது. ஆனால், 'பிறரைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?' என்பதைக் கேட்க இந்த உலகத்துக்கு அவகாசமில்லை. அதை உனக்குள்ளேயே வைத்துக்கொள். அது ஒருவருக்கும்

வேண்டியதில்லை. இரண்டாவது, ஆலயம் அமைப்பதுடன் உபாத்யாயர்களையும், உபந்நியாஸகர்களையும் பழக்குவதற்குப் பள்ளிக்கூடமும் ஏற்படுத்த வேண்டும். இந்தஉபாத்தியாயர்கள் வெளியேறி நமது ஜனங்களுக்கு மதபோதனை செய்து, லௌகிகப் படிப்பும் சொல்லிக்கொடுத்துக்கொண்டு போகவேண்டும். ஏற்கனவே நாம் மத விஷயமாய்ச் செய்துகொண் டிருந்ததுபோல், இவர்கள் வைதிகம் லௌகிகம் என்னும் இருவகைக் கல்வியையும் வீடுகள் தோறும் சென்று புகட்டவேண்டும். இதைச் சுலபமாகச் செய்யலாம். இதே மாதிரி இந்தியாவின் மற்ற இடங்களிலும் கிரமக்கிரமமாய் ஆலயங்களை யேற்படுத்தி உபாத்தியாயர்களையும் உபந்நியாசகர்களையும் பழக்கி யனுப்பவேண்டும். இதுதான் என் உத்தேசம். இது பிரமாதமெனத் தோன்றலாம். ஆனால், அதைச் செய்தாகவேண்டி யிருக்கிறது. இதற்கு வேண்டிய பணம் எங்கே யிருக்கிறதென்று கேட்பீர்கள். பணம் வேண்டியதில்லை. பணம் அற்ப விஷயம். அந்தது எனக்குத் திரணம் போலும். சென்ற பன்னிரண்டு வருஷங்களாக, 'நாளைக்குப் பிக்ஷை எங்கே கிடைக்கும்?' என்பதை அறியாதவனாகவே காலங் கழித்திருக்கிறேன். எனக்கு வேண்டிய பணமோ மற்றெதுவோ எல்லாம் வந்தே தீரவேண்டும். ஏனெனில், அவை எனக்கு அடிமையேயன்றி நான் அவைகளுக்கு வசப்பட்டவனல்லன். பணமும் மற்ற ஒவ்வொன்றும் வந்தே தீரவேண்டும் —வேண்டும், அதுதான் சரியான வார்த்தை. இதற்கு மனிதர்கள் எங்கே? அதுதான் இப்பொழுது நாம் யோசி

க்கவேண்டியது. இப்பொழுது நாம் எந்த ஸ்திதிக்கு வந்து விட்டோமென்பதைச் சற்று முன் உங்களுக்குச் சொன்னேன். ஆகவே, இக் காரியத்துக்கு வேண்டிய மனிதர்களெங்கே? சென்னையிலுள்ள சிறுவர்களே! உங்களையே நான் நம்பியிருக்கிறேன். உங்கள் தேசம் கூப்பிடும்போது நீங்கள் பதில் சொல்வீர்களா, மாட்டீர்களா? நான் சொல்வதைத் தைரியமாய் நம்புவீராகில் உங்களுக்குக் கீர்த்தியுண்டாகும். நான் சிறுவனா யிருந்தபோது என்னுடைய வல்லமையில் எனக்கு நம்பிக்கை யிருந்தது. அந்த நம்பிக்கையைக் கொண்டே நான் இப்பொழுது வேலை செய்து வருகிறேன். அப்படியே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களது வல்லமையில் நம்பிக்கை யுள்ளவர்களா யிருங்கள்! ஒவ்வொருவருடைய ஆத்மாவிலும் அநந்தமான சக்தி அடங்கியிருக்கிற தென்பதை நீங்கள் ஒவ்வொருவரும் நம்புங்கள்! அப்படிச் செய்வீராகில், நீங்கள் இந்தியா முழுவதையும் புனர்ஜன்மம் எடுக்கச் செய்வீர்கள். அதுமாத்திரமல்ல. பூமி முழுவதையும் வியாபித்து உங்களுடைய அபிப்பிராயங்களை மற்ற தேசத்தார்கள் செய்யும் காரியங்களிலும் புகும்படியாக இன்னும் 10 வருஷ காலத்திற் செய்து விடுவீர்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் போய் நாம் வேலை செய்யவேண்டும். இந்தியாவுக்கு உள்ளும் புறமுமான தேசங்களிற் போய் நாம் வேலை செய்ய வேண்டும். வேலை செய்தே தீர்வோம். அதுதான் சரி. அதற்காக எனக்கு இளப்பருவமுள்ள புருஷர்கள் வேண்டும். "பலசாலிகளாயும், தேகாரோக்ய முள்ளவர்களாயும்,

புத்திக்கூர்மையுள்ளவர்களாம், சிறுவர்களாயும் இருப்பவரே கடவுளை யடைவர்'' என்று சுருதிகள் முறையிடுகின்றன. உங்கள் வருங்கால நிலையை நிர்ணயிப்பதற்கிதுதான் தக்க சமயம். குன்றுத யௌவன பலத்தோடும், அலுத்துப் போகாத திடகாத்திரத்துடனும் கூடிய இந்தப் பருவத்தில்தான் நீங்கள் இதைப்பற்றித் தீர்மானிக்கவேண்டும். வேலை செய்வதற்கு இதுதான் தக்க சமயம். ஏனெனில், அன்றலர்ந்ததும், பிறர் தொடாததும், மோவாததுமான மலர்களே ஈசன் திருவடிகளில் சமர்ப்பிக்கத்தக்கவையாம். அவற்றையே அவர் திருவுள்ளம் பற்றுகிறார். ஆகவே, எழுந்திருங்கள்! சண்டை யிடுவதும், வக்கீல்களாவதும் ஆகிய இத்தகைய காரியங்களை விடப் பெருத்த காரியங்கள் செய்யவேண்டி யிருக்கின்றன. அவற்றை விடாமற் பற்றுங்கள்! உங்கள் தேசத்தின் நன்மைக்காகவும், மனித ஜாதியின் க்ஷேமத்திற்காகவும், உங்களது சுய பிரயோஜனங்களை இழப்பது இதைவிட எவ்வளவோ மேன்மையானது. நமக்கு ஆயுளோ சொற்பம். இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையில் என்ன இருக்கின்றது? இந்துக்களாகிய உங்களுக்கு ஆத்மா நித்திய மென்கிற நம்பிக்கை கூடவே பிறந்திருக்கிறது. சென்னையிலுள்ள வாலிபர் சிலர் என்னிடத்தில் சில சமயம் வந்து நாஸ்திகம் பேசுகிறதுண்டு. ஹிந்துக்கள் எப்பொழுதாயினும் நாஸ்திகர்களாகக்கூடுமென்று நான் நம்பமாட்டேன். சிலர், இங்கிலீஷ் புஸ்தகங்களைப் படித்து விட்டு நாஸ்திகர்களாய்விட்டதாக நம்பக்கூடும் ஆனால், அந்த நாஸ்திகம் 5 மாதத்துக்கு மேல் நீடிக்கிராது.

ஏனெனில், அது நமது சரீரத்தில் நிலைத்திராது. அது நமது ரத்தத்துடன் கலவாது. உங்கள் சுபாவத்தில் இல்லாததை நம்ப உங்களால் முடியாது. அதைச் செய்ய முயன்றாலும் உங்களால் முடியாமற் போகும். ஆகவே, அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் தலைப்படாதேயுங்கள்! நானும் சிறு வயதில் அப்படிச் செய்ய ஒருதரம் முயன்றேன். ஆனால், முடியாமற் போய்விட்டது. ஆயுள் அற்பமாயினும் ஆத்மா அநாதி நித்யமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். மரணம் யாவருக்கும் நிச்சயம். ஆகையால், ஒரு பெரு முயற்சியைத் தீர்க்காலோசனை பண்ணி அதனைச் சாதிக்கும் பொருட்டு நமது ஆயுளைச் செலவழிக்க வேண்டும். இதையே நமது சங்கற்பமாய் வைத்துக்கொண்டு நடப்போமாயின், நம்மை ரக்ஷிக்கும் பொருட்டு அடிக்கடி அவதரிப்பதாய் வாக்களித்திருக்கிற ஸ்ரீ கிருஷ்ணபகவான் நம்மை ஆசீர்வதித்து நம்முடைய கோரிக்கைகளை ஈடேற்றுவாராக!

---

ஸ்வாமிகள் சென்னையில் தங்கியிருந்த காலத்தில் ஒரு நாள் சென்னைபுரி அன்னதான சமாஜத்தாரால் சேர்க்கப்பட்ட சபை ஒன்றில் அக்கிராசனம் வகித்து ஒரு பிரசங்கம் செய்தார். அன்றையதினம் பேசினவர்களில் ஒருவர், மற்ற ஜாதியார்களைவிடப் பிராமணர்களையே உயர்ந்தவர்களாகக் கருதி அவர்களுக்கு விசேஷமாய்த் தான தருமங்கள் செய்வதைப் பலமாய்க் கண்டித்துப் பேசினார். ஸ்வாமிகள் அந்த அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டுப் பேசத்தொட

ங்கி, தேசத்திலுள்ள ஞான மெல்லாம் பிராமணர்களிடமே இருந்தபடியால், அவர்களைத் தான தருமங்களால் ஆதரித்தாலன்றித், தேசத்தின் க்ஷேமத்துக்கு ஊனம் வருமென்றும், ஆனால், எந்தத் தானத்தையும் பாத்திர மறிந்து செய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

---

## XII

ஸ்வாமிகள் பிறகு சென்னையை விட்டுக் கல்கத்தாவுக்குச் சென்று, பாபு நரேந்திரநாத சேன் முதலிய பிரமுகர்களால் வரவேற்கப் பெற்றார். சோபா பஜாரிலுள்ள ராஜா ஸ்ரீ ராதாகாந்த தேவபஹதூரின் மாளிகையிலே ஸ்வாமிகளுக்கு ஹிந்துக்களின் சார்பில் ஒரு வந்தனோபசார பத்திரிகை வாசிக்கப்பட்டது. அந்தப் பத்திரிகைக்கு உத்தரமாக மன வெழுச்சியை யுண்டாக்குமாறு ஸ்வாமிகள் வெகு வாக் சாதுர்யத்துடன் ஒரு பிரசங்கம் செய்தார். மார்ச்சுமீ 4௳ ஸ்டார் தியடர் ஹால் என்கிற மண்டபத்தில் "வேதாந்த சம்பூர்ண விளக்கம்" என்கிற ஒரு பிரசங்கம் செய்தார்.

ஸ்வாமிகள் கல்கத்தாவில் சிலநாள் தாமசித்திருந்து பிறகு தார்ஜிலிங்குச் சென்று, அங்கிருந்து லக்னௌக்கும், அப்புறம் ஆல்மோராவுக்கும் போனார். அவ்விடங்களிலெல்லாம் அவருக்கு மனப்பூர்வமான ராஜோபசாரங்கள் நடந்தன. ஸ்வாமிகளும் அதற்குத் தக்கவாறு பிரசங்கங்கள் செய்தார். பிறகு காஷ்மீரத்துக்குப் போய் ஜம்மு

நகரை யடைந்து, அங்கே ஹிந்தி பாஷையில் ஒரு பிரசங்கம் செய்தார். ஜம்முவிலிருந்து பஞ்சாபிலுள்ள சியால் கோட்டுக்குப்போய் இங்கிலீஷில் ஒரு பிரசங்கமும், ஹிந்தியில் ஒரு பிரசங்கமும் புரிந்தார். ஹிந்தி பிரசங்கம் பக்தியைப்பற்றியது. பிறகு, அவர் லாகோருக்குச் சென்றார். அங்கே சநாதன தர்ம சபையாரும், ஆர்ய சமாஜத்தாரும் ஸ்டேஷனிலே அவரை உள்ளன்புடன் உபசரித்துக் கழுத்திற் பூமாலை சாத்தி, வண்டியிலேற்றிக்கொண்டு, அப்பட்டணத்தின் அழகிய வீதிகளின் ஊடே ராஜாதியான சிங்கின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அந்தப் பழைய அரண்மனையின் அகன்ற வாசலில் 'நாம் செய்யவேண்டிய வேலை' என்பதைப்பற்றி ஒரு பிரசங்கமும், புரொபெஸர் போஹின் பெங்கால் சர்க்கஸ் பந்தலில் 'பக்தி' யைப்பற்றி ஒரு பிரசங்கமும் புரிந்தார். அவரது மூன்றாவது பிரசங்கம் மகா விஜய வைபவத்துடன்கூடி விளங்கியது. உபந்யாஸ விஷயம் 'வேதாந்தம்.' ஸ்வாமிகள் இரண்டு மணி நேரம் அத்வைத சித்தாந்தத்தைப்பற்றி அதிக கல்வித் திறமையுடன் சரமாரியாய்ப் பிரசங்கித்தார். பிறகு கல்கத்தாவுக்குத் திரும்பினார்.

கல்கத்தாவுக்கு வந்த பிறகு வேதாந்த மதத்தைப் பிரசங்கம் செய்வதற்காக 'ராமகிருஷ்ண - மிஷன்' என்ற சங்கத்தை ஏற்படுத்தி; பேலூர், மதாஸ், மாயாவதி என்னும் இடங்களில் மடங்களை ஸ்தாபித்தார். இவையன்றி, காசியிலும், கன்கல் என்ற இடத்திலும் பஞ்ச நிவிர்த்தி

வேலையும், சேவாசிரமங்களும்; மூர்ஷிதாபாத்து ஜில்லா வைச் சேர்ந்த 'பாவ்தா' என்கிற இடத்தில் அநாதசாலையமும் ஏற்படுத்தினர்.

## XIII

[ஸ்வாமிகள் மறுபடியும் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் செல்லுதல்—சான் பிரான்சிஸ்கோவில் வேதாந்த சங்க ஸ்தாபனம்—பாரிஸ் நகரத்தில் நடந்த பெருஞ் சபைக்குப் போதல்.]

இந்தியாவிலும் வெளியிலும் ஸ்வாமிகள் விராமமின்றிச் செய்த பாரமான அதிக வேலையினால் அவரது தேகம் துர்ப்பலமாய்ப் போய்விட்டது. தேகம் குணப்படுவதற்காகக் கடல் யாத்திரை செய்வது நலமென்று அவரது நண்பர்கள் சொல்லவே, அவர் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்றார். உடம்பு குணமானவுடன் சாந்த மகா சமுத்திரத்தின் கரையோரத்திலுள்ள ஊர்களில் வேதாந்த சம்பந்தமாய் உழைக்கத்தொடங்கி 'சான்ப்ரான்ஸிஸ்கோ' என்கிற பட்டணத்தில் 'வேதாந்த சங்கம்' ஒன்று ஸ்தாபித்தார். அப்பொழுது பிரான்சின் தலைநகராகிய பாரிஸ் பட்டணத்தில் கூடிய ஒரு பெருங் காட்சியில் மத சபையின் முன் பேசும்படி அக் காட்சித் தலைவர்கள் ஸ்வாமிகளை அழைத்தபடியால் அவரும் அதற் கிசைந்து பிரான்சு தேசத்துக்குப் புறப்பட்டுப் போனார்.

## XIV

[ஸ்வாமிகள் இந்தியாவுக்குத் திரும்புதல்—டக்காவுக்கு விஜயம் செய்தல்—சந்திரநாத் காமாக்கியும் என்னும் க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை—ஷில்லாங்குக்குச் செல்லுதல்—கல்கத்தாவுக்குத் திரும்புதல்—மஹா சமாதி.]

1900ஆம் வருஷத்தின் இறுதியில் ஸ்வாமிகள் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். அதிக வுழைப்பால் அவரது தேகாரோக்கியம் மறுபடியும் தவறிப்போயிற்று. ஆனால், அவர் வேலை செய்வதையெல்லாம் நிறுத்திவிட வேண்டியதாயிற்று. இவ்வாறு தேக ஸ்திதி குறைவாயிருக்கையிலேயே அவர் சில சிஷ்யர்களுடன் 1901ஆம் வருஷம் மார்ச்சுமீ 19௳ டக்காவுக்குச் சென்றார். அங்கே 2 பிரசங்கங்கள் செய்துவிட்டு; ஏப்ரல்மீ 6௳ சந்திரநாத், காமாக்ய மென்கிற க்ஷேத்திரங்களுக்கு யாத்திரையாகப் புறப்பட்டார். அங்கிருந்து ஷில்லாங்குக்குப் போய், அப்பொழுது ஆஸாம் சீப் கமிஷனராயிருந்த ஸர் ஹென்றி காட்டன் துரையவர்களால் எதிர்கொண்டழைத்து உபசரிக்கப் பெற்றார். அங்கே ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் அதிகமாய் நிறைந்திருந்த ஒரு சபையில் ஓர் உபந்யாசம் செய்துவிட்டுச் சிலநாள் அவ்வூரில் தங்கியிருந்து பிறகு கல்கத்தாவுக்குத் திரும்பிவந்தார். அவரது தேக ஸ்திதி வரவர குணமாகிக்கொண்டே வந்தது. சீக்கிரத்தில் அவர் எப்பொழுதும்போல் சுறுசுறுப்போடும் உற்சாகத்தோடும் தம் வேலையைச் செய்யத் தொடங்குவார் என்று அவரது

நண்பர்கள் நம்பி யிருக்கையில், திடீரென்று 1902ஹ ஜூலை மீ 4உ அவர் பேலூர் மடத்திலே மஹா சமாதியில் கலந்துவிட்டார். அப்பொழுது அவருக்கு வயது 39.

அன்று காலை அவர் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாகவே தியானத்தில் அமர்ந்திருந்தார். அன்று பாணினி முனிவர் அருளிய வியாகரண நூலில் சுமார் 3 மணி நேரம் பாடம் சொன்னார். உடம்பு குணமாகிக் கொண்டு வருவதாகவே அப்பொழுதும் சொன்னார். அன்று பிற்பகலில் சிறிது தூரம் உலாவினார். மாலையில் தாம் வழக்கமா யிருக்கும் அறைக்குட் சென்றார். பிரமசாரி யொருவன் அவருக்கு உபசாரம் செய்துகொண் டிருந்தான். அவர் ஜபமாலையை யெடுத்து ஜபம் செய்யத் தொடங்கிப், பிரமசாரியையும் அவ்வாறே அறைக்கு வெளியிற் சென்று ஜபம் செய்யும்படி பணித்தார். அவ்வாறு பணித்து 45 நிமிஷம் ஆனபிறகு அவர் மறுபடியும் பிரமசாரியை உள்ளே நுழைத்து விசிறும்படி சொல்லிவிட்டு நித்திரை செய்யலானார். சுமார் 9 மணிக்கு அவர் திடீரென்று திடுக்கிட்டெழுந்து இரண்டு நெடு மூச்சு வாங்கினார். கூடவிருந்த பிரமசாரிக்கு அது இன்னதென்று தெரியவில்லை. அந்த பிரமசாரி உடனே ஒரு வயது சென்ற சந்நியாசியை அழைக்க, அவர் வந்து கையைப் பிடித்துப் பார்க்கையில் நாடி பேசவில்லை.

முதலில் அது சமாதியா யிருக்கலாமென்று நினைத்து ஒரு சந்நியாசி அவரது செவியில் குருமஹாராஜாவின்

திருநாமத்தை ஓதினார். ஓதியும் உயிர் வராமலிருப்பதைக் கண்டு டாக்டரை வரவழைத்தார்கள். டாக்டர் தம்மாலான பிரயத்னமெல்லாம் செய்து உயிரைச் செயற்கையாய்ச் சிறிது நேரம் எழுப்பப் பார்த்தும் முடியவில்லை. அடுத்த நாள் ஸ்வாமிகளின் தேகமானது கங்காதீரத்தில், மடத்தைச் சேர்ந்த நிலத்தில் ஒரு வில்வமரத்தின் கீழ்த் தகனம் செய்யப்பட்டது.

ஸ்வாமிகளின் ஸந்ந்யாஸாச்ரமத்திற் கேற்ப, அவர் லோகோபகாரமாயும் நிஷ்காம்யமாயும் உழைத்துக் கடைசியில் யோகிகளுக்குக் கிடைக்கும் அநாயாசமான சுக நிர்யாண மடைந்ததைப்பற்றி நாம் பக்தி சிரத்தையுடன் அவரை வாழ்த்தவேண்டுமே யன்றி அவர் நம்மை விட்டுப் பிரிந்துபோனதைப்பற்றி விசாரப்படுவதில் பயனில்லை.

---

## XV

[ஸ்வாமிகளின் உபதேசம்—மதம் பாமர ஜனங்களுக்குள் பரவ வேண்டும்—நாம் வெளி நாடுகளுக்குச் சென்று விர்த்தியடைய வேண்டும்—பிரிந்து நிற்றல் க்ஷீண கதிக்குக் காரணம்—நாம் மேற்றிசையி லிருந்து யந்திரம், தொழில்முயற்சி முதலிய நாகரிகத்தைக் கற்று அவர்களுக்கு நம் மதத்தைப் போதிக்க வேண்டும்—ஹிந்து ஜாதியாரின் பிராணாதாரம் மதமே.]

நமது முன்னோர்களான மஹர்ஷிகள் நமக்கு வைத்து விட்டுப்போன மகா பாக்கியமாகிய சமய நெறியின் சிறந்த தத்துவங்களையே விவேகாநந்த ஸ்வாமிகள் தமது மேலான பிரசங்கங்களால் எல்லோருக்கும் திருப்பிக் கொடுத்தார்.

அவர் சென்னையில் செய்த 'இந்தியாவின் எதிர்காலம்' என்ற பிரசங்கத்திலே தம் கருத்தைப் பின் வருமாறு விளக்கினார்.—"என் அபிப்பிராயம் என்னவெனில், முதன் முதலில் நமது கிரந்தங்களிலும், மடங்களிலும், ஆசிரமங்களிலும் புதைந்து கிடக்கும் ஞானத்தைப் பகிரங்கப் படுத்தவேண்டும். பாமர ஜனங்கள் எல்லோரும் அதை யறியும்படி செய்யவேண்டும். இப்போது அது மறைந்திருப்பதற்குக் காரணம் அதை மறைத்திருக்கும் மனிதர்கள் மாத்திரமன்று; அனேக நூற்றாண்டுகளாய்த் தரு வேறியுள்ள பழைய பாஷையாகிய ஸம்ஸ்கிருதமேயாம். ஆகவே; ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் அதிலுள்ள அரிய ரஹஸ்யங்களை எல்லாம் வெளிப்படுத்தி இந்தியாவிலுள்ள பிரதி மனிதனுக்கும் அவற்றைப் பொது சொத்தாகச் செய்துவிட வேண்டுமென்பதே என் கருத்து".

இவ்வாறு எல்லோருக்கும் இந்த உண்மைகளை உபதேசிக்கவேண்டுமென்று அவர் முயன்றதினால் பிராமணரின் பெருமையைக் குறைக்கவேண்டுமென்று அவர் கருதியதாக நாம் கொள்ளக்கூடாது. பிராமணரல்லாத மற்ற ஜாதியாரை உயர்த்தவேண்டுமென்பதே அவர் கருத்து.

அவர் அத்துடன் நிற்காமல் நமது மதத்தை வெளி நாடுகளிலும் சென்று பிரசங்கிக்க வேண்டுமென்றும் சொன்னார். இளைஞர்களே இந்த வேலையில் அதிக அக்கறை கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்.

'உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதயத'

எழுமின், விழிமின், சிறந்தவரங்களைப் பெறுமின், அறிமின் என்றும், மாபைஷீ மாபைஷீ அதாவது அஞ்சேல், அஞ்சேல் என்றும் அவர் எப்பொழுதும் உபதேசித்து வந்தார். அவர் கல்கத்தாவிற் செய்த பிரசங்கத்தில் இந்தக் கருத்தை வெகு அழகாய் எடுத்து விளக்கியிருக்கிறார். அவர் சொன்னதாவது:—

"உயிர் இருப்பதற்கு அடையாளம் ஓங்கிப் பரவுவதே யாம். நாம் வெளி நாடுகளுக்குச் சென்று வியாபகமுற்று ஓங்கி வளர்ந்து நமக்குள்ள ஜீவகளையைக் காட்டவேண்டும். இல்லாவிடில் இருந்த இடத்திலேயே இருந்து வளர்ச்சி யின்றிக் குன்றிக் குறைந்து அழுகி நாற்றமெடுத்து அழியவேண்டியதேயன்றி வேறு வழி யில்லை. இவ் விரண்டில் எதையேனும் எடுத்துக் கொள்ளுங்கள்! இருந்தால் புகழுடன் ஓங்கிப் பரவி விளங்கவேண்டும்; இல்லாவிடில் அமிழ்ந்து போகவேண்டும். நமக்குள்ளேயே எத்தனையோ அற்பச் சண்டைகளும் சச்சரவுகளும் இருப்பது நமக்கெல்லோருக்கும் தெரிந்தே யிருக்கின்றது. உலக முழுவதும் இப்படித்தா னிருக்கிறது. நான் சொல்லுவதைக் கேளுங்கள்! உலகத்தில் ஸ்வதந்திர ஆளுகை பெற்றிருக்கும் மற்ற ஜாதியார்கள் வெளி தேசங்களின் விஷயமாய்ச் சில ராஜரீக முறைமைகளை அனுசரித்து வருகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் மிதமிஞ்சின உட்கலகங்கள் உண்டாய்விடுவதா யிருந்தால், தங்

கள் நாட்டுக்குப் புறத்தேயுள்ள பொதுவான ஒரு பகைவ னுடன் சண்டையிடத் தொடங்கிவிடுகிறார்கள். உடனே தங்கள் நாட்டின் உட்கலகம் நின்றுபோய் விடுகிறது. நமக் கோ உட்கலகங்கள் மாத்திரம் இருக்கின்றனவேயன்றி அதை யடக்குவதற்கு நமக்கு (Foreign Policy) என்ற வெளி நாட்டு விஷயமான முறைமை யொன்று மில்லை. ஆக வே, நாம் கைக்கொள்ளவேண்டிய வெளிநாட்டு முறைமை என்னவென்றால், நமது சாஸ்திர உண்மைகளை வெளி நாட்டா ரெல்லோருக்கும் பிரசங்கித்தலேயாம். இப்படி முயன்றால் நாம் ஒற்றுமையுள்ள ஜாதிக்கட் டுடையோ ராவோமென்பதற்கு உங்களுக்கு — ராஜரீக விஷயமான காரியங்களில் அக்கரை கொண்டுள்ள உங்களுக்குத்தான சொல்லுகிறேன். வேறு என்ன சாக்ஷியம் வேண்டியிருக கிறது? இங்குக் கூடியிருக்கும் சபையே இதற்குப் போதிய சாக்ஷியாம். இதுவன்றி, வேறு மேலான காரணங்களும இருக்கின்றன. இந்தியாவானது குறுகிப்போய், முத்துச் சிப்பியானது ஓட்டில் ஒளிந்துகொள்வதுபோல், தனது மேலான மத வுண்மைகளை அவற்றிற்காக விடாய்கொண் டிருக்கும் புற நாட்டாருக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டது. இதுவே நமது துர்பாக்கியத்துக்கும் க்ஷீண கதிக்கும் காரணம். ராஜாராம் மோஹனராய் தோன்றி இப்படி நாம் பிற தேசத்தாரி னின்றும் ஒதுங்கி யிருக்கும வழக்கமாகிய பெருஞ் சுவர்களைத் தகர்த்துத் தள்ளிச் சுறு சுறுப்புக் காட்டத் தலைப்பட்டது முதல்தான் நாம் உலகத தோடொப்ப அபிவிர்த்தி யடையத் தொடங்கி யிருக்கி

ரோம். அந்தக் காரியம் வரவர வேகமான கதியில் நடந்து கொண்டே வருகிறது. நமது சரித்திர சுபாவமே இப்பொழுது மாறிவிட்டது. முன சிற்றாறுகள் இருந்த விடத்தில் இப்பொழுது மகா நதிகள் இருகரையும் புரளப் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இதைத் தடுக்க எவராலும் ஆகாது. ஆகவே, நாம் இந்தக் கிணற்றுத் தவளையின் வாழ்க்கையை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும். ஆனால், கொடுத்தலும் பெறுதலுமல்லவோ உலக வாழ்க்கையின் மர்மம். நாம் எப்பொழுதும் மேற்றிசையாரின் காலடியண்டை உட்கார்ந்து ஒவ்வொன்றும் படித்துக்கொண்டுதான் இருக்க வேண்டுமோ? மத விஷயத்திலும் நாம் அவர்களிடத்திலிருந்தே கிரகிக்க வேண்டுமோ? இல்லை. நாம் அவர்களிடத்திலிருந்து யந்திர வேலைகளைக் கற்றுக்கொள்ளலாம்; இன்னும் பல்வேறு விஷயங்களையும் தெரிந்துகொள்ளலாம். ஆனால், நாமும் அவர்களுக்குச் சில கற்பிக்கவேண்டும். அதாவது, நம்முடைய மதமும் ஆத்மவித்தையுமேயாம். ஒரு பரிபூரண நாகரிகத்தைப் பெறும்பொருட்டு உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள ஞான பொக்கிஷம் வெளிப்படப் போகிறதென்று காத்திருக்கின்றது. நாமோ அதை ஒருவருக்கும் கொடுக்கக்கூடாதென்று கெட்டியாய்ப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் இங்கே ஒருவருடனொருவர் வாயாடிக்கொண்டும், சண்டையிட்டுக்கொண்டும், சிரித்துக்கொண்டும், புண்ய விஷயங்களைப் பரிகாசமும் கேலியும் செய்துகொண்டுமிருக்கிறோம். இப்படிப் பரிசுத்த விஷயங்களைப் பரிகாசம் செய்வதே

நமது ஜாதிக்கு ஒரு பெரும் துர்வழக்கமாய்விட்டது. நமது முன்னோர்கள் எவ்வளவோ பாடுபட்டு உலகோபகாரார்த்தமாய்ச் சேகரித்து வைத்த இந்த ஞானாமிர்தத்தின் ஒரு துளியாவது எப்பொழுது கிடைக்குமோவென்று நம் நாட்டுக்குப் புறம்பே யுள்ளவர்கள் நெஞ்சங் குழைந்து வருந்தி வரண்டுபோன நாக்குகளை நீட்டிக்கொண் டிருக்கிறார்களென்பது நமக்குக் கொஞ்சமேனும் தெரியாது. ஆகவே, நாம் வெளியே சென்று, பண்ட மாற்றுதல் செய்வது போல், நமது ஆத்ம ஞானத்தை யவர்களுக்கு உபதேசித்து, அவர்களிடத்திலுள்ள யந்திர வித்தையைக் கற்போம். சிதாகாசத்தின் சிறந்த அற்புதங்களை அவர்களுக்கு உபதேசித்து ஜடாகாசத்தின் அற்புதங்களை அவர்களிடத்திலிருந்து கற்போம். நாம் எப்போதும் சிஷ்யர்களாகவே இரோம். ஆசிரியர்களாகவும் ஆவோம். சமத்துவமின்றிச் சினேகத் தன்மை இருக்க முடியாது. ஒரு பகுதியார் எப்போதும் ஆசிரியர்களாகவும், ஒரு பகுதியார் எப்போதும் சிஷ்யர்களாகவுமே இருந்தால் சமத்துவம் எப்படி உண்டாகும்? ஆங்கிலேயனுடனும் அமெரிக்கனுடனும் சமத்துவமா யிருக்கவேண்டுமாயின், நீங்கள் அவர்களுக்குக் கற்பித்துக் கற்கவேண்டும். உலகத்துக்குக் கற்பிக்க வேண்டியிருக்கிற உங்களிடத்திலுள்ள ஆத்மஞானம் இன்னும் பல நூற்றாண்டுகளுக்குக் காணும். ஆகவே, இக்காரியத்தை நாம் செய்தாகவேண்டும். நெருப்பை யொத்த ஆர்வமுமே உற்சாகமும் நமது ரத்தத்தில் அமைந்திருக்க வேண்டும். வங்காளிகளாகிய நமக்குக் கல்பனா சக்தியும்

உணர்ச்சியும் அதிகமென்று சொல்வார்கள். அதை நான் நம்புகிறேன். நம்மை வெறும் கல்பனாசக்தியும் உணர்ச்சியு மாத்திரமுள்ள காரியசூர ரல்லாத கோழைகளென்று சொல்லுகிறவர் சொல்லிக்கொள்ளட்டும். ஆனால், கல்பனா சக்தியும் உணர்ச்சியு முள்ள ஹிருதயத்தில்தான் திரு வருள் விளங்கு மென்பதை அவர்கள் அறிந்திலர். ஆகை யால், கல்பனா சக்தியுள்ள வங்காளிகளே இக் காரியத் தைச் செய்யவேண்டும்.

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத

'விழிமின்! எழுமின்! எழுந்து வரங்களைப் பெறுமின்! அறிமின்!' என்று சுருதி முறையிடுகின்றது. ஆகவே, கல் கத்தாவிலுள்ள இளைஞர்களே! இதுவே தக்க தருண மாகையால், நீங்கள் உறக்கத்தை விட்டு விழித்தெழுந்து முயன்று, 'கருதிய எண்ணம் கைகூடினாலன்றி முயற்சி யை நிறுத்துவதில்லை' என்று பிரதிக்ஞை செய்துகொள் ளுங்கள்! ஏற்கனவே நமக்கு எல்லாம் அநுகூலமாய்க் கொண்டு வருகிறது. தைரியங்கொண்டு பயப்படாம லிருங் கள்! நமது வேத நூல்களில்தான் அபீ: அபீ: என்கிற லக்ஷணமானது பகவானைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கி றது. அபீ: என்றால் பயமற்றவ னென்று பொருள். ஆகவே, நாம் பயமற்றவர்களாகவேண்டும். அப்படி யாகு மிடத்து நமது காரியம் நிறைவேறுவது திண்ணம். ஆகை யால், விழிமின்! எழுமின்! உங்களிடத்திலிருந்து இந்தப் பெருத்த சுவார்த்த தியாகத்தை (தன்மறுப்பை) உங்கள்

தேசம் வேண்டி நிற்கின்றது. இளைஞர்தான் இக்காரியத்தைச் செய்யவேண்டும்.

எவர்கள் இளைஞர்களாயும், பலசாலிகளாயும், பராக்கிரம சாலிகளாயும், நல்ல தேகக்கட்டுள்ளவர்களாயும், புத்திசாலிகளாயும் இருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இந்த வேலை ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய இளைஞர்கள் இந்தக் கல்கத்தா நகரத்திலே நூற்றுக் கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் இருக்கிறார்கள். நீங்கள் சொல்வதுபோல் நான் ஏதோ சிறிது செய்திருந்தாலும், நான் முன் கல்கத்தாவின் வீதிகளில் விளையாடித் திரிந்து கொண்டிருந்த அந்த உபயோகமற்ற பையனே என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்! அப்பேர்ப்பட்ட நான்கூட அவ்வளவு செய்திருக்க, நீங்கள் இன்னும் எவ்வளவு செய்யக்கூடாது? ஆகவே, விழித்துக்கொள்ளுங்கள்! எழுந்திருங்கள்! உலகம் உங்களை கூவியழைக்கின்றது. இந்தியாவின் மற்றப் பாகங்களிலே அறிவும் செல்வமும் இருக்கின்றன. ஆனால், உற்சாக மென்பது என் ஜன்ம பூமியாகிய வங்காள நாட்டில்தான் உள்ளது. அந்த உற்சாகம் தான் இப்பொழுது வெளிக்கிளம்பவேண்டும். ஆகையால், கல்கத்தாவிலுள்ள இளைஞர்களே! இந்த உற்சாகத்தை உங்கள் இரத்தத்தில் பொருந்தப் பொருத்தி எழுந்திருங்கள்! 'நாங்கள் ஏழைகளல்லவா? எங்களுக்கு யார் சகாயம் செய்வார்கள்?' என்று யோசிக்கவேண்டாம், பணமா மனிதனைச் சம்பாதிக்கிறது. மனிதனல்லவோ எப்பொழுதும்

பணத்தைச் சம்பாதிக்கிறான். மனிதனது பராக்கிரம சக்தியாலும், உற்சாக சக்தியாலும், விசுவாச சக்தியாலுமன்றோ உலகம் முழுவதும் ஏற்பட்டு நிலைத்திருக்கிறது? உபநிஷத்துக்களி லெல்லாம் மிக்க அழகுள்ளதெனப் பிரசித்தி பெற்ற கடோபநிஷத்தைப் படித்தவர்களுக்கு இது நன்றாய் ஞாபக மிருக்கும். எப்படியெனில், ஒரு ரிஷியானவர் ஒரு பெரிய வேள்வி செய்யத் தொடங்கி, அதில் தமக்கு உபயோகமாயுள்ள யாதொன்றையும் தானம் செய்யாமல் தனக்குப் பிரயோஜனமற்ற பசுக்களையும் குதிரைகளையும் தானம் செய்தார். அப்பொழுது ரிஷி குமாரனாகிய நசிகேதஸின் மனத்தில் சிரத்தை புகுந்ததாம். இந்த சிரத்தை (ஶ்ரத்தா) என்ற சொல்லை நான் மொழிபெயர்த்துச் சொல்லேன். அப்படிச் செய்வது குற்றமாகும். இச் சொல் மகா அற்புதமான சொல்லாகும். வேறு பாஷையில் அதன் கருத்தை யெல்லாம் அடக்கிக் காட்டும்படியான பதத்தால் அதைச் சொல்வது கஷ்டம். இந்த சிரத்தை நசிகேதஸின் நெஞ்சத்தில் புகுந்தவுடனே அவன் தனக்குள்ளேயே, 'நான் பலருக்கு மேற்பட்டவன், சிலருக்கே கீழ்ப்பட்டவன், நானும் ஏதோ சிறிது செய்யக்கூடும்' என்று சொல்லிக்கொண்டான். இப்படி அவனது தைரியம் அதிகமாகவே, அவன் மரணத்தின் மர்மம் என்னவென்று தெரிந்துகொள்ளத் தலைப்பட்டான். இந்த மர்மத்தை விடுவிக்கக் கூடியவன் யமதர்மராஜனே யாகையால், இந்தச் சிறுவன் யமனிடம் சென்றான். அங்கே அந்தச் சிறு தைரியசாலியாகிய நசிகேதஸ் யமாலயத்தில் மூன்று நாள்

காத்திருந்தான். பிறகு, அவனுக்கு யமன் பிரத்யக்ஷமாகி, அவனது சந்தேகங்களை யெல்லாம் தீர்த்துப் பிரம்ம வித்தையை உபதேசித்த சங்கதி உங்களுக்குத் தெரிந்தே யிருக்கிறது. நமக்கு இப்பொழுது வேண்டியது அந்த சிரத்தையேயாம். நமது துரதிஷ்டத்தின் மகிமையால் அந்த சிரத்தையானது இந்தியாவை விட்டு அநேகமாய் ஒழிந்துபோய்விட்டது. அதனால்தான் நாம் இந்த இழிந்த நிலைக்கு வந்திருக்கிறோம். இந்த சிரத்தை யிருப்பதாலும் இல்லாமையாலும் உண்டாகும் வேற்றுமைதான் ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் உள்ள வேற்றுமைக்குக் காரணம். ஒருவன் உயர்ந்தவனாகவும், மற்றவன் இழிந்தவனாகவும் இருக்கக் காரண மென்ன? இந்த சிரத்தைதான். "தன்னைத் துர்ப்பல முள்ளவனென்று நினைத்துக்கொள்ளுகிறவன் துர்ப்பல முள்ளவனாகவே ஆய்விடுவான்" என்று என் குரு மஹாராஜா சொல்வார். அது உண்மையே. ஆகவே, இந்த சிரத்தை உங்கள் உள்ளங்களிற் புகவேண்டும். மேற்றிசையாருக்குள் இக லோக ஐசுவரிய சம்பந்தமாய் என்ன என்ன காணப்படு கின்றனவோ அவை யெல்லாம் இந்த சிரத்தையின் விளை வென்றே அறியத்தக்கது. ஏனெனில், அவர்களுக்குத் தங்கள் தோள் வலியில் நம்பிக்கை யுண்டு. உங்களுக்கும் உங்கள் ஆத்ம பலத்தில் நம்பிக்கை யிருக்குமாயின், அத னால் இன்னும் எவ்வளவு காரியம் ஆகாது? ஆகையால், அகண்ட ஆத்மாவிலும் அகண்ட சக்தியிலும் நம்புங்கள்! அந்த ஆத்மாவைப்பற்றி உபதேசிக்கும் நூல்களும் பெரி

யோர்களும் உங்களுக்குள்ளேயே இருக்கிறார்களென்பதை யெல்லோரும் நிர்விவாதமாய் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எதனாலும் அழிக்க முடியாத ஆத்மாவினிடத்தில் அகண்ட சத்தி அடங்கி யிருக்கிறது. அதை எந்தச் சமயத்தில் வெளிப்படுத்த முயன்றாலும் வெளியே வரக் காத்துக்கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தில்தான் இந்தியாவின் வேதாந்தத்துக்கும் மற்றத் தேசங்களின் தத்துவ சாஸ்திரங்களுக்கும் பெரிய வேற்றுமையுள்ளது த்வைதமாயினும், விசிஷ்டாத்வைதமாயினும், அத்வைதமாயினும், இந்த எல்லா வேதாந்தங்களும் ஆத்மாவினிடத்திலேயே எல்லா சக்திகளும் அடங்கி யிருக்கின்றன என்று உறுதியாய் நம்புகின்றன என்று உறுதியாய் நம்புகின்றன. அந்தச் சக்திகளை வெளிப்படுத்துதற்குச் சிரத்தை வேண்டும். சிரத்தையாவது நம்பிக்கை. நம்மிடத்திலேயே நமக்கு இந்த சிரத்தை, அல்லது நம்பிக்கை யென்பது வெகு குறைவா யிருக்கிறது. ஆகவே, இந்த சிரத்தையின்மையை யொழிக்க நாம் முயலவேண்டும். பலமும் சிரத்தையும் மேற்கொண்டு புறப்படுங்கள்! மற்றவையெல்லாம் தானாய் வரும். நான் ஒரு காரியமும் இன்னும் செய்யவில்லை. நீங்கள்தான் இந்த வேலையைச் செய்ய வேண்டும். நாளைக்கு நான் இறந்தாலும் இந்த வேலை அழியாது. இன்னும் எத்தனையோ ஆயிரம் பேர் இந்த வேலையைச் செய்ய முன் வருவார்கள். என் தேசத்திலும் முக்கியமாய் என் தேசத்தின் இளைஞர்களிடத்திலும் எனக்கு அவ்வளவு நம்பிக்கை யிருக்கின்றது. வங்காளத்து

இளைஞர்களுக்கே எல்லாவற்றையும் விடப் பாரமான வேலை ஏற்பட்டிருக்கிறது. சென்ற 10வருஷ காலமாக இந்தியா முழுவதும் நான் சுற்றிப் பிரயாணம் செய்து பார்த்ததில், இந்தியாவை மீண்டும் அதற்குரிய ஆத்தியாத்ம உந்நத ஸ்தானத்துக்கு உயர்த்தக் கூடியவர்கள் வங்காள நாட்டு இளைஞர்களே யென்கிற நம்பிக்கை என் மனத்தில் உறுதியாய்ப் பதிந்துவிட்டது. அது மாத்திரமன்று. உற்சாக சக்தி நிறைந்த இந்த வங்காள நாட்டுச் சிறுவர்களுக்குள்ளிருந்துதான் வீர புருஷர்கள் தோன்றி, இப் பூமண்டலத்தின் எல்லாத் திசைகளுக்கும் சென்று, நமது முன்னோர்கள் குலதனமாய்ப் போற்றிவந்த சாசுவத தத்துவங்களைப் பிரசங்கிக்கப்போகிறார்கள். ஆகவே, 'எழுமின்! விழிமின்! எண்ணிய எண்ணம் கைகூடும் வரை சலியாது உழைமின்!' என்ற உபநிஷத் வாக்கியத்தை உங்களுக்கு மீண்டும் ஞாபகப்படுத்தி இந்த உபந்யாசத்தை முடிக்கின்றேன். நீங்கள் பயப்படவேண்டாம். ஏனெனில், பெருத்த அதிகாரமெல்லாம் எப்பொழுதும் பிரஜைகளுக்கே யுள்ளது. சாதாரண ஜனங்களுக்குள்ளிருந்துதான் உலகத்தின் மகா மேதாவிகளெல்லாம் தோன்றியிருக்கின்றனர். முன் நடந்ததுதானே பின்னும் நடக்கும், எதற்கும் அஞ்சவேண்டாம். நீங்கள் அத்புதமான காரியங்களைச் செய்வீர்கள். நீங்கள் பயப்பட்டீர்களோ, ஒன்றுக்கும் உதவாமற் போவீர்கள். உலகத்திலுள்ள பெருந் துக்கத்துக்கெல்லாம் காரணம் பயந்தான். பயந்தான் மூடபக்திகளுக்கெல்லாம் பெரிய மூடபக்தி. பயந்தான்

நமது துன்பங்களுக்கெல்லாம் காரணம். நிர்பயத்தன்மையால் சுவர்க்கமும் ஒரு நிமிஷத்திற் கைகூடும். ஆகையால், "எழுமின்! விழிமின்! எண்ணிய எண்ணம் கைகூடும் வரை சலியாது உழைமின்!"

இந்தியாவினிடத்தில் அபரிமிதமான அன்பெனும் தீயால் எரிந்துகொண்டிருந்த நமது ஸ்வாமிகள் ஜனங்களின் நிலைமையை உயர்த்தி அவர்களுக்குள் தேசக் கட்டுணர்ச்சியை உண்டாக்குவதற்கு மதத்தின் மூலமாய் முயன்ருர்; கல்கத்தாவில் செய்த பிரசங்கமொன்றில் இவ்விஷயத்தைப்பற்றி அவர் தமது அபிப்பிராயத்தை வெகு தெளிவாய் விளக்கிஞர். அது வருமாறு:—

"ஒவ்வொரு தேச ஜனமும் தத்தம் காரியங்களை நடத்துவதற்கு ஒரு சிறப்பு வகையான மார்க்கம் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். சிலர் ராஜரீக விஷயங்களின் மூலமாகவும், மற்றும் சிலர் வேறு விதமாகவும் வேலை செய்கின்றனர். நமக்கு அப்படிப்பட்ட ஆதாரம் மதமேயாகையால் அதன் மூலமாய்த்தான் நாம் நமது காரியங்களை நடத்தவேண்டும். ஆங்கிலேயனுக்கு மதத்தைப் போதிக்க வேண்டுமாஞல் ராஜ்ய தந்திர விவகாரங்களின் மூலவாகவே பிரசங்கிக்க வேண்டும். அமெரிக்கர்களுக்குச் சங்கச் சீர்திருத்த விவகாரங்களின் வழியாக மதத்தைப் போதித்தால்தான் அவர்களுக்கு விளங்கும். ஹிந்துக்களுக்கோ ராஜதந்திர விஷயங்கள் கூட மதசம்பந்தமாய்ச் சொன்ஞல்தான் ஏறும்; சங்கச் சீர்திருத்தமும் மதத்தின் மூலமாய்த்

தான் வரவேண்டும். எந்தச் சங்கதியும் நமக்கு மதத்தின் மூலமாகவே வரவேண்டும். ஏனெனில், இந்த மதமே நமது ஜனங்க வாழ்க்கையாகிய சங்கீதத்தில் பல்லவியாகவும், மற்றவை யெல்லாம் சரணங்களாகவும் அமைந்திருக்கின்றன.''

## XVI

[இந்தியாவினிடத்து ஸ்வாமிகளின் அன்பு—இந்தியாவின் மகிமை வர்ணனம்—ஸ்வாமிகளின் சர்வலோக காருண்யம்.]

ஸ்வாமிகளின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த உத்தம தேசாபிமானத்துக்கு நிதர்சனமாக அவரது கல்கத்தா பிரசங்கதிலிருந்து இரண்டொரு வாக்கியங்களை எடுத்துக் காட்டுகின்றோம். அவர் சொன்னதாவது, ''நான் இங்கிலாந்தை விட்டுப் புறப்படுவதற்குச் சற்று முன் ஓர் ஆங்கிலேய நேசர் என்னைப் பார்த்து, 'ஸ்வாமிஜி! இவ்வளவு போக பாக்கியங்களும் பிரதாப சக்தியும் நிறைந்த மேலை நாடுகளின் மகிமையை இந்த நாலு வருஷ காலமாய் அநுபவித்திருக்கிற தாங்கள் இனித் தங்கள் தாய் நாட்டினிடத்தில் எவ்வித விருப்பம் வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டார்; அதற்கு விடையாக, 'இங்கே வருவதற்கு முன்னமேயே நான் இந்தியாவினிடத்தில் ஆசைகொண்டிருந்தேன். இப்பொழுதோ அத் தேசத்தின் தூசிகூட எனக்குப் பரிசுத்தமாய்விட்டது. அங்கு வீசும் காற்றும் எனக்குப் பவித்திரமாய்விட்டது. அஃது இப்பொழுது எனக்

குப் புண்ய க்ஷேத்திரமாயும், யாத்திரை ஸ்தலமாயும், திவ்விய தீர்த்தமாயும் விளங்குகின்றது' என்றேன்.''

அன்றியும், அவர் அமெரிக்காவிலிருந்து சென்னை வாசிகளுக் கனுப்பிய நிருபத்தில் வெளியிட்டிருக்கும் கருத்துகள் அவரது தேசாபிமானத்தை இன்னும் நன்றாய் வலி யுறுத்துகின்றன. "இதர தேசத்தார் இந்தியாவின் மீது பன்முறை படை யெடுத்துவந்து சுழற் காற்றைப்போல் அதைச் சூறையாடியபோதிலும், அனேக நூற்றாண்டுகளாய் நாம் செய்த பாராமுகமும் இதர தேசத்தவர் இழைத்த அவமானமும் பிராசீன ஆரியாவர்த்தத்தின் மகிமையைப் பிரத்தியக்ஷமாய் மங்கலடையச் செய்தபோதிலும், அதைத் தாங்கியிருந்த அனேக உன்னத ஸ்தம்பங்களும் ரமணீயமான மண்டபங்களும் - வேலைப் பாட்டி லிணையற்ற மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் அனேக ஆண்டுகளாய் நாட்டை யழித்த பெருவெள்ளப் பெருக்கில் அடித்துக்கொண்டு போய்விடப்பட்டபோதிலும், அதன் மத்தியப் பிரதேசமானது சிறிதும் பழுதற்றதாய் விளங்குகின்றது. ஈசுவர மகிமா விலாசத்தையும் ஜீவகாருண்யத்தையும் பிரதிபாதிக்கும் சித்தாந்தமாகிய அற்புதமான ஞாபக ஸ்தம்பம் கட்டப்பெற்ற ஆத்யாத்மிக அடிவாரமானது அசைவின்றியும், என்றும் போல் வலிமை பொருந்தியும் நிற்கின்றது," என்றும்,

"இந்திய மாதாவும் இறப்பளோ? பிராசீனகாலம் முதல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித

புருஷார்த்தங்களுக்கும் பிறப்பிடமும், ரிஷிகள் தமது தூய திருவடிகளை வைத்து நடந்த பூமியும், இன்றுவரையிலும் புண்ணியவான்கள் உயிர் வாழப் பெற்றதுமான நமது ஆரியாவர்த்தம் அழிந்துபோமோ? என் சகோதரர்களே! மகா பிரகாசமுள்ள விளக்கை யேந்திக்கொண்டு இவ்விரிந்த உலகின்கண்ணுள்ள நாடு நகரம் வனம் வனாந்தரமெல்லாம் உங்களுடன் சுற்றுகின்றேன். வேறு எத்தேசத்திலேனும் நம் தேசத்துப் புண்யவான்களைப் போன்ற மகான்களை உங்களால் முடியுமானால் காட்டுங்கள் பார்க்கலாம்! 'மரத்தி னியல்பைக் கனியினா லறிக' என்னும் ஆன்றோர் மொழி யென்றும் பொய்யாமொழி யன்றோ? இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாமரத்தி னருகிலும் சென்று அங்கு உதிர்ந்து கிடக்கும் புழுக்கள் நிறைந்து காய்வாட்டாயுள்ள பழங்களைக் கூடை கூடையாய்ப் பொறுக்கி, அவைகளைப்பற்றி வாலியம் வாலியமாய் நூல்களை யியற்றிய போதிலும், ஒரு நல்ல மாங்கனியின் பிரபாவத்தை யேனும் கூறினதாகுமோ? ஆனால், அம் மரத்தினின்றும் அதிக மதுரமும் பக்குவமும சுவையுள்ளதுமான ஒரு கனியைப் பறித்துப் பார்ப்பீர்களாயின, அப்பொழுது மாங்கனியைப் பற்றிய மர்மத்தை யெல்லாம் நீங்கள் அறிந்துவிட்டதாகக் கூறுவேன். அதுபோலவே, இந்தியாவிலிருக்கும் ப்ராணிகள் தங்கள் ஒழுக்கத்தினால் இந்து மதம் இன்ன தென்பதை விளக்கிக் காட்டுகின்றனர். மேலும், எந்த உத்தம மதமானது தன்னை அனுசரித்தவர்களுக்கு மேலான இம்மைச் சுகத்தையும் மறுமைச் சுகத்

தையும் அளித்து வருகின்றதோ, அநேகவாயிரம் ஆண்டு களாய்ப் பல இன்னல்கள் சம்பவித்துத் தன்னைச் சீரழித்த போதிலும் என்றும் மாறாத யவ்வனப் பருவத்திற் குரிய திடகாத்திரத்துடன் விளங்கி வருகின்றதோ, அப்படிப்பட்ட இந்து மதத்தின் இயல்பினையும்-சக்தியையும்-அதை யனுசரிப்பவர் அடையும் பலனையும் மேற்படி ஞானிகள் காட்டுகின்றார்கள்'' என்றும் மேற்படி நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

ஸ்வாமிகள் தம் ஜன்ம தேசத்தை எவ்வளவு ஆர்வத்துடன் நேசித்தாரோ அவ்வளவு ஆர்வத்துடன் அவர் எல்லா தேசத்தையும், வர்ணத்தையும், மதத்தையும் சேர்ந்தவர்களையும நேசித்தார்.

ஸ்வாமி விவேகாநந்தருடைய சிஷ்யையாகிய ஸஹோதரி நிவேதிதா என்ற தீக்ஷா நாமம் பெற்ற மிஸ் மார்கரெட் இ. நோபி என்னும் மாது, ஹிந்து பத்திரிகைக்குப் பின் வருமாறு எழுதினார்: "ஸ்வாமிகள் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளுக்குப் போயிருக்கையில், அவரைக் கறுப்பு மனிதனென்று சிலர் தம் வீடுகளுக்கு வரக்கூடாது" என மறுத்துவிட்டபொழுது (இந்தப் பிசகு அவரது நண்பர்களுக்குத் தெரியவந்தபொழுதெல்லாம் அவர்கள் அதற்குப் பரிஹாரமாக அவரைத் திவ்யோபசாரம் செய்து கவுரவித்தனர்) ஸ்வாமிகள் அதைக் கண்டிக்காமல் மௌனமாய் இருந்துவிடுவார். 'அந்த மௌனத்துக்குக் காரணமென்ன?' என்று யாராவது கேட்டால், இப்பொழுது

நான் சமாதானம் சொல்லி மேன்மை பெற்றுவிட்டால், பிறகு எனது கறுப்புச் சகோதரரை யெல்லாம் இவர்கள் இவ்வாறு மறுப்பதற்கு நான் சம்மதித்ததா யாகுமல்லவா எனபார்."

---

## XVII

[ஸ்வாமிகளின் போதனைகள்—பகவானை யடைதலே வாழ்க்கையின் பயன்—அத்வைத மதத்தை ஸர்வஜன ஸாமானியமாக்குதல்—உண்மைச் சீர்திருத்த முறையானது உள்ளதை விர்த்தி செய்வதே யன்றி அழிப்பதன்று—இந்துமதத்தின் நித்திய தத்துவங்கள் மானிட வர்க்கத்தின் சகலவித குறைகளையும தீர்க்கவல்லது; அது மற்றெல்லா மதங்களினிடத்தும் காட்டும் சமரசத்தன்மை—ஸர்வார்ஹ மத லக்ஷ்யம்.]

நமக்குள்ளாகவே நாம் பிரம்மாநுபவம் பெறவேணுமென்றும், அதற்கு வழி யின்னதென்றும் விவேகாநந்தர் போதித்தனர். இந்த வழியை அவர் செய்த ராஜயோகப் பிரசங்கத்தின் முகவுரையில் எல்லா மதங்களினுடைய சாராம்சமாகக் காட்டி வெகு அத்புதமான சிறு வாக்கியங்களில் அடக்கி விளக்கியிருக்கிறார். அதாவது:—

"ஒவ்வொரு ஆத்மாவும் தெய்வத்தன்மையை அவ்யக்த வடிவமாய்த் தன்னுள் அடக்கிக்கொண் டிருக்கிறது

"வெளிப்புறத்திலும் உட்புறத்திலு முள்ள பிரகிருதியை அடக்கி, ஆத்மாவின் அந்தத் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே வாழ்க்கையின் பெரும் பயனும்.

"கர்மம், உபாசனை, சித்தத்தை யடக்குதல், ஞானம் ஆகிய இவற்றுள் ஏதாவதொன்றாலாவது, அதற்கு அதிகப் பட்ட வகைகளாலாவது, அல்லது அவ்வெல்லா உபாயங்களாலுமாவது உனது தெய்வத் தன்மையை வெளிப்படுத்தி முக்தி யடை.

"இதுவே மதத்தின் பரிபூரண வியல்பாம்."

அவர் வாழ்க்கை முழுவதும் இவர் பிரசங்கித்த வேதாந்த சித்தாந்தத்தின் பரிபூரண இலக்கியமாய் விளங்கியது. அவர் வேதாந்தமதக் கருத்துக்களை சர்வ ஜனங்களுக்கும் பிரசங்கித்தது மாத்திரமன்றி அவற்றின்படி நடக்குமாறும் வற்புறுத்தினர். இதைக் கேட்போரின் மனதுக்குத் தெளிவாய் விளங்கும்படி அவர் எவ்வளவு ஆற்புதமாய்ப் போதித்தார் என்பது லாகோரில் அவர் செய்த பிரசங்கத்தி விருந்து கீழே காட்டப்படும் மேற்கோளால் நன்கு விளங்கும்.

"உலகத்தின் அத்யாத்ம க்ஷேமத்தைக் காப்பதற்காகக் கண் விழித்தெழுந்து உங்கள் கரங்களைப் பரப்பி நில்லுங்கள்! எல்லாவற்றுக்கும் முதலாக, உங்கள் தேசத்தின் க்ஷேமத்தை முதலில் கவனியுங்கள்? இப்பொழுது நமக்கு வேண்டியது அத்வைதங் கூடவன்று. முதலில் அவ்வளவு வயிற்றுக்கு அன்னம் கிடைக்கட்டும். ஞானத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நம்மவர்களின் மண்டையில் மட்டுக்கு மிஞ்சின மத விஷயங்களை ஏற்கனவே திணித்து வைத்திருக்கிறோம். அவர்களோ பாவம் பசிப் பிணியால்

வருந்துகின்றனர். வயிறு பசியால் வாடும்பொழுது வேதாந்தம் ஏறுமா? நமக்கு இரண்டு சாபங்கள் நேர்ந்திருக்கின்றன. ஒன்று, நமது பலவீனம், இரண்டாவது, நமது பகைமையும் கல்நெஞ்சமும். சாஸ்திர சித்தாந்தங்கள் லக்ஷக்கணக்காயும், மத சம்பிரதாயங்கள் கோடிக் கணக்காயும் ஏற்படுத்தலாம். எவ்வளவு செய்தும் என்ன பயன்? வேதம் உங்களுக்கு கற்பிப்பதுபோல், மற்றவர்களும் உங்கள் தேசங்களின் அம்சங்களென்றும், ஏழைகளும் பணக்காரரும், புண்யவான்களும் பாபிகளும், எல்லோரும் பிரம்மம் என்னப்பட்ட அகண்ட பரிபூரண சொரூபத்தின் அம்சங்களே யென்றும், நீங்கள் மனதார உணர்ந்து, எல்லாப் பிராணிகளிடத்தும் ஜீவகாருண்யத்துடன் பிரவர்த்திக்கின்ற வரையில் இந்த வாசாஞானம் ஒன்றுக்கும் உபயோகப்படாது.

"ஸ்வாமிகள் எந்த நிலையிலிருந்து ஹிந்து மதத்தைப் பிரசங்கித்தார்?" என்று சிலர் வினவலாம். "அவர் எந்த மதத்தைப் பிரசங்கித்தார்? அவர் என்ன காரியத்தைச் செய்து முடிப்பதற்காக வந்தார்?" என்றும் கேட்கக்கூடும். அவர் செய்த போதனைக ளெல்லாம் உள்ளதை விருத்தி செய்வதற்காகச் செய்த போதனையேயல்லது உள்ளதை யழிக்கவன்று. பொதுவாய் 'மதம்' என்ற சொல்லில் எவ்வளவு விரிந்த கருத்துக்களெல்லாம் அடங்கியிருக்கின்றனவோ, அவற்றை யெல்லாம் அடக்கியே அவர் பிரசங்கித்தார். மனிதனைப் படிப்படியாய் அத்யாத்ம மார்க்கத்தில்

நடத்திப், பூர்ணநிலையை யடைவிக்க வேண்டுமென்பதே அவரது போதனையின் கருத்தாம். அந்த விஷயத்தில் அவர் ஜாதி மத பேதங்களைப் பாராட்டினவரல்லர். இக் கருத்துகளை யெல்லாம் 'ஸர்வார்ஹ மத லக்ஷ்யம்' என்ற ஒரு பிரசங்கத்தில் அவர் வெகு தெளிவாய் விளக்கியிருக்கிறார். அந்தப் பிரசங்கம் வருமாறு:—

## ஸர்வார்ஹமத லக்ஷ்யம்.

எங்கெங்கே நமது புலன்கள் எட்டிச் செல்கின்றனவோ, எதெதை நம் மனம் சங்கற்பிக்கின்றதோ, ஆங்காங்கு இருவித சக்திகளின் பிரவிருத்தியை யாம் காண்கின்றோம். இவ் விருவித சக்திகளும் ஒன்றற்கொன்று சத்ருத் தன்மை யுற்றனவாய், எம்மைச் சுற்றிலுமுள்ள பலவகை விகற்பமான தோற்றங்களுக்கும், எமது அகத்தினுள் நிகழும் நாநாவித சங்கற்ப விகற்பங்களுக்கும் காரணமாய் விளங்குகின்றன. வெளிப் பிரபஞ்சத்தில் இவ் விருவித சக்திகளின் பிரவிர்த்தியானது ஜட வஸ்துவினுடன் ஸம்பந்த முறும்பொழுது * ஆகர்ஷண, † பிரதிகர்ஷண சக்தி ரூபமாய்ப் பரிணமிக்கின்றது. உட் பிரபஞ்சத்தில் அப் பிரவிர்த்தியானது நம் இயல்பினுக்குரிய கலப்புப் புணர்ச்சிகளாகிய விருப்பு - வெறுப்பு, நன்மை-தீமை என்னும் இருமை (த்வந்த்வம்) களுக்குக் காரணமாய் நிற்கின்றது. இவற்றைச் சில நிதர்சனங்களால் விளக்குவாம். சில பொருள்களை யாம் வெறுக்கின்றோம்; சிலவற்றை எம் பக்கல்

* Attraction. † Repulsion.

கவர்கின்றோம். ஒருவரால் யாம் கவரப்பெறுகின்றோம்; மற்றொருவரால் வெறுத்துத் தள்ளப்படுகின்றோம். நமது அநுபவத்திலேயே பல தடவைகளிலும், யாதொரு காரணமுமின்றியே சிலர் பக்கல் நமக்கு அதிகமான கவர்ச்சி உண்டாவதையும், அவ்வாறே வேறு சில சமயங்களில் மற்றுஞ் சிலரால் நாம் விலக்கப்படுவதையும் யாம் கண்கூடாய்ப் பார்த்திருக்கிறோம். இஃதனைவர்க்குந் தெளியத் தெரிந்த விஷயம். இவ்வெதிர்மறைச் சக்திகள் பிரவிர்த்திக்கும் துறை எத்துணை யுயர்ந்துஞ் சிறந்து மிருக்கின்றதோ, அதற்கேற்ப அவற்றால் விளையும் பயன்களும் பலிஷ்டமாயும் பிரசித்தமாயு மிருக்கின்றன. மானுட விசாரத்திலும் வாழ்க்கையிலும் மதமே உயர்ந்த ஸ்தானத்தை வஹிக்கின்றமையின், இவ்வெதிர்மறை சக்திகளின் பிரவிர்த்தியும் இம் மதத்தினிடத்தே மிகச் சிறந்து விளங்கக் காணகின்றோம். மன்பதைக் கநுபவமாயுள்ள அன்பிலெல்லாஞ் சிறந்த அன்பு மதத்தின் காரணமாகவே உதயமாயிற்று. அதே மன்பதைக் கனுபவமாயுள்ள மிகக் கொடிய பகைகளும் மதத்திலிருந்தே யுண்டாயிருக்கின்றன. உலகம் கேட்டு ஆநந்திக்குமாறு அதன் செவியில் பரம மங்கள மான சாந்தி வசநங்களை உபதேசித்தவர்கள் மதாநுஷ்டாநமுள்ள மகான்களே யாவர். இவ்வுலகத்தின்மேல் விழுந்த மகா கொடிய சாபங்களும் மதாநுஸாரிகளின் வாயிலாகவே வெளிப்பட்டன. நாம் எம் மதத்தை யுற்று நோக்கினும், அதன் உத்தேசியம் எவ்வளவு உயர்ந்திருக்கின்றதோ, அதற்குத் தக்கவாறு அதன் அமைப்பு சூக்கும

மாயும், அதன் செயல்கள் சிறப்பு வாய்ந்து மிராநிற்கும். ஆகையாற்றான் மதத்தின்கண் இவ்விரு சக்திகளும் மிகச் சிறந்து விளங்கக் காண்கின்றோம். மனிதர்கள் பரம புருஷார்த்தங்களென மதித்திருப்பவைகளில் மதத்தைப் போல் மற்றெதுவும் உலகத்தை அவ்வளவு குருதியாறாய்ச் செய்யவில்லை. ஆயினும், மதத்தைப்போல் மற்றெதுவும் அத்துணை தர்ம வைத்திய சாலைகளையும் ஆதுரர் சரணாலயங்களையும் கட்டிவைக்கவில்லை. 'மனிதர்கள் பக்கல் மாத்திரமின்றித் தாழ்ந்த பிராணிகளிடத்தும் மிக்க ஆதரவுடன் அன்பாயிருத்தல் வேண்டும்' என்று மதம் உபதேசித்தவண்ணம் மற்றெத்தகைய மாநாட முயற்சியும் செய்ததில்லை. மதம் நம்மைக் குரூரமாயிருக்கச் செய்வது போல மற்றெதுவுஞ் செய்யவில்லை. நம்மை யிளக்கமுடையோரா யிருக்கச் செய்வதிலும் மதத்தைப் போன்றது மற்றொன்றில்லை. இவ்வாறுதான் முன்னைய காலத்தி லிருந்தது. எதிர் காலத்திலும் இவ்வண்ணமாகவேதான் பெரும்பாலும் இருக்கும். ஆயினும், இத்தகைய கோரமான இரைச்சலுக்கும் கோஷத்துக்கும், சண்டைக்கும் சச்சரவுக்கும், மதங்களினுடையவும் மத வுட்பிரிவுகளி னுடையவும் த்வேஷத்துக்கும் பொறாமைக்கும் மத்தியில், அவ்வக்காலத்தில், உந்நதமான சத்தங்கள், இவ்வெல்லாக் கூச்சல்களுக்கும் மேலாக் கிளம்பி, பூமியின் ஒரு முனையினின்று மறறொரு முனைக்குக் கேட்கத்தக்கதான பெருத்ததோர் குரலுடன் "சாந்தி வேண்டும், ஸமரஸம் வேண்டும்" என்று உத்கோஷித் திருக்கின்றன. அது வருவதென்றாளோ?

'மகத்தான, மதப் போர்கள் விளைந்துகொண்டிருக்கும் இவ் வுலகத்தில் அவிச்சின்னமான ஸமரஸத் தன்மை ஒழுங்காய் நிலையுறுதல் கூடுமோ?' என்பதே நாம் இன்று ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்ட விஷயம். இந் நூற்றாண்டின் கடைப் பகுதியில் ஸமரஸத்தைப்பற்றிய யோசனைகளால் உலக மெங்கும் பெரிய அமளியா யிருக்கின்றது. மன்பதையில் ஸமரஸம் விர்த்தியாக வேண்டுமென்று அதற்காகப் பகீரதப் பிரயத்தனங்க ளெல்லாம் செய்து வருகின்றனர். ஆனால், அது கிடைப்பது எத்துணைக் கடினம் என்பது நமக்குத் தெரியும். உலக வாழ்க்கையாகிய பெருஞ் சமரின் கடுமையைக் குறைப்பதும், மனிதனிடத் திற் றிரண்டுசேர்ந்திருக்கும் அபாரமான வலிமையை யடக்குவதும் அசாத்தியமென ஜனங்களுக்கு விளங்குகின்றது. மனிதனது ஸ்தூல ஸ்வபாவத்துடன் ஸம்பந்தித்திருக்கின்ற உலக வாழ்க்கையிலேயே ஸமரஸத்தன்மை, அமைதி, அன்பு என்னும் இவற்றை நாட்டுவது கஷ்டமெனில், அவனது சூக்கும வியல்பில் அவற்றினை நிலையுறச் செய்வது அதனினும் ஆயிர மடங்கு மிகக் கஷ்டமல்லவா? பிரித்துவிளக்கற்கு அருமையான இத்தகைய அருஞ் சொல் வலையினின்றும் சிறிது வெளியே வரும்படி உங்களை யான் வேண்டுகின்றேன். அன்பு, அமைதி, அறம், அபேதம், அகண்ட சகோதரப் பான்மை என்னும் இன்னோரன்ன விஷயங்களைப்பற்றி நாம் இளமைப்பருவம் துவக்கிக் கேட்டுக்கொண்டு வருகின்றோம். ஆனால், அவை நமக்குப் பொருளற்ற வெற்றுரைக ளாய்விட்டன; அவற்

றினை நாம் கிளிப்பிள்ளைகளைப்போல் உச்சரிக்கின்றோம். அவைகளை உச்சரிப்பதும் நமக்கு சகஜமாய்ப் போய்விட்டது. அதைத் தவிர்க்க நம்மால் முடியவில்லை. இப்பெரும் விஷயங்களை முதன்முதல் தங்கள் இருதய கமலங்களில் அநுபவித் தறிந்த மஹரிஷிகள் இம்மொழிகளை அமைத்தனர். அக்காலத்திற் பலர் அவற்றின் பொருளைக் கிரஹித்தார்கள். வரவர அச்சொற்கள் அறிவிலிகள்பாற் செல்ல, அன்னார் அவற்றைக் கொண்டு களியாட்டயர்வாராயினர். ஆகவே, மதக் கருத்துக்களின் பொருளை இவர்க ளறியாராக, அம் மதமானது இவர்கள் கையி லகப்பட்டுச் சாரமற்ற வெறுஞ் சுஷ்கபதங்களாலாய கேவலமான சிலைடையணியாய்விட்டது. பின்னர், 'என் தந்தையின் மதம்,' 'எங்கள் ஜாதியாரின் மதம்'' 'எங்கள் தேசத்து மதம்,' என்று ஆராய்ச்சி யின்றிச் சொல்லிக்கொள்ளும்படியான நிலைமைக்கு வந்தது. மதாவலம்பனமும் தேசாபி மானத்திற்கு ஓர் அங்கமாய்விட்டது, [அதாவது, மதத்தைச் சிரேஷ்டமெனக் கருதி யதனை யவலம்பிக்காது, இராஜாங்க உரிமைகளைப் பெறுதலையே பரம பிரயோஜனமாகக் கொண்ட தேசாபிமானிகள் தங்கள் கருத்துக்கள் நிறைவேறுவதற்கு மதாபிமானிகள்போல் நடித்தல் சாதனமா யிருக்கக்கண்டு அதனைத் தங்கள் தேசாபிமானத்திற்கோர் அங்கமாக்கிக்கொண்டார்க ளென்றபடி.] ஆனால், தேசாபிமானமென்பதோ எப்பொழுதும் ஒரு சார்பாய் நிற்பதே யன்றிச் சமரஸத் தன்மைக்கு இடங் கொடாது. இக் கூறிய காரணங்களால் மதத்தின்கண் ஸமரஸத் தன்மையை நிலை

யுறச் செய்வது மிகவுங் கடினமெனப் போதரும். ஆயி னும், 'ஸர்வ ஸமய ஸமரஸம்' என்னும் இவ் வரிய விஷ யத்தை யாராய்ந்தறிய முயலுவோம்.

உலகத்திற் பிரஸித்தி பெற்றுள்ள மகா மதங்கள் ஒவ்வொன்றும் மூவகைப் பகுதிக ளடங்கியுள்ளதென யாமறிவோம். முதலாவது, தத்துவப் பகுதி. இஃது அம் மதத்தின் இலக்கணத்தையும் சிறந்த உண்மைகளையும் உட்கொண்டு, அம் மதத்தின் முக்கியமான பூர்ண தாத் பரியம் ஈதெனக் காட்டி, அதை நம்பி யனுசரிப்போர்களு க்கு அம் மதத்தின் ஆதாரமான மூல தத்துவ மின்ன தென்பதையும், அதனை யடையு மாற்றையும் உபதேசியா நிற்கும். இரண்டாவது, அத் தத்துவப் பகுதியே எல்லா ஆன்மாக்களும் அறிந்துய்யும்பொருட்டு உபாக்கியான வடிவமா யமைந்துள்ள பகுதியாம். ஆகவே, இரண்டாம் பகுதி, கற்பிதக்கதைக ளமைந்த புராணப் பகுதியாகின் றது. இப் புராணமானது மனிதர்களையும், ஈசுவராம்ச ஸம்பூதர்களான மஹா புருஷர்களையும் பற்றிய சரித்திரங் களைக் கூறுநிற்கும். அறிதற்கரிய தத்துவாம்சத்தை அனை வரும் உணர்ந் துய்யுமாறு இத்தகைய கற்பனைக் கதைக ளுடன் சேர்த்து அத் தத்துவங்களை விளக்க இயற்றிய நூலை புராணமென்றுஞ் சொல்லலாம், மூன்றாவதும் கடையதுமான பகுதி கர்மப்பகுதி. இது மூற்கூறிய புரா ணப் பகுதியை விட மிக்க வெளிப்படையாயும், எளிதிற் கிரஹிக்கக் கூடியதாயு மிருக்கின்றது. இதில் முக்கிய

மாய் அநுஷ்டானங்களும் - சடங்குகளும் - பிரதக்ஷிண நமஸ்காரம் முதலிய பலவகை காயிக கர்மங்களும், புஷ்பம் தூபதீபம் என்னு மித்தகைய இந்திரியங்களுக்கு விஷய மாகக்கூடிய வேறு பல அம்சங்களும் பெரும்பாலும் அடங்கியிருக்கும். இக் கூறிய இலக்கணங்க ளுள்ளதே கர்மப்பகுதி யெனப்படுவது. பிரஸித்தமாயுள்ள ஒவ்வொரு மதத்திலும் இம்மூன் றம்சங்களையும் நீங்கள் பாக்கக் காணலாம். இவற்றுள் சிலர், ஒன்றைச் சிலாக்கிய மாயும், சிலர் மற்றொன்றைச் சிறந்ததாயுங் கொள்வர். யாம முதற்பகுதியாகிய தத்துவாம்சத்தைப் பற்றிப் பரியாலோசிப்போம்.

உலக முழுமைக்கும் ஸமாஸமாயுள்ள ஒரே தத்துவ சாஸ்திரம் ஏதேனு மிருக்கின்றதா? இதுகாறும் இல்லை. ஒவ்வொரு மதமும் தன் கொள்கைகளையே எடுத்துக்காட்டி அவற்றையே உண்மையென வற்புறுத்துகின்றது. அஃது இவ்வளவு வற்புறுத்துவதுடன் மாத்திரம் நில்லாது, அஃது உண்மையெனக் கூறும் உண்மைகளை நம்பாதவர்கள் பயங்கரமான ஓரிடத்திற்குப் போகவேண்டுமென்றும் பயமுறுத்துகின்றது அத்தகைய மதத்தாருள் மற்றுஞ் சிலர் அவ்வளவுடன் கூடத் திருப்தியடையாராய்த் தாங்கள் நம்பும் வண்ணம் ஏனையோரையும் நம்பும்படி வற்புறுத்துமாறு கத்தியையும் உருவிப் பிரயோகிப்பார்கள். இஃது அவர்களது இயற்கையான துஷ்டத்தன்மையால் உண்டாவது என்று நினைக்கக்கூடாது. மற்றென்னை

யெனின், அது மனிதர்களது மூளையைச் சம்பந்தித்த மதாவேசம் என்னும் ஒருவித வியாதி விசேஷமாம். இம் மதாவேசத்தாற் கட்டுண்டவர் மனிதர்களுக்குள் மிக்க பக்தி சிரத்தையும் வாய்மையும் உள்ளவர்கள். ஆனால், அவர்கள் உலகத்திலுள்ள ஏனைய உன்மத்தர்களைப் போல வே தாங்கள் செய்யும செயல்களுக்கு உத்திரவாதமற்ற வர்களா யிருக்கின்றனர்.

வியாதிகளுக்குள்ளே மதாவேசம் என்னும் இவ் வியாதியானது மிகவும் அபாயகரமானது. மானுடவியற்கை யிற் குடிகொண்டிருக்கும் சர்வவித துஷ்டதன்மையும் இவ்வொன்றினாலேயே வெளிக்கிளம்புகின்றது. கோவம் மூண்டு நாம்புகள் கோரமாய் முறுக்கிப் பின்னிக்கொள்ள, மாந்தர்கள் புலிகளை மானுகின்றனர்.

இனி, புராணத்திலாயினும் ஏதேனும் பொதுத் தன் மை உளதா? புராண ஸாமரஸ்யமேனும், எல்லா மதங்க ளும் ஒருங்கே ஒப்புக்கொள்ளும் சர்வார்ஹமான புராண சம்பிரதாயமேனும் ஒன்றுண்டோ? நிச்சயமாய் இல்லவே யில்லை. எல்லா மதங்களிலும் அவரவர்கள் ஒப்புக்கொள் ளும் புராணக்கதைக ளிருப்பினும், ஒவ்வொரு மதமும் "என் கதைகள் வெறுங் கற்பனைக் கதைகளல்ல" என்று கூறுகின்றது. இதனைத் திருஷ்டாந்த வாயிலாகச் சிறிது ஆராய்வாம். கேவலம் நிதர்சனார்த்தமாகப் பேசுகின்றே னே யன்றி எம் மதத்தையுங் கண்டிப்பதில் எனக்குத் தாற்பரிய மில்லை.

கடவுள் கபோதவடிவந் தாங்கி உலகத்தில் தோன் றினரெனக் கிறிஸ்தவர் நம்புகின்றனர். அவர்களுக் கிது உண்மையான சரித்திரமேயன்றிக் கற்பனைக் கதை யன்று. கடவுள் பசுவின்கண் ஆவிர்ப்பவித் திருக்கின்றாரென இந் துக்கள் நம்புகிறார்கள். அங்ஙனம் நம்புவது உண்மைச் சரித்திர மன்றெனவும், வெறும் பொய்க்கதை யென்றும், மூடபக்தி யென்றும் கிறிஸ்தவர்கள் ஆக்ஷேபிக்கின்றார்கள். ஒரு விக்கிரகத்தை ஒரு பெட்டி வடிவமாய்ச் செய்து அதின் இரு பாரிசத்திலும் தேவதூதர்களின் தூப உருவங் களை யமைத்தால், அதனைப் பரம பவித்திர ஸ்தானமாகிய கர்ப்பகிருஹத்தில் வைக்கலா மென்றும, பகவானாகிய யே ஹோவாவின் திருவுள்ளத்திற்கு அது மிகவும உவப்பான தென்றும் யூதர்கள் கூறுகின்றனர். ஆனால், அதனை ஒரு சுந்தரபுருஷ வடிவமாகவேனும் ஸ்திரீ ரூபமாகவேனும் அமைக்கின், அதே யூதர்கள் அதனைக் கண்டமாத்திரத் தில், 'இஃதொரு பயங்கரமான விக்கிரகம், இதனை யுடை மின்" என்பார்கள். இதுதான் புராணவிஷயத்தில் நமக் குள்ளிருக்கும் ஐக்கியம். ஒருவன் எழுந்து நின்று 'எனது ஆசாரியன் இன்ன இன்ன அற்புதச் செயல்களைச் செய் தார்,' என்று உரைப்பானாயின், அஃதெல்லாம் வெறும் மூடபக்தியெனக் கூறுகின்றனர் ஏனையோர். ஆனால், அவர் கள் ஆசாரியனே அதைவிட இன்னும் ஆச்சரியகரமான தொரு செயலைச் செய்திருப்பார், அதை யவர்கள் உண் மைச் சரித்திரமெனக் கொள்ளாநிற்பர். 'யான் கண்டறிந்த வரையில் இவ் வுலகில் எவரும் சரித்திரத்திற்கும் புராண

கதைகளுக்குமுள்ள சூக்ஷ்ம பேதத்தை இக் கனவான்களின் மூளைகளி லுள்ளவாறு கண்டறியக் கூடவில்லை. இத்தகைய கதைக ளெல்லாம் எவருடையவாயினும், ஏகதேசம் சிறிது உண்மை சரித்திரம் கலக்கப்பெற்றிருக்கக் கூடுமாயினும், வாஸ்தவத்திற் கற்பனைகளேயாம்.

இதற்கு அடுத்தது கர்மம். ஒரு மதக்கோட்பாட்டினர் ஒருவகையான கர்மத்தை யனுஷ்டிக்கின்றனர். அவர்கள் தாம் அனுஷ்டிக்கும் பத்ததியே பவித்திரமான தென்றும், ஏனைய மதங்களின் கர்மானுஷ்டானங்கள் கேவலந் தாழ்ந்த மூடபக்தியென்றும் கருதுகின்றனர். ஒரு மதத்தினர் ஒருவகையான உருவத்தைப் பூஜிப்பார்களாயின், மற்றோர் அதைக் கண்டு இது 'அஸஹ்யம்' என வெறுக்கின்றனர். மிகவும் சாதாரணமான ஒரு உருவத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இலிங்க உருவமானது உண்மையில் வேறுபொருள் கொள்ளினும், கிரமேண அப்பொருள் ஜனங்களால் மறக்கப்பட்டுப்போக, இப்பொழுது சர்வேசுவரனது அறிகுறியாக மாத்திரம் அது நிற்கின்றது. இந்த உருவத்தை ஈசுவர மூர்த்தமாகப் பாவித்து வழிபடும் ஜனங்கள் அதை அங்ஙனமே கொள்கின்றார்களேயன்றி அதைப் பற்றிய வேறெவ்விதமான எண்ணமும் அவர்கள் மனதில் உண்டாவதில்லை. ஆனால், வேற்று மதத்தானொருவன் அதனைக் காணும்பொழுது அதை அஸஹ்யமெனக் கொண்டு கண்டிக்கின்றான். ஆனால், இங்ஙனங் கண்டிக்குமவன் செய்யும் அனுஷ்டானம் இந்த இலிங்க மதானுசாரி

க்கு அதைவிட அஸஹ்யமாய்த் தோன்றும். இவ் விஷயத்தை இலிங்கபூஜா சம்பிரதாயத்தாலும், கிறிஸ்தவருள் வழங்கும் 'நற்கருணை' என்னும் சம்பிரதாயத்தாலும் விளக்குவாம். கிறிஸ்தவர்களுக்கு இலிங்க பூஜையைக் கண்டால் அஸஹ்யமா யிருக்கின்றது. இந்துக்களுக்கு 'நற்கருணை' என்னும் கிறிஸ்தவச் சடங்கு அஸஹ்யத்தை யுண்டுபண்ணுகின்றது. ஒரு மனிதனது நற்குணங்களைக் கிரஹிக்கும்பொருட்டு அவனைக் கொன்று அவன் இறைச்சியைத் தின்பதும், அவன் இரத்தத்தைக் குடிப்பதுமான கிறிஸ்தவச் சடங்கானது நரமாம்ச பக்ஷணமெனஇந்துக்கள் கூறுகின்றார்கள். இது காட்டில் திரியும் நாகரிகமில்லா முரட்டு ஜாதியார் செய்யும் காரியமா யிருக்கின்றது. ஒருவன் தைரியமுள்ளவனா யிருப்பின், அவர்கள் அவனைக் கொன்று அவன் இருதயத்தைப் புசிக்கின்றார்கள். ஏனெனில், அப்படிச் செய்வதால் அம் மனிதனது திடசித்தமும் தைரியமுந் தங்களுக்கு வருமென்பது அவர்களது நம்பிக்கை. பரமக்ரைஸ்தவ சிகாமணியாகிய ஸர் ஜான் லப்பக் என்பவர்கூட இதனை ஒப்புக்கொண்டு, "இக் கிறிஸ்தவ ஆசாரமானது மேற்சொல்லிய காட்டுச் சாதியாரின் கொள்கையினின்றே உற்பத்தியா யிருக்கவேண்டும்" என்று சொல்லுகின்றார். ஆனால், கிறிஸ்தவர்களிற் பெரும்பான்மையோர் அவ்வாசாரத்தின் மேற்கூறிய உற்பத்தியை ஒப்புக்கொள்ளுகின்றார்களில்லை. இவ் வாசாரம் மேற் கூறியபடி பொருள் கொள்வதற் கிடங்கொடுக்குமென்பது அவர்கள் மனதில் நுழைவதே யில்லை. அதை

யவர்கள் பரிசுத்தமாகக் கொண்டிருக்கின்றமையின், அதுவே தங்களுக்குப் புருஷார்த்தமெனக் கருதி யிருக்கின்றனர். ஆகையால், கர்மங்களிலும் சர்வ ஜனங்களும் ஒப்புக்கொண்டு அநுஷ்டிக்கக்கூடிய பொதுமையான ஆசாரமென்ப தொன்றில்லை யென்க. அவ்வாறாயின் சமரஸத்தன்மை என்பது யாண்டுளது? சர்வ சாதாரண சமரஸ மதம் ஒன்றுளதாதல் எவ்வாறு சாத்தியம்? ஆயினும், அத்தகைய தொன்றிருக்கவே இருக்கின்றது. அஃதென்னவென்று இனி யாமாய்வோம்.

சர்வ சகோதரப்பான்மையைப்பற்றி யாம் அனைவரும் கேள்வி யுறுகின்றோம். இதனை விசேஷமாய்ப் பிரசங்கிப்பதற்குச் சங்கங்கள் எத்துணை ஆயத்தமாயுள்ளவென்பதும் யாமறிவோம். இதைப்பற்றிப் பேசுகையில் எனக்கு ஒரு பழைய கதை ஞாபகத்துக்கு வருகின்றது. 'இந்தியாவில் சுராபானமானது பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனக் கருதப்படுகின்றது. ஓரூரிலே இரண்டு சகோதரர் இரகசியமாய்ச் சிறிது சாராயமருந்த எண்ணங்கொண்டார்கள். அவர்கள் சாராயமருந்த உத்தேசித்திருந்த இடத்திற்கு மிகவுஞ் சமீபமான ஓர் அறையில் மகா ஆசாரபரரான அவர்களது அம்மான் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தார். ஆனால், அவர்கள் குடிக்க ஆரம்பிப்பதற்கு முன் அவர்களில் ஒருவன் மற்றவனை நோக்கி, "அடே சத்தஞ் செய்யாதே! மாமா விழித்துக்கொண்டு விடுவார்" என்றான். அவர்கள் குடித்துக் கொண்டே ஒருவரை நோக்கி யொரு

வாாக இருவரும், "அடே இரைச்சல் போடாதே! மாமா எழுந்துவிடுவார்" என்று கத்த ஆரம்பித்தனர். இந்தக் கத்துதல் அதிகரிக்கவே மாமா விழித்தெழுந்துவிட்டார். அவர் உள்ளே பிரவேசித்து நடந்ததை யெல்லாங் கண்டறிந்துகொண்டார். சர்வத்திர சகோதரபாவ மென்பதும் அவ்வாறே யிருக்கின்றது. "யாம் அனைவரும் சமானர்; ஆகையால், யாம் ஒரு கக்ஷியாய்ச் சேர்வோம்" என்று நாம் எல்லோரும் மேற்சொல்லிய குடியர்கள்போலக் கத்துகின்றோம். எப்பொழுது யாம் ஒரு கக்ஷியாய்ச் சேர்கின்றோமோ, அப்பொழுதே யாம் ஸமத்துவத்தை ஆக்ஷேபிக்கின்றவர்களாகின்றோம். ஆகவே, சமத்துவ மென்பது இல்பொருளாய் விடுகின்றது. மகம்மதியர்கள் சர்வ சகோதரத்தன்மையைப்பற்றிப் பேசுகின்றனர். ஆனால், உண்மையில் அவர்கள் பேச்சின் பிரயோசன மென்னை? மகம்மதியர்களைத் தவிர்த்து மற்றெவர்களையும் அவர்கள் தம் சகோதரர் குழாத்தில் சேர்க்கமாட்டார்கள்; அதததைகயாரது கழுத்தை வெட்டிவிடுவார்கள். கிறிஸ்தவர்களும் சர்வ சகோதரத்தன்மையைப்பற்றிப் பேசுகின்றார்கள். ஆனால், யாவனொருவன் கிறிஸ்தவனல்லனோ அவன் * அந்த ஸ்தானஞ் சென்று நித்தியகாலமும் வேதனையனுபவிக்க வேண்டும்.

* அந்த ஸ்தான மென்றது நித்ய நரகத்தை. இது பயங்கர ஸ்தான மாகையால், இதனைப் பெயரிட்டுக் கூறாது நிர்த்தேச மாத்திரத்தாற் கூறுவது கிறிஸ்தவர் வழக்கு.

சர்வ சகோதரத்துவம், சர்வ சமத்துவம், அர்த்தம், மனோதர்மம் முதலியவற்றில் சமத்துவம் என்று இவைகளைப்பற்றி யாம் ஆராயுங்கால், இவ்வாறாகத்தான் யாம் இவ்வுலகில் செல்லவேண்டி யிருக்கின்றது. ஆகையால், இவ்வுலகத்தில் சர்வசமத்துவ விஷயத்தைப்பற்றி மேற்சொல்லியவாறு யாவரேனும் கூறுவாராயின், நீங்கள் சிறிது ஜாக்கிரதையாய் இருத்தல்வேண்டும். ஏனெனில், இத்தகைய வேஷம் போடுகிறவர்கள் பெரும்பாலும் சுய காரிய துரந்தரர்களாய் இருப்பர். "கார்காலத்தில் சில சமயங்களில் விண் முகில் வருகின்றது; அது பலமுறையும் வாளா உருமுகின்றதேயன்றி, மழை பெய்கிறதில்லை. ஆயின், மாரி காலத்தில் மேகங்கள் கர்ஜனை செய்வதில்லை. ஆனால், உலகத்தை ஜலப் பிரளயத்தில் அமிழ்த்திவிடுகின்றன." அவ்வாறு உண்மையாகவே பாடு படுகின்றவர்களும், மனிதர்களனைவரும் ஏக குடும்பத்துச் சகோதரர்களென இருதயத்திற் கருதுகின்றவர்களும் மிகுதியாய்ப் பேசுவதில்லை. சர்வ சகோதரத்துவத்தின் பொருட்டுச் சிறு சங்கங்கள் சேர்ப்பதில்லை ஆயின், அவர்களது செய்கைகளும், அவர்களது முழு சரீரமும், அவர்களது மாதிரியும், அவர்களது அசைவும், அவர்களது நடையும் அன்னமும் பானமும், அவர்களது முழு வாழ்க்கையும், அவர்கள் உண்மையில் சர்வ மாறுடா சகோதரத்துவ உணர்ச்சி யுள்ளவர்களென்றும், அவர்கள் அனைவரிடத்திலும் அன்பும் அநுதாபமும் உள்ளவர்களென்றும் பறை சாற்றுகின்றன. அவர்கள் வாசா கைங்கரியம் செய்

யார்கள். மற்று செய்து நடத்திக் காட்டுவார்கள், நமக்கு உண்மையான உழைப்பின் ஆதிக்கமும், பேச்சின் குறைவும் வேண்டி யிருக்கின்றன.

இதுகாறும் செய்த ஆராய்ச்சியினால், மத விஷயத்தில் யாதொரு பொதுமையான அம்சமுங் காண்பதரிதென ஏற்பட்டது; ஆயினும், அத்தகைய அம்சங்கள் இருக்கின்றன வென யாம் அறிவோம். யாம் அனைவரும் மனிதர் தாமே? ஆனால், எல்லோரும் சமமா யிருக்கின்றோமா? இல்லவே இல்லை. யாம் சமமா யிருக்கின்றோமென யாவன் கூறத் துணிவன்? அங்ஙனம் கூறுவோன் உன்மத்தனல்லவா? அன்னான் ஒருவனே யாமனைவரும் சமானரெனப் பகர்வான். எமது புத்தியிலும், எமது சக்திகளிலும், எமது சரீரங்களிலும் யாம் அனைவரும் சமானமா யிருக்கின்றோமா? ஒருவன் மற்றவனைவிடப் பலசாலியா யிருக்கின்றான்? ஒரு மனிதன் வேறொருவனிலும் அதிக புத்தி கூர்மையுள்ளவனா யிருக்கிறான். யாமனைவரும் சமானரா யிருந்துழி இவ் அசமத்துவம் ஏன் இருக்கவேண்டும்? அதனை யார் உண்டுபண்ணியது? நாமா? எமக்குச் சத்தியும் புத்தியும் தேகவலிமையும் நிறைந்தேனும் குறைந்தேனும் இருக்கின்றமையின், அவை எம்முள் ஒருவருக்கும் மற்றவருக்கும் வேற்றுமையை அவசியம் உண்டாக்கவே செய்யும். ஆயினும், சமத்துவம் என்னுங் கொள்கை சரியானதென்று என் மனதிற் படுவதாக எம்முள் ஒவ்வொருவரும் அறிகின்றோம். இதனை வேறோர் உதாரண முகத்

தான் ஆராய்வாம். ஈண்டுள்ள யாமனைவரும் மனிதர்களே யாயினும் சிலர் புருஷராயும், சிலர் ஸ்திரீகளாயும் இருக்கின்றோம். இவ்வயி னிற்பவர் கருமை நிறத்தவர்; அவ்வயினுள்ளவர் வெண்மை நிறத்தவர்; ஆனால், எல்லோரும் மனிதர்களே யாவர்; ஒரே மானுட வர்க்கத்திற் சேர்ந்தவர்களே யாவர். எமது முகங்கள் பலவகைப்பட்டிருக்கின்றன. இங்குள்ளவர்களுள் எவ்விருவரது முகமும் ஒரே மாதிரியா யில்லை. ஆயினும், நாமெல்லோரும் மனிதர்களே யாவேம். இவ் ஏகமான மானுடத் தன்மை யென்பது யாண்டுளது? என் கட்புலனுக்கு அது விஷயமாகவில்லையே. அதனை யான் இன்னதென்று பிரித்துப்பார்க்க முயலுங்கால் அஃதிருக்குமிடம் எனக்குப் புலப்படவில்லையே. ஒரு புருஷனையேனும் ஸ்திரீயையேனும், கருமையாகவேனும் அழகாகவேனும் காண்கின்றேனையன்றி இத்துணை முகங்களுக்குள்ளும் பொதுவா யிருப்பதான அம் மானுடத் தன்மை யெனும் சமஷ்டி குண விசேஷத்தைப் பரிசிக்கவும், உணரவும், அநுபவிக்கவும், அதனைப்பற்றி நினைக்கவும் நான் முயலுங்கால் எனக்கு அஃது அகப்படுகின்றதில்லையே. அஃது இந்திரியங்களுக்கு அப்பாலுள்ளதும், கருத்துக்கப்பாலுள்ளதும், மனத்திநுக்கு அப்பாலுள்ளதுமாம். ஆயினும், அஃது இங்கே யிருக்கின்றதென்றெனக்கு உறுதியாய்த் தெரியும். எனக்கு இங்குள்ளதைப்பற்றியேனும் அதிகமான நிச்சய முண்டெனில், அது நம்மெல்லோருக்கும் பொதுவாயுள்ள இம் மானுடத் தன்மையேயாம். யான் அதனைப் பிரத்தியக்ஷமாயும் தெளி

வாயுங் காண முடியாது. இம் மாறுடத் தன்மை யென்பது கடவுளின் ஓர் ஆவிர்ப்பாவமேயாம். "அவனிடத்தே எமது வாழ்க்கையும் அசைவும் இருப்புமாம்." அவனிடத்தும் அவன் மூலமாயு மன்றே யாம் உள்ளவராகின்றோம். இந்தப் பொதுமையாக்கப்பட்ட தத்துவத்தின் வாயிலானன்றே யான் 'நுங்களைப் புருடனாகவேனும் ஸ்திரீயாகவேனும் காண்பது; ஆயினும், யான் அதைப் பிடித்து இன்னதென்று விளக்கப் புகுங்கால், அஃதியாண்டு மிலதாகின்றது. ஏனெனில், அஃது இந்திரியங்களுக்கு அப்பாலுள்ளது. ஆயினும், அதன் கண்ணும்" அதன் வாயிலாயு மன்றே பொருள்கள் அனைத்தும் இருப்பன வாகின்றன என்று யாம் அறிவோம். இவ்வாறன்றே ஸர்வஜன ஐக்யமென்பதும், அநுதாபமென்பதும், உலகின்கணுள்ள பல வகைப்பட்ட மதங்க ளனைத்தினூடும் கடவுள் வடிவமாய் ஓடி நின்றிலங்கும் இச் சர்வார்ஹமத மென்பதும். அது முக்காலத்தும் உண்மையா யுள்ளதென்க. 'மயி ஸர்வம் இதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ'' "இம் மணிகளினூடே செல்லுஞ் சூத்திரம் யான்." ஒவ்வொரு மணியும் ஒரு மதம் அல்லது அதன் உட்பிரிவாம். மணிகள் பல வகைப்பட்டனபோல மதங்களும் பல்வகையனவாம். பகவான் அவை யனைத்தினூடும் செல்லும் நூலா யிருக்கின்றார். மனிதருள் பெரும்பான்மையோர் அதனை யறியாதிருந்தும் அவர்கள் அனைவரும் பகவானிடத்தும் பகவான் மூலமாயும் தொழிற் புரிபவர்களா யிருக்கின்றனர். அவர்கள் ஒரு நிமிஷநேரமேனும் அவனுக்குப் புறம்பே யிருந்

தல் முடியாது; ஏனெனில், எல்லாவிதத் தொழிலும் அவன் மூலமாயும் அவனிடத்துமே சாத்திய மென்க. அவனை யாம் இனையனென்று வரையறுத்துக் கூறுதல் முடியாது. அவன் கடவுளே என்று கூறுவதைத் தவிர்த்து வேறு லக்ஷணங்கள் சொல்வது முடியாது.

வேற்றுமையின்கண் ஒற்றுமையே பிரபஞ்ச அமைப்பின் ஒழுங்காய்ப் போந்துளது. யாமனைவரும் மனிதர்களே யாயினும் ஒருவருக்கொருவர் வேறுபட் டிருக்கின்றோம். மாநுடவர்க்கத்திற் சேர்ந்தவர்களெனக் கருதுங்கால் நீவிரும் யானும் ஒருபாற்படுகின்றோம். ம-rா-rா-ஸ்ரீ இன்னார் என விவகரிக்கையில், நும்மிடத்திருந்தும் யான் வேறுகின்றேன். பாலை நோக்குங்கால் ஆண் பெண் என்ற வேற்றுமை நிகழ்கின்றது. இருபாலாருக்கும் பொதுமையான மாநுட ஜாதியில் இருவருஞ் சமமாகின்றார்கள். மனிதர்களாகிய நீவிர் ஜந்துவினின்றும் வேறாயினும், பிராணிகோடிகளென்ற விவகாரத்தில் ஆண் பெண் ஜந்து செடி முதலியயாவும் ஒன்றுபடுகின்றன. ஸத்தாமாத்திரமாய்க் கருதுங்கால் அகில பிரபஞ்சமும் நீவிரும் ஒன்றாகின்றீர்கள். இப் பிரபஞ்சத்தில் எஞ்சிநிற்கும் தனிப் பரம்பொருளாகிய கடவுளே அந்த சமஷ்டி ஸத்தையாம். அப் பரம்பொருளினிடத்தில் யாமெல்லாம் ஒன்றுபடுகின்றோம். ஆனால், சிருஷ்டியில் இவ் வெல்லா வேற்றுமைகளும் அவசியமாய் ஏற்பட்டு என்றும் உள்ளன வாகின்றன. எமது செயல்களிலும், யாம் வெளிப்படுத்தும் சக்தி விசே

டங்களிலும் இத்தகைய வேற்றுமைகள் எக்காலும் இருக்கவே செய்யும். ஆகவே, ஸர்வார் ஹமத மென்பதால் எல்லா மாந்தர்களும் ஒரே விதமான மதக் கொள்கைகளை நம்ப வேண்டுமெனில், அது முடியாத காரியமாம். அஃது ஒரு காலும் ஆகாது. எல்லா முகங்களும் ஒரே தன்மையா யிருக்குங் காலம் என்று மில்லை.

இனி, ஒருதன்மையான புராண சித்தாந்தமே அனைவரும் பொதுவாய் ஏற்றுக் கொள்வார்க ளெனக் கருதுவதும் அசாத்தியம். அஃது எக்காலத்தும் நடவாது. அன்றி அனைவர்க்கும் பொதுவான கர்மகாண்டமும் ஏற்படுத்த முடியாது. அத்தகைய நிலைமை ஒருகாலும் உள்ளதாகாது. அவ்வாறு எப்பொழுதேனும் நிகழுமாயின் உலகமே அழிந்து போய்விடும். ஏனெனில், வேற்றுமையன்றே உயிர் வாழ்க்கையின் பிரதம தத்துவம். யாம் எல்லாம் வியஷ்டி வியக்திகளா யிருப்பது எதனால்? வேற்றுமையானன்றோ? ஏற்றக் குறைவின்றித் தராசில் நிறுத்தது போல் நேர்நிறையா யிருத்தல் எமது அழிவினுக்கே ஏதுவாய் முடியும். இதற்கு நிதர்சனமாக இவ் வறையிலுள்ள உஷ்ணத்தை யுற்று நோக்குவாம். இஃதெப்பொழுதும் எங்கும் சமமாய்ப் பரவி ஒரே நிலைமையி லிருக்க முயல்கின்றது. அஃது அத்தகைய நிலைமையை யடையுமேல், அவ் வுஷ்ணம் நமது விவகாரங்களுக்கு இல்லாததற்குச் சமானமேயாம். இப் பிரபஞ்சத்திற் பொருட்களின் சலனம் எதனால் உண்டாகின்றது? நிறையில்லாமையா லன்றி

வேறென்ன? அனைத்தும் ஒரே தன்மையா யிருத்தலாகிய ஐக்கியமெனும் நிலைமை இவ் வுலகம் அழியுங் காலையிற் றான் உண்டாகும்; இல்லாவிடின் அஃது அசாத்தியமே; அதுமாத்திரமே யன்றி அவ்வித நிலைமை யுளதாவதும் அபாயகரமாம். யாமனைவரும் ஒரேவிதமாகவே சிந்திக்க வேண்டுமென யாம் ஒருகாலத்தும் விரும்பலாகாது. அங் ஙனம் விரும்புமிடத்து ஒவ்வொருவர் சிந்திப்பதற்கும் யாதொரு சிந்தனையும் இல்லாதுபோம். பொருட் காட்சிச் சாலையில் வைத்திருக்கும் எகிப்திய மம்மிகளைப்போல், யாம் அனைவரும் ஒரே மாதிரியாய்க் கருதுவதற்கு யாதொரு கருத்து மின்றி ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டிருக்கவேண்டி வரும். ஆகையால், இந்த வேற்று மையே நமது விருத்திக்கும் கருத்துக்கும் முக்கிய காரண மாய் நிற்பதாம். இவ்வாறுதான் எக்காலமும் இருத்தல் வேண்டும்.

ஆகவே, ஸர்வார்ஹமதலக்ஷ்ய மென்பது யாது? என்று வினவுங்கால், அஃதொரு பொதுமையான தத்துவ சித்தாந்தமு மன்று; அல்லது பொதுமையான வொரு புராண சித்தாந்தமு மன்று; அன்றி யனைவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய பொதுமை யானதொரு கர்மகாண்டமு மன்று. மற்றென்னை யெனின், சக்கரத்திற்குட் சக்கிர மமைந்துள்ள மகா சூக்குமமும் விசித்திரமும் ஆச்சரிய காமுமான மகா யந்திரமெனத் தகும் இப் பிரபஞ்சம் இவ் வண்ணமேதான் சுழன்றுகொண் டிருத்தல் வேண்டும்.

ஆயின், நாம் என்ன செய்யக்கூடுமெனில், யாம் அவ் வியந்திரத்தின் சக்கரங்களுக்கு ஒருவாறு எண்ணெய் பூசி அதை மென்மையாய் ஓடச்செய்து, அதன் வேகத்தையும் வன்மையையுஞ் சிறிது தணிக்கலாம். அஃதெவ்வாறெனின், வேற்றுமையென்பது இயல்பிலேயே இன்றியமையாததென்பதை யுணர்வதாலென்க. ஒரே உண்மையைப் பல வகையாலும் விளக்கலாம் என்பதையும், அவ் வகைகளில் ஒவ்வொன்றும் அது செல்லுங்காறும் உண்மையே யென்பதையும், யாம் அறிதல்வேண்டும். இதனைச் சூரியனை யுதாரணமாகக் கொண்டு விளக்குவாம். பூமியின்மீது நிற்குமொருவன் சூரியன் காலையில் உதயமாகும்பொழுது பார்க்கிறதாக வைத்துக்கொள்வோம். அவன் முதலிற் பெரியதோர் உண்டை வடிவத்தைக் காண்கின்றான். அவன் சூரியனை நோக்கிப் பிரயாணம் செய்ய விருப்பங் கொண்டு; தன் பிரயாண மார்க்கத்தின் ஒவ்வொரு கட்டடத்திலும் புகைப்படம் எடுப்பதற்கு வேண்டிய யந்திரத்துடன் புறப்பட்டு மேற்சென்று புகைப்படமெடுக்கிறான். அவன் ஒவ்வொரு ஆயிர மயிலுக்கும் ஒரு புதிய புகைப்படம் எடுத்துக்கொண்டு சூரியனைப்போய்ச் சேருகிறவரையிலும் அவ்வாறே செய்வதாக வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு கட்டடத்திலும் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றக் கட்டடங்களில் எடுத்தவற்றினும் வேறுபாடுடையதாய்த் தோன்றும். அவன் திரும்பி வருகையில் அவன் எடுத்துக்கொண்டுவந்த பல்லாயிரம் புகைப்படங்களையும் பார்த்தால், அத்துணையாயிரம் சூரியர்களின் படங்கள்தாமோ இவையெனத் தோ

ன்றும். ஆனால், அவன் ஒரே சூரியனைத் தன் பிரயாணத்தின் வெவ்வேறு கட்டடங்களிலும் புகையிற் பிடித்தானென்று எமக்குத் தெரியும். அவ்வாறே கடவுள் விஷயமுமென்க. பெருமையாகவேனும் சிறுமையாகவேனும், உயர்ந்த தத்துவஞானத்தின் வாயிலாகவோ, தாழ்ந்த தத்துவஞானத்தின் வாயிலாகவோ, உத்தம சம்பிரதாய விதிகளின்படியோ, அதம சம்பிரதாய விதிகளின்படியோ, மிகச் சிறந்த புராண சித்தாந்தத்தின் வழியாகவோ, மிகப் புன்மையான கற்பனைப் பிரபந்தத்தின் வழியாகவோ, மிக்க சாத்துவிகம் பொருந்திய கர்மங்களின் மூலமாகவோ, அதி தாமசமான புற் பூடாதிகளில் ஆராதனை மூலமாகவோ, பிரதி மதமும்-பிரதி ஆன்மாவும் - பிரதி ஜாதியும்-பிரதி சமயமும்- அறிந்தோ அறியாமலோ, மேனோக்கிக் கடவுள்முகமாய்ச் செல்லாநிற்கின்றன. மனிதனுக்கு உண்டாகும் ஒவ்வொரு சத்திய தரிசனமும் ஈசுவர தரிசனமன்றி மற்றேதுமன்று. நாம் ஒவ்வொருவருங் கையில் ஒரு பாத்திரம் எடுத்துக்கொண்டு ஏரியினின்று அதில் தண்ணீர் கொண்டு வருவதாக வைத்துக்கொள்வோம். ஒருவன் கிண்ணமும், ஒருவன் குடமும், மற்றொருவன் அதைவிடப் பெரியவொரு குடமும் இவ்வாறாக எடுத்துக்கொண்டு அவற்றைத் தண்ணீரால் நிறைப்பதாக வைத்துக்கொள்வோம். அப் பாத்திரங்களை எடுத்து ஒவ்வொன்றாய்ச் சோதிக்குங்கால், அந்தப் பாத்திரத்திலுள்ள ஜலம் அதன் அளவுக்குத் தக்கவாறே யென்றேற்படும். கிண்ணத்தைக் கொண்டு வந்தவனிடம் கிண்ணத்தளவு ஜலமும், குடங் கொணர்ந்தவனிடம்

குடத்தினளவு ஜலமுமே இருக்கக் காண்போம். ஆனால், ஒவ்வொரு பாத்திரத்திலும் இருப்பது தண்ணீரன்றி மற்றெதுவு மில்லையன்றோ? அவ்வாறே மத விஷயத்திலும், நமது மதங்கள் இத்தகைய சிறு பாத்திரங்களைப்போ லிருக்கின்றன. நம்முள் ஒவ்வொருவரும் ஈசுவரானுபூதியை யடைய முயல்கின்றோம். இப் பலவகைப்பட்ட பாத்திரங்களிலும் நிறைந்துள்ள ஜலத்தைப் போன்றவர் ஈசுவரன். ஒவ்வொரு பாத்திரத்திலும் உண்டாகும் ஈசுவர தரிசனம் அப் பாத்திரத்தின் அளவினதே யாகும். அவ்வாறு பினும் ஈசுவரன் யாத்திரம் ஒருவரே இக் காணப்பட்ட தரிசனங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளவர் அவ் ஈசுவரனே. நமக்குக் கிடைக்கக்கூடிய சமரஸத்தன்மையைப் பற்றிய அறிவு இவ்வொன்றேயாம்.

உபதேச முகத்தாற் கூறும்வரையிலும் இதுகாறுஞ் சொல்லிவந்தது சரியே. ஆனால், இச் சமய சமரஸத்தை அனுஷ்டானத்திற் சாதிப்பதற்கு மார்க்கம் ஏதேனு முள்ளதோ? மதத்தைப்பற்றிய பலவகைக் கொள்கைகளும் உண்மையே என்னும் இவ்வங்கீகார உணர்வு தொன்றுதொட்டு உண்டாயிருக்கின்றது. பாதகண்டத்திலும், அலெக்ஸாந்திரியாபுரியிலும், ஐரோப்பிலும், சீனநாட்டிலும், ஜப்பானிலும், திபெத்திலும், சமீபத்தில் அமெரிக்காவிலும், இவ்வாறு பற்பல தேயங்களிலும் சர்வசமயங்களையும் அன்பிலே ஒன்று சேர்க்கத்தக்க ஒருசமய சமரஸ சம்பிரதாயத்தை ஸ்தாபிக்கப் பன்னூறு பிரயத்னங்கள் செய்யப்பட்டன.

அவைகள் காரியத்தைச் சாதிக்கும்படியான மார்க்கமொன்றினையும் அவலம்பிக்காமையால், அவை யாவும் தவறிவிட்டன, உலகத்தின்கண்ணுள்ள சர்வ மதங்களும் சரியென அநேகர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். ஆனால், இம் மதங்களெல்லாம் ஒன்றுபடும்பொழுது ஒவ்வொரு மதமும் தன் சிறப்பான அம்சத்துடன் விளங்கத்தக்க மார்க்கத்தை அவர்கள் கைக்கொள்கின்றனரில்லை. ஒரு மனிதன் தன் மதத்தின்கண்ணுள்ள விசேஷத் தன்மையை இழக்காது மற்ற மதங்களுடன் ஐக்கியப்படக்கூடிய அம்சத்தைக் காட்டத்தக்க மார்க்கமே சாத்தியமானது. ஆனால், இதுவரையில் சமாஸத்தை நிலைநாட்ட ஏற்பட்ட மார்க்கங்கள் எல்லா மதக் கொள்கைகளையும் சுவீகரிக்க வேண்டுமெனச் செப்பினவே யன்றிக் காரியத்தளவில் நோக்குங்கால், தாமும் அவற்றையெல்லாம் சில கட்டுதிட்டமான சம்பிரதாயங்களுக்குப் பந்தப்படுத்தி, அக்காரணத்தினாலேயே முன்னிலும் அதிகமான உட்பிரிவுகளையும், ஒன்றற்கொன்று சண்டைச் சச்சரவு மனவருத்தங்களையும் உண்டுபண்ணின.

இவ் விஷயமாய் யானும் ஒரு சிறிய மார்க்கத்தை யோசித்து வைத்திருக்கிறேன். அது காரியார்த்தத்துக்குப் பயன்படுமோ படாதோ அறியேன். உங்களுக்கு அதனைக் கூறுகின்றேன். அதை நீங்கள் தர்க்கித்துத் தெளியலாம். எனது மார்க்கமாவது என்னையெனின், முதன்முதல், 'இருப்பதை யழிக்கேல்' என்னும் முதுரையை ஞாபகத்தில் வைக்கும்படி யான் மன்பதையை வேண்டுவேன்.

எதையும் தகர்த்தெரியும் சீர்திருத்தக்காரர்கள் உலகத்துக்கு யாதொரு நன்மையுஞ் செய்வதில்லை. ஆகவே, எதனையும் உடைக்கேகல்; தரைமட்டம் ஆக்கேகல்; ஆனால், நிர்மானம் செய்ம்மின்; உங்களாற் கூடுமாயின் உதவி புரிமின்; இல்லாவிட்டால் கை பொத்தியருகே நின்று காரியம் நடந்தேறுவதைப் பார்மின்; உங்களால் உதவிபுரியக் கூடாமையின், துன்பஞ் செய்யாமலிருங்கள்! எம்மனிதனது அந்தரங்கமான கொள்கைகளைப்பற்றியும், அவை உள்ளன்புடன் கூடியிருக்கும் வரையிலும் வசைமொழி வழங்கேகல். இரண்டாவது, மனிதன் உள்ள நிலைமை உணர்ந்து அந்நிலையினின்றும் அவனை யுயர எழுப்பவேண்டும். மதங்களெனும் வட்டத்திற்குக் கடவுள் நடுமைய மென்பதும், நம்முள் ஒவ்வொருவரும் அம் மையத்தினின்று வட்டத்தின் சுற்றுக் கோட்டிற் செல்லும் நேர்க்கோட்டின் வழியால் அக்கடவுளை நோக்கிச் செல்லுகின்றோ மென்பதும் சரியாயின், யாமனைவரும் அம் மையத்தை யவசியம் போய்ச் சேர்வோம் என்பது வலியுறுகின்றது. மையத்தினின்று வட்டச் சுற்றுக் கோட்டுக்குப் பாயும் எல்லா நேர்க் கோடுகளும் சந்திக்கும் அம்மையத்தின்கண்ணே எமது வேற்றுமைகள் யாவும் நீங்கும். ஆனால், அவ்விடம் வந்து சேரும் வரையில் வேற்றுமையானது அவசியம் இருக்கவே செய்யும். இம்மையத்தினின்று செல்லும் நேர்க் கோடுகளெல்லாம் அம்மையத்தின்கண்ணே வந்து சேருகின்றன. நம்முள் ஒருவர் தம் இயல்பிற் கிணங்க இக் கோடுகளுள் ஏதேனும் ஒன்றன் வழியாய்ச் செல்கிறார். மற்றொருவர்

மற்றொரு கோட்டின் வழியாய்ச் செல்கிறார். யாம் முதற்கண் துவக்கிய கோட்டின் வழியே செல்வோமாயின், இறுதியில் அதே மையத்துக்கு வந்து சேர்வது திண்ணம். ஏனெனில், "சர்வ மார்க்கங்களும் உரோமபுரியை நோக்கியன்றே செல்கின்றன." "ஸர்வேஷாம் ஸ்வரூபம் ஸ்வதுஸ்துகம் வர்த்ததி" நம்முள் ஒவ்வொருவரும் நமக்குள்ள வியல்பினுக் கிணங்க அபிவிர்த்தி யடைந்து வருகின்றோம். ஒவ்வொருவரும் காலக்கிரமத்தில் உயர்ந்த உண்மையை அறிவோம். ஏனெனில், சர்வ மானவர்களும் இறுதியில் தமக்குத் தாமாயன்றே உபதேசகர்களாய் அமையவேண்டும்? உங்களாலாவது என்னாலாவது யாது முடியும்? ஒரு குழந்தைக்கேனும் உபதேசிக்க உங்களா லாகுமெனக் கருதுகின்றீர்களா! ஒருகாலத்து முங்களா லாகாது. குழந்தை தனக்குத்தானே கற்றுக்கொள்கின்றது. அதற்கு வேண்டிய சவுகரியங்களை யமைத்தலும் இடையூறுகளை நீக்குதலும் உங்கள் கடமையாகும். ஒரு செடி வளர்கின்றது அதை வளரச் செய்வது நீங்களா? அதைச் சுற்றிலும் வேலி யமைத்துச் செடியை யாதொரு ஜந்துவும் மேயாமலிருக்கப் பார்த்துக்கொள்வதே உங்கள் கடமையாகும். அதனுடன் உங்கள் கடமை முடிகின்றது. இனி அச்செடி தானே வளரவேண்டியது. அவ்வாறு தான் பிரதி மனிதனுடைய ஆத்மோந்நதியும். உங்களுக்குக் கற்பிக்க யாவரானும் ஆகாது. உம்மை ஆத்மகாமனாகச் செய்ய எவரானும் ஆகாது. உமக்கு நீரே ஆசாரியனாதல் வேண்டும்.

துங்கள் உந்நதி அந்தர்முகமாகவே சாதிக்கப்படுதல் வேண்டும்.

காரிய குருவால் யாது பயன் எனில், பிரதிபந்தங்களை யவர் இனிது விலக்கக் கூடும். அதனுடன் அவரது கடமை முடிவு பெறுகின்றது. ஆகையால், உங்களாற் கூடுமாயின் உதவி புரிமின்; ஆயின், அழிக்கற்க! மனிதர்களை ஆத்ம காமர்களாக்க உங்களால் முடியு மென்னும் வீண் எண்ணங்களை யொழிமின்! இவை யெல்லாம் முடியாதவையாம். உங்களுக்கு உங்கள் ஆன்மாவைத் தவிர்த்து வேறு ஆசாரியன் இலன். இதனை யொப்புக்கொண்மின்! அங்ஙனம் ஒப்புக்கொள்வதனால் ஆகும் பயன் என்னையெனின், மன்பதையில் பல்வேறு இயல்புகளுள்ள மானிடர்களைக் காண்கின்றோம். பல்லாயிரக் கணக்கான மனவேறுபாடுகளும் மனச் சார்புகளும் அமைந்தவரும் உளர். காரியத்தளவில் பயன்படுமாறு இவர்களைப் பூர்ணமாய்ப் பொதுமைப்படுத்துதல் கூடாமை. ஆயின், யான் கொண்ட கருத்திற்கு இவர்களை நான்கு வகுப்புகளாய்ப் பிரித்தற் போதுமானது. முதலாவது, சுறுசுறுப்பாய்க் கருமத்தை செய்யும் மனிதர் சிலர் இருக்கின்றனர். வேலை செய்வதே அவர்கள் விருப்பம். அவர்களது தசையிலும் நரம்புகளிலும் அபாரமான வலிமை சேர்ந்திருக்கின்றது. உழைத்தலும், வைத்தியசாலைகள் கட்டுவதும், தர்மகைங்கர்யம் புரிதலும், வீதிகள் அமைப்பதும் ஆகிய இன்னோரன்ன பலவகைக் கருமங்களைச் செய்வதிலேயே அன்னாருக்குத்

தாற்பரியம். இத்தகையார் தொழிலில் விருப்பமுடையார் எனப்படுவர். இனி, காம்பீர்யத்தையும் சௌந்தரியத்தையும் பெரிதும் காதலிப்பவரான உற்சாகப் பிரியர் சிலர் உளர். அன்னார், சௌந்தரியத்தைப்பற்றி நினைக்கவும், சிருஷ்டியின் வனப்பை யனுபவிக்கவும், அன்பையும் அன்புருவான ஈசனையும் போற்றவும் விரும்புவர். இத் தகையவற்றினையே அவர்கள் காதலிப்பர். பண்டைக்காலத்து மகான்களாய முனிவர்களையும், பூதலத்திற் றோன்றிய ஈசனது திருவவதாரங்களையுமே அவர் முழு மனதுடனும் நேசிப்பர். ஹேதுவாதத்தின் உதவி கொண்டு அபிஷிக்த மூர்த்தி (கிறிஸ்து) புத்தர் முதலியவர் உண்மையாய் உலகத்தில் இருந்தனரா இல்லரா எனத் தாபிப்பது அவர்களுக்கு அநாவசியமாம். திருமலை உபந்நியாச (Sermon on the Mount) நிகழ்ச்சியின் சரியான காலத்தைப்பற்றியேனும், ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த சரியான நிமிஷத்தைப்பற்றியேனும் அவர்களுக்கு அதிக கவலை யில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் எம்பெருமானது திருவுருவக் காட்சியும், அவனது திவ்விய குணாநுபவமுமேயாம். அவர்களது அன்பினுக்குரிய புருஷோத்தம மங்களத் திருமேனிகள் உண்மையில் இருந்தனரா அல்லரா என்பனத ஸ்தாபிக்க முடியுமா முடியாதா வென்பதைப்பற்றி யவர்களுக்கு எட்டுணையும் கவலை கிடையாது. மேற் சொல்லிய இயல்பினையுடையவர் பக்தர், அல்லது உற்சாகப் பிரியர் எனப்படுவர். இனி, மானச சூக்ஷ்ம திருஷ்டியிற் பிரியமுள்ளவர் சிலர் உளர். அவர் தம்மைத்தாமே பகுத்தறி

ந்து, மனோ தர்மங்களைச் சோதித்துணர்ந்து அவற்றைத் தம் வசமாக்குமாற்றின் அறிவைப் பெற விரும்புவர். இவர்கள் யோகதிருஷ்டிகள் எனப்படுவர். கடைசியாகத் தத்துவஞானிகளெனப்படுவோர் உளர். அவர்கள் எதையும் சீர்தூக்கிப் பார்த்து, மானிட அறிவினுக்கும் அப்பாற்பட்டதையும் தம் புத்தியின் உதவி கொண்டு உணர விரும்புவர்.

இனி, மதமானது மன்பதையின் பெரும்பான்மையான பகுதியைத் திருப்திசெய்ய வேண்டுமாயின், இக்கூறிய பல வகைப்பட்ட மனச் சார்புகளுக் கெல்லாம் உணவளிக்கும் ஆற்றலுள்ளதா யிருத்தல்வேண்டும். இவ்வாற்றல் குறைவுபடுமிடத்து இப்பொழுதுள்ள மதப்பிரிவுகள் ஏகதேசமாகின்றன. இம் மதப் பிரிவினருள் ஒரு சாரரிடஞ் செல்வோம். அவர்கள் அன்பையும் ஆர்வத்தையும் பிரசங்கிக்கின்றனர். அவர்கள் பரமனது அருளைப் பாடி, கருணைக் கண்ணீர் சொரிந்து, ஐயனது அன்பையும் அவன் ஆட்கொண்ட அன்பர்கள் அனுபவிக்கும் திவ்விய சுகங்களையும் பற்றி உபந்நியஸிப்பர். ஆனால், அன்னாரை நோக்கி, "நண்பரே! அஃதெல்லாம் சரிதான்; அதைவிட பலமானது எனக்கு வேண்டும்; கொஞ்சம் யுக்தியும் தத்துவ சாஸ்திரமும் கொடும்! விஷயங்களைப் படிப்படியாயும் யுக்தி யுக்தமாகவும் ஆராய விரும்புகிறேன்," என்பீரேல், உடனே அவர்கள், "அப்பாலே போ!" என்று உம்மை வெருட்டுவார்கள். அவ்வாறு வெருட்டுவதுடன் மாத்திரம்

அமையாது தங்களாற் கூடுமாயின் வேறு ஸ்தானத்துக்கும் அனுப்புவார்கள். இதனால் ஏற்பட்ட தென்னவெனில், அம் மதப்பிரிவினர் பக்தர்களுக்கு மாத்திரமே பயன்படு வர். ஏனையோர் தாமும் யாதொரு சகாயத்தையும் அடைவ தில்லை. இருப்பதையும் அழிக்க முயல்கின்றனர். இன்னும் அவர்கள் இழைக்கும் துன்பம் என்னவெனில், தாங்கள் தான் இதரர்களுக்கு உதவி புரிவதில்லையே! அவ் விதரர் களை யாவது உள்ளன்புள்ள மெய்யர்களென நம்புகின்ற னரா? அதுவுமில்லை. அவ் விதரர்கள் கூடிய சீக்கிரத்தில் இவ் வுலகத்தை விட்டொழிவதே யாவருக்கும் க்ஷேமகர மென்றுங் கருதுகின்றார்கள். இவ்வாறே இவர்கள் கூறுவன வெல்லாம் கேடிழைப்பன வாகின்றன. இதுநிற்க, இந்தியா முதலிய கீழ் நாடுகளின் குப்தஞான வித்தையைப்பற்றி ஆடம்பரமான நீண்ட தொடர் மொழிகள் அமைந்த பரி பாஷைகளைக் கொண்டு தர்க்கிக்கும் தத்துவநூற் புலவர் மண்டலத்துக்கு என்னைப்போன்ற சாதாரண மனிதன் ஒருவன் சென்று, ஐயன்மீர்! ஆத்தியாத்மிக வழி கைகூடு மாறு எனக்கு ஏதேனும் கூறுவீரோ!" என்று வினவினால், அவர்கள் உடனே நகைத்து, "நீர் யுக்தியில் எம்மைவிட மிகத் தாழ்ந்தவரானமையால், எமது சங்கத்தில் இருக்கத் தக்கவர் அல்லீர். ஆத்தியாத்மிக வழி உமக்கென்ன தெரியும்?" என்பார்கள். இவர்க ளெல்லாரும் பழுத்த ஞானிகள். நீர் அவர்களை விட்டு வெளியே செல்லுமாறு கதவு வழியைத்தான் காட்டுவார்கள். இவர்களன்றிச் சில யோகமதச் சார்பினர், பலவித ரூபங்களைப்பற்றியும், பல

வித மனோவஸ்தைகளைப்பற்றியும், மனச் சக்தியால் சாதிக்கக்கூடும பெருங் கருமங்களைப்பற்றியும் பிரசங்கிப்பார். ஒரு சாதாரண மனிதன் அவர்கள்பாற் போந்து, "யான் செய்யக்கூடியது ஏதாயினும் காட்டுங்கள்! உங்களைப்போல் சூக்கும விசாரஞ் செய்ய எனக்குச் சக்தியில்லை; எனக்குத் தகுந்தது யாதாயினும் உதவுவீரோ?" என்று கேட்பானேல், அவர்கள் நகைத்து, "ஏ! இந்த மூடனைப் பாருங்கள்; அப்பா! உனக்கு நாங்கள் சொல்லும் புத்திமதி இதுவே! நீ தற்கொலை செய்துகொள்வதே க்ஷேமகரம். நீ இப்பூமியில் இருப்பது வீணே," என்பார்கள். இவ்வாறே உலகமெங்கணும் நடந்துவருகின்றது. இத்தகைய மதப் பிரிவினரில் வைரமேறிய உபதேசகர்களை ஒருங்கு சேர்த்து ஓரறையில் அடைத்து, அவர்கள் ஒருவரை யொருவர் நோக்கி எள்ளி நகைக்கும் அழகிய காட்சியைப் புகைப்படமெடுத்தால் எவ்வளவு ஆச்சரியமும் விநோதமுமாயிருக்கும்!

இதுதான் மதவிஷயமாய் ஜனங்களின் சுபாவம் உள்ளபடி. நான் பிரசாரஞ் செய்ய விரும்பும் மதமானது எல்லாவித மனச்சார்புகளுக்கும் ஒத்ததாயிருக்கவேண்டும்; அதில் தத்துவஞானமும், பக்திரஸமும், சூக்ஷ்மயோக திருஷ்டியும், கர்ம அமைதியும் சமமாய்ப் பொருந்தி யிருக்கவேண்டும். உங்கள் கல்லூரிகளினின்று பட்டோபாத்தியாயர்களும், விஞ்ஞானநூற் புலவர்களும், பொருட்டிறநூல் வல்லோரும் வருவரேல், அவர்கள் "யுக்தியே யெமக்குவேண்டும்" என்பர். நான் பிரவசனம்

செய்யும் மதத்தில் அவர்களுக்கு இஷ்டமான அளவு யுக்தி கிடைக்கும். ஆனால், யுக்தியும் சிறிது தூரந்தான் செல்லும். அதற்கு மேல் அது பயன்படாதது கண்டு, "ஐயா! இனிமேல் செல்ல எங்களாலாகாது," என்று ஒப்புக்கொண்டே தீர்வார்கள். "இதை விட்டுவிடு! அதை விட்டுவிடு! தெய்வம், மோக்ஷம் என்னும் இக் கொள்கைகள் மூடபக்தியே," என்பீரேல், யான், "ஐயா! தத்துவ சாத்திரியாரே! உமது இவ் வுடல் அதனினும் பெரிய மூடபக்தி யன்றே! இதனை முன் விட்டுவிடும்; போஜனம் பண்ண அகத்துக்கேனும், மாணவருக்குப் பாடஞ்சொல்ல உமது தத்துவசாஸ்திர ஆசாரிய ஸ்தானத்திற்கேனும் போகவேண்டும். தேகத்தை விடுமின்! முடியாவிட்டால், வாய் பொத்தி சரணாகதி இரந்து அங்குப் போய் உட்காரும்!" என்பேன். ஒவ்வொரு மதத்திலும் தத்துவபாகம் இருத்தல்வேண்டும். இவ்வுலக மனைத்தும் சமஷ்டியில் ஏகமென்பதையும், பிரபஞ்சத்தில் சர்வவியாபகமுள்ள ஸத்துப்பொருள் ஒன்றே யென்பதையும் தத்துவகாண்டம் உபதேசிக்கும் விதத்தை நாம் நிரூபணம் பண்ண வேண்டும். அவ்வாறே யோகாப்பியாச விருப்பமுள்ளவன் வருவனேல், அவனுக்கு மானஸ தத்துவசாஸ்திரத்தை யெடுத்துரைத்து, அதை யவன்முன் பிரத்தியக்ஷமாய் நிரூபிக்க நாம் ஆயத்தமா யிருக்கவேண்டும். "நீங்கள் இங்கே வரலாம்; வேண்டியதைக் கற்றுக்கொள்ளலாம்; மூலையில் உட்கார்ந்துகொண்டு ஒரு காரியத்தையுஞ் செய்ய முடியாது," என்று சொல்லவேண்டும்.

உற்சாகம் நிறைந்த ஜனங்கள் வருவார்களாகில், நாம் அவர்களுடன் உட்கார்ந்து, அவர்களுடன் சிரித்து, அவர்களுடன் பரமனைப் பாடிப் பாடிக் களையவேண்டும். அன்பெனும் அமுதத்தைப் பருகி மத்தர்கள்கள் ஆதல் வேண்டும். திடகாத்திர முள்ளவனொருவன் தொழில் புரியும் ஆற்றலுடன் வருவானுயின், அவனுடன் நாம் சென்று தொழில் புரிதல் வேண்டும். இத்தகைய சகல வித குண வேறுபாடுகளின் சேர்க்கையே சர்வார்ஹ மதத்துக்குக் கிட்டத்தட்ட ஒத்ததா யிருக்கும். அனைவரும் தத்தம் மனதின்கண் வினை, தத்துவம், யோகம், உற்சாகம், தொழில் என்பனவற்றின் அம்சங்களைச் சமாசமாய் இருக்கப் பெறுமாறு ஈசன் அருள் புரிவாராக. இதுவே சம்பூர்ண புருஷ லக்ஷண மென்பது என் து கொள்கை. இக்குணம்சங்களில் ஒன்றிரண்டுமாத்திரம் பொருந்தப் பெற்றவர்கள் ஒருபக்ஷமாய் நிற்பாராவர். அத்தகைய பக்ஷபாதக் கொள்கையினராலேயே இவ்வுலகம் நிறைந்திருக்கின்றது. அவர்கள் தாம் செல்வதற்கு ஒரு வழியை மாத்திரமே அறிந்துகொண்டிருக்கின்றனர்; ஏனையவற்றை யெல்லாம் அபாயகரமென்று கருதுகின்றனர். மேற்கூறிய நால்வகைக் குணங்களையும் அழகுபெறப் பொருந்தி யிருக்குமாறு ஆன்மாக்களுக்கு உதவி புரிவதே எனது கருத்து. இம் மதக் கொள்கைக்குத்தான் பாரத வருஷத்தில் யோகம் என்று பெயர். யோகம் என்றால் ஈசனுக்கும் மனிதனுக்கும் ஐக்கியம், மனிதனது ஆத்ம வியல்புக்கும் ஸ்தூல வியல்புக்கும் ஐக்கியம் என்றுபொருள். தொழில் புரிவோன் அதை

மனிதனுக்கும் மானுடவர்க்கத்துக்கு முள்ள ஐக்கிய மெனக் கருதுகின்றான். ஹடம் முதலிய யோகம் புரிவோன், தனது சூக்கும சரீரத்துக்கும் ஸ்தூல சரீரத்துக்கும் ஐக்கியமென அதை அறிகிறான். பக்தர்களுக்கும் பக்தவத்ஸலனுக்கும் ஐக்கியமென்று பக்தர்கள் அதை யறிகின்றார்கள். சத்துத்தன்மை யுள்ளனவெல்லாம் ஒன்றேயென்னும் ஐக்யத்தைத் தத்துவஞானி அதன்கண் அநுபவிக்கின்றான். இதைத்தான் பாரதவர்ஷத்தில் யோகம் என்கிறார்கள். இது ஸம்ஸ்கிருத மொழி. மேற் சொல்லிய யோகத்தின் நால்வகைப் பாகுபாடுகளுக்கும் வடமொழியில் வெவ்வேறு பெயர்கள் உள. இத்தகைய ஐக்கியத்தைப் பெற விரும்புவோனுக்கு யோகி என்று பெயர். கர்மத்தைச் செய்து அதன் மூலமாய் ஐக்கியத்தைப் பெற முயல்வோனுக்குக் கர்மயோகி என்று பெயர். பக்தியினால் ஐக்கியம் பெற முயல்வோனுக்குப் பக்தியோகி என்று பெயர். உடல் தத்துவ ஆராய்ச்சியினால் அதைப் பெற முயல்வோனுக்கு ராஜயோகி என்று பெயர். தத்துவ ஞானத்தினால் அதைப் பெற முயல்வோனுக்கு ஞானயோகி என்று பெயர் ஆகவே, யோகி என்னும் இம்மொழியானது மேற்கூறிய நால்வகையாருக்கும் பொதுவா யமைந்த பெயராகின்றது.

இனி, ராஜயோகத்தைப்பற்றி முதலில் ஆராய்வோம். மனதை படக்குவதென்று சொல்லப்படுகிற இவ் இராஜயோகம் என்பது யாது? இதைப்பற்றி ஐரோப்பியர் பலர்

மிகத் தவறான அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். இந்த யோகங்களில் எதுவும் யுக்திக்கு விரோதமானதன்று. 'உன்னுடைய யுக்தியைச் சுருட்டி மடக்கி உன் குருவினிடத்தில் ஒப்புவித்துவிட்டு, நீ அவர் சொன்னபடியே குருட்டுத்தனமாய் நம்பவேண்டும்' என்று அவ் யோகங்களுள் எதுவும் கூறுவதில்லை. விண்ணுலகத்தினின்று இறங்கிய எந்தத் தேவதைக்கும் உன்னை யடிமை யாகும்படி அவை கூறுவதில்லை. 'உங்கள் யுக்தியை நீங்கள் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளலாம்' என்றே அவை யாவும் உபதேசிக்கின்றன. எல்லாப் பிராணிகளினிடத்தும் மூவகை அறிவுக் கருவிகள் காணப்படுகின்றன. அவற்றுள் முதலாவது இயற்கை யறிவு. இது விலங்குகளினிடத்துப் பெரும்பான்மையாயும், மனிதனிடத்துச் சிறுபான்மையாயும் காணப்படுகின்றது. அறிவுக் கருவிகளுள் இதுவே மிகத் தாழ்ந்தது. இரண்டாவது அறிவுக் கருவியாவது யாது? யுக்தி யறிவு. இது மனிதர்களிடத்தே அதிகமாய் விர்த்தி யடைந்திருக்கின்றது. இவ் விருவித அறிவுகளையும் நாம் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, இயற்கை யறிவு மிகக் குறைவுற்றதாய் ஏற்படும். விலங்குகளின் புத்தி சொற்பமான விஷயங்களிலேயே பிரவேசிக்குமாதலால், அச் சொற்ப விஷயங்களிற்றான் அவற்றினுக்குள்ள இயற்கையறிவு பயன்படும். ஆனால், மனிதனை நோக்குமிடத்து, அவனிடத்து அக் கருவி யுக்தி யறிவாய் விரிந்திருக்கக் காண்போம். அவன் வ்யவஹரிக்கும் விஷயங்களும் அதற்குத் தக்கவாறு உயர்ந்து விளங்குகின்றன. ஆனால்,

இவ் யுக்தி யறிவுகூடக் குறைவுற்றதாகவே காணப்படும். ஏனெனில், யுக்தியறிவு சிறிது தூரம்தான் செல்லும்; பிறகு அது நின்றுவிடும்; அங்கேபோய், இனித் தன்னாற் செல்ல முடியாதெனக் கூறுகின்றது. அதற்கப்பாலும் அதைத் தள்ளி நீ பார்ப்பையேல் மயக்கமே பயனுய் முடிந்து, யுக்தி என்பதே யுக்திக்கொவ்வா" அறிவாய்விடும். ஆகவே, தர்க்கநூல் முழுமையும் அந்யோந்யாசிரய தோஷத்தின் பாற்படும். உதாரணமாக, நம் உணர்ச்சிக்கு ஆதாரமாய அசித்து சக்தி என்பனவற்றை யாராய்வாம். அசித்தென்பது யாது? சக்தியாற் றொழிற்படுவது; சக்தியோ, அசித்தைத் தொழிற்படுத்துவது.

இவ்வாறு தர்க்கித்துக்கொண்டே போனல், ஒரு கருத்து மற்றொரு கருத்தை யாதாரமாகவும், அந்தக் கருத்து மறுபடியும் முன் சொன்ன கருத்தையே ஆதாரமாகவும் கொண்டு இப்படியே முடிவின்றித் தார்க்கிகர்கள் கூறும் இதரேதராஸ்ரய தோஷத்தின்பாற்படுகின்றது. நமது யுக்திக்கு முன் ஒரு பெரிய தடை யேற்பட்டு வழியை யடைத்துநிற்க, யுக்தியானது அதைக் கடந்து செல்ல முடியாமல் விழிக்கின்றது. ஆயினும், அதைக் கடந்து அதற்கப்புறமிருக்கும் முடிவற்ற நிலையை எப்படியாவது அடைய வேண்டி யுக்தியானது தவித்துக்கொண்டிருக்கிறது. நமது இந்திரியங்களுக்கும் மனதுக்கும் விஷயமான இந்தப் பிரபஞ்சமானது தற்போத நிலையில் பிரதிபலித்த அவ் அநந்த சுவரூபத்தின் ஒரு துண்டேயாம். இனி,

இந்தத் தற்போதத்திற் குள்ளடங்கிய குறுகிய அளவிற் குள் மாத்திரம் நமது யுக்தியானது செல்லுமேயன்றி அதற்கப்புறம் போக அதனு லியலாது. ஆகையால், அதைக் கடந்து செல்ல வேண்டுமாயின், நமக்கு இந்த யுக்தியைவிட வேறான ஒரு கருவியின் சகாயம் வேண்டும். அந்தக் கருவிக்கு அருள் என்று பெயர். ஆகவே இயற்கை யறிவு, யுக்தி, அருள் என்பவை அறிவின் மூவகைப்பட்ட கருவிகளாம். இயற்கை யறிவு ஜந்துகளுக்கும், யுக்தியறிவு மனிதர்களுக்கும், அருளென்பது தெய்வத்தன்மை பொருந்திய மனிதர்களுக்கும் முறையே உரியனவாம். ஆனால், எல்லா மனிதர்களுக்குள்ளும் இந்த மூவகை அறிவுக் கருவிகளின் மூளைகளும் அதிகமாகவோ குறைவாகவோ விளக்கமுற்றுக் காணப்படும். இம் மனக் கருவிகள் ஓங்கி வளரவேண்டுமானல் இவற்றின் மூளைகள் முதலில் ஏற்பட்டிருக்கவேண்டுமல்லவோ? அன்றியும், ஒரு கருவி மற்றொரு கருவியின் பரிபூர்த்தியே யன்றி அதின் எதிர்மறை யன்று. எப்படியெனில், யுக்தி யறிவே வளர்ந்து அருள் வாக்காகின்றமையால், அருள் வாக்கானது யுக்திக்கு மாறுபட்டு நிற்காது அதனைப் பரிபூர்த்தி செய்யா நின்றது. யுக்தி யறிவினுல் அடையப்படாதவை அருள் மகிமையால் விளக்கப்படுகின்றன. ஆகவே, அவை யுக்திக்கு எதிர்மறையாகா. மூப்பானது இளமையின் எதிர்மறையா யிராது அதனைப் பரிபூர்த்தி செய்வதென் றறியத்தக்கது. ஆகையால், தாழ்ந்த அறிவுக் கருவியை உயர்ந்த அறிவுக் கருவியென மயக்குவதால் பெருத்த அபாயம் உண்டாகுமென்

பதை மாத்திரம் நாம் மனதில் வைக்கவேண்டும். இபற்கை யறிவே அருள்வாக்கென்று பல தடவையும் முன் வந்து நிற்கிறபடியால், பலபேரும் தங்களுக்கு ஞானதிருஷ்டி யுண்டாய்விட்டதென்று பொய்வேஷம் பூண்டு நடிக்கின்றார்கள். ஒரு மூடன், அல்லது அரைவைத்தியக்காரன் தன் மூளையில் உண்டாகும் கலக்கத்தை அருள் ஞானோதய மென் றெண்ணித் தன்னைச் சூழ்ந்திருக்க சிஷ்யர்கள் வேண்டுமென்கிறான். இவ் வுலகத்திலே உபதேசிக்கப் பட்ட எதிரிடையானதும், யுக்திக் கொவ்வாததுமான ஆபாசக் கொள்கைகளெல்லாம் என்னவென்று விசாரிக்கப் போனால் அவை அருள்வாக்குப் பெற்றவர்களெனப் பெருமையடைய முயலும் பித்தர்களின் மூளைக் கலக்கத்தால் உண்டான குளறுபடைகளே வேறில்லை யெனப் போதரும்.

உண்மை உபதேசத்தின் முதலிலக்கணம் என்ன வெனில், அது யுக்திக்கு மாறாய் இருக்கப்படாது. இந்த இலக்கணமே நான் மேலெடுத்துக் கூறிய யோகங்களுக் கெல்லாம் ஆதாரமா யிருப்பதென்று காண்பீர்கள். இப் பொழுது ராஜயோகத்தை யெடுத்துக்கொள்வோம். இது விரிந்த விஷயமாதலால், இந்த யோகத்தின் முக்கிய அம்சத்தை மாத்திரந்தான் உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லக்கூடும். சகலவித ஞானத்தையும் அடைவதற்கு ஒரே வழிதா னிருக்கிறது. தாழ்ந்த படிமுதல் உயர்ந்த படிவரையிலும், மிகச் சிறிய புழுமுதல் மகாயோகி வரையிலும்,

எல்லோரும் அதே வழியைத்தான் கைப்பற்றவேண்டும். அந்த வழியாவது ஏகாக்கிர சித்த முடைமையாம். அதாவது, மனத்தை ஒரு முனையில் நிறுத்துதலாம். ரசாயன கர்மசாலையில் வேலை செய்யும் ரசாயன சாஸ்திரி தன் மனச் சக்திகளையெல்லாம் ஓரிடத்திற் சேர்த்து, ஒரு மையத்தில் திரட்டி, அவற்றை யெல்லாம் மூல பூதங்களின்மேல் செலுத்துகிறான். செலுத்தவே, அவற்றின் பாகுபாடு அவனுக்குத் தெள்ளென விளங்கி, அவற்றின் விஷயமான ஞானோதயம் உண்டாகின்றது. அவ்வாறே வானசாஸ்திரியும் அவன் மனச் சக்திகளை யெல்லாம் ஒன்றாய்த் திரட்டி ஒரு மையத்திற் சேர்த்து, அவற்றை யெல்லாம் தூரதிருஷ்டிக் கருவியின் மூலமாய் விண்மண்டலத்தில் இலங்கும் பொருள்களின்மேல் செலுத்துகின்றான். செலுத்தவே, நக்ஷத்திரங்களும் கிரஹ மண்டலங்களும் எதிரே உருண்டு வந்து தத்தம் மர்மங்களை அவனுக்கு விண்டு விளக்குகின்றன. அப்படித்தான் ஒவ்வொரு விஷயத்திலும். ஆசனத்தில் வீற்றிருக்கும் உபாத்தியாயரென்ன, புஸ்தகத்தை யேந்தி நிற்கும் மாணவனென்ன, அறிவைப் பெற முயலும் ஒவ்வொருவன் விஷயத்திலும் அப்படித்தானென்க. நீங்கள் இப்பொழுது நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். என் வார்த்தைகளில் உங்களுக்கு விருப்பம் உண்டாகுமானால், உங்கள் மனது அவற்றின்மேல் ஏகாக்ரமாய் நிற்கும். அப்பொழுது கடியாரம் அடித்தாலும் மற்றென்ன நேர்ந்தாலும் இவ் வேகாக்ர சித்தத்தினால் அவை ஒன்றும் நடப்பதாகவே உங்களுக்குத் தெரிய வாரா.

இனி, எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் நீங்கள் உங்கள் மனத்தை ஏகாக்கிரமாய் நிறுத்த முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு நான் சொல்வதை நன்றாய் அறிந்துகொள் வீர்கள். நானும் எவ்வளவுக் கெவ்வளவு என் அன்பையும் சக்திகளையும் ஏகாக்ரப்படுத்துகின்றேனோ அவ்வளவுக் கவ்வளவு நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பும் விஷயங்களை நன்றாய் விளக்கக்கூடியவனா யிருப்பேன். இந்த ஏகாக்ரசக்தி மனத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமா யிருக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அதிக ஞானமுண்டாகும். ஏனெனில், ஞானப் பிராப்திக்கு இஃதொன்றே வழி யென்க. செருப்புத் தைக்கும் சக்கிலியும் அதிக ஏகாக்ர சித்தம் உடையவனாயின் செருப்பை இன்னும் நன்றாய்த் தைப்பான். ஏகாக்ர சித்தமுடைய சமையற்காரன் அன்னத்தை இன்னும் நன்றாய் ஆக்குவான். பணம் சம்பாதிப்பதோ, பகவானைத் தொழுவதோ, எந்தக் காரியமாயினும் ஏகாக்ரசித்தம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமா யிருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அந்தக் காரியம் நன்றாய் நடந்தேறும். இயற்கையின் கதவுகளைத் திறந்து அதற்குள் இருக்கும் ஞானப்பிரகாசத்தை வெள்ளமிட்டு வரச்செய்ய வேண்டுமாயின் அவ் வியற்கையைக் கூப்பிட் டழைக்கவும், அதன் கதவைத் தட்டவும் இந்த ஏகாக்ர சித்தமென்பதைவிட வேறு உபாயம் கிடையாது. ஞான பொக்கிஷ வீட்டிற்கு ஒரே சாவியா யுள்ளது இந்த ஏகாக்ர சக்தியே யன்றி வேறில்லை. ராஜயோக மென்பது இவ்வொரு மார்க்கத்தைப்பற்றியே பூரணமாய் விளக்குகின்

றது. நமது தேகத்தின் பிரகிருத நிலையில், நாம் எத்தனையோ வகைகளில் சஞ்சலப்பட்டு நிற்கின்றோம். நம் மனமும் பலபல பொருள்களின்மேல் தன் சக்திகளைச் செலுத்திப் பலங்குன்றிப் போகின்றது.

நான் என்னுடைய சிந்தைகளை யடக்கி மனத்தை யாதாயினும் ஒரு ஞானவிஷயமாய் ஏகாக்ரத்தில் நிறுத்த முயன்ற உடனே எத்தனையோ ஆயிரம் கூடா எண்ணங்களெல்லாம் மூளையிற் பாய்ந்தும், எத்தனையோ ஆயிரம் விகற்ப சிந்தைகள் மனத்திற் பாய்ந்தும், அதைக் கலக்குகின்றன. இப்படிப்பட்ட மனத்தை அடக்கி யாள்வதெப்படி என்ற இவ்வொரு விஷயத்தைப்பற்றியே ராஜயோகமானது விரிவாய் விளக்குகின்றது.

இனி, கர்மயோகத்தைப்பற்றி விசாரிப்போம். கர்மயோகமென்பது நற்காரியங்களைச் செய்து அவற்றின் மூலமாய்க் கடவுளை யடையும் வழியைப் போதிப்பதாம். இவ்வுலகத்திலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியத்தின் மேல் மனது பற்றி நிற்கின்றது. எல்லோருக்குமே ஞான விஷயத்தில் மனம் செல்வதில்லை. அவர்களுக்கெல்லாம் ஏதோ ஒரு காரியத்தைச் செய்வதில்தான் புத்தி செல்லுகின்றது. இப்படிப்பட்ட மனிதர்களுக்கும் ஒரு சாஸ்திரம் வேண்டுமல்லவா? நம்மில் ஒவ்வொருவரும், ஏதோ ஒரு வித வேலையைச் செய்துகொண்டு இருக்கிறோமாயினும், நம்மிற் பெரும்பான்மையோர் வேலை செய்யும் இரகசியத்தை யறிந்துகொள்ளாமல் நமது சக்திகளின் பெரும்

பகுதியை வீணாக்கிவிடுகின்றோம். எங்கே, எப்பொழுது, எவ்வாறு வேலை செய்யவேண்டும்? நமது சக்தி முழுவதையும், இல்லாவிட்டாலும் அதன் பெரும் பகுதியை யாவது எப்படிப் பிரயோகிக்கவேண்டும்? அவற்றை யெல்லாம் திரட்டி நாம் செய்ய மேற்கொண்டிருக்கும் வேலையின்மேல் எவ்வாறு செலுத்துவது,—என்ற விஷயங்களையறிந்துகொள்வதே அந்த ரகசியமாம். எப்பொழுது இந்த ரகசியத்தை அறிந்து கொள்ளுகிறோமோ, அத்துடன் கூடக் கருமம் செய்யுமிடத்துத் துக்கம் நேரிடும் என்ற ஆக்ஷேபமும் உண்டாகின்றது. சகலவித துக்கமும் பற்றுடைமையாலேயே உண்டாகின்றது. நான் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இஷ்டப்படுகிறேன். ஒரு மனிதனுக்கு உபகாரம் செய்கிறேன். அப்படிச் செய்யுங்கால், எவனுக்கு நான் உபகாரம் செய்கிறேனோ, அவன் முக்காலே மூன்றுவீசம் பங்கும் என்னிடத்தில் நன்றியற்று எனக்கே விரோதம் செய்கிறான். அதன் பயனென்னவெனில், எனக்குத் துக்க முண்டாகிறது. இத்தகைய சங்கதிகள் மனிதர்களைக் கருமத்தைச் செய்யவிடாது தடுக்கின்றன. துக்கம் வருமென்ற இந்தப் பயமானது மனித வர்க்கத்தின் முக்காற் பங்கு கருமத்தையும் சக்தியையும் கெடுத்துவிடுகின்றது. கர்மயோகம் நமக்குப் போதிப்பதென்னவெனில், கருமத்தைப் பற்றில்லாமல், யாருக்கு உதவி புரிகிறோம். எதற்காக உதவி புரிகிறோமென்பதை விசாரியாமலே கர்மத்திற்கென்றே கருமத்தைச் செய்யும் விதத்தை உபதேசிக்கின்றது. கர்மயோகி

யானவன் நற்செயல்களைச் செய்வதே நலமென்றுணர்ந்து அதைவிட வேறொரு பயனையும் வேண்டாது தன் இயல்பை அநுசரித்துக் கருமம் செய்கின்றான். இவ்வுலகத்திலே தானம் செய்வதே தன் வேலையென் ஒருவன் கொண்டிருக்கிறான். பிறர் கொடுப்பதை யேற்கவேண்டுமென்ற எண்ணமே அவனுக்கில்லை. தான் கொடுக்கிறான் என்பதை அவன் அறிந்து பிரதிபலனாக ஈதையும் வேண்டி நிற்காமையால், அதன் துக்கத்தினின்றும் தப்பித்துக்கொள்ளுகின்றான். பற்றுடைமையிலேயே எப்பொழுதும் துக்கம் உண்டாகின்றது.

இனி, உற்சாக சக்தி நிறைந்த அன்பனுக்குப் பக்தி யோகம் ஏற்பட்டிருக்கிறது. அவன், 'பகவானிடத்தில் பக்தி செய்யவேண்டும்' என்கிறான். அவன் எல்லாவித கர்மங்களையும் அநுஷ்டித்துத் திவ்யமான ஆலயங்களிலே எழுந்தருளியிருக்கும் திவ்ய மங்கள மூர்த்திகளைப் பத்திர புஷ்பங்களாலும் தூபதீபாதிகளாலும் ஆராதிப்பதில் பிரீதி கொள்ளுகிறான். அப்படிப்பட்டவர்களெல்லோரும் தவறுடையவர்கள் என்பீர்களோ? அப்படியாயின், ஒரு சங்கதி உங்களுக்குச் சொல்வேன். பக்தியைப் போதிக்கும் புராண புண்ய கதைகளும் கர்மாநுஷ்டானங்களும் எந்த மதங்களில் நிறைந்திருக்கின்றனவோ, அம் மதங்களில்தான் ஞான சூரியர்களான மகான்கள் தோன்றியிருக்கின்றனர். எந்த எந்த சம்பிரதாயத்தினர் பகவானை எவ்வித ரூபமும் கர்மாநுஷ்டானமுமின்றிப் பூஜிக்க

முயன்றார்களோ, அந்த சம்பிரதாயத்தின செல்லோரும், மதத்திலே யுள்ள சௌந்தரியம் காம்பீர்யம் முதலிய திவ்யாம்சங்களை யெல்லாம் தயாதாக்ஷிண்ய மின்றி நொறுக்கிவிட்டார்கள். அப்பிடிப்பட்டவர்களின் மதம் எவ்வளவு உயர்ந்து சென்றாலும், அது வீண் ஊர் மதாபிமானத்தைத் தவிர்த்து வேறின்று. இதற்கு உலக சரித்திரமே சிறந்த சாக்ஷி. ஆகவே, இந்தக் கர்மாநுஷ்டானங்களையும், புராண கதைகளையும் இகழவேண்டாம். ஜனங்கள் அவற்றை வைத்துக்கொள்ளட்டும். அவற்றில் பிரியப்பட்டவர்கள் அவ்வழியில் செல்லட்டும். அவர்களைப் பார்த்து உல்லங்கனமாக அயோக்கியப் புன்னகைசெய்து, "அவர்கள் மூடர்கள் பாவம்! ஆகையால், இப்படிப்பட்ட சடங்குகளை வைத்துக்கொண் டிருக்கட்டும்," என்று சொல்லவேண்டாம். அஃது ஒருபோதும் கூடாது. என் ஜன்மத்தில் நான் கண்ட மகான்களும், அற்புதப் பெருமை வாய்ந்த மகாத்மாக்களும் இந்த கர்மாநுஷ்டானங்களிற் பயின்று வந்தவர்களேயாம். அப்படிப்பட்டவர்களின் காலணிடை நிற்கவும் எனக்கு யோக்கியதையில்லை. அப்படிப்பட்டவர்களைக் குறை கூற நான் எம்மாத்திரம்! இந்தக் கருத்துகளெல்லாம் எவ்விதமாக மனித சித்தவிர்த்திகளைத் தொழிற்படுத்துகின்றனவோ, எனக்கு எவ்வாறு தெரியும்? எதை ஒப்புக்கொள்வது? எதைத் தள்ளுவது? தக்க நியாய மின்றியே உலகத்திலுள்ள ஒவ்வொன்றையும் கண்டித்துக்கொண்டு போவதே நம தியல்பு. ஆகையால், ஜனங்கள் அவற்றை வைத்துக் கொள்ளட்டும்; ஜனங்கள் தங்களுக்குப் பிரியமான புரா

ைக் கதைகளை யெல்லாம் வைத்துக்கொள்ளட்டும்; என்னென்ன விதமான அழகிய மனக்கிளர்ச்சிக ளெல்லாம் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவற்றை யெல்லாம் வைத்துக்கொள்ளட்டும். ஏனெனில், இந்த உற்சாகப் பிரியர்களுக்கு உங்களது கடினமான சாஸ்திர தத்துவங்களில் புத்தி செல்லா தென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும். அவர்களுக்குக் கடவு ளென்பது வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத அகோசரப் பொருளா யில்லாமல், அவர்கள் தொட்டுப் பார்த்து நேசிக்கக்கூடிய ஒரு பிரத்தியக்ஷப் பொருளா யிருக்கின்றது. அஃதொன்றுதான் அவர்களுக்கு உண்மைப் பொருள். அதைக் கூறுகூறுப் பகுத்துப் பார்க்க அவர்கள் தாமசிக்க மாட்டார்கள். உங்களுடைய யுக்திவாதிகள் வஸ்துவை அநுபவியாமல் அதில் என்ன அடங்கி யிருக்கிறதென்று சோதனை செய்வதானது இந்தப் பக்தர்களுக்கு எப்படித் தோற்றுகிறதெனில், ஒரு சுந்தர விக்கிரகத்தை யொரு மூடன் பார்த்து அது எந்தத் திரவியத்தினால் செய்யப்பட்டிருக்கிற தென்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அதைத் துண்டு துண்டாய் உடைத்தெறிந்ததுபோ லிருக்கிறது. ஆகையால், அவர்கள் தங்கள் பகவானை வைத்துக்கொள்ளட்டும். பக்தியோகமானது அவர்களுக்குப் பக்தி செய்யும் விதத்தையும், பலாபேக்ஷையின்றி பக்திசெய்யும் பிரகாரத்தையும் கற்பிக்கின்றது. கடவுளையும் நன்னெறிகளையும் நேசிப்பதற்குக் காரணம், அப்படிச் செய்வதே நன்மை யென்பதேயன்றிச் சுவர்க்கலாபமாவது, புத்திரலாபமாவது, தனலாபமாவது

மற்றெவ்வித பலப்ராப்தியாவது காரணமாகமாட்டாது. 'அன்புக்கு உத்தம பலம் அன்பே' என்றும் அந்தப் பக்தி யோகம் போதிக்கின்றது. அதுதான் 'அன்பே சிவம்', அல்லது கடவுள் என்றி பழைய சித்தாந்தத்தின் கருத்து. பகவானைப் படைப்போனையும், சர்வ வியாபியாயும், சர்வஞ்ஞனையும், சர்வ சக்தியுள்ள நிபர்தாவாயும், இவ்வுலகத்தின் அன்னையாயும் அப்பனையும் பாவித்துப் போற்றும்படி அது கற்பிக்கின்றது. அவரைக் குறிக்கும் உயர்ந்த பெயராயும், அவரைப்பற்றி மனிதரின் மனதில் உண்டாகக்கூடிய உயர்ந்த கருத்தாயும் உள்ள தெதுவெனில், அவர் அன்பு வடிவமான கடவு ளென்பதேயாம். எந்த எந்த இடத்தில் அன்பு இருக்கிறதோ அங்கெல்லாம் அவர் விளங்குகிறார். "அன்புள்ள இடந்தோறும் அவனன்றே இருக்கிறான்." புருஷன் மனைவியை முத்தமிடுமிடத்து, அவர் அந்த முத்தத்தில் இருக்கின்றார். தாயார் குழந்தையை முத்தமிடுமிடத்து, அவர் அந்த முத்தத்தில் இருக்கின்றார். நண்பர்கள் அன்பால் ஒருவர் கையைப் பிடித்து ஒருவர் புல்லும்பொழுதும் அந்தப் பகவான் அந்தக் கைப்பிடியில் அன்புருவமாகிய கடவுளாக விளங்குகிறார். ஒரு மகான் உலகத்தின்மீது கருணை கொண்டு அதற்கு உபகாரம் செய்ய விரும்பும்பொழுது, அங்கும் கடவுளே பிரசன்னமாகி உலகத்துக்குத் தன் அன்புக் களஞ்சியத்திலிருந்து வேண்டுமானதை வாரிவாரித் தாராளமாய்க் கொடுக்கிறார். எங்கெங்கே ஹிருதயம விசால மாகின்றதோ அங்கெல்லாம் அவர் பிரத்தியக்ஷமாகிறார். இதுதான் பக்தியோகத்தின் உபதேசம்.

இனிக் கடைசியாக நாம் ஞானயோகியினிடம் வருவோம். இந்த ஞானயோகி யாரெனில், சர்வ விஷயங்களையும் விசாரணை செய்து திருசியத்தைக் கடந்துசெல்ல விரும்பும் தத்துவ ஞானியாம். அவன் இவ்வுலக சம்பந்தமான அற்பப் பொருள்கள் எதனிலும் திருப்தி அடையான். இவ்வுலகத்தின் நித்தியக் கட்டளையாயுள்ள உண்பதையும் உறங்குவதையும் கடந்து செல்லவேண்டுமென்பதே அவன் கருத்து. ஆயிரம் நூல்களின் உபதேசத்தாலும் அவன் திருப்தி யடையான். சகல சாஸ்திரத் தொகுதிகளாலும் அவனைத் திர்ப்தி செய்ய முடியாது. அவை யென்ன அதிகமாய் முயன்றாலும் இச் சிறிய உலகத்தின் சொரூபத்தைத்தான் அவன் முன் நன்கு விளங்கவைக்க முடியும். மற்றெதனால்தான் அவனுக்குத் திருப்தி யுண்டாகும்? ஆகாய மண்டலத்திலுள்ள கோடிக்கணக்கான பிரம்மாண்டங்களும் அவனுக்குத் திர்ப்தியை யுண்டாக்கா. இந்த வியாவஹாரிக நிலையிலுள்ள அகில பிரபஞ்சத்தாலும் அவனுக்குத் திருப்தி உண்டாகாது. இத்தனையும் அவனுக்கு ஸத்தையாகிய ஸாகரத்திலே ஒரு திவலை மாத்திரமேயாம். அவன் இதை யெல்லாவற்றையுங் கடந்து சகலத்துக்கும் இருதய ஸ்தானமாயுள்ள இடத்திற்குச் சென்று, பரம்பொருளை அதன் உண்மை நிலையில் நேருக்கு நேராய்ப் பார்க்கவேண்டு மென்கிறான். சொரூபானுசந்தானததால் அது தானேயாகி, அந்த பரப்ரஹ்மத்துடன் அபேதமாய்க் கலக்க விரும்புகிறான். அப்படிப்பட்டவனே தத்துவஞானி. அவனுக்குக் கடவுள்: வெறும் அன்னையும்

அப்பனுமாத்திர மல்லர்; வெறும் பிரபஞ்ச சிருஷ்டிகர்த்தாவும், ரக்ஷகரும், நியந்தாவு மாத்திரமல்லர். அவரை விளக்க இவ் வார்த்தைகள் போதா. அவனுக்குக் கடவுள் பிராணனுக்குப் பிராணனாயும், ஆத்மாவுக்கு ஆத்மாவாயுமிருக்கிறார். கடவுளே அவன் சொந்த ஆத்மாவா யிருக்கிறார். இனி, கடவுளைத் தவிர வேறொன்றும் அவனிடத்தில் பற்றியிருக்கவில்லை. அவனிடத்திலுள்ள அழியுந் தன்மையவான அம்சங்களெல்லாம் தத்துவஞானத்தின் பலமான மோதுதலினால் பொடியாகிப் பறந்து போகின்றன. கடைசியில் உண்மையாய் எஞ்சிநிற்பது கடவுளே.

ஒரே மரத்தில் இரண்டு பக்ஷிகள் வாசம் செய்கின்றன. ஒன்று உச்சியிலும், ஒன்று தாழவும் இருக்கின்றன. உச்சியிலே யுள்ளது சாந்தமாயும் மௌனமாயும், கம்பீரமாயும், தன் சுய மகிமாநுபவத்தில் அமிழ்ந்து மிருக்கின்றது. தாழே கீழ்க்கிளைகளி லுள்ளது தீங்கனிகளையும் கசப்பான காய்களையும் மாறிமாறித் தின்றுகொண்டு, கிளை கிளையாய்த் தாவி மாறிமாறிச் சுகதுக்கங்களை அனுபவிக்கின்றது. சிறிது காலம் சென்ற பின் தாழேயுள்ள பறவை மிகக் கைப்பான காயொன்றைத் தின்றுவிட்டு வெறுப்புண்டு மேல்நோக்கிப் பார்க்கின்றது. அங்கே அந்தப் பொன்னிறச் சிறகுகளையுடைய அற்புத பக்ஷி யிருக்கின்றது. அது தீங்கனிகளையும் தின்பதில்லை, கசப்புக் காய்களையும் உண்பதில்லை. அதற்குச் சுகாநுபவமு மில்லை, துக்காநுபவமு மில்லை; சாந்தமா யிருக்கின்றது. எல்லாம்

தனக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கிறது. அதன் உண்மை சொரூபத்துக்குப் புறம்பே ஒன்றுமில்லை. ஆனால் தாழ்ந்த பக்ஷியானது உயர்ந்த பக்ஷியின் இந்த நிலைமையைச் சீக்கிரத்தில் மறந்து மறுபடியும் அந்த மரத்தின் தித்கனிகளையும் கசப்புக் காய்களையும் தின்னத் தொடங்குகிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் இன்னொரு நிரம்பக் கைப்பான காயைத் தின்றுவிடுகிறது. அது மறுபடியும் துக்கமடைந்து, மேலே பார்த்து, உயரச் சென்று, மேலேயுள்ள பக்ஷியின்பால் கிட்டக் கிட்டப்போகப் பார்க்கின்றது. மறுபடியும் அந்தப் பக்ஷி இதை மறப்பதும் மறுபடியும் மேலே பார்ப்பதும், இப்படி மாறி மாறி மறப்பதும் மேலே பார்ப்பதுமா யிருக்கிறது. சிறிதுகாலம் சென்றபின் முன்னினும் வெகு கைப்பான காயொன்றைத் தின்றுவிடுகிறது. மறுபடியும் மேலே நோக்கிப் பார்த்துக் கிட்டக் கிட்ட நெருங்கிச் செல்லுகின்றது. மேலேயுள்ள பக்ஷியின் கலாபத்திலிருந்து காந்தியானது இழிந்து இந்தப்பக்ஷியைச் சுற்றிலும் தாண்டவமாடுகின்றது. அதனால் இது உருமாறிக் கரைந்து போவதுபோ லிருக்கின்றது. இந்தப் பக்ஷி இன்னும் சமீபமாய்ச் செல்லச் செல்ல, இதைச் சுற்றியுள்ள தெல்லாம் முழுமையும் கரைந்துபோகக் கடைசியாக இந்த அற்புதமான மாறுதலை அது தெரிந்து கொள்ளுகின்றது. தாழ்ந்த பக்ஷியானது மேல் பக்ஷியைப் போல் தோன்றிய வெறும் நிழலும் பிரதிபிம்பமும் தவிரப் பிறிதில்லையெனத் தோன்றுகிறது. உண்மையில் அது மேலேயுள்ள பக்ஷியாகவே யிருந்தது. தித்திப்பும் கைப்புமான

பழங்களைத் தின்றதும், தாழ்ந்த பக்ஷியாயிருந்த தன்மையும் மாறிச் சந்தோஷித்ததும் அழுததும் வீண் பிரமையும் கனவுமேயாம். எக்காலத்தும் உண்மையாயுள்ள பக்ஷி மேலேயே சாந்தமாயும் மௌனமாயும் மகிமைப் பிரதாபத்தோடும் காம்பீர்யத்தோடும் கூடியும், சோகத்துக் கப்பாலும் துக்கத்துக்கப்பாலும் வீற்றிருந்தது. இந்த மேலேயுள்ள பக்ஷியே ஜகத்பதியாகிய பரமாத்மா. கீழேயுள்ள பக்ஷியே இவ்வுலகத்தின் சுகதுக்க பலன்களை அநுபவிக்கும் ஜீவாத்மா. இந்த ஜீவனுக்கு இடையிடையே ஒரு பெருத்த ஆபத்து நேரிடுகின்றது. அப்பொழுதுக்குச் சிறிது நேரம் இந்த பக்ஷியானது பழம் தின்பதை நிறுத்தி அகோசரமான கடவுளினிடத்தில் ஓர் இமைப்பொழுது செல்கின்றது. அங்கிருந்து ஒரு ஜோதி வெள்ளம் வருகின்றது. 'இவ்வுலகு நிலையற்றது' என ஜீவன் நினைக்கிறான். நினைத்து இன்னும் சிறிது மேல் நோக்கிச் செல்லுகிறான். ஆனால், மறுபடியும் புலன்கள் அவனைக் கீழே யிழுக்கின்றன. அவனும் பழையபடியே இவ்வுலகத்தின் தீங்கனிகளையும் கைப்புக் காய்களையும் தின்னத் தொடங்குகிறான். மறுபடியும் ஒருபிரமாதமான ஆபத்து வருகிறது. அவனது ஹிருதயம் மறுபடியும் திவ்ய சோதியைப் பெறும்பொருட்டு விரிகின்றது. இவ்வாறு அவன் கிட்டிக் கிட்டிச் சமீபமாய்ச் செல்லச் செல்ல, அவனது பழைய சொரூபம் கரைந்துபோய்த் தான் கடவுளினும் வேறல்லனெனக் கண்டு கொள்ளுகிறான். அவன் அவ்வளவு சமீபத்துக்கு வந்தவுடனேயே இவ்வாறு

கோஷிக்கிறான்: "பிரபஞ்சத்தின் பிராணனென்றும், அணுவிலும் அண்டகோடிகளிலும் வியாபித்திருக்கின்றவனென்றும் எவனைப்பற்றி உங்களுக்கு உபதேசித்தேனோ, அவனே நமது பிராணனுக்கும் ஆதாரம், நமது ஆத்மாவுக்கும் சார்பகம். அவ்வளவேன்? அதுவே தத்துவமஸி." இதுதான் ஞானயோகத்தின் உபதேசம். மனிதன் பிரதானமாய்த் தெய்வத்தன்மை யுடையவனென அது போதிக்கின்றது. அது உயிர்த்திரளின் உண்மையான ஒருமைத் தன்மையையும், நம்முள் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் தோன்றியிருக்கும் சாக்ஷாத் கடவுளே யென்பதையும் மானிட வர்க்கத்திற்குப் போதிக்கின்றது. நாமெல்லோரும் அதாவது, நம் காலடியின் கீழ் நகர்ந்து நெளியும் புழுமுதல் நாம் ஆச்சரியத்தோடும் நடுக்கத்தோடும் பார்த்துப் போற்றும் உத்தம மகான்கள் வரையிலும் உள்ள எல்லோரும் அவ் வொரே கடவுளின் விர்ப்பாவ ரூபங்களேயாம்.

## முடிவுரை

இனி, மேற் சொல்லிய பலவகை யோகங்களையும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டுவது ஆவசியகம். அவற்றைப்பற்றிய வாசாகைங்கரியமான வெற்றுரைகள் பயனற்றவையாம். முதன்முதல் அவற்றை நாம் கேட்டல் வேண்டும். பிறகு அவற்றைப்பற்றிச் சிந்தித்தல் வேண்டும். பிறகு அவற்றைப்பற்றித் தர்க்கித்துத் தெளிந்து, அவற்றை மனத்திடைப் பதித்துத் தியானம் செய்து அநு